# பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல்

## இலங்கையில் ஊடகத்துறை மற்றும் ஊடகத் தொழில் தொடர்பான மதிப்பீடு

பங்குபற்றுதல் ஆய்வுமுறைச் செயற்பாட்டினடிப்படையில் இவ்வறிக்கை உருவாக்கப்பட்டது. இதற்குச் சுமார் ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் சென்றது. இலங்கையில் ஊடகத்துறை விருத்தி, சூழல் தொடர்பான பூரணத்துவம் மிக்க மதிப்பீட்டை இது கொண்டுள்ளது. சட்ட வரைவுச்சட்டகம், பொருளாதார நிலைமைகள், மனித வள அபிவிருத்தி, தொழில்நுட்பச் சூழல்கள், பாதுகாப்பு, நாட்டில் ஊடக வளர்ச்சியின் உண்மையான நிலைப்பாடு உள்ளடங்கலாக ஊடக வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்ற மாறுபட்ட அம்சங்களை நோக்குகின்ற யுனெஸ்கோவின் ஊடக அபிவிருத்தி குறிகாட்டி வரைவுச்சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் தகவல் அறியும் உரிமைக்கு அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதங்களை வழங்கும் முகமாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களை சான்றாகக் கொண்டு நோக்குகையில் ஊடகத் துறையில் மறுசீரமைப்புகளையும் புது முயற்சிகளையும் மேற்கொள்வதற்கா நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை உணரமுடியும். இத்தகைய பொருத்தமான தருணத்தில் இந்த மதிப்பீடு வெளிவருகிறது.

டொபீ மெண்டல், நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சட்டம், ஜனநாயகத்திற்கான நிலையம், கனடா

வெளியீடு
ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகம் - இலங்கை.

உதவி
சர்வதேச ஊடக அமைப்பு (**IMS**) டென்மார்க்
www.mediasupport.org

பிரதான தலைப்புகள்
ஊடகம், ஊடகத்துறை, ஊடக ஒழுங்கமைப்பு, ஊடகக் கொள்கை, கருத்துச் சுதந்திரம், ஊடக விருத்தி, ஊடகக் கல்வி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், புதிய ஊடகம்.

9 789553 958006

பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல்

இலங்கையில் ஊடகத்துறை, ஊடகத்தொழில் தொடர்பான மதிப்பீடு

# பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல்

இலங்கையில் ஊடகத்துறை, ஊடகத்தொழில் தொடர்பான மதிப்பீடு

ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்

மே 2016

SMR

ims
INTERNATIONAL MEDIA SUPPORT

# பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல்

## இலங்கையில் ஊடகத்துறை, ஊடகத்தொழில் தொடர்பான மதிப்பீடு

ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்,

கொழும்பு, இலங்கை

மே 2016

ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம், இலங்கை மற்றும் சர்வதேச ஊடக ஆதரவு ஆகியவற்றின் வெளியீடு.
www.mediasupport.org

அறிக்கை தயாரிப்புக்குழு:
விஜயானந்த ஜயவீர - மதியுரைஞர்
கருணாரத்ன பரணவிதான – ஆலோசகர்
கலாநிதி. ரங்க கலன்சூரிய - ஆலோசகர்
கலாநிதி. பிரதீப் என் வீரசிங்க - குழு மற்றும் கருப்பொருளுக்கான தலைவர்
நாலக்க குணவர்தன – மதியுரை ஆசிரியர்
குமாரி வெலகெதர - உறுப்பினர்
குமார் லோபஸ் - உறுப்பினர்

ஆசிரியர் (தமிழ்ப் பதிப்பு): கலாநிதி. சி. ரகுராம்

தமிழ் மொழிபெயர்ப்பில் பங்களிப்பு:
M .S .M அயூப், ரஜீவன் அரசரத்தினம், சிவப்பிரியா ஸ்ரீராம், கிருத்திகா தர்மராஜா, திருமதி.நாகபூஷணி

அட்டைப்பட வடிவமைப்பு : தர்ஷன கருணாதிலக
பக்க வடிவமைப்பு : நிலந்த ரத்னாயக்க, Net Point, பதுளை,
லலிதா சுபாநந்தன்
அச்சுப்பதிப்பு : மஜெஸ்டிக் பிரிண்ட் ஷொப், பன்னல, இலங்கை

இலங்கையில் முதலில் வெளியிடப்பட்டது : மே 2016

திட்ட ஒருங்கமைப்பு :
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மூலோபாய கூட்டணி
(Strategic Alliance for Research and Development - SARD)
www.sardglobal.org

இந்த வெளியீட்டினை கீழுள்ள இணையத்தளத்தில் பார்வையிடலாம்.
Creative Commons Attribution – Share Alike 3.0 IGO
(CC – BY –SA 3.0 IGO) உரிமத்துடன்
http://creativecommons.org/licenses/by-sa/3.0/igo/

பரிந்துரைக்கப்பட்ட சான்று:
ஊடக சீர்திருத்தங்களுக்கான செயலகம் (2016). பொது மக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல்: இலங்கையில் ஊடகத்துறை, ஊடகத்தொழில் தொடர்பான மதிப்பீடு, கொழும்பு, இலங்கை **SMR/IMS**

ISBN: 978-955-3958-02-0

## நன்றிகள்

இவ்வறிக்கையானது தனியாட்கள் மற்றும் அரசதுறை, கல்வித்துறை, கூட்டுத்தாபனங்கள், சிவில் சமூகம் ஆகிய நிறுவனங்களின் பாரிய அளவிலான பல்வேறுபட்ட பங்களிப்புகளுடன் 14 மாத காலத்திற்குள் தயாரிக்கப்பட்டது.

பணிக்குழு உறுப்பினர்களுக்கு வரைவுச்சட்டகம் மற்றும் முறையியல் பகுதியில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைக்காக நேர்காணல் செய்யப்பட்டோர், ஆலோசனை பெறப்பட்டோர் இணைப்பு I இல் இடம்பெறுகின்றனர்.

இதற்கு மேலதிகமாக அறிக்கை தயாரிப்புக்குழு தனது கௌரவத்தினை தமது மேலான கருத்துரைகளை வழங்கியவர்களுக்குத் தெரிவிக்கிறது.

- கலாநிதி. வில்லியம் குரோளி, பொதுநலவாய கற்கைகள், லண்டன் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்.
- மைக்கல் ஜே.ஆர்.டேவிட், முன்னாள் பத்திரிகையாளர் (பி.பி.சி உலக சேவை - சிங்களம்) சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
- சுனந்த தேசப்பிரிய, ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் (சுவிற்சர்லாந்து)
- கலாநிதி. ரோஹன் எதிரிசிங்க, முன்னாள் விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
- கலாநிதி. ஷெல்டன் எ. குணரத்ன, ஓய்வுநிலை பேராசிரியர், வெகுஜன ஊடகத்துறை, மினசொட்டா ஸ்டேட் பல்கலைக்கழகம், அமெரிக்கா.
- டோபி மெண்டல், நிர்வாக இயக்குனர், சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான மத்திய நிலையம், கனடா
- கலாநிதி. டேவிட் பேஜ், பொதுநலவாய கற்கைகள், லண்டன் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்.
- கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன, சட்ட ஆய்வாளர் மற்றும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர்.
- கலாநிதி. ரொஹான் சமரஜீவ, தொடர்பாடல் அறிஞர் மற்றும் நிறுவுனர் - LIRNEasia
- கலாநிதி. அசங்க வெலிகல, பொதுச்சட்ட விரிவுரையாளர், எடின் பேர்க் பாடசாலை. இணை இயக்குனர், எடின்பேர்க் அரசியல்சட்ட அமைப்பு மையம், ஐக்கிய இராச்சியம்.

இறுதிப்பதிப்பில் கவனக்குறைவுகள், தவறுகள் இருப்பின் பதிப்பாசிரியர்களே பொறுப்பேற்பர்.

பெயர்ப்பட்டியல் இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுக்கு உதவிய ஆதரவுக்குழுவினருக்கும் பதிப்பாசிரியர்களினது நன்றி உரித்தாகும்.

## பொறுப்பு

இவ்வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள யோசனைகள் மற்றும் கருத்துக்களுக்கு சம்பந்தப்பட்ட நபர்களும் பதிப்பாசிரியர்களுமே பொறுப்பாகும். சர்வதேச ஊடக ஆதரவு (IMS) அமைப்பு அதற்குப் பொறுப்பானதல்ல.

# சுருக்கக் குறியீடுகளுக்கான விளக்கங்கள்

| | |
|---|---|
| AAAA | Accredited Advertising Agencies Association |
| ACJ | Asian College of Journalism |
| ADIC | Alcohol and Drug Information Centre |
| AHRC | Asian Human Rights Commission |
| AIBD | Asia Pacific Institute for Broadcasting Development |
| ANCL | Associated Newspapers of Ceylon Limited (Lake House) |
| BOP | Bottom of the pyramid |
| CBA | Commonwealth Broadcasting Association |
| CPA | Centre for Policy Alternatives |
| CPJ | Committee to Project Journalists (US based advocacy group) |
| CSOs | Civil Society Organisations |
| DTTB | Digital Terrestrial Television Broadcasting |
| DBNO | Digital Broadcast Network Operator |
| EGOSL | Editors' Guild of Sri Lanka |
| FMETU | Federation of Media Employees Trade Union |
| FMM | Free Media Movement |
| FOE | Freedom of Expression |
| FUTA | Federation of University Teachers Associations |
| GIC | Government Information Centre |
| HRCSL | Human Rights Commission of Sri Lanka |
| ICCPR | International Covenant on Civil and Political Rights |
| ICT | Information and Communications Technologies |
| ICTA | Information and Communication Technology Agency |
| IFJ | International Federation of Journalists |
| IMADR | International Movement Against All Forms of Discrimination and Racism |
| IMS | International Media Support |
| IPDC | International Programme for the Development of Communication (UNESCO) |
| IPTV | Internet Protocol Television |
| ISP | Internet Service Provider |
| ITN | Independent Television Network (Sri Lanka) |
| ITU | International Telecommunications Union |
| JDS | Journalist for Democracy in Sri Lanka |
| JICA | Japan International Cooperation Agency |
| LBO | Lanka Business Online |
| LLRC | Lessons Learnt and Reconciliation Commission |
| LTTE | Liberation Tigers of Tamil Eelam |

| | |
|---|---|
| MCR | Mahaweli Community Radio (of SLBC) |
| MDI | Media Development Indicators |
| MRTC | Media Resources and Training Centre (affiliated to University of Jaffna) |
| NBN | National Backbone Network |
| NGO | Non-Governmental Organization |
| NSSL | Newspaper Society of Sri Lanka |
| OSCE | Organisation for Security and Cooperation in Europe |
| PCCSL | Press Complaints Commission of Sri Lanka |
| PSB | Public Service Broadcasting |
| PPB | Public Performances Board |
| PTA | Prevention of Terrorism Act |
| RNTC | Radio Nederland Training Centre |
| RSF | Reporters Without Borders (*Reporters Sans Frontières* in French) |
| RTI | Right to Information |
| SAARC | South Asian Association for Regional Cooperation |
| SAFMA | South Asian Free Media Association |
| SAMSN | South Asian Media Solidarity Network |
| SARD | Strategic Alliance for Research and Development |
| SIDA | Swedish International Development Cooperation Agency |
| SLBC | Sri Lanka Broadcasting Corporation |
| SLCJ | Sri Lanka College of Journalism |
| SLMMF | Sri Lanka Muslim Media Forum |
| SLMTI | Sri Lanka Media Training Institute |
| SLPI | Sri Lanka Press Institute |
| SLTMA | Sri Lanka Tamil Media Alliance |
| SLTTI | Sri Lanka Television Training Institute |
| SLRC | Sri Lanka Rupavahini Corporation (National TV Broadcaster) |
| SLWJA | Sri Lanka Working Journalists Association |
| SMS | Short Message Service (also known as text message) |
| TISL | Transparency International Sri Lanka |
| TRCSL | Telecommunications Regulatory Commission of Sri Lanka |
| WNL | Wijeya Newspapers Limited |
| UCR | Uva Community Radio |
| UNESCO | United Nations Educational, Scientific and Cultural Organisation |
| UNHRC | United Nations Human Rights Council |

# உள்ளடக்கம்


நிறைவேற்றுச் சுருக்கம் IX

ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகத்தின் முகவுரை XIII

சர்வதேச ஊடக ஆதரவின் முகவுரை XIV

விசேட பங்களிப்புகள் XV

அறிமுகம் XVII

ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்: பங்காண்மை அமைப்புகள் XIX

வரைவுச்சட்டகம் மற்றும் முறையியல் 02

வகை 1 :

கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், ஊடகங்களின் பல்வகைமை ஆகியன தொடர்பில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒழுங்குவிதிகள் கொண்ட அமைப்பு 15

அ சட்ட மற்றும் கொள்கை ரீதியான வரைவுச்சட்டகம் 18

ஆ ஒலி - ஒளிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறை 39

இ ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் 44

ஈ தணிக்கை 54

வகை 2:

ஊடகங்களின் பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை, பொருளாதாரத் தளம் மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை 70

அ ஊடகச் செறிவு 74

ஆ ஒருங்கே பல்வகைத்தன்மை கொண்ட பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்கள் 83

இ அனுமதிப் பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடு 93

ஈ வரிவிதிப்பும் வர்த்தக விதிமுறைகளும் 105

உ விளம்பரம் 109

வகை 3:

ஜனநாயகக் கருத்தாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல் 124

அ ஊடகம் சமூகங்களின் பல்வகைமையைப் பிரதிபலித்தல். 128

ஆ பொதுச்சேவை ஒலி - ஒளிபரப்பு மாதிரி 133

இ ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை 146

ஈ நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மைக்கான தேவைகள் 160

உ ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் தற்துணிவின் அளவுகள் 166
ஊ ஊடகவியலாளரின் பாதுகாப்பு 168

வகை 4:
கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், பல்வகைமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தொழில்வாண்மையைக் கட்டியெழுப்பும் மற்றும் உதவியளிக்கும் நிறுவகங்கள் 183
அ கிடைக்கக்கூடிய தொழில்சார் ஊடகப் பயிற்சி 186
ஆ ஊடகச் செயற்பாடுகள் குறித்த கல்விசார் கற்கைநெறிகள் 211
இ சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம் 228

வகை 5:
சுயாதீனமும் பன்மைத்துவமும் மிக்க ஊடகங்களுக்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் 244
அ ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும் 248
ஆ அச்சு ஊடகம், ஒலி - ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல் 255

பின்னிணைப்புக்கள் 279

பெட்டிக் குறிப்புகள் வரிசை


பெட்டி 1 பரந்த தோற்றத்திற்கான ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள்
பெட்டி 2 கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம்
பெட்டி 3 ஊடகங்களைப் பாதிக்கின்ற ஏனைய சட்டங்கள்
பெட்டி 4 ஊடகப் பன்முகத்தன்மை என்றால் உண்மையாக என்ன?
பெட்டி 5 ஊடக குறுக்கு–உரிமையாண்மை
பெட்டி 6 சுயாதீன ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குமுறையாளர்: 1997 இல் தவறான தொடக்கம்
பெட்டி 7 அலைக்கற்றை ஓர் அபூர்வமான பொதுச்சொத்து
பெட்டி 8 சமூக வானொலிக்கான வழிகாட்டும் கோட்பாடுகள்
பெட்டி 9 இலங்கையில் சமூக வானொலி: தொன்மமும் யதார்த்தமும்
பெட்டி 10 அரசாங்க நிறுவனங்களின் செய்திப்பத்திரிகை விளம்பரங்களை கட்டுப்படுத்தல்
பெட்டி 11 அளவுக்கு அதிகமான விளம்பரங்கள்?
பெட்டி 12 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு
பெட்டி 13 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு: நோக்கத்தை முதலில் தெளிவுபடுத்து!
பெட்டி 14 இலங்கை ஊடகங்களின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கான ஒழுக்கக்கோவை
பெட்டி 15 2015 தேர்தலின்போது அரச ஊடகங்கள் செயற்பட்ட விதம்
பெட்டி 16 சுயதணிக்கை எவ்வாறு ஜனநாயகத்தை தகர்த்து நல்லிணக்கத்தை தடுக்கிறது
பெட்டி 17 ஊடகக் கல்வுி, ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் கல்வி
பெட்டி 18 சகல ஊடகவியலாளர்களும் அறிந்திருக்கவேண்டியது...
பெட்டி 19 சிங்கள, தமிழ் மொழி ஊடகங்களின் தொழில்சார் தராதரத்தை உயர்த்துதல்
பெட்டி 20 இதழியல் கல்விசார் கற்கைநெறிகளை மதிப்பிடுதல்
பெட்டி 21 இதழியல் கல்விக்கான பொருத்தமான பாடத்திட்டம்?
பெட்டி 22 ஊடக விளங்கறிவு என்றால் என்ன?
பெட்டி 23 ஊடகக் குவிவு என்றால் என்ன?
பெட்டி 24 உள்ளடக்கும் தகவல் சமூகங்களுக்கான சமுதாய ஊடகம்
பெட்டி 25 இலங்கையின் முதல் பிரஜைகள் ஊடகவியலாளர்கள்


அட்டவணைகள் வரிசை


Table 1 Overview of Media Regulatory Framework in Sri Lanka
Table 2 Different media regulatory mechanisms
Table 3 Different courses offered by Sri Lanka College of Journalism


பின்னிணைப்புகள் வரிசை


பின்னிணைப்பு 1 ஆலோசனை பெறப்பட்ட வளங்கள் மற்றும் நபர்கள்
பின்னிணைப்பு 2 ஆய்வு உதவிக்குழு
பின்னிணைப்பு 3 குவிமையக் கலந்துரையாடல்களின் சுருக்கம்
பின்னிணைப்பு 4 பொதுத் தேர்தல் 2015 இல் அரசியற் கட்சிகளுக்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள்
பின்னிணைப்பு 5 இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள்
பின்னிணைப்பு 6 இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி உரிமம் பெற்ற பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்
பின்னிணைப்பு 7 இலங்கையில் வெகுசன ஊடகங்கள் பற்றிய பொதுக்கணக்கெடுப்பின் முக்கிய அம்சங்கள் - 2015

# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கையில் ஒரு தசாப்தமாக நிலவிய ஆதிக்க ஆட்சிக்கு முடிவுகட்டி ஜனநாயகத்தை நிலைநாட்ட சிறந்ததொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தது 2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல். இந்த அரசியல் மாற்றமானது ஊடகங்களின் தொழில்சார் தகைமைகளையும் பொறுப்புணர்வையும் ஊக்கப்படுத்துவதுடன் வலுவானதும் பாதுகாப்பானதுமான கருத்துச் சுதந்திரத்திற்கும் ஊடக சுதந்திரத்திற்கும் ஒரு தளத்தை அமைத்திருக்கிறது.

புதிய அரசாங்கம் 2015 இல் பெற்ற வெற்றியினைத் தொடர்ந்து நிலைமாற்று நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கு வெளிப்படையான அர்ப்பணிப்பைச் செய்துகொண்டது. இந்த முக்கிய முயற்சியில் அதிகாரத்தைக் கொண்டிருப்போர் பொறுப்புடன் நடந்துகொள்ளவும், மக்களுக்குத் தெரியப்படுத்தவும் ஊடகங்களும் முக்கிய வகிபாகத்தை வழங்கமுடியும்.

அரசாங்கம் ஏற்கனவே ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் எதிர்நோக்கியிருந்த அச்சுறுத்தல்களை முடிவுக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடந்த தாக்குதல்களுக்கான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. அரசியல் இணையத்தளங்களை சட்டவிரோதமாக முடக்குவதையும் முடிவுக்கு கொண்டு வந்ததுடன், 19ஆவது திருத்தச்சட்டமூலத்தின் மூலம் தகவலறியும் செயற்பாட்டினை அடிப்படை உரிமையாக்கியது.

ஆனாலும், இலங்கையில் கருத்துச் சுதந்திரமும் ஊடக சுதந்திரம் மேம்படுத்தப்பட இன்னமும் செய்யப்படவேண்டியன உள்ளன. பத்திரிகையாளர்களுக்கும் ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் இன்னமும் உகந்த சூழல் உருவாக்கப்படவேண்டும். இதனைச் செய்ய - கொள்கைகளும், சட்டங்களும், கட்டமைப்புச் சீர்திருத்தங்களும் உறுதி செய்யப்படுவதற்கு அரசியல் வேணவாவும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

கால்நூற்றாண்டு கால போர்ச் சூழல் இலங்கை ஊடகத்துறையில் ஏற்படுத்தியிருந்த ஆழமான பிளவு இன, மத, அரசியல் ரீதியில் முனைப்புப்பெற்ற பிரச்சினைகளுக்கும் அரசு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அதேநேரம், அரசாங்கத்தின் தலையீடு, எதிர்வுகூறமுடியாத சந்தைச் சவால்களும், வேகமான தொழில்நுட்ப விருத்தியும் சரிந்துவந்த மக்கள் நம்பிக்கையும் காரணமாக ஊடகத்துறையும் துறைசார்ந்தோரும் சொந்த உள்ளார்ந்த பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க நேர்ந்ததோடு மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்புவதும் சவாலாக இருந்தது.

ஊடக நிறுவனங்களும் அவற்றின் வர்த்தகச் செயற்பாடுகளும் பொருளாதார ரீதியில் நீடித்திருப்பது தொடர்ந்தும் மாபெரும் சவாலானது. தமது நுகர்வோர் தளத்தைத் தக்கவைத்துக்கொள்ள பிரதான ஊடகங்கள் போராடவேண்டி இருந்தது. அநேகமான ஊடகங்கள் இலத்திரனியல் கருவிகளையும் இணையப் பயன்பாடுகளையும் தம்மோடு இணைத்துக்கொள்வதில் மந்தகதியிலேயே செயல்பட்டன. இதன் காரணமாக ஊடக தயாரிப்புகளுக்கும் நுகர்வோர் விருப்பங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்பட்டது.

தற்போதுள்ள வர்த்தக மாதிரிகள் நீண்ட காலத்திற்கு தகுந்த வருமானத்தைத் தரத் தவறியதால், தரமான ஊடகவியலுக்குப் பதிலாக, ஏற்பட்ட வருமான பற்றாக்குறையை ஈடு செய்ய சில ஊடகங்கள் தரமற்ற வதந்திகளையும் கிசுகிசுக்களையும் தரத்தொடங்கின. இன்னொரு கட்டமாக, பெரும்பாலான ஊடகவியலாளர்களும் ஊடகப்பணியாளர்களும் குறைந்த வேதனத்தையே பெற்றுவருவதால், ஊடக கவனத்தைக் கவரவிரும்பும் அதிகார மற்றும் ஆதிக்க சக்திகளால் கையாளலுக்குட்படும் நிலைமைக்கு இட்டுச்செல்லப்பட்டனர்.

இந்தப்போக்குகளுக்கு ஆட்படாமல், மக்கள்

நலத்தை முன்வைத்துப் பணியாற்றும், ஊடக ஒழுக்கநெறிகளின்பால் இயங்கும் பத்திரிகை ஆசிரியர்களும் ஊடகவியலாளர்களும் இல்லாமலில்லை. ஆனாலும், அரசியல் அல்லது இனரீதியில் வேறுபட்ட உள்ளடக்கங்களைத் தரும் ஊடகங்களால் அவர்கள் மறைக்கப்பட்டுள்ளார்கள். ஊடகம் சார்ந்த மக்கள் நம்பிக்கை மிகக்குறைவாக இருப்பதாக கணக்கெடுப்புகள் ஆதாரம் காட்டுகின்றன. இளைய தலைமுறை இலங்கையர்கள் இணைய அடிப்படையிலான தளங்களையும் சமூக ஊடக வலைத்தளங்களையுமே நாடுகின்ற தன்மை அதிகரித்துவருகின்றது.

அச்சு ஊடகப் பொறுப்புக்கூறலுக்காக 2003 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு சுய ஒழுங்கமைப்பு நிறுவனமான இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தையே கொண்டிருந்தது. முழுமையான தன்னார்வ அமைப்பாக அது இருந்ததால் அதனைப் புறக்கணிக்கும் பத்திரிகை நிறுவனங்களினால், தீர்ப்புக்களை செயற்படுத்தும் அதிகாரம் அதற்கு இருக்கவில்லை.

கடந்த இரண்டு தசாப்தங்களாக எந்த வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் பொறுப்புக் கூறும் பொறிமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. உண்மையில், தொடர்ந்து வந்த அரசுகள் தமது அரசியல் ஆதரவாளர்களுக்கு ஒலி, ஒளிபரப்பு உரிமங்களை தன்னதிகாரமாக வழங்கியிருந்தன. இதனால் அலைவரிசைக்கான வரம்புகள் மீறப்பட்டு, பொதுச்சொத்து வீணடிக்கப்பட்டு, சட்டரீதியாகவும் தொழிநுட்பரீதியாகவும் சிக்கலான நிலை ஏற்பட்டது. சுயாதீன ஒலிபரப்புக் கட்டுப்பாட்டின் மூலமே இதனை சீர்படுத்த முடியும் என்பதுடன் டிஜிட்டல் ஒலி, ஒளிபரப்புக்கான இசைவான மாறுகையும் சாத்தியமாகும்.

இந்த மதிப்பீடானது ஒரு நாட்டினுடைய ஊடகத்துறையின் வளர்ச்சியை அளவீடு செய்ய யுனெஸ்கோ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடக கட்டமைப்பின்பாலான ஊடக வளர்ச்சிக் குறியீடுகளை (MDIs) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, இலங்கையின் ஊடகச்சூழல் பற்றிய ஆய்வாகும். MDIs யானது இலங்கையின் ஊடகச்சூழலின் பலம் மற்றும் பலவீனம் என்பவற்றை அடையாளம் கண்டு, ஆதாரங்களின் அடிப்படையிலான சிபாரிசுகளை முன்வைத்து, ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக பன்மைத்துவம் என்பவற்றை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் முன்மொழியும்.

இந்த மதிப்பீடானது, இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையின்படி ஐந்து பங்கேற்பாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டஊடக சீர்திருத்தங்களுக்கான செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டது. 2015 மார்ச் மாதம் முதற்கொண்டு - கொள்கை வகுப்பாளர்கள், ஊடக உரிமையாளர்கள், ஊடகப் பயிற்சியாளரகள், ஆராய்ச்சியாளர்கள், ஆதரவுமுன்வைக்கும் குழுக்கள் மற்றும் ஊடக நுகர்வோரான பொதுமக்களுடனான தொடர் சந்திப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன். 2015 மே மாதம் நடைபெற்ற ஊடக சீர்திருத்தங்களுக்கான தேசிய உச்சிமாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில், முக்கிய ஊடக பங்குதாரர்களுடனான நேர்காணல்கள், பாரிய மாதிரி ஆய்வு, சிந்தனைக் கிளர்ச்சி செயலமர்வுகள், சகபாடிகளுடனான மீளாய்வுகள் என 250 இற்கு மேற்பட்ட தேசிய பங்குதாரர்கள்மற்றும் பல சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் இந்த துரித மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது,

ஊடகத்தொகுதிசார் கட்டமைப்பு மற்றும் சட்டரீதியான சீர்திருத்தங்கள் மிக நீண்டகாலமாகச் செய்யப்படாதிருந்ததை இந்த அறிக்கையின் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றில் சில சீர்திருத்தங்களை உள்ளார்ந்த, தீவிரமான பிரதிபலிப்புக்களுடன் தொழில்சார் ஊடகங்களும் நிறுவனங்களும் தாமாக தம்முள்ளிருந்தே கொண்டுவரவேண்டும். சட்டங்கள், அரசின் கொள்கைகள் ஆகியவற்றில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதனாலும் அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை முழுமையாக

ஆராய்வதனாலும் ஏனைய சீர் திருத்தங்களை மேற்கொள்ளலாம். அதேநேரம் இதற்குச் சமாந்தரமாக, ஊடகவியல் மற்றும் வெகுசன ஊடகக் கற்கைநெறிகளும் மீள்பரிசீலனை செய்யப்படுவதுடன் தற்கால தொழில்சார் தேவைகளின்படியும், ஊடக நுகர்வின் பாங்குகளின்படியும் அவை மேம்படுத்தப்படல் வேண்டும். சமூகத்தின் ஊடக விளங்கறிவும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

ஊடக வளர்ச்சிக் குறியீடுகள் (MDIs) ஐந்து வகை கருப்பொருட்களாகப் பிரிக்கப்பட்டு, அவை வழியே உருவாக்கப்பட்ட ஐந்து அத்தியாயங்களும் முக்கிய பரிந்துரைகளுடன் தொகுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச தரத்திற்கு அமைவாக, இலங்கையில் சுயாதீனமும் பன்முகத்தன்மையுள்ள ஊடகத்துறையை உருவாக்க அவசியம் செய்யவேண்டியவை எவையென்பதை அரசாங்கம் மற்றும் ஊடக பங்குதாரர்களுக்கு உணர்த்தும் 100 யை அண்மிக்கும் பரிந்துரைகள் - இலங்கையின் ஊடகச்சூழல் பற்றிய இந்த ஆய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டன.

*முக்கிய பரிந்துரைகள்*

- சட்ட மீளாய்வும் திருத்தமும் : கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் அனைத்துச் சட்டங்களும் சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இசைவாகும் வகையில் அரசாங்கத்தால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

- தகவல் அறியும் உரிமைச்சட்டம் : தகவல் அறியும் உரிமைச்சட்டம் செயற்திறனுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு, பொதுத்துறையில் கூடுதலான வெளிப்படைத்தன்மையும் திறந்ததன்மையும் பேணப்பட வேண்டும்.

- ஊடக உரிமையாண்மை : ஊடக உரிமையாளர் பற்றிய விபரங்கள் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் இருக்கும்படியாகவும் பொதுமக்களுக்கு அவை கிரமமாகத் தெரியப்படுத்தப்படும் வகையிலும் புதிய நிபந்தனைகள் இயற்றப்பட வேண்டும்.

- ஊடகக் கட்டுப்பாடு : 1973 ஆம் ஆண்டு பத்திரிகை நிறுவனச் சட்ட இலக்கம் - 5 நீக்கப்படுவதுடன், அரசின் பத்திரிகை நிறுவனம் கலைக்கப்படவேண்டும். அதற்குப்பதிலாக, அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களை உள்ளடக்கியதான செயற்திறனுடனான சுய ஒழுங்குபடுத்தும் முறை ஊடகத்தொழிற்துறையால் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- ஒலி - ஒளிபரப்பு விதிமுறைகள் : வெளிப்படையான ஒலி- ஒளிபரப்பு உரிம ஒதுக்கீட்டை உறுதி செய்யும் புதிய சட்டங்களின் தேவை. அலைவரிசைகள் ஒதுக்கீட்டில் பாரபட்சமின்மை. பொது, வர்த்தக மற்றும் சமூக ஒலிபரப்பாளர்கள் என மூன்றடுக்கு முறை பேணப்படல். அரசியல் மற்றும் தேர்தல் செய்திவெளியீட்டில் பாரபட்சமற்ற சமத்துவமான முறை பேணப்படுவதற்கு அனைத்து ஒலி-ஒளிபரப்பாளர்களுக்குமான பொறுப்புடமை. சுயாதீன ஒலி- ஒளிபரப்பு அதிகாரசபை அமைக்கப்படல்.

- டிஜிட்டல் ஒலி - ஒளிபரப்பு : அரசாங்கம் தொலைக்காட்சி ஒளிபரப்பினை அனலொக் முறையிலிருந்து டிஜிட்டல் முறைக்கு மாற்றுவது பற்றிய தெளிவான திட்டத்தினையும் காலஎல்லையினையும் இயன்றளவு விரைவாக உருவாக்க வேண்டும்.

- அரச ஊடகங்கள் மறுசீரமைப்பு : சுயாதீன ஆசிரியபீடத்திற்கான உத்தரவாதத்துடன், மூன்று அரச ஒலி- ஒளிபரப்புச் சேவைகளும் சுயாதீன பொதுச்சேவை ஒலி- ஒளிபரப்புச் சேவைகளாக மாற்றப்பட வேண்டும். அரசுக்குச் சொந்தமான லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் சுயாதீன ஆசிரியபீடத்துடன் சுதந்திரமாக இயங்கவேண்டும்.

- தணிக்கை :எந்த ஒரு ஊடகத்தின்மீதும் முற்தணிக்கை விதிக்கப்படக்கூடாது. அவசியமானால், வெளியீட்டின் பின்னர் நீதிமன்றங்கள் சட்டபூர்வமாக ஊடக உள்ளடக்கத்தை மீளாய்வு செய்து சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் அமைய அனுமதிக்கப்பட்ட தணிக்கையின்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். தணிக்கையை அனுமதிக்கும் சட்டங்கள் மீளாய்வு செய்யப்படவேண்டும்.

- இணையத்தளங்களைத் தடைசெய்தல் : அரசாங்கம் இணைய உள்ளடக்கங்களையோ சமூக ஊடகச் செயற்பாடுகளையோ அரசியலமைப்புச் சுதந்திரதிற்கும், சரவதேச நியதிகளுக்கும் முரணாக முடக்க எத்தனிக்கக்கூடாது.

- தனியாள் உரிமையும் கண்காணிப்பும் : பிரசைகள் அனைவரினதும் தனியாள் உரிமை அரசினாலும் ஊடகங்களினாலும் கௌரவப்படுத்தப்பட வேண்டும். தனியாட்கள் மற்றும் அமைப்புக்களின் தொலைபேசி மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல்கள் அரசினால் கண்காணிக்கப்படுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் அவசியம் வேண்டும்.

- ஊடகக்கல்வியும் விளங்கறிவும் : மூன்றாம் நிலைக்கல்வி மட்டத்தில் ஊடகவியல் மற்றும் வெகுசன ஊடகக் கற்கைநெறிகள் தற்போதைய தொழில்தேவைகளையும் நுகர்வு வடிவங்களையும் திருப்திசெய்வதாக புதுப்பிக்கப்பட வேண்டும். ஊடக விளங்கறிவையும் இணைய அறிவையும் மேம்படுத்த ஒரு தேசியக் கொள்கையும் அவசியமாகும்.

இதில் கண்டறியப்பட்டவையும் பரிந்துரைகளும் நாட்டின் வரலாற்றில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் ஜனநாயக சீர்திருத்தம் உருவாகியிருக்கும் முக்கியமான தருணத்தில் வழங்கப்படுகிறது. இந்த அருமையான சந்தர்ப்பம் கைகூடுமென நம்பப்படுகிறது.

ஒட்டுமொத்த ஊடகத் தொழின்முறைச் சூழலை ஒழுங்குபடுத்த முற்போக்கான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நெறிமுறைகள் கைகொடுத்தாலும் ஊடகத்தொழிற்களமும் அதன் பணியாளர்களுமே அவர்களது தரத்தையும் நெறிமுறைகளையும் உயர்த்த முடியும்.

# ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகத்தின் முகவுரை

கடந்த சில தசாப்தங்களாக வெகுசன ஊடகத்துறையானது துரிதமான பல மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. இந்த மாற்றங்களானவை ஊடகத்துறையிலும் ஊடகங்களை நுகர்கின்ற பொதுமக்கள் மத்தியிலும் நேரடியான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தனிப்பட்ட வாழ்க்கை, மனப்பாங்குகள், சிந்தனைகள், விருப்பங்கள், நம்பிக்கைகள், கருத்தியல்கள் போன்றவற்றை வடிவமைப்பது தொடர்பான சமூகத்தின் அரசியல், பண்பாடு, பொருளாதார அம்சங்களின் நெறிப்படுத்தல்களில் ஊடகமானது செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளது. இதனால், இவ்வித விடயங்களை நாம் காத்திரமாக ஆய்வுக்குட்படுத்தி விமர்சிக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் வெகுசன ஊடகத்துறையானது தன்னியல்பாகவும் பெரும்பாலும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளின் காரணமாகவும் வளர்ந்து வந்துள்ளது. தேசிய அபிவிருத்தியிலும் தேசிய ஒருங்கிணைப்பிலும் ஊடகத்தின் கூட்டிசைவான தொலைநோக்கு வகிபாகத்தைக் கருத்திற்கொள்ளாமல் அரசாங்கமும், ஏனைய நாட்டமுள்ள தரப்பினர் மற்றும் வர்த்தக உரிமையாளர்கள் உள்ளடங்கலானோர் ஊடக உள்ளடக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்சமயம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஜனநாயகம் மற்றும் அரசியல் ரீதியான மறுசீரமைப்புகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்குத் தெளிவான ஊடகக் கொள்கைகள் மற்றும் ஊடகத் துறையுடன் தொடர்புடைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் ஆகியவற்றை மேற்கொள்வது அவசியமாகும்.

ஊடகத்துறை, ஊடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், ஊடகப் பரிந்துரைக் குழுக்கள் ஆகிய பாரியளவிலான பங்கெடுப்பாளர்களுடன் மேற்கொள்ளப்படும் பரந்தளவிலான கலந்தாலோசனைகள் மூலம் இவ்வறிக்கையானது பயன்மிக்க நிலைமைப் பகுப்பாய்வை வழங்குவதோடு, கொள்கை ரீதியான நெறிப்படுத்தல்கள், விதப்புரைகள் ஆகியவற்றையும் வழங்குகின்றது. நாம் இங்கு குறிப்பிட்டுள்ள பாதையில் எம்மோடு கைகோர்த்துப் பயணிப்பதற்கு அரசாங்கம், அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், கல்வியியலாளர்கள், ஊடகத்துறை ஆகியன கைகோர்த்துக் கூட்டிணையும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

கலாநிதி. பிரதீப் என்’ வீரசிங்க
ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகத்தின்
தலைவர் மற்றும் கருப்பொருள்சார் தலைவர்

# சர்வதேச ஊடக ஆதரவின் முகவுரை

யுனெஸ்கோவின் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் ஊடகத்துறை தொடர்பான முதலாவது பூரணத்துவம் மிக்க மதிப்பீடு ஒன்றுக்கான இணை வெளியீட்டாளர்களாகத் திகழ்வதில் சர்வதேச ஊடக ஆதரவு மகிழ்ச்சியடைகிறது. நல்லாட்சி மற்றும் ஜனநாயக ரீதியான அபிவிருத்தி ஆகியவற்றுக்கு ஊடகம் சிறந்த பங்களிப்புகளை நல்குவதுடன் அவற்றிலிருந்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமான வரைவுச்சட்டகமொன்றை ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் வரையறை செய்கின்றன.

மறுசீரமைப்பிற்கான வாக்குறுதிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு, நிலைமாற்றுக்கால நீதி, நல்லிணக்கம் ஆகியன தொடர்பான பொறுப்புகள் அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க இத்தருணத்தில் இந்த ஆய்வின் கண்டறிதல்களும் விதப்புரைகளும் சமர்ப்பிக்கப்படுகின்றன. இத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்ற தருணத்தில் - இயங்காற்றல்மிக்க, பகிரங்கமான, பன்மைத்துவம் மிக்க ஊடகச் சூழலானது சாதகமான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதுடன் பக்கச்சார்பற்ற துல்லியமான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் பொதுமக்களையும் இவை தொடர்பில் ஈடுபடுத்த முடியும்.

2015 மார்ச் ஆரம்பம் முதற்கொண்டு - அரசாங்கம், கல்வியியலாளர்கள், ஊடகத்துறை, சிவில் சமூகம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இலங்கையில் MDI (ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள்) மதிப்பீட்டுச் செயற்பாடுகளானது முழுமையாக உள்ளூர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளே என்பதை நான் தயவுடன் தெரிவிக்கின்றேன்.

2003 ஆம் ஆண்டு முதல் சர்வதேச ஊடக ஆதரவு - IMS ஆனது, இலங்கையில் ஊடக அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. தற்போதைய ஊடகம் சார் சூழல்கள் மற்றும் அதன் ஆரோக்கியமான அபிவிருத்திக்கு எவ்விதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் போன்றன தொடர்பில் இந்த அறிக்கையானது அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க உதவுமென நாம் நம்புகின்றோம்.

ஜெஸ்பர் ஹொர்ச்பேர்க்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சர்வதேச ஊடக ஆதரவு

மே 2016

# விசேட பங்களிப்புகள்

இலங்கையில் ஊடக அபிவிருத்திக்கான ஒட்டுமொத்த சூழல் தொடர்பான பூரணத்துவமிக்க மதிப்பீடு ஒன்றினை இந்த மதிப்பீடு வழங்குகின்றது. சட்ட ரீதியான வரைவுச்சட்டகம், பொருளாதார நிலைமைகள், மனித வளங்கள் அபிவிருத்தி, தொழில்நுட்பம்சார் சூழலும் பாதுகாப்பும், நாட்டின் ஊடகத்துறை அபிவிருத்தியின் உண்மையான நிலைப்பாடு ஆகியன உள்ளடங்கலாக ஊடக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய மாறுபட்ட அம்சங்களைக் கவனத்திற்கொண்ட யுனெஸ்கோவின் MDI (ஊடக அபிவிருத்தக் குறிகாட்டிகள்) வரைவுச் சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துடன், உலக அளவில் பூட்டான், மாலைதீவு, நேபாளம் போன்ற தெற்காசிய நாடுகள் உள்ளடங்கலாக மொத்தமாக 14 MDI மதிப்பீடுகள் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 16 மதிப்பீடுகள் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. சர்வதேச தராதரங்களுடனும் தேசியமட்ட நற்பயிற்சிகளுடனும் ஒப்பீடு செய்து ஊடகம்சார் சூழல் தொடர்பான வலுவான அம்சங்களையும் பலவீனங்களையும் அடையாளங்காண்பதும், அதன் மூலமாக தேசிய ரீதியான மறுசீரமைப்புகளுக்கு வழிகாட்டுவதும் MDI மதிப்பீட்டின் இலக்காகும். முன்னுரிமைகளை இனங்கண்டு, தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது உள்ளூர்ப் பங்கேற்பாளர்களது பொறுப்பாகும். இந்த MDI மதிப்பீடுகளானது - தரப்படுத்தும் முயற்சியோ அல்லது நாடுகளுக்கிடையில் ஒப்பீடுகளை வழங்குவதோ அல்ல.

இலங்கையில் முக்கியமானதொரு தருணத்தில் இந்த மதிப்பீடுகள் வெளிவருகின்றன. ஊடக புத்தாக்க மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தை நாடு மேற்கொண்டு வருவதை உறுதிப்படுத்தும்வகையில், தகவல் அறியும் உரிமை தொடர்பில் அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதங்களை மேற்கொள்வதன் பொருட்டு அரசியலமைப்பு ரீதியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள மிக உரிய தருணத்தில் இந்த மதிப்பீடு முன்வைக்கப்படுகிறது. ஊடக மறுசீரமைப்புத் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் முன்னுரிமைகள் மற்றும் பிரதான நெறிப்படுத்தல்கள் ஆகியவற்றை இனங்காண்பதற்கு ஏதுவாக பெறுமதியான கருவிகளை இந்த மதிப்பீடு பிரதிநிதித்துவம் செய்கிறது.

MDI அணுகுமுறைகளின் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு, உத்தியோகபூர்வ மற்றும் சிவில் சமூகப் பங்காளர்களின் ஈடுபாட்டுடன் - விசேடமாக ஊடக அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழக வெகுசன ஊடகத்துறை, இலங்கைப் பத்திரிகை நிறுவனம், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான உபாய ரீதியான கூட்டமைப்பு (SARD), சர்வதேச ஊடக ஆதரவு (IMS) ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இந்த பல்துறைசார் பங்கேற்பாளர்களும் தமது ஊடக மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு இந்த மதிப்பீட்டைத் தற்போது பயன்படுத்தமுடியும் என்பது நம்பிக்கை.

அண்மைய தசாப்தங்களில் இலங்கையில் ஊடக அபிவிருத்தியானது குறிப்பிடக் கூடியளவு உறுதியாகவுள்ளது என்பதையும் பன்முகமான சுதந்திர ஊடகத்துறை மூலம் நாடு தற்சமயம் நன்மையடைந்துள்ளது என்பதையும் இம்மதிப்பீட்டின் மூலம் தெளிவாக உணர முடியும். அதேவேளையில் ஊடகம் தொடர்பான காத்திரமான

சூழல் ஒன்றை உருவாக்குவதற்கும் அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மேலும் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பது தெளிவாகும். சட்ட ரீதியான சீர்திருத்தங்கள், சிறப்பான கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான வாய்ப்புகள், ஊடகத்திற்கென காத்திரமான பொருளாதார ரீதியான சூழலொன்றை உருவாக்குதல், ஊடகச் சுதந்திரத்திற்கென கட்டமைப்பு ரீதியான உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்தல் போன்றன இவற்றுள் சிலவாகும்.

முன்னோக்கிப் பயணிப்பதற்கான விடயங்களை இந்த மதிப்பீடு எடுத்துரைக்கிறது. இங்கு கூறப்படும் விதப்புரைகளை சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உள்ளூர் பங்கேற்பாளர்களிடம் காணப்படுகிறது.

டொபி மென்டல்
நிறைவேற்றுப் பணிப்பாளர் - சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையம்

# அறிமுகம்

ஊடகத்தின் ஜனநாயக, சமூக மற்றும் பண்பாட்டு ரீதியான அவசியங்கள் இந்த முக்கிய வெளியீட்டிற்கான நியாயப்பாடுகளைப் புலப்படுத்துகின்றன. தீவிரமான உள்ளார்ந்த மற்றும் வெளியிலிருந்தான விமர்சனங்களுக்கு ஆளாகி, பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்து நம்பிக்கையிழந்தும் ஒழுங்குசீரற்றும் காணப்படுகின்ற எமது ஊடக முறைமையிலுள்ள சமத்துவமின்மைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக உருவாக்கப்பட்ட பல முக்கிய விதப்புரைகளைக் கொண்டதாக இது காணப்படுகிறது.

ஜனநாயக மறுசீரமைப்புக்களின் பேரிலான புதிய கலந்தாய்வுகளில் ஆர்வம்கொண்டுள்ள இலங்கையர்களைக் கருத்திலெடுத்தும், ஊடகத் தொழில்வாண்மைமிக்கவர்கள், கல்வியாளர்கள், அரச மற்றும் அரச சாராத செயற்பாட்டாளர்கள் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அறிகைக் குழுவினரை உள்ளடக்கியும் ஊடக அபிவிருத்தியை அளவிடுமுகமாக அறிமுகப்படுத்தப்பட்ட யுனெஸ்கோவின் வரைவுச்சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

யுனெஸ்கோ முறையியலில் விபரிக்கப்பட்டுள்ள ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் தொடர்பான ஐந்து வகைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிகைக் குழுவினர் கடந்தகால கற்கைகளை மீளாய்வு செய்ததுடன், சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்தும், மையக்குழுக் கலந்துரையாடல் மூலம் தகவல்களைத் திரட்டியும், ஊடகத் தொழில்வாண்மை மிக்கவர்கள் மற்றும் அதனைப் பயன்படுத்துபவர்களுடைய கருத்துக்களை உறுதிப்படுத்துமுகமாக இரண்டு மாதிரி ஆய்வுகளை மேற்கொண்டும், நம்பகத்தன்மைமிக்க சான்றுகளைத் திரட்டுமுகமாக பல்வேறு பங்கேற்பாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோரை நேர்காணல் செய்துமுள்ளனர்.இக்குழுவானது பரந்துபட்ட தரப்பினரிடமிருந்தும் அவர்களது அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ளுமுகமாக தொடர்ச்சியாக தமது அறிக்கையின் வரைபுகளை அவர்களுக்கு வழங்கியது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட காத்திரமான சகபாடிகளுடனான மீளாய்வுச் செயன்முறையின் பின்னர் கண்டறிதல்களையும் விதப்புரைகளையும் உள்ளடக்கிய இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது. மதிப்பீட்டுச் செயன்முறையை பூரணப்படுத்துவதற்கும் இவ்வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுரைகள் அடிப்படையிலான விதப்புரைகள் தொடர்பில் இணக்கப்பாடுகளை அடைவதற்கும் சுமார் ஒரு வருடகாலம் சென்றது.

ஜனநாயக சமூகமொன்றில் பிரஜைகள் - அரசாங்கம் அல்லது நுகர்வோர் - தொழில்துறையினர் போன்ற தனி நபர்களுக்கும் குழுக்களுக்கும் இடையிலான தொடர்பாடலானது, முழுச் சமூகக் கட்டமைப்பையும் இயக்குவதோடு, அக்கட்டமைப்பு முறையாக செயற்படுவதற்கு அவசியமான விடயங்களையும் எடுத்துரைக்கின்றது. அறிவைப் பரப்புவதற்கான முக்கிய கருவியாக தொடர்பாடல் திகழ்கின்ற அதேவேளை, விழுமியங்களின் காவியாகவும் அது திகழ்கின்றது.

எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான முக்கிய விடயங்களான நீதி, சமத்துவம், சுதந்திரம், பகிர்தல் ஆகியவற்றின் பெயரால், தற்போது முன்னெப்போதும் இல்லாதளவிற்கு விழுமியங்களைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டியுள்ளது. இதன் நிமித்தம் சுயாதீனமான, சுதந்திரமான, பன்மைத்துவம்மிக்க வினைத்திறனான ஊடக முறை எமக்கு அவசியப்படுகின்றது.

இங்கு 'சுயாதீனம்' என்பதால் நாம் கருதுவது - அரசாங்கம் மற்றும் பல்வேறு அழுத்தக் குழுக்களில் பலவந்தத்தால் உருவாகும் தலையீடுகளோ அல்லது தனிப்பட்ட நலன்களை நாடும் நிலைகளோ அற்றதாக ஊடகங்கள் திகழ வேண்டும் என்பதாகும். ஊடகவியலாளர்கள் தமது தொழில்வாண்மைமிக்க தராதரங்களைப் பேணுவதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் சமூகமும் அரசும் அனுமதித்தல் வேண்டும் என்பதே இதனால் உணர்த்தப்படுவதாகும். ஊடகங்கள் இவ்விதமான சுயாதீனத் தன்மைகளைப் பிரயோகிக்கின்ற அதேவேளை, அவற்றின் நேர்மை மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படல் வேண்டும். இது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயனளிப்பதாகும். அதேவேளை, வாசகர்கள், நேயர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகியோரை விடுத்து, வேறு நலன்களின்பால் தகவல்களைக் கையாளல் செய்வது முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இங்கு 'சுதந்திரம்' என்பதால் நாம் கருதுவது - ஊடகத்துறையின் உரிமை எவரைச் சார்ந்ததாகவிருந்த போதிலும், ஊடகங்கள் தங்குதடையற்ற ஆசிரியர்பீடச் சுதந்திரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இவ்விதமான ஆசிரியர்பீட சுயாதீனத் தன்மைகளின் மூலம் ஊடகங்களானது சுயாதீனச் சிந்தனை தொடர்பிலான சான்றுகளைப் புலப்படுத்துவதுடன், அரசாங்கத்தினை மாத்திரமல்லாது அதிகார மையங்களது செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்யமுடியும். ஆசிரியர்பீடச் சுதந்திரங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஊடகமானது செய்திகளையும் தகவல்களையும் பகிரங்கமாக பிரஜைகள் அணுகக் கூடிய நிலையை உருவாக்குவதோடு, அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை மீளவலியுறுத்துவதாக இல்லாமலும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

சமூகத்தின் பல்வேறு மட்டங்களைச் சார்ந்த மக்களின் கருத்துக்களைப் போதியளவு பிரதிநிதித்துவம் செய்யக் கூடியதான, உண்மையான பன்மைத்துவம் மிக்கதாக ஊடகமானது திகழாதவரையில், தனித்து ஊடகச் சுதந்திரமும் ஆசிரியர்பீடச் சுதந்திரமும் போதாமைமைக்குரியனவே. இருப்பினும், ஒரேவகையான வெளிப்பாடுகளை வழிப்படுத்தும் ஊடகக் கம்பனிகள், நிலையங்கள் ஆகியன மாத்திரம் காணப்படுவதை அடிப்படையாகக் கொண்டு ஊடகப் பன்மைத்துவம் காணப்படுவதாகக் கருதமுடியாது. இவ்விதமான அனுபவங்களை இலங்கையர் என்ற முறையில் நீண்டகாலம் நாம் அனுபவித்து வருகின்றோம்.

மேலும், ஊடகப் பன்மைத்துவம் என்ற வார்த்தையை வெறுமனே சந்தைப்படுத்தல் சார்ந்த நலன்களுக்கும் போட்டித்தன்மைகளுக்கும் மாத்திரம் பிரயோகிக்க முடியாது. அரசியல்மயப்படுத்தப்பட்ட நிலையிலிருந்தும் நுகர்வோரை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளிலிருந்தும் ஊடகமானது விலகி, பொதுமக்கள் தளத்துக்கு தொடர்பாடல் அதிகாரத்தை மேம்படுத்தக்கூடிய ஜனநாயகக் கருவியாகத் திகழவேண்டும்.

இதனை அடிப்படையாக வைத்துப் பார்த்தோமானால், ஊடக அபிவிருத்தியை நாட்டில் காணப்படுகின்ற ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கையினை மாத்திரம் வைத்து சாதாரணமாக அளவிட்டுவிட முடியாது என்பது புலனாகும். சமூகத்தில் காணப்படுகின்ற சமத்துவமின்மைகளுக்கு எதிராக சவால் விடுக்கும் ஆற்றல், வழங்குகின்ற தகவல்களின் தரத்தின் அடிப்படையில் ஜனநாயகத்தன்மைமிக்கதும் அனைவரையும் உள்ளீர்க்கக் கூடியதுமான பொதுவெளியை உருவாக்குதல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஊடக அபிவிருத்தி புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இவ்வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள சில பிரதான விதப்புரைகள் - முக்கிய சட்டரீதியான மறுசீரமைப்புகள் மற்றும் தேவையான அரச கொள்கைகள் ஆகியன இலக்குகளை அடைவதற்கு அவசியம் என எடுத்துரைக்கின்றன. அரசாங்கம், சகல அரசியல் கட்சிகள், சட்டங்களை உருவாக்குபவர்கள் ஆகியோர் கூட்டாக இணைந்து இத்தகைய மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென விநயமாக நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவில் சமூகம், ஊடக அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், வெளியீட்டாளர் அமைப்புகள் மற்றும் அபிவிருத்திக்கு உதவும் முகவர்கள் உள்ளடங்கலாக ஏனைய பங்கேற்பாளர்களுக்கும் பல்வேறு முக்கிய விதந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இயங்காற்றல்மிக்க ஜனநாயகத்தை உறுதிப்படுத்தக்கூடியதாக - உண்மையான சுயாதீனத்தன்மை, சுதந்திரம் மற்றும் பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட பன்மைத்துவம்மிக்க ஊடக முறைமையை உருவாக்க அனைத்துப் பங்கேற்பாளர்களதும் முழுமையான ஈடுபாடு எமக்குத் தேவையாகவுள்ளது.

விஜயானந்த ஜயவீர

முன்னாள் பணிப்பாளர் - தொடர்பாடல் அபிவிருத்திப் பிரிவு, யுனெஸ்கோ தலைமையகம்
தலைவர் - தொடர்பாடல்களை விருத்தி செய்வதற்கான யுனெஸ்கோ சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் (2003-2011) ஆலோசகர் - அறிகைக் குழுக்கள்

## ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்: பங்காண்மை அமைப்புகள்

### பாராளுமன்ற மறுசீரமைப்புகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

பன்மைத்துவமிக்க செம்மையாகத் தகவல்கள் வழங்கப்பட்ட சமூகமே இவ் அமைச்சின் தொலைநோக்கு என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் செயற்பணியானது "மக்கள் நேய, அபிவிருத்தி மைய, சுயாதீன மற்றும் பொறுப்புள்ள இலங்கைக்கேயான ஊடகப் பண்பாடொன்றைத் தோற்றுவிக்கும் முகமாக கொள்கைகளையும் உபாயமுறைகளையும் உருவாக்குதல், அனுசரணை வழங்குதல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல்" என்பதாகவும் உள்ளது.
www.media.gov.lk

### வெகுசன ஊடகத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

வறுமையை இல்லாதொழித்து மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பிரதான உபாயமுறைக்கான மூலம் ஊடகமாகும். இத்துறையை நாட்டில் முன்னெடுத்துச் செல்கின்ற ஊடகச் செயற்பாட்டாளர்களினால் இந்தப் பிரதான நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் காணப்படுகின்றது. இதனை நாம் புரிந்துகொள்ளும்போது நிச்சயம் அது நாட்டினை சுபீட்சத்திற்கு இட்டுச் செல்லும். வெற்றிகரமான தொடர்பாடல் முறைகள் மூலம் நாட்டின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களை அடைய முடியுமென ஸ்ரீபாளி வளாகம் கருதுகிறது.
http://spc.cmb.ac.lk/?q=Department_Mass_Media

### சர்வதேச ஊடக ஆதரவு (IMS)

ஆயுத முரண்பாடுகள், மானுட பாதுகாப்பின்மை, அரசியல் நிலைமாற்றம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் பணியாற்றுகின்ற ஆதாயம் கருதாத அமைப்பே சர்வதேச ஊடக ஆதரவு (IMS) ஆகும். சுயாதீன, தொழில்வாண்மைமிக்க ஊடகங்களுக்காக நாம் செயற்படுகின்றோம்.
www.mediasupport.org

### இலங்கை பத்திரிகை நிறுவகம் (SLPI)

1998 இல் உருவான மற்றும் 2008 இல் மீள்பார்வைக்குட்படுத்தப்பட்ட - ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புகள் தொடர்பான கொழும்புப் பிரகடனத்தின்படி தோற்றம் பெற்ற இலங்கை பத்திரிகை நிறுவகம் தற்காலத்தின் ஊடகப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு செயற்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. யுனெஸ்கோவின் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் வரைவுச் சட்டகத்தின் மூலம் இலங்கையில் ஊடகப் பண்பாடு தொடர்பான புரிதல்களை உள்வாங்கும் முக்கிய அங்கமாக இலங்கை பத்திரிகை நிறுவகம் காணப்படுகிறது.
www.slpi.lk

### ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான உபாயரீதியான கூட்டமைப்பு (SARD)

சிவில் சமூக அமைப்பு என்ற வகையில் SARD ஆனது பெறுநர்களின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஊடகங்களை அணுகுகின்ற அதேவேளை, அபிவிருத்திச் செயற்பாட்டில் ஊடகமும் ஒரு முக்கிய அங்கமெனக் கருதியும் செயற்படுகின்றது. எனவே, பன்மைத்துவமிக்கதும் பல்வேறு வகைக் கருத்துக்களை மேம்படுத்தும் நோக்கத்திலும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையிலும் SARD செயற்படுகின்ற அதேவேளை, அபிவிருத்திச் செயற்பாடுகளில் மக்களது பங்களிப்புகளை அதிகரிக்கக்கூடிய வழிமுறைகளையும் மேற்கொள்கிறது.
www.sardglobal.org


ජනමාධ්‍ය
வெகுசன
Mass Media
Reforms
ජාතික සමුළුව
මැයි 13 - 14

# வரைவுச்சட்டகம் மற்றும் முறையியல்

கருத்தார்ந்த வரைவுச்சட்டகம்

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவினால் உருவாக்கப்பட்ட சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவுச்சட்டகத்தின் பிரகாரம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

'ஊடக அபிவிருத்திக்கான குறிகாட்டிகள் : ஊடக அபிவிருத்தியை மதிப்பிடுவதற்கான வரைவுச்சட்டகம்' ஆனது 2008இல் யுனெஸ்கோவின் அபிவிருத்தி மற்றும் தொடர்பாடலுக்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் அரசாங்கங்களுக்கு இடையிலான கட்டுப்பாட்டுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சர்வதேச ரீதியாக 2006 -7 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பரந்துபட்ட சர்வதேச கலந்துரையாடல்கள் மூலம் இந்த ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் (Media Development Indicators – MDIs) உருவாக்கப்பட்டன.[1]

குறிப்பிட்ட நாடொன்றில் ஊடக அபிவிருத்தி தொடர்பான மதிப்பீடுகளை சகல பங்கேற்பாளர்களும் அளவிடுவதற்கான முக்கிய அடையாளங்காணும் கருவிகளாகவும் அதன்மூலம் எவ்வெவ் விடயங்களில் உதவி முக்கியமாக அவசியப்படுகின்றது என்பதை இனங்காண முடிவதாகவும் MDIs காணப்படுகின்றன. ஊடகத் தளங்களை மதிப்பிடல், அவற்றின் பலங்களையும் பலவீனங்களையும் இனங்காணல், ஊடக சுதந்திரம், ஊடக பன்மைத்துவம், ஊடக சுயாதீனம் ஆகியவற்றை எவ்வாறு வலுப்படுத்துவது என்பதைச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட விதப்புரைகள் மூலம் பிரேரித்தல் போன்றவற்றுக்கும் MDIs உதவுகின்றன.

MDIs உருவாக்கப்பட்டதிலிருந்து ஆபிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் 15 நாடுகளில் MDIs இனை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் மற்றும் கொள்கை உருவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[2] ஊடக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி ஆகியன தொடர்பில் நாடுகளின் அடிப்படையில் ஊடக அபிவிருத்தி தொடர்பில் ஐ.நா. வின் பொது அணுகுமுறை வரைவிலக்கணத்தில் MDIs பிரயோகிக்கப்பட்டன.

பல பங்கேற்பாளர்களைக் கொண்ட கலந்தாராய்வுச் செயன்முறை

இலங்கையில் ஊடக மறுசீரமைப்புக்கான பங்காண்மையாக இலங்கையில் MDI மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டன. தொடர்புடைய பங்காளர்கள் வருமாறு :

- வெகுசன ஊடக அமைச்சு (அரசாங்கப் பங்காளர்)
- வெகுசன ஊடகத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் (கல்விசார் பங்காளர்)

1 http://www.unesco.org/new/en/communication-and-information/resources/publications-and-communication-materials/publications/full-list/media-development-indicators-a-framework-for-assessing-media-development/

2 MDIs have been produced so far for: Bhutan, Croatia, Ecuador, Egypt, Gabon, Jordan, Libya, Mozambique, Nepal, Palestine, South Sudan, The Maldives, Timor Leste and Tunisia. As at October 2015, assessments were ongoing in Bolivia, Brazil, Colombia, Côte d'Ivoire, the Dominican Republic, Iraq, Liberia, Madagascar, Mongolia, Morocco, Myanmar, Rwanda, Swaziland, Togo, Uganda and Uruguay, as well as a regional project in South-East Europe.

- இலங்கை பத்திரிகை நிறுகவம், SLPI (ஊடகத் துறைசார் பங்காளர்)
- அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான உபாய ரீதியான கூட்டமைப்பு, SARD (நடைமுறைப்படுத்தும் பங்காளர்)
- சர்வதேச ஊடக ஆதரவு, IMS (நிதியிடல் மற்றும் கலந்தாலோசனைப் பங்காளர்)

இலங்கையில் ஜனநாயகம், நல்லாட்சி, நீடித்த அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற ஊடகக் கட்டமைப்பு மறுசீரமைப்புகளை முனனெடுக்கவும், அனுசரணைச் செயற்பாடுகள் நீடித்திருக்கவும் சகல பங்கேற்பாளர்களதும் பங்களிப்புகளை அதியுச்ச அளவில் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் இந்த முயற்சியின் ஒட்டுமொத்த இலக்காகும்.[3]

பல் பங்கேற்பாளர்கள் கலந்தாராய்வு மற்றும் பங்களிப்பு, கொள்கை வகுப்பாளர்கள், ஊடக உரிமையாளர்கள், ஊடக செயற்படுத்துநர்கள், ஊடக ஆய்வாளர்கள், ஊடக பரிந்துரைக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஈடுபாடு ஆகியன இந்த முழுமையான செயன்முறையில் கவனத்திற்கொள்ளப்பட்டன.

அறிவார்ந்த மற்றும் தொழில்வாண்மை மிக்க வழிகாட்டுதல்களை வழங்குமுகமாக நான்கு பணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

3 http://www.sardglobal.org/NSSMR

BOX 01

## பரந்த தோற்றத்திற்கான ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் (MDI)

சிறந்த நல்லாட்சி, ஜனநாயக ரீதியான அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் அவற்றிலிருந்தும் ஊடகங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள் மற்றும் ஊடகங்களின் பங்களிப்புகள் தொடர்பான வரைவுச்சட்டகங்களை ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் வரையறை செய்கின்றன. ஊடகச் சூழல் தொடர்பான சகல அம்சங்களையும் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் நோக்குவதுடன், அவை சுமார் 5 வகைகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன.

- கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், ஊடகங்களின் பல்வகைமை ஆகியன தொடர்பில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒழுங்குவிதிகள் கொண்ட அமைப்பு

- பொருளாதார தளம் மற்றும் உரிமை தொடர்பான வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய பன்மைத்துவம் மற்றும் பல்வகைமையுடைய ஊடகங்கள்

- ஜனநாயக ரீதியான கருத்தாடல்களுக்கான களமாக ஊடகங்கள் திகழ்தல்

- கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், பல்வகைமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தொழில்வாண்மையைக் கட்டியெழுப்பும் மற்றும் உதவியளிக்கும் நிறுவகங்கள்.

- சுயாதீனமும் பன்மைத்துவமும் மிக்க ஊடகங்களுக்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள்.

இவையனைத்தையும் கருத்திற்கொள்ளுமிடத்தில் - கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், ஊடகப் பல்வகைமை ஆகியவற்றை உறுதிப்படுத்தக்கூடிய குறிப்பிட்ட நாடொன்றில் கட்டமைக்கக்கூடிய ஊடகச் சூழல் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் தோற்றத்தை இது வழங்குகின்றது.

ஒவ்வொரு ஊடக அபிவிருத்திக் குறிகாட்டியும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை பரந்த பல குறிகாட்டிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. பங்கேற்பாளர்கள் ஊடகங்களின் நிலைகளை மதிப்பீடு செய்வதற்கும் ஊடக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கங்களை அளவிடுவதற்குமானதொரு பகுப்பாய்வுக் கருவியாக இக்குறிகாட்டிகள் காணப்படுகின்றன. இவை இனங்காண்பதற்கான கருவிகளேயன்றி கட்டளைகள் அல்ல. ஊடக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவும் நோக்கில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை எவ்வித நிபந்தனைகளையும் பிரயோகிக்கவில்லை.

இப்பணிக் குழுவிற்கான ஆலோசகர்:

விஜயானந்த ஜயவீர, யுனெஸ்கோவின் தொடர்பாடல் அபிவிருத்திக்கான முன்னாள் பணிப்பாளர், தொடர்பாடலை அபிவிருத்தி செய்வதற்கான யுனெஸ்கோவின் சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்.

பணிக்குழு 1
கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தல்

தலைவர்: தம்மா திசாநாயக்க,
சிரேஷ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைத்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்.

இணைத்தலைவர்:
கலாநிதி சுகத் செனரத், சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீபாளி வளாகம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

உறுப்பினர்கள்:
என்.எம். அமீன், தலைவர், இலங்கை முஸ்லிம் ஊடக ஒன்றியம்
பிரையன் ஆர் விஜே பண்டார, ஊடகவியலாளர் மற்றும் அதிதி விரிவுரையாளர்,
ஸ்ரீபாளி வளாகம், கொழும்பு பல்கலைக்கழகம்.
சீத்தா ரஞ்சனி, அமைப்பாளர், சுதந்திர ஊடக இயக்கம்

பணிக்குழு 2

ஊடகப் பன்மைத்துவம் மற்றும் ஒழுங்குவிதிகள்: அரச, தனியார் மற்றும் சமூக ஊடகங்களை உள்ளடக்கிய பல்வகைமை அமைப்பு

தலைவர்: கலாநிதி பிரதீப் என்' வீரசிங்க,
தலைவர்,
வெகுசன ஊடகத் துறை
ஸ்ரீ பாளி வளாகம், கொழும்பு
பல்கலைக்கழகம்.

இணைத்தலைவர் :
அசோகா டயஸ், ஊடகவியலாளர்,
இலங்கைப் பிரதிநிதி,
ஆசிய ஊடகத் தகவல் மற்றும்
தொடர்பாடல் நிலையம் (AMIC)

உறுப்பினர்கள்:
சுகுமார் ரொக்வூட், நிறைவேற்றுப் பணிப்பாளர்,
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
ஜகத் லியன்ன ஆராச்சி,
சட்ட ஆலோசகர், ட்ரான்ஸ்பேரன்சி இன்ரநெஷனல் ஸ்ரீலங்கா
டீ.எம். திசநாயக்க, நிறைவேற்றுப் பணிப்பாளர், சியத்த மீடியா வலையமைப்பு

பணிக் குழு 3

ஊடகத்தில் நேர்மை, பக்கச்சார்பின்மை, பொதுமக்கள் நம்பிக்கை ஆகியன தொடர்பான தேவைப்பாடுகள்

தலைவர் : நாலக்க குணவர்தன,
பத்தி எழுத்தாளர், ஊடக ஆலோசகர்

இணைத்தலைவர்:
சுமித் சமிந்த,
சிரேஷ்ட பகுப்பாய்வாளர்,
அரசியல் விஞ்ஞானத் தலைவர்,
'வேரைற் ரிசேர்ச்'

உறுப்பினர்கள் :
கலாநிதி ரங்க கலன்சூரிய,
ஆசியாவுக்கான பிராந்திய ஆலோசகர் - சர்வதேச ஊடக ஆதரவு
குமார் லோபஸ், நிறைவேற்றுப் பணிப்பாளர்,
இலங்கை பத்திரிகை நிறுவகம் - SLPI
சேனானி ஹரிஸ்சந்திர,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சிங்களம் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பணிக்குழு 4
தொழில்வாண்மை ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஊடகக் கல்வி

தலைவர் : பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, தலைவர், வெகுசனத் தொடர்பாடல் துறை, களனிப் பல்கலைக்கழகம்

இணைத்தலைவர்:
விஜயானந்த ரூபசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர், வெகுசனத் தொடர்பாடல் துறை, களனிப் பல்கலைக்கழகம்

உறுப்பினர்கள்:
திலின சமரசூரிய, பணிப்பாளர், பயிற்சி மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC)
ரீ.எம்.ஜி. சந்திரசேகர, பணிப்பாளர், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC)
சீ. தொடவத்தை, ஆலோசகர் - பயிற்சி, அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடெட் (லேக் ஹவுஸ்)

2015 மார்ச் முதல் 2016 மார்ச் வரை பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2015 மார்ச்: ஊடக மறுசீரமைப்புகளுக்கான தேசிய செயலகம் ஸ்தாபிக்கப்பட்டது, கூட்டம் நடத்துவதற்கான வசதிகளை SLPI ஐ வழங்கியது.

மார்ச்: அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றின் மூலமும் விளம்பரங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் மூலமாகவும் ஊடக மறுசீரமைப்புத் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது.

மார்ச் 20: ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் முறைமை மற்றும் செயன்முறை தொடர்பிலான முதற் செயலமர்வு இலங்கை பத்திரிகை நிறுவகத்தில் - SLPI இடம்பெற்றது. இலங்கையிலிருந்து 40 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களும் பங்களாதேஷ், பூட்டான், பாகிஸ்தான் ஆகிய தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த ஊடக ஆளுமைகள் மூவரும் பங்குபற்றினர்.

மார்ச் - மே: சிந்தனைக்கிளர்வுக் கருத்தமர்வுகளின் நிமித்தம் பணிக்குழுக்கள்

பலமுறை இலங்கை பத்திரிகை நிறுவகத்தில் - SLPI கூடின.

மார்ச் - மே: ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்காக. நாலக்க குணவர்த்தன அவர்களினால் இலங்கை ஊடகங்கள் மீதான ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் அடிப்படையிலான துரித மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

மே 12-13: ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான தேசிய மாநாடு 200 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. முதலாவது தினத்தில் - ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் அடிப்படையிலான துரித மதிப்பீட்டுச் சமர்ப்பணம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சகபாடிக் கலந்துரையாடல்கள் மற்றும் பின்னூட்டல்கள் இடம்பெற்றன. இரண்டாவது தினம் - பிரதம அமைச்சர், ஊடக அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஊடக மறுசீரமைப்புத் தொடர்பில் தமது அர்ப்பணிப்பைப் பகிரங்கமாகத் தெரிவித்தனர்.

ஏப்ரல், மே, ஜூன்: கொழும்பு பல்கலைக்கழக ஆய்வுப் பிரிவினால் முக்கிய நபர்களுடன் 40 இற்கும் மேற்பட்ட நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன (பிற்சேர்க்கை 1 இல் பட்டியலிடப்பட்டுள்ளது). மற்றும் மாறுபட்ட பங்கேற்பாளர்களுடன் 5 குவிமையக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன : நான்கு கூட்டங்கள் கொழும்பிலும் சுற்றயலிலும், ஒரு கூட்டம் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றது. இவை தொடர்பான விபரங்கள் பிற்சேர்க்கை 3 இல் தரப்பட்டுள்ளன.

மே - ஜூன்: ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான தேசிய மாநாட்டில் கிடைக்கப்பெற்ற பின்னூட்டல்களை அடிப்படையாகக் கொண்டு தமது விதப்புரைகளை பணிக்குழுக்கள் உறுதிப்படுத்தின.

மே - ஜூலை: ஊடக நிலை மற்றும் ஊடகத்துறை மறுசீரமைப்புகள் தொடர்பான முன்னுரிமைகள் ஆகியன பற்றிய இரண்டு ஆய்வுகளை கொழும்பு பல்கலைக்கழக ஆய்வுக் குழு மேற்கொண்டது. ஒன்று - ஊடகவியலாளர்களுடனும் ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களுடனும் மற்றையது - பல்வேறுபட்ட பொதுமக்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்டது.

ஜூலை 21: 2015 பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் கவனத்தை ஈர்க்குமுகமாக கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம் தொடர்பிலான கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது.[4] காத்திரமான அரசியல் அர்ப்பணிப்பு அவசியப்படுகின்ற ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான 10 செயற்பாடுகள் முன்னுரிமையின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டன.[5] முழுமையான கொள்கைப் பிரகடனம் பிற்சேர்க்கை 4 இல் காணப்படுகின்றது.

நவம்பர்: அரசாங்கம், ஊடகத்துறை, கல்வியாளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் தொடர்பான வரைபு அறிக்கையானது 200 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களிடம் வழங்கப்பட்டது.

டிசம்பர்: சகபாடி மீளாய்வுகள் பணிக்குழு உறுப்பினர்கள் மத்தியில் மூன்று அமர்வுகளாக மேற்கொள்ளப்பட்டன.

2016 ஜனவரி: இரண்டாவது மீளாய்வுசெய்யப்பட்ட வரைபு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

பெப்ரவரி – மார்ச்: தேசிய மற்றும் சர்வதேச சகபாடி மீளாய்வாளர்கள் மத்தியில் இரண்டாவது வரைபு வழங்கப்பட்டது.

500 இற்கும் மேற்பட்ட நபர்களின் பங்குபற்றலுடன் - கூட்டங்கள், நேர்காணல்கள், குவிமையக் கலந்துரையாடல்கள் மற்றும் சகபாடி மீளாய்வுச் செயன்முறைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, பல்வேறு விதமான கருத்துக்களும் பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன. இவற்றில் ஒருசில முரண்பாடு உடையனவாகவும் சில யதார்த்தத்திற்குப் பொருத்தமற்றதாகவும் காணப்பட்டன. இயலுமானவரை பன்மைத்துவம் மிக்க சிறந்த கருத்துக்களை உள்வாங்கியதுடன், இவை தொடர்பில் ஆசிரியர்களின் தற்துணிபின் அடிப்படையில் அறிக்கையின் சமநிலை, ஒத்திசைவு, பிரதிநிதித்துவப்படுத்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

4 http://www.ft.lk/article/448711/Journalists-call-for-political-commitment-for-media-reform-and-freedom-of-expression

5 The statement was jointly issued by: Sri Lanka Press Institute (SLPI), Free Media Movement (FMM), Sri Lanka Working Journalists' Association (SLWJA), Sri Lanka Press Association, Jaffna Press Club, Sri Lanka Muslim Journalists' Association, National Alliance of Provincial Journalists, National Alliance of Community Broadcasters, and the Young Journalists Association.







s ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் அரசியல் கட்சிகளின் பொது உறுதிமொழி - மே 2015

t ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டு ஆரம்பவிழா- மே 2015






s ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் பார்வையாளர்களும் உறுப்பினர்களும் ஊடக மறுசீரமைப்புகளுக்கான உறுதிமொழியில் கைச்சாத்திடல் - மே 2015

t ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க் உறுதிமொழியில் கையொப்பமிடல் - மே 2015






s ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் பார்வையாளர்களில் ஒரு பிரிவினர் - மே 2015

t ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் அப்போதைய எதிர்க்கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உறுதிமொழியில் கையொப்பமிடல் - மே 2015







s ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் கலாநிதி. அர்ஜுன பராக்கிரம சிறப்புரையாற்றுகிறார் - மே 2015

t ஊடகச் சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் கலாநிதி. ரங்க கலன்சூரிய பேசுகிறார் - மே 2015

“விமர்சனப்பார்வை கொண்ட, சுயாதீன, ஆய்ந்தறியும் ஊடகமே எந்தவொரு ஜனநாயகத்தின் உயிர் மூச்சாகும். ஊடகமானது அரச தலையீடு இன்றி சுயாதீனமாக இருத்தல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளின் அதிகார வெளிப்பாட்டிற்கு எதிராக எழுந்துநிற்கின்ற பொருளாதாரப் பலம் ஊடகத்திடம் இருத்தல் வேண்டும். தனிப்பட்ட நலன்களுக்கு எதிராக துணிச்சலுடன் எவ்வித அச்சமோ, பக்கச்சார்போ அற்ற நிலையில் செயற்படக்கூடிய போதியளவு சுயாதீனத் தன்மை இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு ஊடகத்திற்கு இருத்தல் வேண்டும். அப்போது பிரஜைகள் என்ற முறையில் எமது உரிமைகளை ஊடகம் பாதுகாக்க முடியும்”

- நெல்சன் மண்டேலா

# ஊடக அபிவிருத்திக் குறியீடுகள்

## ஊடக அபிவிருத்தியை மதிப்பிடும் ஒரு வரைபுச்சட்டகம்

இந்த ஆவணம் பின்வருமாறு MDI இன் பிரிவுகளுக்கும் குறிகாட்டிகளுக்கும் ஏற்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

### வகை 1 கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், ஊடகங்களின் பல்வகைமை ஆகியன தொடர்பில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒழுங்குவிதிகள் கொண்ட அமைப்பு

- அ சட்ட மற்றும் கொள்கை ரீதியான வரைவுச்சட்டகம்
- ஆ ஒலி - ஒளிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறை
- இ ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான கட்டுப்பாடுகள்
- ஈ தணிக்கை

### வகை 2 ஊடகங்களின் பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை, பொருளாதாரத் தளம் மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை

- அ ஊடகச் செறிவு
- ஆ ஒருங்கே பல்வகைத்தன்மை கொண்ட பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்கள்
- இ அனுமதிப் பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடு
- ஈ வரிவிதிப்பும் வர்த்தக விதிமுறைகளும்
- உ விளம்பரம்

### வகை 3 ஜனநாயக கருத்தாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல்

- அ ஊடகம் சமூகங்களின் பல்வகைமையைப் பிரதிபலித்தல்.
- ஆ பொதுச்சேவை ஒலி - ஒளிபரப்பு மாதிரி
- இ ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை
- ஈ நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மைக்கான தேவைகள்
- உ ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் தற்துணிவின் அளவுகள்
- ஊ ஊடகவியலாளரின் பாதுகாப்பு

### வகை 4 கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், பல்வகைமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தொழில்வாண்மையைக் கட்டியெழுப்பும் மற்றும் உதவியளிக்கும் நிறுவகங்கள்

- அ கிடைக்கக்கூடிய தொழில்சார் ஊடகப் பயிற்சி
- ஆ ஊடகச் செயற்பாடுகள் குறித்த கல்விசார் கற்கைநெறிகள்
- இ சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம்

### வகை 5 சுயாதீனமும் பன்மைத்துவமும் மிக்க ஊடகங்களுக்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள்

- அ ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும்
- ஆ அச்சு ஊடகம், ஒலி - ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல்

# வகை 1

## கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், ஊடகங்களின் பல்வகைமை ஆகியன தொடர்பில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒழுங்குவிதிகள் கொண்ட அமைப்பு

முக்கிய குறிகாட்டிகள்

**அ** சட்ட மற்றும் கொள்கைரீதியான வரைவுச்சட்டகம்

1.1 சட்டத்திலும் நடைமுறையிலும் கருத்துச் சுதந்திரத்துக்கான உத்தரவாதம்
1.2 சட்டத்திலும் நடைமுறையிலும் தகவல் பெறும் உரிமைக்கான உத்தரவாதம்
1.3 சட்டத்திலும் நடைமுறையிலும் ஆசிரியர்பீட சுதந்திரத்துக்கான உத்தரவாதம்
1.4 சட்டத்திலும் நடைமுறையிலும் ஊடகவியலாளர்கள் தமது தகவல் மூலங்களைப் பாதுகாப்பதற்கான உரிமை
1.5 ஊடகம் தொடர்பான பொதுக்கொள்கையை வடிவமைப்பதில் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் பங்கேற்பு

**ஆ** ஒலி - ஒளிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறைமை

1.6 சட்டத்திலும் நடைமுறையிலும் ஒழுங்குபடுத்தல் முறைமையின் சுயாதீனத்தன்மைக்கான உத்தரவாதம்
1.7 ஊடக பன்மைத்துவம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுங்குபடுத்தல் முறைமை

**இ** ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான கட்டுப்பாடுகள்

1.8 ஊடகம் மீது முறையற்ற சட்டக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் பிரயோகிக்காத நிலை
1.9 தனிநபர் ஒருவரது நற்பெயரைப் பாதுகாப்பதற்கு அவசியமான குறுகிய கட்டுப்பாடுகளையே அவதூறுச்சட்டங்கள் பிரயோகிக்கின்றன
1.10 தேசிய பாதுகாப்பு, வெறுப்பூட்டும் பேச்சுகள், அந்தரங்கத் தன்மை, நீதிமன்ற அவதூறுச் சட்டங்கள், ஆபாசம் ஆகியன தொடர்பில் கருத்துச் சுதந்திரம் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தெளிவாகவாகவும் சர்வதேச சட்டங்களுக்கமைவாக ஜனநாயக சமூகமொன்றுக்கு ஏற்ற விதத்தில் நியாயப்படுத்தக் கூடியவாறும் சட்டவரையறை செய்தல்

**ஈ** தணிக்கை

1.11 சட்டத்திலும் நடைமுறையிலும் ஊடகங்கள் மீது முன்கூட்டிய தணிக்கை இல்லாதிருத்தல்.
1.12 உணர்ச்சி மற்றும் தீங்கு விளைவிக்கும் என்பதன்பேரில் இணைய உள்ளடக்கங்களை தடை அல்லது வடிகட்ட அரசு முயற்சிக்காதிருத்தல்

BOX 02

## கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம்

1948 இல் உலக அரசாங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் கருத்துச் சுதந்திரமானது ஒரு அடிப்படை உரிமையாகப் பாதுகாக்கப்பட்டது. அரசியல் கட்சிகளை உருவாக்குவதற்கான உரிமை, அரசியல் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கான உரிமை, அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பில் கேள்விகளைக் கேட்டல் போன்ற ஏனைய ஜனநாயக ரீதியான சுதந்திரத்திற்கான அடிப்படையாக இது கருதப்படுகிறது.

பொதுமக்கள் தமது கருத்து வெளியிடும் உரிமையைப் பிரயோகிப்பதற்கான தளத்தைத் தருவதால், கருத்துச் சுதந்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய தளமாக ஊடகங்கள் கருதப்படுகின்றன. ஜனநாயக விவாதங்களுக்கான தளமாக ஊடகங்கள் திகழ்வதானது பல்வேறு விதமான செயற்பாடுகளுக்கும் களம் தருவதாகக் காணப்படுகிறது. இங்கு ஊடகங்கள் எனும்போது செய்திகளையும் ஏனைய பொதுத்தகவல்களையும் அறிவிக்கின்ற சகல வழிமுறைகளையும் உள்ளடக்கியே கருத்திற்கொள்ளப்படுகிறது.

இச்சூழமைவில் ஊடகங்களைப் பின்வருமாறு நோக்க முடியும்.

- மக்கள் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற ஒரு தகவல் மற்றும் கல்வி வழிமுறை.

- கதைகள், கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பரப்பும் வழி.

- ஆள்பவர்கள் - ஆளப்படுபவர்கள் மற்றும் போட்டியில் ஈடுபடுகின்ற தனியார் நிறுவனங்கள் மத்தியிலான ‘இயற்கையில் சமச்சீரற்ற தகவலை’ சரிப்படுத்தும் ஒன்று.
- பல்வேறு விதமான சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் அறிவிக்கப்பட்ட விவாதங்களை மேற்கொள்வதற்கான அனுசரணை மற்றும் ஜனநாயக வழிமுறை மூலமாக பிணக்குகளுக்கான தீர்வினைப் பெற உற்சாகப்படுத்தல்.

- சமூகம் தன்னைப் பற்றித் தானே இதன் மூலம் கற்றுக்கொள்வதுடன் சமூகம் என்றதொரு உணர்வு கட்டியெழுப்பப்படுகின்றது. விழுமியங்கள், வழக்காறுகள் மற்றும் மரபுகள் போன்றன இதனால் வடிவமைக்கப்படுகின்றன.

- ஒரு நாட்டுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் பண்பாட்டு ரீதியான வெளிப்பாடுகள், பண்பாட்டு இணக்கம் ஆகியவற்றுக்கான கருவி.

- அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் கண்காணித்துக்கொண்டு வருகின்ற அதேவேளை, பொது வாழ்வில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல், ஊழல், துஷ்பிரயோகம், தவறான நிர்வாகமுறைகள் போன்றவற்றை வெளிப்படுத்துதல். வினைத்திறனற்ற விடயங்கள் தொடர்பிலும் அவதானமாகச் செயற்படுகின்ற அதேவேளை, தவறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாமல் அல்லது கையாளப்படாமலிருத்தலுக்காகப் பொதுமக்களது பங்குபற்றுதல்களை உறுதிப்படுத்தப்படுதல்.

- பொருளாதாரப் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கான கருவி.

- ஜனநாயகச் செயற்பாடுகளை அனுசரணைப்படுத்துகின்ற அதேவேளை, நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்துகின்ற

காரணிகளில் ஒன்றாயிருத்தல்.

- பன்மைத்துவமிக்க பெறுமானங்களை மதிக்கின்ற அதேவேளை, தனது சொந்த உரிமைகள் தொடர்பில் பரிந்துரையாளராகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் திகழ்கிறது.

ஆனாலும், முக்கியமான அல்லது ஓரங்கட்டப்பட்ட மக்கள் குரல்களை நிராகரிப்பதன் மூலம் அல்லது சக்திபடைத்த ஊடக உரிமையாளர்களது குரல்களுக்கு மாத்திரம் களம் அமைத்துக் கொடுப்பதன் மூலம் சிலவேளைகளில் சமூக சமத்துவமின்மைகளை இவை அதிகரிக்கச் செய்கின்றன மற்றும் தனிப்பட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்ட அதிகாரங்கள் மீள்வலியுறுத்தப்படவும் உதவுகின்றன. இலங்கையில் இவ்விதமாக ஊடகங்கள் சிலவேளைகளில் முரண்பாடுகளையும் சமூகங்களுக்கிடையிலான பிளவுகளையும் சமீப தசாப்தங்களில் ஏற்படுத்தியதைப் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இதனால் - கருத்துச் சுதந்திரம், நல்லாட்சி மற்றும் மனித அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டு ஒவ்வொருவரும் வினாவுகின்ற பிரதான கேள்வி என்னவெனில், இத்தகைய இலக்குகளை அடைவதற்கு ஊடக வரைவுச்சட்டகம் மற்றும் பயிற்சி என்பன எவ்வாறு உதவப்போகின்றன என்பதாகும். அடக்குமுறையான சூழல், ஊழல், யுத்தத்தின் தாக்கம் மற்றும் குறைவிருத்தி போன்றவற்றால் சூழப்பட்ட ஊடகக் கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கின்ற புதிய அல்லது மீள்திரும்பிய ஜனநாயக நாடுகளுக்கு இது முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

அ

# சட்ட மற்றும் கொள்கைரீதியான வரைவுச்சட்டகம்

## 1 01 சட்டத்திலும் நடைமுறையிலும் கருத்துச் சுதந்திரத்துக்கான உத்தரவாதம்

இலங்கையின் 1978 ஆம் வருடத்தைய அரசியலமைப்பில் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன. உறுப்புரை 14(1)(அ) இன் பிரகாரம், "நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் வெளியீட்டுச் சுதந்திரம் உட்பட பேச்சுச் சுதந்திரத்திற்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் அருகதையுடையவர்களாவர்".[6]

அதேவேளை, அரசியலமைப்பில் கருத்துச் சுதந்திரமானது பின்வருமாறு வரையறைப்படுத்தப்பட்டுமுள்ளது:

- சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இன மற்றும் மத ரீதியான நல்லிணக்கங்களை கருத்திற்கொண்டு அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமைகள், நீதிமன்ற நிந்தனை, அவதூறு அல்லது குற்றமொன்றைத் தூண்டுதல் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம் என உறுப்புரை 15(2) குறிப்பிடுகிறது.

- உறுப்புரை 15(7) இன்படி, சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டதன் பிரகாரம், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் அல்லது அடுத்தவர்களது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் மற்றும் உரிய அங்கீகாரம் வழங்கும் நோக்குடனும் அல்லது ஜனநாயக சமூகமொன்றின் பொது நலன்களைப் பேணும் நோக்குடனும் இத்தகைய சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம். உறுப்புரை 15(7), பொதுமக்கள் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக ஒழுங்குவிதிகளை உருவாக்கவும் முடியுமெனக் குறிப்பிடுகிறது.

உறுப்புரை 14(1)(அ) இன் பிரகாரம், பிரஜைகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது, எல்லா நபர்களும் எனக் குறிப்பிடப்படவில்லை. சட்ட ரீதியான பொருட்கோடல்களின் பிரகாரம் நபர் எனும் போது அது 'பிரஜைகள்' என்பதை விடப் பரந்ததாக - பிரஜைகள் சாராத, கூட்டு மற்றும் சட்ட ரீதியான நிறுவகங்களையும் உள்ளடக்கியதாக இலங்கை நீதித்துறை நியாயாதிக்கத்தின் பிரகாரம் பொருட்கோடப்பட்டுள்ளது. சர்வதேச தராதரங்களின் பிரகாரம், பிரஜைகள் மற்றும் பிரஜைகள் சாராதவர்களுக்கும் இந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது இலங்கை அரசியலமைப்பிலும் பிரதிபலிக்கப்பட வேண்டும் . வேறு விதமாகக்கூறின், கருத்துரிமையை பிரஜைகளுக்கு மாத்திரம் என வரையறைக்குட்படுத்துவது, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் **(ICCPR)** கீழ் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை எய்தப் போதுமானதல்ல.

உறுப்புரை 14 இன் பிரகாரம் காணப்படுகின்ற இவ்வித வரையறைகளானது சர்வதேச தராதரங்களை மதிக்கவில்லையென்ற விமர்சனத்தை முன்வைக்கவும இடமளிக்கிறது. முதலாவதாக, பின்வரும் விடயங்களை

6 http://www.parliament.lk/constitution/main

அடிப்படையாகக் கொண்டே உறுப்புரை 15(2) மற்றும் (7) ஆகிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடியும். சர்வதேச சட்டங்களின் பிரகாரம் இவ்வித வரையறைகள் ‘அவசியமானால்’ மாத்திரமே தேவைப்பாடுகளாகக் காணப்படுகின்றன. சில வழக்குகளின் போது இவ்வித விடயங்கள் தொடர்பிலான பொருட்கோடல்கள் இலங்கை நீதிமன்றங்களில சில வழக்குகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் கூட தொடர்ந்தும் அது பலவீனமானதான ஒன்றாகவே காணப்படுகிறது. இரண்டாவதாக, உறுப்புரை 15(2) மற்றும் (7) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அல்லது அக்கறைகள் சர்வதேச தரங்களுக்கு உட்பட்ட விடயங்களை முழுமையாக உறுதிப்படுத்தவில்லை. இது சட்டமுறைகள் பற்றியதாக அல்லாது நலன்களைப் பாதுகாப்பதனையே அனுமதிக்கின்றது. (உதாரணமாக - அவதூறுக்குப் பதிலாக நற்பெயர். அதேபோல், நீதிமன்ற நிந்தனைக்குப் பதிலாக நீதித்துறையின் அதிகாரம்) இதன்படி, ‘ஜனநாயகச் சமூகமொன்றின் பொதுநலன்களைப் பேணுவதற்கு அவசியமான தேவைப்பாடுகள்’ என உறுப்புரை 15(7) காணப்படுவதானது மிகப் பொதுவிலேயே கூறப்படுகின்றது. இது, உண்மையில் யதார்த்தத்தில் எவற்றையும் உள்ளடக்கியது என்றே பொருட்கோடற்பட்டாக வேண்டும் 2015 ஏப்ரல் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம், தகவல் அறிவதற்கான உரிமை ஓர் அடிப்படை உரிமையாக உள்ளடக்கப்பட்டுள்ளது. பிரிவு 1.2 இல் ஆராயப்படவிருப்பதன்படி, தகவல் அறியும் உரிமையை இது அரசியலமைப்பு தரத்திற்கு எடுத்துச்சென்றுள்ளது.[7]

கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான இலங்கையின் சர்வதேச கடப்பாடு, அடிப்படையில் **ICCPR** (சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம்) இனை 1980 இல் இலங்கை ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் (1997 தெரிவுசார் ஒழுங்கு மரபிலும்) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில், 2007 இன் 56 ஆம் இலக்க **ICCPR** சட்டத்தினை இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. இதன் பிரகாரம், இலங்கைச் சட்டத்திலும் **ICCPR** இன் சில ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டில், இலங்கை உயர்நீதிமன்றமானது தனது கருத்துத் தெரிவிப்பின்போது, ICCPR இன் உரிமைகள் இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படக் கூடியன. அதாவது, அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் மற்றும ICCPR சட்டம் ஆகியவற்றின் கீழ் **ICCPR** உரிமைகள் இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடியனவே என உயர்நீதிமன்றம் தெரிவித்தது.[8]

இலங்கை அரசியலமைப்பு மற்றும் 2007 ஆம் ஆண்டுக்கான ICCPR சட்டம் ஆகியன

7 https://www.parliament.lk/files/pdf/constitution/19th-amendment-act.pdf

8 The ICCPR Act of 2007 is seen by legal analysts as a half-hearted attempt by the then government to demonstrate its compliance with the ICCPR in relation to Sri Lanka's bid to retain the GSP Plus facility, a preferential tariff system in the European Union that was conditional to human rights compliance. In a critique published in January 2015, legal scholars Rohan Edrisinha and Asanga Welikala have explained why it is a poor piece of legislation, which does not significantly improve compliance. http://www.cpalanka.org/wp-content/uploads/2015/01/ICCPR-Chapter-Final.pdf

தொடர்பில் நோக்கும்போது ICCPR இன் 19 ஆம் உறுப்புரை பரந்ததாகவே காணப்படுகிறது.[9] அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளை விட குறைவான வரையறைகளையே ICCPR அனுமதிக்கிறது. இலங்கை அரசியலமைப்பை விட இதன் வரையறைகள் குறுகியதாகக் காணப்படுகின்றன. இலங்கை அரசியலமைப்பில் காணப்படாதவிதமாக, வரையறைகளை விதிக்கின்றபோது உயர்ந்த தரமிக்க நியாயப்பாடுகளை அதற்கு ICCPR தந்திருக்கிறது.[10]

ஏனைய சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், இன ரீதியாக பாரபட்சம் காட்டுகின்ற சகல வடிவங்களையும் இல்லாதொழிக்கின்ற, கருத்துச் சுதந்திரத்துடன் சம்பந்தமுள்ளவையுமான - சர்வதேச சமவாயம் (1982 இல்), சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் (1991) ஆகியவற்றையும் இலங்கை ஏற்றுக்கொண்டது.

‘நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாத்து அதனை மேம்படுத்தும் நோக்குடன்’ 1996 இன் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) ஸ்தாபிக்கப்பட்டது.[11] இதன் சுயாதீனத் தன்மை பற்றி மனித உரிமைக் காப்பாளர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுவினர் ஆகியன பல வருடங்களாக கேள்வி எழுப்பி வருகின்றனர். உதாரணமாக, 2013 ஆம் ஆண்டில் விரிவான விமர்சனமொன்றில், சட்டம் மற்றும் சமூகம் பற்றிய பரிந்துரை அமைப்பொன்று HRCSL ‘அரசாங்கத்திற்கு விசுவாசமான அமைப்பும் என்றும் அரசின் தாளத்திற்கு ஆடும் பொம்மை’ எனவும் தெரிவித்தது.[12]

1978 முதல் கருத்துச் சுதந்திரத்திற்கான அரசியலமைப்பு உறுதிப்பாடுகள் பற்றிய பல கேள்விகள் எழுந்துள்ளன. இவற்றுள் சில முக்கிய சட்ட வழக்குகளும் உள்ளடங்குகின்றன. உறுப்புரை 14(1)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள, ‘கருத்துச் சுதந்திரம்’ என்பதற்கான பொருட்கோடல்களை உயர் நீதிமன்றனமானது சுயாதீன முறையில் மேற்கொண்டிருப்பதாக, சட்ட ஆய்வாளர் அசங்க வெலிகல கூறுகிறார்.

மேலும், வாக்களிக்கும் உரிமை தொடர்பிலும் (உதாரணமாக, முதல் அமைச்சரின் வழக்கு) பேச்சு சாராத அரசியல் எதிர்ப்பு வடிவங்கள் எனும்போதும் (ஜன கோஷா வழக்கு) மற்றும் மாற்றுக்கருத்திற்கான சுதந்திரம் (யுக்திய வழக்கு) எனும்போதும் அவை கருத்துச் சுதந்திரத்தின் எல்லைகளுக்கு உட்பட்டதாகவே காணப்படுகின்றன. மேலும் கருத்துச் சுதந்திரம் எனும்போது சில தகவல்களைப் பெறவும் அவற்றைப் பரப்புவதற்கானதுமான உரிமைகளையும் அது உள்ளடக்கியுள்ளது என நீதிமன்றம் தெரிவித்தது (உதாரணம்: விமல் பெர்ணான்டோ எதிர் இலங்கை ஒலிபரப்புக்

9 International Covenant on Civil and Political Rights http://www.ohchr.org/en/professionalinterest/pages/ccpr.aspx

10 The Supreme Court has in some cases tried to read in the concept of necessity to the Sri Lankan framework for the restriction of fundamental rights, e.g. Sunila Abeysekera v. Ariya Rubesinghe and Others; (2001; 1 SLR 315), but this is insufficient and has not always been consistently followed by the Court itself in subsequent cases.

11 http://hrcsl.lk/english/about-us/establishment/

12 The National Human Rights Commission of Sri Lanka: Marionette of the State. Paper by Miyuru Gunasinghe, Law & Society Trust (LST), Sri Lanka. FORUM ASIA, Bangkok 2013 http://www.lawandsocietytrust.org/PDF/resource/marionette_state.pdf

கூட்டுத்தாபன வழக்கு).[13]

நீதிமன்ற வழக்குகள் மற்றும் நீதித்துறைசார் பொருட்கோடல்கள் ஆகியவற்றில் தங்கியிருப்பதில் போதாமைகள் காணப்படுவதாக தெரிவித்த அசங்க வெலிகல, "உயர்நீதிமன்றமானது இவை தொடர்பில் ஒத்த தன்மையுடையதாகச் செயற்படவில்லை" என்கிறார். பல சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத் தீர்ப்புகளானது சர்வதேச தராதரங்களுக்கு அப்பால் அல்லது அவற்றுக்குப் புறம்பாகச் செயற்பட்டுள்ளதாகவும், சமீபத்தில்கூட, வயது வந்தவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றைத் தடைசெய்தமையை எதிர்த்த வழக்கில் பண்பாடு மற்றும் ஒழுக்கம் தொடர்பில் நீதிமன்றமானது தனது சுய பார்வைகளைத் தெரிவித்தது (அக்ஷரய வழக்கு).

ஆய்வு மற்றும் பரிந்துரை அமைப்பான, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA), 2011 இல் இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக மேற்கொண்ட மீளாய்வொன்றின்போது, கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான பல்வேறு வழக்குகளின்போதும், அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரங்களை கட்டுப்படுத்தும் வகையில் பரந்த மற்றும் கருத்துத் தெளிவற்ற தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பிலான கருத்துக்களை உயர் நீதிமன்றம் வெளிப்படுத்தியது எனக் குறிப்பிட்டது.

இது தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிக்கும்போது – "அரசியலமைப்பு உரிமைகள் தொடர்பிலான பொருட்கோடல்களின்போது இலங்கை உயர்நீதிமன்றமானது தன்பாட்டிலான பொருட்கோடல்களையே மேற்கொண்ட பலவீனமான வரலாற்றைக் கொண்டிருக்கிறது. அரசியலமைப்புத் தொடர்பான வழக்குகளின்போது நீதிமன்றமானது அரசாங்கத்திற்கு ஆதரவான போக்கையே வெளிப்படுத்தியது. குறிப்பாக, அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரயோகிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பற்றிய வழக்குகளில் இவற்றை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது" என்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேலும் தெரிவிக்கும்போது – "ICCPR ஐப் போலல்லாது, இலங்கை அரசியலமைப்பின் கீழ் அரசியலமைப்பு உரிமைகளின் கீழான வரையறைகள் 'நியாயமானவை அல்லது அவசியமானவை' என்ற தேவைப்பாடுகள் குறித்து வெளிப்படுத்தப்படவில்லை. இவ்விதமான தேவைப்பாடுகள் குறைவாக காணப்படுவதன் காரணமாக, அரசாங்கம் வரையறைகளை விதிக்கும்போது, அவை தொடர்பில் நீதிமன்றத்திற்கு கருத்துத் தெரிவிப்பதற்கான வாய்ப்புகளும் குறைவாகவே உள்ளன" என்கிறது.[14]

இலங்கையில் அண்மைக்கால கருத்துச் சுதந்திரம் பற்றிய அல்லது அதன் பிரயோகம்

13 Securing the Freedom of Expression in the New Sri Lanka: Essential Institutional Reforms, by Asanga Welikala. Groundviews.org 17 January 2015. http://groundviews.org/2015/01/17/securing-the-freedom-of-expression-in-the-new-sri-lanka-essential-institutional-reforms/

14 Freedom of Expression on the Internet in Sri Lanka, Centre for Policy Alternatives, Colombo. November 2011. http://cpalanka.org/wp-content/uploads/2011/11/FOE-REPORT-NOV-2011-FINAL-CPA.pdf

பற்றிய விடயங்களை ஆராய்கையில், அவை இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட்ட - சுமார் மூன்று தசாப்த காலமாக நாட்டில் நிலவிய வட - கிழக்கு பிரிவினை யுத்தம் மற்றும் இரண்டு மார்க்சிய இளைஞர் கிளர்ச்சிகள் (1971, 1987-89) ஆகியவற்றுடன் தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. இந்த முரண்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் கருத்துச் சுதந்திரத்தை வித்தியாசமான கோணங்களிலேயே அணுகினர்.

இரண்டு சட்ட முறைமைகளின் கீழ் கருத்துச் சுதந்திரமானது குறிப்பாகப் பாதிப்புறும் நிலையில் காணப்படுகின்றது. அவையாவன:

- 1971 இலிருந்து, சிற்சில காலப்பகுதிகள் தவிரித்து, சுமார் 40 வருடங்களாக அமுலில் இருந்த அவசரகாலச் சட்ட விதிகள் (1947ம் ஆண்டின் பொதுமக்கள் சட்டவிதி இல. 25 கீழ் கொண்டுவரப்பட்டது).[15] 2011இல், மாதாந்தம் நீடித்துவரப்பட்ட சட்ட விதிகள் பாராளுமன்றத்தினால் 31 ஓகஸ்ட் 2011 அன்று காலாவதியாக்கப்பட்டது.

- 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக இணைப்பு) – பின்னாளில் 1982 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டது – தொடர்ந்தும் சட்ட நூல்களில் இடம்பெறுவதோடு, தற்போது நாட்டின் சாதாரண சட்டமாகியும் இருப்பது.[16] செய்திப்பத்திரிகைகள் மீது எவ்வேளையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முன்னேற்பாடுகள் இருப்பதோடு, குறிக்கப்பட்ட செய்திகளின் உள்ளடக்கங்களை அனுமதிப்பதற்கு தன்னாட்சி அதிகாரியையும் நியமிக்கமுடியும். (இது முன்கூட்டிய தணிக்கை என அறியப்படும்.)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் வார்த்தைப் பிரயோகங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன :

(அ)தன்னாட்சி அதிகாரி ஒருவரின் எழுத்து மூலமான அனுமதியற்ற நிலையில் எந்தவொரு நபரும் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான எவ்விதமான செய்திகளையோ அல்லது செய்திப் பத்திரிகைகளையோ வெளியிட முடியாது.

**(i)** இச்சட்டத்தின் கீழ் குற்றமாகக் குறிப்பிடப்பட்ட ஏதாவது குற்றங்கள் அல்லது ஏதாவது அதிகாரி தொடர்பிலான விசாரணைகள், அல்லது
**(ii)** மாறுபட்ட சமுதாயங்கள் அல்லது இன அல்லது சமயக் குழுக்களுக்கிடையில் வன்முறைகளைத் தூண்டக்கூடிய அல்லது சமய, இன, சமுதாய ரீதியான கலவரங்களை

15 Public Security Ordinance No 25 of 1947, https://goo.gl/HcAZOi

16 Prevention of Terrorism (Temporary Provisions) Act No. 48 of 1979 http://www.satp.org/satporgtp/countries/shrilanka/document/actsandordinance/prevention_of_terrorism.htm

அல்லது தீய உணர்வுகளை அல்லது குரோதங்களை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள்.

(ஆ)தன்னாட்சி அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதியின்றி எந்தவொரு நபரும் எந்தவிதமான செய்தியையோ அல்லது செய்திப் பத்திரிகையையோ வெளியிடக் கூடாது. பந்தி (அ) வின் பிரகாரம் இலங்கைக்குள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ இவ்விதமான எந்த விடயங்களையும் அச்சிட்டோ அல்லது அவை தொடர்பிலான வெளியீடுகளையோ மேற்கொள்ளல் கூடாது.

அவசர காலநிலைச் சட்டத்தைப் பிரயோகிப்பதானது 'சாதாரண சூழ்நிலை', 'விதிவிலக்கான சூழ்நிலை' ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசத்தில் தங்கியுள்ளது. அசாதாரண சூழ்நிலை நிலவுகின்றது என்பதை நிறைவேற்று அதிகாரம் உடையவர் பிரகடனப்படுத்தல் வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு விதிவிலக்கான அதிகாரங்களையும் பிரயோகிக்க முடியும். ஆனாலும், இதற்கு கால வரையறை உள்ளது என்பதோடு, குறித்த கால இடைவெளிகளில் அதனை நீட்டிக்கவும் வேண்டும். அவசரகால நிலைமையின்போது விதிவிலக்கான அதிகாரங்களைப் பிரகடனப்படுத்தல், தொடர்தல் மற்றும் பிரயோகித்தல் ஆகியன கடுமையான சட்டவாக்க மற்றும் நீதித்துறை சார் கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய பல்வேறு அம்சங்களை அரசியலமைப்பில் காண முடியுமாக இருந்தாலும், பல அரசாங்கங்கள் இவற்றைச் சாதாரணமாக அலட்சியப்படுத்துவதால், நடைமுறையில் இவை பின்பற்றப்படாமலேயே போகின்றன. சாதாரண சட்டவாக்க நடைமுறைகளுக்கு அப்பால், அவற்றை விடுத்து, துரிதமாக செயற்படும் நோக்குடனும் பல சந்தர்ப்பங்களில் அவசரகாலச் சட்ட விதிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மறுபுறம், பயங்கரவாதத்திற்கு எதிரான அதிகாரங்கள் இயல்பாகவே குறிப்பிட்ட காலவரையறைக்குட்பட்டது என்பது கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. இவ்விதமாக அசாதாரணச் சட்டங்கள் கையிலெடுக்கப்படுவதால், அடிப்படை உரிமைகள் மீது அவை தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியனவாகக் காணப்படுகின்றன. நிறைவேற்று அதிகாரம் மீதான மிக எச்சரிக்கையுடனே இத்தகைய சட்டங்களைப் பயன்படுத்தல் வேண்டும். : அதேவேளை, பொருத்தமான கண்காணிப்பாலும் சமநிலைத்தன்மையாலும் அப்பயன்பாடு கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.[17]

அவசரகாலச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்று அதிகாரமிக்கவாகள் தமது அதிகாரங்களைத் தவறாகப் பிரயோகிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல : மாற்றுக் கருத்துடையவர்களின் குரல்களை

17 For details, see: A State of Permanent Crisis: Constitutional Government, Fundamental Rights and States of Emergency in Sri Lanka, by Asanga Welikala, 2008. http://cpalanka.org/wp-content/uploads/2009/5/States%20of%20Emergency%20%2830%2010%202008%29.pdf

அடக்குமுகமாக தொடர்ச்சியாக அரசாங்கங்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளன. இலங்கையில் கருத்துச் சுதந்திரம் பற்றிய 1994 ஆம் ஆண்டின் அறிக்கையொன்றின் உறுப்புரை 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, "பொலிஸ் மாஅதிபரின் அனுமதி பெறாமல் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவது மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுவது ஆகியவற்றைத் தடுக்கும் முகமாகக்கூட பல சந்தர்ப்பங்களில் அவசரகாலச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன : மேலும் பொதுக்கூட்டங்களை நடத்த தடைவிதித்தல், ஊர்வலங்களைத் தடைசெய்தல், பத்திரிகைகளைத் தடைசெய்தல், அச்சகங்களை மூடிவிடல், வெளியீடுகள் மற்றும் ஒலி-ஒளிபரப்புகளைத் தணிக்கை செய்தல், தகவல் மூலங்களைப் பாதுகாக்கும் முக்கிய ஊடகக் கோட்பாடுகளை மீறுதல், பொதுமக்களது போராட்டங்களை அரசாங்கத்திற்கு எதிரான 'சதித்திட்டம்' எனக் கூறுதல் மற்றும் அரசியற்கட்சிகளைத் தடைசெய்தல் போன்றவற்றுக்காகவும் அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது".[18]

ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகத்தைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்து, அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள், குற்றம் சுமத்தப்பட்டமை, சிறையிலடைத்த செயற்பாடுகள் ஆகியன கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டம் எவ்வாறு பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாக உணர்த்தக் கூடியதாகும். 2006 ஆம் ஆண்டில் 'Northeastern Herald' என்ற மாதாந்த சஞ்சிகை ஒன்றின் ஆசிரியராக இருந்து ஆக்கங்களை வெளியிட்டமைக்காகவும், அந்த சஞ்சிகைக்கென நிதி திரட்டியமைக்காகவும் "சமூகங்களுக்கெதிராக அமைதியின்மையை ஏற்படுத்தினார்" என்ற குற்றச்சாட்டின் பெயரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 2009 ஒகஸ்ட் மாதத்தில் அவருக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.[19] இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் இவருக்கெதிராக விதிக்கப்பட்ட கடும் தண்டனைகள் ஆகியவை உலக அளவில் கண்டிக்கப்பட்டன.[20] ஜனாதிபதி ராஜபக்ஷவினால் 2010 மே 03 ஆம் திகதி திஸ்ஸநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

தற்போது காலாவதியான நிலையிலுள்ள அவரசகால ஒழுங்குவிதிகள் மற்றும் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியன கருத்துச் சுதந்திரம் மீது மிகக்கடும் தாக்கத்தை ஏற்படுத்தின. சட்டப் பகுப்பாய்வாளர்களான நிரான் அங்கரெல் மற்றும் கெஹான் குணதிலக்க ஆகியோர் 2011 இல் பின்வருமாறு எழுதினர், "அவரசகாலச் சட்டத்தின் கீழ் ஊடகங்கள் மீது விதிக்கப்பட்ட தணிக்கைகள் தற்போது குறைந்துள்ளன. இருப்பினும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் கீழ் விடுக்கப்படுகின்ற பயமுறுத்தல்கள்,

18 An Agenda for Change: The Right to Freedom of Expression in Sri Lanka. Article 19. October 1994 http://www.article19.org/data/files/pdfs/publications/sri-lanka-agenda-for-change.pdf

19 http://www.pen.org/defending-writers/test-first-name-test-middle-name-test-last-name/j-s-tissainayagam

20 http://www.pmaward.org/recipients/j-s-tissainayagam/

கைதுசெய்யப்படுதல்கள் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் போன்ற அச்சுறுத்தல்கள் நிலவும் பண்பாட்டின் காரணமாக இலங்கை ஊடகங்கள் சுயதணிக்கைக்கு ஆளாகும் துன்பத்தைச் சுமக்கின்றன".[21]

## பரிந்துரைகள்

- கருத்துச் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக உள்ளடக்கிப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் அரசிலமைப்பு திருத்தப்படல் வேண்டும் மற்றும் சகல நபர்கள் பற்றிய தகவல்கள் வெறுமனே பிரஜைகளுக்கு என்றல்லாது, இலங்கை அரசாங்கத்தின் நியாயாதிக்கத்திற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மிகவும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே, அவசரகால ஒழுங்குவிதிகளைப் (பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்) பிரயோகிக்கக் கூடியதாக இருக்கும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்படல் வேண்டும். ஏனெனில், அவரசகாலச் சட்டமானது தேசத்தின் வாழ்வையும் அச்சுறுத்தக்கூடியதாகக் காணப்படுகிறது. சாதாரண சட்டங்கள் செயற்படுத்தப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றபோது அதனை விஞ்சி அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்படக் கூடாது. அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கான அவசியம் தொடர்பில் அவசரகால ஒழுங்குவிதிகளில் தெளிவாக எடுத்துரைக்கப்படல் வேண்டும். இவ்வாறு அவசரகாலச் சட்டங்களைப் பிரயோகிப்பது தொடர்பான நியாயப்பாடுகளை மதிப்பிடும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இருக்கக் கூடியதாக ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

- கருத்துச் சுதந்திரத்திலும் தகவல் அறியும் உரிமையிலும் வரையறைகளை விதிக்கின்ற விடயங்களை மாற்றியமைக்கக் கூடியதாக அரசியலமைப்பில் புதிய விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். ICCPR உறுப்புரை 19(3) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே, குறித்த நலன்களைப் பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமான சூழ்நிலைகளில் மாத்திரம் அதனை நியாயப்படுத்துவது உட்பட, அவசரகால ஒழுங்குவிதிகள் அனுமதிக்கப்படலாம்.

- கருத்துச் சுதந்திரம் மீது கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடிய நடைமுறையிலுள்ள அனைத்துச் சட்டங்களையும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமைவாக, அவற்றுடன் முழுமையாக ஒத்திசையும் வகையில் அரசாங்கம் மீளாய்வு செய்யவேண்டும். சாதாரண சட்டவாக்கத்தைவிட மீயுயர் நிலையையுடைய அரசியலமைப்பை உறுதிசெய்யும் வண்ணம், நீதித்துறை (அரசியலமைப்பு) மீளாய்வை மீண்டும் அறிமுகப்படுத்துவது இதற்கு ஓர் வழிமுறையாகும். அரசியலமைப்பு மறுசீரமைப்பு உட்பட முந்தைய சட்டவாக்கத்தின் மீதான பல கரிசனைகளை நிவர்த்திக்க இது உதவும்.

21 Emergency Law in the Context of Terrorism – Sri Lanka. By Niran Anketell & Gehan Gunatilleke. South Asians for Human Rights, 2011. http://www.southasianrights.org/wp-content/uploads/2009/10/SL-Security-Laws-Final.pdf

## 1 02 சட்டத்திலும் நடைமுறையிலும் தகவல் பெறும் உரிமைக்கான உத்தரவாதம்

அரசாங்கம் மற்றும் பொது நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மை காணப்படாமை இலங்கையின் ஆட்சியில் காணப்படுகின்ற பிரதான குறைபாடாகும். கடந்த பல நூற்றாண்டுகளாக, மன்னர் ஆட்சிக்காலப்பகுதியில் எந்தச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படைத்தன்மை அல்லது பகிரங்கத்தன்மை காணப்படவில்லை. அதனைத் தொடர்ந்து நிலவிய காலனித்துவ நிர்வாகமும்கூட அதிகாரமும் இரகசியத்தன்மையும் மிக்க நிர்வாகப் பண்பாட்டையே கடைப்பிடித்தது.

1955 இன் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தின் பிரகாரம், உத்தியோகபூர்வ இரகசியத்தை எதனையும் ஊடகங்களுக்கு வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த பல தசாப்தங்களாக, பெரும்பாலும் பொதுமக்களது நலன்களை மையமாகக் கொண்ட தகவல்களை உள்ளடக்கி, பல்வேறு விதமான தகவல்களையும் இச்சட்டம் பொருட்கோடல்களைச் செய்துவருகிறது. முதலாவது உலக யுத்தக் காலப்பகுதியில் காணப்பட்ட அரசாங்க நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு உருவான, 1911 ஆம் ஆண்டில் பிரித்தானிய உத்தியோகபூர்வ இரகசியத் தன்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டது. பின்னர், "துஷ்பிரயோகங்களின் விளைநிலமாக இது திகழ்கிறது" என நிபுணத்துவம் மிக்க பிரித்தானிய ஜூரிகளால் அது விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், 1989 ஆம் ஆண்டின் உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தினால் அது பதிலீடு செய்யப்பட்டது.[22]

தகவல் அறியும் சட்டத்தை அறிமுகம்செய்தல் தொடர்பாக இலங்கை மேற்கொண்ட முயற்சகள் தொடர்பான தடங்களை ஆகக் குறைந்தது 2001 ஆம் ஆண்டிலிருந்து அவதானிக்க முடியும். தகவல் அறியும் சட்டம் தொடர்பான நகல் வரைவுத்திட்டமானது, 2003 ஆம் ஆண்டில், பிரதம அமைச்சர் அலுவலகம், சட்ட மாஅதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற்றுடன் கூட்டிணைந்து - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை பத்திகையாசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் ஆகியன தயாரித்தன. இச்சட்டமூலத்திற்கு 2003 ஆம் ஆண்டில் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தது. அப்போதைய ஜனாதிபதியின் ஒப்புதல் 2004 ஆம் ஆண்டில் கிடைத்தது. ஆனாலும், 2004 ஏப்ரல் பொதுத் தேர்தலுக்கு முன்பாக, பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் இச்சட்டத்தை அங்கீகரிக்க முடியாமற்போனது.

அக்காலம் முதல் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் இச்சட்டம் தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. "தகவல் அறியும் சட்டமானது தேசிய பாதுகாப்பிற்கு சவாலாகுவதன் காரணமாக அரசாங்கமானது இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தாது" என, 2012 ஜூலையில், வெகுசன ஊடகத்துறை மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் இவ்விடயம் தொடர்பில்

22 http://www.sundaytimes.lk/090208/Columns/focus.html

23 Information Ministry Sec's comment draws fire from media associations. The Sunday Times, 5 Aug 2012. http://www.sundaytimes.lk/120805/news/information-ministry-secs-comment-draws-fire-from-media-associations-8001.html

முரண்பாடுமிக்க தகவலொன்றைப் பகிரங்கமாக வெளியிட்டார்.[23]

2015 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், தகவல் அறிவதற்கான உரிமை சட்டமாக உறுதிப்படுத்தப்படும் எனக் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.[24] தேர்தலில் வென்றதன் பின்னர், இவரது அரசாங்கமானது 2003 ஆம் ஆண்டுக்கான நகல் வரைவுச் சட்டமூலத்தை மீளாய்வு செய்து திருத்தங்களையும் மேற்கொண்டது. மீளாய்வு செய்யப்பட்ட நகல் சட்டமூலத்தை 2015 டிசம்பரில் அமைச்சரவை அங்கீகரித்தது. 2016 இல் இது தொடர்பான பாராளுமன்ற விவாதங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகள் ஏற்பட்டன.[25]

சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான கனேடிய நிலையம், 2015 டிசம்பர் நகல் வரைவுச்சட்டம் பற்றிய பகுப்பாய்வொன்றினை மேற்கொண்டது. அதன் கருத்துப்படி, இச்சட்டம் நிறைவேற்றப்படுமெனில், உலகின் ஏழாவது உறுதியான சட்டம் இதுவென குறிப்பிடப்பட்டது.[26]

இவ் அறிக்கை எழுதப்படுகின்ற காலப்பகுதியில், தகவல் அறிவதற்கான சட்டம் 2016 மார்ச் 24 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒருசில வாரங்களில் இது அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.[27]

மேலும் 2015 ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தத்தில், தகவல் அறிவதற்கான உரிமை ஒரு அடிப்படை உரிமையென்பதை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.[28]

இது தொடர்பிலான பந்திகள் பின்வருமாறு காணப்படுகின்றன:

14அ. (1) ஒவ்வொரு பிரஜையும், பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு தேவைப்படுவதும் பின்வருபவற்றினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலாகவுள்ளதனைப் பெற, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எந்தத் தகவல்களையும் அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிக்குழு :

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் குழாமிலுள்ள அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம்

24 Maithripala Sirisena: Compassionate Government, Stable Country: Election Manifesto, December 2014. pp 51-52. http://www.president.gov.lk/wp-content/uploads/2015/01/Manifesto-EN.pdf

25 http://www.sundaytimes.lk/151206/sports/right-to-information-bill-to-be-gazetted-soon-174329.html

26 http://www.law-democracy.org/live/sri-lanka-proposes-strong-right-to-information-act/

27 http://www.lankabusinessonline.com/sri-lankas-right-to-information-bill-presented-to-parliament/

28 Sri Lanka Constitution updated with all amendments as at 15 May 2015, accessed from: http://www.parliament.lk/files/pdf/constitution.pdf

அல்லது மாகாணசபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட் ஏதேனும் நியதிக் குழு:

(இ) ஏதேனும் உள்ளூராட்சி அதிகாரசபை: அத்துடன்,

(ஈ) இப்பந்தியின் (அ), (ஆ), அல்லது (இ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள்.

(2) ஜனநாயகச் சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித்துரைக்கப்படும் கீழ்குறித்த கட்டுப்பாடுகள் தவிர வேறெதுவும், இவ்வுறுப்புரையினால் பிரகடனம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமை மீது இடப்படுதல் ஆகாது: தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன்கருதி, ஒழுங்கின்மை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்கு, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்கத் தன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைத் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்காக, அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக.

(3)இவ் உறுப்புரையில், ''பிரஜை'' என்பது கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றை அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றை, அத்தகைய குழுவின் நான்கில் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரஜைகளாக இருப்பின் அதையும் உள்ளடக்குகின்றது.

சில பகுப்பாய்வாளர்களின் கருத்துப்படி, இத்தகைய விடயங்கள் அரசியலமைப்பு ஏற்பாடாக உள்ளடக்கப்படுவது அதிகபட்சமாகும். அரசியலமைப்பில் சாதாரண ஒரு கூற்றே போதுமானதென்பதும், தேவையெனில் முழுமையான சகல தகவல்களையும் தொடர்புடைய சட்டத்தின் கீழ் வழங்க முடியுமென்பதும் அவர்களது அபிப்பிராயமாகும்.[29]

பாராளுமன்றச் சிறப்புரிமைகளைப் பாதுகாப்பதற்கான தகவல்களை இந்த அரசியலமைப்புத் திருத்தம் கட்டுப்படுத்துவதாகவும் கருத்துள்ளது. இருப்பினும், ஜனநாயக ரீதியான

29 http://www.ft.lk/article/483191/Clear-thinking-and-professional-drafting-needed-for-Constitution-making

கட்டமைப்புக்களில், பாராளுமன்றப் பிரதிநிதிகளை தெரிவுசெய்த மக்களிடம், அவர்களுக்குத் தகவல் சென்றுசேர்வதை, பாராளுமன்றச் சிறப்புரிமைகளைப் பேணுவதற்காக எனக்கூறி தடுக்க வேண்டுமென்பது நியாயப்படுத்தக்கூடிய விடயம் அல்ல. மீண்டும் ஒரு தடவை, பிரஜைகளுக்கான (சட்டப்படியானவர்கள்) உரிமை எனக்கூறி பிரஜைகள் அல்லாதவர்களை விடுவிப்பதானது சர்வதேச தராதரங்களுக்கு முரணான விடயமென்பதும் இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

தகவல் அறியும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது இந்த உரிமையின்பாற்பட்டதாகும். இவ்வகையான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பல நாடுகளில், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்பாகக் குறிப்பிட்ட காலம் (கருணைக்குரிய காலம்) - இந்தச் சட்டத்தை அர்த்தபுஷ்டியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிர்வாக ரீதியான ஆழமான மாற்றங்களுக்காக வழங்கப்படும். கால அவகாசமாக அதன் நிமித்தமே இது வலுவிற்கு வரும் திகதி பின்னர் குறிப்பிடப்படுகிறது. இவ்விதமான கருணைக் காலப்பகுதி இலங்கையில் வழங்கப்படாத பட்சத்தில், அது தொடக்ககால தாமதங்களுக்கும் அதிருப்திகளுக்கும் வழிவகுக்கும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் ஆதரவைத் திரட்டியபோதிலும், தகவல் அறியும் சட்டம் தொடர்பான நன்மைகள் மற்றும் அதன் குறிப்பிட்ட பயன்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை சில பரிந்துரை அமைப்புகள் மேற்கொண்டன. உதாரணமாக, ட்ரான்ஸ்பெரன்ஸி இன்ரநெஷனல் ஸ்ரீலங்கா (TISL), இலங்கை பத்திரிகை நிறுவனம் (SLPI) போன்றன – கொழும்பை அடிப்படையாகக் கொண்ட ஊடகவியலாளர்கள் மற்றும் மாகாண ஊடகவியலாளர்கள் உட்பட பல்வேறு குழுக்களுக்கும் பல்வேறுவிதமான பயிற்சிகளை வழங்கின.[30] இத்தகைய முயற்சிகள் விழிப்புணர்வுகளைக் கட்டியெழுப்புவதுடன், தகவல் அறியும் சட்டம் தொடர்பில் சமூக அடிப்படையிலான தயார் நிலைகளையும் ஏற்படுத்துகின்றன.

ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பமாக, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை ஏற்றுக்கொள்வது காணப்படுகிறது. இதனை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு - அரசியல் திட்பம், நிர்வாக ரீதியான திட்டமிடல்கள், போதியளவு பொதுநிதி வசதி ஆகியன அவசியப்படுகின்றன. இச்செயன்முறை தாமதங்களுக்கு ஆளாகாமல், முறையாக துல்லியமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிசெய்து கொள்வதற்கு சிவில் சமூகங்கள், ஊடக அமைப்புகள் போன்றவற்றின் தொடர்ச்சியான தேவைமுன்வைப்பும் கண்காணிப்பும் அவசியப்படுகின்றன.[31]

30 See, for example, TISL public opinion survey on RTI: http://www.tisrilanka.org/wp-content/uploads/2015/03/RTI-final-report-for-web-28-Feb.pdf

31 Beyond RTI: Moving towards Open Data and Open Government. By Nalaka Gunawardene. *Daily Mirror*. 14 September 2015. http://www.dailymirror.lk/87099/beyond-rti-moving-to-open-data-and-open-govt

## 1.03 சட்டத்திலும் நடைமுறையிலும் ஆசிரியர்பீட சுதந்திரத்துக்கான உத்தரவாதம்

### பரிந்துரைகள்

- அதிக தகவல்களை அணுகக்கூடிய விதத்திலான கொள்கைகளின் அடிப்படையில் தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியச் சட்டமானது முழுமையாக அகற்றப்படல் வேண்டும் அல்லது அதில் தேவையானளவு தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கு ஏற்ப திருத்தப்படல் வேண்டும். நன்நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற, தகவல்கள் சரியான விதத்தில் வெளிப்படுத்தப்படுவதுடன் குற்றச் செயல்களுக்கு எதிரான சான்றுகளாகவும் இருத்தலில் நியாயமான நம்பிக்கையுடன் இருக்கின்ற உரத்துக் குரல் தரவல்லோரைப் பாதுகாக்கப்படக் கூடிய ஏற்பாடுகளையும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- பாராளுமன்றச் சிறப்புரிமைகளைப் பாதுகாத்தல் என்பதன் கீழ் தகவல்களைக் கட்டுப்படுத்துவதான பகுதிகள் அரசியலமைப்பிலிருந்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்தும் அகற்றப்படுவதுடன், சட்ட ஆவணங்களின் பரப்பு எவரொருவரையும் உள்ளடக்கக்கூடியதாக விரிவாக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்பீடச் சுதந்திரம் என்பது ஆசிரியர்களும் ஊடகவியலாளர்களும் தமது ஆக்கங்களின் உள்ளடக்கம் பற்றிய தீர்மானங்களை - ஊடக உரிமையாளர்கள், வியாபார முகாமையாளர்கள் அல்லது அதிகாரிகள் உள்ளிட்ட வேறு மூன்றாம் தரப்பினர்களது தலையீடுகளின்றி சுயாதீனமாக மேற்கொள்வதாகும். ஆசிரியர்பீடச் சுதந்திரத்தின் கொள்கை எனும்போது - ஊடகவியலாளர்கள் அல்லது ஒலி- ஒளிபரப்பாளர்கள் தொழில்சார் அடிப்படையிலும் பொதுமக்களது அறிந்துகொள்வதற்கான உரிமையை அடிப்படையாகக் கொண்டும் சட்டத்தின் மூலமாக பாதுகாக்கக்கூடிய விதத்திலும் நடைமுறையில் மதிக்கக்கூடிய விதத்திலும் தீர்மானங்களை மேற்கொள்வதாகும்.

ஆசிரியர்பீடச் சுதந்திரம் தொடர்பில் இலங்கையில் எவ்விதமான சட்டரீதியான உத்தரவாதங்களும் இல்லை. ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் அரசாங்கத்தின் ஊடகக் கொள்கை என்ற தொனிப்பொருளில் "சகல ஊடகப் பணியாளர்களதும் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு உறுதியளித்தல்" என்ற அர்ப்பணிப்பு வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது.[32]

இருப்பினும், யதார்த்தபூர்வமாக நோக்குகையில் ஊடகவியலாளர்களின் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஊடக நிறுவனங்களின் உள்ளிருந்தும் வெளியிருந்தும் பல அழுத்தங்களை எதிர்கொள்ளவே செய்கின்றன.

32 http://www.media.gov.lk/images/pdf_word/media-policy_english.pdf

தனியார் ஊடகங்களைப் பொறுத்தவரையில், அவ் ஊடகங்களின் உரிமையாளர்கள் அல்லது முகாமையாளர்கள் அவ் ஊடகங்களின் செய்தி வெளிப்பாடுகளில் தலையிடுவதும், அவர்களது அரசியல் மற்றும் வர்த்தக ரீதியான நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுவதும் பொதுவில் காணக்கிடைப்பதாகும். அரச ஊடகங்களைப் பொறுத்தவரையில் (3.3 இல் கலந்துரையாடப்படுவது போன்று அவை உண்மையில் பொதுச் சேவை ஊடகங்களல்ல), அங்கு இடம்பெறுகின்ற செய்தி வெளிப்பாடுகளில் ஆட்சியிலிருக்கின்ற கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தமக்கு ஆதரவான செய்திகளையே வெளியிடுவதற்கான நிர்ப்பந்தங்களை மேற்கொள்வதும் பொதுவில் நடப்பதாகும்.

ஊடகங்களுக்கான ஆசிரியர்பீடச் சுதந்திரம் தொடர்பான அழுத்தங்கள் அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், விளம்பரதாரர்கள், பொதுசனத் தொடர்பாடல் முகவர்கள் மற்றும் பல்வேறுபட்ட அழுத்தக் குழுக்கள் என வெளியிலிருந்து பல்வேறுபட்டவர்களிடமிருந்தும் பல்வேறு வடிவங்களிலும் எழலாம். தமக்குச் சாதகமான நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்கான சில அழுத்தங்களும்கூட ஏற்படலாம். வேறு சில சந்தர்ப்பங்களில் சில விடயங்களைக் காட்ட வேண்டாம் என்ற அழுத்தங்களும் - உதாரணமாக, ஒரு 'கொலை' சம்பந்தப்பட்ட செய்தி பொதுமக்கள் முக்கியத்தும் வாய்ந்ததாகக் காணப்பட்ட போதிலும் அதனை வெளியிட வேண்டாம் என்றவாறும் தரப்படலாம்.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ தேசிய செய்தித்தாள் ஆசிரியர்களை மாதாந்தம் சந்தித்து முறைசாராத முறையில் பல்வேறு விதமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஊடகங்களில் இடம்பெறுகின்ற செய்திகள் அல்லது உள்ளடக்கங்கள் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் போக்காக இதனை எதிர்க்கட்சியினரும் மற்றும் சில ஆசிரியர்களும்- குறிப்பாக, வெளிப்படையாகப் பேசாவிடினும் விமர்சித்தனர்.[33]

ஆசிரியர்பீடச் சுதந்திரமின்றியிருந்த இலங்கையின் அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் தற்சமயம் பொதுச்சேவை விழுமியங்களுடன் செயற்படும் வாய்ப்பு தேவைப்படாதவராகிவிட்டனர் அல்லது பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு அல்லது பொதுமக்கள் சேவைப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு சேவையாற்ற முடியாத நிலை அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. இலங்கைக்கான சர்வதேச தூதரகமொன்று 2006 ஒக்டோபரில் வெளியிட்ட கருத்தின்படி "இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விவாதங்கள் நடைபெற்றபோதிலும், இவை தொடர்பில் பல்வேறுபட்ட உத்தியோகபூர்வ விதப்புரைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் அவர்களுக்குரிய ஆசிரியர்பீடச் சுதந்திரத்துடன் நேர்மையான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பாளர்களாகச் செயற்படுவதற்கான உரிய முயற்சிகளை இதுவரை எடுக்கவில்லை"[34] எனக் குறிப்பிட்டது. ஒரு தசாப்தம் கடந்த நிலையிலும் இந்நிலைமையில் அடிப்படை மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

ஊடக மறுசீரமைப்புச் செயற்பாட்டாளரும் முன்னாள்

33 http://dbsjeyaraj.com/dbsj/archives/13756

34 Press Freedom and Freedom of Expression in Sri Lanka: Struggle for Survival. Report of the International Press Freedom and Freedom of Expression Mission to Sri Lanka. January 2007. http://www.article19.org/data/files/pdfs/publications/sri-lanka-mission-rpt.pdf

ஒலிபரப்பாளருமான விஜயானந்த ஜயவீர செய்தி ஊடகங்களின் ஆசிரியர்பீடம் சார்ந்த சுதந்திரங்கள் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார். இதன் நிமித்தம் சுயாதீன ஊடக சபையொன்று சட்டத்தின் மூலமாகத் ஸ்தாபிக்கப்பட்டு ஊடக சுதந்திரத்தை, ஆசிரியர்பீடச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனக்கூறும் அவர், "ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை உருவாக்குவதற்கு தொழில்சார் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு ஊடக பொறுப்புக்கூறல் முறையொன்றை ஊடக அமைப்புகள் விருத்திசெய்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். வியாபாரத்தைத் தனியாகவும் ஆசிரியர்பீடம் சார்ந்த செயற்பாடுகளை தனியாகவும் மேற்கொள்வதற்கு ஏற்ற விதத்தில் ஆசிரியர்பீடம் தனக்கான கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்" என்கிறார்.[35]

மேலும் அவர் கூறுகையில்,
"அரசாங்கத்திடமிருந்தாலென்ன, அல்லது ஊடக உரிமையாளர்களிடமிருந்து வந்தாலென்ன, அல்லது வெளியாட்களிடமிருந்து அழுத்தங்கள் எழுகின்றபோதும் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான பொறிமுறை இருக்கவேண்டும் என்பதே இதனால் உணர்த்தப்படுகிறது. ஊடக சுயாதீனத்தையும் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தையம் பாதுகாப்பதற்கேற்ற வகையில் அத்தகையதொரு பொறிமுறையாக சுயாதீன ஊடகச் சபை திகழமுடியும். பொதுமக்கள் மத்தியில் காணப்படும் புத்திஜீவிகள், ஊடக தொழில்வாண்மையாளர்களால் தெரிவுசெய்யப்பட்ட நிபுணத்துவம் மிக்க ஊடகவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி அமைகடகப்பட்ட இந்தோனேசியாவின் சுயாதீன ஊடகச் சபை இது போன்ற பொறிமுறைக்குச் சிறந்த உதாரணமாகும். இந்தோனேசிய சுயாதீன ஊடகச் சபை சட்டத்தின்படி, இந்தச் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கேற்ப சகல ஊடகங்களும் நடந்துகொள்ளல் வேண்டும்" என்கிறார்.

ஆசிரியர்பீடச் சுதந்திரம் தொடர்பில் , இவ்வாறான சட்டம் நிறைவேற்றப்பட்டாலும்கூட, தனியார் ஊடகங்களுக்கான பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் சட்ட வல்லுனர்களும் ஏனைய சில செயற்பாட்டாளர்களும் மாறுபட்ட கருத்துக்களையும் தம்மகத்தே கொண்டுள்ளனர். இவ்விடயம் சட்டமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், தனியார் ஊடகங்கள் மீது அரசாங்கத்தினது தலையீடுகள் அதிகரிக்கலாமெனவும் இதன் மூலமாக அது தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகலாமெனவும் அவர்கள் கருதுகின்றனர். ஐக்கிய இராச்சியம் போன்ற முதிர்ச்சியடைந்த ஜனநாயக நாடுகளில் காணப்படுவதுபோல், ஊடகவியலாளர் தொழிற்சங்கங்களை வலுப்படுத்துவதன் மூலம் ஆசிரியர்பீடச் சுதந்திரம் தொடர்பில் ஊடக உரிமையாளர்களுடனான இணக்கத்தின் வழியாக முயற்சித்து அதனைப் பேண முடியும். ஐக்கிய இராச்சியத்தின் ஃபைனான்சியல் ரைம்ஸ் பத்திரிகையை ஜப்பானைச் சேர்ந்த நிகாய் வாங்கியபோது, அத்தருணத்தில் இதனைக் கொள்வனவு செய்த புதிய உரிமையாளர் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்த வேண்டுமென ஊடகவியலாளர்கள் வலியுறுத்தினர்.[36]

35 Identifying Requirements for Structural Changes in Our Media System. Wijayananda Jayaweera. World Press Freedom Day lecture, organised by Free Media Movement and the Sri Lanka Press Institute. 5 May 2015 http://srilankabrief.org/2015/05/sri-lanka-identifying-requirements-for-structural-changes-in-our-media-system/

36 http://www.theguardian.com/media/greenslade/2015/sep/28/financial-times-nikkei-guarantee-of-independence

## 104 சட்டத்திலும் நடைமுறையிலும் ஊடகவியலாளர்கள் தமது தகவல் மூலங்களைப் பாதுகாப்பதற்கான உரிமை

ஊடகமானது பொதுமக்கள் நலன்கருதிய செய்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெருமளவில் பொதுமக்களிடமே தங்கியிருக்கின்றது. பல சந்தர்ப்பங்களில் தகவல்களை வழங்கும் மூலங்கள் தத்தமது விபரங்களை ஊடகங்கள் தெரிவிப்பது தொடர்பில் மகிழ்ச்சியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இருப்பினும், ஊழல், அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகள் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் தொடர்பிலான கூருணர்வுமிக்க சில தகவல்களை ஊடகங்களுக்கு சில தனிநபர்கள் வழங்குகின்றனர். அவ்வித சந்தர்ப்பங்களில், தகவல் மூலங்கள் தொடர்பான விடயங்கள் அநாமதேயமாக அல்லது இனங்காட்டப்படாமல் இருப்பதே அவர்கள் பேசுவதற்கு முன்வரவும், பெயர்கள் தெரிவிக்கப்படுவதால் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்திலிருந்து அவர்கள் வெளிவரவும் அவசியமாக இருக்கும்.

ஊடகத் தகவல் மூலத்தைப் பாதுகாப்பது ஊடக சுதந்திரத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. அதனைப் பாதுகாக்காத சந்தர்ப்பத்தில், ஊடகத்திற்கு அவசியமான மக்கள் நலன் குறித்த தகவல்களை வழங்குவதற்கு அவர்கள் உதவி செய்ய மறுக்கலாம். அவ்விதம் நடக்குமாக இருந்தால், பொதுமக்கள் கண்காணிப்பாளன் என்ற முக்கிய வகிபாகத்தை ஊடகங்கள் இழக்க நேரிடலாம்.

### பரிந்துரைகள்

- பொதுச் சேவை ஊடகங்கள் தொடர்பிலான ஆசிரியர்பீடச் சுதந்திரம் சட்டத்தின் மூலமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதேவேளை, ஏனைய சகல ஊடகங்களும் தமது தொழில்சார் விழுமியங்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதை மையப்பொருளாகக் கொண்டு ஆசிரியர்பீடக் கொள்கைகள் மற்றும் பொறுப்புக்கூறல் முறைகள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உட்சாகப்படுத்தப்பட்டு, அதனடிப்படையில் தமது வெளியீடுகளை மேற்கொள்வதற்கு வழிசெய்யப்படவேண்டும். அவ்வகையான உரைவிளக்கங்கள் ஊடகத்துறைப் பணியாளர்களைத் தெளிவாக வலுவூட்டுவதுடன் ஊடக கம்பனியின் செயற்பாடுகள் வியாபாரம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் ஆசிரியர்பீடம் ஆகியன தனித்தனியாக வேறுபடுத்துவதையும் உறுதிப்படுத்தவேண்டும். ஆசிரியர்பீடச் சுதந்திரத்தைத் தேவையற்ற தலையீடுகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய வகையில் அவசியமான அதிகாரங்களைக் கொண்டதான ஊடக சுய ஒழுங்குபடுத்தல் அல்லது இணை ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகள் காணப்படல் வேண்டும்.

- இலங்கையிலுள்ள ஊடக பங்கேற்பாளர்கள் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை எவ்வாறு சிறப்பாக உறுதிப்படுத்துவது என்பது தொடர்பிலான தேசிய விவாதத்தில் அவசியம் கவனம் செலுத்துவதோடு, இயலுமான பொருத்தமான உபாயங்களை வகுப்பதிலும் அக்கறைகாட்ட வேண்டும்.

அவ்வித சந்தர்ப்பங்களில் ஊடகங்களின் தன்மை குறைமதிப்பீடு செய்யப்படுவதுடன் துல்லியமான, நம்பகத்தன்மையான தகவல்களை வழங்கும் தன்மையில் பாதகமான விளைவுகளும் ஏற்படலாம்.[37]

ஊடகவியலாளர்கள் தமது தகவல் மூலங்களை அந்தரங்கமாக வைத்திருக்கும் உரிமையை உத்தரவாதப்படுத்தக்கூடிய திட்டவட்டமான சட்டங்கள் இலங்கையில் இல்லை. தமது தகவல் மூலங்களை வெளிப்படுத்துமாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்களும் ஊடக அமைப்புக்களும் காலத்துக்குக் காலம் அழுத்தங்களுக்கு ஆளாகியே வந்துள்ளனர்.

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை ஊடகச் சபைச் சட்டத்தின் கீழ் 1981 இல், இலங்கை பத்திரிகை நிறுவனம் என அறியப்படும் அரசாங்க நிறுவனம், ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவை ஒன்றை உருவாக்கியது. இது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, 1981 ஒக்டோபர் 08 ஆம் திகதி வர்த்தமானியில் இடம்பெற்றபோதிலும், ஊடகவியலாளர்களினால் இந்த ஒழுக்கநெறிக்கோவை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படாததோடு, இதனைப் பின்பற்ற வேண்டுமென்ற சட்டரீதியான கடப்பாட்டினையும் கொண்டிருக்கவில்லை. அதில் இவ்வாறு ஒரு வாசகம் காணப்படுகிறது - “தகவல் ஒன்றை வழங்கிய நபர் அவரைப் பற்றிய விபரத்தை வெளியிடும்படி கோரினாலன்றி, அத்தகவலை வழங்கிய நபர் தொடர்பான அல்லது தகவல் மூலம் தொடர்பான இரகசியத்தன்மையை ஒவ்வொரு ஊடகவியலாளரும் பின்பற்றல் வேண்டும்”. 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை ஊடகச் சபைச் சட்டத்தின் கீழ் 1981 இல், இலங்கை பத்திரிகை நிறுவனம் என அறியப்படும் அரசாங்க நிறுவனம், ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவை ஒன்றை உருவாக்கியது. இது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, 1981 ஒக்டோபர் 08 ஆம் திகதி வர்த்தமானியில் இடம்பெற்றபோதிலும், ஊடகவியலாளர்களினால் இந்த ஒழுக்கநெறிக்கோவை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படாததோடு, இதனைப் பின்பற்ற வேண்டுமென்ற சட்டரீதியான கடப்பாட்டினையும் கொண்டிருக்கவில்லை. அதில் இவ்வாறு ஒரு வாசகம் காணப்படுகிறது - “தகவல் ஒன்றை வழங்கிய நபர் அவரைப் பற்றிய விபரத்தை வெளியிடும்படி கோரினாலன்றி, அத்தகவலை வழங்கிய நபர் தொடர்பான அல்லது தகவல் மூலம் தொடர்பான இரகசியத்தன்மையை ஒவ்வொரு ஊடகவியலாளரும் பின்பற்றல் வேண்டும்”.[38] இதன்படி, தகவலாளியின் இரகசியத்தன்மையைப் பேணவேண்டியது ஒரு உரிமையாகக் குறிப்பிடப்படாது, ஓர் கடப்பாடாகவே அது முன்வைக்கப்படுகிறது.

தகவல் மூலங்களின் இரகசியத்தன்மையை இலங்கையில் பேண முடியாத நிலையானது,

37 https://www.article19.org/pages/en/protection-of-sources-more.html

38 http://www.slpc.lk/images/doc/1981-10-14-English.pdf

‘புலனாய்வு ஊடகச் செயற்பாடுகளிலும் பொதுத்துறை மோசடிகள் மற்றும் தவறான நடவடிக்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்’ என, ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதிக்கும் சட்ட விடயங்களை மறுசீரமைப்பது பற்றிய ஆலோசனைகளை வழங்குவதற்காக 1996இல் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் (இது பரவலாக ஆர்.கே.டபிள்யு. குணசேகர குழு அறிக்கை எனக் கூறப்படுகிறது) குறிப்பிடப்பட்டுள்ளது. இது, தமது தகவல் மூலங்களை வெளியிடும்படி ஊடகவியலாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட முடியாது என்பது சட்டம் மூலமாக உத்தரவாதமளிக்கப்படல் வேண்டும் எனவும் பரிந்துரை செய்தது. இரண்டு தசாப்தங்கள் கடந்த நிலையிலும் இது தொடர்பிலான எத்தகைய சட்டங்களும் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை.

சிவில் யுத்தத்தின்போதும் யுத்தம் நிறைவுற்றதன் பின்னரும்கூட - பாதுகாப்பு, அரச செலவினங்கள், அரசியல் மோசடிகள் மற்றும் கூருணர்வுமிக்க விடயங்களில் கட்டுரைகளை வெளியிடுகின்றபோது, தமது ஆக்கங்கள் தொடர்பிலான தகவல் மூலங்களை வெளியிடும்படி ஊடகவியலாளர்களும் ஆசிரியர்களும் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஊடகச் சுதந்திரத்தின் மீது மேற்கொள்ளப்படும் இவ்வகையான அத்துமீறல்கள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச பரிந்துரைக் குழுக்கள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளன. உதாரணமாக, ‘ஊடக சுதந்திரம் 2007’ என்ற அறிக்கையில் தமது தகவல் மூலங்களை வெளியிடும்படி எவ்வாறு பல ஊடகவியலாளர்கள் விசாரணைகளுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர், அவர்களில் ஒருவர் எவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார் என்ற விபரங்கள் ஆவணப்படுத்தப்பட்டன.[39]

2008 இல், ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புத் தொடர்பான கொழும்பு பிரகடனத்தில் (மீளாய்வு செய்யப்பட்டது) 11 ஆம் பிரிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது - “ஊடகத் தகவல் மூலங்களை எவ்விதமான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தும்படி கோரமுடியுமென்பதை தெளிவாக வரையறை செய்வதான, ஊடகத் தகவல் மூலங்கள் தொடர்பிலான இரகசியத்தன்மையைப் பாதுகாக்கக்கூடிய சட்டம் உருவாக்கப்படுவதுடன், அது நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் ஓர் அங்கமாகவிருத்தல் வேண்டும்”.[40]

39 https://freedomhouse.org/report/freedom-press/2007/sri-lanka#.VUyKc_DkqSo

40 Colombo Declaration on Media Freedom and Social Responsibility (2008 revised version) https://ict4peace.files.wordpress.com/2009/03/declaration_eng.pdf

## பரிந்துரை

- பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை தொழில்சார் முறையில் வழங்குகின்ற ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடகம்சார் பணியாளர்கள் பெற்றுக்கொள்கின்ற தகவல் மூலங்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்கக்கூடிய விதத்தில் அவர்களது உரிமைகளை வலுவாகப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் சட்டம் வழங்க வேண்டும்.

## 105 ஊடகம் தொடர்பான பொதுக்கொள்கையை வடிவமைப்பதில் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் பங்கேற்பு

இலங்கையைப் பொறுத்தவரை கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் போன்றன உருவாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அல்லது சிவில் சமூகத்தின் பங்குபற்றுதலுக்கு அதிக வாய்ப்புகள் பொதுவாக வழங்கப்படுவதில்லை. இருப்பினும், புதிய கொள்கைகள் அல்லது பாதகமான கொள்கைகள், சட்டங்கள், நடைமுறைகள் போன்றன உருவாக்கப்படுகின்றபோது அவை தொடர்பிலான விமர்சனங்களை முன்வைப்பதற்காக ஆர்வமிகுந்த தனிநபர்களும் விழிப்புமிக்க சிவில் சமூக அமைப்புகளும் ஊடகம், தொழில்சார் பொதுமன்றங்கள் மற்றும் ஏனைய தளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். இவ்வித செயற்பாடுகளின்போது, சிலவேளைகளில் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவு என்ற பட்டியலிலும் அவர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்.

தகவல் அறியும் சட்டமூலத்தை உருவாக்குகின்ற சமீப சந்தர்ப்பத்தில் அது தொடர்பிலான கலந்துரையாடல்களில் கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் பங்குபற்றியமை தற்போதைய அரசாங்கத்தின் கலந்தாலோசனை அணுகுமுறையை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக ஊடகம் தொடர்பிலான கொள்கைகளின்போது ஊடகவியலாளர் தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய ஊடக அமைப்புகள் போன்றன பல அழுத்தங்களை உருவாக்குகின்றன, வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் பொது ஆர்ப்பாட்டப் பிரச்சாரங்களாகவும் அவை மாறுகின்றன.

இதற்கான அண்மைய உதாரணம், 2013 ஆம் ஆண்டின் மத்தியபகுதியில் ஊடக அமைச்சானது ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முயன்றபோது அது ஊடகவியலாளர்களினாலும் பத்திரிகை ஆசிரியர்களினாலும் வெற்றிகரமாக எதிர்க்கப்பட்டது. இறுதியில், ஜனாதிபதி ராஜபக்ஷ அதனைத் தொடர வேண்டாமென அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்தார். மேலும், “அவ்விதமான ஒழுக்கநெறிக்கோவை ஊடகத்துறையிடமிருந்தே வரவேண்டும்” எனவும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒழுக்கநெறிக்கோவை (உண்மையில், தொழில்சார் பணிக்கான ஒழுக்கநெறிக்கோவை) ஏற்கனவே நடைமுறையில் இருப்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார்.[41]

41 http://www.sundaytimes.lk/130623/news/move-to-impose-standards-on-media-thwarted-49939.html

*"இன்று இலங்கை ஊடகங்கள் தமது பொறுப்புக்களை மறந்து வழிதவறிச் செல்கின்றன. எனவே, எமது தொழிற்துறையையும் தொழிலையும் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு ஊடக மறுசீரமைப்புகள் எமக்கு உடனடியாக அவசியப்படுகின்றன. இத்தகைய மறுசீரமைப்புகள் பல மட்டங்களில் அவசியப்படுகின்றன: ஊடகம் தொடர்பான சட்டங்கள், ஊடக ஒழுக்கநெறிகள், ஊடகத்தில் பாரியளவிலான தொழில்வாண்மைகள் போன்றன கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். தற்போதைய வீழ்ச்சிக்குக் காரணம் என்னவென்பதை நாம் முறையாக இனங்கண்டு, அவை தொடர்பில் முறையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்".*

*"சிங்கள மொழி மூலமான பத்திரிகைகள் அனுபவிக்கின்ற தகவல் அறியும் உரிமைகளில் அரைப்பகுதி கூட தமிழ்மொழி மூலமான ஊடகங்களில் பணியாற்றக்கூடிய எமக்கு இல்லை. சக ஊடகவியலாளர்களே எம்மை பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்துகின்றனர். உதாரணமாக, இந்த நாட்டு மக்களும் நாமும் வடக்கில் (முன்னைய போர்ப்பகுதி) என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்துகொள்வதற்கு சுதந்திரம் அற்றவர்களாக இருக்கின்றோம். அங்கு நடைபெறுகின்ற விடயங்களை அறிந்து எமது வாசகர்களுக்கு அறிவிப்பது பெரும் போராட்டமாகவே எமக்குக் காணப்படுகிறது. யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியிலும் மாத்திரமல்லாது இப்போதும் இந்நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை (2015 ஜுன்)".*

*"ஆம், கருத்துச் சுதந்திரம் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான், ஆனால் நடைமுறையில் பல்வேறுவிதமான கட்டுப்பாடுகளும் தடைகளும் பிரயோகிக்கப்படுகின்றன. இது சுய தணிக்கைகு இட்டுச்செல்கிறது. கருத்துச் சுதந்திரம் என்பது வெறுமனே ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மாத்திரம் உரிய அடிப்படை உரிமையல்ல. அது நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிய அடிப்படை உரிமையாகும்.*

*- எஸ். ஸ்ரீகஜன், ஆசிரியர், வீரகேசரி நாளிதழ்.*

## பரிந்துரை

- கருத்துச் சுதந்திரத்தை அல்லது ஊடகத்தை பாதிக்கின்ற அல்லது அவை தொடர்பிலான சட்டங்களை உருவாக்குகின்றபோது அல்லது கொள்கைகளை வகுக்கின்றபோது ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களுடன் பரந்தளவிலான கலந்துரையாடல்ளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

106 சட்டத்திலும் நடைமுறையிலும் ஒழுங்குபடுத்தல் முறைமையின் சுயாதீனத்தன்மைக்கான உத்தரவாதம்

ஆ

# ஒலி - ஒளிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறைமை

இலங்கையின் ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் முறை மற்றும் அதன் சுயாதீனத் தன்மை ஆகியன நன்கு வரையறைசெய்யப்படவில்லை.

வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் தொடர்பான விண்ணப்பங்களைப் பரிசீலித்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அதிகாரம் ஊடக அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்தின் நிமித்தம் திட்டவட்டமான சட்டங்களின்மையின் காரணமாக, 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் அமைச்சருக்கான அதிகாரம் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது, "இலங்கையின் எப்பாகத்திலும் நபர் ஒருவர் தனியார் ஒலிபரப்புகளை நிறுவி அதனைப் பேணுவதற்கான அனுமதிப்பத்திரம்" என அது குறிப்பிடுகிறது.

இவ்விதமான அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பது தொடர்பான விளம்பரங்களை அரச வர்த்தமானியிலும் செய்தித்தாள்களிலும் பிரசுரிக்கும்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை இச்சட்டம் கோரியுள்ளதுடன், "ஒருவரது விண்ணப்பம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பட்சம் தவிர்த்து எவருக்கும் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படக் கூடாது" எனவும் குறிப்பிடுகிறது.

இச்சட்டம் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை உருவாக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இச்சட்டம் உருவாக்கப்பட்டு சுமார் அரை நூற்றாண்டு கடந்துவிட்ட நிலையிலும் அத்தகைய ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படவில்லை.

நடைமுறையில், உண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமல்ல, ஊடக அமைச்சே அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி வருகின்றது. புவிசார் (terrestrial), கேபிள் மற்றும் செய்மதிமுறை விநியோகங்களை உள்ளடக்கி, 1992 ஆம் ஆண்டு முதல் ஒலி-ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட 41 அமைப்புகள் தொடர்பான பட்டியலை அமைச்சு தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.[42]

அனுமதிக்கோரிக்கைகளை பரிசீலிக்கும் தரமுறைமை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைமை தொடர்பில் விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. இந்த முறைமைகள் முழுமையாக தற்துணிபின் அடிப்படையிலேயே காணப்படுவதுடன், விரும்பிய நேரங்களில் அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியுமாகவும் உள்ளது. இவை தொடர்பான மேன்முறையீடுகளை மேற்கொள்வதற்கும் உரிமைகள் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதானது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திடமே காணப்படுகிறது. இவை தொடர்பில் இரண்டு சிரேஷ்ட ஒலிபரப்பாளர்கள் தமது கருத்துக்களைத் தொவிக்கையில், “சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் எந்தளவிற்கு சுமுகத்தன்மையைப் பேணுகின்றோமோ அதனடிப்படையிலேயே அனுமதிப்பத்திரங்கள் பெறும் நடைமுறை முழுமையாகத் தங்கியுள்ளது. அதன் பின்னர், ஒவ்வொரு வருடமும் இவ் அனுமதிப்பத்திரங்களை நீடிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இது, மேலும் அமைச்சரிடம் தொடர்ச்சியாக தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுகின்றது. கூடுதலாக, அரசாங்கம் தமக்கு விரும்பிய நேரத்தில் ஒலிபரப்புகளை இடைநிறுத்தவும் முடியும். எனவே, தொடர்ச்சியாக ‘அரசாங்கத்தை மகிழ்ச்சியில் வைத்திருக்க வேண்டிய’ நிர்ப்பந்தம் தனியார் ஊடக நிறுவனங்களுக்குக் காணப்படுகிறது”[43] என்றனர்.

ஒருமுறை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதன் பின்னர், அனுமதிப்பத்திரங்களின் நிலைமை தொடர்பில் மேற்பார்வைசெய்வது பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. மிக அரிதாகவே அனுமதிப்பத்திரங்களை மீளப்பெறும் அதிகாரத்தை அமைச்சு பிரயோகிக்கின்றது. 2007 ஒக்டோபரில் ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்பட்ட ஐந்து

42 Registered Institutions for Radio and TV License, as listed on Ministry of Media website, accessed on 31 January 2016: http://www.media.gov.lk/images/pdf_word/licensed-institutions-tv-radio.pdf

43 Political Economy of the Electronic Media in Sri Lanka. Tilak Jayaratne & Sarath Kellapotha. Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), p129

வானொலிகளின் சேவைகள் (சன் எவ்.எம்., கோல்ட் எவ்.எம்., ஹிரு எவ்.எம்., ஷா எவ்.எம்., சூரியன் எவ்.எம்.) இவ்விதம் மீளப்பெறப்பட்டன. இலங்கையின் தென்பகுதியிலுள்ள கிராமம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவியதாக தவறான அறிக்கை ஒன்றை ஓர் ஒலிபரப்பு நிலையம் ஒலிபரப்பியதன் காரணமாக இவ்வாறு ஐந்து ஒலிபரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களும் இடைநிறுத்தப்பட்டன. இந்த ஒலிபரப்பு நிலையமானது தனது தவறை உடனடியாகத் திருத்தி அது தொடர்பில் தனது சேவையினுடாக மன்னிப்புக் கோரிய போதிலும் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் "இது முற்றுமுழுதிலும் கருத்துச் சுதந்திரத்தை மீறிய செயல்"[44]

இந்த கம்பனி உயர்நீதிமன்றத்தை நாடிய போதிலும் வெற்றிபெற முடியவில்லை. இவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் ஆறு மாதங்களின் பின்னர் வழங்கப்பட்ட போதிலும், இவை தொடர்பில் எவ்வாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பான விடயங்கள் வெளிப்படைத்தன்மையற்றதாகவே காணப்பட்டன. பொதுமக்கள் நலன் கருதிய பரிசீலனைகளன்றி அரசியல் செல்வாக்குப் பிரயோகிக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.[45]

மேற்படி சம்பவமானது, அரசியலமைப்பின்படியான சுயாதீன ஊடக ஆணைக்குழு அல்லது சுயாதீன ஒலிபரப்பு ஆணைக்குழு, 19 ஆவது திருத்த வரைவுச்சட்டகத்தின் கீழ் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

சுதந்திர ஊடக இயக்கம் போன்றன அமைப்புக்கள், சுயாதீன ஊடக ஆணைக்குழு தொடர்பிலான பரிந்துரைகளை கடந்த காலங்களில் முன்வைத்தன. அரசியலமைப்புச் சபையின் பரிந்துரைகளுடன் சுதந்திர ஊடக ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும் என்றும் பணியிலுள்ள ஊடகவியலாளர்கள், துறைசார்ந்த கல்வியாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் 'புதிய ஊடக' செயற்பாட்டாளர்களின் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் சட்ட வல்லுனர் அசங்க வெலிகல தெரிவிக்கின்றார்.[46]

(2.8 இலுள்ள கலந்துரையாடல்களையும் பார்வையிடவும்)



Broadcasting needs technical level regulation to avoid chaos

44 http://www.bbc.co.uk/sinhala/news/story/2007/10/071029_fmm.shtml

45 http://en.rsf.org/sri-lanka-court-upholds-withdrawal-of-abc-s-02-11-2007,24177

46 Securing the Freedom of Expression in the New Sri Lanka: Essential Institutional Reforms, by Asanga Welikala. Groundviews.org 17 January 2015. http://groundviews.org/2015/01/17/securing-the-freedom-of-expression-in-the-new-sri-lanka-essential-institutional-reforms/

## 107 ஊடக பன்மைத்துவம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுங்குபடுத்தல் முறைமை

சுயாதீன ஒழுங்குபடுத்துநர் இல்லாத சூழ்நிலையில் ஊடக பன்மைத்துவம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுங்குபடுத்தல் முறைமை தோற்றுவிக்கப்படாது. இலங்கையில் ஊடக அமைச்சானது தற்சமயம் பல்வேறு விதமான வகிபாகங்களை மேற்கொள்கின்றது: கொள்கை வகுப்பு, ஒலி-ஒளிபரப்பு ஒழுங்கமைப்பாளர்,அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒலிபரப்பு நிலையங்களை (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஐ.ரீ.என்.) இயக்குதல் ஆகியனவே அவை.

பன்மைத்துவத்தை மேம்படுத்தக்கூடிய எவ்விதமான முறைசார்ந்த கடப்பாடுகளும் அமைச்சுக்கு இல்லை. சிவில் சமூகம் மேற்கொண்ட பரிந்துரைகளின் பிரகாரம், அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒலி-ஒளிபரப்பு நிலையங்களை உண்மையில் பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு நிலையங்களாக மாற்றவோ அல்லது நேர்மையான சமூக ஒலி -ஒளிபரப்பிற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பிலோ இதுவரை அரசாங்கம் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

### பரிந்துரை

- ஒலி-ஒளிபரப்புத் தொடர்பான பூரணத்துவமிக்க சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். இது ஏனைய விடயங்களுடன் ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பான சுயாதீன அமைப்பொன்றை உருவாக்குதல், சர்வதேச தராதரங்களுக்கேற்ப பாராளுமன்றம் மூலமாக இலங்கை மக்களுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய ஒலி-ஒளிபரப்பு ஒழுங்கமைப்புகளை மேற்கொள்தல் போன்றவற்றையும் உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும். இவ் அமைப்பானது வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும் பொறுப்புக் கூறக்கூடியதாகவும் செயற்படல் வேண்டுவதுடன், இது செயற்பட வேண்டிய தெளிவான கொள்கை வரையறையை சட்டம் எடுத்துரைத்தல் வேண்டும்.

“உலகில் மிக மோசமான சில ஊடக நடத்தைகள் இலங்கையில் இடம்பெறுவதாக நான் நம்புகின்றேன். உதாரணத்திற்கு, ஊடக உரிமைகளை எடுத்துக்கொண்டால், எமது அரசாங்கத்திற்கு பாரியளவிலான செய்திப் பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனத்தைக் கொண்டிருக்கிறது. அரசாங்கச் செய்திப்பத்திரிகை என எதனையும் நாம் அழைக்க முடியாது : அது உண்மையில் மக்களுக்குச் சொந்தமானதாகவிருத்தல் வேண்டும். எனவே, லேக் ஹவுஸ் நிறுவனம் அவசியம் விற்பனை செய்யப்படல் வேண்டும்”

“எமது ஊடகங்கள் அரசியல்வாதிகளுக்குப் பின்னாலேயே சென்று அவர்களைக் கடவுளாகக் கருதிச் செயற்படுகின்றன. அது பொதுமக்கள் நலனை மையமாகக் கொண்ட தகவல்கள் வெளியிடப்படுவதை அனுமதிப்பதில்லை. இந்த ஊடக நடத்தை நாடகங்களையே உருவாக்குகின்றன. ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களின்றி இன்று இலங்கையில் எவ்வித அரசியலும் இல்லை: அதேபோல் அரசியல் இல்லாமல் எவ்வித ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களும் இல்லை. இவை இரண்டும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து செயற்படுவதற்கு நாம் அனுமதித்துள்ளோம். ஒவ்வொருவரும் தமது குறுகிய கால சுயலாபத்தின் நிமித்தமே பணியாற்றுகின்றனர். ஒவ்வொருவரும் தமது தொழிலைப் பாதுகாத்துக்கொள்ளவே முற்படுகின்றனர். இப்பண்பாட்டை நாம் மாற்ற வேண்டும்”

“இலங்கையைப் பொறுத்தவரையில், பல ஊடக நிறுவனங்களுக்கு இலாபம் கூட ஒரு முக்கியமான விடயமல்ல என்று நான் கருதுகிறேன். ஏனைய நன்மைகளைக் கருத்திற்கொண்டு அவர்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். எனவே, பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதோ அவர்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதோ இந்த ஊடகங்களுக்கு முக்கியமல்ல. சில ஆக்கங்களை ஏதே ஒருவிதத்தில் ஒன்றுசேர்த்து வெளியிடுகின்றனர். பிரதி செய்வதுகூட (வடிவங்கள் மற்றும் சிந்தனைகள்) சரிவரச் செய்யப்படுவதில்லை”

“எனது பார்வையின்படி, எமது ஊடகங்களைத் பாதிக்கின்ற கட்டமைப்புச் சார்ந்த விடயங்களை மறுசீரமைப்புச் செய்து அவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென நான் கருதுகின்றேன். ஊடக ஒழுக்கநெறி போன்ற ஏனைய முக்கிய விடயங்கள் அடுத்து வரலாம். கேக் இல்லாமல் வெறுமனே ஐசிங்கை மாத்திரம் பேசுவதில் எப்பயனும் இல்லை. ஆர்.கே.டபிள்யு. குணசேகர அறிக்கை (1997), சிதத் நந்தலோச்சன அறிக்கை (1997) ஆகியவற்றைக் கொண்டு ஆரம்பிக்கலாம்”

- கலாநிதி ரொஹான் சமரஜீவ,
தொடர்பாடல் கல்வியாளர், முன்னாள் பணிப்பாளர் நாயகம் - TRCSL, ஸ்தாபகத் தலைவர் - LIRNEasia ஆராய்ச்சி அமைப்பு

# ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான கட்டுப்பாடுகள்

தனிநபர்களது நற்பெயருக்கு போலியான குற்றச்சாட்டுகளினால் ஏற்படும் களங்கத்திலிருந்து அவர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே அவதூறுச்சட்டங்கள் காணப்படுகின்றன. இருப்பினும், ஊடகப் பரிந்துரைக் குழு 'ஆர்ட்டிகல் 19", பல நாடுகளில் அவதூறுச் சட்டமானது "தேவையற்ற மற்றும் நியாயபூர்வமற்ற பரந்த கட்டுப்பாடுகளை கருத்துச் சுதந்திரம் மீது ஏற்படுத்துகிறது" [47] எனக் குறிப்பிடுகிறது.

'ஆர்ட்டிகல் 19' கூறுவதன் பிரகாரம், அவதூறுச் சட்டங்களானவை அவற்றின் வரைவிலக்கணம் தொடர்பில் மிகவும் பரந்ததாகக் காணப்படுகின்றன : போதியளவு சட்ட ரீதியான பாதுகாப்புகளை வழங்கவில்லை, இதற்கெதிராகப் போராடுபவர் அதிக செலவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது, அல்லது இதனை மீறுபவர்களுக்கு குற்றவியல் ரீதியான தண்டனைகள் அல்லது அதிகளவு தண்டப்பணம் போன்ற மிக அதிகமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. சிறந்த அவதூறுச் சட்டமானது, தனிப்பட்ட நபர்களது நற்பெயரைப் பாதுகாத்தல் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கிடையில் ஆரோக்கியமான சமநிலையைப் பேணுவதாகவிருத்தல் வேண்டும்.

அவதூறு ஒரு சிவில் விடயமாகக் கையாளப்படுவதான போக்குகள் உலகளாவிய ரீதியில் காணப்படும் போதிலும், குற்றவியல் அவதூறுச் சட்டங்கள் கடுமையானவையாக

47 Article 19 (2006). Defamation ABC: A Simple Introduction to Key Concepts of Defamation Law. Article 19. London. https://www.article19.org/data/files/pdfs/tools/defamation-abc.pdf

உள்ள அதேவேளை, கருத்துச் சுதந்திரம் மீது பொருத்தமற்ற கடும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. ஐ.நா. மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான அமைப்பு (OSEC) ஆகியன அவதூறினை குற்றவியலற்றதாக மாற்ற வேண்டுமென்ற பரிந்துரைகளை மேற்கொண்டு வருகின்றன.[48]

2002ஆம் ஆண்டில், தென்னாசியாவில் அவதூறினை குற்றவியலற்றதாக மாற்ற வேண்டுமென்ற முதல் முன்னெடுப்புகளை இலங்கை மேற்கொண்டது[49]

## 108 ஊடகம் மீது முறையற்ற சட்டக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் பிரயோகிக்காத நிலை

ஊடகவியலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்வதற்கு முன்னர், தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டுமென எவ்வகையான சட்டமோ அல்லது ஒழுங்குவிதிகளோ இருக்கவில்லை. இருப்பினும், பத்திரிகை ஆசிரியர்கள் அச்சக ஊடகங்கள் கட்டளைச்சட்டத்தின் (1902 இல் உருவாக்கப்பட்டது) கீழ் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும். பத்திரிகை ஆசிரியர்கள் மீது இவ்விதமான நடவடிக்கைகள் வேறு எங்கும் பிரயோகிக்கப்படாத நிலையில், இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானதாகும்.

சட்ட ரீதியான தேவையாக காணப்படாதபோதிலும் கூட, ஊடக அமைச்சின் கீழ் வருகின்ற தகவல் திணைக்களம், ஊடக அடையாள அட்டை என்ற பெயரில் ஒரு வகையான நிர்வாக ஏற்பாடாக, சான்றிதழ் ஒன்றை விநியோகிக்கின்றது. இச்சான்றிதழை வைத்திருப்பவர் அதனை ஓர் அடையாளச்சான்றாகப் பயன்படுத்தி உத்தியோகபூர்வமான ஊடகவியலாளர் மாநாடுகளிலும் அரச விழாக்களிலும் பங்குபற்றமுடியும். வெளிநாட்டிலிருந்து விஜயம் செய்கின்ற ஊடகவியலாளர்களும் ஒரு தற்காலிக அடையாளச்சான்றிதழுக்கு வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன் விண்ணப்பிக்க முடியும்.[50] இச்சான்றிதழை விநியோகிப்பது தொடர்பில் குறிப்பிட்ட நடைமுறையொன்று காணப்படும்போதிலும், தகவல் திணைக்களமானது

48 https://www.article19.org/pages/en/defamation-more.html

49 http://www.sundaytimes.lk/151004/news/lankas-efforts-to-be-rid-of-criminal-defamation-lauded-by-indian-editor-166701.html

50 http://www.dgi.gov.lk/divisions/media-accreditation-unit

தனது தற்துணிபு அதிகாரங்களையே விண்ணப்பங்கள் தொடர்பில் பிரயோகிக்கின்றது. கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைத்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கு இந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை திணைக்களம் சில சமயங்களில் மறுத்ததும் உண்டு.

வரலாற்று ரீதியாக நோக்குகையில், செய்தித் தாள்களும் ஏனைய சஞ்சிகைகளும் தபால் திணைக்களத்திலேயே தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் (இதனால் பிரதிகளை தபால் மூலம் அனுப்பும்போது விலைச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்). அத்தோடு, தேசிய ஆவணக் காப்பகத்திலும் தம்மைப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும். தேசிய ஆவணக் காப்பகத்தின் பணிப்பாளர், புத்தகங்களினதும் செய்தித்தாள்களினதும் பதிவாளராகவும் செயற்பட்டார்.[51]

1970 ஆம் ஆண்டு முதல், இலங்கை பத்திரிகை நிறுவனமானது பதிவுசெய்துகொள்வதற்காகவும், பதிப்பாளர் மற்றும் ஆசிரியரின் விபரங்களை பூரணப்படுத்துவதற்காகவும் அச்சிடப்பட்ட பருவ இதழ்ககளைக் கோரியது. அதன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், ஒரு புதிய செய்திப்பத்திரிகையை அல்லது சஞ்சிகையை ஆரம்பிக்க, இவ்வித பதிவுகள் கட்டாயமற்றவை எனக் குறிப்பிடப்பட்ட போதிலும், பதிவினைச் செய்துகொள்ள முற்படுகின்றபோது ஆவணரீதியான பல்வேறுவிதமான தகவல்களையும் தமது பதிப்பின் மூன்று முதற்பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.[52]

சர்வதேச சட்டத்தின் பிரகாரம், பத்திரிகைகளைப் பதிவுசெய்துகொள்ளும் விடயமானது பதிவுகளுக்கு மறுக்கும் பட்சத்தில் செயற்பாட்டுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற ஒரேயொரு சட்டமுறைமையுடன் சந்தேகக் கண்ணுடனேயே நோக்கப்படுகிறது அல்லது செய்திப்பத்திரிகையை இயக்குவதற்கு கணிசமான தடைகள் விதிக்கப்படுகின்றன. ஊடகங்களை மேற்பார்வை செய்து கண்காணித்து வருகின்ற செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் இவ்விதமான பதிவுகளை எதற்காக மேற்கொள்ள வேண்டுமென்பதில் தெளிவில்லாமலுள்ளது.

51 http://www.archives.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=227&Itemid=158&lang=en

52 http://www.slpc.lk/news-paper-registrations.html

## 109 தனிநபர் ஒருவரது நற்பெயரைப் பாதுகாப்பதற்கு அவசியமான குறுகிய கட்டுப்பாடுகளையே அவதூறுச்சட்டங்கள் பிரயோகிக்கின்றன

அரச தலைவருக்கு மற்றும்/அல்லது அரசாங்க அமைச்சர்களுக்கு சிக்கலானதாக ஊடக உள்ளடக்கங்கள் காணப்படும்பட்சத்தில் குற்றவியல் அவதூறுச் சட்டங்களின் கீழ் நடவடிக்கைகளை பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக ஆட்சிசெய்த அரசாங்கங்கள் மேற்கொண்டன. இதன் நிமித்தம், இவர்கள் அரச வளங்களைப் பயன்படுத்தினர் (உதாரணம் : சட்டமா அதிபர் திணைக்களம்). 1980 மற்றும் 1990 காலப்பகுதியில் இவ்வாறு பல்வேறு விதமான வழக்குகள் தொடரப்பட்டதன் காரணமாக இந்த குற்றவியல் அவதூறுச்சட்டங்களை அகற்றும்படி ஊடக உரிமைக் குழுக்கள் பிரச்சாரங்களை மேற்கொண்டுவந்தன.

குறிப்பாக, அவதூற்றை குற்றவியல் குற்றமாகக் கருதி சிறைவாசம் அனுப்ப முடியுமான, தண்டனைச் சட்டக்கோவையில் காணப்படுகின்ற 479 ஆம் பிரிவை அகற்றும்படி அவர்கள் கோரிக்கைவிடுத்தனர். 1998 ஏப்ரலில், இலங்கையின் பல ஊடக அமைப்புகளும் சர்வதேச பரிந்துரைக் குழுக்களும் கலந்துகொண்டதொரு சர்வதேச கருத்தரங்கின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புகள் தொடர்பான கொழும்பு பிரகடனத்தின் முதன்மை விடயமாக இது காணப்பட்டது.

இறுதியில், தொடர்புடைய பத்திரிகைச் சபைச்சட்ட விதிகளுடன், 2002 ஜூனில் தண்டனைச் சட்டக்கோவையின் 479 ஆம் பிரிவு அகற்றப்பட்டது.

சுய ஒழுங்குபடுத்தலை நிறுவனமயப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்கள் அமைப்புகள் விரைவிலேயே ஒன்றுகூடி, தன்னார்வ பொறிமுறையான, பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினை (Press Complaints Commission of Sri Lanka - PCCSL) நிறுவினர். 2003 ஒக்டோபரில் இது தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது (3.7 இன் கீழுள்ள விபரங்களைப் பார்வையிடவும்).

ஊடகத்தில் வெளிவந்த ஆக்கமொன்றின் மூலம் தனது நற்பெயர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதென தனி நபர் அல்லது ஓர் அமைப்பு கருதும்பட்சத்தில் சிவில் அவதூறுச் சட்டத்தின் கீழ் சட்டப் பரிகாரங்களை நாட முடியும் என்பது தொடர்ந்தும் ஒரு தெரிவாக இருந்தது. அவ்வித ஆக்கங்கள் ‘தீயநோக்கத்துடன்’ இடம்பெற்றுள்ளன என்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில் சிவில் அவதூறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இருப்பினும், நீதியை வழங்குவதில் ஏற்படுகின்ற அசாதாரண காலதாமதங்களின் காரணமாக சட்டத்தின் இப்பகுதி நடைமுறையில் அநேகமாக, முழுமையாக இது அர்த்தமற்றதாக மாறிவருகிறது.

சட்டவாக்கமாக இல்லாது, வழக்காறுகளையும் நீதிமன்றத் தீர்ப்புகளையும் முன்மாதிரியாகக் கொண்ட ஆங்கிலச் சட்டத்தின் ஒரு பகுதியான, பொதுச் சட்டத்தின் கீழேயே சிவில் அவதூறுச் சட்டங்கள் வருகின்றன. எனவே, சிவில் அவதூறுச் சட்டங்கள் என எவையும் சட்டப் புத்தகங்களில் இல்லை.

ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில், குற்றவியல் அவதூறுச் சட்டத்தினைப் போல் இது கடுமையானதாக இல்லாத போதிலும், தீவிரமான ஊடகங்கள் மீது சில அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள், வியாபாரிகள் போன்றோர் இதன் கீழ் சிவில் வழக்குகளை தொடர்ந்து, சில நேரங்களில் பாரியளவு பணம் ‘நட்டஈடாகக்’ கோரப்படுவதும் உண்டு.[53]

[53] https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka

## பரிந்துரை

- சர்வதேச மற்றும் அரசியலமைப்பு தராதரங்களுக்கு ஏற்ப சிவில் அவதூறு தொடர்பான ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு ஏற்ற விதத்தில் சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். இச்சட்டத்தில், ஏனைய விடயங்களுடன், அரச அதிகாரிகள் தமது சொந்தப் பெயரில் அவதூறுச்சட்டங்களைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்கள் இருத்தல் கூடாது. சாதாரண மக்களை விட பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் பண்பு இருத்தல் வேண்டும். அவதூறான விடயங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய பொறிமுறைகள் உள்ளன. எனவே, இழைக்கப்பட்ட குற்றத்திற்கு அளவாகவே அல்லது ஏற்ற விதத்திலேயே இவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

110 தேசிய பாதுகாப்பு, வெறுப்பூட்டும் பேச்சுகள், அந்தரங்கத் தன்மை, நீதிமன்ற அவதூறுச் சட்டங்கள், ஆபாசம் ஆகியன தொடர்பில் கருத்துச் சுதந்திரம் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தெளிவாகவும் சர்வதேச சட்டங்களுக்கமைவாக ஜனநாயக சமூகமொன்றுக்கு ஏற்ற விதத்தில் நியாயப்படுத்தக் கூடியவாறும் சட்டவரையறை செய்தல்

நீதிமன்றத்தை அவமதித்தல்

ஊடகவியலாளர்கள் அவ்வப்போது நீதிமன்ற அவதூறு தொடர்பான வழக்குகளை எதிர்கொள்கின்றனர். நீதிமன்ற அவமதிப்பு தொடர்பிலான சட்டத்திலும், நீதித்துறை சார் பொருட்கோடல்களிலும் குறிப்பிடக் கூடியளவு கருத்துமயக்கம் காணப்படுகிறது. சட்ட ஆய்வாளர்களான கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன மற்றும் கெஹான் குணதிலக்க ஆகியோர் இது பற்றி எழுதுகையில் "ஊடகத்தை பயமுறுத்துகின்ற நீதித்துறை சார்ந்த போக்குகள் மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பிலான முக்கிய விடயங்கள் தொடர்பில் அறிக்கையிடுவதில் காணப்படுகின்ற தடைகள்"[54] எனக் குறிப்பிடுகின்றனர். இதுவே கவனம் செலுத்த வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது.

கொழும்பு பிரகடனத்தின் (2008 இல் மீளாய்வு செய்யப்பட்டது) 4 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வாறு காணப்படுகிறது : "1981 ஆம் ஆண்டின் ஐக்கிய இராச்சிய நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் பிரகாரமும், 1971 ஆம் ஆண்டின் இந்திய நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் பிரகாரமும் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் எல்லைகள் மற்றும் உப-நீதி விதிமுறைகள் ஆகியவற்றின் குறிப்பான வரைவிலக்கணத்துடன், உறுதியான, செயன்முறைச் சட்டம்சார் கவனம் செலுத்தலுடன் அவற்றைத் தெளிவுபடுத்துவதற்கு ஏற்ற விதத்திலேயே நீதிமன்ற அவமதிப்புச் சட்டங்கள் இருத்தல் வேண்டும். நீதிமன்ற அவமதிப்பு என்றால் என்னவென்பதை திட்டவட்டமாக இவை எடுத்துரைத்தல் வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புகள் தொடர்பில் நியாயபூர்வமான விமர்சனங்களை முன்வைப்பதற்கும், நீதித்துறை சார் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் அவை நிலுவையில் உள்ள பொழுதும் அவை தொடர்பில் தெரிவிக்கின்ற கருத்துக்கள் நீதிமன்றத்தையோ, அதன் நிர்வாகத்தையோ அவமதித்ததாகக் கருதுதல் கூடாது என்பதைக் கருத்திற்கொண்டும், இவை தொடர்பான வரைவிலக்கணங்கள் திட்டவட்டமாக உருவாக்கப்படல் வேண்டும். தகவல்மூலங்களின் இரகசியத்தன்மை தொடர்பான விடயங்களுக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடியதாகவும், நீதிமன்ற அவமதிப்பு உண்மையென நிரூபிக்கப்படும் பட்சத்தில் விதிக்கக்கூடிய ஆகக்கூடிய தண்டனை பற்றியும் இங்கு எடுத்துரைத்தல் வேண்டும்".

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பில் இலங்கையில் ஒழுங்காக முறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் எதுவும் இல்லை. இருப்பினும், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட விசேட குழுவொன்றின் மூலம் நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான சட்டத்தின் நகல் வரைவொன்று தயாரிக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஒரு வழக்குத் தொடர்பில் நியாயபூர்வமான

54 In Media Law Reform Examined, by Kishali Pinto-Jayawardena and Gehan Gunatilleke, in Embattled Media Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 199-203

கருத்தை வெளியிடுகின்றபோது அதனை நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதக்கூடாது, அந்த வழக்கு விசாரணையிலிருந்து அது தொடர்பான தீர்ப்பு இறுதியில் வழங்கப்படலாம். இருப்பினும், சட்டத்தின் தன்மைகள் பற்றியும், பொது முக்கியத்துவம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் நியாயபூர்வமான முறையில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றபோது அவற்றை நீதிமன்ற அவதூறாக கருத்திற்கொள்ளக் கூடாது என, அந்த நகல் வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றில் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன நீதிமன்ற அவதூறு தொடர்பிலான நகல் வரைபுத் திட்டங்களை, காலஞ்சென்ற அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை தாங்கிய அவதூறு தொடர்பிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு 2003 இல் சமர்ப்பித்தன. இருப்பினும், அத்தெரிவுக்குழு தனது பணிகளை நிறைவுசெய்வதற்கு முன்னரேயே அப்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.[55]

பாராளுமன்றச் சிறப்புரிமைகள்

பாராளுமன்றச் சிறப்புரிமைகள் சட்டமானது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு சட்டமாகும். பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டம் (1953 இன் 21 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் திருத்தங்கள்), சிறப்புரிமைகள் மீறப்படும்போது அவற்றுக்கு எதிராக செயற்படும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்திற்கு வழங்குகிறது.[56] கடந்த காலங்களில், சில பத்திரிகை ஆசிரியர்களைத் தண்டிப்பதற்குப் பாராளுமன்றமானது தனது நீதித்துறையை ஒத்த அதிகாரங்களைப் பிரயோகித்தது. பாராளுமன்றத்திடம் காணப்பட்ட அத்தகைய அதிகாரங்கள் 1997 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட போதிலும் கூட, சட்டத்தில் தொடர்ந்திருக்கும் ஏனைய ஏற்பாடுகள், பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்களைக் கவலைகொள்ளவே வைக்கின்றன.

பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை வழங்குகின்ற அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கானதொரு அடித்தளமாகக் காணப்படுவதோடு, சர்வதேச சட்டங்களின் கீழ் இலங்கைக்கு உரித்தாயுள்ள கடப்பாடுகளுக்கு முழுமையாக முரணாக அவை திகழ்கின்றன என, பாராளுமன்றச் சிறப்புரிமைகள் தொடர்பில் ஆர்.கே.டபிள்யு. குணசேகர குழு தனது முடிவுரையில் குறிப்பிடுகிறது.

கொழும்பு பிரகடனத்தின் (2008), 1.3 ஆம் பிரிவில் - பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் "பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

55 http://www.sundaytimes.lk/060226/news/12.html

56 http://www.parliament.lk/files/pdf/powers_privileges.pdf

அவசியமற்ற சிறப்புரிமைகளை வழங்குவதனாலும் பேச்சுச் சுதந்திரம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியன பற்றிய நவீன உலகின் தராதரங்களை அவை பிரதிபலிக்கவில்லை என்பதனாலும்" அகற்றப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டம் (1953), அதன் ஆரம்ப நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்படல் வேண்டும் மற்றும் பின்னாட்களில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் குறிப்பாக அகற்றப்படவும் வேண்டும் எனவும் அப்பிரகடனம் கூறுகிறது.

அதேவேளை, மேற்குறித்தவையுடன் முழுமையாக ஒத்திசைவதாக, பாராளுமன்ற உறுப்பினர்களது பேச்சுச் சுதந்திரத்தைத் தொடரவேண்டிய அவசியம் காணப்படுவதும் உண்மையானதாகும் : ஆனால், அது மறுசீரமைக்கப்பட்ட முறையொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அவதூறு நடவடிக்கைகளில் ஒரு பாதுகாப்புநிலையாகவும் அமையவேண்டும். சிவில் சுமைகளிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதாகவும், அரசாங்கங்களும் அதிகாரம்படைத்த ஆதாயம் தேடும் தனியார்களும் கோபமூட்டுவதற்காக வழக்குத் தொடுப்பதிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதாகவும், இதன் காரணமாக பாராளுமன்றத்தில் பொதுமக்கள் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை எவ்வித அச்சமுமின்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றக்கூடியதாகவிருக்கும் விதத்திலும் - நவீன ஜனநாயக உலகில் இந்த சிறப்புரிமையானது பாராளுமன்றத்தை வலுப்படுத்துவது தொடர்பில் செயற்படுகின்றது. இவ்விதமான கலந்துரையாடல்களின்போது மற்றவர்களின் நற்பெயருக்கு பாதகம் ஏற்படக் கூடிய விதத்தில் ஊடகங்கள் உட்பட ஏனைய செயற்பாட்டாளர்கள் நடந்துகொள்ளும்பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சிவில் அவதூறுச் சட்டத்தை பிரயோகிக்கக் கூடிய பொறுப்பும் உள்ளது.

இயல்தகைமையில், அது முழுமையான தடுப்புமுறையாக இல்லாதுவிடினும், துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் முகமாக இந்த முக்கிய சிறப்புரிமை எல்லைப்படுத்தப்படல் வேண்டும். சட்டவாக்கத்தின் சுயாதீனத்தில் பொதுமக்களது நலன் மற்றும் தனிநபர் நற்பெயருடனான சுதந்திரம் ஆகியவற்றைச் சமநிலையில் பேணக்கூடிய விதத்தில் பல்வேறு பொதுநலவாய நாடுகளிலிருந்து வேறுபட்ட மாதிரிகளைப் பின்பற்றமுடியும்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம் தொடர்பான இலங்கையின் சட்ட வரைவுச்சட்டகமானது ஏனைய சில சட்டங்களினாலும் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக :

- தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆம்

உறுப்புரை: அரசாங்கத்திற்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடையதாக இது காணப்படுகிறது. நாட்டின் ஜனாதிபதி, தேசிய அரசாங்கம், நீதித்துறை நிர்வாகம், 'மாறுபட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்கள்' ஆகியோருக்கு எதிராக தீய நோக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் 'செயல்கள் அல்லது அதற்கான முயற்சிகள்' ஆகியவற்றை மேற்கொள்ளும்போது அதனைக் குற்றவியல் குற்றமொன்றாகக் கருதி, 2 வருட சிறைதண்டனை விதிக்க முடியும். இச்சட்டமானது, தேசத்துரோகச் சட்டத்தின் ஒரு வடிவமாகக் இது கருதப்படுவதுடன், சர்வதேச சட்டங்களின் பிரகாரம் முரணான விடயமாக கருதப்படுகிறது.

- பொது அளிக்கைக் கட்டளைச்சட்டம் (1912 இன் 7 ஆம் இலக்கம்): ஏதாவது நாடகம் அல்லது திரைப்படம் அல்லது விடியோ போன்றன பொதுமக்கள் மத்தியில் காட்டப்படுவதற்கு முன்னர் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பொது அளிக்கைச் சபையின **(Public Performance Board – PPB)** முன்னனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். யுத்த காலத்தின்போதும், அதற்குப் பின்னரும் சமூகக் கூருணர்வு, சமூக விமர்சனங்கள் மிக்க திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டபோது அவை கடும் தணிக்கைக்குட்படுத்தப்பட்டன அல்லது தடைசெய்யப்பட்டன.

ஆய்வாளர் சுமதி சிவமோகன், 2014 இல் குறிப்பிட்டதன் பிரகாரம், தேசம் பற்றிய மீள்சிந்தனைக்கான வெளிகளை அடிப்படையாகக் கொண்டு ஆக்கங்களை உருவாக்கிய பிரசன்ன விதானகே, விமுக்தி ஜயசுந்தர, சஞ்சீவ புஷ்பகுமார மற்றும் அசோக்கா ஹந்தகம போன்றவர்கள் பல சந்தரப்பங்களிலும், தமது திரைப்படங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட தீவிர வலதுசாரி விமர்சனங்களால், பொது அளிக்கைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அரச தணிக்கையைச் எதிர்கொள்ளநேர்ந்தது.[57]

மேற்குறிப்பிடப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கமைப்பு தொடர்பான கட்டுப்பாடுகளை, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களின் அறிவுப்புலத்தைச் சென்றடையாத ஊழல், உறவினர்களுக்குக் காட்டப்படும் சலுகை, நண்பர்களுக்குக் காட்டப்படும் சலுகை போன்ற விடயங்கள் போன்று, பகிரங்க விவாதத்திற்கு உட்படுத்துவது அவசியமாகும்.

57 Surveillance and Survival. By Sumathy Sivamohan. Frontline, 14 February 2014. http://www.frontline.in/arts-and-culture/cinema/surveillance-and-survival/article5652190.ece

BOX 03

## ஊடகங்களைப் பாதிக்கின்ற ஏனைய சட்டங்கள்

ஊடகச் செயற்பாடுகளை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ பாதிக்கின்ற பல்வேறு விதமான சட்டங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில பிரித்தானிய ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து வருகின்றன.

- செய்தப்பத்திரிகை கட்டளைச்சட்டம் - 1839 இன் 5 ஆம் இலக்கம்
- 1885 இன் 1 ஆம் இலக்க அச்சகதாரர் மற்றும் வெளியீட்டாளர் தொடர்பான கட்டளைச்சட்டம்
- 1902 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அச்சக, ஊடகக் கட்டளைச்சட்டம்
- 1927 இன் 4 ஆம் இலக்க ஆபாச வெளியீடுகள் தொடர்பான கட்டளைச்சட்டம்
- 1958 இன் 41 ஆம் இலக்க தெய்வநிந்தனை வெளியீடுகள் சட்டம்
- 1973 இன் 48 ஆம் இலக்க தேசிய ஆவணக்காப்பகச் சட்டம்
- 1979 ஆம் ஆண்டின் புலமைச் சொத்துச் சட்டம்.

இவற்றுக்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான தண்டனைச் சட்ட ஏற்பாடுகள் (பிரிவு 118, 120), பொதுமக்களது ஒழுக்கம், நடத்தை அல்லது சமய நல்லிணக்கங்களைப் பாதிக்கின்ற குற்றங்கள் தொடர்பான சட்டம் (பிரிவுகள் 285 முதல் 287 வரை மற்றும் 291 அ மற்றும் ஆ) போன்றனவும் ஊடகங்களுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

மூலம் : ஷெல்டன் ஏ குணரத்ன மற்றும் சானுக்க வத்தேகம, ஆசியாவில் ஊடகம் தொடர்பான கையேடு - இலங்கை அத்தியாயம், (சேஜ் பப்ளிகேஷன்ஸ், 2000) பக்கம் 182 முதல் 216 வரை.

## பரிந்துரைகள்

- தீர்ப்புகள், நீதித்துறை சார் நடத்தைகள், நீதிமன்றச் செயன்முறைகள் ஆகியன தொடர்பில் நியாயபூர்வமான விமர்சனத்திற்கு அனுமதிக்கின்ற, முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட, தாராளத் தன்மையுடைய நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவற்றுள் தற்பொழுது நடைபெறுகின்ற வழக்கொன்று தொடர்பில் முன்வைக்கின்ற விமர்சனமானது, தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தாத அல்லது அவ்வித கருத்துக்கள் குறிப்பிட்ட அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையிலோ இருக்கின்ற விமர்சனங்களை அனுமதித்தல் ஆகியனவும் இவற்றுள் உள்ளடங்கும்.

- பாராளுமன்றம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற அதிகாரிகள் ஆகியோரை விமர்சித்தமைக்காக அவர்கள் மீது தடைகளை விதிக்கின்ற அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இருத்தல் கூடாது. பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் உள்ளடங்கலாக, பொதுமக்கள் நலனைக் கருதி தகவல்களை வெளியிடுவதற்கான உரிமை சட்டத்தின் மூலம் முழுமையாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

# எ

## தணிக்கை

- தேசத்துரோகத்துடன் தொடர்புடைய தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவு அகற்றப்படல் வேண்டும். ஏற்கனவே அமுலில் இருக்கின்ற குற்றங்களைத் தூண்டுவதுடன் தொடர்புடைய சட்டங்கள், தேசத்துரோகத்துடன் தொடர்புடைய சட்டத்தால் கவனிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல்கள் தொடர்பில் செயற்படுவதற்குப் போதுமானதாகும்.

- கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துகின்ற ஏனைய சட்டங்களும் விதிகளும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். அவசியமாயின், கருத்துச் சுதந்திரம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சர்வதேச உத்தரவாதங்கள் மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப இவை திருத்தப்படல் வேண்டும்.

செய்திகள் அழியக்கூடிய பொருட்களாகும்: செய்தி ஊடகங்கள் மூலம் அவற்றை வெளியிடுவதற்கு தாமதங்கள் ஏற்படுகின்றபோது அதனால் சுதந்திரக் கருத்து வெளிப்பாட்டுக்கு கடுமையான இகழ்ச்சி ஏற்படுகிறது.

மிகவும் தவிர்க்க முடியாத விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே முன்கூட்டிய தணிக்கைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச சட்டங்கள் அனுமதிக்கின்றன. பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே கருத்துச் சுதந்திரம் மீது எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியும். இவை தொடர்பில் மிகக்குறைந்த சந்தர்ப்பங்களைத் தரும் வண்ணம் வரைவிலக்கணம் மேற்கொள்ளப்படுவதுடன், நலன்களைப் பாதுகாப்பதற்கும் கருத்துச் சுதந்திரம் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் பொருத்தமான விகிதம் பேணப்பட வேண்டும்.

சுதந்திரக் கருத்து வெளிப்பாடுகள் தொடர்பில் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றில் கையொப்பமிட்ட சில நாடுகள், தமது சொந்தச் சட்டங்கள் அல்லது அரசியலமைப்பு ஆகியவற்றுக்கு முரணாக முன்கூட்டிய தணிக்கைகளைத் தொடர்ச்சியாக விதித்து வருகின்றன.

எல்லைகளைத் தீர்மானிப்பது தொடர்பில் அதிகளவிலான தற்துணிபை அதனைப் பயன்படுத்த முனைவோர் பிரயோகிப்பதால், ஆகப் பரந்த அல்லது முறையாக வடிவமைக்கப்படாத சட்டங்கள் பேச்சுச் சுதந்திரத்திற்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, பொது ஒழுங்கு, நல்லொழுக்கம் அல்லது பாதுகாப்பு அல்லது வெளிநாடுகளுடனான உறவுகளில் பாதிப்பினை ஏற்படுத்துமெனக் கருதப்படுகின்ற வெளியீடுகள் அல்லது ஒலிபரப்புகள் தொடர்பில் தடைகள் விதிக்கப்படுகின்றபோது, இவை தொடர்பிலான பொருட்கோடல்கள் பலவாறும் அமையும் சிக்கல் ஏற்படுகின்றது.

ஊடகங்கள் மீது விதிக்கப்படும் அதிகளவிலான தண்டப்பணம் மற்றும் அவற்றை மூடிவிடுதல் அல்லது மூடிவிடுவதென விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றின் காரணமாக பல ஊடகங்கள் தமக்குத்தாமே சுயதணிக்கையை ஏற்படுத்தும் சூழல் உருவாகின்றது. இது கருத்துச் சுதந்திரத்தை தாமாகவே மீறும் நடவடிக்கையாகும். இதற்கு முரணாக, ஊடக சுய ஒழுங்கமைப்பு தொடர்பிலான வினைத்திறன் மிக்க முறையொன்று காணப்படும்பட்சத்தில் தேவையற்ற அரச தலையீடுகளை அது தவிர்க்கக் கூடியதாகவிருக்கும் (ஊடக சுய ஒழுங்கமைப்பு தொடர்பான 3.7 மற்றும் 3.8 ஆம் பிரிவுகளையும் பார்வையிடவும்).



Censorship - by Eric Drooker

## 1 சட்டத்திலும் நடைமுறையிலும் ஊடகங்கள் மீது முன்கூட்டிய தணிக்கை இல்லாதிருத்தல்.

இலங்கையில் சிவில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில், தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான சகல விடயங்களும் பல வருடங்களாக முன்கூட்டிய தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன (ஒன்றுக்கு மேற்பட்ட அரசாங்கங்கள் இதனை மேற்கொண்டன). அவசரகாலச் சட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்பட்டது (2011 ஓகஸ்டில் இது காலாவதியானது). தணிக்கை தொடர்பான விதிமுறைகள் பெரும்பாலும் தான்தோன்றித்தனம் மிக்கதாகவும் அளவுக்கு அதிமானதாகவும் காணப்பட்டதாக ஊடக அமைப்புகள் கருதின.

2006 இல், ‘தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான விடயங்கள்’ தொடர்பில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பிற்கான ஊடக நிலையத்தினால் (MCNS) உத்தியோகப்பற்றற்ற பதிப்பிற்கு முன்னரான தணிக்கை விதிக்கப்பட்டது. இவ் விடயங்கள் தொடர்பில், ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் அனைத்துக் கருத்துக்களையும் அறிவிக்கும் அதிகாரமிக்க அமைப்பாக இது காணப்பட்டது. எவ்வாறிருப்பினும் 2013 ஆம் ஆண்டில் இந்நிலையம் கலைக்கப்பட்டது[58]

இலங்கையில் பல வருடங்களாக முறைசார்ந்த முன்கூட்டிய தணிக்கைகள் காணப்படவில்லை. இருப்பினும், 2015 வரை காணப்பட்ட நட்பற்ற, பாதகமான சூழலின் காரணமாக பல ஊடக அமைப்புகளும் ஊடகவியலாளர்களும் தமக்குத்தாமே சுய தணிக்கையினை விதித்துக்கொண்டனர்.

58 Freedom of the Press 2014 Report on Sri Lanka. Freedom House. https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka#.VUhQvfDkqSo

“ஊடக சுதந்திரத்திற்காக நாம் அவசியம் தொடர்ச்சியாகப் போராடவேண்டியுள்ளது. இது தொடர்ந்திருக்கும் ஒரு பிரச்சினை. ஒரு ஊடக நிறுவனத்துக்கு அல்லது ஒரு ஊடகவியலாளருக்கு எதிராக ஒரு அச்சுறுத்தலோ, தாக்குதலோ நாம் இப்போது காத்திருக்கிறோம். இது நிச்சயம் மாற்றப்படவேண்டும்.”

- விஜித யாப்பா, நிறுவன ஆசிரியர்
- ‘த ஐலண்ட்’. ‘சண்டே ஐலண்ட்’, ‘சண்டே ரைம்ஸ்’

## பரிந்துரை

- ஊடகங்கள் மீது முன்கூட்டிய தணிக்கை விதிக்கப்படக்கூடாது. அவசியம் எழும்போது, நீதிமன்றம் அவசர நடவடிக்கையாக, ஊடக உள்ளடக்கத்தின் சட்டரீதியான தன்மையை பிரசுரத்திற்குப் பின்னர் பரிசீலனை செய்யலாம். தணிக்கையை அனுமதிக்கும் பொது அளிக்கைக் கட்டளைச்சட்டம் உள்ளடங்கலான சட்டங்களும் ஒழுங்குநெறிகளும் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப, மீள்பரிசீலனை செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.12 உணர்ச்சி மற்றும் தீங்கு விளைவிக்கும் என்பதன்பேரில் இணைய உள்ளடக்கங்களை தடை அல்லது வடிகட்ட அரசு முயற்சிக்காதிருத்தல்

இலங்கையில் இணையத்தளத்தை முடக்கும் ஆவணப்படுத்தப்பட்ட செயற்பாடு முதன்முதலில் 2007 இல் இடம்பெற்றது. அது அதிக அளவில் பார்வையிடப்பட்ட இணையத்தளங்களில் ஒன்றும், இலங்கைச் செய்திகளுக்காக நன்கு அறியப்பட்டதுமான தமிழ்நெற் செய்தித்தளம் இவ்வகையில் முடக்கப்பட்டது. www. tamilnet.com எனப்படும் முகவரியில் இயங்கியதும், இலங்கைக்கு வெளியிலிருந்து நிர்வகிக்கப்பட்டதுமான இந்த இணையத்தளம், அரச ‘உயர் மட்டத்தினரின்’ பணிப்புரைக்கு அமையச் செயற்படும் அனைத்து இணையசேவை வழங்குநர்களாலும் தடைசெய்யப்பட்டது. எழுத்துமூலமான கட்டளையோ, அறிவித்தலோ, உத்தரவோ இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை, உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக உரிமைக்கான பரிந்துரைக்குழுக்களால் கண்டனம் செய்யப்பட்டது.[59][60]

அதன் பின்னர், இணையசேவை வழங்குநர்கள் அரசியல் செய்திகளையும் விமர்சனங்களை வெளியிட்ட இணையத்தளங்களைத் தடைசெய்த பல சம்பவங்கள் உள்ளன. இவை அனைத்தும் இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உத்தரவின் பெயரிலேயே இடம்பெற்றமை வெளிப்படையானது. இவ்வாறு தடை செய்வது முற்றிலும் தன்னிச்சையான செயற்பாடாகும். இதற்கு, எந்தவிதச் சட்ட அடிப்படைகளோ நீதிமன்ற

59 Tamilnet blocked in Sri Lanka, BBC Sinhala. com http://www.bbc. co.uk/sinhala/news/ story/2007/06/070620_ tamilnet.shtml

60 https://www.article19. org/data/files/pdfs/ press/sri-lanka-tamilnet-blocked.pdf

> “இலங்கையில் இணைய உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்கு எச்சட்டங்களும் இல்லை. இணையத்தளங்களைத் தடைசெய்வது எழுந்தமானமாக நடைபெற்றதோடு (2015க்கு முன்னர்), (வழமையாக வாய்மொழி) தடுக்குமாறு இணையச் சேவை வழங்குநர்கள் கேட்கப்பட்டிருந்தனர். அந்த இணையத்தளங்கள் உலகின் எங்கிருந்தும் அணுகப்படக்கூடியனவாக இருந்தன. இந்த உத்தரவுகள் ஆவணப்படுத்தப்படவில்லை.”
>
> - சரித்த ஹேரத், முன்னாள் செயலாளர், ஊடக மற்றும் தகவல் அமைச்சு (2012-14)

உத்தரவுகளோ அல்லது கண்காணிப்புகளோ இருக்கவில்லை. (இது, நீதிமன்றத்தில் பொலிஸார் பெற்றுக்கொண்ட குறிப்பிட்ட உத்தரவுகளைப் பயன்படுத்தி, சில ஆபாச இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டமைக்கு நேர்மாறானது.) இவ்வாறு, செய்தி இணையத்தளங்களும், அரசியல் இணையத்தளங்களும் தடைசெய்யப்பட்டமையானது இணையத் தணிக்கையேயாகும்.

‘இணையத்தில் சுதந்திரம் 2012’ அறிக்கையின்படி, “மனித உரிமை மீறல்கள், ஊழல் மற்றும் அரசாங்க விடயங்களை அறிக்கையிட்ட இணையத்தளங்கள் தன்னிச்சையாகத் தடை செய்யப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. அரசாங்கத்தின் கொள்கைகள், செயற்பாடுகளை விமர்சிக்கும் உள்ளடக்கங்கள் தொடர்பில் கட்சிசார்புடையவர் நலன்களைப் பாதுகாத்தல், உள்ளடக்கங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை நீதிமன்றத் தலையீடு மூலம் சட்டபூர்வமானதாக்குதல் ஆகியவற்றுக்குச் சட்ட அடிப்படையைத் தரமுடியாது தொடர்ச்சியாகத் தோல்வியுற்ற நிலையிலேயே இச்சம்பவங்களும் இடம்பெற்றன”.[61]

இதுவரை அறியப்பட்டவரை, இந்த உத்தரவுகள் தொடர்பில், இலங்கையின் இணையசேவை வழங்குநர்கள் எவரும் நீதிமன்றத்தில் அவற்றைச் சவாலுக்குட்படுத்தவில்லை அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வை கூடப் பெறப்படவில்லை. தங்கள் அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படலாம் என்ற அச்சம் இதற்கு காரணமாக இருக்கலாம்.

இலங்கையின் இணைய சுதந்திரம் தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்று 2011 நவம்பரில் வெளியானது. அதில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது : “தேசிய பாதுகாப்பு தொடர்பான உத்தரவுகளும் தேசிய

61 https://freedomhouse.org/report/freedom-net/2012/sri-lanka

நலன், பொது ஒழுக்கம் என்றால் என்ன என்பது குறித்த அரசாங்க அதிகாரிகளின் தன்னிச்சையான பார்வைகளும் - மாற்றுக் கருத்தை முடக்குவதற்கும் தாங்கள் ஆபத்தெனக் கருதும் இணையத்தளங்களை முடக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. இந்த நிலைமை, சிவில் உரிமைகளை தேசிய பாதுகாப்பிற்காக துருப்புச்சீட்டாக்கும் சட்ட வரைபுச்சட்டகம் மற்றும் ஒன்றில் சுயாதீன ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அல்லது வெளிப்படையான நிர்வாக முறைமைகளுடன் தகவல்களுக்கும் தனிப்பட்ட அந்தரங்கத்திற்குமான போதுமான பாதுகாப்பையும் வேண்டிநிற்கும் ஒழுங்குபடுத்தல் தராதரங்களால் சூழப்பட்டுள்ளது".[62]

'ஃப்ரீடம் கௌஸ்' (Freedom House) அமைப்பு, இணைய சுதந்திரம் தொடர்பான தனது 2014ஆம் ஆண்டு அறிக்கையில், இலங்கை குறித்து இவ்வாறு தெரிவித்திருந்தது : "இணையத்தில் வெளியாகும் விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மேற்கொண்டுள்ள தலையீடுகள் மற்றும் இணைய ஒழுங்குபடுத்தல்களை பலப்படுத்துவதற்கான பிரகடனங்கள் பக்கச் சார்பானவை, சட்டத்திற்கு புறம்பானவை, ஒடுக்குமுறையானவை".

அந்த அறிக்கையில் மேலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது : "இலக்கு வைக்கப்பட்ட, அரசியல் மயப்படுத்தப்பட்ட தணிக்கை 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்தது. கொழும்பு ரெலிகிராஃப் இணையத்தளம் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்த உள்ளடக்கத்தினாலும், நாட்டின் சர்ச்சைக்குரிய அரசியல் விவகாரங்களை வெளிப்படுத்தியதனாலும் காலத்திற்குக் காலம் தடை செய்யப்பட்டது. கடந்த காலங்களைப் போல, இதற்கான பொறுப்பை அரசாங்கம் மறுத்தது. இணையத்தில் வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தன. ஆனாலும், நாட்டில் உள்ள முகநூல் பாவனையாளர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு ஆதரவைத் தெரிவிக்கும் செய்திகளை வெளியிட்டதுடன், அநேக சமூக ஊடகங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான சம்பவங்களே தொடர்ந்தும் முக்கியமாக ஆராயப்பட்டன".[63]

நவம்பர் 2011 இல், தகவல் திணைக்களம், "இலங்கை சம்பந்தமான செய்திகளை வெளியிடும் அல்லது இலங்கை மக்கள் தொடர்பான செய்திகளை வெளியிடும் இலங்கையில் இருந்து தரவேற்றப்படும் அல்லது வேறெங்காவது இருந்து தரவேற்றப்படும் அனைத்து இணையத்தளங்களையும்" அனுமதிச்சான்றிதழ் பெற "பதிவு செய்யுமாறு" வேண்டுகோள் விடுத்தது. வெகுசன ஊடக

62 Freedom of Expression on the Internet in Sri Lanka, Centre for Policy Alternatives, Colombo. November 2011. http://cpalanka.org/wp-content/uploads/2011/11/FOE-REPORT-NOV-2011-FINAL-CPA.pdf

63 https://freedomhouse.org/sites/default/files/resources/Sri%20Lanka.pdf

"இணைய உள்ளடக்கங்களை வடிகட்டுவதற்கு, தொடர்பாடல் 'கொலை ஆளி'யைப் பயன்படுத்துவதும், ஒலி-ஒளிபரப்பு நிலையங்களை கையகப்படுத்துவதும் மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் எப்போதும் நியாயப்படுத்த முடியாதவை."

- கருத்துச் சுதந்திரத்துக்கானதும் முரண்பாட்டுச் சூழல்களில் வெளிப்பாட்டுக்குமான இணைப் பிரகடனத்திலிருந்து.
- மனித உரிமைகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம், 04 மே 2015. https://shar.es/1YhNPC

மற்றும் தகவல் அமைச்சே இந்தப் பதிவுக்கான அதிகாரசபையாகும். எவ்வாறிருந்தாலும், இந்த உத்தரவுக்கு சட்ட அல்லது ஒழுங்குமுறை அடிப்படை எதுவுமே இருக்கவில்லை.

மிகையான பரந்த தன்மையும், தெளிவற்றதாகவும் இருந்த இந்த நடவடிக்கையைப் பல சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டியிருந்தன. "அவதூறு மற்றும் தனிப்பட்ட அந்தரங்க உரிமை ஆகியவை குறித்த கரிசனைகளுக்கு அப்பால் அரசாங்கம் இந்தப் பதிவு நடைமுறைக்கு ஒரு ஜனநாயக சமூக விழுமியங்களுக்கு இசைவானதாக அல்லது கருத்துச் சுதந்திரம் மீது சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அனுமதிக்கக்கூடிய சட்டக் கட்டுப்பாடுகள் தொடர்பிலானதான, ஒரு சட்ட வடிவிலான, நியாயபூர்வமான காரணத்தை முன்வைக்கத் தவறியுள்ளது" என்றும் சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்தன.[64]

பல செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களை வெளியிடும் இணையத்தளங்கள் இத்திட்டத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டன. அதேவேளை, வேறு பல இணையத்தளங்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தன. இவ்வாறு தங்களைப் பதிவு செய்துகொள்ளாத இணையத்தளங்கள் பல பின்னர் நாட்டினுள் அணுகப்படாதவாறு முடக்கப்பட்டன. 2012 இன் ஆரம்பத்தில், சுதந்திர ஊடக இயக்கம் பதிவு செய்யப்படாத ஐந்து இணையத்தளங்களை முடக்கியதற்கு எதிராக அமைச்சின் முடிவைச் சவாலுக்குட்படுத்தி, அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. எனினும், உச்ச நீதிமன்றம் சில மாதங்களுக்குப் பின்னர் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது.

சர்வதேச சட்டத்தின் கீழ், ஒரு அரசாங்க

64 Arbitrary Blocking and Registration of Websites: The Continuing Violation of Freedom of Expression on the Internet. Civil society statement issued on 9 November 2011. http://www.cpalanka.org/arbitrary-blocking-and-registration-of-websites-the-continuing-violation-of-freedom-of-expression-on-the-internet/

அமைப்பினால், நிர்வாகக் காரணங்களுக்காக இணையத்தளங்களைத தடைசெய்வது, கருத்துச் சுதந்திரம் மீதான நியாயமற்ற கட்டுப்பாடாகும்.

அரசியல் மற்றும் விமர்சனங்களை முன்வைக்கும் இணையத்தளங்களைத் தன்னிச்சையாக முடக்கும் நடவடிக்கை 2015 ஜனவரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட பின்னர் முடிவிற்கு வந்தது. ஆனாலும், நீதிமன்றத்தின் உத்தரவுடன் ஆபாச இணையத்தளங்களைத் தடை செய்வது தொடர்கிறது.

இலங்கை இதுவரை எந்தவொரு சமூக ஊடகத்தையும் குறுகிய காலத்திற்கெனினும் தடைசெய்யவில்லை.

எனினும், சிரேஷ்ட அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் சமூக ஊடகங்களை வெளிப்படையான அறிக்கைகளில் கடுமையாக விமர்சித்துள்ளனர். 2013 ஒக்ரோபர் மாதம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முகநூல் “எமது பிள்ளைகளைப் பிடித்துள்ள ஒரு நோய்” என்றார். எனினும், அவரே மக்களைச் சென்றடைவதற்காக முகநூலையும் ருவிட்டரையும் தீவிரமாகப் பயன்படுத்துகிறார்.[65] 2014 மார்ச் மாதம், தகவல் ஊடக அமைச்சு “சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தவென” குழு ஒன்றை உருவாக்கியது. ஆனால், அதன் இலக்கு தெளிவற்றதாக இருந்ததுடன், பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் முழுமையாக அல்லது பாகங்களில் இணையப் போக்குவரவை அதிகாரத்துடன் அல்லது ‘இணையக்கொலை ஆளி’ போன்று ஒரு சொடுக்கில் நிறுத்தக்கூடிய பொறிமுறையைக் கொண்டிருக்கும் தவறான பிரயோகங்கள் மீது அவசியம் கவனம்செலுத்தப்பட வேண்டும். தீவிரமான சைபர் தாக்குதல்களின்போதே இறுதிமுயற்சியாக இது கருதப்படுகிறது. எவ்வாறாயினும், இது இணையப் பயன்பாட்டாளர்களின் கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும் பொருத்தமற்ற பயன்பாடு என, செயற்பாட்டாளர்களும் ஆய்வாளர்களும் கருதுகின்றனர்.

இவ்வாறான முழு அடைப்பு, நேபாளத்தில் 2005 பெப்ரவரி 01இல், மன்னர் கயனேந்திராவினால் அரசாங்கம் பதவிநீக்கம் செய்யப்பட்டபோது மேற்கொள்ளப்பட்டது. பல நாட்களுக்கு கைபேசித் தொடர்புகளும் இணையப் பரிவர்த்தனையும் முற்றாகச் செயலிழந்தன.

இவ்வாறு இலங்கையில் இவ்விதம் இதுவரை இடம்பெறாதபோதும், 2005-2009 பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு, வடக்கு-கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகளில் கைபேசித் தொடர்புகள் நிறுத்தப்பட்டன.[66] 2008 பெப்ரவரி 4ஆம் திகதி, சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்பட்டபோது, முழு நாட்டிலும் குறுஞ்செய்தி அனுப்புதல் பல

65 http://www.therepublicsquare.com/politics/2013/10/president-says-facebook-is-a-disease-in-sri-lanka/

66 Over 200,000 in Jaffna deprived of phone service now for two months. LIRNEasia, 30 October 2006. http://lirneasia.net/2006/10/over-200000-in-jaffna-deprived-of-phone-service-now-for-two-months/

மணிநேரங்களுக்குத் தடுக்கப்பட்டது. இதனை, ‘தேசிய பாதுகாப்பு’ என குறிப்பிட்டதைத் தவிர, வேறு தொழினுட்ப அல்லது சட்ட விளக்கங்களை அரசாங்கம் தரவில்லை.

கருத்துச் சுதந்திரத்தைக் கடுமையாகப் பாதிக்கும் ‘இணையக்கொலை ஆளி’ மீதான பரந்த கலந்துரையாடலுக்கு தொடர்பாடல் நிபுணர் தலாநிதி. ரோஹான் சமரஜீவ அழைப்புவிடுத்தார்.[67]

## பரிந்துரைகள்

- அரசியலமைப்பின்படி அல்லது சர்வதேச சட்டங்களின்படியான கருத்துச் சுதந்திரத்தை கௌரவப்படுத்தும் சட்டத்திற்குப் புறம்பாக, இணைய உள்ளடக்கங்களை அல்லது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது. ஆபாச உள்ளடக்கங்களைப் பொறுத்தளவில், குறித்த தளங்கள் பாதிப்பை விளைவிக்கின்றன என்பதைச் சட்டரீதியாக நிரூபித்து, நீதிமன்ற உத்தரவுகளின் பிரகாரமே அவை தடைசெய்யப்படலாம். அரசியல் விமர்சனங்களை அல்லது ஊழல்களை வெளிப்படுத்தும் இணையத்தளங்கள் மீது இவ்வாறான தடுக்கும் நடவடிக்கைகள் எப்போதும் மேற்கொள்ளப்படக்கூடாது. நீதிமன்றவழியான இணையத்தளத் தடைகள் இறுதியான நடவடிக்கையாக மாத்திரமே இருக்கவேண்டும் என்பதுடன், அவ்வாறு தடைசெய்யப்படும் தளங்களின் விபரம் மக்கள் பரிசீலனைக்கும் முன்வைக்கப்பட வேண்டும்.

- சமூக மற்றும் பொருளாதாரத்தினை செயற்பாடற்ற நிலைக்கு ஆளாக்கும் “இணையக்கொலை ஆளி”யை ஜனநாயக அரசாங்கங்கள் பயன்படுத்தக் கூடாது. கருத்து மாறுபாடுகளைத் தடுக்கும் அரசியல் இலக்குகளுக்குத் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக, ஆகத் தீவிரமான, விரும்பத்தகாத நிலைமைகளில் மாத்திரம் அரசாங்கம் “இணையக்கொலை ஆளி” யைப் பயன்படுத்தக்கூடியளவு, தெளிவான நெறிமுறைகள் வகுக்கப்படவேண்டும்.

- இணையத்தளங்கள் செயற்படுவதற்கு பதிவுசெய்யப்படவேண்டும் என்பதாக இருக்கக்கூடாது. அரசியல், வணிகத் தலையீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட அமைப்பினால் மாத்திரமே, இணைய உள்ளடக்கங்கள் மீதான நெறிமுறைகள் பிரயோகிக்கப்படுவது அனுமதிக்கப்பட வேண்டும்.

[67] http://old.himalmag.com/component/content/article/4319-technologies-and-freedom.html

“அரசியல்வாதிகள், அரசாங்கம், அத்துடன் ஊடகங்களும் எமது நாட்டின் மோசமான நிலைமைக்கான காரணத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும். நாங்கள் எங்கள் ஊடகங்களை எங்கள் பண்பாடு மற்றும் சமூக யதார்த்தங்களுக்கு ஏற்ற வகையில் வளர்த்தெடுக்க வேண்டும். பீ.பீ.சி போன்ற முன்னுதாரணமான பொதுச்சேவை ஊடகங்கள் எப்படி வளர்ந்தன என்பதை நாங்கள் ஆராய வேண்டும். ஆனால், இறுதியில் எங்கள் மாதிரிகளை நாங்களே உருவாக்க வேண்டும்”.

- எட்மன் ரணசிங்க, திவயின மற்றும் த ஐலண்டின் முன்னாள் பிரதம ஆசிரியர்

“யுத்தம் குறித்து எங்கள் ஊடகங்கள் செய்தி வெளியிட்ட விதத்தில் பாரிய பிரச்சனைகள் உள்ளன. அது யுத்த காலத்திலும், தற்போதும் யுத்தத்திற்குப் பின்னரும் அது தொடர்கிறது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதிலும் எங்கள் ஊடகங்கள் பாரிய பங்களிப்புச் செய்ய வேண்டும்”.

- நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், வடமாகாண முதலமைச்சர்

“இன்று நாங்கள் ஊடகங்களில் காணும் பல பிரச்சனைகள் சமூகத்திலும் எங்கள் கல்வி முறையிலும் காணப்படும் ஆழமான பலவீனங்களின் பிரதிபலிப்பே. நாங்கள் சிந்திக்கக் கூடிய மக்களை எங்கள் பாடசாலைகளில் இருந்து உருவாக்குவதில்லை. இலங்கையின் ஊடகத் துறையில் பாரிய சீர்திருத்தங்கள் அவசியமாக உள்ளன. நல்ல சுயபரிசீலனைக்குப் பின்னர் முழுமையான மாற்றம் அவசியமாகவுள்ளது”.

- சமன் அத்தாவுதஹெட்டி, பிரதமரின் மேலதிக செயலாளர் (ஊடகம்)

“முன்னைய அரசாங்கம் இணையத்தளங்களை முடக்குவதற்கு முயன்று தேவையற்ற விவகாரங்களை தோற்றுவித்தது. செய்தி இணையத்தளங்கள் ஊடக அமைச்சில் பதிவு செய்யுமாறு கோரப்பட்டன. இந்தத் திட்டம் அர்த்தமற்றது. வெறுமனே இணையத்தளங்களைப் பதிவுசெய்வதன் மூலம், அதன் உள்ளடக்கம் தொடர்பான எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்த முடியாது. மேலும் நாட்டில் (அரசியல்) இணையத்தளங்கள் முடக்கப்படும்போது. மக்கள் அந்த தகவல்களை பெறுவதற்கான வேறு வழிகளைக் கண்டுபிடிக்கின்றனர்.

“இணையத்தளங்கள் மீதான தணிக்கையை நான் முற்றாக எதிர்க்கிறேன், தங்களை விமர்சிக்கும் இணையத்தளங்களை முடக்குவதன் மூலம் தகவல் வெளியாவதைத் தடுக்கலாம் என அரசாங்கம் கருதினால், அவர்களது எண்ணம் தவறானது. தொழில்நுட்பரீதியிலும் நடைமுறையிலும், அது தவறாக வழிகாட்டப்பட்ட செயல். முன்னைய அரசாங்கம் மேற்கொண்ட மிகப்பெரும் தவறு

இது".

- ஹர்சா விஜயவர்தன, தலைவர் / ஆலோசகர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவு

"இணையத்தளங்களில் காணப்படும் உள்ளடக்கங்களை ஒழுங்குபடுத்துவதையோ அல்லது அரசாங்கத்தினால் அவை கட்டுப்படுத்தப்படுவதையோ, நாங்கள் எதிாக்கின்றோம். பொறுப்புணர்வுடன் கூடிய உள்ளடக்கங்களை தயாரிப்பதையும் பகிர்ந்து கொள்வதையும் நாங்கள் முன்னிறுத்துகின்றோம், தொழில்சார் இணையத்தள ஊடகவியலாளர்கள் சங்கம் இலங்கையின் தொழில்சார் இணையத்தள ஊடகவியலாளர்கள் பின்பற்றுவதற்கான ஒழுக்காற்றுக் கோவையொன்றைத் தயாரித்து வருகின்றது. இந்த ஒழுக்காற்றுக் கோவையை ஏற்றுக்கொண்டு பின்பற்றுவதாக உறுதிப்படுத்துபவர்களை மாத்திரமே நாங்கள் அனுமதிப்போம். நாங்கள் செய்தி இணையத்தளங்களை ஊடக அமைச்சில் பதிவு செய்வதை எதிர்க்கவில்லை, ஆனால் தற்போது அதற்கான கட்டணம் (வருடத்திற்கு ஒருமுறை 35,000 ரூபா) மிகவும் அதிகமாக காணப்படுகின்றது, இதனைக் குறைக்கலாம் என நாங்கள் நம்புகின்றோம்,

"முன்னைய அரசாங்கம் அரசியல் இணையத்தளங்களை முடக்கவும் தணிக்கைக்கு உட்படுத்தவும் முயன்றது. ஆனால், அதனை செய்வதற்கான சட்ட அடிப்படைகள் எதுவும் இருக்கவில்லை. நாங்கள் அவ்வாறான சுமார் 8 இணையத்தளங்களை முடக்குவதற்கு எதிராகப் போராடினோம். நாங்கள் மேற்கொண்ட விசாரணைகளின் போது, சிலரின் தொலைபேசி அழைப்புகளை அடிப்படையாக வைத்து, இணைய சேவை வழங்குநர்கள் இவற்றை முடக்கியமை தெரியவந்துள்ளது. தற்போது இணையத்தளங்கள் அவ்வாறு முடக்கப்படுவது இல்லை (ஏப்ரல் 2015). ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என யாரால் தெரிவிக்க முடியும்?".

- ஃப்ரெடி கமகே. தொழில்சார் இணையத்தள ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர்

பிரிவு 1

# கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், ஊடகங்களின் பல்வகைமை ஆகியன தொடர்பில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒழுங்குவிதிகள் கொண்ட அமைப்பு

## பரிந்துரைகளின் தொகுப்பு

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
|---|---|
| 1.1 சட்டத்திலும் நடைமுறையிலும் கருத்துச் சுதந்திரத்துக்கான உத்தரவாதம் | 1. கருத்துச் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக உள்ளடக்கிப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் அரசிலமைப்பு திருத்தப்படல் வேண்டும் மற்றும் சகல நபர்கள் பற்றிய தகவல்கள் வெறுமனே பிரஜைகளுக்கு என்றல்லாது, இலங்கை அரசாங்கத்தின் நியாயாதிக்கத்திற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| | 2. சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மிகவும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே, அவசரகால ஒழுங்குவிதிகளைப் (பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்) பிரயோகிக்கக் கூடியதாக இருக்கும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்படல் வேண்டும். ஏனெனில், அவரசகாலச் சட்டமானது தேசத்தின் வாழ்வையும் அச்சுறுத்தக்கூடியதாகக் காணப்படுகிறது. சாதாரண சட்டங்கள் செயற்படுத்தப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றபோது அதனை விஞ்சி அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்படக் கூடாது. அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கான அவசியம் தொடர்பில் அவசரகால ஒழுங்குவிதிகளில் தெளிவாக எடுத்துரைக்கப்படல் வேண்டும். இவ்வாறு அவசரகாலச் சட்டங்களைப் பிரயோகிப்பது தொடர்பான நியாயப்பாடுகளை மதிப்பிடும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இருக்கக் கூடியதாக ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும். |
| | 3. கருத்துச் சுதந்திரத்திலும் தகவல் அறியும் உரிமையிலும் வரையறைகளை விதிக்கின்ற விடயங்களை மாற்றியமைக்கக் கூடியதாக அரசியலமைப்பில் புதிய விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். ICCPR உறுப்புரை 19(3) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே, குறித்த நலன்களைப் பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமான சூழ்நிலைகளில் மாத்திரம் அதனை நியாயப்படுத்துவது உட்பட, அவசரகால ஒழுங்குவிதிகள் அனுமதிக்கப்படலாம். |
| | 4. கருத்துச் சுதந்திரம் மீது கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடிய நடைமுறையிலுள்ள அனைத்துச் சட்டங்களையும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமைவாக, அவற்றுடன் முழுமையாக ஒத்திசையும் வகையில் அரசாங்கம் மீளாய்வு செய்யவேண்டும். சாதாரண சட்டவாக்கத்தைவிட மீயுயர் நிலையையுடைய அரசியலமைப்பை உறுதிசெய்யும் வண்ணம், நீதித்துறை (அரசியலமைப்பு) மீளாய்வை மீண்டும் அறிமுகப்படுத்துவது இதற்கு ஓர் வழிமுறையாகும். அரசியலமைப்பு மறுசீரமைப்பு உட்பட முந்தைய சட்டவாக்கத்தின் மீதான பல கரிசனைகளை நிவர்த்திக்க இது உதவும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 1.2 சட்டத்திலும் நடைமுறையிலும் தகவல் பெறும் உரிமைக்கான உத்தரவாதம் | 5. அதிக தகவல்களை அணுகக்கூடிய விதத்திலான கொள்கைகளின் அடிப்படையில் தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியச் சட்டமானது முழுமையாக அகற்றப்படல் வேண்டும் அல்லது அதில் தேவையானளவு தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கு ஏற்ப திருத்தப்படல் வேண்டும். நன்நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற, தகவல்கள் சரியான விதத்தில் வெளிப்படுத்தப்படுவதுடன் குற்றச் செயல்களுக்கு எதிரான சான்றுகளாகவும் இருத்தலில் நியாயமான நம்பிக்கையுடன் இருக்கின்ற உரத்துக் குரல் தரவல்லோரைப் பாதுகாக்கப்படக் கூடிய ஏற்பாடுகளையும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.<br><br>6. பாராளுமன்றச் சிறப்புரிமைகளைப் பாதுகாத்தல் என்பதன் கீழ் தகவல்களைக் கட்டுப்படுத்துவதான பகுதிகள் அரசியலமைப்பிலிருந்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்தும் அகற்றப்படுவதுடன், சட்ட ஆவணங்களின் பரப்பு எவரொருவரையும் உள்ளடக்கக்கூடியதாக விரிவாக்கப்பட வேண்டும். |
| 1.3 சட்டத்திலும் நடைமுறையிலும் ஆசிரியர்பீட சுதந்திரத்துக்கான உத்தரவாதம் | 7. பொதுச் சேவை ஊடகங்கள் தொடர்பிலான ஆசிரியர்பீடச் சுதந்திரம் சட்டத்தின் மூலமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதேவேளை, ஏனைய சகல ஊடகங்களும் தமது தொழில்சார் விழுமியங்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதை மையப்பொருளாகக் கொண்டு ஆசிரியர்பீடக் கொள்கைகள் மற்றும் பொறுப்புக்கூறல் முறைகள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உட்சாகப்படுத்தப்பட்டு, அதனடிப்படையில் தமது வெளியீடுகளை மேற்கொள்வதற்கு வழிசெய்யப்படவேண்டும். அவ்வகையான உரைவிளக்கங்கள் ஊடகத்துறைப் பணியாளர்களைத் தெளிவாக வலுவூட்டுவதுடன் ஊடக கம்பனியின் செயற்பாடுகள் வியாபாரம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் ஆசிரியர்பீடம் ஆகியன தனித்தனியாக வேறுபடுத்துவதையும் உறுதிப்படுத்தவேண்டும். ஆசிரியர்பீடச் சுதந்திரத்தைத் தேவையற்ற தலையீடுகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய வகையில் அவசியமான அதிகாரங்களைக் கொண்டதான ஊடக சுய ஒழுங்குபடுத்தல் அல்லது இணை ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகள் காணப்படல் வேண்டும். |
| 1.4 சட்டத்திலும் நடைமுறையிலும் ஊடகவியலாளர்கள் தமது தகவல் மூலங்களைப் பாதுகாப்பதற்கான உரிமை | 8. இலங்கையிலுள்ள ஊடக பங்கேற்பாளர்கள் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை எவ்வாறு சிறப்பாக உறுதிப்படுத்துவது என்பது தொடர்பிலான தேசிய விவாதத்தில் அவசியம் கவனம் செலுத்துவதோடு, இயலுமான பொருத்தமான உபாயங்களை வகுப்பதிலும் அக்கறைகாட்ட வேண்டும்.<br><br>9. பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை தொழில்சார் முறையில் வழங்குகின்ற ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடகம்சார் பணியாளர்கள் பெற்றுக்கொள்கின்ற தகவல் மூலங்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்கக்கூடிய விதத்தில் அவர்களது உரிமைகளை வலுவாகப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் சட்டம் வழங்க வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 1.5 ஊடகம் தொடர்பான பொதுக்கொள்கையை வடிவமைப்பதில் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் பங்கேற்பு | 10. கருத்துச் சுதந்திரத்தை அல்லது ஊடகத்தை பாதிக்கின்ற அல்லது அவை தொடர்பிலான சட்டங்களை உருவாக்குகின்றபோது அல்லது கொள்கைகளை வகுக்கின்றபோது ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களுடன் பரந்தளவிலான கலந்துரையாடல்ளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். |
| 1.6 சட்டத்திலும் நடைமுறையிலும் ஒழுங்குபடுத்தல் முறைமையின் சுயாதீனத்தன்மைக்கான உத்தரவாதம் | |
| 1.7 ஊடக பன்மைத்துவம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுங்குபடுத்தல் முறைமை | 11. ஒலி-ஒளிபரப்புத் தொடர்பான பூரணத்துவமிக்க சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். இது ஏனைய விடயங்களுடன் ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பான சுயாதீன அமைப்பொன்றை உருவாக்குதல், சர்வதேச தராதரங்களுக்கேற்ப பாராளுமன்றம் மூலமாக இலங்கை மக்களுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய ஒலி-ஒளிபரப்பு ஒழுங்கமைப்புகளை மேற்கொள்தல் போன்றவற்றையும் உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும். இவ் அமைப்பானது வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும் பொறுப்புக் கூறக்கூடியதாகவும் செயற்படல் வேண்டுவதுடன், இது செயற்பட வேண்டிய தெளிவான கொள்கை வரையறையை சட்டம் எடுத்துரைத்தல் வேண்டும். |
| 1.8 ஊடகம் மீது முறையற்ற சட்டக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் பிரயோகிக்காத நிலை | |
| 1.9 தனிநபர் ஒருவரது நற்பெயரைப் பாதுகாப்பதற்கு அவசியமான குறுகிய கட்டுப்பாடுகளையே அவதூறுச்சட்டங்கள் பிரயோகிக்கின்றன | 12. சர்வதேச மற்றும் அரசியலமைப்பு தராதரங்களுக்கு ஏற்ப சிவில் அவதூறு தொடர்பான ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு ஏற்ற விதத்தில் சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். இச்சட்டத்தில், ஏனைய விடயங்களுடன், அரச அதிகாரிகள் தமது சொந்தப் பெயரில் அவதூறுச்சட்டங்களைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்கள் இருத்தல் கூடாது. சாதாரண மக்களை விட பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் பண்பு இருத்தல் வேண்டும். அவதூறான விடயங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய பொறிமுறைகள் உள்ளன. எனவே, இழைக்கப்பட்ட குற்றத்திற்கு அளவாகவே அல்லது ஏற்ற விதத்திலேயே இவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 1.10 தேசிய பாதுகாப்பு, வெறுப்பூட்டும் பேச்சுகள், அந்தரங்கத் தன்மை, நீதிமன்ற அவதூறுச் சட்டங்கள், ஆபாசம் ஆகியன தொடர்பில் கருத்துச் சுதந்திரம் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தெளிவாகவாகவும் சர்வதேச சட்டங்களுக்கமைவாக ஜனநாயக சமூகமொன்றுக்கு ஏற்ற விதத்தில் நியாயப்படுத்தக் கூடியவாறும் சட்டவரையறை செய்தல் | 13. தீர்ப்புகள், நீதித்துறை சார் நடத்தைகள், நீதிமன்றச் செயன்முறைகள் ஆகியன தொடர்பில் நியாயபூர்வமான விமர்சனத்திற்கு அனுமதிக்கின்ற, முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட, தாராளத் தன்மையுடைய நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவற்றுள் தற்பொழுது நடைபெறுகின்ற வழக்கொன்று தொடர்பில் முன்வைக்கின்ற விமர்சனமானது, தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தாத அல்லது அவ்வித கருத்துக்கள் குறிப்பிட்ட அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையிலோ இருக்கின்ற விமர்சனங்களை அனுமதித்தல் ஆகியனவும் இவற்றுள் உள்ளடங்கும்.<br><br>14. பாராளுமன்றம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற அதிகாரிகள் ஆகியோரை விமர்சித்தமைக்காக அவர்கள் மீது தடைகளை விதிக்கின்ற அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இருத்தல் கூடாது. பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் உள்ளடங்கலாக, பொதுமக்கள் நலனைக் கருதி தகவல்களை வெளியிடுவதற்கான உரிமை சட்டத்தின் மூலம் முழுமையாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.<br><br>15. தேசத்துரோகத்துடன் தொடர்புடைய தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவு அகற்றப்படல் வேண்டும். ஏற்கனவே அமுலில் இருக்கின்ற குற்றங்களைத் தூண்டுவதுடன் தொடர்புடைய சட்டங்கள், தேசத்துரோகத்துடன் தொடர்புடைய சட்டத்தால் கவனிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல்கள் தொடர்பில் செயற்படுவதற்குப் போதுமானதாகும்.<br><br>16. கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துகின்ற ஏனைய சட்டங்களும் விதிகளும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். அவசியமாயின், கருத்துச் சுதந்திரம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சர்வதேச உத்தரவாதங்கள் மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப இவை திருத்தப்படல் வேண்டும். |
| 1.11 சட்டத்திலும் நடைமுறையிலும் ஊடகங்கள் மீது முன்கூட்டிய தணிக்கை இல்லாதிருத்தல். | 17. ஊடகங்கள் மீது முன்கூட்டிய தணிக்கை விதிக்கப்படக்கூடாது. அவசியம் எழும்போது, நீதிமன்றம் அவசர நடவடிக்கையாக, ஊடக உள்ளடக்கத்தின் சட்டரீதியான தன்மையை பிரசுரத்திற்குப் பின்னர் பரிசீலனை செய்யலாம். தணிக்கையை அனுமதிக்கும் பொது அளிக்கைக் கட்டளைச்சட்டம் உள்ளடங்கலான சட்டங்களும் ஒழுங்குநெறிகளும் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப, மீள்பரிசீலனை செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
|---|---|
| 1.12 உணர்ச்சி மற்றும் தீங்கு விளைவிக்கும் என்பதன்பேரில் இணைய உள்ளடக்கங்களை தடை அல்லது வடிகட்ட அரசு முயற்சிக்காதிருத்தல | 18. அரசியலமைப்பின்படி அல்லது சர்வதேச சட்டங்களின்படியான கருத்துச் சுதந்திரத்தை கௌரவப்படுத்தும் சட்டத்திற்குப் புறம்பாக, இணைய உள்ளடக்கங்களை அல்லது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது. ஆபாச உள்ளடக்கங்களைப் பொறுத்தளவில், குறித்த தளங்கள் பாதிப்பை விளைவிக்கின்றன என்பதைச் சட்டரீதியாக நிரூபித்து, நீதிமன்ற உத்தரவுகளின் பிரகாரமே அவை தடைசெய்யப்படலாம். அரசியல் விமர்சனங்களை அல்லது ஊழல்களை வெளிப்படுத்தும் இணையத்தளங்கள் மீது இவ்வாறான தடுக்கும் நடவடிக்கைகள் எப்போதும் மேற்கொள்ளப்படக்கூடாது. நீதிமன்றவழியான இணையத்தளத தடைகள் இறுதியான நடவடிக்கையாக மாத்திரமே இருக்கவேண்டும் என்பதுடன், அவ்வாறு தடைசெய்யப்படும் தளங்களின் விபரம் மக்கள் பரிசீலனைக்கும் முன்வைக்கப்பட வேண்டும்.<br><br>19. சமூக மற்றும் பொருளாதாரத்தினை செயற்பாடற்ற நிலைக்கு ஆளாக்கும் “இணையக்கொலை ஆளி”யை ஜனநாயக அரசாங்கங்கள் பயன்படுத்தக் கூடாது. கருத்து மாறுபாடுகளைத் தடுக்கும் அரசியல் இலக்குகளுக்குத் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக, ஆகத் தீவிரமான, விரும்பத்தகாத நிலைமைகளில் மாத்திரம் அரசாங்கம் “இணையக்கொலை ஆளி” யைப் பயன்படுத்தக்கூடியளவு, தெளிவான நெறிமுறைகள் வகுக்கப்படவேண்டும்.<br><br>20. இணையத்தளங்கள் செயற்படுவதற்கு பதிவுசெய்யப்படவேண்டும் என்பதாக இருக்கக்கூடாது. அரசியல், வணிகத் தலையீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட அமைப்பினால் மாத்திரமே, இணைய உள்ளடக்கங்கள் மீதான நெறிமுறைகள் பிரயோகிக்கப்படுவது அனுமதிக்கப்பட வேண்டும். |

வகை

# 2

## ஊடகங்களின் பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை, பொருளாதாரத் தளம் மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை

முக்கிய குறிகாட்டிகள்

**A** ஊடக செறிவு

2.1 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல்

2.2 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் பின்பற்றப்படுதலை அரசாங்கம் உறுதிப்படுத்தல்

**B** பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்களின் பல்வேறு கலவை

2.3 அரசாங்கம் பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்களின் பல்வேறு கலவையை ஆர்வத்துடன் ஊக்குவித்தல்

2.4 சுயாதீன மற்றும் வெளிப்படைத் தன்மை மிக்க ஒழுங்குபடுத்தல் முறைகள்

2.5 அரசு மற்று சிஎஸ்ஓ ஆகியன சமூக ஊடகங்களை உருவாக்குவதை ஆர்வத்துடன் ஊக்குவித்தல்

**C** அனுமதிப்பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடுகள்

2.6 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம் பொதுமக்களின் அதிகூடிய நலனை கருத்தில் கொண்டதாக காணப்பட வேண்டும்

2.7 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம், உரிமை மற்றும் உள்ளடக்கத்தில் பன்முகத்தன்மை காணப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்,

2.8 வெளிப்படையான சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு முறை

**D** வரிவிதிப்பு மற்றும் வர்த்தக விதிமுறைகள்

2.9 ஊடக அபிவிருத்தி பாராபட்சமற்ற விதத்தில் இடம்பெறுவதை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் வரிவிதிப்பையும் வர்த்தக முறைகளையும் பயன்படுத்துகின்றது

**E** விளம்பரம்

2.10 விளம்பர கொள்கை மூலம் அரசாங்கம் பராபட்சம் காட்டாமலிருப்பது

2.11 ஊடகங்களில் விளம்பரம் தொடர்பான வலுவான விதிமுறைகள்

“ஜனநாயக சமூகங்களின் பிரஜைகள், தங்களை சூழ்ச்சித் திறத்துடன் கையாள்வது, கட்டுப்படுத்துவதில் இருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக புத்திஜீவித்தனமான சுயபாதுகாப்பை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் அர்த்தபுஷ்டியான ஜனநாயகத்திற்கான அடிப்படையை ஏற்படுத்த வேண்டும்” என, அமெரிக்க மொழியியலாளரும் ஜனநாயகத்தில் ஊடகங்களின் பங்களிப்பு குறித்த முன்னோடி விமர்சகருமான நோம் சொம்ஸ்கி.

ஊடகங்களின் உரிமையாண்மை - அது தனியொருவரின் உரிமையாக அல்லது அரசினதாக அல்லது வேறு ஒரு அமைப்பினதாக காணப்பட்டாலும், அது ஆசிரிய பீடத்தின் நடத்தைகளுடன் வேறுபிரித்துப்பார்க்க முடியாதவாறு தொடர்புபட்டுள்ளது. நவீன சமூகங்களில் பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதில் ஊடகங்களால் எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்த முடியும் என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, ஊடகங்களின் உரிமையாளர்கள் யார், ஆசிரியபீட பதவிகளை அவர்கள் எவ்வளவு தூரம் கட்டுப்படுத்துகின்றனர் என்ற விடயம் குறித்து தீவிர கவனத்தை செலுத்த வேண்டும்.

ஊடக உரிமை என்பது ஒரு சில தனிப்பட்ட நபர்களின் கரங்களிலோ அல்லது நிறுவனங்களிலோ தங்கியிருக்கும்போது, உரிமையாண்மைகளைக் கடந்து, சகல ஊடகங்களும் சேவையாற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படும் பொதுமக்களின் நலன்களை விட, தனியாரின் நலன்களே அங்கு முதன்மைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறான தனிப்பட்ட நலன்கள் அரசியல் கட்சிகளின், நிறுவனங்களின் அல்லது வேறுபட்ட அழுத்தக்குழுக்களின் நலன்களாகக் காணப்படலாம்.

அனைத்து ஒலி-ஒளிபரப்பாளர்களும் அரசாங்கத்தின் உடைமையிலிருக்கும் பொதுச்சொத்தான வானலைகளைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பிட்ட சில நிறுவனங்கள் மாத்திரம் வானலைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்போது முறையான சந்தையை அடிப்படையாகக் கொண்ட போட்டி இல்லாமல்போய்விடும், அது, பின்னர் தனியொருவர் செல்வாக்குச் செலுத்தும் நடைமுறைகளுக்கு (உயர்விலைகள் போன்றவை) வழிவகுக்கலாம். அத்துடன், புத்தாக்கச் சிந்தனைகளும் இல்லாமல் காணப்படும்,

ஜனநாயகச் செயற்பாட்டாளர்கள், ஊடக உரிமை தொடர்பான போக்குகள் குறித்து கண்காணிக்க வேண்டும். மேலும், உரிமையாண்மை ஒரு இடத்தில் குவிவதை தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், ஒன்று அதற்கும அதிகமான ஊடகங்களில் - தனியொரு நபர், குடும்பம் அல்லது நிறுவனம் அல்லது குழுமம் செல்வாக்கு செலுத்துவதைக்

கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கங்கள் விதிமுறைகளை உருவாக்கலாம். பொருத்தமான ஊடக ஒழுங்குபடுத்தலின் மூலம், போதுமான அளவு பல்வகைத் தன்மை கொண்ட ஊடக நிறுவனங்களை வளர்த்தெடுப்பதற்கு அரசாங்கங்களுக்குக் கடப்பாடுள்ளது.

இந்த விதிமுறைகள் - நிறுவனங்களில் பார்வையாளர்களின் பங்கு, விநியோகம், வருமானம், மூலதனப் பங்குகளின் பகிர்ந்தளிப்பு அல்லது வாக்களிக்கும் உரிமைகள் போன்ற புறவயமான தகுதிநிலைகளைக் கருத்தில்கொள்வதாகக் காணப்படலாம், மேலும், இந்த விதிமுறைகள் - ஒத்த பிரிவு நடவடிக்கைகளை ஒருங்குசேர்த்தல் போன்ற - கிடைநிலை ஒருமைப்பாடு, மற்றும் தயாரிப்பு மற்றும் விநியோக முறைமைகளிலும், விளம்பரம் போன்ற செயற்பாடுகளில் தனிநபர், கம்பனி அல்லது முக்கிய நபர்களைக் கொண்ட குழுக்களின் ஆதிக்கம் ஆகியவை தொடர்பான - நிலைக்குத்து ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டதாகக் காணப்பட வேண்டும்.

ஊடக சந்தையின் அளவு மற்றும் அதன் அபிவிருத்தி அளவு என்பதை அடிப்படையாகக்கொண்டு, விதிமுறைகள் எவ்வாறான சரியான வடிவத்தை எடுக்கலாம் என்பது தங்கியுள்ளது. மேலும், ஊடக சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், சுதந்திரமாகவும் அரசியல் அழுத்தங்களில் இருந்து விடுபட்டவர்களாகவும் தங்கள் பணியை நிறைவேற்றுவதற்கான போதியளவு அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஊடக பன்முகத்தன்மை அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்போதோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத அளவு கவனக்குவிப்பு இடம்பெறுகிறபோதோ, அத்தகைய ஊடகச் செயற்பாடுகளுக்கு, தேவையானால் தடைகளை விதிப்பது உட்பட, அவற்றை நிறுத்துவதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

BOX 04

## ஊடகப் பன்முகத்தன்மை என்றால் உண்மையாக என்ன?

ஊடகங்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், பொது நலன்களை முன்வைத்த விடயங்களை, பன்முக மையப்படுத்தலோடும் போதுமான பல்வகைமையோடும் - தகவலறிவூட்டப்பட்ட, உரிமைகள் மறுக்கப்படாத, அனைத்தையும் உள்வாங்கிக்கொண்டு கலந்துரையாடுவதே ஊடகப் பன்முகத்தன்மையாகும்.

ஊடகப் பன்முகத்தன்மை எனப்படுவது, ஊடகக் கட்டமைப்பானது –

- ஒன்றிலிருந்து மற்றையது சுயாதீனமான போட்டித்தன்மைமிக்க ஊடக நிறுவனங்களை உள்ளடக்கிய, ஒரு மைய உரிமையாண்மை அல்லது வேறு செல்வாக்கு ;
- பல்வகைமையால் தனித்தான, ஆனால் - அரசியல் பார்வைகள், பண்பாட்டு மனோபாவம், பிராந்திய நலன்கள் போன்றவற்றால் இணைப்புக்களைக் கொண்ட உரிமையாண்மை ;
- சமூகத்தின் சகல பகுதிகளிலும் தொடர்புகொள்ளக்கூடிய ஆற்றல் ;
- பாரிய, வேறுபட்ட தகவல்களையும் அபிப்பிராயங்களையும் எடுத்துச்செல்லும திறனாற்றல் ;
- வேறுபட்ட மூலங்களிலிருந்தும் தகவல்களைப் பெறக்கூடிய வடிவமைப்பு ஆகியவற்றைக் கொண்டிருத்தலாகும்.

மூலம்: மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஆணையாளர் அவையினால் தயாரிக்கப்பட்ட ஊடகப்பன்மைத்துவம் மற்றும் மனித உரிமைகள், 2011 https://wcd.coe.int/ViewDoc.jsp?id=1881589

## ஊடகச் செறிவு

ஊடகச் செறிவு (ஒரு சந்தையில் ஊடகங்களின் குறிப்பிடத்தக்க பங்கினை மிகக்குறைந்தளவு தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் வைத்திருத்தல்) ஊடகங்களின் பன்முகத்தன்மையையும் பல்வகைமையையும் பாதிக்கின்றது. ஊடகங்களில் பல தரப்பட்ட எண்ணங்கள், மொழிகள் மற்றும் பண்பாடுகள் காணப்படக்கூடிய சூழலுக்கு அது பாதகமாகின்றது. அதன் காரணமாக, சமூகம் ஒன்றின் சகல பிரிவினரும் பகிரங்கக் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பும் தடுக்கப்படுகின்றது.

இலங்கையின் ஊடகத்துறையை, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதும் அதற்கு சொந்தமானதுமான ஊடகங்கள் மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களுக்குச் சொந்தமான ஊடகங்கள் என பரந்து பட்ட அளவில் வகுக்கலாம். இலங்கையில் உண்மையான சமூக ஊடகங்கள் என்பதாக இதுவரை எதுவும் இல்லை. அநேகமான தனியார் ஒலி-ஒளிபரப்பு அலைவரிசைகள் கொழும்பு மாவட்டத்திலேயே காணப்படுகின்றன. அவற்றில், ஐந்து வானொலி நிலையங்கள் அரசால் இயக்கப்படுபவை. இது, பிரஜைகள் குறிப்பாக உள்ளூர் மட்டங்களில் வசிப்பவர்கள் பல்வகைமையான ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான திறனாற்றலைத் தடுக்கின்றது.

BOX 05

## ஊடக குறுக்கு உரிமையாண்மை

ஊடக குறுக்கு-உரிமையாண்மை என்பது, ஒரு தனிநபர் அல்லது கம்பனி, பல ஊடக வர்த்தகங்களுக்கு உரிமையைக் கொண்டிருப்பதாகும். இந்த வர்த்தகம் - ஒலி-ஒளிபரப்பு, கேபிள் தொலைக்காட்சி, திரைப்படம், வானொலி, செய்திப்பத்திரிகை, சஞ்சிகைகள், புத்தக வெளியீடு, இசை, விடியோ விளையாட்டுக்கள் மற்றும் பல்வேறு இணைய வெளியீடுகளைக் கொண்டிருக்கமுடியும். மக்கள் அபிப்பிராயத்தில் தனிநபர் அல்லது கம்பனி பொருத்தமற்ற விகிதத்தில் அதிசெல்வாக்கைக் கொண்டிருப்பதை இங்கு கவனத்திற்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில், சமஷ்டி தொடர்பாடல் ஆணைக்குழு (FCC), ஒருவர் உரிமைகொண்டிருக்கக்கூடிய ஒலி-ஒளிபரப்பு நிலையங்கள் (வானொலி மற்றும் தொலைக்காட்சி) மற்றும் பொது உரிமையாண்மையைக் கொண்டிருக்கக்கூடிய ஒலி-ஒளிபரப்பு நிலையங்கள் மற்றும் செய்திப்பத்திரிகைகள் ஆகியவற்றை வரையறுத்திருக்கிறது. இந்த வரையறைகள், ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன.

விபரங்கள் : https://transition.fcc.gov/cgb/consumerfacts/reviewrules.pdf

## 2 01 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல்

இலங்கையில் ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமைகளை ஊக்குவிப்பதற்கான எந்தவித அரச கொள்கைகளும் காணப்படுவதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

மேலும், ஊடகச் செறிவு : ஊடகங்களின் உரிமை ஒரு சிலரிடமே குவிந்திருப்பதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் எதனையும் இலங்கை கொண்டிருக்கவும் இல்லை. ஒரு நிறுவனம் அல்லது தனிநபர் பல ஊடக வர்த்தகங்களில் ஈடுபடுவது : குறுக்கு-உரிமையாண்மையும் ஒழுங்குபடுத்தப்படவில்லை. அவ்வாறான சட்டங்கள் இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு அல்லது பொறிமுறை எதுவும் இங்கு இல்லை.

அண்மைய வருடங்களில், முக்கிய தேசிய தேர்தல்களில் அரசியல் கட்சிகள் வெளியிட்ட விஞ்ஞாபனங்கள் ஊடக சுதந்திரத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாக காணப்பட்டன. ஆனால், ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை ஆகியவற்றை உருவாக்குவதற்கான கொள்கைகளின் முக்கியத்துவத்தை அவை கருத்தில் எடுக்கவில்லை. குறிப்பாக, ஒலி-ஒளிபரப்புத் துறையில் பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமையை உருவாக்கும் ஆணையைக் கொண்ட சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு எதுவும் இல்லை.

பண்பலை வானொலிகள் மற்றும் புவியியல்சார் தொலைக்காட்சி அலைவரிசைகள் அதிகரித்து வருகின்றன எனபது உண்மையே. ஆனால், இந்த அதிகரிப்பு பொதுமக்களை உள்வாங்கும் வெளி எதனையும் உருவாக்கவில்லை. மாறாக, செய்தி மற்றும் ஏனைய நிகழ்ச்சி வடிவங்களில் முன்னைய அலைவரிசைகள் பின்பற்றப்படுவதையே காணமுடிகிறது. புத்தாக்கத்தை விட நகலெடுத்தலே அதிகம் நடைபெறுகிறது.

2014 இன் இறுதி வரை, ஒலி-ஒளிபரப்புத் துறையினர் அப்போது காணப்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக பல்வகைத்தன்மை அல்லது மாற்றுக் கருத்துக்கள் போன்றவற்றை அனுமதிப்பதன் மூலம் ஆபத்துக்களை எதிர்கொள்ள விரும்பாமல், பாதுகாப்பாகச் செயற்படவும், அரசாங்கத்தின் விருப்பத்துடன் இணைந்து செல்லவும் தெரிவைக் கொண்டிருந்ததால், தங்களுடைய ஊடக உள்ளடக்கத்தில் பல்வகைமைத் தன்மையை உருவாக்குவது தொடர்பில் பாதிக்கப்பட்டிருந்தனர். அதேவேளை, மாற்றுக் கருத்துகளுக்குத் தளம் அளிக்கக்கூடிய சுயாதீன சமூக ஊடகங்கள் இல்லாத நிலைமை இப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியது.

இலங்கையில் பெருமளவு ஊடக நிறுவனங்கள் பல்வகைமைத் தன்மை குறித்த தவறான எண்ணத்தை உருவாக்கி உள்ளன. உண்மையில்,

அனைத்து ஊடகங்களுமே வெவ்வேறு தொனிகளில் ஒரே கருப்பொருளையே வெளியிட்டு வருகின்றன. ஊடக சுதந்திரம் குறித்து வெளிப்படையான அர்ப்பணிப்பை வழங்கியுள்ள புதிய அரசாங்கத்தின் கீழ், இந்த நிலை தொடர்ந்தும் காணப்பட வாய்ப்பிருக்காது. ஆகவே, உண்மையான ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை மலர்வதற்கான சரியான தருணம் இது எனக் கொள்ளலாம்

அலைவரிசைகளின் அபரித வளர்ச்சி

ஊடக அமைச்சின் 2011 இற்கான இலங்கை ஊடகங்களின் நிலை குறித்த தொகுப்பில், பின்வரும் எண்ணிக்கையான அலைவரிசைகள் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [68]

- வானொலி ஒலிபரப்பில் 16 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. (2 அரசாங்கத்தினுடையவை. ஏனையவை தனியாருடையவை. மூன்று மொழிகளிலும் 50 இற்கும் மேற்பட்ட பண்பலை வானொலி அலைவரிசைகள் இயக்கப்படுகின்றன.)

- 12 நிறுவனங்கள் தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஈடுபட்டுள்ளன. (2 அரசாங்கத்தினுடையவை. ஏனையவை தனியாருடையவை. இவை 20 இற்கும் மேற்பட்ட இலவச வானலைவரிசைகளுக்கு பொறுப்பாக உள்ளன.)

சந்தை ஆய்வு மூலமொன்றினால் பெறப்பட்ட, 2015 ஆம் ஆண்டில் இயங்கிய வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பட்டியல், பின்னிணைப்பு 5 இல் தரப்பட்டுள்ளது.

இந்த இலவச வானலைவரிசைகளுக்கு மேலதிகமாக, சில கேபிள் தொலைக்காட்சிகளும், வீட்டுக்கு நேரடியாக வரும் செய்மதி தொலைக்காட்சிசேவை வழங்குநர்களும் (Direct to Home – DTH), ஒரு ஐ.பி. தொலைக்காட்சி வழங்குநரும் உள்ளனர். அநேக சந்தர்ப்பங்களில், இந்த அலைவரிசைகள் உள்ளூர் அலைவரிசைகளை ஒளிபரப்புவதுடன் வெளிநாட்டு செய்மதி அலைவரிசைகளையும் ஒளிபரப்புகின்றனர். சந்தையில் அவர்களுடைய பங்கு ஒப்பீட்டு அளவில் குறைவானது என்றபோதிலும் அது வளர்ந்து வருகின்றது. உதாரணமாக, சந்தை முன்னோடியான, டயலொக் தொலைக்காட்சி 2015 மார்ச் மாதத்தில், தனக்கு 504, 000 சந்தாதாரர்கள் உள்ளதாக அறிவித்தது.[69]

கேபிள் தொலைக்காட்சிகளின் சந்தாக் கட்டணங்கள் பல்வகைப்பட்டதாக உள்ளன. ஆகக் குறைந்தது, மாதத்திற்கு 450 இலங்கை ரூபாயிலிருந்து (அண்ணளவாக 04 அமெரிக்க டொலர்கள்) இது ஆரம்பமாகிறது. இது தவிர, நாளாந்த அடிப்படையிலான சந்தாக் கட்டணங்களும் உள்ளன.

68 The Directory was available until 30 April 2015 on Ministry website but is no longer online. Earlier location: http://www.media.gov.lk/english/images/stories/pdf/guide_to_media.pdf

69 https://www.dialog.lk/dialog-delivers-growth-of-6-in-first-quarter

அரசாங்கம் பல ஊடக நிறுவனங்களை சொந்தமாகக் கொண்டு நிர்வகித்து வருவதுடன், அவை கணிசமான அளவு மக்களையும் சென்றடைகின்றன.

- லேக் ஹவுஸ் என அழைக்கப்படும் அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட் நிறுவனம் (ANCL). இதுவே நாட்டின் காலத்தால் முந்திய, பாரிய பிரசுர நிறுவனம். (1973 இல் தேசியமயப்படுத்தப்பட்டது.)
- தேசிய வானொலி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். (SLBC)
- தேசிய தொலைக்காட்சி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம். (SLRC)
- சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னல் என அழைக்கப்படும் வர்த்தக தொலைக்காட்சி நிலையம் (ITN). 1979ஆம் ஆண்டு தனியார் உரிமையாளர்களிடம் இருந்து கையகப்படுத்தப்பட்டது.

தற்போதைக்கு வேறு எந்த ஊடக நிறுவனங்களும் இவற்றுடன் ஒப்பிடும் அளவிற்கு மக்களைச் சென்றடையும் நிலையைக் கொண்டிருக்கவில்லை. லேக் ஹவுஸ், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியன வரலாற்று ரீதியான சாதகத் தன்மைகளைக் கொண்டிருப்பதுடன் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட வலையமைப்புகளையும் கொண்டுள்ளன.

வேறு எந்த தனியார் நிறுவனமும் இதுவரை அனைத்து ஊடகங்களிலும் தங்களுடைய தொடர்ச்சியான பிரசன்னத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால், கடந்த மூன்று தசாப்தங்களில் ஒலி-ஒளிபரப்பு ஊடக நிறுவனங்கள் தங்கள் அலைவரிசைகளை அதிகரித்துள்ளதுடன், இணையத்தளங்களையும் உருவாக்கி உள்ளன. தொடர்ந்துவரும் அட்டவணை இந்தப்போக்கை எடுத்துச் சொல்லும் (முழுமையாக இல்லாவிடினும்).

| Holding Company | FM radio channels | TV channels (terrestrial) | Other media operations |
|---|---|---|---|
| Capital Maharaja Organisation Ltd.<br>www.capitalmaharaja.com | Sirasa FM<br>Shakthi FM<br>YES FM<br>Y FM<br>Operated under MBC Networks (Pvt) Ltd | Sirasa TV<br>Shakthi TV<br>TV 1<br>Operated under MTV Channel (Pvt) Ltd. | News website:<br>News 1st<br>http://newsfirst.lk |
| EAP Holdings<br>www.eapholdings.lk | Shree FM<br>E FM<br>Ran FM | Swarnawahini<br>ETv | Cinema network:<br>EAP Films and Theatres (Pvt) Ltd. |
| Asian Broadcasting Corporation (Pvt) Ltd.<br>www.asiabroadcasting.lk | Hiru FM<br>Sun FM<br>Sooriyan FM<br>Gold FM<br>Shaa FM | Hiru TV | News website:<br>Hiru News<br>www.hirunews.lk |
| Power House (Pvt) Ltd. | FM Derana | TV Derana<br>(also operates cable news channel named Ada Derana 24/7) | News website and SMS news alert service:<br>Ada Derana<br>http://www.adaderana.lk |

இலங்கையின் ஊடக சந்தை வளர்ச்சியடைந்து வரும் வேளையிலும், நுகர்வோரின் விருப்பங்கள் மெல்ல மெல்ல மாறும் சூழலிலும், சில சிறிய நிறுவனங்கள் தொடர்ந்தும் செயற்படுவதற்குப் போராடுகின்றன. வேறு எந்த வர்த்தக நலன்களையும் கொண்டிராத ஊடக நிறுவனங்களுக்கு இது குறிப்பாக கடும் சவாலாக உள்ளது. அவர்கள் முற்றுமுழுதாக

சந்தா அல்லது விளம்பர வருமானத்தில் தங்கியுள்ளனர். சில சிறிய செய்திப்பத்திரிகைகள் தங்கள் சந்தையை உறுதிப்படுத்துவதற்காக உரிமை மாற்றத்தை எதிர்கொண்டுள்ளன (பாரிய ஊடக நிறுவனங்கள் அவற்றைக் கொள்வனவு செய்துள்ளன). முன்பே குறிப்பிட்டதன் பிரகாரம், இவற்றுக்கு முறையான சட்டரீதியான வரையறைகள் இருப்பதில்லை.

மேலும், ஊடக உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் ஆவணப்படுத்தியதன்படி, முன்னைய ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் தங்களை விமர்சிக்கும் ஊடக நிறுவனங்களை கொள்வனவு செய்துள்ளதாக அறியப்படுவதுடன், அதன் பின்னர் அந்த ஊடகங்களின் ஆசிரியர்பீட உள்ளடக்கம் வெளிப்படையாக மாற்றம் கண்டுள்ளது (உதாரணம் : விமர்சனங்கள் மௌனிக்கப்பட்டன).[70]

இலங்கையைப் பொறுத்தவரை, ஊடக நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அல்லது பங்குகளை வைத்திருப்பவர்களின் (அவ்வாறிருந்தால்) பெயர் விபரங்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்ற எந்த சட்டத் தேவையும் இல்லை. 2.9 இல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, நிறுவனத்தின் ஒழுங்கமைப்பாளர் வருடாந்த வருமானம் குறித்த அடிப்படை விடயங்களை வெளியிட்டால் போதுமானதாகும். (இதற்கு மாறாக, இந்தியாவில் பத்திரிகையின் ஒவ்வொரு பிரதியும் அதனை அச்சிட்டவர், வெளியிட்டவர், உரிமையாளர், ஆசிரியர், அச்சிட்ட மற்றும் வெளியிட்ட இடங்கள் ஆகிய விபரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என அரசாங்க செய்திப்பத்திரிகை பதிவாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைவிட, வருடத்தின் பெப்ரவரி மாத இறுதிநாளுக்குப் பின்னர் வெளிவரும் முதலாவது வெளியீட்டில் மேலதிக விபரங்களுடனான அறிவிப்பு வெளிப்படுத்தப்பட வேண்டும்.[71]

சில அரசியல்வாதிகள் முக்கிய சில ஊடக நிறுவனங்களுக்கு உரிமையாளர்களாக நேரடியாகவும், அல்லது தங்களின் குடும்பத்தவர் அல்லது நெருக்கமானவர்களை பதிலிகளாக நியமித்தும் செயற்படுகின்றனர். உதாரணமாக, கடந்த பாராளுமன்றத்தில் (2010-2015) அங்கம் வகித்த குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் தனியார் செய்திப்பத்திரிகை கம்பனிகளுடன் தொடர்புகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆறாவது பாராளுமன்ற உறுப்பினர், மிகவும் பிரபலமான ஒலி-ஒளிபரப்பு நிறுவனத்தினதும் பல வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளினதும் உரிமையாளரான சகோதரரைக் கொண்டிருந்தார்.

அரசியல்வாதிகள் அல்லது அவர்தம் குடும்பத்தினர் ஊடக நிறுவனங்களை சொந்தமாக வைத்திருக்கவோ அல்லது அவற்றுடன் நெருக்கமாக இருப்பதையோ

70 Rajapaksa and the media: Someone has to undo the damage. Daily Mirror, 8 Dec 2014. http://www.dailymirror.lk/58351/rajapaksa-and-media-someone-else-has-to-undo-the-damage

71 http://rni.nic.in/cenrule.asp

கட்டுப்படுத்துவதற்கான எந்தவோர் ஏற்பாடும் இலங்கையில் தற்போது இல்லை. மாறாக, சில ஊடக உரிமையாளர்கள் மறைமுக அரசியல் ஆசைகளைக் கொண்டிருப்பதுபோல, அதிகளவான அரசியல்வாதிகள் ஊடக நிறுவனங்களை சொந்தமாக வைத்திருக்கவே விருப்பம் கொண்டுள்ளனர்.[72]

## பரிந்துரைகள்

- இலங்கையில் நேர்மையான ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமைகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்டங்களையும் கொள்கைகளையும் இனங்காண்பதற்கு - உள்ளார்ந்த, பல்பங்கேற்பாளர் கலந்துரையாடல்களை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும். வெறுமனே நுகர்வோர் தெரிவிற்கும் சந்தைப் போட்டிக்கும் இடமளிப்பதை விடுத்து, ஜனநாயகத் தொடர்பாடல் அதிகாரம் வலுப்படுத்தப்படுவதை நோக்கி இது மேற்கொள்ளப்படவேண்டும்.

- ஊடக உரிமையாளர்கள் குறித்த விபரங்கள் வெளிப்படையானவையாக மற்றும் முறையான தவணைகளில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கும் புதிய ஒழுங்குமுறையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். (உதாரணமாக, இந்தியாவைப் பொறுத்தவரை சகல ஊடக நிறுவனங்களும் தங்கள் உரிமையாளர் விபரங்களையும் முக்கிய பங்குதாரர்கள் யார் என்பதையும் தொடர்ச்சியான முறையில் வெளிப்படுத்துவது சட்ட ரீதியில் அவசியமான விடயமாகும்). இவ்வாறான விடயம் இலங்கையில் நிகழும்வரை, உரிமையாளர்களின் விபரங்களை வருடாந்தம் வெளியிடும் ஒரு தன்னார்வ முறையை ஊடகத் தொழிற்துறை அமைப்புகள் உருவாக்கி, தமது சொந்த பொறுப்புக்கூறும் கடப்பாட்டை அவை அதிகரிக்கவேண்டும்.

- ஊடக உரிமை என்பது ஒரே இடத்தில் குவிந்திருப்பயையும் பல ஊடகங்களை தனிநபர்கள், நிறுவனங்கள் உரிமையாளுவதையும் கட்டுப்படுத்துவதற்குப் பாராளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும்.

- ஆராய்ச்சியாளர்களும் சிவில் சமூக அமைப்புகளும் தமது ஊடகக் கண்காணிப்பை விரிவாக்கி, உள்ளடக்க ஆய்வுகள் மற்றும் ஆசிரியபீட நடைமுறைகளில் ஒழுக்காற்று முறைகள் குறித்த தங்களுடைய கண்காணிப்பு நடைமுறைகளை அவற்றுக்கு அப்பாலும் முன்னெடுக்க வேண்டும். மேலும், ஊடகங்களின் அரசியல் தொடர்புகள் மற்றும் ஊடக உரிமையாளர்களின் ஊடக வர்த்தக நலன்கள் கடந்த செயற்பாடுகள் குறித்தும் பொதுசன கண்காணிப்பு வேண்டும். ஊடக பரிந்துரைக்குழுக்களும், ஊடக ஆராய்ச்சியாளர்களும் இவ்வாறான விடயங்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இணையத்தளத்திலோ வலைப்பூத்தளத்திலோ தரவேற்றும பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

72 Parliament of Sri Lanka has a total of 225 members. http://www.parliament.lk/en/members-of-parliament/directory-of-members

## 2.02 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் பின்பற்றப்படுதலை அரசு உறுதிப்படுத்தல்

இலங்கையில் ஊடக பன்முகத்தன்மையை விசேடமாக ஊக்குவிக்கும் சட்டங்களோ விதிமுறைகளோ இல்லை. தற்போது காணப்படும் உரிமையாளர் கட்டமைப்புகள் அவ்வாறான விவாதங்கள், உள்ளார்ந்த கருத்து பரிமாற்றங்களை முழுமையாக ஏற்றுக் கொள்வதுமில்லை.

அதிகரித்துவரும் ஊடகத் தனியார் உரிமையாண்மை, ஒலி-ஒளிபரப்புத் துறையில் சுயாதீன ஊடகங்களை வளர்த்தெடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

அண்மையில் வெளியான, "போராட்டநிலையில் ஊடகம்" (Embattled Media : Democracy, Governance and Reform in Sri Lanka) என்ற நூல், பரந்துபட்ட, அரசினதும் வர்த்தகத்தினதும் அழுத்தங்களுக்குள்ளான, வர்த்தக வலையமைப்புகளை கொண்டுள்ளவர்கள் உரிமையாளர்களாகவுள்ள தனியார் ஒலி-ஒளிபரப்பு நிறுவனங்கள் எவ்வாறு பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட சேவையை ஆற்றுவது குறித்து அக்கறை கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இலங்கையின் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களின் அரசியல் பொருளாதாரம் குறித்து ஆராய்கின்ற இந்த நூல், பல்வகைமை எண்ணங்கள் மற்றும் குரல்களுக்கு இடமளிக்கக்கூடிய அனைத்து ஊடக உரிமையாண்மைச் சட்டகம் குறித்து புதிய பார்வைக்கு அழைப்புவிடுக்கின்றது. [73]

[73] Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, Feb 2015). pp 101-150 http://www.sagepub.in/books/Book244886?siteId=sage-india&prodTypes=any&q=Embattled+Media&fs=1

### பரிந்துரை

- இலங்கையில் நேர்மையான ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமைகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்டங்களையும் கொள்கைகளையும் இனங்காண்பதற்கு - உள்ளார்ந்த, பல்பங்கேற்பாளர் கலந்துரையாடல்களை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும். வெறுமனே நுகர்வோர் தெரிவிற்கும் சந்தைப் போட்டிக்கும் இடமளிப்பதை விடுத்து, ஜனநாயகத் தொடர்பாடல் அதிகாரம் வலுப்படுத்தப்படுவதை நோக்கி இது மேற்கொள்ளப்படவேண்டும்.

# ஒருங்கே பல்வகைத்தன்மை கொண்ட பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்கள்

203 அரசாங்கம்
பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்களின் ஒருங்கிருத்தலை ஆர்வத்துடன் ஊக்குவித்தல்

இலங்கையில் பல்வகைமை ஊடக ஒருங்கிருத்தலை அரசு ஒருபோதும் செயற்திறனுடன் ஊக்குவித்ததில்லை.

இலங்கையின் ஒலி-ஒளிபரப்புத் துறையில் தனியாருக்கு இடமளிப்பது என்பது, 1990 முதல் ஆட்சியில் உள்ள பல ஆளுங்கட்சிகளின் வர்த்தக நண்பர்களுக்கானதாக மாத்திரம் காணப்படுகிறது. அது வெளிப்படைத்தன்மை மிக்கதாகவோ போட்டி அடிப்படையிலோ வழங்கப்படவில்லை. வானொலியிலோ தொலைக்காட்சியிலோ சமூக ஒலி-ஒளிபரப்பு என்பது காணப்படவில்லை என்பதுடன், சமூகக் குழுக்கள் மற்றும் ஆதாயத்தை மையமாகக் கொள்ளாத அமைப்புகளுக்கும் உரிமம் ஒன்றும் வழங்கப்படவில்லை.

இலங்கையில் பருவ அச்சு வெளியீடு ஒன்றை ஆரம்பிப்பது - புதிய அச்சுத் தலைப்புக்கள் மீதான கட்டுப்பாடுகளோ, தொடக்கக் கட்டணங்களோ போன்றவை இல்லாது, மிகச் சுலபமானது. பெருமளவு பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான தலைப்புகளை இலங்கையில் பார்க்கலாம். ஆனால், வர்த்தக ரீதியான சாத்தியத்தன்மைரீதியாக அவை நெருக்கடிகளைச் சந்திக்கின்றன.

சர்வதேச தராதரங்களின்படி, சமூக ஒலி-ஒளிபரப்பு தனித்துவமான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலும், இலங்கையில் சமூக ஊடகங்களுக்கு சட்ட

அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் வெளியிடும் சுதந்திரம், சிறுபான்மை மற்றும் புறந்தள்ளப்பட்ட குழுக்களினதும் தகவல்களை பெறும், வெளியனுப்பும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாகும். சமூகத்தை அடிப்படையாக கொண்ட ஊடகங்கள் இதனை நிறைவேற்றுவதற்கு திறனுள்ள வழியாகும், மேலும் அவ்வாறான ஊடகங்களுக்கு ஆதரவும் உதவியும் அளிப்பதன் மூலம் சம அணுகுமுறையை உறுதிப்படுத்துவது அரசாங்கங்களின் கடமையாகும்.

ப்.்.ராங் லா ரூ, அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் வெளியிடும் சுதந்திரத்தை காப்பதற்கும் முன்னேற்றுவதற்குமான ஐ.நாவின் முன்னாள் விசேட ஆணையாளர், 2010.
http://www2.ohchr.org/english/bodies/hrcouncil/docs/14session/A.HRC.14.23.pdf

அதிகாரம் வழங்கக்கூடிய சட்டங்கள் எதுவும் இங்கில்லை.

சமூக வானொலி, அதிகமான கிராமப்புற சமூகங்களின் தகைமைக்குள், உள்ளூர் நிர்வாகங்களின் செயற்திறனையும் வெளிப்படைத்தன்மையையும் ஊக்குவித்து, உள்ளூர அபிவிருத்திக்கு விழிப்புணர்ச்சி தரவல்லது.
தமிழ் பேசும் மலையகத் தொழிலாளிகள், பின்தங்கிய பகுதிகளிலுள்ள விவசாய சமூகங்கள் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களின் தொடர்பாடல் தேவைகளுக்கான பொருத்தமான தீர்வாக சமூக வானொலி அமையமுடியும். பல்கலைக்கழக சமூக வானொலிச் சேவைகள், பல்கலைக்கழகங்களுக்கும் அயலிலுள்ள சமூகங்களுக்கும் நெருக்கமான தொடர்பினைத் தோற்றுவிக்கமுடியும்.

## பரிந்துரைகள்

- அரசாங்கமும் ஊடக தொழிற்துறையும் ஊடக உள்ளடக்கங்களில் பல்வகைமைத் தன்மையை அதிகரிப்பதற்கு அடிப்படை அர்ப்பணிப்பை வழங்க வேண்டும். எத்தனை ஊடகங்கள் உள்ளன என்பதை அடிப்படையாக வைத்து மதிப்பிடாது, மாறாக பாரிய உள்வாங்கும்தன்மை மற்றும் பலதரப்பட்ட சமூக, அரசியல், பண்பாட்டுக் கருத்துகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தற்போதுள்ள ஊடகங்களால் முடியுமா என்பதன் பேரில் அந்த அடிப்படை அர்ப்பணிப்பு அமையவேண்டும். மற்றைய விடயங்களில், அவ்வாறான உள்ளடக்க பல்வகைமைத்தன்மை , பிரேரிக்கப்பட்ட பொதுச்சேவை ஒலி- ஒளிபரப்பு சுயாதீன

## 2 04 சுயாதீன மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க ஒழுங்குபடுத்தல் முறை

உள்ளடக்கத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் சந்தைநோக்கிலல்லாத ஊடகத் தயாரிப்புக்களால் ஊக்குவிக்கப்பட முடியும்.

- ஒலி- ஒளிபரப்பு சம்பந்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் உரிமையாளர் மற்றும் உள்ளடக்கங்களில் பல்வகைமையை ஊக்குவிப்பதற்கான சட்டங்களையும் உருவாக்க வேண்டும். மேலும், ஏனைய வழிமுறைகள் ஊடாக, உரிமையாண்மையின் பல்வகைமையை ஒலி- ஒளிபரப்பு உரிமம் வழங்குவதனூடாக ஊக்குவிக்கலாம்.

ஒலி-ஒளிபரப்பின்போது பொதுச் சொத்தான எலக்ரோ – மக்னற்றிக் அலைக்கற்றைகள் பயன்படுத்தப்படுகின்றன. தொலைத்தொடர்பு, அவசரகால நடவடிக்கைகள், இராணுவப் பயன்பாடுகள் ஆகியவற்றைத் தவிர்த்து, எல்லையுள்ள வளமான அலைக்கற்றைகள், மிகக் குறிப்பிட்ட அளவிலேயே ஒலி-ஒளிபரப்பிற்கென ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், இது அருகிய வளமென்பதால், பெறுமதியும் வாய்ந்தது.

டிஜிற்றல் ஒலி-ஒளிபரப்பின் பயன்பாடு என்பது, இயலுமான அலைக்கற்றைகள் ஒதுக்கீட்டினுள், வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ள போதிலும், இன்னும் அது முடிவற்ற விநியோகமாகக் காணப்படவில்லை. இதன் காரணமாக, அலைக்கற்றைகளின் பாதுகாவலனாக உள்ள அரசாங்கம், அந்த வளத்தைப் பயன்படுத்தும் ஒலி-ஒளிபரப்பாளர்கள் மீது சில கடப்பாடுகளை விதிப்பதும் அதனைப் பயன்படுத்துவதற்கான சரியான விநியோகத்தை உறுதிப்படுத்துவதும் நியாயமானது. எந்த ஒழுங்குபடுத்தல் பொறிமுறையும் வேறு எந்த நலனையும் விட பொதுமக்கள் நலனுக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இலங்கையில் தற்போதுள்ள ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் முறைமை சுயாதீனமானதும் அல்ல, வெளிப்படையானதுமல்ல.

பல தசாப்தங்களாக அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருந்த ஒலி-ஒளிபரப்புத் துறை, 1992 இல் தனியார்துறை பங்களிப்பிற்கு திறந்து விடப்பட்டது. எனினும், இந்த முடிவு விசேட சட்டங்களாலோ விதிமுறைகளாலோ உருவாக்கப்படவில்லை. இது, அன்றிலிருந்து அவ்வப்போது மேற்கொள்ளப்படும் நடைமுறைகளில் ஒன்றாகவே காணப்படுகிறது.

தெளிவான விதிமுறைகளோ அல்லது சுதந்திரமான ஒழுங்குபடுத்தல் பொறிமுறையோ இதுவரை இல்லை. ஒலி-ஒளிபரப்பிற்கான உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை வரையறுக்கப்படாததாக, ஊடக அமைச்சின் அமைச்சரும் அதிகாரிகளும் தீர்மானிக்கும் பாரபட்சமானதாக, இருள்மயமானதாக உள்ளது.

இதற்கு, பிரசுரிக்கப்பட்ட விதிமுறைகளோ அல்லது தகுதிநிலைகளோ கிடையாது. இவை இல்லாததன் காரணமாக, பொதுச் சேவை ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களுக்கு சட்ட ஆதரவை வழங்கும் நிலையில், அனுமதிப்பத்திரம் வழங்கும்முறை இல்லாதுள்ளது. அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறைகளில் இதுவரை அவ்வாறான விடயங்களில் அரசு ஆர்வம் காட்டியதும் அடையாளம் காணமுடியாதுள்ளது.

BOX 06

## சுயாதீன ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குமுறையாளர்: 1997 இல் தவறான தொடக்கம

மார்ச் 1997 இல், அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கம் நாட்டின் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களை முறைப்படுத்தும் அதிகாரசபை ஒன்றை உருவாக்கும் எண்ணத்துடன், 'இலங்கை ஒலி-ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலத்தை' பிரேரித்தது. ஒலி-ஒளிபரப்பு நிலையங்களை நிர்வாகப்படுத்தவும், ஒலி-ஒளிபரப்பு உரிமங்களை வழங்கவும் இப்புதிய அமைப்பின் மூலம் திட்டமிடப்பட்டது

அரசாங்க ஒலி-ஒளிபரப்பாளர்கள் மற்றும் அரசாங்கம் சாராத ஒலி-ஒளிபரப்பாளர்கள் ஆகிய இருதரப்பினரையும் எதிர்பார்க்கப்படும் பணித்தராதரம் மற்றும் பொறுப்புடமை ஆகியன தொடர்பில் வேறுபடுத்தப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்குள் ஆட்படுத்தியமையை எதிர்த்து, இச்சட்டமூலத்திற்கு எதிராகப் பரிந்துரைக்குழுக்கள் உயர்நீதிமன்றத்தில் மனுச்செய்தன. இது பாகுபாடு காட்டும் ஒரு செயற்பாடு என வாதிட்ட அவை, அரசியலமைப்புரீதியில் இது முன்னெடுக்கப்பட நியாய அடிப்படை அவசியமென எடுத்துரைத்தன.

இந்த சட்டமூலத்தை ஆராய்ந்த நீதிமன்றம், அத்துக்கோரளை எதிர் மற்றவர்கள்- இலங்கையின் சட்டமா அதிபர் என அறியப்பட்ட இந்த வழக்கில், பிரேரிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையை அரசியலமைப்புரீதியாக கவனத்திற்கொள்ளவேண்டுமெனக் கூறியது.

*'ஆர்ட்டிகல் 19' இன் வெளியீடான 'ஒலி-ஒளிபரப்பு சுதந்திரம்: சர்வதேச தராதரங்களும் வழிகாட்டுதல்களும்' என்ற பதிப்பிலிருந்து உயர்நீதிமன்றம் குறிப்பிடுவதன் பிரகாரம், ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையானது சுதந்திரம் மற்றும் பாரபட்சமின்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்படடுள்ளதாவது — "உரிமங்களை வழங்கும் அமைப்பு அரசாங்கத்திலிருந்து வேறுபட்டு சுயாதீனமாவது அவசியம். இந்த அமைப்பு பொது ஒலி-ஒளிபரப்பை முகாமைசெய்வதாகவோ அல்லது தனித்த அதிகாரசபையாகவோ அமையலாம். எவ்வாறிருந்தாலும் - ஒலி-ஒளிபரப்பு கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலும் விருத்திசெய்வதிலும் அனுசரணையாக இருப்பதாலும் ஒட்டுமொத்த ஒலி-ஒளிபரப்பில் பன்முகத்தன்மையை உறுதிப்படுத்தும் தந்திரோபாயத்தை இணைப்பாக உள்ளடக்கியிருப்பதாலும் - பொது மற்றும் தனியார் ஒலி-ஒளிபரப்பு மீதான ஒரு தனித்த அதிகாரசபையாக அமைவது சிறப்பானது. சுயாதீனமான உரிமம் வழங்கும் அமைப்பு, அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்வதிலும், ஒலி-ஒளிபரப்பின் ஏனைய தொழிலநுட்பவிடயங்கள் தொடர்பிலும் பொறுப்புடமையை அவசியம் கொண்டிருக்கவேண்டும்."*

இந்த குறிப்பிடத்தகுந்த தீர்ப்பில் ஊடக பன்முகத்தன்மையின் அவசியத்தை குறிப்பிட்ட உயர்நீதிமன்றம் கீழ்வருமாறு அடிக்கோடிட்டது. " அடிப்படை உரிமைகளான கருத்து மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம் பேணப்படுவதாகவிருந்தால் பொதுமக்களின் விவகாரங்கள் பற்றிய போதுமான தகவல் திரட்டலும் மாற்றுப்பார்வைகள் குறித்த சுதந்திரமான, விருப்பு வெறுப்பற்ற போட்டித்தன்மைக்கான களமும் அங்கு அமைதல் வேண்டும். உரிமம் பெறுவதற்கான நிபந்தனையாக இந்த தகுதிநிலை உறுதிப்படுத்தப்படுவதுடன் அது பேச்சு சுதந்திர உரிமையை நேயர்களும் பார்வையாளர்களும் வேறுபட்ட பார்வைகளை கவனத்திற்கொள்ளவும், தாம் சார்ந்து சிந்திக்கவும், தமது தனிப்பட்ட தெரிவுகளை மேற்கொள்ளவும் ஊக்குவிப்பதாகவும் அமையவேண்டும்."

மூலம்: http://www.article19.org/resources.php/resource/2472/en/sri-lanka:-athukorale-and-others-v.-attorney-general-of-sri-lanka

## அலைக்கற்றை ஓர் அபூர்வமான பொதுச்சொத்து

இந்திய உயர்நீதிமன்றம் 1995 இல் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பில், எலக்ரோ – மக்னற்றிக் அலைக்கற்றையில் வானலைகளும் அலைவரிசைகளும் ஓர் பொதுச்சொத்தாகவே கருதப்படமுடியும் எனக் குறிப்பிடப்பட்டது. இதன்படி அலைக்கற்றையின் பயன்பாடானது, பொதுமக்களின் நலனை முன்னிறுத்தியும் அவர்களினது உரிமைகள் மீறப்படாதிருப்பதைப் பாதுகாத்தும் - ஓர் பொது அதிகாரசபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுதல் அவசியமாகிறது. ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் வானலைகளைப் பயன்படுத்துவதன் காரணமாக, ஏனைய பொதுச்சொத்துக்கள் போலவே, அப்பயன்பாட்டில் கட்டுப்பாடு உள்ளார்ந்து ஏற்படுகின்றது.

தூரதர்ஷனைவிட தனியார் முகவர் ஒருவருக்கு கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் சிறப்பு உரிமையை வழங்குவது தொடர்பில், ஒரு கிரிக்கெட் அமைப்பிற்கு அவ்வாறான உரிமை இருக்கின்றதா என்பதில் இந்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சுக்கும் இந்திய கிரிக்கெட் சங்கத்திற்கும் இடையே பிரச்சினை உருவானது.

ஒலி-ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலத் தீர்மானம் தொடர்பில் இலங்கை உயர்நீதிமன்றம் தனது சட்ட நிலைப்பாட்டை பின்வருமாறு தெரிவித்தது: “உரிமங்களை ஒதுக்கீடு செய்யும் (ஒலி-ஒளிபரப்பு) அமைப்பு அரசாங்கத்திலிருந்தும் சுயாதீனமானது. மக்களின் நலனுக்காக, வரையறுத்த எண்ணிக்கையில் இருக்கும் வானலைகள் / அலைவரிசைகளை பயன்படுத்துவது தொடர்பில் இறுதியான உறுதிப்பாட்டை தரவேண்டியது அரசே. இது, வானலைகளை / அலைவரிசைகளை ஒழுங்குபடுத்துவதும் கட்டுப்படுத்துவதும் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் கைகளில் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டுவிட்டதான அர்த்தத்தை தராது. வானலைகள் / அலைவரிசைகள், அகில உலகம் சார்ந்து பொதுச்சொத்தாகவே எம்மால் பார்க்கப்படுகின்றது. இதன்படி, இந்த பொதுச்சொத்தின் காப்பாளரே அரசாங்கம் ஆகும்.”

மூலம் : http://www.mib.nic.in/WriteReadData/documents/SUPREMECOURTJUDGEMENTONAIRWAVES.htm

https://www.colombotelegraph.com/index.php/surrendering-airwaves-and-liberty-to-nepotism/

## பரிந்துரை

- ஒலி-ஒளிபரப்புத்துறையை மக்கள் நலன் அடிப்படையில் ஒழுங்குபடுத்துவதற்கு, சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் அமைப்பொன்றை உருவாக்க, அரசாங்கம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். அந்த சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் அமைப்பு, மக்களுக்குப் பொறுப்புக்கூறும் தன்மையுடையதாகவும், அரசியல் - வர்த்தக நலன்களிலிருநடது சுதந்திரமானதாகவும் இருக்கவேண்டும். இந்த அமைப்பு, ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் நடைமுறைகளை வெளிப்படையானதாக, போட்டித்தன்மை மிக்கதாக, நேர்மையானதாக, பொறுப்புக் கூறுவதாக மாற்றுவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த முழு நடவடிக்கையையும் மக்கள் கண்காணிப்பு மற்றும் கருத்துகளை அனுமதிக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பொன்றினால் முகாமைக்குட்படுத்தப்படவும் வேண்டும். 1992 முதல் தன்னிச்சையான, ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் நோக்கத்தைப் பூர்த்திசெய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் இயலுமான விரைவில் கைவிடப்பட வேண்டும். தற்போதுள்ள முற்தேதியிடப்பட்ட அனைத்து ஒலிபரப்பு உரிமங்களும் இதன்வழி ஒழுங்குபடுத்தப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட வேண்டும்.

## 2 05 அரசு மற்று சமூக மைய அமைப்புக்கள் ஆகியன சமூக ஊடகங்கள் விருத்தியாவதை ஆர்வத்துடன் ஊக்குவித்தல்

சமூக ஊடகங்கள் என்பது தாங்கள் பணிபுரியும் சமூகத்திற்கு பொறுப்புக்கூறுவதனை அடிப்படையாக வைத்து குணாதிசயப்படுத்தப்படுகின்றன என யுனெஸ்கோ தெரிவிக்கின்றது. பொதுமக்கள் பங்களிப்புச் செய்வதற்கான முக்கியமான இடைவெளியை பெறுவதற்காகவும், அரசியல் அல்லது வர்த்தக தலையீடுகள் இன்றி சுதந்திரமாக தனித்து இயங்குவதற்கான உரிமை குறித்த தேவை காரணமாகவும் உருவான மக்கள் இயக்கங்களின் பெறுபேறாக, இவை உருவாகின்றன.[74]

சமூக ஊடகங்கள் என்பது, சமூகங்களில் ; சமூகத்திற்காக ; சமூகத்தைப் பற்றி ; சமூகத்தினால் இயக்கப்படுவது. 'சமூகம்' என்பது புவியியல் சார்ந்ததாக - நகரம், கிராமம், மாவட்டம் அல்லது தீவு என எதுவாகிலுமாக அமையலாம் அது பொதுவான நலன் கொண்ட மக்கள் குழுவொன்றாகவும் காணப்படலாம். அவர்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியிலேயே வாழ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

குறிப்பாக, சமூக வானொலிகள் சமூகத்தில் பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை ஆகியவற்றுக்கு பங்களிப்புச் செய்வதில் முக்கிய பாத்திரத்தை வகிக்கலாம். அது, சமூகத்தில் விளிம்புநிலையில் உள்ளவர்கள் சமூகத்தில் பங்குகொள்வதற்கான வெளியை உருவாக்கி வளர்த்தெடுக்கின்றது.

74 http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/community-media/

இலங்கை நாட்டின் பல பகுதிகளில் ஆயிரக்கணக்கான சிறிய சமூகம் சார்ந்த அமைப்புகள் உள்ளன. மேலும், இவை பல வலையமைப்புகளையும் கொண்டுள்ளன. ஆனாலும், இவர்களில் அநேகமானவர்களுக்கு அடித்தளத் தொடர்பாடல் பற்றிய புரிதல் இல்லாததால், சமூக ஊடகம் என்பது அவர்களால் ஊக்குவிப்படுவதாகவில்லை.

ஆனால் இதற்கு மாறாக, ஏனைய வளர்ந்துவரும் ஆசிய நாடுகளான பங்களாதேஷ், இந்தியா,

இலங்கை உண்மையான சமூக வானொலியைக் கொண்டிருக்கவில்லை!

"எவ்வாறிருந்தாலும் இலங்கையிலுள்ள சமூக வானொலி உண்மையில் சமூக வானொலியல்ல. அந்த வானொலி நிலையங்கள் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு இயக்கப்படுகின்றனவே தவிர, சமுதாயத்தால் அல்ல. உள்ளடக்கங்களிலும் கூட அரசாங்கம் தனது கட்டுப்பாட்டை வைத்திருக்கின்றது (அரசியல் சார்பற்றதாக செயற்கையாக சமூக வானொலியை வைத்திருப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை)."

- இலங்கையில் ஊடகம் பற்றிய கற்கை (வடக்கு – கிழக்கு தவிர்ந்தது), ஏப்ரல் 2005. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினதும் சர்வதேச ஊடக ஆதரவினதும் அறிக்கை. http://www.cpalanka.org/a-study-of-media-in-sri-lanka-excluding-north-and-east/

BOX 08

## சமூக வானொலிக்கான வழிகாட்டும் கோட்பாடுகள்

உண்மையான சமூக வானொலி என்பது:

- சுயாதீனமான ஆசிரியர்பீடம் மற்றும் 'ஆதாயமற்ற' நோக்கம்
- 'சமுதாய நலன்' அடிப்படையில், புவியியல்ரீதியில், குறித்த சமூகங்களின் தேவைகளுக்கு சேவையாற்ற வடிவமைக்கப்பட்டது.
- எந்த சமூகத்திற்கு சேவையாற்ற வடிவமைக்கபபட்டதோ, அச்சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை நிர்வாகக் கட்டமைப்பில் கொண்டது.
- சேவையாற்றும் சமூகத்தின் தொடர்பிலான நிகழ்ச்சிகளை வழங்குவது.

இந்தோனேசியா, நேபாளம், பிலிப்பைன்ஸ் போன்றவற்றில் பல சமூகம் சார்ந்த சிறிய சமூக அமைப்புகள் வானொலி நிலையங்களை இயக்குகின்றன. சில சமூக தொலைக்காட்சிகளையும் இயக்குகின்றன. அந்த நாடுகளுடைய ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் வடிவமைப்புகள் அந்த ஈடுபாட்டிற்கு உற்சாகம் அளிக்கின்றன.

இலங்கையில் உண்மையான சமூக ஒலி-ஒளிபரப்பாளர்கள் இல்லை என்பது முக்கியமானது. 'சமூக வானொலி' என்பது முற்றிலும் ஒவ்வாத ஒன்றாகிவிட்டது. மேலதிக விபரங்களுக்கு, பெட்டி 8 யைப் பார்க்க

சிவில் சமூகத்தினர் இதற்காகப் பல வருடங்களாக குரல்கொடுத்து வருகின்றபோதிலும், தொடர்ச்சியாக இலங்கையை ஆட்சிபுரிந்த அரசாங்கங்கள் சமூக ஒலிஒளிபரப்பாளர்களுக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்கக்கூடிய, ஆதரவு தரக் கூடிய, எந்தவித சட்ட நடைமுறை குறித்த யோசனைகளையும் முன்வைக்கவில்லை. சமூக வானொலிச் சேவைகளை நடத்துவதற்குச் சில பல்கலைக்கழகங்களும், நன்கு ஸ்தாபிக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளும் விண்ணப்பித்துள்ள போதிலும் அவை இதுவரை வெற்றியளிக்கவில்லை.

சமீப காலங்களில் சில பொதுமக்கள் குழுவினர், நாடாளாவிய இணைய வசதிகளைப் பயன்படுத்தி, முற்றுமுழுதாக இணையத்தை அடிப்படையாகக் கொண்ட இணைய வானொலி சேவைகளை ஆரம்பித்துள்ளனர். உதாரணங்கள்:

- ரேடியோ களுத்துறை (http://www.radiokalutara.com), சில ஆர்வம்

மிக்கவர்களால் இயக்கப்படுகின்றது.

- நெனசல வானொலி (http://www.nenasalaradio.lk) குருநாகல் அஸ்வெதுமவில் உள்ள அபினவராம அபிவிருத்தி மன்றத்தினால் இயக்கப்படுகிறது.
- கம்பஸ் ரேடியோ (http://www.campusradio.lk), கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி மாணவர்களால் இயக்கப்படுகிறது.

அலைக்கற்றைகள் போலில்லாமல், வெளிசார்ந்த பிரச்சினைகள் எதனையும் இணைய வானொலி சேவைகள் எதிர்நோக்கவில்லை. அதுபோல, மரபார்ந்த அடிப்படையிலான ஒழுங்குபடுத்தல் என்ற வாதங்களுக்கும் இந்த சேவைகள் உட்படவில்லை.




கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகத்தில் ‘கம்பஸ் இணைய வானொலி’ தொடங்கிவைக்கப்படுகிறது

# பரிந்துரைகள்

- சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் அமைப்பிற்கு மேலதிமாக, சமூகத்திற்கு சொந்தமான அவர்களால், இயக்கப்படக்கூடிய ஒலி – ஒளிபரப்பாளர்களை கொண்ட கட்டமைப்பிற்கு உரிமம் வழங்குவது தொடர்பான ஒரு முழுமையான அமைப்பு அவசியமானது. ஒலி – ஒளிபரப்புத்துறையில் பல்வகைமையையும் உள்ளார்ந்து எடுத்துக்கொள்ளும் தன்மையையும் ஊக்குவிப்பதே இதன் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். இதன்படி – ஒரு சமூக ஒலி – ஒளிபரப்பாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள் குறித்த தெளிவான வரைவிலக்கணங்கள், எளிமையான விண்ணப்பிக்கும் முறைகள் மற்றும் இலவச கட்டணம் அல்லது குறைந்த அனுமதிகோரும் கட்டணம் ஆகியவை உள்ளடங்கிய சமூக ஒலி – ஒளிபரப்பாளர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பிலான விசேட விதிகள் போன்றன இந்த புதிய அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அனைத்து உரிமம் வழங்கும் நடைமுறைகளும் முன்னரே நெறிப்படுத்தப்பட்ட தெளிவான தகுதி நிலைகளையும் விதிமுறைகளையும் அடிப்படையாகக்கொண்டும் பொதுமக்கள் பங்கேற்றலுக்கு அனுமதிக்கப்பட்டும் இருக்கவேண்டும்.

- வெவ்வேறு புவியியல் பிரதேசங்களில் உச்ச அளவில் அலைவரிசைகளை பயன்படுத்துவதை இலக்காகக்கொண்டும், உயர் வலுக்கொண்ட ஒலி – ஒளிபரப்பு தொடர்புகளின் தலையீடுகளில் இருந்து பாதுகாப்பதாகவும் - தாழ்வலு சமூக ஒலி – ஒளிபரப்புக்கு என, ஒரு தொகுதி ஒலி – ஒளிபரப்பு அலைவரிசைகள் முற்பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

BOX 09

## இலங்கையில் சமூக வானொலி: தொன்மமும் யதார்த்தமும்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், 1981 இல், மகாவலி சமூக வானொலியை முன்னெடுத்தது. பாரிய மகாவலி திசை திருப்பல் திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு தொடர்பாடல் அனுசரணையை வழங்குவதற்காக இந்த வானொலித்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

ஏனைய நாடுகளின் அனுபவங்களின் அடிப்படையில் ஆதாயம் பெறும் சமூகங்களின் ஈடுபாட்டுடன் மகாவலி சமூக வானொலியின் நிறுவனர்கள் பங்கேற்பு உத்திமுறையை வகுத்துக்கொண்டனர். யுனெஸ்கோ, டென்மார்க் அரசாங்கம் போன்ற சர்வதேச ஆதரவுடன் ஏனைய மூலங்களையும் பயன்படுத்தி – கிராந்துருகோட்டே, கொத்மலை, மகாஇலுப்பல்லாம ஆகிய இடங்களில் உள்ளூர் வானொலி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மேலும், சில இருவழி ஒலிபரப்பு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளடக்க தயாரிப்புக்களுக்கும் மேலதிகமாக, பங்கேற்பு வானொலி முறையியல்களில் பல ஒலிபரப்பாளர்கள் பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டனர்.

இந்த விடயங்களிற்கு மாறாக, மகாவலி சமூக வானொலி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் உள்ளார்ந்த ஆதரவை இழந்ததுடன், 1990 இல் சர்வதேச நிதியுதவி நிறுத்தப்பட்டதும் அது தன் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கடினங்களை சந்தித்தது. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் ஒலிபரப்பாளரும் ஊடக ஆய்வாளருமான எம். ஜே.ஆர்.டேவிட் பின்நாட்களில் ஆவணப்படுத்தியதன்படி, வரலாற்றுரீதியாக அரசாங்க தகவல்களை ஒருவழித் தொடர்பாடல் மூலம் மக்களுக்கு எடுத்துச்சென்ற இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினுள் மகாவலி சமூக வானொலி மாதிரி பிரபல்யத்தை பெறவில்லை.

2003 இல் யுனெஸ்கோ மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஆதரவுடன், இலங்கையின் மிக பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான பதுளையில், பண்டாரவளை என்னும் இடத்தில் ஊவா மாகாணசபையினால் ஊவா சமூக வானொலி அமைக்கப்பட்டது. சமூகங்கள் தாமாகவே தமது ஊடக உள்ளடக்கத்தை சொந்தமாகவே தயாரிப்பதற்கு ஏற்ற வகையில், குறைந்த செலவீட்டிலான டிஜிற்றல் வானொலி தயாரிப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை இது நோக்கமாக கொண்டிருந்தது. இந்த உத்தியின் அங்கமாக, 40 இளம் ஒலிபரப்பாளர்களும், 400 ஐ அண்மித்த தன்னார்வ சமூக தொண்டர்களும் சமூக ஒலிபரப்பிலும் பங்கேற்பு நிகழ்ச்சித்தயாரிப்பிலும் பயிற்சிகளை பெற்றனர்.

மகாவலி மற்றும் ஊவா சமூக வானொலிகள் தொடர்ந்து இயங்குவதில் தீவிரமான சவால்களை எதிர்கொண்டன. வெளிநாட்டு உதவிகளில் அதிகம் தங்கியிருப்பது தவறாக அமைந்தது. மகாவலி சமூக வானொலியின் வளங்கள் பின்னர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தால் கையேற்கப்பட்டதுடன், அந்த சேவையும் முடிவுக்கு வந்தது.

மகாவலி மற்றும் ஊவா சமூக வானொலிகளின் இந்த பாரிய பின்னடைவுக்கு அவை சமூகங்களில் உண்மையில் வேரூன்றியிராததே காரணமாக அமைந்தது. அவை அரச ஒலிபரப்பாளர்களின் கிராமப்புற தொடர்பு மையங்களாகவே இருந்தன. ஊடகவியலாளர் நாலக்க குணவர்தன 2003 இல் எழுதியதின்படி: “இந்த நிலையங்கள் இயங்குவதற்கு நேயர்கள் தரப்பில் எதுவுமே இருக்கவில்லை. இவை மிக கடுமையான ஊடக உள்ளடக்கத்தை கொண்ட, அரசியல்களுக்கு இடம் தராத, அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு வழியில்லாதவாறு மிக இறுக்கமான அதிகார கட்டமைப்பினால் கொழும்பிலிருந்து நிர்வகிக்கப்பட்டன. நிகழ்ச்சித் தயாரிப்புக்களிலும் தீர்மானம் மேற்கொள்வதிலும் மக்கள் பங்கேற்பு, நேயர்கள் தமது சிறிய நிதியுதவி மூலம் வானொலி நிலையத்தை இயக்குவதற்கு ஏற்ற நேயர் பங்களிப்பு போன்றவற்றை ஆதரிக்கக்கூடிய வகையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒரு சமூக வானொலியாக இருக்கவில்லை.

2012 இல், ஒலிபரப்பாளர்களான திலக் ஜெயரத்ன, சரத் கலப்பொத்த ஆகியோர் பின்வருமாறு கூறினர்: “மக்களுக்கு ஒரு ஊடகம் சொந்தமாக இருக்குமானால், அது ஊடக செயற்பாடுகள் மூலம் ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் ஒரு தளத்தை வழங்குமென எவரொருவரும் வாதிட முடியும். சமூக வானொலி அவ்வாறான வெளியை தரக்கூடியது. துரதிர்ஷ்ட வசமாக, இலங்கையில் சமூக வானொலிகள் சமூகத்திற்கு சொந்தமாக இருக்கவில்லை. மாறாக, ஜனநாயக உரிமைகளை மீறுவதில் பிரசித்தமான அரசிடமே அது இருந்தது.”

இதனால், இலங்கையில் நேர்மையான, உண்மையான சமூக வானொலி இன்னும் நிறைவேறாத ஒன்றாகவே உள்ளது. வானலைகளில் உண்மையான ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தக்கூடிய மறுசீரமைப்புக்களால், இது என்றோ ஒரு நாள் யதார்த்தமாகலாம்.

மூலங்கள்:


Chapter on Mahaweli Community Radio by M J R David in: A Passion for Radio, Ed. Bruce Girard (2001). http://comunica.org/passion/contents.htm

Description of Uva Community Radio (2003). The Communications Initiative. http://www.comminit.com/global/content/uva-community-radio

Radio suffers as Colombo bosses call the shots. Panos Features, London. October 2003. http://panos.org.uk/features/radio-suffers-as-colombo-bosses-call-the-shots/

The Political Economy of Electronic Media in Sri Lanka. Tilak Jayaratne and Sarath Kellapotha. 2012. http://goo.gl/uapyDM

# இ

# அனுமதிப்பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடுகள்

ஒலி-ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்குதல் என்பது பல்வகைமையை எய்துவதற்கான ஒரு செயற்திறனான வழியாகும். ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது இதனைக் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. வெவ்வேறு வகையான ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கு சமமான ஒதுக்கீடுகளுடன் கூடிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டியது முக்கியமாகும் அதேவேளை, தொலைத்தொடர்பு போன்ற போட்டியிடும் பயன்பாட்டாளர்களுடன், ஒலி-ஒளிபரப்புச் சேவைகளுக்கு போதுமான அலைவரிசை ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதும் முதன்மையானதாகும்.

## 2|06 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம் பொதுமக்களின் அதிகூடிய நலனை கருத்தில் கொண்டதாக காணப்படுதல்

அலைக்கற்றைகள் என்பது எல்லைப்படுத்தப்பட்ட பொதுவான வளம் என்பதால், அதனை வேறுபட்ட சேவைகள் செயற்திறனுடனும் சமவாய்ப்புக்களிலும் அணுகும் விதத்தில். அது சிறப்பாக நிர்வகிக்கப்பட வேண்டும்.

அதிகளவான விண்ணப்பங்கள் காரணமாக, அலைக்கற்றைப் பாவனை அதிகளவு குழப்பம் மிகுந்ததாக மாறியுள்ளது:

- 1920 இலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வானலை ஒலி-ஒளிபரப்பு
- பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு (கடல், வான், பொலிஸ்), வள முகாமைத்துவம், போக்குவரத்து, வானொலி வானியல் போன்ற துறைகளில் அரசாங்கமும் ஆய்வுகளும் பயன்படுத்துகின்றன
- மக்களுக்கான வர்த்தக தொடர்பாடல் சேவைகள் (குரல், தரவுகள், வீட்டு வலையமைப்பு)
- ரெலி மெடிசின் மற்றும் தானியங்கிக் கட்டுப்பாட்டுச் சேவைகள் உட்பட தொழிற்துறை, விஞ்ஞான மற்றும் மருத்துவ சேவைகள

அலைக்கற்றை முகாமைத்துவம் எனப்படுவது, வானொலி அலைவரிசைகளை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி, ஒட்டுமொத்த சமூக ஆதாயத்தைப் பெறுவதற்கான செயற்பாடாகும். ‘அலைக்கற்றை’

எனப்படுவது, 3 கிலோ ஹேர்ட்ஸ் முதல் 3000 கிலோ ஹேர்ட்ஸ் வரையிலான தந்தியில்லா தொடர்பாடல்களிற்கு பயன்படுத்தப்படும் அலைவரிசைகளைக் குறிப்பதாகும். வானொலி அலைக்கற்றை மாசுபாட்டை தணிப்பதும், பயன்படுத்தக்கூடிய வானொலி அலைக்கற்றைகள் மூலம் உச்சப்பயனை பெறுவதுமே அலைக்கற்றை முகாமைத்துவத்தின் நோக்கம். அலைக்கற்றைகளின் ஒரேயொரு பாதுகாவலனான அரசாங்கமே, அதனை வெளிப்படை தன்மையுடன் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பைக் கொணடிருக்கிறது.

எல்லைப்படுத்தப்பட்ட அலைக்கற்றைகளுக்கு வேறுபட்ட தொகுதியினரும், பயன்பாட்டாளர்களும் போட்டியிடும் நிலையில், வெவ்வேறு சேவைகளுக்குமான அலைவரிசைகளை ஒதுக்கீடுசெய்ய, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, தேசிய அலைவரிசை ஒதுக்கீட்டுத் திட்டம் ஒன்றைப் பயன்படுத்தியது.

அலைவரிசை ஒதுக்கீடு என்பது, அலைக்கற்றைப் பொறியியல் கோட்பாடுகள், தேசிய ஒழுங்குபடுத்தும் கொள்கைகள், சர்வதேச தராதரம் ஆகியவற்றின் அடிப்படையில், தேவைக்கேற்றவாறு, பொருத்தமான வானொலி அலைவரிசைகளை அடையாளப்படுத்துவதாகும்.

இலங்கையில் இது உரிய முறையில் இடம்பெறவில்லை. அரைகுறையான ஒலி-ஒளிபரப்பு தாரளமயப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட 1990 இன் ஆரம்பத்திலிருந்து, எந்தவித உரிய நடைமுறைகளையும் பின்பற்றாமல் அலைவரிசைகள் தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

இதன் பெறுபேறாக, வரையறைக்குட்பட்ட அலைக்கற்றைகளில் சில பிரிவுகள் இடமற்ற நெருக்கடியால் நிரம்பியுள்ளன (உதாரணம்:

*"இலங்கையில் ஊடக உரிமங்கள் ஒழுங்குமுறைகளையோ நிபந்தனைகளையோ கொண்டிருக்கவில்லை: அவர்கள் தயவுடன் கேட்பதற்கு ஏற்ற வகையில் அவர்களால் அதனை செய்ய முடிந்தது. எமது வானொலி அலைவரிசை அலைக்கற்றை மிகப்பெருமளவில் முறைகேடாக நிர்வகிக்கப்பட்டது. நாம் தற்போது அலைவரிசைகள் இல்லாதுள்ளோம். எவ்வாறு அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டன என்பது எமக்கு நன்றாக தெரியும்.*

*"இந்த பொது வளத்தை உச்ச அளவில் முகாமைத்துவம் செய்வதற்கு நன்கு நிரூபிக்கப்பட்ட முறையியல்கள் உள்ளன. இவற்றுள் நான் இலங்கைக்கு பிரேரிக்ககூடிய தரமான வழி, அலைவரிசைகளை ஏலத்திற்கு விடுவதாகும். இது ஆர்வமுள்ள தரப்புக்களுக்கு கேள்விகோரும் சந்தர்ப்பத்தை தருவதோடு அரசாங்கத்திற்கு நிதியையும் பெற்றுத்தரும்.*

- கலாநிதி . ரொஹான் சமரஜீவ, முன்னாள் பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (1998 – 1999), நிறுவனத் தலைவர் - லேர்ன்ஏசியா

பண்பலை வானொலிச் சேவைகள்). சில சந்தர்ப்பங்களில், அலைவரிசைகளை செல்வாக்குள்ள நபர்கள் தங்களுக்கென 'ஒதுக்கியும்' வைத்துள்ளனர்.

ஊடக அமைச்சிடமிருந்து அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதும், இலங்கையின் அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி-ஒளிபரப்பாளர்களும் தங்கள் அலைவரிசை ஒதுக்கீட்டை, தொலைத்தொடர்பு தொழிற்துறை ஒழுங்குமுறையாளரான, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அலைக்கற்றைகள் பயன்படுத்தப்படுவதையும், நிலைநிறுத்தப்பட்ட செய்மதி சுற்றுப்பாதை விடயங்களையும் நிர்வகித்து, கட்டுப்படுத்தும் ஆணை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது, மேலும், அலைவரிசைகளை அவசியம் என கருதும் தருணங்களில் இடைநிறுத்துவதற்கும், இரத்துச் செய்வதற்கும், தடை செய்வதற்குமான அதிகாரத்தையும் அது கொண்டுள்ளது.[75] அது, 1991ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்பு சட்டத்தின் கீழ் இவற்றுக்கான அதிகாரங்களைப் பெற்றுள்ளது.[76]

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, அலைவரிசை முன்பதிவு, ஒதுக்குதல், கண்காணிப்பு மற்றும் வருடாந்த புதுப்பித்தல் போன்றவை குறித்த விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.[77] ஊடக நிறுவனமொன்றுக்கு உரிமம் வழங்கப்பட்டதும், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு குறிப்பிட்ட நிறுவனத்தின் தொழில்நுட்ப தேவைகளை மதிப்பீடு செய்வதுடன், இன்னமும் மிகுதியாகவுள்ள பகுதிகளில் இருந்து அலைவரிசையை ஒதுக்கீடு செய்யும். அதன் பின்னர், அலைவரிசைக்கான கட்டணத்தைச் செலுத்துமாறு குறிப்பிட்ட நிறுவனம் கோரப்படும். அஃதொரு வருடாந்த கட்டணமாகும். அது, கோரப்பட்ட அலைவரிசை மற்றும் டிரான்ஸ்மிட்டரின் வலுவைப் பொறுத்து வேறுபடும்.[78]

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, ஒதுக்கப்பட்ட அவைரிசைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான விபரங்களைத் தனது இணையத்தளத்தில் வெளியிடுகின்றது.[79] ஆனால், இது மாத்திரம் அலைக்கற்றைகள் பொதுநலனிற்கு உகந்த விதத்தில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்குப் போதுமானதல்ல.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ரி.என் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் பேராசிரியர் தம்மிக கங்காநாத் திசநாயக்க இவ்வாறு தெரிவிக்கின்றார் : " எங்களுடைய வானொலி அலைக்கற்றைகளை தற்சமயம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும்

75 http://www.trc.gov.lk/spectrum-management/spectrum-management-in-sri-lanka.html

76 http://www.commonlii.org/lk/legis/num_act/slta25o1991337/

77 http://www.trc.gov.lk/frequency-licensing.html

78 TRCSL Frequency reservation fees gazetted on 1 November 1999 under the Sri Lanka Telecommunications Act No 25 of 1991: http://www.trc.gov.lk/images/stories/spectrum/Gazette.pdf

79 http://www.trc.gov.lk/frequency-assignments.html

ஆணைக்குழு நிர்வகிக்கின்றது. பொதுமக்களுக்கு அது எவ்வாறு இயங்குகின்றது என்பது தெரியாது, இதில் வெளிப்படைத் தன்மையில்லை. இது மாற்றமடையவேண்டும். எங்களுக்கு வெளிப்படையான, பொறுப்புக்கூறும் அலைக்கற்றை நிர்வாகம் அவசியம். மேலும், நாங்கள் அனலொக்கில் இருந்து டிஜிட்டல் ஒலிபரப்பு முறைக்கு மாறும்போது பல்கலைக்கழகங்கள், சிவில் குழுக்கள் உட்பட பல தரப்பினரும் அவர்களுக்கான அலைவரிசைகளைப் பெற விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.''

குறுகிய காலம் முதல் நீண்ட காலம்வரை, அலைவரிசை ஒதுக்கீடு தொடர்பான அரசாங்கத்தின் ஒழுங்குமுறைகள் தொடர்பற்றதாகி வருவதே அதிகரித்துவருகிறது என்கிறார் கலாநிதி ரோஹான் சமரஜீவ. ''இலங்கை டிஜிட்டல் ஒலி-ஒளிபரப்பிற்கு துரிதமாக நகரவேண்டும். போதுமான அலைக்கற்றைகள், இணையம் ஆகியவற்றினால் முறைமைகள் 'ஒலி-ஒளிபரப்பிலிருந்து' 'சுருக்கப்பரப்பிற்கு' மாறுவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், தற்போதைய பெறுநர்களும் திரட்டிய அளவில் அத்தகைய முறைமைகளுக்கு மாறியும் வருகின்றனர்'' எனவும் அவர் கூறுகிறார்.

இலங்கையில் ஒலி-ஒளிபரப்பு உரிமம் பெற்ற 41 நிறுவனங்களின் பட்டியல் பின்னிணைப்பு 6 இல் இணைக்கப்பட்டுள்ளது.

## பரிந்துரைகள்

- அலைக்கற்றைகள் பொது ஒதுக்கீட்டில், தெளிவான வெளிப்படையான திட்டமிடல் செயன்முறைகள் அவசியம். (அதன்படியே, குறித்த உரிமம் வழங்கும் நடைமுறையும் அமைய வேண்டும்). உத்தேச சுயாதீன ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குபடுத்துநர், பொதுச் சேவை, வர்த்தக மற்றும் சமூக ஒலி-ஒளிபரப்பாளர்கள் மத்தியில் சமமான விதத்தில் அலைவரிசைகள் ஒதுக்கப்படுவதை உறுதியாக மேற்கொள்வதற்காக, ஒலி-ஒளிபரப்பு அலைவரிசைகள் எவ்வாறு திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றன என்ற விடயத்தில் அரசாங்கத்துடன் இணைந்து நெருக்கமாகச் செயற்பட வேண்டும்.

- இற்றைப்படுத்தப்படும் அலைவரிசை அலைக்கற்றைத் திட்டம், வெளிப்படையாகவும் சிவில் சமூகம் உட்பட ஆர்வமாயுள்ள ஏனைய பங்கேற்பாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் விதத்திலும் அமையவேண்டும். வெவ்வேறு வகை ஒலி-ஒளிபரப்பாளர்கள் மத்தியில், அலைவரிசைத் தொகுதிகளில் (பண்பலை அலைக்கற்றை போன்ற) உப-ஒதுக்கீடுகளை மேற்கொள்வதும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த உப-ஒதுக்கீடுகள், ஒலி-ஒளிபரப்பில் பல்வகைமையை ஊக்குவிக்கும் குறிக்கோளுக்கு ஆதரவாயிருப்பது அவசியமானது. சமூக ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் திட்டத்துடன், அதனை இன்னமும் வலுப்படுத்துவதாக, குறித்த திட்டம் கவனமுடன் வடிவமைக்கப்பட வேண்டும்.

## 2.07 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம், உரிமையாண்மை மற்றும் உள்ளடக்கத்தில் பன்முகத்தன்மை காணப்படுவதை உறுதிசெய்தல்

ஐக்கிய நாடுகளின் விசேட முகவர் நிலையமான, சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம், அலைக்கற்றைகளை உகந்த வழியில் பயன்படுத்துவதற்கு சர்வதேச கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. அது, அலைக்கற்றை ஒதுக்கீட்டின் முகாமைத்துவத்திற்கான தராதரங்களை நிர்ணயித்துள்ளதுடன், ஒதுக்கீடுகளுக்கான சர்வதே கட்டமைப்பையும் முகாமைத்துவம் செய்கின்றது. நாட்டிற்கு உகந்த முறையில் அலைக்கற்றைகள் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக, தேசிய திட்டங்கள் சர்வதேச தொலைதொடர்புச் சங்கத்தின் விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் இணையத்தளம் தெரிவிக்கையில்: " சமூகத்தின் மாறிவரும் தேவைகளை இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கருத்தில்கொள்வதுடன், வாய்ப்புக்களைத் தக்க வைப்பதற்காக, அலைக்கற்றை திட்டங்களைத் தயாரிக்கும்போது புதிய பயன்பாடுகளுக்காக நவீன தொழில்நுட்பத்தை புதுமையான முறையில் பயன்படுத்த முனைகிறது " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[80]

அரசாங்கத்தின் தொழில்நுட்ப முகவர் நிலையம் என்ற வகையில் இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்யும்போது, "சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தகுதிநிலைகளையும் நிலப்பரப்புத் தரவுகள் மற்றும் ஏனைய நிர்வாகத் தரவுகளையும் கொண்டு, அலைக்கற்றை முகாமைத்துவக் கருவிகளை செயற்திறனுடனும் வினைத்திறனுடனும் பயன்படுத்துகிறது."[81]

எனினும், மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் முற்றமுழுதாக தொழில்நுட்பத்தன்மை கொண்டு அணுகுபவையாக மாத்திரம் காணப்படுகின்றன, எனினும், பொதுச் சொத்து வளமான அலைக்கற்றைகளை - ஊடக பன்முகத்தன்மையை அல்லது அனைவரையும் உள்ளடக்கிய தகவல் சமூகத்தை வளர்த்தெடுப்பதற்குப் பயன்படுத்துவதற்கான குறித்த, பரந்துபட்ட தன்மையைக் காணமுடியவில்லை. இலங்கையில் இதுவரை முன்வைக்கப்படாத அவ்வாறான வழிகாட்டுதல்கள், இதுபற்றிய கொள்கையிலிருந்து வெளிக்கொண்டுவரப்படவேண்டும்.

இலங்கையில் வானொலிகள் (பண்பலை) மற்றும் தொலைக்காட்சிகளுக்கான அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டுள்ள விதம் குறித்து (2015 மே முதலாம் திகதி வரைக்குமானது), இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் காணமுடிகின்றது.[82]

80 http://www.trc.gov.lk/spectrum-planning.html

81 TRCSL Frequency assignment procedure, http://www.trc.gov.lk/frequency-assignments.html

82 http://www.trc.gov.lk/frequency-assignments-in-sound-fm-and-television-tv-broadcasting-in-sri-lanka.html

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, அலைவரிசைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு வருடாந்தக் கட்டணத்தை அறவிடுகின்றது. தற்போதைய கட்டணங்கள், 1999 நவம்பர் முதலாம் திகதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, நவம்பர் 5ஆம் திகதி நடைமுறைக்கு வந்தவை. இந்த கட்டணங்களை ஆராய்ந்ததில், அலைவரிசைகளின் வர்த்தக பாவனையாளர்களுக்கும், வர்த்தகரீதியில் பயன்படுத்தாதவர்களுக்கும் இடையில் கட்டணங்களில் வித்தியாசம் இல்லாதது தெரியவந்துள்ளது. பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கோ அல்லது சமூக ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கோ சலுகைக் கட்டணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. [83]

## பரிந்துரைகள்

- ஆர்வமாயுள்ள ஏனைய பங்கேற்பாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் விதத்திலும் அமையவேண்டும். வெவ்வேறு வகை ஒலி-ஒளிபரப்பாளர்கள் மத்தியில், அலைவரிசைத் தொகுதிகளில் (பண்பலை அலைக்கற்றை போன்ற) உப-ஒதுக்கீடுகளை மேற்கொள்வதும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த உப-ஒதுக்கீடுகள், ஒலி-ஒளிபரப்பில் பல்வகைமையை ஊக்குவிக்கும் குறிக்கோளுக்கு ஆதரவாயிருப்பது அவசியமானது. சமூக ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் திட்டத்துடன், அதனை இன்னமும் வலுப்படுத்துவதாக, குறித்த திட்டம் கவனமுடன் வடிவமைக்கப்பட வேண்டும்.

- எலக்ரோ – மக்னற்றிக் அலைக்கற்றை என அழைக்கப்படும் பொதுச் சொத்து, ஒலி-ஒளிபரப்புதுறை மற்றும் தொலைத்தொடர்புகள் சார்ந்த மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சிறப்பாக நிர்வகிக்கப்பட வேண்டும். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இந்த விடயத்தில் தொடர்புபட்ட சகல தரப்புகளுடனும் கலந்தாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, எலக்ரோ – மக்னற்றிக் அலைக்கற்றைகளை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கான தெளிவான நோக்கத்தையும் தேசிய திட்டத்தையும் உருவாக்க வேண்டும்.

- தனியார் உரிமையுடனான வர்த்தக ஒலி-ஒளிபரப்பு, ஆசிரியர்பீட சுயாதீனத்துடனான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு, சுயாதீனமான சமூக ஒலி-ஒளிபரப்பு ஆகிய மூன்றுடுக்கு ஒலிபரப்பு உரிமையாளர் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஒலிபரப்புத் துறையில் பல்வகைமை உரிமையாளர் முறையை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும்.

[83] http://spectrum.trc.gov.lk/Broadcasting/FM/download/Gazette.pdf

## 2 08 வெளிப்படையான சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு முறை

ஒலி-ஒளிபரப்பு உரிமங்களை வழங்குவதற்கான ஒழுங்குமுறை சுதந்திரமானதாக, வெளிப்படையானதாக காணப்படுகின்றதா என்பது வேறு விடயம். ஆனால், எதுவுமே உரியதாக இல்லை. ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் நடவடிக்கைகள் இன்றுவரை தொடர்ச்சியற்றவையாக மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்படாதவையாகக் காணப்படுகின்றன. அது. முழுமையாக வெளிப்படைத்தன்மையை இழந்தும் இருக்கிறது.

இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு உரிமங்களை வழங்குவதற்காக, 1992 முதல் மூன்று சட்டங்கள் பயன்பாட்டிலுள்ளன.

- *1966 ஆம் ஆண்டின் 37ஆவது இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் - அப்போதைய ஒலிபரப்புத் திணைக்களத்தை அரசாங்கத்தின் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது. இந்தச் சட்டம் (பிரிவு 44) ஊடகத்துறைக்கு பொறுப்பாக உள்ள அமைச்சருக்குத் தனியார் ஒலிபரப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கான உரிமங்களை வழங்குவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.*

- *1982 ஆம் ஆண்டின் 6ஆவது இலக்க இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனச்*

"ஒலி – ஒளிபரப்புத்துறையில் சுயாதீனமான, தன்னாட்சிமிக்க பரந்த எண்ணிக்கையிலான ஊடகங்களின் இருப்பை உறுதிப்படுததுவதற்கு, போதுமான மற்றும் சரியான பிரதிநிதித்துவம் கொண்ட ஒழுங்குமுறைகளை அத்துறைக்கு வழங்குவது அவசியமானதாகும். இது ஊடகங்களின் சுதந்திரத்திற்கு உறுதிப்பாட்டை வழங்கும் அதேவேளை, சுதந்திரத்திற்கும் ஏனைய சட்டரீதியான உரிமைகள் மற்றும் நலன்களுக்கும் இடையிலான சமநிலையையும் உறுதிப்படுத்தும். ஜனநாயக வழிமுறைகளில் ஒலி - ஒளிபரப்பை அதன் அங்கமாகப் பேணும் முக்கியத்துவத்திற்காக, ஒலி - ஒளிபரப்புகளில் சுயாதீனமான ஒழுங்குமுறையாளர்களை உருவாக்க அரசாங்கம் இலக்கு கொள்ளவேண்டும்.

- ஒலி – ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தலுக்கான வழிகாட்டுதல்கள், யுனெஸ்கோ மற்றும் பொதுநலவாய ஒலி – ஒளிபரப்பு கழகம் (CBA), 2006. http://otp.unesco-ci.org/training-resource/film-production/guidelines-broadcasting-regulation

*சட்டம் - இது, தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பாளரின் வரைவிலக்கணம் மற்றும் கட்டுப்பாடுகளை அநேகமாக உள்ளடக்கியுள்ளது. மேலும் இது தனியார் மற்றும் அரச ஒளிபரப்பு நிலையங்களுக்கான உரிமம் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான சில விதிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது (பிரிவு 17, 28,38).*

- *1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புச் சட்டம் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கத் திருத்தத்தை உள்ளடக்கிய தொலைத்தொடர்புச் சட்டம் – இந்த சட்டம் "தொலைத்தொடர்புச் சேவையை" சமிக்ஞைகளை அல்லது பல சமிக்ஞைகளைப் பயன்படுத்தி "இசை, கலந்துரையாடல், பேச்சுக்கள், விரிவுரைகள், மேடை அளிக்கைகள், எழுத்துக்கள், தொலைநகல்கள், சித்திரங்கள், படங்கள் ஆகியவற்றை ஒலி-ஒளிபரப்புச் செய்வது" என வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.*

இந்தச் சட்டங்களில் எவையும் பன்முகத்தன்மைமிக்க ஊடகத்துறை குறித்து கவனம்செலுத்தும் வகையில் அமைந்திருக்கவில்லை. மேலும், ஒளிபரப்பு தொடர்பான பாரிய சர்ச்சையொன்று பற்றி (சிபிஎன்எஸ் விவகாரம்) ஆராய்ந்த ஆய்வாளர் ஒருவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார், "இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபன சட்டத்திலோ அல்லது தொலைத்தொடர்பு சட்டத்திலோ வெவ்வேறு ஒலி-ஒளிபரப்பு தொழில்நுட்பங்கள் குறித்து மிகச் சிறிதளவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், ஒவ்வொரு வகையான ஒலி-ஒளிபரப்பாளரும் நிறுவனமொன்றை உருவாக்கி, சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து அதனை நடத்துவதற்காக எந்த வகையான உரிமங்களைப் பெற வேண்டும் என்பது குறித்தும் அவற்றில் தெரிவிக்கப்படவில்லை"[84]

இந்த நிலை, ஊடகப் பன்முகத்தன்மைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் பிரச்சினைகளை உருவாக்கக்கூடியதாக காணப்படுகின்றது. 2005 இல் மேற்கொள்ளப்பட்ட ஊடகத்துறை மதிப்பீடு ஒன்று இவ்வாறு குறிப்பிடுகின்றது, "இலங்கையில் நிர்ணயிக்கப்பட்ட ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் முறை முற்றுமுழுதாகவே வெளிப்படை, பொறுப்புக் கூறுதல் மற்றும் தொடர்ச்சித்தன்மை ஆகியன இல்லாதுள்ளது. இதன் காரணமாக, சில ஆசிரியபீட பதவிகள் ஊடக உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களினால் வர்த்தக மற்றும் அரசியல் முன்னுரிமைகளுக்காக நிரிப்பந்தத்துக்குள்ளாகலாம் என்ற அபாயத்தை எதிர்கொள்கின்றன."[85]

சட்ட ஆய்வாளர்கள் கிஷாலி பின்ரோ ஜயவர்த்தனவும், ஜெஹான் குணத்திலகவும் 2012இல் இவ்வாறு எழுதினர். "மேலும், பிரிவு

84 An Investigation into the Closure of CBNSat and Implications for Sri Lankan Broadcast Media. 2006. Ruha Devanesan. http://www.cpalanka.org/n-investigation-into-the-closure-of-cbnsat-and-implications-for-sri-lankan-broadcast-media/

85 Grunnet, Henrik, Lebbe Yakoob, Umar & Weiss LaRs "Assessment of the need for a Radio and TV journalist training unit in Sri Lanka," The Sri Lanka Press Institute (SLPI) April 2005.

44(4), ஒலி – ஒளிபரப்பு நிலையங்களின் அமைப்பு மற்றும் நிகழ்ச்சிகளின் தன்மை ஆகிய இரு விடயங்கள் தொடர்பில் ஒழுங்குமுறைகளை மேற்கொள்ள ஊடக அமைச்சருக்கு அபரிதமான அதிகாரங்களை வழங்குகிறது. மேலும், ஊடகங்கள் மீது அளவுக்கதிகமான அரசின் கட்டுப்பாட்டிற்கு இது அனுசரணை தருவதாகவும் தீவிரமாக விமர்சிக்கப்படுகின்றது. இதனால், தனியார் ஒலி – ஒளிபரப்பாளர்களுக்கு உரிமங்கள் வழங்குவது தொடர்பில் ஒழுங்குமுறைகளை மேற்கொள்ளவும், அதன்மூலம் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து ஓரளவேனும் இலங்கை ஊடகங்கள் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால், சுயாதீனமான ஒலி – ஒளிபரப்பு அதிகாரசபை ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் நலன்பேணும் குழுக்கள் தீவிரமாக செயற்படுகின்றன.”[86]

சட்டத்தரணியாக இருந்து செயற்பாட்டாளராகிய ஜே.சி.வெலியமுன, முன்னாள் நிறைவேற்றுப்பணிப்பாளர் - ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் ஸ்ரீலங்கா, இலங்கையில் ஒலி – ஒளிபரப்பு அலைவரிசை ஒதுக்கீடு ‘மாபெரும் ஊழல்’ என ஒருமுறை குறிப்பிட்டார். அலைவரிசை ஒதுக்கீடு தொடர்பானதும், இலங்கையில் தொலைக்காட்சி (விளையாட்டு) உரிமைகள் தொடர்பானதுமான அரச ஆளுமை பற்றிய ஆய்வொன்றில், 2011 மார்ச் 07 இல் செயற்படத் தொடங்கிய தனியாருக்கு உரித்தான தொலைக்காட்சி அலைவரிசையான கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வேக் (CSN) பற்றிய வழக்கொன்றை அவர் குறிப்பிட்டார். இந்த அலைவரிசை முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் இரண்டாவது மகனுக்கும் அவரது வணிக கூட்டாளிகளுக்கும் உரித்தானதாகும். இந்த தொலைக்காட்சிச் சேவை ஒளிபரப்பு உரிமத்தையும் அலைவரிசை ஒதுக்கீட்டையும் எவ்வாறு முன்னுரிமையுடன் பெற்றுக்கொண்டது என்பதை எடுத்துக்காட்டிய வெலியமுன, இலங்கை தேசிய கிரிக்கெட் அணி மூன்று வருடங்களாக பங்கேற்ற அனைத்து சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களையும் ஒளிபரப்புச் செய்யும் ஏகபோக உரிமையை ‘இலங்கை கிரிக்கெட்’ (இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டை நிர்வகிக்கும் அமைப்பு) இடமிருந்து குறித்த தொலைக்காட்சிச் சேவை போட்டிகள் ஏதுமின்றி பெற்றுக்கொண்டதையும் சுட்டிக்காட்டுகின்றார்.[87]


## பரிந்துரை

- அனைத்து உரிமம் வழங்கும் நடைமுறைகளும் அலைவரிசை ஒதுக்கீடும் தெளிவான தகுதிநிலைகள் அடிப்படையிலும், முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதிகளின்பேரிலும் மேற்கொள்ளப்படவேண்டும். அது மக்கள் பங்கேற்புக்கு அனுமதிக்கப்படவும் வேண்டும்.

86 Legal, Industry and Educational Reforms Pertaining to the Print Media. 2012 paper by Kishali Pinto-Jayawardena & Gehan Gunetilleke. Media Reform Sri Lanka website. http://goo.gl/wObuRv

87 https://www.colombotelegraph.com/index.php/surrendering-airwaves-and-liberty-to-nepotism/

**Types of Electromagnetic Radiation**




© 2013 Encyclopædia Britannica, Inc.

Table 1: Overview of Media Regulatory Framework in Sri Lanka

| Relevant legislation | Arrange/Covers | Regulatory Body | Assigned Rights |
|---|---|---|---|
| National Media Policy | Policy applies to the media and broadcasting | Ministry of Media | Media/Content/ Broadcast rights |
| Sri Lanka Telecommunications Act No. 25 of 1991, as amended by Act No. 27 of 1996 | Legislation applies to the establishment and operation of radio frequency transmitters and broadcasting. | Telecommunications Regulatory Commission of Sri Lanka (TRCSL) | Spectrum rights |
| Sri Lanka Broadcasting Corporation Act No 37 of 1966 Sri Lanka Rupavahini Corporation Act No 6 of 1982 | Laws and regulations are currently to regulate broadcasting content | Ministry of Media | Contents/ Broadcast rights |

*Adapted from: Roadmap for the Transition from Analogue to Digital Terrestrial Television Broadcasting in Sri Lanka (ITU, 2012)*

## பங்குதாரர்களின் கருத்துக்கள்

*"வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி-ஒளிபரப்பினை எடுத்துக் கொண்டால், நாட்டின் அலைவரிசை அலைக்கற்றை என்பது வரையறைக்குட்பட்டது. மேலும், அது ஒரு பொதுச்சொத்து. அலைவரிசைகள் தனி எந்த ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கும் சொந்தமானவை அல்ல. எனது கருத்தில், இந்த அலைவரிசைகளின் பாதுகாவலன் என்ற அடிப்படையில் அரசாங்கம் இதனை வாடகைக்கு விடவேண்டும் அல்லது குத்தகைக்கு விடவேண்டுமே தவிர, முழுமையாக அதனை இன்னொருவருக்கு விற்க முடியாது. இலங்கையில் தற்போதுள்ள சட்டங்களில் வலுவானது, தொலைத்தொடர்புச் சட்டமே. நாங்கள் பொது ஒலிபரப்புச் சட்டம் மற்றும் டிஜிட்டல் ஒலிபரப்புச் சட்டம் ஆகியவற்றின் வரைபுகளை (2010 முதல் 2014) உருவாக்கினோம். ஆனால், அவற்றை நிறைவேற்ற முடியவில்லை."*

சரித்த ஹேரத் - தகவல் மற்றும் ஊடக அமைச்சின் முன்னாள் செயலாளர் (2102 முதல் 2014)

*"இலங்கையின் ஒலி - ஒளிபரப்பு உரிமம் பெறும் நடைமுறை இரகசியமான விதத்திலும் பெருமளவிற்கு ஒழுங்கற்ற விதத்திலும் இடம்பெறுகின்றது. இது முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்தியாவைப் பாருங்கள், அங்கு ஒலி - ஒளிபரப்பு உரிமம் வழங்கப்படும் விடயம் வெளிப்படைத்தன்மை மிக்கதாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் போன்று இந்தியாவின் உரிமங்கள் என்றென்றைக்குமாக வழங்கப்பட்டவையல்ல, மாறாக குறிப்பிட்ட காலத்திற்கே அவை வழங்கப்படுகின்றன. மேலும், உரிமத்திற்கு மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் உள்ளன. அவை மீறப்பட்டால், உரிமத்தை எந்த நேரத்திலும் இரத்துச் செய்யலாம். இலங்கையில் ஒலிபரப்பு உரிமம் நட்பின் அல்லது உறவின் அடிப்படையில் அல்லது அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. தற்போது எங்களிடம் அலைவரிசைகள் கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டன. சில நாடுகளில் அலைவரிசைகள் பகிரங்க ஏலத்திற்கு விடப்படுகின்றன, இதன் மூலம் அதிக பணத்தைச் செலுத்தக் கூடியவர் அதனைப் பெறமுடியும். இலங்கைக்கு ஒலிபரப்பு அதிகாரசபை ஒன்று அவசியம். இதற்கு தென்னாபிரிக்காவிலும், இந்தியாவிலும் நடைமுறையில் காணப்படும் மாதிரிகளை ஆராய்ந்து நாம் பயன்படுத்தலாம்."*

-சமன் அத்தாவுதஹெட்டி - பிரதமரின் மேலதிக செயலாளர் (ஊடகம்)

*"இலங்கையில் ஒலி - ஒளிபரப்பு மீதான அரசாங்கத்தின் தனியுரிமையை சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் சிறிய நபர்களின் குழு கைப்பற்றியுள்ளது. இது, சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடிய விடயமல்ல. இவர்களில் சிலர் மக்களை அறியாமையில் வைத்திருக்க முயல்கின்றனர். இதன் காரணமாக தகவல் அறியும் உரிமைக்கான புதிய சட்டம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. என்னைப் பொறுத்தவரை, அரச ஊடகங்கள் என அழைக்கப்படும் வகைப்பாடே தேவையில்லை. இலங்கையில் இன்றுவரை 50 இற்கும் மேற்பட்ட ஒலி - ஒளிபரப்பு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அரச ஊடகங்களும், தனியார் ஊடகங்களும் மாத்திரம் எம்மிடையே உள்ளன. வானலைகள் என்பது பொதுச் சொத்தாகும். நீதிமன்றத் தீர்ப்பொன்று கூட இதனை உறுதிசெய்துள்ளது. எனினும், எந்த பொதுநல அமைப்பினாலும் இந்த வானலைகளைப் பயன்படுத்த முடியவில்லை. இது மிகவும் தவறானது. சுயாதீன சிவில் சமூக அமைப்புகளாலும் ஒலி -ஒளிபரப்பு உரிமங்களைப் பெற்று அலைவரிசைகளை நடத்தக்கூடியதாக இருக்க வேண்டும்."*

-திலின சமரசூரிய, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி மற்றும் வெளிவிவகார இயக்குநர்

# வரிவிதிப்பும் வர்த்தக விதிமுறைகளும்

**209** ஊடக அபிவிருத்தி பாராபட்சமற்ற விதத்தில் இடம்பெறுவதை ஊக்குவிப்பதற்காக அரசு வரிவிதிப்பையும் வர்த்தக முறைகளையும் பயன்படுத்துதல்

ஏனைய அனைத்து வர்த்தக முயற்சிகளையும் போல, ஊடக நிறுவனங்கள் அரசாங்கத்தின் ஒழுங்குமுறையாளரான, கம்பனிகள் பதிவாளரிடம் தங்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும். ஊடக நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வேறு எந்த நிறுவனத்திற்கும் உள்ள நடைமுறைகள் போன்றே காணப்படுகின்றன. -வருடாந்த வருமானம் குறித்த விபரங்களைக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடாந்தக் கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். சில சிவில் சமூக அமைப்புகள் தர்மஸ்தாபனங்களாகத் தங்களைப் பதிவு செய்துள்ளன.

ஊடக நிறுவனங்களுக்கு வேறு எந்த தொழிற்துறைசார்ந்த வரிச்சலுகைகளும் வழங்கப்படுவதில்லை. செய்தித்தாள், அச்சு மை, அல்லது ஒலி-ஒளிபரப்பு சாதனங்கள் போன்றவற்றுக்கு எந்தவித முன்னுரிமையளிக்கப்பட்ட இறக்குமதி வரிச்சலுகையும் இல்லை. அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊடக நிறுவனங்கள் சில வேளைகளில் வரிச்சலுகைகளால் நன்மையடையலாம். உதாரணம்: இருதரப்பு உதவி உடன்படிக்கைகளின் கீழ் கருவிகள், சாதனங்கள் பெறப்படுதல்.

பல வருடங்களாக, ஊடக நிறுவனங்கள் - அச்சுத்தாளின் உயர்ந்த விலை, பலதரப்பட்ட இறக்குமதி வரிகள், ஊடக நடவடிக்கைகளையும்,

"இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுத் திரைப்படங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் விளம்பரங்களிற்கு வரிகளை விதிக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில மொழித் திரைப்படம் ஒன்றுக்கு 25,000.00 ரூபாவும் (அண்ணளவாக 200 அமெரிக்க டொலர்கள்) வெளிநாட்டு மொழியில் அமைந்து உள்ளூர் மொழியில் (சிங்களம்) மொழி மாற்றம் செய்யப்பட்ட அரைமணி நேர நிகழ்ச்சி ஒன்றிற்கு 90, 000.00 ரூபாவும் (அண்ணளவாக 700 அமெரிக்க டொலர்கள் வரி அறவிடப்படுகிறது. வெளிநாட்டு தொலைக்காட்சி விளம்பரங்களிற்கு 500,000.00 ரூபா (அண்ணளவாக 3900 அமெரிக்க டொலர்கள்) வரியாக அறவிடப்படுகிறது. ஆங்கிலம் அல்லாத வெளிநாட்டு நிகழ்ச்சிகளுக்கான வரிகள் உயர்வானவை."

- அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி (USTR), இலங்கை மீதான தேசிய வர்த்தக மதிப்பீட்டு அறிக்கை, 2013 https://ustr.gov/sites/default/files/2013%20NTE%20Sri%20Lanka%20Final.pdf

பொருளாதார சாத்தியப்பாடுகளையும் பாதிக்கக்கூடிய ஏனைய வரிகள் தொடர்பில் குரலெழுப்பி வருகின்றன. ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு குறித்த கொழும்புப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு (2008), இலங்கையில் பத்திரிகை அச்சிடும் செலவில் பெரும் பகுதி அச்சுத்தாளிற்கே செலவாகின்றது (55-65%). இலங்கையுடன் ஒப்பிடும்போது மேற்கு நாடுகளில் இது 25 முதல் 30 சதவீதமாகவே காணப்படுகின்றது. [88]

ஊடகங்களுக்கு வரிச் சலுகைகளில் விசேட அனுமதி இருப்பது குறித்து இது குறித்த இதுவரை கரிசனைகள் எதுவும் செலுத்தப்படவில்லை. ஆனாலும், அவ்வாறு கரிசனை காட்டப்படுவதன் மூலம், அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற சில கவலைகளும் காணப்படவே செய்கின்றன. ஊடகங்கள், ஏனைய தொழிற்துறைகளைப் போலவே கருதப்பட வேண்டும்: விசேட சலுகைகள் இல்லை: விசேட சுமைகளும் இல்லை என்பதே நிலைப்பாடு.

எனினும், சமீப வருடங்களில் அரசாங்கம் ஊடகங்கள் மற்றும் தொலைத்தொடர்புத் துறைக்கு என சில வரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது கரிசனையை அதிகரித்துள்ளது.

2006 இல் அறிமுகப்படுத்தப்பட்ட, இறக்குமதி செய்யப்படும் தொலைக்காட்சி

88 As noted in the Colombo Declaration on Media Freedom and Social Responsibility (2008), section 8. http://www.pccsl.lk/sites/default/files/Colombo%20Declaration%202008%20%28English%29.pdf

உள்ளடக்கங்களுக்கான முரண்பாடுகள் கொண்ட, பாரபட்சமான, சர்ச்சைக்குரிய இறக்குமதி வரி காரணமாக பல ஒளிபரப்பாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பிட்ட உள்ளடக்கம் எங்கு தயாரிக்கப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்டதோ அதனை அடிப்படையாக வைத்து, உள்ளூரில் அதனை ஒளிபரப்புச் செய்வதற்காக அரசாங்கம் இறக்குமதிவரியை விதித்திருக்கிறது. ஒளிபரப்பாளர்களால் மேலதிகமான செலவீனத்தை ஈடுகட்டுவதற்கான வருமானம், அந்த உள்ளடக்கங்கள் திரையிடப்படும்போதான விளம்பரங்கள் மூலமும் போதுமான அளவு பெறப்படமுடியாததால், அவ்வாறான உள்ளடக்கங்களை இறக்குமதி செய்து பயன்படுத்துவது வர்த்தகரீதியில் சாத்தியமற்றதாகியது.

குறிப்பிட்ட ‘காப்புக்கொள்கை’ வரி, மேற்கிலிருந்து வரும் ஆங்கிலமொழியிலான உள்ளடக்கங்களையும், இந்தியாவிலிருந்து வரும் ஹிந்தி மற்றும் தமிழ் மொழிகளிலான உள்ளடக்கங்களையும் இலக்குவைத்தது. இலங்கையின் பல்பண்பாட்டு பார்வையாளர்களுக்கு பல்வகைமைத்தன்மை மிக்க உள்ளடக்கங்கள் கிடைப்பதை இது குறைத்ததுடன், சிறிய தொலைக்காட்சி அலைவரிசைகள் தங்கள் நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டதால், பலர் வேலைவாய்ப்புகளை இழக்கும் நிலையும் ஏற்பட்டது.[89]

[89] Sri Lanka TV industry hit by penal tax. Story by Lanka Business Online (LBO) on 7 July 2007, now archived at: https://shaqmark.wordpress.com/2007/07/08/sri-lanka-tv-industry-hit-by-penal-tax/

இந்த வரி, 2015இல், புதிய அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டது. ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக, குறிப்பிட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ஒரு பில்லியன் ரூபாய்க்கு மேல் (7.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வருமானம் கிடைத்திருக்கலாம் என தொழிற்துறையின் முக்கிய நபர் ஒருவர் குறிப்பிடுகின்றார். இந்த வருமானம், உள்ளூர் தொலைக்காட்சிகளின் உள்ளடக்க தயாரிப்புக்கு நன்மையளிப்பதற்காகவே எனக் கூறப்பட்டபோதிலும். இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதற்கான பொறுப்புக்கூறல்கள் எவையும் காணப்படவில்லை.

## பரிந்துரை

- குறித்த ஒரு தொழிற்துறைக்கென அல்லது தொழில்நுட்பத்திற்கென வரிகளை அரசாங்கம் அறவிடக்கூடாது (உதாரணம்: கைபேசிகள், கேபிள் தொலைக்காட்சிகள் என்பவற்றை மையப்படுத்துதல்). அது, குறித்த தொழில்நுட்பங்கள், கம்பனிகள், அவற்றின் நுகர்வோருக்கு பாராபட்சம் காட்டப்படுவதாக அமையும்.

2.10 விளம்பரக் கொள்கை மூலம் அரசாங்கம் பாராபட்சம் காட்டாமலிருத்தல்

# உ

# விளம்பரம்

இலங்கையின் அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்புத்துறைக்கு வருமானத்தை அதிகளவிற்கு ஈட்டித்தரும் முக்கிய வழிமுறையாக விளம்பரம் காணப்படுகின்றது.

இலங்கையின் ஊடகத்துறை கண்காணிப்பு அமைப்பான நீல்சன் இலங்கை நிறுவனம், 2014 ஆம் ஆண்டில், விளம்பரத்திற்காக ஊடகங்களுக்கு அண்ணளவாக 77 பில்லியன் ரூபாக்கள் (2016 பணமாற்று வீதப்படி, 520 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.[90]

அரசைப் பொறுத்தவரையில் - அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்திற்கு சொந்தமான வர்த்தகங்கள், நீதித்துறை மற்றும் முப்படையினர் போன்றவர்கள் - நீண்ட காலமாக, தற்போதுவரை இலங்கையின் மிகப்பெரிய விளம்பதாரரர்களாகக் காணப்படுகின்றனர். இலங்கையின் ஒட்டுமொத்த விளம்பரங்களில் 30 வீதத்தினை அரசாங்கமே மேற்கொள்வதாக அந்த துறையைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இந்த புள்ளிவிபரம் வருடத்திற்கு வருடம் மாற்றமடைகின்றது.

பல தரப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு விளம்பரங்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்ற விடயத்தில் அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்கின்றது. அரசாங்க அச்சு மற்றும்

90 This is based on 'rack rates' for above-the-line media only. According to an industry leader, in reality the advertising industry (print, radio and TV) is around LKR 30 billion. Digital advertising in 2014 was worth around LKR 1 billion, but this amount is steadily increasing.

ஒலி-ஒளிபரப்பு நிறுவனங்கள் - அவர்களுடைய விற்பனை அல்லது பார்வையாளர் எண்ணிக்கைத் தரவரிசைகளைக் கருத்திலெடுக்காமல், வரலாற்றுரீதியாக அரசாங்க விளம்பரங்களின் மிகப்பெரும் பகுதியைப் பெற்றுக் கொள்கின்றன.


தொடர்ந்துவந்த அரசாங்கங்கள், அரச விளம்பரங்கள் என்ற விடயத்தைப் பயன்படுத்தி எவ்வாறு தனியார் ஊடகங்கள் மீது செல்வாக்கை செலுத்த முயற்சிக்கின்றன என்பது அதிக கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. அவ்வப்போது மாத்திரமே பயன்படுத்தப்பட்டாலும், அரச விளம்பரங்கள் நிறுத்தப்படலாம் அல்லது வழங்கப்படமாட்டாது என்ற அச்சுறுத்தல் எப்போதும் காணப்படுகின்றது.

2014 இல் வெளியான விமர்சனத்தில், ரசிக மனோபுதி, அர்ஜுன ரணவன, கேஷ்மா ரணவன ஆகியோர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தனர் – " தனியார் ஊடகங்களைப் பொறுத்தவரை, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதைத் தவிர வேறு மார்க்கங்கள் இல்லை. அரசாங்கம் 70 சதவீத பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதுடன், தனியொரு மிகப்பெரும் விளம்பரதாரராகவும் காணப்படுகின்றது. இதற்கு இந்தியா போன்று, விநியோகப் புள்ளி விபரங்களை அடிப்படையாக வைத்து அரசாங்க விளம்பரங்களை அதற்கேற்ற விதத்தில் வழங்கும் சட்டங்கள் எதுவும் இங்கில்லை. தனியார் ஊடகங்களை அச்சுறுத்துவது என்பது வழமையான நிகழ்வு. இது பல தசாப்தங்களாக நடைமுறையில் காணப்படுகின்றது. அரசாங்கத்துடன் முரண்படும் எந்த தனியார் ஊடகமும் தனது விளம்பரத்தின் (வருமானத்தின் முக்கிய பகுதி) ஒரு பகுதியை அல்லது விளம்பரத்தை இழக்கக் கூடுமாதலால், அது தன் உயிர்வாழ்தலுக்கு பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடும். இலங்கையின் முக்கிய வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதைத்தவிர வேறு வழியில்லாத நிலையில் காணப்படுகின்றன. அரசாங்கத்தை விமர்சிக்கும் தனியார் ஊடகங்களுக்கு விளம்பரங்களை வழங்குவதைத் தவிர்க்குமாறு பாரிய வர்த்தக நிறுவனங்கள் அழுத்தத்திற்கு ஆளாகிய தருணங்களும் உள்ளன.[91]

அரசியல்வாதிகளையும், அரசியல் நலனநாடும் திட்டங்களையும் பரப்புரை செய்வதற்கு அரசாங்க நிறுவனங்களின் பொதுநிதியைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள், கடந்த அரசாங்கத்தின் கீழ் உச்சக்கட்டத்தை அடைந்தன. 2015 இல், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்த நடைமுறையைத் தொடர வேண்டாம் என அரசாங்க நிறுவனங்களுக்கு அவர் உத்தரவிட்டார்.

91 Sri Lanka's media, five years after the end of war. By Rasika Manobuddhi, Arjuna Ranawana and Kshama Ranawana. Groundviews.org 13 May 2014. http://groundviews.org/2014/05/13/sri-lankas-media-five-years-after-the-end-of-war/

Sri Lanka: Total ad spend of LKR 77b in 2014
(mostly in mainstream media)




Source: Nielsen
Based on monitored activities & rate card cost

## பரிந்துரைகள்

- அரச விளம்பரங்களுக்கான ஏற்பாடுகள், எதிர்பார்க்கப்படும் பெறுநர்களைச் சென்றுசேர்தல் உட்பட புறவயமான தகுதிநிலைகளின் அடிப்படையில் விளம்பரங்களை ஒதுக்குதலுக்கான வழிமுறைகள் அடங்கலாக, அனைத்து அரச முகவர் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள் முறைப்படுத்தப்பட வேண்டும். அந்த வழிகாட்டுதல்கள், தற்போதைய அரச விளம்பரங்களை வழங்குவதில் இடம்பெறக்கூடிய பாரபட்சமான செயன்முறைகளை நீக்குவதுடன், ஊடக நிறுவனங்களுக்கு அரச விளம்பரங்கள் நேர்மையாகவும், புறவய அடிப்படையிலும் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- ஊடக நிறுவனங்களை அச்சுறுத்துவதற்கு அல்லது அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அல்லது அவர்களுக்குச் சாதகமானதாக நடந்துகொள்வதற்கு அரச, பொதுத்துறை விளம்பரங்கள் மற்றும் ஏனைய அரச வளங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக ஊடக அமைச்சு சட்ட ஏற்பாடுகளையும் தண்டனைகளையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

Box 10

## அரசாங்க நிறுவனங்களின் செய்திப்பத்திரிகை விளம்பரங்களை கட்டுப்படுத்தல்

பாராளுமன்றத்தில் 29 ஜனவரி 2015 அன்று இடைக்கால வரவு – செலவு திட்டத்தை சமர்ப்பித்த நிதியமைச்சரின் உரையில் பின்வருவன இடம்பெற்றிருந்தன.

*9.43 செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் அரசாங்க நிறுவனங்களின் விளம்பரங்கள் அரசியல் அடிப்படையில்*

*அமைவது பல சந்தர்ப்பங்களில் அமைவது அடையாளம் காணப்பட்டுள்ளது. அரசியல் பின்னணியில் பிரசுரமாகும் பல விளம்பரங்கள் அரசாங்கத்திற்கு நிதிச்சுமையையே ஏற்படுத்துகின்றன.*

*9.44 ஆகவே, தொடர்புடைய அமைச்சின் செயலாளர் அனுமதிக்கும் குறித்த சூழல்களுக்கான விளம்பரங்களை தவிர்த்து செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் அரசியல் விளம்பரங்களை அமைச்சுக்களும் திணைக்களங்களும் உடனடியாக நிறுத்த வேண்டுமமென நான் கோருகின்றேன்.*

*9.45 மேலும், பொது நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்ட செய்திப்பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதை தவிர்த்துக்கொள்ளும் அதேவேளை உத்தியோகபூர்வமற்ற விளம்பரங்களுக்கு அவர்களின் அனுமதி பெறப்பட்டருந்தால் அவற்றிற்கு ஆகும் செலவை அவர்களே பொறுப்பேற்க வேண்டுமென நான் கோருகின்றேன்.*

*9.46 அரசியல் அடிப்படையிலான படங்கள், விடயங்கள் உள்ளடக்கப்படும் நாட்காட்டிகள், நாளேடுகள் போன்றவற்றிற்கும் இந்த கட்டுப்பாடு எதிர்காலத்தில் குறித்த நிறுவனங்களிற்கு இத்தால் விதிக்கப்படுகிறது.*

மூலம் : http://www.treasury.gov.lk/images/depts/fpd/docs/budgetspeech/2015-jan29/InterimBudget2015-20150129-eng.pdf (page 39)

## 2.11 ஊடகங்களில் விளம்பரம் தொடர்பான வலுவான விதிமுறைகள்

மேலும் பயனள்ளதாகக் காணப்படுவதற்கு, விளம்பரங்கள் நுகர்வோரின் நம்பிக்கையைப் பேணுவது அவசியம். அது சட்டபூர்வமானதாக, ஒழுக்கநெறிகளை பின்பற்றுவதாக, நேர்மையானதாக, உண்மையானதாக அமையவேண்டும். நுகர்வோர் விளம்பரங்களால் தவறாக வழிநடத்தப்பட்டால், அவர்கள் அந்த விளம்பரங்கள் கூறும் பொருட்களையோ, சேவைகளையோ மீண்டும் பெறுவதற்கு முனையமாட்டார்கள். அது அவர்களை காயப்படுத்தினால், அவர்கள் அதனை முதனிலையில் கொள்வனவு செய்யமாட்டார்கள்.

மோசமான விளம்பரங்கள் - அவை, ஒட்டுமொத்த விளம்பரத்தின் சிறிய பகுதியாக காணப்பட்டாலும் - அவை மெல்ல மெல்ல நுகர்வோர் நம்பிக்கை இழக்கும் நிலையை உருவாக்கலாம். அதன் காரணமாக அனைத்து விளம்பரங்கள் மீதான நம்பிக்கையும் பாதிக்கப்படலாம். இதனால், விளம்பரங்கள் உரியவிதத்தில் ஒழுங்குபடுத்தப்படுவது விளம்பரத்துறையின் நலனிற்கு முக்கியமான விடயமாகும்.

பாரம்பரியமாக இதனை நிறைவேற்றுவதற்கு இரு வழிகள் காணப்படுகின்றன. முதலாவது, அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் ஊடானது. மற்றையது, சுய ஒழுங்குபடுத்தல் ஊடானது. [92]

இலங்கையில் விளம்பரத்துறையை

92 Why regulate advertising? European Advertising Standards Alliance (EASA): http://www.easa-alliance.org/page.aspx/165

வழிநடாத்தவென, முழுமையான ஒழுங்குமுறைகள் எதுவும் கிடையாது. விளம்பர தராதர அதிகாரசபை எதுவும் கிடையாது. இதேபோன்று, விளம்பர தொழிற்துறையிடமும் சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறை ஒன்று இல்லை. இலங்கையில் விளம்பரத்துறைக்கென ஒழுக்கநெறிக்கோவையும் கிடையாது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் காணப்படுகின்றபோதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படும் விதம், பலவீனமாகவும் பல கூறுகளாகவும் காணப்படுகின்றது. விளம்பரங்களால் சில சந்தர்ப்பங்களில் மக்களை தங்களிற்கு சாதகமாக செயற்படத் தூண்டமுடியும்.

தற்போதைக்கு, சில குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை விளம்பரம் செய்வது குறித்து மாத்திரம் குறிப்பிட்ட சில சட்டங்கள் மாத்திரம் காணப்படுகின்றன.

- 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபைச் சட்டம் - இது, மதுபானங்கள் மற்றும் புகையிலை குறித்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும், பொது இடங்களிலும் விளம்பரப்படுத்துவதையும் ஊக்குவிப்பதையும் முழுமையாகத் தடை செய்கிறது.[93]

- 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் - இதன்படி, உணவுகளின் பண்பு, பெறுமதி, தரம், இயல்பு, உள்ளடக்கம், பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து தவறான, தவறாக வழிநடத்தும், ஏமாற்றும் அல்லது போலியான எண்ணத்தை தூண்டும் விதத்தில் எந்த நபரும் உணவை முகச்சுட்டி இடவோ, பைகளில் அடைக்கவோ, வழங்கவோ, பதனப்படுத்தவோ, விற்பனைசெய்யவோ, விளம்பரம் செய்யவோ முடியாது.[94]

- மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் அது போன்ற பொருட்கள் விடயத்திலும் இதுபோன்ற கட்டுப்பாடுகள் - 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அழகுசாதனப் பொருட்கள், உபகரணங்கள், மருந்துகள் சட்டத்தின் கீழ் உள்ளன. இவற்றை அனுமதியளிக்கப்பட்ட அரச ஸ்தாபனங்கள் நடைமுறைப்படுத்துகின்றன. எனினும், அவற்றின் கொள்திறன் மற்றும் தொழில்நுட்ப வரையறைகள் காரணமாக இந்த நடவடிக்கைகள் போதுமானவையாகக் காணப்படவில்லை.

- 1994 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க (இணைக்கப்பட்ட) கிருமிநாசினிகள் சட்டம் - இதன்மூலம், கிருமிநாசினிகள், களைநாசினிகள் மற்றும் அபாயகரமான விவசாய இரசாயனங்கள் தொடர்பிலான ஊடக விளம்பரங்கள்

93 http://www.sundaytimes.lk/061203/FinancialTimes/ft313.html

94 http://documents.gov.lk/Acts/1980/Act%20No.26/Act26%28E%29-1980.pdf

BOX 11

## அளவுக்கு அதிகமான விளம்பரங்கள்?

ஊடக நிறுவனங்கள் ஆசிரியர்பீட உள்ளடக்கங்களுக்கும் விளம்பரங்களுக்கும் இடையே சமநிலையை பேணவேண்டும். அதிக விளம்பரங்கள், நுகர்வோரை புறந்தள்ளச் செய்யும் அதேவேளை, ஆகக்குறைந்த விளம்பரங்கள் நிதிசார் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையும்.

கடந்த காலத்தில், தமது குறித்த வெளியீடு ஒன்றில், 60 சதவீதத்தை ஆசிரியர்பீட உள்ளடக்கங்களுக்கும் 40 சதவீதத்தை விளம்பரங்களுக்கும் பயன்படுத்துவது நடைமுறையில் இருந்தது. இது நீணட காலத்திற்கு கடைப்பிடிக்கப்படவில்லை என்பதுடன், பொதுசனத் தொடர்பாடல் நிறுவனங்களால் எழுதப்பட்ட ‘விளம்பர ஆசிரியங்கள்’ அதிகரித்ததால் அது மேலும் சிக்கலான நிலையை தோற்றுவித்தது.

ஒலி – ஒளிபரப்பில் அளவுக்கதிகமான விளம்பரங்களால் பெறுநர்கள் அதிகம் களைத்துப்போய் விடுகிறார்கள். அமெரிக்காவில் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஒரு மணி நேரத்திற்கு பத்து நிமிடங்கள் வரையே பெரிய தொலைக்காட்சி சேவைகளில் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், இந்த எல்லையும் மீறப்படவே செய்யப்படுகின்றது

இலங்கையில், பாகுபாடான விளம்பர ஒழுங்குபடுத்தலால் ஊடக உள்ளடக்கங்கள் வழமையாக குறைக்கப்பட்டே வருகின்றன. சில அலைவரிசைகளில் பல வர்த்தக இடைவேளைகள் விடப்படுவதால், நிகழ்ச்சி, விளம்பரங்களால் அதிகம் தலையீடு செய்யப்படுகிறது. முக்கிய கிரிக்கெட் போட்டிகளில், உண்மையான ஆட்ட நேரம் வர்த்தக விளம்பரங்களால் கையாளலுக்கு உட்படுகின்றது.

ஊடக தொழிற்துறை விளம்பரங்களுக்கும் உள்ளடக்கங்களுக்கும் இடையிலான தரமான சமநிலையை பேணுவது அவசியமாகியுள்ளது.

கட்டுப்படுத்தப்படுகின்றன.

- *2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் அதிகாரசபைச் சட்டம் - நுகர்வோரை தவறாக வழிநடத்தும் சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரங்கள் பற்றி விசாரணை செய்ய, நுகர்வோர் அதிகாரசபையை இது வலுப்படுத்துகிறது.*

- சட்டமாகக் காணப்படாத போதிலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக உரிமம் வழங்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான / அனுமதியளிக்கப்பட்டவர்களுக்கான (நவம்பர் 2013) முழுமையான ஒழுக்கக்கோவையை கொண்டுள்ளது. வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்கள் துல்லியமானவையாகவும், சரியானவையாகவும் தேவையான அனைத்து தகவல்களையும் கொண்டிருக்க வேண்டியவையாகவும் காணப்பட வேண்டியதன் அவசியத்தை அது வலியுறுத்துகின்றது.[95]

ஊடக விளம்பரங்களில் சிறுவர்களைப் பயன்படுத்துவது என்பது நீண்ட காலமாகவே விவாதத்திற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. சிறுவர் அமைப்புகளும் ஏனையவர்களும் இந்த விடயத்தில் கட்டுப்பாடுகள் அவசியம் எனக் கோரி வருகின்றனர். 2008 இல், மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று, வலுவான விளம்பர விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுவது அவசியம் எனப் பரிந்துரை செய்தது. அந்த விதிமுறைகள் மீறப்பட்டால், அதனால் பாதிக்கப்படுபவர்களிற்கு நிவாரணத்தை வழங்குவதற்கான தெளிவான ஏற்பாடுகள் அவசியம் எனவும் அது தெரிவித்திருந்தது. விளம்பரதாரர்களும் சந்தைப்படுத்துபவர்களும் தாங்கள் தேவையற்ற விதத்தில் விமர்சனங்களுக்கு உள்ளாவதாகக் கருதும் பட்சத்தில், நாடக்கூடிய மத்தியஸ்த சபையொன்றை ஏற்படுத்தவும் அது பரிந்துரை செய்திருந்தது. [96] எனினும், இதுவரையில் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஊடகங்களைப் பொறுத்தவரையில், இதுவரையிலும் அவை எவ்விதமான விளம்பரங்களைப் பிரசுரிக்கலாம் அல்லது வெளியிடலாம் அல்லது வெளியிடுவதை மறுக்க வேண்டும் என்பது குறித்த பொதுவான கட்டமைப்போ அல்லது விதிமுறைகளோ இல்லாத நிலை காணப்படுகின்றது. சில ஊடகங்கள் இது தொடர்பான தங்களது சொந்த விதிமுறைகளை உருவாக்கியுள்ளன. உதாரணமாக, அரசாங்க ஒலி-ஒளிபரப்பாளர்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியன விளம்பரங்கள் தொடர்பாக தங்கள் சொந்த விதிமுறைகளைக் கொண்டுள்ளன. ஆனால்,

95 http://www.ilo.org/wcmsp5/groups/public/--asia/---ro-bangkok/---ilo-colombo/documents/publication/wcms_233369.pdf

96 Children in Advertising in Sri Lanka – A Media Study. CPA, 2009. http://www.cpalanka.org/children-in-advertising-in-sri-lankaa-media-study/

*“செய்திப்பத்திரிகைகள் ஒவ்வொன்றிலும் எவ்வளவு பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றதென எமக்குத் தெரியாது. ஐயாயிரம் பிரதிகள் கூட அச்சடிக்காத சிலர் லட்சக்கணக்கில் பிரதிகள் விற்கப்படுவதாக கூறிக்கொள்கின்றனர். இது பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்றது. வேறு நாடுகளில், செய்திப்பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் விநியோக எண்ணிக்கையை கணக்காய்வு செய்ய சுயாதீன அமைப்புக்கள் உள்ளன. இலங்கையும் அவ்வாறான கட்டமைப்பை பல வருடங்களுக்கு முன்பு கொண்டிருந்தது. அந்த நல்ல பாரம்பரியத்தை நாம் மீண்டும் கொண்டுவர வேண்டும்.”*
- விஜித யாப்பா, நிறுவன ஆசிரியர், த ஐலண்ட், சண்டே ஐலண்ட், த சண்டே ரைம்ஸ்

*“எனது பார்வையில், ஊடகத்தொழில் இலங்கையில் மரணித்துவிட்டது. உயிரற்ற சடலத்தை மீள உயிர்ப்பிப்பது தொடர்பில் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். ஒலி – ஒளிபரப்பு தரவரிசை செய்யும் கம்பனிகளே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் பாரபட்சத்துடன் சுய ஆதாயத்திற்காக வேலை செய்கிறார்கள். ஒலி – ஒளிபரப்பு தரவரிசை பல்கலைக்கழகம் போன்ற சுயாதீனமான, தொழில்வாண்மைக் குழுவினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். தரவரிசை மேற்கொள்ளப்படும் முறையியல் வெளிப்படையானதாக அமைய வேண்டும். அவ்வாறான, ஆகக் குறைந்தது மூன்று கம்பனிகள் எமக்கு தேவையாக உள்ளது.”*
- பிரியந்த காரியப்பெரும, ஆலோசகர், சியத்த தொலைக்காட்சி (தனியார் ஒளிபரப்பாளர்)

*“விளம்பரதாரர்கள் ஒலி – ஒளிபரப்பு தரவரிசைகளின் அடிப்படையிலேயே தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். தரம் குறைந்த நிகழ்ச்சிகளை மிகப்பிரபல்யம் ஆனவையாகக் காட்டும் இலங்கையின் தரவரிசைக் கட்டமைப்பை மீள, தரமான வகையில் ஒழுங்கமைக்க வேண்டும்.*
- ரோஸ்மண்ட் சேனரத்ன, முன்னாள் தலைவர், ஐ.ரி.என், முன்னாள் பொதுமுகாமையாளர், சுவர்ணவாகினி

இவை பரந்துபட்ட அளவில் தொழிற்துறை முழுவதும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. சமீப காலத்தில் நாட்டின் நுகர்வோர் சட்டங்களில் இடம்பெற்றிராத, அல்லது வேறு எந்த விளம்பர விதிமுறைகளிற்கும் உட்பட்டிராத, ஜோதிடம், எதிர்காலத்தை முன்கூட்டியே கணித்தல், பரிகாரம் தேடுதல் போன்ற வழமைக்கு மாறுபாடான நடவடிக்கைகள் தொடர்பான பல விளம்பரங்கள் இடம்பெறுவதை காணமுடிகின்றது.

இலங்கை சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் தலைவராகப் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் நியூட்டன் குணரத்தின இவ்வாறு தெரிவிக்கின்றார். “ நான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் ‘கிறீன் புக்’ எனப்படும் விளம்பரங்களுக்கான ஒழுக்காற்றுக்கோவை ஒன்று காணப்பட்டது. உதாரணத்திற்கு, விளம்பரங்கள் மக்களை அச்சமடையச் செய்வனவாக காணப்படக்கூடாது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மதிய உணவு நேரங்களில் சிலவகை விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ரூபவாஹினியும் தனது ஆரம்பகாலங்களில் தனக்கான விளம்பர ஒழுக்கக்கோவையை உருவாக்கியிருந்தது. தனியார் தொலைக்காட்சிகள் இந்த விளம்பர ஒழுக்கக்கோவையைப் பின்பற்ற வேண்டும் என்ற புரிந்துணர்வு காணப்பட்டது. எனினும், பின்னர் நீண்டகாலமாக இதனை மறந்து விட்டனர்.”

அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து அனுபவமிக்க ஊடகவியலாளரும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவருமான மொஹான் சமரநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார். “ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் எங்கள் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கங்கள் மற்றும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும் விளம்பரங்கள் தொடர்பாக சில தராதரங்களைப் பேணமுயன்றோம். நாங்கள் குறைகள் காணப்பட்ட சில விளம்பரங்களை நிராகரித்தவேளை, அவர்கள் தனியார் தொலைக்காட்சி நிலையங்களுக்குச் சென்றார்கள். அவர்கள் அவற்றை வெளியிட்டனர். இதனால் ரூபவாஹினிக்கான வருமானம் பாதிக்கப்பட்டது.”

விளம்பரங்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள்

கேள்விக்குரிய விதத்திலான அல்லது புண்படுத்தும் விதத்திலான விளம்பரங்கள் தொடர்பாக பொதுமக்கள் முறையிடுவதற்காக பொறிமுறை எதுவும் இலங்கை கொண்டிருக்கவில்லை. சட்டத்தில் இடம்பெற்றுள்ள சில பிரிவுகளைத் தவிர (மதுபானம், மருந்துப் பொருட்கள், புகையிலை) கரிசனைக்குரிய பிரஜை ஒருவர் குறிப்பிட்ட ஒரு விளம்பரத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தால் அது குறித்து பொறுப்பேற்பதற்குரிய கட்டமைப்பு காணப்படவில்லை.

சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் அல்லது சுய ஒழுங்குபடுத்தல்கள் இல்லாத நிலையில், செயற்பாட்டாளர்களும், பரிந்துரைக் குழுக்களும் விளம்பரங்கள் அல்லது பரப்புரைகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாது அல்லது ஒழுக்கநெறிகளுக்கு அவை முரணானது என அவர்கள் கருதும்பட்சத்தில் எதிராகப் பகிரங்கமாக குரல் எழுப்பும் நிலைக்கு ஆளாகின்றனர்.

உதாரணத்திற்கு, ‘மதுபானம், போதைமருந்துகள் தகவல் நிலையம்’ என்ற பரிந்துரை அமைப்பு – நேரடி விளம்பரங்களுக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து தடை விதிக்கப்பட்டிருக்கும் மதுபான மற்றும் புகையிலை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் அனுசரணைகளைத் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றது.[97]

நுகர்வோரின் தன்னெழுச்சியான ஆர்ப்பாட்டங்களும் அதிகளவில் இடம்பெறுகின்றன, கறுப்பான பெண்களைவிட வெள்ளையான பெண்கள் ஆண்களை அதிகம் கவரக்கூடியவர்கள் என்ற வகையில் வெளியான பிஸ்கட் விளம்பரம் தொடர்பாக 2014 பிற்பகுதியில் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட விமர்சனம் இதற்கு உதாரணமாகும். மனங்களைப புண்படுத்தக்கூடிய இந்த விளம்பரம் அடுத்த மூன்று நாட்களில் விலக்கிக் கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட அந்த நிறுவனம் அதற்காக பகிரங்க மன்னிப்பும் கோரி இருந்தது.[98]

97 http://www.adicsrilanka.org/2013/05/30/world-no-tobacco-day-2013-ban-tobacco-advertising-promotion-and-sponsorship-press-release/

98 http://www.globalpressjournal.com/asia/sri-lanka/responding-public-outrage-sri-lankan-biscuit

சமூகத்தில் அதிகரித்து வரும் கரிசனைகள் காரணமாக – சமூக ஊடகங்கள் ஊடாக சில வெளிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. சந்தைப்படுத்தல் தொழிற்துறையினரும் விளம்பர தொழில்துறையினரும் சுய ஒழுங்குபடுத்தல் முறையின் அவசியத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். சில ஊடக விமர்சகர்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளனர்.[99]

Accredited Advertising Agencies Association (4As) போன்ற விளம்பர முகவர் அமைப்புக்களும் திறன்வாய்ந்த சுய ஒழுங்குபடுத்தல் முறைமையைக் கோரிநிற்கின்றனர். எனினும், ஊடக விளம்பரங்கள் என்பது ஊடக முகவர் அமைப்புகள் ஊடாக மாத்திரமில்லாமல், தனிப்பட்ட விளம்பரதாரர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு இடையில் நேரடியாக இடம்பெறுவதாலும் விளம்பர தொழிற்துறையின் சுய ஒழுங்குபடுத்தல் என்பது மிகவும் பலவீனமானதாகவே காணப்படுகிறது.

விளம்பரங்கள் தொடர்பில், பொதுவான தராதரங்கள் மற்றும் ஒழுக்கக் கோவைகள் தொடர்பாக விளம்பர மற்றும் ஊடக தொழிற்துறையினர் இதுவரை இணக்கப்பாட்டிற்கு வராததன் காரணமாக, முழுமையாகத் தாமாக முன்வந்து ஒழுங்குபடுத்தும் பொறிமுறை போதுமானதா என்பது தெளிவற்றே உள்ளது.

[99] For example, see: Regulating Advertising, Business Times, 10 March 2013 http://www.sundaytimes.lk/130310/business-times/regulating-advertising-35523.html

## பரிந்துரைகள்

- அரசாங்கம் விளம்பர தொழிற் துறையினருடன் கலந்தாலோசித்து பொதுநல நோக்கில் விளம்பரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சுயாதீன ஒழுங்குபடுத்தும் அமைப்பை ஏற்படுத்தவேண்டும். அதற்கு அமுல்படுத்துவதற்கான அதிகாரங்கள் காணப்பட வேண்டும். அனைத்துப் பொது ஊடகங்களிலும் (விளம்பர தொழிற்துறையில் 'கோட்டிற்கும் மேலே' என அழைக்கப்படுவது), ஏனைய விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் வடிவங்களிலும் (விளம்பர தொழிற்துறையில் 'கோட்டிற்கு கீழே' என அழைக்கப்படுவது) மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு ஒட்டுமொத்த தராதர மற்றும் ஒழுக்கநெறி விதிமுறைகளை வகுக்க வேண்டும்.

- இவ்வாறான சட்டரீதியான அமைப்பு உருவாக்கப்படும்வரை, அதற்குச் சமாந்தரமாக விளம்பரத் தொழிற்துறையினர் மேலும் பொறுப்புணர்வு வாய்ந்தவர்களாகவும், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நலன்கள் குறித்தும் அக்கறையும், கரிசனையும் உள்ளவர்களாகவும் மாறுவதற்கு தமக்கு என சொந்த, சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதேவேளை ஊடகங்கள், ஆசிரியர் பீட உள்ளடக்கத்திற்கு சமமான விகிதத்தில் விளம்பர உள்ளடக்கங்கள் காணப்படுவதைக் உறுதிப்படுத்த வேண்டும் (வானலை நேரம் அல்லது அச்சு ஊடகங்களில் வெளி)

பிரிவு 2

# ஊடகங்களின் பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமை, பொருளாதாரத் தளம் மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை

## பரிந்துரைகளின் தொகுப்பு

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
|---|---|
| 2.1 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல் | 1. இலங்கையில் நேர்மையான ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமைகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்டங்களையும் கொள்கைகளையும் இனங்காண்பதற்கு - உள்ளார்ந்த, பல்பங்கேற்பாளர் கலந்துரையாடல்களை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும். வெறுமனே நுகர்வோர் தெரிவிற்கும் சந்தைப் போட்டிக்கும் இடமளிப்பதை விடுத்து, ஜனநாயகத் தொடர்பாடல் அதிகாரம் வலுப்படுத்தப்படுவதை நோக்கி இது மேற்கொள்ளப்படவேண்டும்.<br>2. ஊடக உரிமையாளர்கள் குறித்த விபரங்கள் வெளிப்படையானவையாக மற்றும் முறையான தவணைகளில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கும் புதிய ஒழுங்குமுறையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். (உதாரணமாக, இந்தியாவைப் பொறுத்தவரை சகல ஊடக நிறுவனங்களும் தங்கள் உரிமையாளர் விபரங்களையும் முக்கிய பங்குதாரர்கள் யார் என்பதையும் தொடர்ச்சியான முறையில் வெளிப்படுத்துவது சட்ட ரீதியில் அவசியமான விடயமாகும்). இவ்வாறான விடயம் இலங்கையில் நிகழும்வரை, உரிமையாளர்களின் விபரங்களை வருடாந்தம் வெளியிடும் ஒரு தன்னார்வ முறையை ஊடகத் தொழிற்துறை அமைப்புகள் உருவாக்கி, தமது சொந்த பொறுப்புக்கூறும் கடப்பாட்டை அவை அதிகரிக்கவேண்டும்.<br>3. ஊடக உரிமை என்பது ஒரே இடத்தில் குவிந்திருப்பயையும் பல ஊடகங்களை தனிநபர்கள், நிறுவனங்கள் உரிமையாளுவதையும் கட்டுப்படுத்துவதற்குப் பாராளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும்.<br>4. ஆராய்ச்சியாளர்களும் சிவில் சமூக அமைப்புகளும் தமது ஊடகக் கண்காணிப்பை விரிவாக்கி, உள்ளடக்க ஆய்வுகள் மற்றும் ஆசிரியபீட நடைமுறைகளில் ஒழுக்காற்று முறைகள் குறித்த தங்களுடைய கண்காணிப்பு நடைமுறைகளை அவற்றுக்கு அப்பாலும் முன்னெடுக்க வேண்டும். மேலும், ஊடகங்களின் அரசியல் தொடர்புகள் மற்றும் ஊடக உரிமையாளர்களின் ஊடக வர்த்தக நலன்கள் கடந்த செயற்பாடுகள் குறித்தும் பொதுசன கண்காணிப்பு வேண்டும். ஊடக பரிந்துரைக்குழுக்களும், ஊடக ஆராய்ச்சியாளர்களும் இவ்வாறான விடயங்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இணையத்தளத்திலோ வலைப்பூத்தளத்திலோ தரவேற்றும பொறிமுறையை உருவாக்க வேண்டும். |
| 2.2 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் பின்பற்றப்படுதலை அரசு உறுதிப்படுத்தல் | 5. இலங்கையில் நேர்மையான ஊடக பன்முகத்தன்மை மற்றும் பல்வகைமைகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்டங்களையும் கொள்கைகளையும் இனங்காண்பதற்கு - உள்ளார்ந்த, பல்பங்கேற்பாளர் கலந்துரையாடல்களை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும். வெறுமனே நுகர்வோர் தெரிவிற்கும் சந்தைப் போட்டிக்கும் இடமளிப்பதை விடுத்து, ஜனநாயகத் தொடர்பாடல் அதிகாரம் வலுப்படுத்தப்படுவதை நோக்கி இது மேற்கொள்ளப்படவேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 2.3 அரசாங்கம் பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்களின் ஒருங்கிருத்தலை ஆர்வத்துடன் ஊக்குவித்தல் | 6. அரசாங்கமும் ஊடக தொழிற்துறையும் ஊடக உள்ளடக்கங்களில் பல்வகைமைத் தன்மையை அதிகரிப்பதற்கு அடிப்படை அர்ப்பணிப்பை வழுங்க வேண்டும். எத்தனை ஊடகங்கள் உள்ளன என்பதை அடிப்படையாக வைத்து மதிப்பிடாது, மாறாக பாரிய உள்வாங்கும்தன்மை மற்றும் பலதரப்பட்ட சமூக, அரசியல், பண்பாட்டுக் கருத்துகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தற்போதுள்ள ஊடகங்களால் முடியுமா என்பதன் பேரில் அந்த அடிப்படை அர்ப்பணிப்பு அமையவேண்டும். மற்றைய விடயங்களில், அவ்வாறான உள்ளடக்க பல்வகைமைத்தன்மை , பிரேரிக்கப்பட்ட பொதுச்சேவை ஒலி- ஒளிபரப்பு சுயாதீன உள்ளடக்க தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் சந்தைநோக்கிலல்லாத ஊடகத் தயாரிப்புக்களால் ஊக்குவிக்கப்பட முடியும்.<br>7. ஒலி- ஒளிபரப்பு சம்பந்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் உரிமையாளர் மற்றும் உள்ளடக்கங்களில் பல்வகைமையை ஊக்குவிப்பதற்கான சட்டங்களையும் உருவாக்க வேண்டும். மேலும், ஏனைய வழிமுறைகள் ஊடாக, உரிமையாண்மையின் பல்வகைமையை ஒலி- ஒளிபரப்பு உரிமம் வழங்குவதனூடாக ஊக்குவிக்கலாம். |
| 2.4 சுயாதீன மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க ஒழுங்குபடுத்தல் முறை | 8. ஒலி-ஒளிபரப்புத்துறையை மக்கள் நலன் அடிப்படையில் ஒழுங்குபடுத்துவதற்கு, சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் அமைப்பொன்றை உருவாக்க, அரசாங்கம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். அந்த சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் அமைப்பு, மக்களுக்குப் பொறுப்புக்கூறும் தன்மையுடையதாகவும், அரசியல் - வர்த்தக நலன்களிலிருநடது சுதந்திரமானதாகவும் இருக்கவேண்டும். இந்த அமைப்பு, ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் நடைமுறைகளை வெளிப்படையானதாக, போட்டித்தன்மை மிக்கதாக, நேர்மையானதாக, பொறுப்புக் கூறுவதாக மாற்றுவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த முழு நடவடிக்கையையும் மக்கள் கண்காணிப்பு மற்றும் கருத்துகளை அனுமதிக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பொன்றினால் முகாமைக்குட்படுத்தப்படவும் வேண்டும். 1992 முதல் தன்னிச்சையான, ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் நோக்கத்தைப் பூர்த்திசெய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் இயலுமான விரைவில் கைவிடப்பட வேண்டும். தற்போதுள்ள முற்தேதியிடப்பட்ட அனைத்து ஒலிபரப்பு உரிமங்களும் இதன்வழி ஒழுங்குபடுத்தப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 2.4 சுயாதீன மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க ஒழுங்குபடுத்தல் முறை | 9. சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் அமைப்பிற்கு மேலதிமாக, சமூகத்திற்கு சொந்தமான அவர்களால், இயக்கப்படக்கூடிய ஒலி – ஒளிபரப்பாளர்களை கொண்ட கட்டமைப்பிற்கு உரிமம் வழங்குவது தொடர்பான ஒரு முழுமையான அமைப்பு அவசியமானது. ஒலி – ஒளிபரப்புத்துறையில் பல்வகைமையையும் உள்ளார்ந்து எடுத்துக்கொள்ளும் தன்மையையும் ஊக்குவிப்பதே இதன் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். இதன்படி – ஒரு சமூக ஒலி – ஒளிபரப்பாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள் குறித்த தெளிவான வரைவிலக்கணங்கள், எளிமையான விண்ணப்பிக்கும் முறைகள் மற்றும் இலவச கட்டணம் அல்லது குறைந்த அனுமதிகோரும் கட்டணம் ஆகியவை உள்ளடங்கிய சமூக ஒலி – ஒளிபரப்பாளர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பிலான விசேட விதிகள் போன்றன இந்த புதிய அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அனைத்து உரிமம் வழங்கும் நடைமுறைகளும் முன்னரே நெறிப்படுத்தப்பட்ட தெளிவான தகுதி நிலைகளையும் விதிமுறைகளையும் அடிப்படையாகக்கொண்டும் பொதுமக்கள் பங்கேற்றலுக்கு அனுமதிக்கப்பட்டும் இருக்கவேண்டும். |
| 2.5 அரசு மற்று சமூக மைய அமைப்புக்கள் ஆகியன சமூக ஊடகங்கள் விருத்தியாவதை ஆர்வத்துடன் ஊக்குவித்தல | 10. வெவ்வேறு புவியியல் பிரதேசங்களில் உச்ச அளவில் அலைவரிசைகளை பயன்படுத்துவதை இலக்காகக்கொண்டும், உயர் வலுக்கொண்ட ஒலி – ஒளிபரப்பு தொடர்புகளின் தலையீடுகளில் இருந்து பாதுகாப்பதாகவும் - தாழ்வலு சமூக ஒலி – ஒளிபரப்புக்கு என, ஒரு தொகுதி ஒலி – ஒளிபரப்பு அலைவரிசைகள் முற்பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.<br>11. அலைக்கற்றைகள் பொது ஒதுக்கீட்டில், தெளிவான வெளிப்படையான திட்டமிடல் செயன்முறைகள் அவசியம். (அதன்படியே, குறித்த உரிமம் வழங்கும் நடைமுறையும் அமைய வேண்டும்). உத்தேச சுயாதீன ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குபடுத்துநர், பொதுச் சேவை, வர்த்தக மற்றும் சமூக ஒலி-ஒளிபரப்பாளர்கள் மத்தியில் சமமான விதத்தில் அலைவரிசைகள் ஒதுக்கப்படுவதை உறுதியாக மேற்கொள்வதற்காக, ஒலி-ஒளிபரப்பு அலைவரிசைகள் எவ்வாறு திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றன என்ற விடயத்தில் அரசாங்கத்துடன் இணைந்து நெருக்கமாகச் செயற்பட வேண்டும். |
| 2.6 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம் பொதுமக்களின் அதிகூடிய நலனை கருத்தில் கொண்டதாக காணப்படுதல் | 12. இற்றைப்படுத்தப்படும் அலைவரிசை அலைக்கற்றைத் திட்டம், வெளிப்படையாகவும் சிவில் சமூகம் உட்பட ஆர்வமாயுள்ள ஏனைய பங்கேற்பாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் விதத்திலும் அமையவேண்டும். வெவ்வேறு வகை ஒலி-ஒளிபரப்பாளர்கள் மத்தியில், அலைவரிசைத் தொகுதிகளில் (பண்பலை அலைக்கற்றை போன்ற) உப-ஒதுக்கீடுகளை மேற்கொள்வதும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த உப-ஒதுக்கீடுகள், ஒலி-ஒளிபரப்பில் பல்வகைமையை ஊக்குவிக்கும் குறிக்கோளுக்கு ஆதரவாயிருப்பது அவசியமானது. சமூக ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் திட்டத்துடன், அதனை இன்னமும் வலுப்படுத்துவதாக, குறித்த திட்டம் கவனமுடன் வடிவமைக்கப்பட வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 2.6 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம் பொதுமக்களின் அதிகூடிய நலனை கருத்தில் கொண்டதாக காணப்படுதல் | 13. இற்றைப்படுத்தப்படும் அலைவரிசை அலைக்கற்றைத் திட்டம், வெளிப்படையாகவும் சிவில் சமூகம் உட்பட ஆர்வமாயுள்ள ஏனைய பங்கேற்பாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் விதத்திலும் அமையவேண்டும். வெவ்வேறு வகை ஒலி-ஒளிபரப்பாளர்கள் மத்தியில், அலைவரிசைத் தொகுதிகளில் (பண்பலை அலைக்கற்றை போன்ற) உப-ஒதுக்கீடுகளை மேற்கொள்வதும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த உப-ஒதுக்கீடுகள், ஒலி-ஒளிபரப்பில் பல்வகைமையை ஊக்குவிக்கும் குறிக்கோளுக்கு ஆதரவாயிருப்பது அவசியமானது. சமூக ஒலி-ஒளிபரப்பு உரிமம் வழங்கும் திட்டத்துடன், அதனை இன்னமும் வலுப்படுத்துவதாக, குறித்த திட்டம் கவனமுடன் வடிவமைக்கப்பட வேண்டும்.<br>14. எலக்ரோ – மக்னற்றிக் அலைக்கற்றை என அழைக்கப்படும் பொதுச் சொத்து, ஒலி-ஒளிபரப்புதுறை மற்றும் தொலைத்தொடர்புகள் சார்ந்த மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சிறப்பாக நிர்வகிக்கப்பட வேண்டும். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இந்த விடயத்தில் தொடர்புபட்ட சகல தரப்புகளுடனும் கலந்தாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, எலக்ரோ – மக்னற்றிக் அலைக்கற்றைகளை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கான தெளிவான நோக்கத்தையும் தேசிய திட்டத்தையும் உருவாக்க வேண்டும். |
| 2.7 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம், உரிமையாண்மை மற்றும் உள்ளடக்கத்தில் பன்முகத்தன்மை காணப்படுவதை உறுதிசெய்தல் | 15. தனியார் உரிமையுடனான வர்த்தக ஒலி-ஒளிபரப்பு, ஆசிரியர்பீட சுயாதீனத்துடனான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு, சுயாதீனமான சமூக ஒலி-ஒளிபரப்பு ஆகிய மூன்றடுக்கு ஒலிபரப்பு உரிமையாளர் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஒலிபரப்புத் துறையில் பல்வகைமை உரிமையாளர் முறையை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். |
| 2.8 வெளிப்படையான சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு முறை | 16. அனைத்து உரிமம் வழங்கும் நடைமுறைகளும் அலைவரிசை ஒதுக்கீடும் தெளிவான தகுதிநிலைகள் அடிப்படையிலும், முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதிகளின் பேரிலும் மேற்கொள்ளப்படவேண்டும். அது மக்கள் பங்கேற்புக்கு அனுமதிக்கப்படவும் வேண்டும். |
| 2.9 ஊடக அபிவிருத்தி பாராபட்சமற்ற விதத்தில் இடம்பெறுவதை ஊக்குவிப்பதற்காக அரசு வரிவிதிப்பையும் வர்த்தக முறைகளையும் பயன்படுத்துதல் | 17. குறித்த ஒரு தொழிற்துறைக்கென அல்லது தொழில்நுட்பத்திற்கென வரிகளை அரசாங்கம் அறவிடக்கூடாது (உதாரணம்: கைபேசிகள், கேபிள் தொலைக்காட்சிகள் என்பவற்றை மையப்படுத்துதல்). அது, குறித்த தொழில்நுட்பங்கள், கம்பனிகள், அவற்றின் நுகர்வோருக்கு பாராபட்சம் காட்டப்படுவதாக அமையும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 2.10 விளம்பர கொள்கை மூலம் அரசாங்கம் பாராபட்சம் காட்டாமலிருத்தல் | 18. அரச விளம்பரங்களுக்கான ஏற்பாடுகள், எதிர்பார்க்கப்படும் பெறுநர்களைச் சென்றுசேர்தல் உட்பட புறவயமான தகுதிநிலைகளின் அடிப்படையில் விளம்பரங்களை ஒதுக்குதலுக்கான வழிமுறைகள் அடங்கலாக, அனைத்து அரச முகவர் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள் முறைப்படுத்தப்பட வேண்டும். அந்த வழிகாட்டுதல்கள், தற்போதைய அரச விளம்பரங்களை வழங்குவதில் இடம்பெறக்கூடிய பாரபட்சமான செயன்முறைகளை நீக்குவதுடன், ஊடக நிறுவனங்களுக்கு அரச விளம்பரங்கள் நேர்மையாகவும், புறவய அடிப்படையிலும் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br><br>19. ஊடக நிறுவனங்களை அச்சுறுத்துவதற்கு அல்லது அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அல்லது அவர்களுக்குச் சாதகமானதாக நடந்துகொள்வதற்கு அரச, பொதுத்துறை விளம்பரங்கள் மற்றும் ஏனைய அரச வளங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக ஊடக அமைச்சு சட்ட ஏற்பாடுகளையும் தண்டனைகளையும் அறிமுகப்படுத்த வேண்டும். |
| 2.11 ஊடகங்களில் விளம்பரம் தொடர்பான வலுவான விதிமுறைகள் | 20. அரசாங்கம் விளம்பர தொழிற் துறையினருடன் கலந்தாலோசித்து பொதுநல நோக்கில் விளம்பரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சுயாதீன ஒழுங்குபடுத்தும் அமைப்பை ஏற்படுத்தவேண்டும். அதற்கு அமுல்படுத்துவதற்கான அதிகாரங்கள் காணப்பட வேண்டும். அனைத்துப் பொது ஊடகங்களிலும் (விளம்பர தொழிற்துறையில் 'கோட்டிற்கும் மேலே' என அழைக்கப்படுவது), ஏனைய விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் வடிவங்களிலும் (விளம்பர தொழிற்துறையில் 'கோட்டிற்கு கீழே' என அழைக்கப்படுவது) மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு ஒட்டுமொத்த தராதர மற்றும் ஒழுக்கநெறி விதிமுறைகளை வகுக்க வேண்டும்.<br><br>21. இவ்வாறான சட்டரீதியான அமைப்பு உருவாக்கப்படும்வரை, அதற்குச் சமாந்தரமாக விளம்பரத் தொழிற்துறையினர் மேலும் பொறுப்புணர்வு வாய்ந்தவர்களாகவும், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நலன்கள் குறித்தும் அக்கறையும், கரிசனையும் உள்ளவர்களாகவும் மாறுவதற்கு தமக்கு என சொந்த, சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதேவேளை ஊடகங்கள், ஆசிரியர் பீட உள்ளடக்கத்திற்கு சமமான விகிதத்தில் விளம்பர உள்ளடக்கங்கள் காணப்படுவதைக் உறுதிப்படுத்த வேண்டும் (வானலை நேரம் அல்லது அச்சு ஊடகங்களில் வெளி) |

வகை

# 3

# ஜனநாயகக் கருத்தாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல்

முக்கிய குறிகாட்டிகள்

அ ஊடகங்கள் சமூகத்தின் பல்வகைமையைப் பிரதிபலித்தல்

3.1 ஊடகங்கள் - பொது, தனியார் மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டதுஇ சமூகத்தின் சகல குழுக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வது.

3.2 ஊடக நிறுவனங்கள் தங்கள் தொழில்சார்ந்த நடவடிக்கைகள் மூலம் சமூகப் பல்வகைமையை பிரதிபலித்தல்.

ஆ பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு மாதிரி

3.3 பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பின் இலக்குகள் சட்ட ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டவை

3.4 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பாளர்களின் நடவடிக்கைகள் எந்தத் துறையிலும் பாரபட்சத்தை அனுபவிக்கக் கூடாது.

3.5 சுயாதீன மற்றும் வெளிப்படையான நிர்வாகம்

3.6 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பாளர்கள் பொதுமக்கள்,சிவில் சமூக அமைப்புகளுடன் உறவுகளை ஏற்படுத்துதல்

இ ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை

3.7 அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான சிறந்த வலுவான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல்.

3.8 ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான பண்பாட்டை வெளிப்படுத்தல்.

ஈ நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகள்.

3.9 நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகளை முன்வைக்கும் வலுவான ஒலி-ஒளிபரப்புக் ஒழுக்கக்கோவை.

3.10 ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவையை வலுவாக அமுல்படுத்தல்.

உ ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் தந்துணிவின் அளவுகள்.

3.11 பொதுமக்கள் ஊடகங்கள் மீது உயர்ந்தபட்ச நம்பிக்கையை வெளிப்படுத்தல்.

3.12 ஊடகங்கள் தங்கள் பணி குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கு செவிமடுத்தல்.

ஊ ஊடகவியலாளரின் பாதுகாப்பு.

3.13 ஊடகவியலாளர்கள்இ இணைக்கப்பட்ட ஊடகப் பணியாளர்கள், மற்றும் ஊடக அமைப்புகள் தங்கள் செயற்பாடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ளல்.

3.14 பாதுகாப்பு இன்மை என்ற சூழலால் ஊடக நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருத்தல்.

“ஜனநாயகம் மக்கள் அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், மக்கள் அபிப்பிராயம் பெரும்பாலும் ஊடகத் தகவல்களையே அடிப்படையாகக் கொண்டது. ஊடகங்கள் பக்கச்சார்பான தகவல்களை வழங்குமாயின் மக்கள் அபிப்பிராயமும் பக்கச்சார்பாகவே அமையும். ஒழுக்கக்கோவையின் அவசியத்தை குறிப்பிடுவதென்றால், சட்டத்தால் ஊடகவியலாளர்களின் பணியை வலியுறுத்த இயலாதெனினும், ஊடகவியலாளர்களுக்கு அது இயலுமான ஒன்றாகும். ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஓர் ஒழுக்கக் கோவையை உருவாக்க தொழிற்பட வேண்டும்.”

**கலாநிதி கிரிஸ்டோபர் ஜி வீரமந்திரி**

முன்னாள் உப தலைவர், இன்ரநெஷனல் கோட் ஒப் ஜஸ்டிஸ்
(இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்தாவது ஆண்டு பூர்த்தியின்போது ஆற்றிய உரையிலிருந்து)

ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் மனித உரிமைகளை நீடிக்கச் செய்தல் மற்றும் வளர்த்தெடுத்தல் போன்ற பணிகளில் ஊடகங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. இது தொடர்பான சர்வதேச நியதிகள் காணப்பட்ட போதிலும், இதனை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து எவ்வித கருத்துடன்பாடும் இல்லை.

ஊடகங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட, ஆனால் வித்தியாசமான பணிகளை ஆற்றுவதே இதற்கு ஒரு காரணம். ஊடகங்கள் என்பது ஜனநாயக விவாதங்கள் நடைபெறும் இடம். இங்கு தகவல்கள் பரிமாறப்படுகின்றன. பண்பாட்டு வெளிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. அதேவேளை, ஊடகங்கள் சமூகச் செயற்பாட்டாளர்களாகவும், வலுவான நிறுவனங்களை (பொது மற்றும் தனியார்) கண்காணிக்கும் அமைப்புக்களாகவும் செயற்படுகின்றன. அரசாங்கத்தை பொறுப்புக் கூறவும் சொல்கின்றன.

சமூகச் செயற்பாடளர்கள் என்ற அடிப்படையில் ஊடகங்கள் பிரிவினை சக்தியாகவும் விளங்கலாம். சில நேரங்களில் மோதலுக்கான கருவியாகவும் காணப்படுகின்றன. இக்காரணங்களுக்காக ஊடகங்கள் பிற சமூக செயற்பாட்டாளர்களை போல தங்கள் செயற்பாடுகள் குறித்து பொறுப்புக்கூறும் நிலை அவசியம். அதேவேளை, விவாதங்கள் இடம்பெறும் இடம் என்ற வகையில் ஊடகங்கள் அரசாங்கத்தினதோ அல்லது வேறு எந்த அமைப்பினதோ கட்டுப்பாடுகளை எதிர் கொள்ளாமல் விவாதங்களை, தகவல்களைத் தொடர அனுமதிப்பது முக்கியமானது.

இதன் காரணமாகவே, ஊடக சமூகம் ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் முயற்சிகளை எதிர்க்கின்றது. ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கு இடையில் உள்ள பொறுப்புணர்வின் வித்தியாசத்தைப் பிரித்துப் பார்ப்பது முக்கியம். அதன் மூலம் அவர்கள் பொதுச்சேவை ஒலி- ஒளிபரப்பாளர்களுக்குரிய குறித்த ஜனநாயக வகிபாகத்தை ஒதுக்க வேண்டும்.

பன்முகத்தன்மை கொண்ட சமூகம் ஒன்றை வழிநடத்துவதற்கான பலம் ஊடகங்களுக்குள்ளது. பாலினம், வயது, இனம், சாதி, மொழி, மத நம்பிக்கைகள், உடலியல் திறமைகள், வருமானம் மற்றும் சமூக வர்க்கம் ஆகியன சமூகப் பல்வகைமையில் உள்ளடங்கும். ஊடகங்கள் தங்கள் ஜனநாயக வகிபாகத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் சமூகத்தில் உள்ள பல்வகைமையைப் பிரதிபலிக்க வேண்டும்.

சமூகப் பல்வகைமை தொடர்பான ஊடகங்களின் செயற்பாடுகள் முறைசார் ஒழுங்குபடுத்தல்கள் மூலமும் நிகழலாம். உதாரணத்திற்கு, பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சமூகத்தின்

**ஊடகங்கள் சமூகத்தின் பல்வகைமையைப் பிரதிபலித்தல்.**

சகல பிரிவினருக்கும் சேவையாற்றவேண்டிய தேவையையும், சகல அரசியல் கட்சிகளுக்கும் சமமான வாய்ப்பை வழங்கவேண்டிய தேவையையும் கொண்டுள்ளது. ஊடகங்களின் செயற்பாடுகள், உதாரணமாக, அவதூறுப் பேச்சுக்கள் போன்றன சட்டங்களாலும் கட்டுப்படுத்தப்படலாம்.

சுய ஒழுங்குபடுத்தல், சகபாடி மீளாய்வுகள் மற்றும் பெறுநர் தொடர்பான விழிப்புணர்வு ஆகிய நிறுவனம் சார் பண்பாட்டில் ஊடகப் பல்வகைமை ஆழமாகக் காணப்படுகிறது. தற்போது புதிய தொழில்நுட்ப பரவல் காரணமாக சமூகப் பல்வகைமைத்தன்மை வலைப்பதிவுகள், பிரஜைகள் ஊடகவியல் உட்பட பெறுநர்கள் நேரடியாக ஊடகங்களுடன் பங்கேற்கும் பல வடிவங்களில் அதிகளவிற்கு காணப்படுகிறது.

3.01 ஊடகங்கள் - பொது தனியார் மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டது, சமூகத்தின் சகல குழுக்களினதும் தேவைகளையும் பூர்த்தி செய்வது.

இலங்கை வெகுசன ஊடகங்களின் (தற்போது அறியப்படும் வடிவத்தில்) வரலாறு இரண்டு நூற்றாண்டுகளைக் கொண்டது. முதலாவது அச்சிடப்பட்ட பருவ இதழ் 'சிலோன் கவர்மெனட் கசட், 1802 ஆம் ஆண்டு காலனித்துவ நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. அது அரச அறிவிப்புகளுக்கான சஞ்சிகையாகத் தொடர்ந்தது. முதலாவது ஆங்கில செய்திப்பத்திரிகை, 1832 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வானொலி ஒலிபரப்பு, 1925ம் ஆண்டு ஆரம்பமானது. தொலைக்காட்சி ஒளிபரப்பு, 1979ஆம் ஆண்டு ஆரம்பமானது. வர்த்தக இணைய சேவைகள் 1995 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகமாயின

அதன் பின்னரான தசாப்தங்களில் ஊடக நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் உற்பத்திகள் என்பன அதிகரித்தன. எனினும், இந்த எண்ணிக்கை அதிகரிப்பானது, நாட்டின் பல் பண்பாட்டுச் சமூகத்தின் இன, மத மற்றும் மொழிக் குழுக்களுக்கு ஏற்ப உள்ளடக்கங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. சில புவிசார் மற்றும் பூகோளப் பகுதிகளில் வாழும் மக்களுக்கான ஊடக உள்ளடக்கங்களில் இடைவெளியும், குறைபாடுகளும் காணப்படுகின்றன.

சமீபத்திய கட்டுரை ஒன்றில், அனுபவம் வாய்ந்த இரண்டு அறிவிப்பாளர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்-"சிறுபான்மையினர் மற்றும் புறந்தள்ளப்பட்டவர்கள் தொடர்பாக செய்திகளை வெளியிடுவதுஇ மற்றும் ஊடகக் கல்வி போன்ற விடயங்களில் பாரிய சமத்துவமின்மை காணப்படுகின்றது. இது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. இலங்கையின் அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சமூகத்தின் உயர் குழாமினரை மையமாகவைத்தே செயற்படுகின்றன என்பது வழமையாகத் தெரிந்த ஒரு விடயம்."[100]

செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் வானொலி, தொலைக்காட்சி மூன்று மொழிகளிலும் (ஆங்கிலம், தமிழ், சிங்களம்) வெளியாகின்றன. எனினும், ஊடக நிறுவனங்களின் உற்பத்திகளை இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் பெற முடிவதில்லை. கொழும்பு மாவட்டத்திலும் மேல்மாகாணத்திலும் வாழ்பவர்களால் நாட்டின் வேறு எந்த பகுதியிலும் வாழ்பவர்களை விட அதிக தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை நுகர முடிகின்றது.

நாட்டின் ஊடக உற்பத்தியில் பெரும்பான்மையானவை (80 சதவீதம்) கொழும்பு மாவட்டத்திலேயே இடம்பெறுகின்றன. இது நகர பக்கச்சார்பினை உருவாக்குகின்றது. 2012 ஆம ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி நகரத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 18.2 வீதமாகவும், கிராமங்களில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 77.4 வீதமாகவும், மலையகத்தில் 4.4 வீதமானவர்கள் வாழ்வதாகவும் தெரியவந்துள்ளது.[101] 'நகரம்' என்று

100 Putting the Citizen First: New Approaches to Media Literacy, by Tilak Jayaratne and Sarath Kellapotha, in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 281-293

வரையறுக்கப்படும் பதமானது இலங்கையில் சமகாலத்தில் நகரங்களாக மாற்றப்பட்ட சில பகுதிகளைப் புறக்கணிக்கின்றது. நிபுணர்கள் கருத்துப்படி, 40% இற்கும் அதிகமான மக்கள் பரம்பலைக் கொண்ட பகுதிகளே நகரம் எனப்படும்.[102]

நகரத்தை மையப்படுத்திய ஊடகங்கள் அவர்தம் தேவையைப் புறக்கணிக்கும்போது கிராம மக்கள் மாற்று ஊடகங்களை நாடுகின்றனர். உதாரணமாக, வட மாகாணத்தின் தமிழ்பேசும் பார்வையாளர்களும், நாட்டின் தோட்டத் தொழிற்துறையைச் சேர்ந்தவர்களும் தேசிய ஒளிபரப்புகளை விட செய்மதிகள் ஊடாகப் பெறப்படும் தென்னிந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே அதிகம் விரும்புகின்றனர்.

தேசிய செய்திப்பத்திரிகைகளில் பல்பண்பாட்டுத்தன்மை கொண்ட உள்ளடக்கங்கள் குறைவாகவே காணப்படுகின்றன என்பது கட்டுரைகளில் அதிகம் குறிப்பிடப்படும் ஓர் விடயமாகும். சிங்களப் பத்திரிகைகள் சிங்கள மக்களுக்கும், தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் மக்களுக்கும் செய்திகள் வழங்குகின்றன. தமிழ் அல்லது சிங்கள மொழி பேசும் முஸ்லீம் மதத்தினர் தமக்குரிய விசேட செய்திகளைத் தவிர வேறு செய்திகளை வாசிப்பதில்லை. அதே போல் கிறிஸ்தவ மக்களுக்குரிய செய்திகளும் தேசிய செய்திப்பத்திரிகைகளில் குறைவாகவே காணப்படுகின்றன. இது ஊடக முகாமையாளர்கள், மற்றும் நிபுணர்களது அதிக அவதானத்தை பெறவேண்டிய ஓர் விடயம்.

சிறுவர்களுக்கு எனக் குறிப்பிடத்தக்க ஊடக உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன. இவை இலங்கையின் சனத்தொகையில் 25.2 வீதமாகவுள்ள 14 வயதினருக்கு ஏற்றதாகக் காணப்படுகின்றன (2012 சனத்தொகை மதிப்பீடு). எனினும், வேறு பல வயதுப்பிரிவினர்களுக்கு இவ்விதமான ஊடக உள்ளடக்கங்கள் கிடைக்கப்பெறவில்லை.

முதியவர்களுக்கான (60 வயதுக்கு மேற்பட்டவர்கள்) நிகழ்ச்சிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இவர்கள் நாட்டின் சனத்தொகையில் 13 சதவீதமாக உள்ளவர்கள், இவர்களது எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தம்பான அலைவரிசை (95.4) சுதேசிய மக்களுக்காக ஒலிபரப்பப்படும் ஓர் அலைவரிசையாகும். வேடுவ சமுகத்தின் கலை, பண்பாட்டை வெளிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இவ் அலைவரிசை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்பப்படுகின்றது.[103]

இதேபோன்று மாற்றுத் திறனாளிகள் ஊடகங்களைப் பயன்படுத்துவதை அதிகரிக்கவேண்டும். பிரெய்லி முறையில்

101 Results of Census of Population and Housing, 2012 http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=FinalPopulation&gp=Activities&tpl=3

102 http://www.dailymirror.lk/94975/let-s-get-real-about-sri-lanka-s-urbanization

103 http://www.slbc.lk/index.php/tamil-news-update/3497-leader-of-the-veddah-community-commends-the-service-rendered-by-the-dambana-service-of-the-slbc-to-protect-the-language-of-the-indigenous-community.html

ஒரேயொரு வாராந்த சஞ்சிகை மாத்திரமே காணப்படுகின்றது.[104] எனினும், தொலைக்காட்சிகளில் சமிக்ஞை மொழி பாவனை என்பது தொடச்சியற்றதாக உள்ளது. மாற்றுத் திறனாளிகளின் தேவைகளை உள்வாங்கிச் செயற்படுவது ஊடகங்களின் முக்கிய முன்னுரிமையாக காணப்படவேண்டும்.

ஆகவே, ஒட்டுமொத்தத்தில் ஊடகங்கள் பெறுநர்களின் தேவைகளை உள்வாங்கிச் செயற்படுதல் அதிகரிக்கப்பட வேண்டும்.

## பரிந்துரைகள்

- அரசாங்கம் உரிய கொள்கைள், விதிமுறைகள், மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் ஊடக பன்முகத்தன்மையை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், மற்றும் சிறுபான்மையினத்தவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யவேண்டும். இதனை உள்வாங்கும் ஊடகக் கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலமும், அனுமதிப்பத்திரம் வழங்கும்போது நிபந்தனைகள் விதிப்பதன் மூலமும், ஒலி-ஒளிபரப்புத் துறையில் பன்முகத்தன்மையை உருவாக்கும் சுயாதீன ஒழுங்குபடுத்தல்கள், மூன்று அடுக்கு (பொதுத் தேவை, வணிகம், சமூகம்) ஒலி-ஒளிபரப்பு முறையை அங்கீகரிக்கும் சட்டங்கள், மற்றும் சுயாதீன தயாரிப்பாளர்களிற்கு நிதிவசதிகள் செய்வதன் மூலமும் ஊடக உள்ளடக்களில் பன்முகத்தன்மையை ஏற்படுத்தலாம்.

- தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்சிகள் பண்பாடு மற்றும் மொழிசார் பல்வகைமைத்தன்மையை உருவாக்கும் நிகழ்சிகளுக்கு அதிக இடமளிக்க வேண்டும். பாலியல் சமத்துவம், புறந்தள்ளப்பட்டவர்களது தேவைகளை முன்வைப்பது என்பவற்றையும் கருத்தில்கொள்ள வேண்டும். பெண்கள் தொடர்பான ஒலி-ஒளிபரப்புகளின் போது பொதுமைப்படுத்தல்களுக்கு இடமளிக்கக் கூடாது. இதற்காகப் பெண் ஊடகவியலாளர்களை செய்தித் தயாரிப்பில் அதிகம் ஈடுபடுத்த வேண்டும். அரசியல் கட்சிகளின் கருத்துக்களைப் பக்கச்சார்பின்றி வெளிப்படுத்த வேண்டும்.

[104] www.wijeyanewspapers.lk/?page_id=41

## 3.02 ஊடக நிறுவனங்கள் தங்கள் தொழில்சார்ந்த நடவடிக்கைகள் மூலம் சமூக பல்வகைமையைப் பிரதிபலித்தல்.

சமூகப் பல்வகைமையைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான ஊடகங்களின் இயலுமையானது, அதன் பணியாளர்களின் வகையிலேயே தங்கியுள்ளது. உதாரணத்திற்கு ஊடகவியலாளர்களும் ஊடக நிறைவேற்று அதிகாரிகளும் பெண்களாகயிருத்தல் அல்லது அவர்கள் சிறுபான்மை சமூகத்தினை சேர்ந்தவர்களாகயிருத்தல்.

எனினும், துரதிஷ்டவசமாக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் குறித்த தொடச்சியான புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை. அரசாங்கத்தின் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தொழிற்துறைகள் தொடர்பான வருடாந்த ஆய்வினை மேற்கொள்கின்றது. இதில் பதிப்பு, அச்சு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகங்களின் மீள்வெளியீடு என்ற பிரிவும் காணப்படுகின்றது. எனினும், இவை தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களைக் கொண்டிருப்பதில்லை. இப்பிரிவிலே 2012/2013 கணக்கெடுப்பின்படி, 82 அமைப்புக்களும் 14,975 ஊழியர்களும் சேவையில் உள்ளனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவர்கள் பின்னணி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.[105]

பாலினம் தொடர்பான சில புள்ளிவிபரங்கள் காணப்படுகின்றன. 2011 இல் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மேற்கொண்ட ஆய்வின்போது 31 பத்திரிகைகளில் (மூன்று மொழிகளிலும்) 192 பெண் ஊடகவியலாளர்கள் பணியாற்றுவது தெரியவந்துள்ளது. ஆண் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 464 ஆக காணப்படுகின்றது, ஆக 29.5 வீதமானவர்கள் பெண் ஊடகவியலாளர்கள் (இந்த ஆய்வு ஒலி-ஒளிபரப்பு மற்றும் இணைய ஊடகங்கள் குறித்து அமையவில்லை).

இலங்கையில் பாலினமும் ஊடகங்களும் தொடர்பான சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் மார்ச் 2015 அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகின்றது, “இலங்கையில் பெண் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பல பெண்கள், குறிப்பாக ஆங்கில ஊடகங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர். இதேவேளை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை சந்தித்துள்ளபோதிலும் பெண்கள் பாதுகாப்பற்ற அல்லது ஊடக தொழிற்துறையினருக்கு உகந்ததாகக் காணப்படாத சூழல்களால் பாதிக்கப்படுகின்றனர். பிரச்சினை மிக்கதாக காணப்படும் பணிநிலைமை, முன்னோக்கி நகர்வதற்கான போதிய சந்தர்ப்பங்கள் இன்மை, ஆசிரியபீடங்களில் ஆண்களுக்குச் சார்பான போக்கு, போன்றவற்றின் காரணமாக ஊடகத் தொழிற்துறை என்பது பெண்களுக்கு சவால் மிகுந்ததாகவே காணப்படுகின்றது.”[106]

இந்த ஆய்விற்காக மேற்கொள்ளப்பட்ட விவரண

105 Annual Survey of Industries 2013. http://www.statistics.gov.lk/industry/ASI%202013%20report.pdf

106 http://www.ifj.org/fileadmin/images/Asia_Pacific/IFJ_AP/reports-etc/Gender_and_Media_in_Sri_Lanka

ஆதாரங்களும் செவ்விகளும் இலங்கையின் ஊடகங்கள் போதியளவில் தங்களது சமூகத்தின் பல்வகைமையை பிரதிபலிக்கவில்லை என்பதைப் புலப்படுத்தியுள்ளன.

### பரிந்துரை

- ஊடக நிறுவனங்கள் ஊடகப் பல்வகைமையை உறுதிப்படுத்த வேண்டும். ஆசிரியர் பீடம், ஆளணி என்பவற்றில் இது பிரதிபலிக்க வேண்டும். ஆட்சேர்ப்பின் போது இலங்கையின் சனத்தொகை, இனப்பரம்பல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்படவேண்டும். அதேபோல், சிறுபான்மையினர், மொழிப்பிரிவினர், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளை அதிகம் நியமிக்க வேண்டும்.

# ஆ

## பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு மாதிரி

## 3.03 பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பின் இலக்குகள் சட்டரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டவை

இலங்கையில் வரலாற்று ரீதியாக, அரசாங்கத்திற்குச் சொந்தமான வானொலிகளும் தொலைக்காட்சி நிறுவனங்களும் பரிணாமம் பெற்றுள்ளன. எனினும், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் அவை பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புகள் அல்ல. (12 ஆம் பெட்டியைப் பார்க்க)

- 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம், ஒலிபரப்புத் திணைக்களத்தை (ரேடியோ சிலோன்) சட்டரீதியான கூட்டுத்தாபனமாக மாற்றியது.[107] இச் சட்டம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை "இலங்கைக்குள் சேவையாற்றும்படியும், அந்தச் சேவையை பொதுநலனின் அடிப்படையில் காலத்திற்குக் காலம் அபிவிருத்தி செய்து, விஸ்தரித்து, வளர்ச்சியடையச் செய்யுமாறும் ஆணை வழங்கியது".

- 1982 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம் இலங்கையின் தேசிய ஒளிபரப்பாளரை உருவாக்கியது. அதன் ஆணையில் பின்வரும் விடயங்களும் காணப்படுகின்றன, "இலங்கைக்குள் ஒளிபரப்புச் சேவையை முன்னெடுப்பது, அதனை ஊக்குவித்து அபிவிருத்தி செய்வது, பொது நலனை அடிப்படையாக் கொண்டு நிகழ்ச்சிகளில் உயர்ந்த தராதரத்தைப் பேணுவது".[108]

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் மக்களின் வரிப் பணத்தில் (மற்றும் ஏனைய நிதி விளம்பரங்களின் மூலம் கிடைக்கின்ற வருவாய்) இயங்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக நிர்வகிக்கப்படும் அமைப்புகள்.

ஆசிரியர் பீட சுதந்திரம் என்பது இதன் சட்டமூலத்தில் இல்லை. உதாரணமாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சட்டமூலத்தின் ஒரு பகுதி கூறுவது யாதெனில், "ஒலிபரப்பு தொடர்பான பொதுவான அரச கொள்கைகளை இக் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் அரச கொள்கைகளை நோக்கியதான அமைச்சரால் வழங்கப்படும் பொது மற்றும் விசேட அறிவுரைகளையும் ஏற்று செயற்பட வேண்டும்."

இது தவிரவும், இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி சேவை (ஐ.ரி.என்) ஒன்றும் காணப்படுகின்றது. தனியார் தொலைக்காட்சி நிலையமாக ஆரம்பத்தில் காணப்பட்ட இதுவே இலங்கையின் தொலைக்காட்சி சேவையின் முன்னோடியாகக் காணப்பட்டது. இது, ஆரம்பிக்கப்பட்ட மூன்று மாதங்களில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டு, அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நோக்கத்துடனான நிறுவனமாக, 1979 யூன் மாதத்தில் மாற்றப்பட்டது. 1992 இல்,

107 http://www.commonlii.org/lk/legis/consol_act/slbc365375.pdf

108 http://www.commonlii.org/lk/legis/num_act/slrca6o1982386/s7.html

இது முற்றுமுழுதாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றப்பட்டது. பல தடவைகள் அது குறித்து விவாதிக்கப்பட்ட போதிலும், அதன் உரிமை என்பது எப்போதும் பரந்துபட்டதாகக் காணப்படவில்லை.[109]

இந்த ஒலி-ஒளிபரப்பாளர்கள் எவருக்கும் சட்டத்தினால் வரவிலக்கணப்படுத்தப்பட்ட அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்ட சுதந்திரம் என்பது அவர்களுடைய ஆசிரியபீட நடவடிக்கைகளிலோ அல்லது உள்ளடக்கங்களை ஏற்படுத்துவதிலோ காணப்படவில்லை. அனைத்தும் பல தசாப்தங்களாக ஆளும் கட்சியினரின் பரப்புரைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

BOX 12

## பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு (PSB)

மக்களால் மக்களுக்காக செயற்படும், நிதி வழங்கப்படும;, மற்றும் கட்டுப்படுத்தப்படும் ஒலி-ஒளிபரப்பே, பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு என்பது யுனெஸ்கோவின் வரைவிலக்கணமாகும். இச் சேவை அரச தலையீடுகள் மற்றும் வணிக நோக்கங்கள் அற்றது. இதன் மூலம் மக்கள் - தகவல், கல்வி, மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர். பன்முகத்தன்மை, உள்ளடக்கங்களில் விரிவாக்கம், ஆசிரியர்பீட சுதந்திரம், பொருத்தமான நிதி வழங்கல், பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான தன்மை என்பன உறுதிப்படுத்தப்பட்டால் இச் சேவை ஜனநாயகத்திற்கான ஓர் அடிப்படையாக அமையும்.

மூலம்: http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/public-service-broadcasting/

"பொதுநலன்" என்பது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் மற்றும் ஆளும் கட்சியுடன் சேர்த்துநோக்கி குழப்பப்பட்டுள்ளது. ஆசிரியபீட முடிவுகள் எடுக்கப்படும் இடங்களில் அரசாங்கத்தின் நேரடித் தலையீடு என்பது வழமையான விடயம்.

இலங்கையின் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் அனைத்து உரிமையாளர்களும் வருடாந்த உரிமக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். இந்த வருமானம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஆகியவற்றிற்கு இடையில் பகிரப்படுகின்றது. எனினும், இந்த நடைமுறை 2000 ஜனவரி முதல் நிறுத்தப்பட்டது, பொதுமக்களுக்கு சுமையாகவுள்ள அரசாங்க வரியை அகற்றவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், அரசாங்க ஊடகங்களை அவர்களது பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்புக் கடமைகளில் இருந்து விடுவிப்பதே இதன் உண்மையான நோக்கம் என ஊடகங்களை அவதானிப்பவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். கட்டணங்களைச் செலுத்தும் மக்கள் சில உரிமைகளுக்கு உரித்தானவர்கள், விமல் பெர்ணாண்டோ எதிர் இலங்கை ஒலிபரப்புக்

109 http://www.itn.lk/about-itn/

கூட்டுத்தாபனம் வழக்கின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளது (1996).[110]

BOX 13

## பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு: நோக்கத்தை முதலில் தெளிவுபடுத்து!

ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைக்காட்சியின் முன்னாள் தலைவரான பேராசிரியர் தம்மிக கங்காநாத் திசநாயக்க, இலங்கையின் பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புக்கான முயற்சிகள் இடம்பெறுவதன் நோக்கம் குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்கிறார்.

ஒரு நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். "முதலில் எங்களுக்கு பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு அவசியமா என நாங்கள் தீர்மானிக்கவேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புகள் முற்று முழுதாக சந்தை வளத்தில் தங்கி இருக்கப் போகின்றது என்றால், சட்டங்களைக் கொண்டு வருவதில் அர்த்தம் இல்லை. ஆகவே, ஒரு சமூகம் என்ற வகையில் வரி செலுத்துபவர்கள் குறிப்பிடத்தக்க நிதியை பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பைப் பேணுவதற்கு ஒதுக்க வேண்டும். பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்புகள் பாராளுமன்றத்திற்கே பதிலளிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அரசாங்கத்தின் தலைமைக்கு அல்ல. ஒலி-ஒளிபரப்புத் தொழிற்துறை சுயாதீன ஒழுங்குபடுத்துனரால் உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்படும் வரை தனியார் துறையின் பங்களிப்பு என்பது சிறந்ததாகும். உலகின் பல நாடுகள் இதனையே செய்கின்றன".

பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு எத்தகையது?

இலங்கை தனது பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பின் இலக்குகளை சமூக-பண்பாடு மற்றும் அரசியல் சூழமைவுகளுக்கு ஏற்ப மீள வரைவிலக்கணப்படுத்த வேண்டியுள்ளது. பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புகளில் பல்வகைமையை உறுதி செய்வதன் மூலம் முக்கியமான ஜனநாயகப் பணியை ஆற்றுவது உண்மை. அதேவேளை, தனியார் ஊடகங்கள் வெறுமனே சந்தையை அடிப்படையாக வைத்து பெருமளவு பார்வையாளர்களுக்கு அல்லது தரவரிசைப்படுத்தல்களுக்கு நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர்.

பொதுமக்களுக்கான பங்காற்று வெளியை உறுதிப்படுத்துவதனுடாக, பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு தனது செயற்பாட்டில் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கிறது,

- தரமான தகவல்களைப் பெறும் மக்கள் உரிமையை பூர்த்தி செய்தல். இதன் மூலம் நிகழ்ச்சித் தராதரங்களை ஏற்படுத்துதல்.

- பிரதிநிதித்துவ பன்முகத் தன்மையைச் செழிப்படையச் செய்தல். பெருமளவு பார்வையாளர்கள் அக்கறை கொள்ளாதவிடத்தும் அதுசார்பில் விசேட நிகழ்ச்சிகளை வழங்குதல்.

110 Wimal Fernando v Sri Lanka Broadcasting Corporation [1996] 1 Sri Law Reports 157

- கல்வி மற்றும் பண்பாட்டுத் தேவைகளுக்கு சேவை செய்தல். சமூகத்தின் பண்பாட்டு மட்டத்தை உயர்த்துதல் ஏனைய பண்பாடுகள் குறித்த புரிந்துணர்வை வளர்த்தல்.

- சமூகத்தின் குரலாக மாறுவதற்கான திறமையை ஆசிரியர்பீடம் தொடர்ச்சியாகக் காண்பித்தல். (சுயாதீன தயாரிப்பாளர்கள் பொதுச் சேவை ஊடகங்களைத் தளமாக பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருத்தல்)

- பொதுநல நோக்கம் கொண்ட தொழில் சார் ஊடகவியலாளர்களைஇ உள்ளடக்கங்களைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தலில் ஈடுபடுத்தல்.

பொதுச் சேவை ஊடகங்கள் காணப்படுவதற்கான நோக்கம் அவை வர்த்தக ஒலி-ஒளிபரப்பாளர்களை விடவும் வேறுமாதிரியான உள்ளடக்கங்களை வழங்குவதே. உதாரணத்திற்கு, வர்த்தக ஒலிபரப்பாளர்கள் தங்கள் சேவையின் தரவரிசைப்படுத்தல் அதிகரிக்குமானால் ஆன்மிகம் போன்ற விடயங்களை ஊக்குவிக்கக் கூடும். ஆனால், பொதுச் சேவை ஊடகங்களுக்கு அறிவு பூர்வமான சிந்தனையை வளர்ப்பதற்கான கடப்பாடு உள்ளது.

யுனெஸ்கோவின் தொடர்பாடல் அபிவிருத்திப் பிரிவில் பணியாற்றியவரும் அதன் அபிவிருத்தித் தொடர்பாடலுக்கான சர்வதேச திட்டத்திற்குத் தலைமை தாங்கியவருமான விஜயானந்த ஜயவீர கூறுவது, “உண்மையான சுதந்திரமுள்ள பொதுச் சேவை ஊடகங்கள் வெறுமனே வித்தியாசமான உள்ளடக்கத்திற்கான தளங்கள் மாத்திரமல்ல, ஜனநாயக ஈடுபாட்டிற்கு மிகவும் அவசியமான நிறுவனங்கள்.”
அவர் மேலும் இவ்வாறு தெரிவிக்கிறார். “இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அல்லது ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை
பி.பி.ஸி போன்று மாற்றுவதைக் குறிப்பிடவில்லை. பொதுச் சேவை ஒலிபரப்புக்கு பி.பி.ஸி மாத்திரமே ஒரு முன்மாதிரி அல்ல. ஐரோப்பாவில் பல பாரம்பரியங்களும் மாதிரிகளும் உள்ளன. விசேடமாக பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஜப்பானில் உள்ளவற்றைக் கூறலாம். போலந்து எப்படி தனது அரச ஒலி-ஒளிபரப்பாளர்களை வெற்றிகரமான பொதுச் சேவை ஒலிபரப்பாளர்களாக மாற்றியது என நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.”

20 வருடங்களுக்கு மேல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய ஜயவீர, பொதுச் சேவை ஒலிபரப்பு என்பது அரசமைப்புத் தேவையாக மாற வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புகளுக்கான நிதி வழங்குதல்

அனைத்து அரசாங்க ஊடகங்களிலும் தற்போது ஊழியர்கள் தேவைக்கதிகமாக, திறனற்றவர்களாக

உள்ளனர் (தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் வழங்கிய அரசியல் நியமனங்கள் காரணமாக). இப் பிரச்சினையைத் தீர்க்க, அபாயகரமான சவாலை மறுசீரமைப்பு வழியாக எதிர்நோக்க வேண்டும்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஆகிய அரச ஒளிபரப்பாளர்களுக்கான முக்கிய வருமானம் அவர்களது வானலை நேரத்தை விளம்பரங்கள் மற்றும் அனுசரணை நிகழ்ச்சிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கிறது. கல்வி மற்றும் ஏனைய பொதுநலன் சார் உள்ளடக்கங்கள் வர்த்தக ரீதியான உள்ளடக்கங்களுடன் நேரடியாகப் போட்டியிடுகின்றன. 2012 இல், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தனது வானலை நேரத்தை விற்பனை செய்ததன் மூலம் 1.85 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியது. அதேவேளை 168 மில்லியனை ஏனைய வழிகள் மூலம் சம்பாதித்தது. இதில் 11 மில்லியன் ரூபா அரச நன்கொடையாக வழங்கப்பட்டது.[111] இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பெரும்பாலும் திறைசேரி மூலம் கிடைக்கும் மக்கள் அளிக்கும் வரிப்பணத்தினாலேயே இயங்குகின்றது.

பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்புகளின் சுதந்திரம் மற்றும் தரமான செயற்பாட்டிற்குப் போதியளவு மற்றும் தொடர்ச்சியான நிதி கிடைப்பது முக்கியமாகும். வரி செலுத்துபவர்களின் நிதியை இவற்றுக்கு ஒதுக்குவது மக்களின் கல்வியை, பண்பாட்டை, ஊடக பல்வகைமையை முன்னேற்றச் செய்யப்படும் மக்கள் நன்மைக்கான முதலீடாகக் கருதப்படலாம். சமூகத்தில் நிரந்தரமான கல்விப் பங்களிப்பை இவ்வகை ஒலி-ஒளிபரப்புகள் செய்வதை கருத்தில் கொள்ள வேண்டும்.
எவ்வாறாயினும், பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்புகளின் நிதி அடிப்படையை பன்முகப்படுத்துவதற்கு ஏனைய நிதி சார்ந்த தந்திரோபாயங்களை உருவாக்க வேண்டும்.

லொத்தர் வழியான வருமானத்தில் ஒரு பகுதியை பொதுச்சேவை பொதுநலன் நோக்கில் ஒலி-ஒளிபரப்பின் குறித்த நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படலாம் என்பது இவற்றில் ஒன்று. வானொலி, தொலைக்காட்சி கருவிகளுக்கான பயன்பாட்டு வரி, சில நுகர்வுப் பொருட்களுக்கான வரி என்பனவும் உத்தேசத் தெரிவுகளாகலாம்.

உதாரணமாக, தாய்லாந்து நாட்டின், "தாய் பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பிற்கான" வருமானம் பெறப்படுவது மதுபானம் மற்றும் புகையிலை மீதான வரி மூலமாகும். இவ் வருமானம் சுங்கத் திணைக்களத்தால், சாதாரண பட்ஜெட் நெறிமுறைகளுக்கு அப்பால், நேரடியாக பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது. பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பாளர்கள் எதுவித அரசியல் தலையீட்டுக்கும் உள்ளாகாதிருக்கவே இச்

111 Sri Lanka Rupavahini Corporation Annual Report 2012. http://www.parliament.lk/uploads/documents/paperspresented/annual_report_srilanka_rupavahini_corporation_2012.pdf

செயன்முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.[112]

தொடர்பாடல் நிபுணரான, கலாநிதி ரொஹான் சமரஜீவ நேர்காணல் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டார். "இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டங்கள் முற்றுமுழுதாக காலங்கடந்தவை. பல தசாப்தங்களுக்கு முன்னர் நிலவிய பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப அவை உருவாக்கப்பட்டன. அவற்றைத் தற்போது தரம் உயர்த்த வேண்டும். இலங்கையிடம் பி.பி.ஸி போன்ற சுதந்திரமான பொதுச்சேவை ஊடகத்தை தொடர்ச்சியாக தக்கவைப்பதற்கான திறன் உள்ளதா என்பது எனக்கு நிச்சயமாக தெரியாது."

வர்த்தக நோக்கம் கொண்ட தனியார் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படாத உள்ளடக்கங்களை உருவாக்குவதற்குப் பொது ஊடகங்களுக்கு ஆதரவளிப்பதற்கான நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சமீபத்திய கட்டுரையொன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். "தரமான உள்ளடக்கத்தை உருவாக்க விரும்பும் எந்த ஊடக தயாரிப்பாளர்களுக்கும் மானியங்களை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்குவதற்காக நிதியம் ஒன்றையும் முகாமைத்துவக் கட்டமைப்பையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கான நிதி திறைசேரியில் இருந்தே வரவேண்டும். தனியார் தயாரிப்பாளர் மீது வரிகளை விதித்தால் அவர்கள் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட போட்டியில் இருந்து பாதுகாப்பைக் கோருவார்கள். உள்ளடக்கம் ஒழுக்கநெறியுடைய சமூகத்திற்கு அவசியமானது என்றால் அதனை மிக முக்கியமானது என நாங்கள் கருதினால். நாங்கள் அதற்குப் பணம் செலுத்த வேண்டும். தேவையற்ற தலையீடுகள் இல்லாத நிலையை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால் வெற்றிக்கான உத்தரவாதமாக இது மாத்திரமே அமைந்து விடாது. அரசியல் செல்வாக்கு உடைய பொது ஊடக உள்ளடக்கங்கள் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளை இதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என்பதே முக்கிய விடயம்."[113]

112 http://www.nationmultimedia.com/opinion/Thai-PBS-belongs-to-the-people-not-those-in-power-30282141.html

113 Public media or public media organisations in Sri Lanka? Rohan Samarajiva. Lanka Business Online (LBO), 14 January 2015. http://www.lankabusinessonline.com/public-media-or-public-media-organizations-in-sri-lanka/

## பரிந்துரைகள்


- அரசாங்கம் சட்ட மறுசீரமைப்புக்களைச் செய்வதன் மூலமாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி முதலான அரச ஊடகங்களை முழுமையான, அரசியல் தலையீடற்ற, பொதுமக்கள் நலனுக்கான, சுதந்திரமான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களாக மாற்ற வேண்டும். அரச தலையீடுகளற்று அவை இயங்குவது சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்பீட சுதந்திரமும் ஊழியர்களது சுதந்திரமும் பேணப்படவேண்டும். இதற்காக சுயாதீன முகாமைத்துவ சபைகள் உருவாக்கப்பட வேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பிற்கான சட்டம் வரையப்படும்போது ஐரோப்பா, கனடா மற்றும் ஆசிய நாடுகளின் மாதிரிகள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

- பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பிற்கான நிதி வழங்கலானது பாதுகாப்பானது, நீண்ட கால அடிப்படையானது, தொடர்ச்சியானது, மற்றும் தன்னிச்சையான அரசியல் மற்றும் சந்தைச்சக்திகளின் தலையீடுகளற்றது என்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பிற்கு பொதுமக்கள் நிதி வழங்குவதற்கான பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.


- நாட்டின் பொதுச்சேவைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில், பொதுசன ஊடகங்களின் கடமைகளைத் தெளிவாகக் குறிப்பிடும் விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

- பொதுசன ஊடகங்கள் பொது மக்கள் தொடர்பில் பொறுப்புணர்வுடன் செயற்படுவதை பாராளுமன்றம் மற்றும் நேரடி வழிகள் வழியாக, உதாரணமாக, நிகழ்ச்சிகள் தொடரபாக பெறுநர் சபை உருவாக்குதல், பொதுமக்களுடன் நேரடி கலந்துரையாடலில் ஈடுபடுதல் ஆகிய நெறிமுறைகள்வழி உறுதி செய்ய வேண்டும்.

டபிள்யூ. ஆர். விஜேசோமவினால் வெளியிடப்பட்ட கேலிச்சித்திரம் - வெளியீடு : தி ஐலண்ட் 3 மார்ச் 1993




இலங்கையில் மின்னணு ஊடகங்களின் பரிணாம வளர்ச்சி - தர்ஷன கருணாதிலகவின் கேலிச்சித்திரம்



## 3.04 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பாளர்களின் நடவடிக்கைகள் எந்தத் துறையிலும் பாரபட்சத்தை அனுபவிக்கக் கூடாது.

இலங்கையில் சர்வதேரீதியான அங்கீகாரத்துடன் வரைவிலக்கணப்படுத்தப்படும் பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பு எதுவும் இல்லை. அரச ஊடகங்களான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பன கேபிள் தொலைக்காட்சி, ஐ.பி.ரி.வி., டி.ரி.எச். என எவ்வழிகளிலும் தங்கள் சகல அலைவரிசைகளினுடாகவும் மக்களைச் சென்றடைவதில் எதுவித தடையுமில்லை. அதேவேளை, சட்டங்களாலோ ஒழுங்குமுறைகளாலோ அன்றி, மக்களும் இச்சேவைகளை அதிகம் நுகர்பவர்களாக இருக்கின்றனர்.

“கட்டமைப்புரீதியான மறுசீரமைப்புக்கள் சாத்தியப்பட வேண்டுமானால், அரச ஊடகங்கள் சந்தை ஆதிக்கத்திலிருந்து வெளிவரவேண்டும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பன விளம்பரங்கள் மற்றும் அனுசரணைகளில் தங்கியிருப்பதிலிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டும். வெவ்வேறு அரசாங்கங்கள் அரச ஊடகங்களைப் பயன்படுத்தியபோதும் அதற்கு நிதி வழங்குவது குறைவு, அதனால் அரச ஊடகங்கள் பாரிய நிதிப்பிரச்சினையை எதிர்கொள்கின்றன. இது அரச ஊடகங்கள் பொதுமக்களுக்காகச் செயற்படுவதைப் பாதிக்கும்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் பொதுச் சேவை ஒளிபரப்பாளராக உருவாக்கப்படாத போதிலும் அதன் சட்டம் அதனைப் பொதுச்சேவையை குறிப்பிடுகிறது. துரதிஷ்டவசமாக அரசியல் தலையீடு அதனை மாற்றிவிட்டது. நான் நினைக்கிறேன், நாம் அதை மீளக்கொண்டுவர வேண்டும், அது ஆரம்பிக்கப்பட்ட சட்டத்தின் நோக்கம் மீளுருவாக்கப்பட வேண்டும். அரசியல் செல்வாக்குக்குகளிலிருந்து வெளிவருவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். கடினமான செயல் என்ற போதிலும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பாக மாற்றப்படவேண்டும்.”

- மொஹான் சமரநாயக்க,
ஊடகவியலாளர் மற்றும் ஊடக ஆய்வாளர் ,
முன்னாள் தலைவர்- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

“சில தொலைக்காட்சி அலைவரிசைகள் வன்முறை, மரணம் தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் விதம் பார்த்து நான் அதிர்வடைந்தேன். இந்த துன்பியல்கள் மிக உணர்வுரீதியானவை. எமது முழுமையான சமூகக் கட்டிணைப்பிலும் பாதிப்பை ஏற்படுத்துவது. இதனால், இலங்கையில் பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு அவசியம். ரூபவாஹினி ஜப்பான் நாட்டால் அன்பளிக்கப்பட்டது, அத்துடன் ஜப்பானிய பொதுச்சேவை ஒளிபரப்பான என். எச். கே. யின் நல்ல பாரம்பரியங்களும் பெறப்பட்டன. எங்கே அவை போய்விட்டன ?. ரூபவாஹினி எதற்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திலிருந்து நாம் தொலைவாக நகர்ந்துவிட்டோம். அது பொது மக்களுக்கு கல்வியறிவூட்டவே உருவாக்கப்பட்டது.”

- ஹேமா நளின் கருணாரத்ன,
முகாமைத்துவப் பணிப்பாளர், ஹெரிடேஜ் தொலைக்காட்சி

## 3.05 சுயாதீன மற்றும் வெளிப்படையான நிர்வாகம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் நிர்வாக சபைகளுக்கான உறுப்பினர்கள் ஊடகங்களுக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர். அவர், அவர்களை எந்தநேரத்திலும் எந்தக் காரணத்தையும் தெரிவிக்காமல், அப் பதவிகளில் இருந்து அகற்றலாம். உறுப்பினர்கள், அரச கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களாகக் கருதப்படுவார்கள். இந்த ஏற்பாடுகள் அரச ஒலி-ஒளிபரப்புகளின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவர்கள், செய்திகள் விடயத்தில் பக்கச்சார்பாக நடந்துகொள்வதற்கு வழிவகுக்கின்றன.

அரச ஒலி-ஒளிபரப்புக் கூட்டுத்தாபனங்களின் நிர்வாக சபையில் உள்ளவர்களின் நியமனங்களின்போது, புவிசார் பல்வகைமையை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது துறைசார் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும் என்ற சட்டத் தேவைகளும் இல்லை. காலத்திற்குக் காலம் பல அமைச்சர்கள் பல்வேறு அளவிலான இனப்பல்வகைமையைக் கொண்ட முகாமைத்துவ சபைகளை நியமித்துள்ளனர். இச் செயன்முறை சுதந்திரமானதுமல்ல, வெளிப்படையானதுமல்ல. அரசியல் இலக்குகளுக்காக துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. முக்கிய தேசிய தேர்தல் காலங்களில் அரச ஊடகங்கள் செயற்படும் விதம் இதனை உறுதிப்படுத்தும் (15 ஆம் பெட்டியைப் பார்க்க)

மேலே 2.08 இல் குறிப்பிட்டது போல், சுதந்திரமான ஒலி-ஒளிபரப்புக்கான ஒழுங்குபடுத்தல் என்பது அவசியம். ஆனால், அது அரச தலையீடுகளின்றி சுதந்திரமானதாக இருத்தல் வேண்டும்.

### பரிந்துரைகள்

- அரசாங்கத்திற்கு சொந்தமான அச்சு ஊடக நிறுவனங்களின் (லேக் ஹவுஸ் / ஏ.என்.சி.எல்) எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்கு பொதுக் கலந்தாய்வு அவசியம். அவற்றை பொதுச் சேவை ஊடகங்களாக மாற்றுவது, முழுமையாக தனியார் மயப்படுத்துவது, உரிமையை மேலும் பரந்துபட்டதாக்குவது உட்பட அனைத்து சாத்தியப்பாடுகளும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

- அரச ஊடகங்கள் பொதுச் சேவை ஊடகங்களாக மாற்றப்படவேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புகளின் நிர்வாக சபைகள் பாராளுமன்றம் வழியாக மக்களுக்கே பதிலளிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

## 3.06 பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பாளர்கள் பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புகளுடன் ஈடுபாடுகளை ஏற்படுத்துதல்

இலங்கையில் பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு இல்லை என்பதால், இங்கு அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் குறித்து விமர்சிக்கப்படுகிறது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய அரச ஊடகங்களின் பெறுநர் ஆய்வுப்பிரிவுகள், பெறுநர்கள் பின்னூட்டம், அபிப்பிராயம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், அவை பார்வையாளர் பங்கேற்பை ஊக்குவிக்குமுகமாக நிகழ்ச்சித் திட்டமிடலாளர்களாலோ, முகாமையாளர்களாலோ நிகழ்ச்சிகளில் உள்வாங்கப்படுவது குறைவு என்பதே உள்ளகக் கருத்து.

அரச ஒலி-ஒளிபரப்பாளர்களும், அநேக வர்த்தக நோக்கிலான ஒலி-ஒளிபரப்பாளர்களும் மக்களுடன் சில நிகழ்ச்சிகள் வடிவங்கள் : தொலைபேசி மூலமான உரையாடல்கள் போன்றவை மூலம் தொடர்புகொள்வார்கள். இவை நேரடியாக ஒலி- ஒளிபரப்பாகும். எனினும், அவர்கள் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து நேயர்களைக் கருத்துகூறுமாறு உற்சாகப்படுத்துவதில்லை, ஊக்குவிப்பதில்லை. இவ்வாறான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர்கள் முன்பே தீர்மானிக்கப்படுகிறார்கள், நடைமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படப் பழக்கப்படுத்தப்படுகின்றனர். இதன் காரணமாக இவற்றை தீவிரமான, நேர்மையான, பங்காற்றுதல்களுடன் கூடிய கலந்துரையாடல்களுக்கான வாய்ப்புகள் எனக் கருதமுடியாது.

இணையவழி அளவை ஆய்வுகளுக்கும், மக்களுடனான பொதுக்கலந்துரையாடல்களுக்கும், மக்களைச் சென்றடையும் வாய்ப்புக்களுக்கும் முயற்சிக்கப்படுவதில்லை

சிவில் சமூக அமைப்புகளுக்கோ அல்லது மக்களுக்கோ அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் முகாமைத்துவ சபைக்கு உறுப்பினர்களை பிரேரிப்பதற்கான எந்தவித உத்தியோகபூர்வமான வாய்ப்புகளும் இல்லை. எந் ஒலி-ஒளிபரப்பாளராவது ஒலி-ஒளிபரப்பிய, சர்ச்சைக்குரிய உள்ளடக்கம் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கான உத்தியோகபூர்வ நடைமுறைகள் எதுவும் காணப்படவில்லை. நிகழ்ச்சிகள் குறித்த கொள்கைகளில், மக்கள் செல்வாக்கு செலுத்துவதற்கு ஏதுவான அரச ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கான பொறுப்புக்கூறல் அமைப்பு முறை எதுவும் காணப்படவில்லை.

குறித்த சில விடயங்கள் - உதாரணமாக தேர்தல், பெண்கள் தொடர்பான சித்தரிப்புக்கள் தொடர்பில் சில சிவில் சமூக அமைப்புகள் - பெண்கள் மற்றும் ஊடக அமைப்பு, ட்ரான்ஸ்பெரன்சி இன்ரநெஷனல், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பன அரச ஒலி-ஒளிபரப்பு நிறுவனங்கள் மீது விமர்சனங்கள் வெளியிடுகின்றன. எனினும்,

அரச ஊடகங்கள் அவர்களுடன் முறைசார் தொடர்புகள் மூலம் கருத்துகளை உள்வாங்கிச் செயற்படுவதில்லை.

## பரிந்துரைகள்

- இலங்கையில் சுதந்திரமான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பினை உருவாக்குதலில் சிவில் சமூக அமைப்புகள் முனைப்புடன் செயற்பட வேண்டும். அத்தோடு பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்புகளின் நீடித்த வாழ்வுக்கு நிதி திரட்டுவது தொடர்பில் ஆக்கபூர்வமான வகையில் செயற்பட வேண்டும்.

- இலங்கையில் அரச ஊடகங்கள் பெறுநர்களுடன் வினைத்திறனான முறையில் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாக நிகழ்ச்சிகளில் பெறுநர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்யலாம். மிக முக்கியமாக பெறுநர்கள் சபை உருவாக்கம் பெற வேண்டும்.

## ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை

ஊடக ஒழுங்குபடுத்தல் என்பது, அரசாங்கம் அல்லது ஏனைய அமைப்புகள் ஊடகங்களைக் கட்டுப்படுத்துதல் அல்லது வழிகாட்டுதல் எனபதாகும். இந்த ஒழுங்குபடுத்தல்களை பின்வரும் வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளலாம்.

- சட்டங்கள் , விதிமுறைகள் அல்லது நெறிமுறைகள் ஊடாக
- பல இலக்குகள் ஊடாக (ஊடகங்களில் பொது நலன்சார் நிகழ்ச்சிகளை அதிகரித்தல்)
- போட்டியை அல்லது வலுவான ஊடகச் சந்தையை ஊக்குவிப்பதன் ஊடாக அல்லது
- பொதுவான தொழில்நுட்ப தராதரங்களை ஏற்படுத்துதல் ஊடாக

உலகில் பல வகையான ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகள் அட்டவணை-2 இல் காட்டப்படுவதுபோல் காணப்படுகின்றன

Table 2: Different media regulatory mechanisms

| Regulatory method | Description | Example/s |
|---|---|---|
| Governmental regulation | When a regulatory body is either set up by a law, or otherwise controlled by the government. The models of government regulation differ worldwide and are not customised to a set formula. | Sri Lanka Press Council Act No 5 of 1973 which set up the Sri Lanka Press Council |
| Independent Statutory Regulation | Implies independence from both the media and government but set up by law. | Press Council of Denmark |
| Self-regulation | A peer review system operating within a set of self- imposed rules by the media. It consists of representatives from media profession passing judgement of matters of journalistic reporting using a Journalistic Code of Ethics... | Press Complaints Commission of Sri Lanka (PCCSL), operational since 2003 |
| Co-Regulation | A legally empowered regulatory body chosen by media producers and professionals, which is independent from both the government and corporate interests. | Indonesia's Independent Press Council (Dewan Pers) created by Press Law 1999 |

## 3.07 அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான சிறந்த வலுவான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல்.

கடந்த பல வருடங்களாக இலங்கையின் அச்சு ஊடகத் துறையினர் சுய ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்ந்தும் வளர்ச்சிகண்டு வருகின்றது. எனினும், ஒலி-ஒளிபரப்புத் துறையினர் சீரத்தன்மையுடனான ஒரு பொறிமுறையை இன்னமும் உருவாக்கவில்லை.

சுய ஒழுங்குபடுத்தல்களை முதலில் அறிமுகப்படுத்திய தெற்காசிய நாடு இலங்கையே ஆகும். செய்திப்பத்திரிகை தொழிற்துறையின் பரந்துபட்ட ஆதரவுடன் அதனை அது மேற்கொண்டிருந்தது. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு என்பது செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் மற்றும் பத்திரிகைகளின் இணைய பதிப்புகள் என்பவற்றில் ஏற்படக்கூடிய தவறுகளை சரிசெய்வதற்காக ஊடகத் தொழிற்துறையினர் ஒக்டோபர் 2003 இல் தாமாக முன்வந்து உருவாக்கிய சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறையாகும். இலங்கை செய்திப்பத்திரிகை சமூகத்தினர், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினர், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகியன இணைந்து இதனை உருவாக்கியிருந்தன.[114]

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின்படிஇ இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு சமரசம், மத்தியஸ்தம், நடுவம் என்ற கொள்கைகளின் அடிப்படையிலே செயற்படுகின்றது. ஊடகங்களில் காணப்படும் உள்ளடக்கங்கள் குறித்த பொதுமக்களின் கரிசனைகளிற்கு சுதந்திரமான, வேகமான, நேர்மையான அடிப்படையில் அது தீர்வைக் காண முயல்கின்றது. இது சமரச முறை ஊடாகத் தீர்ப்பளிக்க முயல்கின்றது, அது பலனளிக்காத பட்சத்தில் மத்தியஸ்தம், என்ற அடிப்படையில் செயற்படுகின்றது, இறுதியாகவே அது பிரச்சினை தீர்வு சபை ஊடாக மத்தியஸ்த வழியில் தீர்வைக் காண முயல்கின்றது. உயர்நீதிமன்றத்திற்குச் சட்டமொன்றின் கீழ் தீர்ப்பை வழங்குவதற்கான அதிகாரமும் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

பிரச்சினை தீர்வுக் குழு என்பது பதினொரு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, இவர்களில்

> *“ஆசிரியர்பீட ஒழுக்கக் கோவை தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள போதும், அது தொடர்பில் மேலும் விருத்தி அவசியம்”.*
>
> குமார் நடேசன்
> தலைவர்,
> பத்திரிகை முறைப்பாட்டு
> ஆணைக்குழு,
> இலங்கை (2014 வருடாந்த மதிப்பீடு)

114 http://www.pccsl.lk/

115 http://www.pccsl.lk/sites/default/files/Code-English.pdf

BOX 14

## இலங்கை ஊடகங்களின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கான ஒழுக்கக்கோவை

இலங்கை ஊடகங்களின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கான ஒழுக்கக் கோவை 2003-2004 இல் ஊடகங்களுக்கான ஒழுக்கக் கட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. இதன் மூலமாக, பொதுமக்கள் எந்தவித எல்லை மீறல்கள் குறித்தும் மதிப்பிடமுடியும்,

மேல் குறிப்பிட்ட கோவை இந்த வரிகளுடன் ஆரம்பமாகின்றது, “பத்திரிகை வெளியிடும் நிறுவனங்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பங்களிப்பு செய்பவர்களை, அச்சு வடிவத்திலும் இணையம் மூலமாகவும், கட்டுப்படுத்தும் தொழில்சார் நடவடிக்கைகளுக்கான ஒழுக்கக் கோவை இதுவாகும். இக் கோவையானது, இலங்கை பத்திரிகைகள் சுதந்திரமானவையாகவும், பொறுப்புணர்வுடன் செயற்படுபவையாகவும், வாசகர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றிற்கு மதிப்பளிப்பவையாகவும் காணப்படுவதை உறுதிசெய்யும் நோக்கத்தை கொண்டது. ஊடகத்துறையின் உயர்தராதரங்களை பேணவும் அது இலக்குக் கொண்டுள்ளது.

ஆரம்பத்திலேயே, “இக் கோவை தனி நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளை பொதுமக்கள் தகவல் அறிவதற்கு உள்ள உரிமையையும் அங்கீகரிக்கின்றது. இது வெறுமனே வார்த்தைகளில் மாத்திரமல்ல செயற்பாடுகளிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதனைத் தனிநபர்களின் உரிமைகளை மதிப்பது என்றோ அல்லது பொதுநலன்களைக் கருத்தில் கொண்டு வெளியீட்டை தடுப்பதாகவோ குறுகிய ரீதியில் அர்த்தப்படுத்தக் கூடாது.

அறிமுகவுரையில், முறைப்பாடுகளுக்குத் தீர்வைக் காணும் விடயத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு துரித கதியில் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். கோவையை மீறியதாக கருதப்படும் எந்த வெளியீடும், தீர்ப்பை முழுமையாகவும், உரிய முக்கியத்துவம் கொடுத்தும் வெளியிடப்பட வேண்டும், தலைப்பு இலங்கை பத்திரிகை ஆணைக்குழுவை சுட்டிக்காட்டுவதாக அமைய வேண்டும்.”



6 பேர் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள். ஏனைய ஐந்துபேரும், சிரேஷ்ட பத்திரிகையாளர்கள். ஆசிரியர் பீட உள்ளடக்கத்திற்கான ஒழுக்கத் தராதரங்களை இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் தொழில்சார் நடவடிக்கை ஒழுக்கக் கோவை நிர்ணயிக்கின்றது, இதனைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு எற்றுக் கொண்டதுடன், பின்னர் 2014 இல் இதன் திருத்தப்பட்ட பதிப்பை வெளியிட்டது. இப்பதிப்பானது அச்சு ஊடகங்கள் துல்லியமான முறையிலும், அதேவேளை பொதுமக்கள் நலன்களை கருத்திற் கொண்டும் செயற்படக்கூடிய ஓர் ஒழுக்கக் கோவையை முன்வைக்கின்றது (14 ஆம் பெட்டியைப் பார்க்க).[115]

1980 களில் சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் வரைந்த ஒழுக்கக்கோவையும் இங்கு காணப்படுகின்றது. அந்தக் கோவை “இலங்கை பத்திரிகை பேரவையால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகள்” எனும் பெயரில் இலங்கை பத்திரிகை பேரவையின் சட்டத்தின் 30(1) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட சட்டத்தின் 30(3) பிரிவின் கீழ் பாராளுமன்றத்தினால் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி அரச வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டது.[116]

116 http://www.mediareformlanka.com/sites/default/files/archival_files/Sri%20Lanka%20Press%20Council%20Code%20of%20Ethics%20for%20Journalists.pdf

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு - 12 வருட செயற்பாடுகள்

2015 இல், மூன்று மொழிகளையும் சேர்ந்த அநேக பத்திரிகைகள் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சுய ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டை ஏற்றுக் கொண்டன. 2003 இறுதி முதல் 2014 வரை குறிப்பிட்ட ஆணைக் குழுவிற்கு 1700 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது சராசரியாக வருடத்திற்கு 150 எனக் கொள்ளலாம்.

2014 இல் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு 291 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மூன்று மொழிகளையும் அடிப்படையாக வைத்து இது குறித்து ஆராய்ந்த வேளை பின்வரும் விடயங்கள் தெரியவந்தன.

- சிங்கள மொழிப் பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் 167
- தமிழ் மொழிப் பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் 47
- ஆங்கில மொழிப் பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் 70

அச்சு ஊடகத்துடன் தொடர்பில்லாத 7 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன (ஆணைக்குழுவின் எல்லைக்கு அப்பாற்பட்டது).

80 சதவீதமான முறைப்பாடுகளுக்குக் கடந்த

*"ஆசிரியர்பீட ஒழுக்கக்கோவையோ அல்லது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவோ எதுவும் சிறந்ததல்ல. இரண்டிலும் மாற்றம் அவசியம். எவ்வாறாயினும், சுய ஒழுங்குபடுத்தல் தேவையானதொன்றாகவே உள்ளது. அரசாங்கத்தால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல் இதற்கான தீர்வாகாது. பத்திரிகைகள் பொறுப்புடன் செயற்படுவதோடு, பத்திரிகையாளர்கள் தம் நலனையும் பொதுநலனையும் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்."*

சிங்ஹ ரணதுங்க
பிரதித் தலைவர்
இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு
(பத்தாவது ஆண்டு பூர்த்தியின்போது தெரிவித்த கருத்து, ஜனவரி 2014)
http://www.pccsl.lk/sites/default/files/IC%20Final%20Report.pdf

தசாப்தத்தில் தீர்வு காணப்பட்டுள்ளது. சுய ஒழுங்குபடுத்தல் என்ற கருத்தை தற்போது ஊடகங்களும் பொதுமக்களும் ஏற்றுக் கொண்டுள்ளதாக, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

குறிப்பிட்ட ஆணைக்குழுவை ஈடுபடுத்தாமலேயே பாதிக்கப்பட்ட வாசகர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் முறைப்பாடுகளுக்கு நேரடியாக தீர்வு காண்பது குறித்தும் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் 2014 வருடாந்த ஆய்வில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, "பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை ஈடுபடுத்தாமலேயே இலங்கை பத்திரிகைகள் அதிகளவிலான பிழை திருத்தங்கள், தெளிவுபடுத்தல்கள், மன்னிப்புகள், பதிலளிப்பதற்கான உரிமைகள் ஆகியவற்றை வெளியிடுவது, ஆணைக்குழு மேற்கொண்ட பிரசாரங்கள் காரணமாக அதிகளவு வாசகர்கள், ஆசிரியர்களுக்கு நேரடியாக எழுதுவதையும் ஆணைக்குழுவின் நடைமுறைக்கு அப்பால் வாசகர்கள் உரிமை அதிகம் வெளியிடப்படுவதையும் சுட்டிக்காட்டுகிறது. இவை மிகவும் சாதகமான விடயங்கள். தொழில்சார் ஊடகங்கள் என்ற இலக்கை எட்டுவதற்கு இவை உதவும்.[117]

இலங்கையின் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி-ஒளிபரப்பாளர்கள்

117 PCCSL 2014 Annual Report. http://www.pccsl.lk/sites/default/files/AnualReport-2014-Englis%28Updated%29.pdf

*இலங்கையின் சுய ஒழுங்குபடுத்தல் வரலாறு என்பது அளவுக்கு அதிகமான அரச கட்டுப்பாடு மற்றும் தாக்குதல்களுக்கான பதிலாகவே காணப்பட்டது. அச்சு ஊடகங்களின் அதிகாரங்கள், ஜனநாயகத்தைப் பாதிப்பதை நாங்கள் விரும்பவில்லை. சுய ஒழுங்குபடுத்தல் என்பது இதற்கான ஒரு பதிலே. இன்னொரு முக்கியமான விடயம் ஊடக சுதந்திரம். இது, சுய தணிக்கையைத் தடுக்கும். அச்சு ஊடகங்கள் சுதந்திரமாக செயற்படுதலை அரசாங்கம் தனக்கான அச்சுறுத்தலாக கருதக்கூடாது. ஏனெனில், இது மக்களுக்கு தகவல்கள் உரிய விதத்தில் சென்றடைவதை உறுதிப்படுத்துகிறது.*

*"கருத்து என்பது சுதந்திரமானது" என்ற எண்ணம் மனித உரிமை விழுமியங்களை மதிக்க வேண்டிய தேவையினால் இன்னமும் அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்களில் பக்கச் சார்பு என்பது ஏற்றுகொள்ள முடியாததொன்று. அது பெண்களுக்கு எதிரானவையாக அல்லது வேறு குழுக்கள், கருத்துக்களுக்கு எதிரானவையாக இருந்தாலும் சரி. இதேவேளை ஊடகவியலாளர்களுக்கு சில வகையான கட்டமைப்பு ஆதரவுகள் தேவை. சட்டத்தரணிகள் சங்கம் போன்று இலங்கையின் சுய ஒழுங்குபடுத்தல் என்பது இந்த பணியாற்றுவதுடன் கருத்துச் சுதந்திரத்திற்கான ஆதரவையும் வழங்குகிறது".*

*பேராசிரியர் சாவித்திரி குணசேகர கொழும்பு பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் சட்டப் பேராசிரியர்.*
*(இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்தாவது ஆண்டு பூர்த்தி விழாவில் தெரிவித்த கருத்து)*

இதுவரை தங்கள் தொழிற்துறை சார்ந்த கூட்டமைப்பை ஏற்படுத்தவில்லை, சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறையையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்து வருட பூர்த்தி நிகழும்போது விளம்பரத் தொழிற்துறை, ஒலி-ஒளிபரப்புத் தொழிற்துறை மற்றும் இணையப் பயனாளிகளுடன் பரந்துபட்ட கோவையை உருவாக்குவதற்காக இணக்கப்பாட்டை பேணுவதற்கான தொடர்புகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.[118] எனினும், இது இன்னமும் சாத்தியமாகவில்லை.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்தாவது ஆண்டு பூர்த்தியைக் குறிக்குமுகமான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டனின் பத்திரிகை ஆசிரியர் கோவைக் குழுவின் செயலாளர் இயன் பீல்ஸ் இவ்வாறு தெரிவித்தார், “பத்திரிகையாளர்களுக்கான சுய ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒழுக்க விதிகள் அர்த்தபூர்வமானவையாகவும் இலகுவானவையாகவும், இலகுவில் அமுல்படுத்தக் கூடியவையாகவும் காணப்பட வேண்டும். தனிப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களும், வெளியீட்டாளர்களும் தாங்கள் விரும்பினால் உயர்ந்த ஒழுக்கத் தராதரங்களை தாமாகவும் நிர்ணயிக்கலாம்.

அவர் மேலும் இவ்வாறு தெரிவித்தார்,

“இந்த அமைப்பு முறை நேர்மையான சுய ஒழுங்குபடுத்தலாக காணப்பட வேண்டும். இதில் அரசாங்கம் மற்றும் ஏனைய நலன்கள் கொண்டவர்களிடம் இருந்து இதன் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வலுவான அங்கத்துவம் என்பது நேர்மையைப் பாதுகாப்பதற்கு அவசியம். வர்த்தகப் போட்டியாளர்களிடம் இருந்து தனிப்பட்ட ஆசிரியர்கள் கடுமையான தீர்ப்புகளை எதிர்கொள்வதைப் பாதுகாப்பதற்கும் இது அவசியம். தண்டனைகள் சமாந்தரமானவையாக காணப்பட வேண்டும் அளவுக்கு அதிகமானவையாக அல்ல. இது பண்பாட்டுப் பல்வகைமையின் சுதந்திரத்திற்கு உதவும்.[119]

இலங்கை பத்திரிகை பேரவை: ஆரம்பம் முதல்..

1973 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம், இலங்கை பத்திரிகை பேரவை என்ற சட்டபூர்வமான அமைப்பை ஏற்படுத்தியது (SLPC, http://slpc.lk/). ஊடகங்களிற்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு அபராதங்களை விதிப்பதற்கான அதிகாரங்களுடன் அது காணப்பட்டது. கடந்த 40 வருடங்களாக அநேகமான ஊடகவியலாளர்கள் அதனை நிராகரித்து வந்துள்ளனர்.

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பத்திரிகைப் பேரவை சட்டத்தின் கீழ் அரசாங்கம் ஏழு பேரவை உறுப்பினர்களையும் தானே நியமிக்கும். எனினும்,

118 http://www.pccsl.lk/sites/default/files/PCCSL%2010%20th%20Anniversary%20Souvenir.pdf

119 Self Regulation and Ethical Reporting: Report on the Conference Celebrating 10th Anniversary of PCCSL. January 2014. http://www.pccsl.lk/sites/default/files/IC%20Final%20Report.pdf

*“இலங்கையின் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களின் ஏற்றுக்கொள்ளமுடியாத சில நடவடிக்கைகள் தொடர்பில் ஊடக அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் வருகின்றபோதிலும், இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்க எம்மிடம் சட்ட அதிகாரமில்லை. நாம் அரச ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கலாம் எனினும் தனியார் ஒலி-ஒளிபரப்பாளர்கள் தொடர்பில் எம்மிடம் எதுவித சட்ட அதிகாரமுமில்லை.*

*இது, இலங்கையின் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் முறைப்பாடுகள் மேற்கொள்ள ஒரு பொறிமுறை அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. நாம் தற்போது ஒலி-ஒளிபரப்பு அதிகாரம் தொடர்பில் ஒரு மசோதா உருவாக்கி வருகிறோம், அதில் இவ்வாறான முறைப்பாடுகள் மேற்கொள்வதற்கான வசதியுள்ளது. இதன் உருவாக்கத்தின்போது நாம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் (1966) மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1982) என்பவற்றால் சில சிக்கல்களை எதிர்நோக்கினோம். காரணம், பல தசாப்தங்களாக அவை தரமுயர்த்தப்படவில்லை. அவற்றில் காணப்படும் சில கொள்கைகள் நீக்கப்படவேண்டும்.*

*வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும்போது ஊடக அமைச்சு இரண்டு விடயங்களைக் கருத்திற்கொள்கிறது. அவை, விண்ணப்பதாரியிடம் அலைவரிசை ஒன்றை நிர்வகிப்பதற்குப் போதுமான நிதி மற்றும் தொழினுட்ப வசதிகள் உள்ளனவா? என்பன. நாம் இவ்வாறு செய்வதற்கான காரணம், சிலர் அனுமதிப்பத்திரம் பெற்று பின்னர் அதனைப் பிறருக்கு விற்கின்றனர். முற்காலங்களில் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கான அனுமதிப்பத்திரம் காலவரையறையின்றி வழங்கப்பட்டது. நான் நினைக்கிறேன், ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் உரிமையானது அரசியல் ஆட்சி அமைப்புக்களிடமிருந்து மீளப் பெறப்பட வேண்டும். அவை சட்டரீதியான ஓர் ஒழுங்குபடுத்தல் பொறிமுறையிடம் வழங்கப்படவேண்டும்.*

*பி.கெ.எஸ். ரவீந்திர,*
*மேலதிகச் செயலாளர், ஊடக அமைச்சு.*
*(நேர்காணல் இடம்பெற்றது - மே 2015 இல்)*

அப் பேரவையில் இலங்கையின் ஊடகவியலாளர் சங்கங்களின் பிரதிநிதியொருவரும், பத்திரிகை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நலனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரும் இடம்பெற்றிருக்க வேண்டும். பத்திரிகைப் பேரவையால் குற்றவாளிகள் என உறுதிசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களிற்கு எதிராக சிறைத்தண்டனையை விதிப்பதற்கும், ஏனைய தண்டனைகளை வழங்குவதற்குமான குறித்தொதுக்கப்பட்ட நீதித்துறை அதிகாரங்கள் (மாவட்ட நீதிமன்றங்களுடன் ஒப்பிடும்போது) இப் பேரவைக்கு உள்ளன. மேலும் இந்த சட்டம் ஊடகங்கள் சில நிதி, மற்றும் பாதுகாப்பு தகவல்களை வழங்குவதைத் தடைசெய்கின்றது.

2002 வரை பல அரசாங்கங்களின் கீழ் பத்திரிகைப் பேரவை ஊடகங்களை அச்சுறுத்துவதற்கான ஒரு பொறிமுறையாக செயற்பட்டு வந்தது, 2002 இல், அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருதரப்பு ஆதரவுடனான சட்டத்தின் மூலம் அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. எனினும், குறிப்பிட்ட சட்டம் தொடர்ந்தும் காணப்பட்டதுடன், இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், 2009 யூன் மாதம் ராஜபக்ச அரசாங்கத்தினால் பத்திரிகை பேரவைக்கு மீண்டும் உயிரளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனை ஊடக அமைப்புகளும் ஏனைய சிவில் சமூக அமைப்புகளும் பரவலாக

கண்டித்தன.[120] மெதுவான ஆரம்பத்தின் பின்னர் பேரவை 2012 இல் அனைத்து வகை ஊடகங்களையும் கையாள்வதற்கான ஆணையை பெற்றுக்கொண்டதுடன் தீர்ப்புகளையும் வழங்கத் தொடங்கியது.[121]

2015 இல் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்கம், பல மாதங்களாகப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிக்கவில்லை. 2015 யூலை மாதம் ஜனாதிபதி சிறிசேன திடீரெனப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமித்தவேளை ஊடகத் துறையினர் அதிர்ச்சியடைந்தனர்,

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை பத்திரிகை சமூகம், இலங்கை பத்திரிகையாசிரியர்கள் சங்கம், உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் என்பன அறிக்கையொன்றை வெளியிட்டன. அவை அந்த அறிக்கையில் "ஜனாதிபதியின் செயற்பாடு சட்டவிரோதமானது. அதனுடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படை பண்பு கூட பின்பற்றப்படவில்லை" எனத் தெரிவித்திருந்தன.

அது மேலும் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது, "அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் பத்திரிகை பேரவையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளமை, செயலற்று இருந்த சட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவது, ஊடகவியலாளர்களைக் கைதுசெய்வது உட்பட பல தண்டனைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை வழங்குகின்றது. அச்சு ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் அதன் உரிமையாளர்களுக்கு எதிரான மறைமுக மற்றும் நேரடி அச்சுறுத்தல்களைத் தடுத்து நிறுத்துவதாக அளிக்கப்பட்ட அவரது தேர்தல் வாக்குறுதியை முற்றாக மாற்றும் செயலாகும். தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைத்து ஊடகப் பணியாளர்களினதும் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் என அவர் உறுதியளித்தது குறுகிய காலத்திட்டமா அல்லது நீண்ட காலதிட்டமா என்ற கேள்வி எழுந்துள்ளது".[122]

பத்திரிகை பேரவையை முற்றாகச் செயலிழக்கச்செய்து, அது தொடர்பான சட்டத்தை நீக்குவது ஊடக சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் காணப்படவேண்டும். எவ்வாறாயினும், சுய ஒழுங்குபடுத்தலுக்கான மாற்றுப் பொறிமுறையொன்று உருவாகினால் மாத்திரமே மக்களும், அரசியல்வாதிகளும் பத்திரிகை பேரவையின் செயலிழக்கம் தொடர்பில் திருப்தி அடைவர். இது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் வலுவை சுட்டிக்காட்டுவதோடு, இவ் ஆணைக் குழு ஏனைய ஊடகங்களையும் உள்வாங்க வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

அனுபவ ஆய்வு கூறுவது யாதெனில், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தனியாக இயங்க முடியாது. அதன் விதிகள் மக்களாலும்

120 http://www.wsws.org/en/articles/2009/07/sril-j01.html and http://www.bbc.co.uk/sinhala/news/story/2009/06/090627_press.shtml

121 https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka#.VUL0uvDkqSo

122 Media groups slam Sirisena for bringing back Press Council. The Sunday Times, 5 July 2015. http://www.sundaytimes.lk/150705/news/media-groups-slam-sirisena-for-bringing-back-press-council-155671.html

ஊடகங்களாலும் பின்பற்றப்பட வேண்டும். எனவே, பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வரையறைகள் மறுசீரமைக்கப்படவேண்டும்.

## பரிந்துரைகள்

- 1973 ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டம் நீக்கப்பட வேண்டும், மற்றும் அரசாங்கத்தின் கருவியான இலங்கை பத்திரிகைப் பேரவை கைவிடப்பட வேண்டும்.


- 2003 ஆம் ஆண்டு முதல் ஊடக முறைப்பாட்டு பொறிமுறையாக விளங்கும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சுதந்திரத்தை ஊடகத் தொழில்துறை வலுப்படுத்த வேண்டும். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாட்டு நடைமுறைகளில் அச்சு ஊடகத்தின் அதிகரித்த பங்களிப்பை எவ்வாறு ஊக்குவிப்பது மற்றும் ஒலி-ஒளிபரப்பு, இணைய (புதிய) ஊடகங்களை எவ்வாறு உள்வாங்கலாம் என்பது குறித்து இதனுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் தேசிய கலந்தாய்வு ஒன்று இடம்பெற வேண்டும். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்ப்புகள் அமுல்படுத்தப்படுவதை வலுப்படுத்துவதற்கான வழிவகைள் குறித்து ஆராய்வதற்காக தொழிற்துறையினர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் (தற்போது அவை சுயவிருப்பின் அடிப்படையிலானவையாகவும், சில ஊடகங்களால் அலட்சியப்படுத்தப்படுபவையாகவும் காணப்படுகின்றன). அரசாங்கமும் ஊடகங்களும் இணைந்த ஒரு ஒழுங்குபடுத்தல் முறையை எவ்வாறு முன்னெடுப்பது, அது சாத்தியமா என்பது குறித்து ஆராய வேண்டும், இது, இந்தோனேசியாவில் சாத்தியமாகியுள்ளது.

- ஒலி- ஒளிபரப்பாளர்கள் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு தொடர்பில் திருப்தியடையவில்லை எனில்இ பொதுமக்கள் முறைப்பாடுகள் செய்வதற்கான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். மீளப் புனரமைக்கப்படும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தனது விதிகளைச் செயற்படுத்துவதற்கு, சட்ட வலுவைக் கொண்டிருக்க வேண்டும்.

අවந்த
ஆட்டிகலவின்
கேலிச்சித்திரம் -
விஜய பத்திரிகை




தமது நேயர்கள் என்ன செய்ய வேண்டும் என பண்பலை வானொலிகள் நினைப்பது - தர்ஷன கருணாதிலகவின் கேலிச்சித்திரம



இலங்கையின் ஊடக சுய ஒழுங்குபடுத்தலுடன் தொடர்புபட்டுள்ளவர்களின் கருத்துக்கள் (இந்த ஆய்விற்காக மேற்கொள்ளப்பட்ட பேட்டிகளில் இருந்து)

"கடந்த காலங்களில் பத்திரிகையாளர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் கருத்துச் சுதந்திரத்தைக் கோரினால் அதற்கு மறுநாள் அவர்கள் காணாமல்போகும் உண்மையான ஆபத்தை எதிர்கொண்டனர். மக்கள் அச்சுறுத்தப்பட்டனர், உடல் ரீதியான தாக்குதல்கள், வார்த்தைகளால் நிந்திக்கப்படுதல் மற்றும் குரல் எழுப்புவதற்காக கொலையும் செய்யப்பட்டனர். இலங்கையில் தற்போது இந்த நிலை இல்லை. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு என்பது இலங்கை பத்திரிகைகளுக்கான சிறந்த ஒழுங்குபடுத்தல் பொறிமுறை. ஆனால், முறைப்பாடு கிடைத்தால் மாத்திரமே அது செயற்பட முடியும். அதன் தீர்ப்புகள் எவரையும் கட்டுப்படுத்தாது. இந்த ஆணைக்குழு இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். மேலும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களையும் இதன் கீழ் கொண்டு வரவேண்டும். (அல்லது அந்த தொழிற்துறை தனது சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்)."

- கே. குணராசா, தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் (லேக்ஹவுஸ், ANCL)

"எங்கள் ஊடகங்களின் சில பிரிவினர் பாலியல் குற்றங்கள் மற்றும் பாலியல் வன்முறை போன்றவற்றைப்பற்றி செய்தி வெளியிடுகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள், அவர்கள் குடும்பத்தினர் குறித்துச் சிந்திக்காமல் இவ்வாறான செய்திகளை பரபரப்பாக்குகின்றனர். இது டிசம்பர் 2012, புதுடில்லியில் இளம்பெண் ஒருவர் சந்தித்த அனுபவத்தை ஊடகங்கள் கையாண்ட விதத்திற்கு முரணானது. இந்தியாவின் நூற்றுக்கணக்கான ஊடகங்கள் பாதிக்கப்பட்டவரின் பெயர் மற்றும் குடும்பத்தினரின் பெயர் போன்ற தகவல்களை வெளியிடுவதில்லை என்ற ஒழுக்கத்தை பின்பற்றினர். ஊடகங்கள் அவருக்கு சூட்டிய நிர்பயா என்ற பெயர் மாத்திரமே எங்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால், இலங்கையில் சில செய்தித்தாள்கள் அனைத்தையும் வெளியிடும். முன்பக்கத்தில் படங்களைக் கூட வெளியிடுவார்கள். உணர்வுபூர்வமான புலனாய்வு செய்தி வெளியிடலுக்குப் பதிலாக சிங்களமொழி செய்தித்தாள்கள் ஈவிரக்கமற்ற, உணர்வை தூண்டக் கூடிய விதத்தில் வன்முறைகளை வெளியிடுகின்றன. ஆனால், ஆங்கில செய்தித்தாள்கள் இதற்கு மாறாக செயற்படுகின்றன."

- சுமித்திரா ரகுபத்தா - முன்னர் இலங்கை நிர்வாக சேவையாளர், தற்போது எழுத்தாளர், வெளியீட்டாளர்.

“அரசு, ஊடகங்களின் மீது சட்டங்களையும் விதிமுறைகளையும் திணிப்பதற்குப் பதில் ஊடக சுய ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் முன்வைக்கின்றேன். ஒரு தருணத்தில் (2003) நாங்கள் அரசாங்கத்தின் பத்திரிகைப் பேரவையைச் செயழலிக்கச் செய்துவிட்டு, செய்திப்பத்திரிகை தொழிற்துறையினர் தங்களுடைய சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பை உருவாக்குவதற்கு அனுமதித்தோம். பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இதன் பின்னரே உருவானது, ஆனால், அது முற்றிலும் சிறப்பானதோர் ஏற்பாடு அல்ல, சில பத்திரிகைகளும், ஊடக நிறுவனங்களும் அதன் ஒரு பகுதியாக மாறவில்லை.”

- சமன் அத்தாவுதஹெட்டி- பிரதமரின் மேலதிகச்செயலாளர் - ஊடகம்

“இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு அதிகளவு அதிகாரங்களும் அதிகளவு செயல் எல்லையும் அவசியம் (அனைத்து பத்திரிகைகளினதும்). குறிப்பிட்ட ஒரு பத்திரிகை, தொழில்சார் நடைமுறைக் கோவையை மீறிவிட்டதாக நிரூபிக்கப்பட்டால், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அபராதத்தை விதிக்க வேண்டும். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும், பத்திரிகைக்கும் இடையில் மத்தியஸ்தத்தில் ஈடுபடவேண்டும். இதன் மூலம் பில்லியன் ரூபாய் மானநஷ்ட வழக்குகள் தாக்கல் செய்யப்படும் நிலையைத் தவிர்க்கலாம்,

- விஜித யாபா- த ஐலண்ட், சண்டே ஐலண்ட். த சண்டே ரைம்ஸ் ஆகியவற்றின் ஸ்தாபக ஆசிரியர்

“இலங்கை ஊடகங்களுக்கு ஒழுங்குபடுத்தல் முறை அவசியம். முதலில் ஊடக உரிமையாளர்களுக்கு பத்திரிகைத் துறையில் கல்வியும் பயிற்சியும் அவசியம். தற்போது அனைத்து ஊடக அமைப்புகளும், நிறுவனங்களும் தங்கள் தொழிற்துறையில் அரசியல் தலையீடு இடம்பெற அனுமதிக்கின்றன. இது மாற்றமடையவேண்டும், நாங்கள் பத்திரிகைத் துறையின் தராதரத்தை அதிகரிக்கவேண்டிய தேவையுள்ளது, இதன் மூலம் மேலும் அதிக பொறுப்புள்ள தகவலும் சமநிலையான கருத்துக்களும் ஊடகங்கள் மூலம் வெளியாகமுடியும்.

அதேபோன்று ஊடக உரிமையாளர்கள் ஆசிரியபீட உள்ளடக்கங்களில் தலையிடுவதற்கான சந்தர்ப்பங்களைத் தடுப்பதன் மூலம், நாங்கள் ஆசிரியபீட சுதந்திரத்தை உறுதிசெய்யவேண்டும். ஊடகங்களைச் சுயாதீனமாக கண்காணிக்கவேண்டும்.

சிங்கள மற்றும் தமிழ்மொழிப் பத்திரிகைகள் எங்கள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகத் தங்களுடைய மத வேறுபாடுகளின் அடிப்படையிலேயே செய்திகளை வெளியிடுகின்றன. இவ்வாறான பக்கச்சார்பான செய்தி அறிக்கையிடலே யுத்தத்தை நீடிக்கச்செய்தது, மோசமானதாக்கியது. சிங்கப்பூரில் நான்கு இனக்குழுக்கள் எந்தவித மோதலும் இன்றி சகவாழ்வு வாழ்கின்றனர். ஆனால், எங்களால் அந்த ஐக்கியத்தை ஏற்படுத்தமுடியவில்லை. மொழிரீதியிலான தடைகள் இதற்கு ஒரு காரணம். தமிழ், சிங்கள சமூகத்தினர் மத்தியிலான பண்பாடு மற்றும் மொழிப் பாலங்களை ஏற்படுத்துவதற்கு எங்கள் மத்தியில் போதியளவு மொழிபெயர்ப்புகள் இன்னமும் இல்லை.

- நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாணசபை முதலமைச்சர்

“ எங்கள் ஊடகங்களில் வலுவான ஒழுங்குபடுத்தல் முறையை நாங்கள் கொண்டிருக்கவேண்டும். இதன்மூலம் அரசாங்கம் தலையிடத் தேவையில்லாத நிலையை உருவாக்கலாம். எங்களிடம் 2003 முதல், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உள்ளது, ஆனால், அது இன்னும் வலுவான அமைப்பாக மாறவில்லை. அது தன்னிச்சையானதாகக் காணப்படுகின்றமையே அதற்குக் காரணம். அதன் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கடப்பாடும் இல்லை. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்கு தனது தவறுகளை திருத்திக்கொள்ளாத ஊடகங்களுக்கு எதிராக அபராதங்களை விதிக்கும் அதிகாரங்கள் கொண்டதாக அல்லது தண்டிக்கும் அதிகாரங்களைக் கொண்டதாக வலுப்படுத்தப்படவேண்டும். மேலும், இலங்கையில் உள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கு என முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் பொறிமுறையும், சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பும் அவசியம். 2009 முதல் 2011 வரை அவ்வாறான அமைப்பை ஏற்படுத்துவது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றன, ஆனால், அது நிறைவேறவில்லை.”

- இலங்கை முஸ்லீம் மீடியா ஃபோரத்துடனான குவிமையக் கலந்துரையாடலின்போது (யூன் 8, 2015) எம். எஸ். அமீன் ஹுசைன் - ஊடக பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆலோசகர், ஜாவீட் முனாவர் – உதவிப் பொருளாளர், மற்றும் தாஹா முசாமில்- துணைத்தலைவர் ஆகியோர்.

“ ஊடக நிறுவனமொன்று ஒழுக்கக்கோவைகளை மீறி தனிநபர்களையோ அல்லது நிறுவனங்களையோ அவதூறு செய்யும்போது, நடவடிக்கை எடுப்பதற்கான போதிய அதிகாரம் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு உள்ளதா? என்ற சந்தேகம் எங்களுக்கு உள்ளது. பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை தொடர்ந்தும் கண்காணிக்கவேண்டும், மேலும் ஒழுங்குபடுத்தவேண்டும் என்பது எங்கள் கருத்து. ஒவ்வோர் ஊடக நிறுவனமும் தனது ஒழுக்கக்கோவையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். அதனைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஊடக நுகர்வோர் அதனைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து மதிப்பிடலாம். மேலும், ஊடக நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களின் துயரங்கள் குறித்தும், வாசகர்களின் கடிதங்கள் குறித்தும் ஆராய்வதற்கான ஆளாட்சி அதிகாரிகளையும் (ஒம்புட்ஸ்மன்) கொண்டிருக்க வேண்டும். அந்த மட்டத்திலேயே இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும்.”

- இலங்கை பத்திரிகை சங்கத்தில் இடம்பெற்ற குவிமையக் கலந்துரையாடலின்போது (யூன் 8, 2015) உபுல் ஜானக ஜயசிங்க - தேசிய ஏற்பாட்டாளர், நரேந்திர ராஜபக்ச - உதவித் தலைவர், மற்றும் புஷ்பா இலங்கதிலக- நிறைவேற்றுச்சபை உறுப்பினர் ஆகியோர்.

## 308 ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தல் பண்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்

இலங்கையில் வெளியாகும் பல செய்திப்பத்திரிகைள் தற்போது பதிலளிக்க வேண்டிய உரிமையை அங்கீகரிக்கின்றன, ஆனால், இதனைப் பிரசுரிப்பது ஆசிரியரின் முடிவை பொறுத்தவிடயம், நடைமுறையில் பதிலளிப்பதற்கான உரிமை 70 வீதம் மதிக்கப்படுவதாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனிநபர் நடவடிக்கைகள் மற்றும் ஆசிரியபீட உள்ளடக்கம் ஆகியவற்றிற்கான தெளிவான ஒழுக்க வழிகாட்டுதல் குறித்த அங்கீகாரமும் ஊடக அமைப்புகள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. சில ஊடக நிறுவனங்கள் தாங்களாக முன்வந்து தங்களிற்கான வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளன.

உதாரணத்திற்கு, ராவய செய்தித்தாள் தனக்கான சொந்த ஒழுக்க வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது, இது இலங்கை ஆசிரியபீடத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தொழில்சார் நடைமுறைகள் தொடர்பான ஒழுக்கக்கோவையுடன் ஒப்பிடக்கூடியது. ஆளாட்சி அதிகாரியை (ஒம்புட்ஸ்மன்) அறிமுகப்படுத்திய முதலாவது ஊடக நிறுவனம் ராவயவே. நிதி நெருக்கடிகள் காரணமாக அதனை அது நிறுத்தியபோதிலும் மீள ஏற்படுத்துவது குறித்து சிந்தித்து வருகின்றது,

### பரிந்துரைகள்

- ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக்கோவை, ஆசிரியர் பீட சுதந்திரம், மற்றும் ஆசிரியர் பீட விதிமுறைகள் என்பன தனியார், பொது, மற்றும் சமூக ஊடகங்களால் பின்பற்றப்படவேண்டும். வாசகர்களுக்கான ஆசிரியர் (ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களில் அதற்குச் சமனான ஒருவர்) ஒருவரை நியமித்து மக்கள் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் ஒரு வழிமுறை. அவர் மக்கள் முறைப்பாடுகள் குறித்தும் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், தண்டனைகள் குறித்தும் கருத்து தெரிவிப்பார்.
- பிரஜைகள் பங்குபற்றலை தனியார், பொது, மற்றும் சமூக ஊடகங்கள் உறுதிசெய்யவேண்டும். அதன் மூலம் பிரஜைகள் நிகழ்ச்சித் தயாரிப்பிலும் கல்வியறிவூட்டும் செயற்பாட்டிலும் பங்குபற்றுவதை உறுதிசெய்யவேண்டும்.
- ஊடகவியலாளர் சங்கங்கள், ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக் கோவையை ஊக்குவிக்க வேண்டும். செய்திகளின் உண்மைத்தன்மை, மக்கள் தகவல் அறியும் உரிமை, விமர்சிக்கும் உரிமை, நடுநிலையான தகவல் அறிக்கையிடல், நியாயமான முறையில் தகவல் பெற்றுக்கொள்தல் முதலானவற்றை ஊக்குவிக்க வேண்டும். இந்த ஒழுக்கக்கோவை, ஊடகங்கள் தம் தவறுகளை சரிசெய்யும் மற்றும் தகவல் மூலத்தின் இரகசியத்தைப் பேணும் ஊடகப் பண்பாட்டை உருவாக்க வேண்டும்.
- ஊடகவியலாளர் சங்கங்கள் மற்றும் ஊடக உரிமையாளர்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பத்திரிகை ஆசிரியர்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கவேண்டும். இது ஊடக நிறுவனங்களுக்குள் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை உறுதிசெய்யும் ஓர் வினைத்திறன்மிக்க பொறிமுறையாக இருக்கவேண்டும்.
- ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக்கோவை மற்றும் ஆசிரியர் பீட விதிமுறைகள் என்பன தங்களிடம் உள்ளன என்பதை ஊடகங்கள் உறுதிசெய்யவேண்டும். அதனை வெளிப்படுத்துவதன் ஊடாக தாம் அவற்றைப் பின்பற்றுவதையும், வெளிப்படையான தன்மையையும் ஊடகங்கள் உறுதிசெய்யலாம். ஊடகவியலாளர்களிடம் இதன் பிரதி ஒன்று காணப்படவேண்டும், அல்லது அவற்றை எங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பதையாவது அறிந்திருக்க வேண்டும். ஊடகவியலாளர் சங்கங்கள் இவற்றை அதிகம் ஊக்குவிக்கவேண்டும்.

# நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மைக்கான தேவைகள்

**309** நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகளை முன்வைக்கும் வலுவான ஒலி-ஒளிபரப்புக் கோவை.

இலங்கையில் அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி-ஒளிபரப்பாளர்களாலும் பின்பற்றப்படும் ஒழுக்கக் கோவை எதுவும் கிடையாது, 2013 இல் ஊடக அமைச்சு ஒலி-ஒளிபரப்பு உரிமங்களிற்கான தராதரங்களை உயர்த்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை சிலர் எதிர்த்தனர்.

தனியார் ஒலி-ஒளிபரப்பாளர்கள் செய்திகளை வெளியிடக் கூடாது என்ற ஆரம்பகாலக் கட்டுப்பாடுகள் 1994 இல் நீக்கப்பட்டன. அனுமதிப்பத்திரம் வழங்கும்போது ஆசிரியபீட உள்ளடக்க சமநிலைக்கான வேண்டுகோள் எதுவும் இடம்பெறுவதில்லை. தேர்தல் காலங்களில், தேர்தல் ஆணையாளர் அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கு நேர்மை, சமநிலை மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதிசெய்யுமாறு வழிகாட்டுதல்களை வழங்குவார். இந்த வழிகாட்டுதல்கள் செய்திகள், நடப்பு விவகாரங்கள், கருத்து பரிமாற்ற நிகழ்ச்சிகள், மற்றும் அரசியல்வாதிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களை ஆதரிப்பவர்கள் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு பொருந்தும்.

தேர்தல் காலங்களில் பின்பற்றப்படும் இந்த வழிகாட்டுதல்கள் எப்போதும் பின்பற்றப்படுவதில்லை. உதாரணத்திற்கு 2015 ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட்ட பின்னர், தேர்தல் ஆணையாளர் தெளிவான வழிகாட்டுதல்களை

வழங்கியபோதிலும், அரச ஒலி-ஒளிபரப்பாளர்களால் இவை மீறப்பட்டன, புறக்கணிக்கப்பட்டன.[123] அவர்கள் அப்போதைய ஜனாதிபதியை வெளிப்படையாக ஆதரித்தனர். மேலும், ஆளும்கட்சியானது மற்றைய வேட்பாளர்களை அவதூறு செய்வதற்கும் அனுமதித்தனர். தேர்தல் தினத்தன்று தேர்தல் ஆணையாளர் அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் தவறான செய்திகளை வெளியிடுவதைத் தடுப்பதற்காகத் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டியிருந்தது.[124] சில தனியார் ஒலி-ஒளிபரப்பாளர்கள் அரசியல் கூட்டணிகளைக்கூட வைத்திருந்தனர். எனினும், அவர்கள் ஆகக்குறைந்த அளவில் சமநிலையைப் பேண முயற்சித்தனர். எந்த வேட்பாளரையும் கடுமையாகத் தாக்குவதை அவர்கள் தவிர்த்தனர் (அரச ஊடகங்கள் செயற்பட்டது போல இல்லாமல்).

ஆட்சி முறை தொடர்பில் அரச ஊடகங்கள் செயற்படும் விதத்தை கண்காணிக்கும் ‘ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்’ சமீபத்தில் இவ்வாறு பரிந்துரைகளை முன்வைத்திருந்து, “தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அனைத்து அரச ஊடக நிறுவனங்களும் தேர்தல் ஆணையாளர் அல்லது தேர்தல் ஆணையகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வரவேண்டும். அரச ஊடக நிறுவனங்களைக் கண்காணிப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்கும் வகையில் சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். தேர்தல் முறைகேடுகளைத் தடுப்பதற்காக அவற்றை கண்காணித்து வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையாளரிற்கு வழங்கப்பட வேண்டும்.[125]

நடைமுறையில் இது அமுல்படுத்துவதற்கு கடினமான விடயமாக காணப்படும். இது, ஒலி-ஒளிபரப்பாளர்களின் ஆசிரியபீட சுதந்திரத்தில் தலையிடும் விடயமாகவும் காணப்படலாம். எனினும், தேர்தல் காலங்களில் தேர்தல் முறைகேடுகளைத் தடுப்பதற்காக இவ்வாறான அதிகாரம் தேர்தல் ஆணையகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

தேர்தல் சட்டங்களில் ஊடகங்கள் தொடர்பான கருத்துகள் இடம்பெற்றுள்ளன. உதாரணத்திற்கு 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் 117 ஆவது பிரிவில் வேட்பாளர்களின் ஒலி-ஒளிபரப்பு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய ஒலி-ஒளிபரப்பாளர்களிற்கான கடப்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன (உதாரணத்திற்கு அனைத்து வேட்பாளர்களிற்கும் சமமான வானலை நேரங்களை வழங்குதல்). எனினும் இவை இணையத்தின் வருகைக்கு முற்பட்ட காலங்களில் உருவாக்கம் பெற்றதால் அவை தரமுயர்த்தப்படவேண்டும்.[126]

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சியினதோ அல்லது வேட்பாளர்களினதோ கட்டணம்

123 http://documents.gov.lk/Extgzt/2014/PDF/Nov/1890_02/1890_02%20E.pdf

124 http://www.ft.lk/2015/01/09/polls-chief-reads-riot-act-to-rupavahini-over-sajith-crossover-story-on-polling-day/

125 http://www.tisrilanka.org/?p=12828

126 http://www.commonlii.org/lk/legis/num_act/pea15o1981280/s117.html

BOX 15

## 2015 தேர்தலின்போது அரச ஊடகங்கள் செயற்பட்டவிதம்

ஆளும்கட்சியின் கொள்கை பரப்பும் செயலில் ஈடுபடும் அரச ஊடகங்கள் (இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை) தேர்தல் காலங்களின்போது இச் செயலில் அதிகம் ஈடுபடுகின்றன. கடந்த தேர்தல் (20 நவம்பர் 2014) அறிவிக்கப்பட்டபோது, ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் ஸ்ரீலங்கா மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பன இணைந்து அரச ஊடகங்களைக் கண்காணிக்கும் செயலில் ஈடுபட்டன.

ஊழலைத் தவிர்ப்பதற்கும் பொது வளங்களைப் பாதுகாப்பதற்குமான (PPPR) ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் ஸ்ரீலங்காவின் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவே இக்கண்காணிப்பு இடம்பெற்றது. தேர்தல் பிரச்சாரங்களுக்காக பொது வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்பதை உறுதிசெய்வதே இதன் நோக்கமாகும். அதேவேளை, தேவைப்படும் பட்சத்தில் உரிய அதிகாரிகளுடன் இணைந்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்வர்.

"அனைத்து அரச ஊடகங்களும் மக்களுக்கு உண்மையான, பக்கச்சார்பற்ற, சமனிலையான தகவல்களை வழங்கவேண்டும். மக்கள், அரசியற் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஊடகங்களின் நியாயமான செயற்பாட்டை வலியுறுத்தவேண்டும். வாக்காளர்கள் என்ற வகையில் தகவல் அறிவதற்கு மக்களுக்குள்ள உரிமையைக் காக்கும் வகையில் ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரச அதிகாரிகளை ஊக்குவிக்கவேண்டும்." என ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் ஸ்ரீலங்கா குறிப்பிட்டது.

ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் ஸ்ரீலங்காவின் பொது வளங்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் (PPPR) அனைத்து அரச ஊடகங்களையும் (தமிழ் சிங்களம் ஆங்கிலம்) 21 நவம்பர் 2014 முதல் 10 ஜனவரி 2015 வரை (தேர்தல் தினம் உட்பட) கண்காணித்தது. முதனிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம், குறித்த செய்தி வேட்பாளரது புகழை உயர்த்தியதா இல்லை தாழ்த்தியதா, குறித்த செய்தி வேட்பாளரது கொள்கைகள் தொடர்பானதா இல்லை தனிப்பட்ட விடயங்கள் தொடர்பானதா மற்றும் வாக்காளர் விபரம் என்பன இதன்போது சேகரிக்கப்பட்டன.

அரச ஊடகங்கள் பக்கச்சார்பாக செயற்பட்டதை உறுதிசெய்யும் ஆய்வு முடிவுகள் வருமாறு:

- தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்குப் புறம்பாக அரச ஊடகங்கள் ஜனாதிபதி வேட்பாளரை புகழும்/இகழும் செயல்களுக்கான தெளிவான ஆதாரங்கள்
- அப்போதைய ஜனாதிபதியான பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளருக்கு, எதிர்கட்சிகளின் பொது வேட்பாளரை விட பல தடவைகள் செய்திகளில் அதிக நேரம் வழங்கியமை
- கட்டணம் ஏதும் பெறாமல் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பன அப்போதைய ஜனாதிபதியான பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரின் விளம்பரங்களை உச்ச பார்வையாளர் நேரங்களிலும், அது தவிர்ந்த நேரங்களிலும் ஒளிபரப்பியமை
- தேர்தல் பரப்புரையின் இறுதித் தினங்களில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பவற்றில் ஒரு மணித்தியாலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரின் நாற்பது விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டமை பொது வளங்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தால் அவதானிக்கப்பட்டது.
- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பன தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்குப் புறம்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் இறுதிப் பேரணிகளை ஜனவரி 4, 5 ஆம் திகதிகளில் நேரடி ஒளிபரப்புச் செய்தமை.

மூலம்:

Electoral Integrity: A Review of the Abuse of State Resources and Selected Integrity Issues during 2015 Presidential Election in Sri Lanka (TISL, March 2015). http://www.tisrilanka.org/during-an-election-all-state-media-institutions-should-come-under-election-commission/

செலுத்தப்பட்ட விளம்பரங்களின் அளவு பற்றியோ எண்ணிக்கை தொடர்பிலோ சட்டரீதியான கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. மேலும், அரச ஊடகங்கள் ஆளும் கட்சி வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கு வேறு வழிகளை கண்டுபிடிக்கின்றன. உதாரணமாக, பேட்டிகள், தேசிய அபிவிருத்தி சம்பந்தமான முயற்சிகள் மற்றும் விவாதங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கை ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக்கோவையைத் தயாரிக்கும்போது, அனைத்திந்திய வானொலி[127] மற்றும் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்[128] என்பவற்றின் விதிகளை கருத்திற்கொள்ளலாம்.

127 All India Radio Code: http://www.newsonair.com/full_news.asp?type=link&id=71

128 BBC Editorial Guidelines: http://www.bbc.co.uk/editorialguidelines/guidelines

## பரிந்துரைகள்

- அரசியல், வணிக தலையீடுகளற்ற, பொதுநலனுடன் செயற்படும் தகுதிவாய்ந்த அதிகாரிகளைக் கொண்ட நிறைவேற்றுக்குழுக்களை நவீன சட்டவரைபுகள் மூலமாக நியமிப்பதன் மூலமாக இலங்கையின் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். இதன் மூலமாக ஆசிரியர்பீட சுதந்திரம் , ஒலி-ஒளிபரப்புக் கோவை உருவாக்கம் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும். ஆசிரியர்பீட சுதந்திரம் என்பது சில நேரங்களில் தணிக்கைச் செயற்பாட்டை ஊக்குவிக்கலாம் என்பதால், ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவை மிகக் கவனமான முறையில், சமரசமற்ற வகையில் உருவாக்கப்படவேண்டும். ஒலி-ஒளிபரப்பாளர்கள் இந்த ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவை உருவாக்கத்தில சிரத்தையுடன் ஈடுபடவேண்டும்.

- அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கான ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவை, ஊடகங்கள் தேர்தல் சமயத்தில் நேர்மை, சமநிலை மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதிசெய்தல், தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டுதல்களை பின்பற்றல் என்பவற்றை உறுதிசெய்ய வேண்டும். சுதந்திரமான ஓர் அமைப்பு இதனை கண்காணிக்க வேண்டும்.

## 3.10 ஒலி-ஒளிபரப்புக் கோவையை வலுவாக அமுல்படுத்தல்.


தொழிற்துறைக்குப் பொதுவான ஒழுக்கக்கோவை இல்லாததால் அல்லது இவ்வாறான ஒழுக்கக்கோவையை அமுல்படுத்துவதற்கு சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு இல்லாததால், அதனை வலுவாக்குவதற்கான தேவை எழவில்லை.

முன்னைய அரசாங்கம் அனைத்து ஊடகங்களுக்குமான ஊடக ஒழுக்காற்றுக் கோவையை தயாரித்தது. எனினும், அதில் காணப்பட்ட சில பகுதிகள் மிகவும் ஆபத்தானவை, இலங்கையில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரத்தை அது மேலும் கட்டுப்படுத்தலாம் என ஊடவியலாளர்களும் சிவில் சமூக குழுக்களும் ஆழ்ந்த கவலையை வெளியிட்டனர். எனினும், ஜுன் 2013 இல், இந்த ஒழுக்காற்றுக் கோவையை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களுக்கு உறுதி அளித்தார்.[129]

[129] Sri Lanka withdraws controversial press code – AFP report dated 23 June 2013. http://bit.ly/1DY74h1

### பரிந்துரை

- சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு உருவாகுமிடத்து - ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள், தொழில்சார் வழிகாட்டுதல்களையும், ஒழுக்கநெறிகளையும் இலங்கையிலுள்ள சகல ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்காகவும் உருவாக்க வேண்டும். ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள், அரசியல் விடயங்கள் மற்றும் மக்கள் நலன்களுடன் சமபந்தப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் நேர்மை, சமநிலை மற்றும் பக்கச்சார்பின்றி செயற்படுவதையும் பொறுப்புடமையுடன் இருப்பதையும் தொழில்சார்வழிகாட்டுதல்கள் உறுதிசெய்தல் வேண்டும்.



அரசியல்வாதிகள் தொலைக்காட்சியைத் தவறாக பயன்படுத்தல் - கேலிச்சித்திரக்காரர் டபிள்யூ. ஆர். விஜேசோம பார்வையில், திவயின, 24, ஜனவரி, 1989.




அவந்த ஆட்டிகலவின் கேலிச்சித்திரம் - டெய்லி மிரர் - 2 டிசம்பர் 2014

உ

# ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் தற்துணிவின் அளவுகள்

**3 11** பொதுமக்கள் ஊடகங்கள் மீது உயர்ந்தபட்ச நம்பிக்கையை வெளிப்படுத்தல்.

இலங்கை மக்கள் ஊடகங்களை எவ்வளவு தூரம் நம்புகின்றனர் என்பதை உறுதி செய்வதற்கான பாரிய ஆய்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த விடயம் குறித்து புரிந்துகொள்வதற்கு ஆராய்ச்சிகள் அவசியம்.

2010 ஆம் ஆண்டு காலநிலை மாற்றம் குறித்த மக்களின் அபிப்பிராயங்கள் பற்றி நாடளாவிய ரீதியில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆயிரம் பேர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்து ஆய்வில், நடப்பு விவகாரம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு வெகுசன ஊடகங்களே முக்கிய சேவையாற்றுவது தெரிய வந்துள்ளது (வரிசைக்கிரமமாக - தொலைக்காட்சி, வானொலி அதன் பின் செய்திப்பத்திரிகை.) எந்தத் தகவல் மூலத்தை அவர்கள் நம்புகின்றனர் என்ற கேள்விக்கு வரிசைக்கிரமமாக - தொலைக்காட்சி, இணையம், வானொலி மற்றும் செய்திப்பத்திரிகைகளைக் குறிப்பிட்டனர்.[130]

ஊடகத் தகவல்களின் நம்பகத்தன்மை பற்றிய மக்களது பின்னூட்டல் தொடர்பான மதிப்பீடொன்று இடம்பெற்றது. 800 பேர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 47 வீதமானோர் திருப்திகரமானது என்றும், 49 வீதமானோர் நடுநிலை (neutral) என்றும் பதிலளித்தனர். மேற்குறித்த மதிப்பீட்டின்போது அதிகம் நம்பகத்தன்மைகூடிய ஊடகங்களாக முறையே தொலைக்காட்சி (56%), செய்திப்பத்திரிகை (20%) மற்றும் இணையம் (21%) எனக் குறிப்பிட்டனர். இவ்வாய்வு பற்றிய விபரங்கள் 7 ஆம் பின்னிணைப்பில் காணப்படுகின்றன.

130 Survey on Public Perceptions on Climate Change in Sri Lanka, 2010. Conducted for Ministry of Environment. http://www.academia.edu/2921623/Survey_on_Public_Perceptions_of_Climate_Change_in_Sri_Lanka_2010

## 3.12 ஊடகங்கள் தங்கள் பணி குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கு செவிமடுத்தல்.

இலங்கையில் ஊடகத் தொழிற்துறையைப் பொறுத்தவரையில், பெறுநர்களது அல்லது மக்களது பின்னூட்டம் தொடர்பான ஆய்வுகள் கிரமமாக இடம்பெறுவதில்லை.

அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் வரலாற்றுரீதியாக பார்வையாளர்கள் குறித்த ஆய்வுப் பிரிவுகளைக் கொண்டுள்ளனர். இந்தப் பிரிவு, ஊடக உள்ளடக்கம் குறித்த மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு ஆய்வுகளை மேற்கொள்கின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இவ்வாறான பிரிவுகளைக் கொண்டுள்ளன. எனினும், இந்த ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ள விடயங்களை நிகழ்ச்சிகளைத் திட்டமிடுபவர்களும் முகாமைத்துவத்தினரும் மக்களுடனான தங்கள் ஈடுபாட்டை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தவில்லை. உண்மையில், குறித்த ஆய்வுப் பிரிவுகள் நிறுவனங்களில் கணக்கெடுக்கப்படாதவையாக இருப்பதுடன், சில சந்தர்ப்பங்களில் 'தண்டனை இடமாற்றம்' செய்யப்படுவோருக்கான இடங்களாகவும் அமைந்துவிடுகின்றன.

சில தனியார் ஒலி-ஒளிபரப்பாளர்கள் பொதுமக்களைச் சென்று சந்திக்கும் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். உதாரணத்திற்கு, பாடசாலைகளுக்கு, பிரபலமான சந்தைகளுக்குச் சென்று தங்களுடைய பணி குறித்து கலந்துரையாடுவது போன்றவை. ஆனால், இவர்கள் மேற்கொள்ளும் இசசெயலகள் பொதுமக்களின் மனோநிலையை அறிவதற்கான தீவிரமான முயறசிகள் போலத தோன்றவில்லை.

அநேக பிரதான ஊடக அமைப்புககள், சமூக ஊடகங்களில் வெளிவரும பொதுமக்களின் விமர்சனம் குறிதது கருத்து தெரிவிப்பதில்லை.

### பரிந்துரை

- ஊடகங்கள தஙகளது பணிகள் தொடர்பான பொதுமககளின விமர்சனம் குறித்து எதிர்வினையாறறுவதற்கான உயர் தொழில்சார் தராதரததை கொணடிருக்கவேண்டும

# ஊ

## ஊடகவியலாளரின் பாதுகாப்பு

**3 13** பத்திரிகையாளர்கள், இணைக்கப்பட்ட ஊடகப் பணியாளர்கள், மற்றும் ஊடக அமைப்புகள் தங்கள் செயற்பாடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ளல்.

சட்டத்திற்கு அப்பாற்பட்ட அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக இலங்கையின் ஊடகப் பணியாளர்கள் மற்றும் ஊடக அமைப்புகள் தங்களுடைய தொழிலை அச்சமின்றி மேற்கொள்வதற்கான உரிமை கட்டுப்படுத்தப்படுகிறது.

முன்னைய அரசாங்கம் எப்படி ஊடகங்களை ஆபத்தான தொழிற்துறைகளாக மாற்றின என்ற அடிப்படையில் இதனை ஆராய வேண்டும். ஆனால், அரசாங்கத்தின் மீது மட்டுமே இதற்குக் காரணம் என்றும் கூறிவிடமுடியாது. சமூகத்தில் சகிப்புத் தன்மை இன்மையும் தீவிரவாதமும் அதிகரித்து வருவதால், கருத்துக்கள் குறித்த வெளிப்படையான திறந்த விவாதங்கள் பாதிக்கப்படுகின்றன. விவாதத்திற்கான தளம் மற்றும் செய்தியை காவிச் செல்பவர் என்ற அடிப்படையில் ஊடகம் பல முனைகளில் இருந்து அழுத்தத்தைச் சந்திக்கிறது.

“வீதி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் குறித்த செய்திகளை சேகரிக்கும்போது ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது, கண்மூடித்தனமான கைது மற்றும் தடுத்துவைத்தல், வாய்மொழி நிந்தனை மற்றும் உடல்ரீதியான தாக்குதல்கள், உபகரணங்களைக் கைப்பற்றி அழித்தல், மற்றும் படுகொலைகள் இடம்பெறும் 16 நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுவதாக” கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பது தொடர்பான

ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் 2012 இல் தெரிவித்திருந்தார்.[131]

2014 இல் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு - உலகில் ஊடகவியலாளர்களிற்கு ஆபத்தான நாடுகளின் பட்டியலில் இலங்கையை நான்காவதாக சேர்த்திருந்தது (ஈராக், சோமாலியா, மற்றும் ஆப்கானிஸ்தானிற்கு பின்னர்). ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடுவது குறித்த தனது சர்வதேச பட்டியலிலேயே அது அவ்வாறு குறிப்பிட்டிருந்தது

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு இவ்வாறு தெரிவித்திருந்தது, " மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தனது தலைமைத்துவத்தின் (பிரதமராக, பின்னர் ஜனாதிபதியாக) கீழ் கொல்லப்பட்ட ஒன்பது ஊடகவியலாளர்கள் குறித்து தீர்வைக்காண்பதற்கான அரசியல் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவில்லை."[132]

2014 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட "நீதிக்கான பாதை" என்ற அறிக்கையில் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, 2004 முதல் 2013 வரை, இலங்கையில் தங்களின் பணிக்காக கொல்லப்பட்ட ஒன்பது ஊடகவியலாளர்கள் குறித்த விபரங்களை வெளியிட்டிருந்தது.[133] இவை குறித்து

ஊடகவியலாளர்கள் - மனித உரிமைப் பாதுகாவலர்களாக

"ஊடகவியலாளர்கள் தகவல் சேகரித்து அதனை அச்சு, வானொலி மற்றும் தொலைக்காட்சியினூடாக மக்களுக்கு வழங்கவேண்டிய ஆணையைக் கொண்டுள்ளனர். பொதுவாக நோக்கின், ஊடகவியலாளர்கள் மனித உரிமை பாதுகாவலர்களல்ல. எனினும், அவர்கள் மனித உரிமைப் பாதுகாவலர்களாக செயற்படுகின்றனர், உதாரணமாக, மனித உரிமை மீறல் தொடர்பில் செய்தியறிக்கையிடும்போது அவர்கள் அவ் உரிமை மீறல் தொடர்பில் சாட்சியாளர்களாகவும் காணப்படுகின்றனர்."

யார் மனித உரிமை பாதுகாவலர்கள்? – ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட ஆவணத்திலிருந்து பெறப்பட்டது. http://www.ohchr.org/EN/Issues/SRHRDefenders/Pages/Defender.aspx

131 http://www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session20/A-HRC-20-17_en.pdf

132 https://cpj.org/reports/2014/04/impunity-index-getting-away-with-murder.php

133 https://cpj.org/reports/2014/10/the-road-to-justice-appendix1-impunity.php

உரியவிதத்தில் விசாரணைகள் இடம்பெறவில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப்படவுமில்லை, இது தண்டனையிலிருந்து விலக்கப்படும் பண்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

தொடர்ச்சியான துன்புறுத்தல்கள் மற்றும் இழிவுபடுத்தப்படுவதன் காரணமாக பல ஊடகவியலாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேறினர் (3.14 ஐப் பார்க்க). தொடர்ந்தும் ஊடக பணியில் ஈடுபட்டவர்கள் முன்னர் யுத்தம் இடம்பெற்ற பகுதிகள், மக்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாம்கள் மற்றும் வட-கிழக்கில் இடம்பெறும் மீள்குடியேற்றம் குறித்து செய்திகளை சேகரிப்பதில் நெருக்கடிகளைச் சந்தித்தனர்.

2013 இல், வெளிநாட்டு செய்திக்குழுக்கள் வடக்கில் செய்திசேகரிக்கவிடப்படாமல் எப்படி பல தடவைகள் தடுக்கப்பட்டன என்பது குறித்து 'பத்திரிகைச் சுதந்திர அறிக்கை' (Freedom of Press) (2014) தெரிவித்துள்ளது. இந்த கட்டுப்பாடுகள் ஜனவரி தேர்தலிற்குப் பின்னர் குறைவடைந்துள்ளன. எனினும் வடகிழக்கில் பணியாற்றும் உள்ளூர் செய்தியாளர்கள் தொடர்ந்தும் சட்டஅமுலாக்கல் அதிகாரிகளிடமிருந்தும், இராணுவத்தினர் மற்றும் துணைப்படையினரிடமிருந்தும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையில் அதிகளவு பாதிக்கப்பட்ட ஊடக அமைப்புகளில் ஒன்றாக தனியாரிற்கு சொந்தமான உதயன் தமிழ்ப் பத்திரிகை காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட இந்தப் பத்திரிகை வடக்கில் அதிகளவு விற்பனையாகின்றது. 1987 முதல் 2014 வரை அந்த பத்திரிகையின் பணியாளர்களோடு பணிமனையும் பல தாக்குதல்களை சந்தித்துள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் 2014-15 தென்னாசிய பத்திரிகை சுதந்திர அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகின்றது, "இலங்கையின் நீண்ட கால ஊடக ஒடுக்குமுறை வரலாற்றில், உதயன் பல தாக்குதல்களிற்கு உள்ளாகியுள்ளது. ஊடகங்கள் மீதான ஒடுக்கமுறை அதிகரித்த கடந்த 10 வருடங்களிலும் உதயன் மீதான தாக்குதல்கள் அதிகரித்தே காணப்பட்டன. இக்காலப்பகுதியில் வடபகுதியில் ஊடகங்களை ஒடுக்குவதற்கும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்குமாக பல கடுமையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்னர் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக்களின் நிலை மற்றும் யுத்தத்திற்கு பிந்திய சூழலில் காணப்படும் பிரச்சினைகள் குறித்த விபரங்கள் வெளிவருவதை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வடபகுதி ஊடகவியலாளர்கள் ஒளிந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர், பயங்கரவாதிகள் போன்று அச்சறுத்தப்பட்டனர்."[134]

134 http://www.ifj.org/nc/news-single-view/backpid/33/article/the-freedom-frontier-south-asia-press-freedom-report-2014-15-launched/

பொலிஸார் அல்லது இராணுவத்தினருடன் மக்கள் மோதும் சம்பவங்கள் குறித்து செய்தி வெளியிடும் ஊடகவியலாளர்கள் விசேடமாக இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். உதாரணத்திற்கு, 2013 ஒகஸ்ட் முதலாம் திகதி கம்பஹாவின் வெலிவேரியவைச் சேர்ந்த மக்கள் தங்கள் நிலத்தடி நீரை அசுத்தப்படுத்தும் தொழிற்சாலையொன்றிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். அரசாங்கம் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக கண்மூடித்தனமான பலத்தைப் பயன்படுத்தியது, பொதுமக்களைக் கொலை செய்ததுடன் காயப்படுத்தியது. இந்த சம்பவங்கள் குறித்து செய்தி சேகரித்த ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர், படையினரால் தாக்கப்பட்டனர்.[135]

கடந்த தசாப்தங்களில் சில ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அரச சார்பற்றவர்களால் பகிரங்கமாக அச்சுறுத்தப்பட்டனர், தாக்கப்பட்டனர்.

2010 ஜனவரியில் கேலிச்சித்திர கலைஞரும் இணையத்தள ஊடகவியலாளருமான பிரகீத் எக்னலிகொட காணாமற்போன விடயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, உள்ளடங்கலாக சர்வதேச அளவில் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. இவர், 24 ஜனவரி 2010 இல் ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் காணாமற்போனார். இவர், மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துநின்ற, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளரான சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக பரப்புரைகளில் செயற்பட்டவர்.[136] எக்னலிகொடவின் குடும்பத்தார் மற்றும் அம்னெஸ்ரி இன்ரநஷனல் என்பன முன்னைய அரசாங்கத்தின் பங்கு இவர் காணாமலாக்கப்படடதில் இருந்தது எனத் தெரிவித்தனர்.136 முன்னைய அரசாங்கம் இதனை மறுத்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, எக்னலிகொட இராணுவத்தினரால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிவிக்கப்பட்டது. 2016 ஜனவரியில், இந்த அறிக்கை தயாரிக்கப்படுகையில், இது தொடர்பான விசாரணை நடைபெறுகிறது.[137]

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரச்சார காலங்களில் ஊடக சுதந்திர அமைப்புகளும், ஊடகவியலாளர்களும் ஊடக சுதந்திரம், ஊடக சுதந்திரத்தை ஒடுக்குபவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்கப்படும் பண்பாட்டை முடிவிற்கு கொண்டுவருதல் தொடர்பிலான உறுதிமொழிகளைப் பெறுவதற்காக அவருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பாறுப்பை ஏற்றதன் பின்னர் (ஜனவரி 2015) ஊடக சுதந்திரத்தை மீளக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஜனாதிபதி சிறிசேன மற்றும் பிரதமர் ரணில்

135 http://en.rsf.org/sri-lanka-soldiers-attack-journalists-05-08-2013,45019.html

136 http://www.amnesty.org.uk/write-rights-prageeth-eknaligoda-sri-lanka#.VUL86_DkqSo

137 http://www.theguardian.com/world/2016/jan/29/sri-lankas-missing-thousands-one-womans-six-year-fight-to-find-her-husband




24 டிசம்பர் 2010 இலிருந்து காணாமற்போன பிரகீத் எக்னலிகொடவிற்கான நீதி கோரல் - சுவரொட்டி

விக்கிரமசிங்க இணைந்து முன்னைய ராஜபக்ஷ அரசால் பின்பற்றப்பட்ட ஊடகங்களை தடுக்கும் ஊடகவியலாளர்களைத் தாக்கும் செயற்பாடுகளை இல்லாமற்செய்தனர். அதேபோல் 2009 இல் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் (சண்டே லீடரின் பிரதம ஆசிரியர்) விசாரணையை மீள ஆரம்பித்தனர்.[138] அதேபோல், தனிநபர்களது தொலைபேசி உரையாடலை செவிமடுக்கும் செயற்பாடும் நிறுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டார்.[139]

எவ்வாறிருந்தாலும், சட்ட, நிர்வாக மற்றும் ஏனைய சீர்திருத்தங்கள் ஊடாக இந்த வாக்குறுதிகளைப் புதிய அரசாங்கம் நிறைவேற்றுவதற்காக ஊடக சுதந்திர அமைப்புகளும், பத்திரிகையாளர்களும் ஆவலுடன் காத்துள்ளனர்.

139 http://www.theguardian.com/world/2015/jan/10/sri-lanka-president-maithripala-sirisena-promise-change

http://www.reuters.com/article/2015/01/11/us-sri-lanka-rights-media-idUSKBN0KK0G020150111

## பரிந்துரைகள்

- ஊடகவியலாளர்கள், ஊடக தொழிலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் அச்சகங்களுக்கெதிரான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பன உரிய முறையிலே (பொலிஸ், சட்ட ரீதியான நடவடிக்கைகள்) விசாரிக்கப்படும் என்பதையும் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்படுவர் என்பதையும் அரசு வினைத்திறனான நடவடிககைகள் மூலம் உறுதிசெய்யவேண்டும். இச் செயற்பாடுகள் தசாப்த காலமாக நிலவிய அச்சுறுத்தல் பண்பாட்டை இல்லாதொழிக்கச் செய்யும்.

- அனைத்து ஊடக நிறுவனங்களும் அச்சுறுத்தல்மிக்க சூழ்நிலையில் பணியாற்றும் கடமையையும் அரசியல் பொருளாதார நலன்களை பாதுகாக்கும் திடசங்கற்பத்தையும் கொண்டுள்ள தம் ஊழியர்களது உயிர்ப் பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்கவேண்டும். இதனூடாக, வர்த்தக நலன்கள் ஒதுக்கப்பட்டு, ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும் அத்தோடு சுய தணிக்கை தவிர்க்கப்படும்.

- போதிய கவனம் மற்றும் வளங்கள் வழங்குவதன் ஊடாக இலங்கையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் உரிய, விபரமான, தொழில்சார் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

BOX 16

# சுயதணிக்கை எவ்வாறு ஜனநாயகத்தை தகர்த்து நல்லிணக்கத்தைத் தடுக்கிறது

ஊடகவியலாளர்கள் தாமாகவே சில செய்திகளை அல்லது தகவல்களைப் பிரசுரிக்காதுவிடல் சுயதணிக்கையாகும். ஊடகவியலாளர்கள் தமக்கோ அல்லது தம் குடும்பத்தாருக்கோ ஏதும் அச்சுறுத்தல் - மரணம்வரை ஏற்படக்கூடும் என்ற பயத்தாலும் சட்டம் தொடர்பான பயத்தாலும் சுயதணிக்கையில் ஈடுபடுகின்றனர்.

அரசியல்வாதிகள், இராணுவம், மதத்தலைவர்கள் மற்றும் வணிக நலன்கள் மீதான பயம் காரணமாக அல்லது தற்காப்புக்காக ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் பல வருடங்களாக சுயதணிக்கையில் ஈடுபடுகின்றனர். கடந்த சில வருடங்களாக, சிவில் யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் இது கற்பனைசெய்யமுடியாத உயரத்தை எட்டியிருந்தது.

கிளேயா பொரொனோ (பட்டப் பின் படிப்பு, சட்டத்துறை, வேர்ஜினியா சட்டப் பல்கலைக்கழகம்), இலங்கை ஊடகவியலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்ட நிபுணர்களுடனான நேர்காணல்களின் வழியாக அறிந்ததைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார், "பயம் காரணமாக சுய தணிக்கை மேற்கொள்ளத் தூண்டப்படும் பண்பாட்டினால் இலங்கை ஊடகங்கள் யுத்தம் மற்றும் அரசாங்கம் குறித்த திறந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ளாதுள்ளன"

அவர் தன் அறிக்கையில், "கருத்துச் சுதந்திரத்தை உறுதிசெய்த போதும் இலங்கை அரசியலமைப்புச் சட்டம் அதனைப் பிரயோகத்தில் பாதுகாக்கவில்லை என்பது தெளிவு" என்றார்.

மேலும் குறிப்பிடும்போது, "அரசால் மனித உரிமை மீறப்படுவதால் ஏற்படும் விளைவுகள் பல காணப்பட்டபோதும், சுய தணிக்கை என்பது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று. காரணம், அது கண்ணுக்குப் புலப்படாத மற்றும் விளைவுகளைக் கணக்கிட முடியாததொன்று. அரசை விமர்சித்த காரணத்திற்காக ஒரு ஊடகவியலாளரை கைது செய்யும்போது அதன் பின் விளைவாக பத்து ஊடகவியலாளர்கள் வாயடைக்கப்படுவர். சிறையிலடைக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் கருத்துச் சுதந்திர உரிமை மீறப்பட்டுள்ளது என்பது தெளிவு, ஆனால் வெளியே இருக்கும் பத்து ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு அமைதியாக்கப்பட்டமை குறித்து எவ்வித ஆதாரமுமில்லை. காரணம் அவ் அச்சுறுத்தல் மறைமுகமானதொன்று. ஆகவே, ஊடகவியலாளர்கள் சமூகத்தில் இடம்பெறும் குற்றங்களைக் கண்டபோதும் அமைதியாகப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் மூலம் அவர்களது கருத்துச் சுதந்திரமும் சமூகப் பாதுகாவலர்களாகச் செயற்படும் பணியும் பாதிக்கப்படுகின்றன."

அவரது கருத்தின்படி, "கருத்துச் சுதந்திர உரிமை மீறப்படுதலும் அதனால் ஏற்படும் சுய தணிக்கையும் ஓர் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதிக்கும் அதேவேளை இலங்கையில் இவை ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கும். மூன்று தசாப்த யுத்ததிலுருந்து மீளும் இந் நாட்டிலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட போதும் இனங்களுக்கிடையேயான குழப்பங்கள் இன்னமும் தொடர்கின்றன. மக்கள் கலந்துரையாடலை அமைதியாக்குவதன் மூலம் ராஜபக்ஷ அரசாங்கம் நல்லிணக்கத்தை தடுக்கின்றது. இதனால் மறுசீரமைப்பு இலங்கைக்கு அவசியம். இதன்மூலம் நிரந்தர சமாதானம் இலங்கையில் உருவாகும்."

மூலம்: 'இலங்கை ஊடகங்களை அமைதியாக்குதல்: இலங்கை அரசியலமைப்பு எவ்வாறு சுய தணிக்கையை ஊக்குவித்து நல்லிணக்கத்தை தடுக்கிறது'
http://www.vjil.org/assets/pdfs/vol53/Boronow-Finalized-v1.pdf

## 3 14 பாதுகாப்பு இன்மை என்ற சூழலால் ஊடக நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருத்தல்.

அச்சுறுத்தல்கள், உடல் ரீதியான தாக்குதல்கள் மற்றும் வன்முறைகள் என்பன இலங்கையின் அனைத்து ஊடகவியலாளர்கள் மத்தியிலும் பரந்துபட்ட ரீதியில் சுய தணிக்கை பின்பற்றப்படுவதற்கு வழிவகுத்துள்ளன. (16 ஆம் பெட்டியைப் பார்க்க)

குறிப்பிடத்தக்க ஊடகவியலாளர்கள் நாடுகடந்து வாழ்வதற்கு அச்சுறுத்தலும், தண்டனையின் பிடியிலிருந்து விலக்கப்படுதலுமே காரணமாக அமைந்துள்ளது. 2014 வரை வெளிநாடுகளிற்கு ஊடகவியலாளர்கள் தப்பிச் செல்லும் முக்கிய பத்து நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்பட்டது என, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது தேடலின்வழி அறிந்துள்ளது.[140]

ஃப்ரீடம் ஹவுஸ் தனது ஃப்ரீடம் ஒவ் பிரெஸ் 2014 அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதுஇ "பெருமளவு ஊடகவியலாளர்களும், ஊடகச் செயற்பாட்டாளர்களும் நாடுகடந்து வாழ்கின்றனர், இதன் காரணமாக இந்த தொழில் துறை தங்களுடைய மிகவும் அனுபவமிக்க ஊடகவியலாளர்களை இழந்து காணப்படுகின்றது."[141]

2008 முதல் 2010 வரையான காலப்பகுதியில் ஊடக சுதந்திர செயற்பாட்டாளர்கள் உட்பட 55 ஊடகவியலாளர்கள் இலங்கையில் இருந்து பாதுகாப்பு, அச்சம் காரணமாக தப்பியோடியுள்ளதாக 'எல்லைகள் அற்ற நிருபர்கள்' அமைப்பு 2010 இல் தெரிவித்தது. எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு இலங்கையின் நிலவரம் குறித்து தெரிவித்த கருத்து, "சுதந்திரமான செய்தி வெளியிடலைத் தடுப்பதற்கு புதிய வகையிலான தணிக்கைகள் மற்றும் தடைகளைப் பயன்படுத்துவதை கண்டிக்கின்றோம், உடல்ரீதியான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் சிறையில் அடைக்கப்படுதல் போன்றவற்றின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம், ஆனால் அதிகாரிகள் உண்மையான ஆசிரியபீட சுதந்திரத்தின் வருகையை தடுக்கின்றனர் என்பது கவலையளிக்கின்றது"[142] என்கிறது.

இலங்கையில் இருந்து வெளியேறிய ஊடகவியலாளர்கள் பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர், அமெரிக்கா மற்றும் சில ஆசிய நாடுகளிலும் அவர்கள் காணப்படுகின்றனர். (குறிப்பாக சுவிட்சர்லாந்து, மற்றும் பிரிட்டன்) சிலர் பல்வகைப்பட்ட ஊடகப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர், ஏனையவர்கள் ஏற்கனவே நன்கு ஸ்தாபிக்கப்பட்ட புலம்பெயர் ஊடகங்களிற்காக பணியாற்றுகின்றனர். சிலர் தங்கள் சொந்த இணையத்தினைத் தனியாகவும் கூட்டாகவும் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து வெளியேறி ஐரோப்பாவில் வாழும் ஊடகவியலாளர்கள் குழுவொன்று, 2009 இல், 'இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள்' (ஜேடிஎஸ்) என்ற அமைப்பை ஆரம்பித்தது. 2012 ஆண்டளவில் 30 ஊடகவியலாளர்கள் அந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர், அவர்களுடைய வலைப்பூ பதிவு, மனித உரிமைகள் மற்றும் ஊடகவியலாளர்கள் சுதந்திரம் பற்றி

140 https://cpj.org/exile/

141 https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka#.VUL0uvDkqSo

142 http://en.rsf.org/sri-lanka-less-anti-media-violence-in-2010-30-12-2010,39197.html

143 http://www.jdslanka.org

பேசுகின்றது.[143]

நோர்வேயின் ஒலிபரப்பு ஊடகவியலாளர் பியட்டே ஆர்னெஸ்டெட்டின் "மௌனமாக்கப்பட்ட குரல்கள்" என்ற விவரணச்சித்திரம் இலங்கையிலிருந்து நாடுகடந்து வாழும் ஊடகவியலாளர்கள எவ்வாறான சூழலில் வாழ்கின்றனர், வேலை பார்க்கின்றனர் என்பதை வெளிப்படுத்தியதுடன், அவர்கள் குறித்து மேலும் தெரியவருவதற்கும் உதவியது, அந்த விவரணச்சித்திரம் நாடுகடந்து வாழும் நான்கு ஊடகவியலாளர்கள் குறித்து குறிப்பிட்டிருந்தது - சொனாலி சமரசிங்க, பாசனா அபயவர்த்தன, சர்மிளா லோகேஸ்வரம் மற்றும் ஏ. லோகீசன் அவர்களாவர்.[144]

"நாடுகடந்து வாழும் ஊடகவியலாளர்களும், புலம்பெயர் குழுக்களும் மேற்குலகின் ஊடகங்களுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர். அதன் மூலம் அவர்களால் இலங்கை அரசாங்கத்தை அம்பலப்படுத்த முடிகின்றது. இந்தக் குழுவினர் பிரிட்டனில் அதிகளவில் செயற்படுவதால் அவர்களால் இலங்கை அரசாங்கத்தை விமர்சிக்கும் விடயங்களைக் கொண்டுவர முடிகின்றது. இந்த முயற்சிகள் இலங்கை அரசாங்கத்திற்குக் கடும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளன" என 'இலங்கையில் யுத்தத்திற்கு பிந்திய சூழலில் ஊடக சுதந்திரம் நல்லிணக்கத்தின் மீதான அதன் தாக்கம்' குறித்து ஆராய்ந்த பி.பி.ஸி.யின் செய்தியாளர் சுவாமிநாதன் நடராஜா 2012இல் குறிப்பிட்டார்.[145]

2014 நடுப்பகுதியில், 2005 முதல் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வோம் என புதிய ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டார். ஊடகத்துறை செழிப்பதற்கான சூழல் உருவாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார், நாடு கடந்து வாழும் அனைத்து ஊடகவியலாளர்களையும் இலங்கைக்கு மீளத் திரும்பி இங்கு ஊடகப் பணியில் ஈடுபடுமாறு அவர் அழைப்பு விடுத்தார். ஆனால், இதுவரை மிகக் குறைவானவர்களே நாடு திரும்பியுள்ளனர்.[146]



தனியார் உரிமையாண்மையின் கீழான, சிரச தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் மீது 06 ஜனவரி 2009 அன்று நடாத்தப்பட்ட தாக்குதலை விசாரணை செய்யும் பொலிஸ் - புகைப்படம் : இஷார எஸ். கொடிகார, ஏ.எவ். பி.

### பரிந்துரை

- ஊடகங்கள் மீதான தாக்குதலுக்குக் காரணமான "குற்றம் விலக்கப்படும்"; சந்தர்ப்பங்களை தடுக்கும் அனைத்துச் சட்டங்களும் அமுல்படுத்தப்படவேண்டும். இதன் மூலம் மனித உரிமைகள் மீறப்படும்போது சட்டம் தண்டிக்கும் என்ற எண்ணம் ஏற்படுத்தப்படும்.

144 http://silencedvoicesfilm.com/synopsis.html

145 'Media Freedom in Post War Sri Lanka and its Impact on the Reconciliation Process' in 2012. Reuters Institute for Study of Journalism. University of Oxford, 2012. http://reutersinstitute.politics.ox.ac.uk/publication/media-freedom-post-war-sri-lanka-and-its-impact-reconciliation-process

146 As quoted in IFJ report of March 2015, p4: http://www.ifj.org/fileadmin/images/Asia_Pacific/IFJ_AP/reports-etc/Gender_and_Media_in_Sri_Lanka




ஊடகங்கள் மீதான தாக்குதல்களுக்கு ஊடகவியலாளர்களின் எதிர்ப்பு—புகைப்பட அனுசரணை: 'கொழும்பு கசற்'




ஊடகங்களின் சுதந்திரத்துக்காக ஊடகவியலாளர்களின் போராட்டம் - கோட்டை புகையிரத நிலையம், கொழும்பு - 23 நவம்பர் 2007, புகைப்படம்: துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை

பிரிவு 3

# ஜனநாயகக் கருத்தாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல்

## பரிந்துரைகளின் தொகுப்பு

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
|---|---|
| 3.1 ஊடகங்கள் - பொது, தனியார் மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டது, சமூகத்தின் சகல குழுக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வது. | 1. அரசாங்கம் உரிய கொள்கைகள், விதிமுறைகள், மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் ஊடக பன்முகத்தன்மையை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், மற்றும் சிறுபான்மையினத்தவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யவேண்டும். இதனை உள்வாங்கும் ஊடகக் கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலமும், அனுமதிப்பத்திரம் வழங்கும்போது நிபந்தனைகள் விதிப்பதன் மூலமும், ஒலி-ஒளிபரப்புத் துறையில் பன்முகத்தன்மையை உருவாக்கும் சுயாதீன ஒழுங்குபடுத்தல்கள், மூன்று அடுக்கு (பொதுத் தேவை, வணிகம், சமூகம்) ஒலி-ஒளிபரப்பு முறையை அங்கீகரிக்கும் சட்டங்கள், மற்றும் சுயாதீன தயாரிப்பாளர்களிற்கு நிதிவசதிகள் செய்வதன் மூலமும் ஊடக உள்ளடக்களில் பன்முகத்தன்மையை ஏற்படுத்தலாம்.<br><br>2. தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்சிகள் பண்பாடு மற்றும் மொழிசார் பல்வகைமைத்தன்மையை உருவாக்கும் நிகழ்சிகளுக்கு அதிக இடமளிக்க வேண்டும். பாலியல் சமத்துவம், புறந்தள்ளப்பட்டவர்களது தேவைகளை முன்வைப்பது என்பவற்றையும் கருத்தில்கொள்ள வேண்டும். பெண்கள் தொடர்பான ஒலி-ஒளிபரப்புகளின் போது பொதுமைப்படுத்தல்களுக்கு இடமளிக்கக் கூடாது. இதற்காகப் பெண் ஊடகவியலாளர்களை செய்தித் தயாரிப்பில் அதிகம் ஈடுபடுத்த வேண்டும். அரசியல் கட்சிகளின் கருத்துக்களைப் பக்கச்சார்பின்றி வெளிப்படுத்த வேண்டும். |
| 3.2 ஊடக நிறுவனங்கள் தங்கள் தொழில்சார்ந்த நடவடிக்கைகள் மூலம் சமூகப் பல்வகைமையை பிரதிபலித்தல். | 3. ஊடக நிறுவனங்கள் ஊடகப் பல்வகைமையை உறுதிப்படுத்த வேண்டும். ஆசிரியர் பீடம், ஆளணி என்பவற்றில் இது பிரதிபலிக்க வேண்டும். ஆட்சேர்ப்பின் போது இலங்கையின் சனத்தொகை, இனப்பரம்பல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்படவேண்டும். அதேபோல், சிறுபான்மையினர், மொழிப்பிரிவினர், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளை அதிகம் நியமிக்க வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 3.3 பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பின் இலக்குகள் சட்ட ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டவை | 4. அரசாங்கம் சட்ட மறுசீரமைப்புக்களைச் செய்வதன் மூலமாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி முதலான அரச ஊடகங்களை முழுமையான, அரசியல் தலையீடற்ற, பொதுமக்கள் நலனுக்கான, சுதந்திரமான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களாக மாற்ற வேண்டும். அரச தலையீடுகளற்று அவை இயங்குவது சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்பீட சுதந்திரமும் ஊழியர்களது சுதந்திரமும் பேணப்படவேண்டும். இதற்காக சுயாதீன முகாமைத்துவ சபைகள் உருவாக்கப்பட வேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பிற்கான சட்டம் வரையப்படும்போது ஐரோப்பா, கனடா மற்றும் ஆசிய நாடுகளின் மாதிரிகள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>5. பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பிற்கான நிதி வழங்கலானது பாதுகாப்பானது, நீண்ட கால அடிப்படையானது, தொடர்ச்சியானது, மற்றும் தன்னிச்சையான அரசியல மற்றும் சந்தைச்சக்திகளின் தலையீடுகளற்றது என்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பிற்கு பொதுமக்கள் நிதி வழங்குவதற்கான பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.<br><br>6. நாட்டின் பொதுச்சேவைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில், பொதுசன ஊடகங்களின் கடமைகளைத் தெளிவாகக் குறிப்பிடும் விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.<br><br>7. பொதுசன ஊடகங்கள் பொது மக்கள் தொடர்பில் பொறுப்புணர்வுடன் செயற்படுவதை பாராளுமன்றம் மற்றும் நேரடி வழிகள் வழியாக, உதாரணமாக, நிகழ்ச்சிகள் தொடரபாக பெறுநர் சபை உருவாக்குதல், பொதுமக்களுடன் நேரடி கலந்துரையாடலில் ஈடுபடுதல் ஆகிய நெறிமுறைகள்வழி உறுதி செய்ய வேண்டும். |
| 3.4 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பாளர்களின் நடவடிக்கைகள் எந்தத் துறையிலும் பாரபட்சத்தை அனுபவிக்கக் கூடாது. | |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
|---|---|
| 3.5 சுயாதீன மற்றும் வெளிப்படையான நிர்வாகம் | 8. அரசாங்கத்திற்கு சொந்தமான அச்சு ஊடக நிறுவனங்களின் (லேக் ஹவுஸ் / ஏ.என்.சி.எல்) எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்கு பொதுக் கலந்தாய்வு அவசியம். அவற்றை பொதுச் சேவை ஊடகங்களாக மாற்றுவது, முழுமையாக தனியார் மயப்படுத்துவது, உரிமையை மேலும் பரந்துபட்டதாக்குவது உட்பட அனைத்து சாத்தியப்பாடுகளும் பரிசீலிக்கப்பட வேண்டும்.<br>9. அரச ஊடகங்கள் பொதுச் சேவை ஊடகங்களாக மாற்றப்படவேண்டும். பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்புகளின் நிர்வாக சபைகள் பாராளுமன்றம் வழியாக மக்களுக்கே பதிலளிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். |
| 3.6 பொதுச் சேவை ஒலி-ஒளிபரப்பாளர்கள் பொதுமக்கள்,சிவில் சமூக அமைப்புகளுடன் உறவுகளை ஏற்படுத்துதல் | 10. இலங்கையில் சுதந்திரமான பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்பினை உருவாக்குதலில் சிவில் சமூக அமைப்புகள் முனைப்புடன் செயற்பட வேண்டும். அத்தோடு பொதுச்சேவை ஒலி-ஒளிபரப்புகளின் நீடித்த வாழ்வுக்கு நிதி திரட்டுவது தொடர்பில் ஆக்கபூர்வமான வகையில் செயற்பட வேண்டும்.<br>11. இலங்கையில் அரச ஊடகங்கள் பெறுநர்களுடன் வினைத்திறனான முறையில் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாக நிகழ்ச்சிகளில் பெறுநர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்யலாம். மிக முக்கியமாக பெறுநர்கள் சபை உருவாக்கம் பெற வேண்டும். |
| 3.7 அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான சிறந்த வலுவான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல். | 12. 1973 ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டம் நீக்கப்பட வேண்டும், மற்றும் அரசாங்கத்தின் கருவியான இலங்கை பத்திரிகைப் பேரவை கைவிடப்பட வேண்டும்.<br>13. 2003 ஆம் ஆண்டு முதல் ஊடக முறைப்பாட்டு பொறிமுறையாக விளங்கும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சுதந்திரத்தை ஊடகத் தொழில்துறை வலுப்படுத்த வேண்டும். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாட்டு நடைமுறைகளில் அச்சு ஊடகத்தின் அதிகரித்த பங்களிப்பை எவ்வாறு ஊக்குவிப்பது மற்றும் ஒலி-ஒளிபரப்பு, இணைய (புதிய) ஊடகங்களை எவ்வாறு உள்வாங்கலாம் என்பது குறித்து இதனுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் தேசிய கலந்தாய்வு ஒன்று இடம்பெற வேண்டும். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்ப்புகள் அமுல்படுத்தப்படுவதை வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக தொழிற்துறையினர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் (தற்போது அவை சுயவிருப்பின் அடிப்படையிலானவையாகவும், சில ஊடகங்களால் அலட்சியப்படுத்தப்படுபவையாகவும் காணப்படுகின்றன). அரசாங்கமும் ஊடகங்களும் இணைந்த ஒரு ஒழுங்குபடுத்தல் முறையை எவ்வாறு முன்னெடுப்பது, அது சாத்தியமா என்பது குறித்து ஆராய வேண்டும், இது, இந்தோனேசியாவில் சாத்தியமாகியுள்ளது. |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 3.7 அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான சிறந்த வலுவான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல். | 14. ஒலி- ஒளிபரப்பாளர்கள் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு தொடர்பில் திருப்தியடையவில்லை எனில், பொதுமக்கள் முறைப்பாடுகள் செய்வதற்கான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். மீளப் புனரமைக்கப்படும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தனது விதிகளைச் செயற்படுத்துவதற்கு, சட்ட வலுவைக் கொண்டிருக்க வேண்டும். |
| 3.8 ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான பண்பாட்டை வெளிப்படுத்தல். | 15. ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக்கோவை, ஆசிரியர் பீட சுதந்திரம், மற்றும் ஆசிரியர் பீட விதிமுறைகள் என்பன தனியார், பொது, மற்றும் சமூக ஊடகங்களால் பின்பற்றப்படவேண்டும். வாசகர்களுக்கான ஆசிரியர் (ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களில் அதற்குச் சமனான ஒருவர்) ஒருவரை நியமித்து மக்கள் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் ஒரு வழிமுறை. அவர் மக்கள் முறைப்பாடுகள் குறித்தும் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், தண்டனைகள் குறித்தும் கருத்து தெரிவிப்பார்.<br><br>16. பிரஜைகள் பங்குபற்றலை தனியார், பொது, மற்றும் சமூக ஊடகங்கள் உறுதிசெய்யவேண்டும். அதன் மூலம் பிரஜைகள் நிகழ்ச்சித் தயாரிப்பிலும் கல்வியறிவூட்டும் செயற்பாட்டிலும் பங்குபற்றுவதை உறுதிசெய்யவேண்டும்.<br><br>17. ஊடகவியலாளர் சங்கங்கள், ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக் கோவையை ஊக்குவிக்க வேண்டும். செய்திகளின் உண்மைத்தன்மை, மக்கள் தகவல் அறியும் உரிமை, விமர்சிக்கும் உரிமை, நடுநிலையான தகவல் அறிக்கையிடல், நியாயமான முறையில் தகவல் பெற்றுக்கொள்தல் முதலானவற்றை ஊக்குவிக்க வேண்டும். இந்த ஒழுக்கக்கோவை, ஊடகங்கள் தம் தவறுகளை சரிசெய்யும் மற்றும் தகவல் மூலத்தின் இரகசியத்தைப் பேணும் ஊடகப் பண்பாட்டை உருவாக்க வேண்டும்.<br><br>18. ஊடகவியலாளர் சங்கங்கள் மற்றும் ஊடக உரிமையாளர்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பத்திரிகை ஆசிரியர்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கவேண்டும். இது ஊடக நிறுவனங்களுக்குள் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை உறுதிசெய்யும் ஓர் வினைத்திறன்மிக்க பொறிமுறையாக இருக்கவேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
| --- | --- |
| 3.8 ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான பண்பாட்டை வெளிப்படுத்தல். | 19. ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக்கோவை மற்றும் ஆசிரியர் பீட விதிமுறைகள் என்பன தங்களிடம் உள்ளன என்பதை ஊடகங்கள் உறுதிசெய்யவேண்டும். அதனை வெளிப்படுத்துவதன் ஊடாக தாம் அவற்றைப் பின்பற்றுவதையும், வெளிப்படையான தன்மையையும் ஊடகங்கள் உறுதிசெய்யலாம். ஊடகவியலாளர்களிடம் இதன் பிரதி ஒன்று காணப்படவேண்டும், அல்லது அவற்றை எங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பதையாவது அறிந்திருக்க வேண்டும். ஊடகவியலாளர் சங்கங்கள் இவற்றை அதிகம் ஊக்குவிக்கவேண்டும். |
| 3.9 நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகளை முன்வைக்கும் வலுவான ஒலி-ஒளிபரப்புக் ஒழுக்கக்கோவை. | 20. அரசியல், வணிக தலையீடுகளற்ற, பொதுநலனுடன் செயற்படும் தகுதிவாய்ந்த அதிகாரிகளைக் கொண்ட நிறைவேற்றுக்குழுக்களை நவீன சட்டவரைபுகள் மூலமாக நியமிப்பதன் மூலமாக இலங்கையின் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். இதன் மூலமாக ஆசிரியர்பீட சுதந்திரம் , ஒலி-ஒளிபரப்புக் கோவை உருவாக்கம் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும். ஆசிரியர்பீட சுதந்திரம் என்பது சில நேரங்களில் தணிக்கைச் செயற்பாட்டை ஊக்குவிக்கலாம் என்பதால், ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவை மிகக் கவனமான முறையில், சமரசமற்ற வகையில் உருவாக்கப்படவேணடும். ஒலி-ஒளிபரப்பாளர்கள் இந்த ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவை உருவாக்கத்தில சிரத்தையுடன் ஈடுபடவேண்டும்.<br><br>21. அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்கான ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவைஇ ஊடகங்கள் தேர்தல் சமயத்தில் நேர்மை, சமநிலை மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதிசெய்தல், தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டுதல்களை பின்பற்றல் என்பவற்றை உறுதிசெய்ய வேண்டும். சுதந்திரமான ஓர் அமைப்பு இதனை கண்காணிக்க வேண்டும். |
| 3.10 ஒலி-ஒளிபரப்பு ஒழுக்கக்கோவையை வலுவாக அமுல்படுத்தல். | 22. சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு உருவாகுமிடத்து - ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள், தொழில்சார் வழிகாட்டுதல்களையும், ஒழுக்கநெறிகளையும் இலங்கையிலுள்ள சகல ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களுக்காகவும் உருவாக்க வேண்டும். ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள்இ அரசியல் விடயங்கள் மற்றும் மக்கள் நலன்களுடன் சமபந்தப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் நேர்மை, சமநிலை மற்றும் பக்கச்சார்பின்றி செயற்படுவதையும் பொறுப்புடமையுடன் இருப்பதையும் தொழில்சார்வழிகாட்டுதல்கள் உறுதிசெய்தல் வேண்டும். |

| குறிகாட்டிகள் | தொடர்புடைய பரிந்துரைகள் |
|---|---|
| 3.11 பொதுமக்கள் ஊடகங்கள் மீது உயர்ந்தபட்ச நம்பிக்கையை வெளிப்படுத்தல். | |
| | 23. ஊடகங்கள் தங்களது பணிகள் தொடர்பான பொதுமக்களின் விமர்சனம் குறித்து எதிர்வினையாற்றுவதற்கான உயர் தொழில்சார் தராதரத்தை கொணடிருக்கவேண்டும். |
| 3.12 ஊடகங்கள் தங்கள் பணி குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கு செவிமடுத்தல்.<br><br>3.13 ஊடகவியலாளர்கள், இணைக்கப்பட்ட ஊடகப் பணியாளர்கள், மற்றும் ஊடக அமைப்புகள் தங்கள் செயற்பாடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ளல். | 24. ஊடகவியலாளர்கள், ஊடக தொழிலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் அச்சகங்களுக்கெதிரான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பன உரிய முறையிலே (பொலிஸ், சட்ட ரீதியான நடவடிக்கைகள்) விசாரிக்கப்படும் என்பதையும் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்படுவர் என்பதையும் அரசு வினைத்திறனான நடவடிககைகள் மூலம் உறுதிசெய்யவேண்டும். இச் செயற்பாடுகள் தசாப்த காலமாக நிலவிய அச்சுறுத்தல் பண்பாட்டை இல்லாதொழிக்கச் செய்யும்.<br><br>25. அனைத்து ஊடக நிறுவனங்களும் அச்சுறுத்தல்மிக்க சூழ்நிலையில் பணியாற்றும் கடமையையும் அரசியல் பொருளாதார நலன்களை பாதுகாக்கும் திடசங்கற்பத்தையும் கொண்டுள்ள தம் ஊழியர்களது உயிர்ப் பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்கவேண்டும். இதனூடாக, வர்த்தக நலன்கள் ஒதுக்கப்பட்டு, ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும் அத்தோடு சுய தணிக்கை தவிர்க்கப்படும்.<br><br>26. போதிய கவனம் மற்றும் வளங்கள் வழங்குவதன் ஊடாக இலங்கையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் உரிய, விபரமான, தொழில்சார் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யவேண்டும். |
| 3.14 பாதுகாப்பு இன்மை என்ற சூழலால் ஊடக நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருத்தல். | 27. ஊடகங்கள் மீதான தாக்குதலுக்குக் காரணமான "குற்றம் விலக்கப்படும்" சந்தர்ப்பங்களை தடுக்கும் அனைத்துச் சட்டங்களும் அமுல்படுத்தப்படவேண்டும். இதன் மூலம் மனித உரிமைகள் மீறப்படும்போது சட்டம் தண்டிக்கும் என்ற எண்ணம் ஏற்படுத்தப்படும். |

# வகை

# 4

## கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், பல்வகைமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தொழில்வாண்மையைக் கட்டியெழுப்பும் மற்றும் உதவியளிக்கும் நிறுவகங்கள்

## முக்கிய குறிகாட்டிகள்

### அ கிடைக்கக்கூடிய தொழில்சார் ஊடகப் பயிற்சி

4.1 ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், தங்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பயிற்சிகளை பெற்றுக்கொள்தல்

4.2 வர்த்தக முகாமையாளர்கள் உட்பட ஊடக முகாமையாளர்கள், தங்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்தல்.

4.3 ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் ஊடாக ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி குறித்த விளக்கத்தை ஏற்படுத்தல்.

### ஆ ஊடகச் செயற்பாடுகள் குறித்த கல்விசார் கற்கைநெறிகள்

4.4 கல்விசார் கற்கைநெறிகள் பல தரப்பட்ட மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாயிருத்தல்

4.5 கல்விசார் கற்கைநெறிகள் மாணவர்களுக்கு ஜனநாயக அபிவிருத்தி தொடர்பான திறன்கள் மற்றும் அறிவினை வழங்குதல்

### இ தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளின் பிரசன்னம்

4.6 ஊடக பணியாளர்களுக்கு சுதந்திரமான தொழிற் சங்கங்களில் இணைந்து தங்கள் உரிமைகளை பயன்படுத்துதற்கான உரிமையுள்ளது.

4.7 தொழிற்சங்கங்களும், தொழில்சார் அமைப்புகளும் தங்கள் தொழில்சார்பில் குரல் கொடுத்தல்

### ஈ சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம்

4.8 சிவில் சமூக அமைப்புகள் ஊடகங்களை ஒருங்கமைக்கப்பட்ட முறையில் கண்காணித்தல்.

4.9 கருத்துச்சுதந்திர விடயங்களில் சிவில் சமூக அமைப்புகள் குரல் எழுப்புதல்.

4.10 சிவில் சமூக அமைப்புகள், சமூகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தங்கள் குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்யவும் உதவுதல்

“பொதுவாக கருத்துச் சுதந்திரத்தையும் குறிப்பாக ஊடக சுதந்திரத்தையும் ஊக்குவிப்பதற்கான எங்கள் முயற்சியில் மேலும் ஒத்துழைப்பையும் ஐக்கியத்தையும் வழங்குவோம் என்ற எங்கள் அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்துவேம். இதன் காரணமாக நாங்கள் ஊடகங்களை இந்தப் பொதுவான போக்கை சாத்தியமாக்குவதற்காக கருத்து வேறுபாடுகள் மற்றும் செயற்படும் விதத்தில் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றை கைவிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.”

இதுவே, 1998 ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு குறித்த செயலமர்வின்போது வெளியிடப்பட்ட, “ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு” குறித்த கொழும்பு பிரகடனத்தின் இறுதி வார்த்தைகள். இச்செயலமர்வு இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை சங்கம், செய்திப் பத்திரிகைகளுக்கான சர்வதேச சங்கம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகிவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆவணம் விரைவில் ‘ஊடகப் பட்டயமாக’ மாறியது. இதனை அடிப்படையாக வைத்தே நாட்டின் வெளியீட்டாளர்களும், ஆசிரியர்களும், ஊடகவியலாளர்களும், ஊடக செயற்பாட்டாளர்களும் ஊடக சுதந்திரத்திற்கான தங்கள் பிரசாரங்களை அதிகளவு முன்னெடுத்தனர். அதேவேளை, உயர்மட்ட தொழில்சார் பொறுப்புணர்வையும் வளர்த்தனர்.

கொழும்பு பிரகடனத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாக, ஊடகத் தொழிற்துறையும் ஊடகப் பணியாளர்களும் ஒன்றிணைந்து 2003 இல் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தை (Sri Lanka Press Institute - SLPI) உருவாக்கியமையைக் குறிப்பிடலாம். இது ஊடகம் சார்ந்த செயற்பாடுகளில் தலைமைத்துவத்தையும், வழிகாட்டல்களையும் வழங்குவதற்கான தொழிற்துறை தளமாகும். இலங்கை பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை பத்திரிகை சமூகம் மற்றும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகியன இணைந்து இதனை உருவாக்கின.

இலங்கை ஊடகங்கள் தம்மை விருத்திசெய்ய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளமையை முன்வைத்து இது உருவாக்கம்பெற்றது.

BOX 17

## ஊடகக் கல்வி, ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் கல்வி

ஊடகக் கல்வி, ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் கல்வி போன்ற சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுக் காணப்பட்டபோதும் இவை வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டவை.

- இதழியல் கல்வி வினைத்திறன்மிக்க மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய இதழியல் செற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான கோட்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றை வழங்குகிறது. 2007 இல் உலக இதழியல் கல்விப் பேரவையின் கொள்கைப் பிரகடனம் இவ்வாறு தெரிவித்தது, “இதழியல் கல்வியின் இதயமாக விளங்குவது கருத்துரு , மெய்யியல் மற்றும் திறன்களை அடிப்படையாகக் கொண்ட குறித்த சமநிலை உள்ளடக்கமாகும். இதழியல் கல்வி என்பது பலதுறை இணைப்பைக் கொண்டுள்ள அதேவேளை, அது தனக்கேயுரித்தான அறிவுசார் சட்டகம் மற்றும் கோட்பாடுகளைக் கொண்ட கல்வித்துறையுமாகும். (பார்க்க : **http://wjec.net/declaration-of-principles)** இது பொதுமக்கள் தொடர்பு, விளம்பரம், மற்றும் ஏனைய பொதுத் தொடர்பாடல்கள் குறித்த படிப்பை கொண்டிராதது.

- ஊடகக் கல்வி, ஊடகக் கற்கைகள் என்பது ஊடகத் தயாரிப்பு மற்றும் தொழிநுட்பங்களில் பொதுத்திறமையை பெறுவதன் ஊடாக ஊடகத் தொழிற்துறையில் பணியாற்றக்கூடிய திறன்களைக் கைவரப்பெற்றுக் கொள்வதாகும். ஊடகக் கல்வி, ஊடகக் கற்கைகள் என்பன, ஊடக உள்ளடக்கங்களை (எழுத்து, கட்புலசாதனங்கள், மற்றும் எண்சார் தயாரிப்பு) ஆராய்வதற்கான சிறந்த திறனை வழங்குவதுடன், அதன் மூலம் அவற்றின் அர்த்தங்களையும் விழுமியங்களையும் அறிந்து மதிப்பிடவும் உதவும். இது, சமூகவியலில் காணப்படும் ஓர் தளமாகும். இதழியல் கல்வியில் இடம்பெறும் சில விடயங்களைக் கொண்டுள்ளபோதும், ஊடகக் கல்வி, ஊடகக் கற்கைகளின் அணுகுமுறை வித்தியாசமானதே.

அ

## கிடைக்கக்கூடிய தொழில்சார் ஊடகப் பயிற்சி

## 4.01 ஊடகத் தொழில்வாண்மையாளர்கள் பயிற்சிகளை பெற்றுக்கொள்தல்

இருபது வருடங்களுக்கு முன்னதான காலப்பகுதியோடு ஒப்பிடும்போது தற்போது அதிகளவு இதழியல் மற்றும் ஊடகப்பயிற்சி கற்கைகளும், அவற்றை வழங்குபவர்களும் காணப்படுகின்றனர்.

சில இதழியல் கற்கைநெறிகள், இதழியல் தொழிலில் ஆரம்பகட்ட மற்றும் இடைக்காலத் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டவை. ஏனையவை, குறிப்பிட்ட கருப்பொருட்களை அடிப்படையாகக்கொண்டு விசேட விடயங்கள் அல்லது தலைப்புகளில் பயிற்சிகளை வழங்குபவை.

இதழியல் மற்றும் ஊடகப் பயிற்சிகள் மற்றும் வழங்குநர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும், தரக்கட்டுப்பாடுகள், நடைமுறைப் பொருத்தப்பாடு மற்றும் இவ்வாறான பயிற்சிகளை வழங்குவதற்கு தேவையான நிதிவசதி உள்ளிட்ட இயல்தகைமை குறித்த ஐயங்களும் காணப்படுகின்றன.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்தொழிற்துறையின் ஏனைய பிரிவினரான ஊடக முகாமையாளர்களுக்கும் மேலும் சிறந்த பயிற்சிகளை வழங்குவதற்கான தேவையுள்ளது.

தற்போது, தொழிற்துறையின் தேவைகளுக்கும், வழங்கப்படும் பயிற்சிகளுக்கும் இடையில்

இதழியல் கல்வியும் பயிற்சியும் ஜனநாயகத்திற்கு ஏன் அவசியம்?

“தொழில்சார் செய்தி ஊடகங்கள் பொதுநலன் காப்பாளர்களாகச் செயற்படுகின்றன. இது ஜனநாயகத்தைப் பேணும் ஒரு பகுதி. மக்களுக்கு தகவல் வழங்குவதன் ஊடாக, செய்தி ஊடகங்கள் மக்களை அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்குபெறச் செய்வதோடு பின்னூட்டல் பொறிமுறைகளையும் வலுப்படுத்துகின்றன. முக்கிய தகவல்கள் மற்றும் அறிவு இல்லாமல் மக்கள், அவர்களது குடியுரிமையை அனுபவித்திட முடியாது. நன்கு பயிற்றப்பட்ட ஊடகவியலாளர்கள் இவற்றை வழங்க கடமைப்பட்டுள்ளனர்.”

“ஆகவே, ஊடகவியலாளர்களிடம் தகவலைக் கண்டறியும், அதனை விளங்கிக்கொள்ளும் ஆற்றலும், அத்தோடு அத் தகவலை பக்கச்சார்பின்றி நியாயமான முறையில் வழங்குவதற்குத் தேவையான நேர்மையும் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவேண்டிய கடமையுமுள்ளது. இதழியலின் கருப்பொருளாக இருப்பது, நன்கு பயிற்றப்பட்ட மற்றும் தர்க்கரீதியான சிந்தனையுள்ள, தம் சமூகத்தின் ஜனநாயக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தக்கூடிய ஊடகவியலாளர்களால் உருவாக்கப்படுகின்ற செய்தி நிறுவனங்களாகும்.”

தகவல் மூலம் - யுனெஸ்கோவின் இணையத்தளம் - இதழியல் கல்வி மற்றும் பயிற்சி
http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/journalism-education-and-training/

இடைவெளி அல்லது பொருத்தமின்மை காணப்படுகின்றது. இது, ஊடகத் தொழில்வாண்மையாளர்கள் மத்தியில் "திறன் பற்றாக்குறையை" ஏற்படுத்தியுள்ளது. மேலும், ஊடக உற்பத்திகளில் தொழிற்சார் தராதரங்கள் பற்றாக்குறைக்கும் அது காரணமாகிறது.

துரதிஷ்டவசமாக, பல ஊடக நிறுவனங்களுக்கு ஊடகக் கல்வி மற்றும் பயிற்சி என்பது முன்னுரிமைக்குரிய விடயங்களல்ல.

பல நிறுவனங்களின் மனிதவள முகாமைத்துவ கொள்கைகள் ஊடகவியலாளர்களின் தொடர்கல்விக்கு உதவும் விதத்தில் காணப்படவில்லை. உதாரணத்திற்கு, பதவி உயர்வுகள் என்பவை புதிய திறன்கள் அல்லது கல்வித் தராதரங்களைப் பெறுவதுடன் தொடர்புபட்டதாகக் காணப்படவில்லை.

பயிற்சிகளை, அநேக தருணங்களில் தனிநபர்களாக உடகவியலாளர்கள், தங்களுடைய தனிப்பட்ட ஊக்கத்தினால் பெறுகின்றனர். இதற்காக அவர்கள் தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்துகின்றனர். நிறுவனமயப்படுத்தப்பட்ட பயிற்சிமுதலீடுகளை, ஊடக தொழிற்துறைக்கு வெளியே உள்ள நிறுவனங்களே மேற்கொள்கின்றன. உதாரணமாக, ஊடகப் பரிந்துரை அமைப்புகள் மற்றும் அபிவிருத்தி நிதியுதவியாளர்கள் போன்றவர்கள்.

ஊடகத்துறைக்குள் காலடியெடுத்து வைக்க விரும்பும் அல்லது காலடியெடுத்து வைத்துள்ள ஊடகவியலாளர்களுக்கு பல கற்கைநெறிகள் காணப்படுகின்றன. ஆனால், தொழில் வாழ்க்கையின் நடுப்பகுதியில் அல்லது தொழிற்காலப் பயிற்சி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. தற்போது காணப்படும் கற்கை நெறிகள், தரமுறையொன்றுக்குள் உள்வாங்கப்பட்டவையாகவோ அல்லது அளவுகோல்களைக் கொண்டனவாகவோ காணப்படவில்லை. புலனாய்வு செய்யும் மற்றும் ஆராயும் திறன்களைக்கொண்ட ஊடகவியலாளர்களை உருவாக்கக்கூடிய கற்கைநெறி எதுவும் இல்லையென தொழிற்துறையை நெருங்கி அவதானிக்கும் ஒருவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கு, ஊடகப்பயிற்சி தவிர்ந்த வேறு பயிற்சிகளும் வழங்கப்படவேண்டும். முறைசார்ந்து பயிற்றுவிக்கப்பட்ட ஊடகப்பயிற்சியாளர்கள் மற்றும் இதழியல் கல்விக்கான பாடப்புத்தகங்கள் என்பவையும் குறைபாடுகளாகவேயுள்ளன.

அரச ஊடகங்கள் தங்களது ஸ்தாபனத்திற்கான சொந்தப் பயிற்சி பிரிவுகளைக் கொண்டுள்ளன[150] (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பயிற்சி நிறுவகம், மற்றும் ஏ.என்.சி.எல் அல்லது லேக் ஹவுசில் உள்ள பயிற்சி நிலையம்).

150 http://slbctraining.blogspot.com/

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சில பயிற்சிகளை, உதாரணமாக, கல்வி ஒலிபரப்பு மற்றும் வானொலிக்கான நேர்காணல் போன்றவற்றை வெளியாட்களும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கை ஊடகத் தொழிற்துறைக்கான தேசிய நிலையம்

நீண்ட காலமாகவே சுயாதீன ஊடகவியல் பயற்சி நிலையத்திற்கான தேவை உணரப்பட்டது. 2002 இல், சுவீடனின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் அமைப்பு (SIDA), இலங்கை ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி தேவைகள் குறித்த ஆய்வொன்றை மேற்கொண்டது. மூவர்கொண்ட குழு இதனுடன் தொடர்புபட்ட பலருடன் கலந்தாய்வினை மேற்கொண்ட பின்னர் இவ்வாறு தெரிவித்திருந்தது, "இலங்கையில் இதழியல் கற்கைநெறிகள் - பல்கலைக்கழகங்களில், அரசுடன் சார்ந்து இயங்கும் நிறுவனங்களில், மற்றும் தனியார் நிறுவனங்களில் காணப்படுகின்றன. தனியாரினால் முன்னெடுக்கப்படும் பலவகையான, பல தரங்களிலான கற்கைநெறிகள் காணப்படுகின்றன. எனினும், எங்களுக்கு கிடைத்த நேரத்திற்குள் அவை பற்றிய எண்ணக்கருவொன்றை உருவாக்குவது கடினமான விடயமாக காணப்பட்டது. இதற்கு அப்பால், பணியின்போது பயிற்சிகள் வழங்கும் நடைமுறையும் குறிப்பிடத்தக்களவு காணப்படுகின்றது. அவை அடிப்படைக் கொள்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாக காணப்படுகின்றன."[151] சீடாவின் ஆய்வு, புதிய பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்துமாறு பரிந்துரை செய்தது, "பல்கலைக்கழகங்கள், அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் இணைந்த கூட்டுமுயற்சி, புதிய அபிவிருத்திக்கான அடிப்படையை உருவாக்குவதற்கான நம்பகத்தன்மையையும், திறனையும் கொண்டிருக்கும். இந்த மாற்று ஏற்பாட்டிற்கு ஊடக உரிமையாளர்கள், ஆசிரியபீட முகாமையாளர்கள், ஊடகவியலாளர்கள், மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகளின் ஆதரவும் தேவைப்படுவதாக இருக்கும். இலங்கையில் சுதந்திரமான ஊடக சூழலை ஏற்படுத்துவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசசார்பற்ற அமைப்புகளாலும் இது தீவிரமாக வலியுறுத்தப்பட்டது."[152]

கொழும்பு பிரகடனத்திற்கு (1998) பின்னர், இலங்கை ஊடக தொழிற்துறையினர் சொந்த முயற்சிகளை முன்னெடுத்திருந்த தருணத்திலேயே சீடாவின் முயற்சி இடம்பெற்றிருந்தது. இந்தச் செயற்பாடுகள், 2003 இல், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் உருவாக்கப்படுவதற்கு வழிவகுத்தது. அன்றைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், இதற்கு கொள்கை ரீதியிலான ஆதரவை வழங்கியது. ஸ்கன்டிநேவிய நாடுகளின் உதவி வழங்குநர்களின் கிடைக்கப்பெற்றது.

151 Journalism Training and Research in Sri Lanka. Stig Arne Nohrstedt, Sunil Bastian and Jöran Hök. April 2002. SIDA. http://www.sida.se/contentassets/2596a99da6904293b210766eb7735640/journalism-training-and-research-in-sri-lanka_784.pdf

152 Op cit

சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பான இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு மற்றும் பயிற்சிப் பிரிவான இலங்கை இதழியல் கல்லூரி ஆகியவற்றிற்கான நிறுவன வடிவமைப்பை இன்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வழங்குகிறது. ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்களுக்குப் பின்னர் ஊடகத் தொழிற்துறையில் உள்ள பல்வேறு பங்குதாரர்களை ஒன்றிணைக்கக்கூடிய திறனைக் கொண்ட ஒரேயொரு தளமாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் காணப்படுகிறது. எனினும், வளர்ச்சி அடைந்துவரும் சமூக பொருளாதார வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து இந்த அமைப்பினை மறு மதிப்பீட்டுக்கும் சிந்தனைக்கும் உட்படுத்த வேண்டும். நிதி நெருக்கடிகள் காரணமாக பயிற்சிப் பிரிவு உட்பட இதன் பல பிரிவுகள் நிறுத்தப்பட்டும் உள்ளன.

இலங்கை இதழியல் கல்லூரி (Sri Lanka College of Journalism - SLCJ)

இலங்கையில் இதழியல் கல்வியின் தராதரத்தை அதிகரிப்பதற்காக, இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கீழ், இலங்கை இதழியல் கல்லூரி 2004 இல் உருவாக்கப்பட்டது. அதன் பாடத்திட்டத்தை இலங்கையின் மூத்த ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், சுவீடனின் கல்மார் பல்கலைக்கழகத்தின் பயிற்சிப்பிரிவான போஜோ ஊடக ஸ்தாபனத்தின் உதவியுடன் உருவாக்கினர்.[153]

இலங்கை இதழியல் கல்லூரி மூன்று மட்டத்திலான ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குகிறது. ஆரம்ப நிலையில் உள்ள ஊடகவியலாளர்கள், கொழும்பையும் அதனைச் சூழவும் உள்ள உழைக்கும் ஊடகவியலாளர்கள் மற்றும் மாகாண ஊடகவியலாளர்கள். அதன் கற்கைநெறிகள் அட்டவணை – 03 இல் உள்ளவாறு, பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

153 http://www.slcj.lk/about/background/

Table 3: Different courses offered by Sri Lanka College of Journalism

| Course type | Trainee profile | Description and current status |
|---|---|---|
| Diploma course in journalism: Pre-service 12 months: Full time | High school leavers keen to pursue careers in media | Aims to produce multi-skilled journalists (print, radio, TV and web) with a sound theoretical and ethical grounding. Includes a two-month internship at a media company for practical exposure. Offered in Sinhala and English; (Tamil stream suspended due to insufficient demand) |
| Refresher courses: In-service Short-term (3-days of full-time training) | Early to mid career journalists and other media industry personnel | These used to cover various thematic and specialized topics of use to journalists. No longer offered due to lack of demand, but a 3-month certificate course in presentation skills is being planned. |
| Training for provincial journalists In-service Short-term | Aimed at provincial level journalists, often held away from Colombo | These are conducted occasionally and opportunistically, often in partnership with development organisations. |

இதழியல் கல்லூரியால் நடத்தப்படும் அனைத்து கற்கைநெறிகளிலும் ஊடக ஒழுக்கநெறி பற்றிய கற்கை வலுவாக முன்நிறுத்தப்படுகின்றது. 2010 இல் இருந்து டிப்ளோமா மற்றும் இடைநிலைப் பயிற்சி ஆகியன புதிய ஊடகங்கள் மற்றும் அவை தொடர்பான சவால்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றன.

2005 இல் இருந்து இன்றுவரை 600 இற்கும்

மேற்பட்ட டிப்ளோமா பட்டதாரிகள் பட்டம்பெற்று வெளியேறியுள்ளதாக அதன் நிர்வாகம் கூறியுள்ளது. இலங்கை இதழியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட முதல் சில வருடங்களில் அதன் கற்கைநெறிகளுக்கு பெரும் வரவேற்பு காணப்பட்டது. நீண்டகாலத் தேவையை அது பூர்த்தி செய்ததே அதற்குக் காரணம். இலங்கை இதழியல் கல்லூரியின் டிப்ளோமா கற்கைநெறியை முடித்தவர்களுக்குச் செய்தி ஊடகங்கள் விளம்பர மற்றும் மக்கள் தொடர்பாடல் தொழிற்துறைகளில் உடனடியாக வேலைவாய்ப்புக் கிடைத்தது. இலங்கை இதழியல் கல்லூரியின் 2014 இற்கான வருடாந்த ஆய்வில் இவ்வாறு குறிப்பிடப்பட்டது, "ஊடகப் பணியில் நேரடியாக ஈடுபட்டுள்ள முன்னால் மாணவர்களின் தொழில் வீதம் மிக உயர்வாக, 90 சதவீதமாகக் காணப்படுகிறது. சில மாணவர்கள் உயர்' கற்கைகளை தொடர்வதில் ஈடுபட்டுள்ளனர்."

எனினும், 2010 முதல் இந்தக் கற்கைநெறியைப் பின்பற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டதுடன் டிப்ளோமாவுடன் தகுதி பெறுபவர்களுக்கான சந்தைத் தேவையும் குறைவடைந்திருந்தது. இலங்கை இதழியல் கல்லூரி நிர்வாகம் இதற்கு இரண்டு காரணங்களை முன்வைக்கின்றது.

- இலங்கை ஊடகத் தொழிற்துறை இவ்வாறு அதிகளவானவர்களை உள்வாங்கும் அளவிற்கு விரிவடையவில்லை.
- மற்றையது, அபிவிருத்தி உதவி வழங்குபவர்களின் ஆதரவு முடிவடைந்துள்ளது. மாணவர்கள் தற்போது டிப்ளோமா கற்கைநெறிக்காக 185, 000 ரூபா (சுமார் 1,250 அமெரிக்க டொலர்கள்) செலுத்த வேண்டி உள்ளது.

இதேபோன்று, பல்வேறு இடைநிலைப் பயிற்சிகளுக்குப் பதிவு செய்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடையத் தொடங்கி உள்ளது. இலங்கை இதழியல்கல்லூரி தனது ஆரம்ப வருடங்களில் ஜனநாயகம், மனித உரிமைகள் குறித்து செய்தி சேகரித்தல், தேர்தல்காலச் செய்தி சேகரித்தல், பாராளுமன்றச் செய்தி சேகரித்தல் போன்ற பல கருப்பொருட்களில் கற்கைநெறிகளைக் கொண்டிருந்தது. இவ்வாறான கற்கைநெறிகளுக்கான ஆர்வமும் பதிவு செய்தலும் சமீப வருடங்களில் குறைவடைந்தமைக்கான காரணங்கள் தெளிவற்றுள்ளன. செய்தி அறைகள், இந்தத் திறன்களில் பயிற்சிகளைத் தொடர்ந்தும் வழங்க வேண்டிய தேவையைக்கொண்டுள்ளன.

செய்தி அறைகளின் தேவைகளுக்கும் (தேர்தல், வன்முறை, இலஞ்சம், புதிய வடிவங்களிலான ஊழல் தொடர்பான சமநிலையான அறிக்கையிடல்), நிதி வழங்குபவர்கள் என்ன விடயங்களை விரும்புகின்றனர் (எச்.ஐ.வி. / எய்ட்ஸ், யுத்தத்தின் பின்னரான மறுசீரமைப்பு,

காலநிலை மாற்றம்) என்பதற்கும் இடையில் இடைவெளியும் தொடர்பற்றதன்மையும் காணப்படுகின்றன.

2013 இல், இலங்கை இதழியல் கல்லூரியின் பெயர் சொல்லக்கூடிய டிப்ளோமா கற்கைநெறியின் பாடத்திட்டமானது, பத்திரிகை ஆசிரியர்கள் குழு, சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகக் கல்வியாளர்கள் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்விற்குப் பின்னர் மீளாக்கம் செய்யப்பட்டது. இதற்கு ஐக்கிய ராச்சியத்தின் தோமஸ் மன்றத்தின் நிபுணர் ஒருவர் உதவி வழங்கினார். இந்த ஸ்தாபனம், ஊடக தொழிற்துறைக்கான விபரமான பாடத் திட்டதைக் கொண்டுள்ளது. அது, அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இதழியலைக் கற்பிப்பதற்காக யுனெஸ்கோ பரந்து பட்ட அளவில் பயன்படுத்தும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.[154]

தற்போது இலங்கை இதழியல் கல்லூரியில் 16 மாணவர்கள் டிப்ளோமா கற்கைநெறியை பின்பற்றுகின்றனர். அவர்கள் தங்கள் கற்கையை 2016 இல் பூர்த்திசெய்வார்கள்.

மேலும், இரண்டு பயிற்சி நிலையங்கள் குறித்து இங்கு சுட்டிக்காட்டுவது பயனுள்ளதாக அமையும்,

- ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் **(Media Resources and Training Centre - MRTC):** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்நிலையமானது, 2004 முதல் வடபகுதியில் ஊடக பயிற்சியின் முன்னோடியாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் யுனெஸ்கோ மற்றும் ஐ.பி.டி.சி. யின் நிதியுதவியில் ஆரம்பிக்கப்பட்டது, பின்னர், ஸ்கன்டிநேவியன் நாடுகள் நிதியுதவிகள் வழங்கின, ஊடக வள பயிற்சி நிலையம் இரு கற்கைநெறிகளை நடத்துகின்றது, உழைக்கும் ஊடகவியலாளர்களுக்கான பகுதிநேர கற்கைநெறி மற்றும் வெளியாருக்கான முழுநேர கற்கைநெறி. இரண்டு கற்கைநெறிகளும் முக்கியமான பல தலைப்புகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதழியல் குறித்த கோட்பாடுகளும் பிரயோகச்செயற்பாடுகளும் உள்ளடங்கியுள்ளன.[155] ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் பல ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இவர்கள், யாழ்ப்பாண ஊடகச் சூழலில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். எனினும், ஊடகத்துறையில் காணப்படும் அரசியல் தாக்கங்கள் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தையும் பாதித்துள்ளது.

- இலங்கை ஊடக பயிற்சி நிறுவனம் **(Sri Lanka Media Training Institute - SLMTI)** அண்மைக்காலம்வரை, இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் என அழைக்கப்பட்ட ஊடக அமைச்சின் கீழ்

154 http://www.thomsonfoundation.org/news-and-features/2013/04/04/sri-lanka-shaping-the-future-of-journalism-training

155 http://mrtc-uoj.blogspot.com

இயங்கும் இந்த நிறுவனம், சேவைக்கு முந்திய மற்றும் சேவையின் போதான பயிற்சிகளைத் தொலைகாட்சி தொழிற்துறைக்கு, தொழில்நுட்ப மற்றும் ஆசிரியபீட மட்டத்தில் வழங்குகின்றது. இது, 1984ஆம் ஆண்டு ஜேர்மனியின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர், தொலைக்காட்சி தொழில்துறையுடன் இணைந்து வளர்ந்துள்ளது. ஜனவரி 2016 வரை இந்த ஸ்தாபனம் பலவகைப்பட்ட சான்றிதழ் கற்கைநெறிகள், டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா கற்கை நெறிகளை வழங்கிவருகின்றது. செய்திகளை முன்வைப்பது, வாசிப்பது, தொலைக்காட்சிச் செய்தி ஊடகவியல், ஊடகங்களிற்கான ஆங்கிலம், தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு, டிஜிட்டல் ஒளிப்பதிவு, தயாரிப்புக்கு பிந்திய தொழில்நுட்பங்கள் போன்ற பலதரப்பட்ட கற்கைநெறிகளை வழங்குகின்றது. சில கற்கை நெறிகள் மூன்று மொழிகளிலும் வழங்கப்படுகின்றன.[156]

## கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் மற்றும் இருதரப்பு மாற்றீடுகள்

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால், ஊடகவியலாளர்களின் திறனை குறிப்பிட்ட கருப்பொருள்களில் வளர்த்தெடுப்பதற்காக, பல குறுகியகால கற்கைகள், செயலமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள், அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற அமைப்புகளாலும், ஐக்கிய நாடுகளுக்கான அமைப்புகளாலும் நடாத்தப்படுகின்றன (உதாரணம்: எச்.ஐ.வி, புகையிலை கட்டுப்பாடுகள், உயிரினப் பல்வகைமை, நல்லாட்சி, பாலின சமத்துவம், அறிவுசார் சொத்துடமை, மனித உரிமைகள்). எனினும், இவ்வகையான பயிற்சிகளின் உள்ளடக்கம், பயிற்றுவிக்கப்பட்டோர் தொடர்பான மையப்படுத்தப்பட்ட தரவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

இலங்கை ஊடகங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் (2005 இல்) தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கும் தற்போதைய நிலவரங்களுக்கும் இடையில் பாரிய மாற்றங்கள் எதுவும் இல்லை. “ஊடகவியலாளர்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்கும் முக்கிய துறையாக அரச சார்பற்ற அமைப்புகளே காணப்படுகின்றன. எனினும், இவர்களால் வழங்கப்பட்ட அநேக பயிற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமானவையாக காணப்படுகின்றன. அநேகமானவை, சில செயலமர்வுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும், பயிற்சிகள் தொடர்ச்சியற்றவையாகவும், இலங்கையின் ஒட்டுமொத்த ஊடகவியலாளர்களுக்கும் (மொத்தமாக சுமார் 3000 பேரளவிலானோர்) வழங்கப்படாதவையாகவும் உள்ளன. மாகாண ஊடகவியலாளர்கள் இந்தச் செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புகள் எப்போதும்

156 http://www.sltti.lk

மாகாண ஊடகங்களும் ஊடகவியலாளர்களும், தேசிய ஊடகங்களை விட சமூகத்தின் அடிமட்ட மக்களுடன் நெருக்கமாக உள்ளனர். மாகாண ஊடகவியலாளர்களின் கல்வி மட்டம் மற்றும் திறன்களை மேலும் வளர்த்து, மாகாண ஊடகங்களின் தரத்தை வளர்த்தெடுக்கவேண்டியுள்ளது. அவ்வாறன ஊடகங்கள், வெவ்வேறு மாகாணங்களில் உள்ளவர்களது கருத்துகளையும், அபிலாசைகளையும் முன்வைப்பதில் முக்கிய பங்கை ஆற்றமுடியும். இதன் காரணமாக, அபிவிருத்தி என்பது மேலும் அர்த்தபூர்வமானதாக்கப்படும். அபிவிருத்தி என்பது வெறுமனே வீதிகளை, பாலங்களை மாத்திரம் கட்டுவதல்ல.

- நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சர், வட மாகாணசபை.

குறைவாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக ஊடகவியலாளர்களுக்கும் ஊடகப் பணியாளர்களுக்கும் முழுமையான, தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கவேண்டிய தேவை தொடர்ந்தும் காணப்படுகின்றது."[157]

சர்வதேச ஊடக அபிவிருத்தி நிறுவனங்கள், தொழினுட்பம் மற்றும் கருப்பொருட்கள் சார்ந்த பயிற்சிகளை செயலமர்வுகள் மூலமாகவும் சில சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்களை வெளிநாடுகளுக்கு வரவழைத்தும் வழங்குகின்றன. அவ்வாறான சில நிறுவனங்களாக - ஆசிய பசுபிக் ஒலி-ஒளிபரப்பு அபிவிருத்தி நிறுவனம் (AIBD மலேசியா), பி.பி.ஸி. நிதியம், பி.பி.ஸி. ஊடகச் செயற்பாடு, டட்ஜ் வேல் ஒவ் ஜேர்மனி, சுவீடன் போஜோ ஊடக நிறுவனம், இன்ரர் நியூஸ், ரேடியோ நெதர்லண்ட் ட்ரெயினிங் சென்ரர் (RNTC) காணப்படுகின்றன.

அரச ஊடகங்களில் பணிபுரியும் ஊடகவியலாளர்களும் ஊடகப் பணியாளர்களும் இவ்வாறான பரிமாற்றங்களால் நன்மையடைந்துள்ளனர். உதாரணமாக, ஜப்பான் நாட்டின் N.H.K., இந்தியாவின் அனைத்திந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன், மற்றும் சார்க் ஓடியோ விசுவல் எக்ஸ்சேஞ் (SAVE) ஆகியன.

மாகாண ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்

157 A Study of Media in Sri Lanka (excluding the North and East). April 2005. Centre for Policy Alternatives, Colombo. http://www.cpalanka.org/a-study-of-media-in-sri-lanka-excluding-north-and-east/

இலங்கையில் உள்ள மாகாண ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை குறித்து உறுதியான புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை. ஒரு தசாப்தத்திற்கு முன்னர் 2,100 மாகாண ஊடகவியலாளர்கள் காணப்பட்டதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது. இவர்கள் "இலங்கை முழுவதிலும் உள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகள், பயிற்சி நிலையங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களுக்காகப் பணியாற்றுபவர்களாயிருந்தனர்."[158]

அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களிற்கான (விசேடமாக சிங்கள, தமிழ் ஊடகங்களுக்கு) நடப்பு விடயங்கள் தொடர்பான உள்ளடக்கத்தில், ஆகக்குறைந்தது 30 - 50 சதவீதத்தினை இவர்கள் வழங்குவதாக தொழிற்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், பெரும்பாலான மாகாண ஊடகவியலாளர்கள் எந்தவித முறைசார்ந்த ஊடக பயிற்சியையும் கொண்டிராதவர்கள். பலருக்கு செய்தி சேகரிப்பது மற்றும் அதனை வெளியிடுவது என்பது பகுதிநேரப் பணியாகவுள்ளது. ஊடகத் தொழில் அவர்களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் முக்கிய தொழில் இல்லை. அவர்கள் தொழில்ரீதியாக வேறு இடங்களை (உதாரணம் ஆசிரியத் தொழில், தபால் சேவைகள்) சார்ந்துள்ளனர்.இது உரிய தொழில்சார்தன்மை மற்றும் தாம் சம்பந்தப்படும் விடயங்களிலான முரண்பாடுகள் குறித்த கவனஈர்ப்புக்களை எழுப்பியுள்ளது.

158 Sri Lanka Directory of Provincial Journalists, Sep 2005. http://www.environmentaljournalists.org/images/Sri_Lanka_Directory_of_Provincial_Journalists.pdf

### ஊடக நிறுவனம் நடாத்தும் பயிற்சிக் கல்லூரி

ஊடக நிறுவன உதவியுடன் இயங்கும் பயிற்சிக் கல்லூரிகளில், ஆசிய இதழியல் கல்லூரியும் (சென்னை, இந்தியா) (Asian College of Journalism - ACJ) ஒன்று. சிற்சில மாற்றங்களுடன் இலங்கையிலும் இவ்வாறானதொரு கல்லூரியை அமைக்கலாம்.

பி.டி. கோயங்கா மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், 1999 இல், இலாப நோக்கற்ற பொதுமக்கள் நிதியமான, ஊடக அபிவிருத்தி மன்றத்தால் கையகப்படுத்தப்பட்டது. இம்மன்றம், "இதழியலை சுதந்திரமான, ஆய்வுரீதியான, சமூகப் பொறுப்புள்ள ஓர் தொழிற்துறையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது." ஹிந்து ஊடக குழுமத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனத்தால் முழு இந்திய சமூகமும் இந்திய ஊடகங்களும் நன்மை பெறுகின்றன.

http://www.asianmedia.org/aboutus/mdf.asp

2005 ஆம் ஆண்டு, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை ஊடகங்கள் குறித்த ஆய்வொன்றிற்காக நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பல மாகாண ஊடகவியலாளர்களைப் பேட்டி கண்டது. இதன்போது எந்த ஊடக நிறுவனமும் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள் அவர்களுக்கு எந்தவித பயிற்சியையும் வழங்காமை தெரியவந்தது, அவர்களுக்கு ஆரம்பகட்டப் பயிற்சிகள் கூட வழங்கப்படவில்லை.

இது தொடர்பான ஆய்வறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது, “எந்த மாகாண ஊடகவியலாளருக்கும் தங்கள் அலுவலகத்திலிருந்து தொழில்சார் ஒழுக்கக்கோவை வழங்கப்படவில்லை அதேபோன்று, ஒழுக்கக் கோவை குறித்து அவர்களுக்கு பயிற்சிகள் எதுவும் வழங்கப்படவுமில்லை. உதாரணத்திற்கு, ஒவ்வொரு ஊடகவியலாளரும் ஆகக்குறைந்தது தற்கொலை குறித்து ஒரு செய்தியையாவது பதிவுசெய்துள்ளனர். எனினும், தற்கொலை குறித்த உணர்வுபூர்வமான செய்தியிடலிற்கான ஒழுக்கக்கோவை குறித்து அவர்கள் எதுவும் அறிந்திருக்கவில்லை. அநேக மாகாண ஊடகவியலாளர்கள் ஊடகத் துறை குறித்த அடிப்படை பயிற்சிகூட இல்லாத நிலையில் காணப்படுகின்றனர். தங்கள் பகுதியில் இடம்பெறும் ஊடகக் கற்கைநெறியில் கலந்துகொள்வது குறித்து அவர்கள் ஆர்வமாகவுள்ளனர்.”[159]

இந்த நிலை இன்றும் காணப்படுவதற்கான ஆதாரங்கள் உள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர், இலங்கை இதழியல் கல்லூரி, மாகாண ஊடகவியலாளர்களின் தேவைகள் குறித்த மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு, அதனடிப்படையில் குறுகியகால பயிற்சிநெறியை வடிவமைத்தது. விடியோ செய்தி வழங்கல், செய்தி சேகரிக்கும்போது கருத்தில் கொள்ளவேண்டிய ஒழுக்கவிதிகள். வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பு குறித்த ஆரம்ப திறன்கள் போன்றவற்றில் பயிற்சி வழங்குவது உள்ளடக்கப்பட்டிருந்தது.

மாகாண ஊடகவியலாளர்களின் திறனை அதிகரிப்பதும், அவர்களுடைய தொழில்சார் தன்மையை அதிகரிப்பதும் இலங்கையில் ஊடகச் சீர்திருத்தங்களுக்கு அவசியமானவை. எனினும், மாகாண ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கான தொழில்துறை சார்ந்த, திட்டமிடப்பட்ட அணுகுமுறை எதுவும் காணப்படவில்லை. இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. ரங்க கலன்சூரிய இவ்வாறு தெரிவிக்கின்றார், “இலங்கையில் மாகாண ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவது என்பது நிதி வழங்குவோர்

159 A Study of Media in Sri Lanka (excluding the North and East). April 2005. Centre for Policy Alternatives, Colombo. http://www.cpalanka.org/a-study-of-media-in-sri-lanka-excluding-north-and-east/

சம்பந்தமான அல்லது நிகழ்ச்சி நிரலை முதன்மைப்படுத்தியதாக காணப்படுகின்றது. பல செயலமர்வுகள் இடம்பெறுகின்றன. ஆனால், அவை அடிப்படைத் திறன் விருத்தி குறித்து கவனம் செலுத்தவில்லை. பல தசாப்தகால அனுபவங்களைக் கொண்ட பல ஊடகவியலாளர்களை நான் சந்தித்துள்ளேன், ஆனால், அவர்களுக்கு செய்தி சேகரிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய 'ஐந்து டபிள்யூக்கள், மற்றும் எச்' குறித்து எதுவும் தெரியாது. அடிப்படைக் கொள்கைகள் மற்றும் இதழியலின் அடிப்படைகள் குறித்த போதிய புரிந்துணர்வின்மை காரணமாக, ஊழல்கள் போன்ற விடயங்கள் பொதுவானவையாக காணப்படுகின்றன.''

சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் ஊடகக் கல்வி தொடர்பில் போதிய வாசிப்பு நூல்கள் காணப்படாததன் காரணமாக பயிற்சி மற்றும் சுய கற்றல் என்பதும் பாதிக்கப்படுகின்றது.

ஆங்கில மொழி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சி

இடைக்காலப் பயிற்சிகள் மூலமாக பிராந்திய மட்ட மற்றும் ஊடகத் தலைமை அலுவலகங்களில் உள்ள பல ஊடகவியலாளர்களால் ஆங்கில மொழி, கணினி பயிற்சி, மற்றும் புதிய ஊடகத் திறன்கள் குறித்த பயிற்சிகளைப் பெற முடியும். இந்தத் தேவைப்பாடுகள் குறித்த மதிப்பீட்டறிக்கை மூலம், இப்பயிற்சிகளின் வரையறைகள் குறித்துத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

## பரிந்துரைகள்

- தொழிற்துறையின் தேவைகளுக்கும், வழங்கப்படும் பயிற்சிகளுக்கும் இடையில் தற்போது காணப்படும் இடைவெளி அல்லது பொருத்தமின்மை பற்றிய ஆய்வு அவசியம். இதன் மூலமாக இனிவரும் காலங்களில் மிகவும் பொருத்தமான பயிற்சிகளை வழங்கும் உத்திகளை வகுத்துக் கொள்ளலாம். அதேவேளை, ஊடக உள்ளடக்கத் தயாரிப்பிலும் நுகர்விலும் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இலங்கை ஊடக முகாமையாளரகளும், ஊடகவியலாளர்களும் அவற்றிற்கேற்ப தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அரசாங்கமும் அபிவிருத்தி நிதியுதவியாளர்களும் மத்திம காலத்திற்குரிய (05 வருடங்களுக்கான) ஊடகப் பயிற்சிசார் உத்தித் திட்டமொன்றுக்கு ஆதரவு தந்து உதவ வேண்டும்.
- ஊடகத்துறை அபிவிருத்திக்கான சிறந்த தொழில்வாண்மை மற்றும் மனிதவள அபிவிருத்தியின் பெறுமதியை ஊடக நிறுவனங்கள் இனங்காண வேண்டும். இதன் ஒரு பகுதியாக, ஊடக நிறுவனங்கள் சேவையின் போதான பயிற்சிகளுக்கு (ஊடக நிறுவனங்குள்ளான பயிற்சிகளாக அவை அமையவேண்டிய அவசியமில்லை) - ஊடக, ஆசிரியர்பீட, முகாமைத்துவ விசேட பயிற்சிகள் உட்பட, முன்னுரிமை வழங்கவேண்டும்.

- ஊடக நிறுவனங்கள் தம் மனிதவளம் தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்ய வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு தொடர்கல்வி அவசியம் என்பது உணரப்படவேண்டும். சம்பள உயர்வு மற்றும் பதவியுயர்வு என்பன தர்க்கரீதியாகவும், வெளிப்படையாகவும் இடம்பெறுவதோடு, அறிவு மற்றும் புதிய திறன்கள் பெறல் என்பவற்றோடும் அவை தொடர்புபடுத்தப்பட வேண்டும்.

- ஊடக நிறுவனங்கள், அரசு மற்றும் சர்வதேச உதவி வழங்குவோர் - தற்போது ஊடகப்பயிற்சிகளை வழங்கும் இலங்கை இதழியல் கல்லூரி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் என்பவற்றிற்கு பண வசதியற்றவர்கள் தரமான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளுமான வகையில் உதவிகள் வழங்கவேண்டும். அதேபோல், மேலும் அதிகமான ஊடகப் பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் அளிக்க நிதி வழங்குவதோடு, ஊடகம் தொடர்பான பாடநூல்களையும் உள்ளூர் சார்ந்து தயாரிக்க வேண்டும். அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட நம்பிக்கை நிதியம் இவற்றை பாராளுமன்றத்தின் உதவியுடன், ஆசிரியர்பீடச் சுதந்திரதிதிற்குப் பங்கம்வராமல் மேற்கொள்ளலாம்.

- பிரேரிக்கப்படும் ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தும் செயற்பாடான, புதிய ஒலி-ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை மூலமாக, அனுமதிப்பத்திரம் பெற முனையும் ஊடகங்கள், தம் ஊடகவியலாளர்களுக்கு நிறுவனம் சார்ந்தோ அல்லது பயிற்சி வழங்கும் மையங்கள் வழியாகவோ குறித்த மட்டங்களில் பயிற்சி வழங்குதல் அவசியம் என்பதை அமுல்படுத்தல்.

- இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், நிதியுதவியாளர்கள், ஊடக நிறுவனங்கள். சர்வதேச பரிந்துரை அமைப்புக்கள் துணையுடன் ஊடகவியலாளர்களின் திறமையை வளர்க்க வேண்டும். இது, இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தை ஊடக மறுசீரமைப்பை அமுல்படுத்தும் தளமாக மாற்றவேண்டும்.

4.02 வர்த்தக முகாமையாளர்கள் உட்பட ஊடக முகாமையாளர்கள், தங்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்தல்.

ஊடக நிறுவனங்கள் இரண்டு வகையான முகாமைத்துவத்தைக கொண்டுள்ளன. வர்த்தக முகாமைத்துவம் மற்றும் ஆசிரியர் பீட அல்லது செய்தியறை முகாமைத்துவம். தற்போதுள்ள ஊடகப் பயிற்சிநெறிகள் இந்த இரு வகையான ஊடக முகாமையாளர்களின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதாக காணப்படவில்லை (மிக அதிகளவிற்கு ஆசிரியர் பீட உள்ளடக்கம் அல்லது நடவடிக்கைகளுக்கே கவனம் செலுத்தப்படுகின்றது).

இதன் காரணமாக, இலங்கையில் தொழில்சார் ரீதியில் பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் கல்வித் தகைமைகள் கொண்ட ஊடக முகாமையாளர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். அநேக நிறுவனங்கள் மூத்த ஊடகவியலாளர்களை அல்லது ஊடக ஒலி-ஒளிபரப்பாளர்களைப் பல வருட சேவைக்குப் பின் முகாமைத்துவ பதவிகளுக்கு தரம் உயர்த்துகின்றன. எனினும், இவர்கள் பலர் தந்திரோபாய திறன்கள் மற்றும் முகாமைத்துவ திறன்கள் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

சில எம்.பி.ஏ. (M.B.A - Masters in Business Administration) கற்கைநெறிகள் மற்றும் சந்தைப்படுத்தல் கற்கைநெறிகள் ஊடகத் தொழிற்துறையில் உள்ள முகாமைத்துவ சவால்களுக்கு பொருத்தமான விடயங்களைக் கொண்டுள்ளன. அவைகள் பயனுள்ளவையாக இருந்தாலும், போதுமானவை அல்ல. பயிற்சி நெறிகள் அல்லது எத்தனைபேர் பயிற்றுவிக்கப்பட்டனர் என்பது குறித்த தரவுகளும் எதுவும் இல்லை.

இலங்கை இதழியல் கல்லூரி, 2009 வரை, செய்தியறை முகாமைத்துவ கற்கைகளை வழங்கியது. அதற்கான தொழிற்துறைத் தேவையும் காணப்பட்டது. ஆனால், பயிற்றுவிப்பாளர்களை வெளிநாடுகளில் இருந்து வரவழைக்க வேண்டியிருந்ததால், செலவீனம் காரணமாக இதனைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது போனது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வெகுசன ஊடகத்துறை வெகுசன ஊடகத்தில் டிப்ளோமா மற்றும் முதுமாணிப் பட்டப்பின் படிப்புகளை வழங்குகிறது. இக் கற்கைநெறி ஊடகத் தொழிற்துறையினர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் வெகுசன ஊடகம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள உதவுகிறது. இக் கற்கைநெறி இடைநிலை ஊடக முகாமையாளர்களை இலக்காகக் கொண்டுள்ளது.[160]

இந்த ஆய்விற்காக நாங்கள் நேர்காணல் பெற்ற சில ஊடகத் தொழிற்துறையினர், இலங்கை ஊடக நிறுவனங்களில் தற்போது முகாமைத்துவப் பதவி வகிப்பவர்கள் ஊடக முகாமைத்துவப் பயிற்சி தொடர்பான தேவை இருப்பதை உணரவில்லை எனச் சுட்டிக்காட்டினர். ஏனெனில், பலர் செய்தியறை முகாமைத்துவம் குறித்து அறிந்திருக்கவில்லை. செய்தியறை

160 http://spc.cmb.ac.lk/?q=PG_Dip_MAinMass_Media

முகாமைத்துவம் என்பது ஊடக நிர்வாகம் மற்றும் வர்த்தக முகாமைத்துவத்தில் இருந்து வித்தியாசமானது.

### பரிந்துரை

- ஊடக நிறுவனங்கள், ஊடக முகாமைத்துவ திறனை விருத்திசெய்யுமுகமாக, தொழில்சார் ஊடக முகாமையாளர்களை ஆட்சேர்ப்பதிலும், பயிற்றுவிப்பதில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும்.

## 4.03 ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் ஊடாக ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி குறித்த விளக்கத்தை ஏற்படுத்தல்.

ஜனநாயகம், மனித உரிமைகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஊழல் ஆகியன எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டுள்ளன என்பது குறித்துப் போதிய அறிவின்மையும், புரிந்துணர்வின்மையும், கருத்துத்தெளிவின்மையும் ஒட்டு மொத்தமாக பல ஊடகவியலாளர்கள், மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் மத்தியில் காணப்படுகிறது. மேலும், ஆட்சி புரியும் ஸ்தாபனங்கள் மற்றும் பலப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஊடகங்களின் பங்களிப்பையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை (18 ஆம் பெட்டியைப் பார்க்க).

மேலே 4.1 இல் குறிப்பிட்டது போல - அரச, அரசசார்பற்ற மற்றும் ஐ.நா. வின் அமைப்புகள் போன்றவற்றால் ஏற்பாடு செய்யப்படும் கருப்பொருளை மையமாகக் கொண்ட குறுகிய காலச் செயலமர்வுகள் இவற்றுக்கு ஓரளவு தீர்வு காண்கின்றன. ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் போன்ற அமைப்புகள் ஆட்சி விவகாரங்களில் ஊடகங்களின் திறமையை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளன. உதாரணத்திற்குத் தகவல் உரிமையை பயன்படுத்துதல் மற்றும் புலனாய்வு

ஊடகவியல் போன்றவை.

சில அரசியல் காரணிகள் இவ்வாறு ஊடகங்களின் திறமையை வளர்ப்பதனை வரவேற்பதில்லை. உதாரணமாக, 2013- 2014 வருடங்களில், சில ஊடகப்பயிற்சிகள் - சிங்கள வன்தேசியவாத (தீவிரவாத) சக்திகள், மற்றும் பொலிஸ் தலையீடுகளைச் சந்தித்துள்ளன. ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் நிறுவனத்தால் தமிழ் மற்றும் முஸ்லீம் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்ட புலனாய்வு ஊடகவியல் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு மூன்று முறைகள் குழப்பப்பட்டது. இச் செயலமர்வு, இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைக்கு சாட்சிகள் வழங்க மக்களைப் பயிற்றுவிப்பதாக குற்றம் கூறப்பட்டது.[161] தேசிய மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நடத்திய வேறு சில ஊடகவியலாளர் பயிற்சிச் செயலமர்வுகளும் 'தேசியத்துக்கு எதிரான' நடவடிக்கைகளாக திரித்துக்கூறப்பட்டன.

## வகைக் கற்கை: ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்குப் போதிய தெளிவின்மை.

சர்வதேச அரசியல் மற்றும் இலங்கை மீதான அதன் தாக்கம் குறித்த புரிதலும், செய்திகளை வெளியிடுவதற்கான திறமையுமற்று இலங்கை ஊடகங்கள் இருப்பது ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் இலங்கை மீதான ஈடுபாடுகளை அவர்கள் செய்தியாக்கிய விடயத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிந்தது.

மார்ச் 2014 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட, எ/எச்.ஆர்.சி/25/1 என்ற, 'இலங்கையில் மனித உரிமைகளையும் நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறுதலையும் ஊக்குவிக்கும்' தீர்மானம் - ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் ஆணையாளரை, நல்லிணக்க மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவினால் ஆராயப்பட்ட காலப் பகுதியில், இலங்கையின் இரு தரப்பினரும் மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள், மற்றும் அதனுடன் தொடர்புபட்ட குற்றங்கள் தொடர்பான முழுமையான விசாரணையை மேற்கொள்ளுமாறும் அவ்வாறான மீறல்கள் குறித்த தகவல்களை, குற்றங்களை, தண்டனையில் இருந்து தப்பித்தலைத் தவிர்ப்பதற்கும் பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தமான நிபுணர்கள் மற்றும் விசேட செயற்பாடுகளுக்கான ஆணை பெற்றவர்களின் உதவியுடன் முன்னெடுக்குமாறும் கோரியது.[162]

இந்த ஆணையின் அடிப்படையில், மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் ஜெனிவாவைத் தளமாகக் கொண்டு, இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக விசாரணையை (OISL) மேற்கொண்டார்.

161 Transparency International condemns repeated intimidation at investigative journalism workshop. 10 June 2014 http://www.transparency.org/news/pressrelease/arbitrary_disruption_of_transparency_international_sri_lankas_investigative

162 http://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/OISL.aspx

163 http://www.ohchr.org/EN/HRBodies/HRC/RegularSessions/Session30/Documents/A_HRC_30_61_ENG.docx

2015 செப்ரம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் 30ஆவது அமர்வின்போது அதன் இரண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன:

- எ/எச்.ஆர்.சி/30/61: இலங்கையில் நல்லிணக்கம், மனித உரிமைகள், பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல் - மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் அலுவலக அறிக்கை.[163]
- எ/எச்.ஆர்.சி/30/சி.ஆர்.பி.2: இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கை (OISL).[164]

2014 – 2015 இல் இடம்பெற்ற இச் செயற்பாடுகள் குறித்து, இலங்கையின் ஒருசில ஊடகங்களே துல்லியமாகவும் சமநிலையிலும் செய்திகளை வெளியிட்டன. அரசாங்கங்களுக்கு இடையிலான செயற்பாடுகள் காணப்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பில் இலங்கை ஓர் உறுப்பு நாடு என்பதையும், அதன் சிக்கல்தன்மைகள் மற்றும் நடைமுறைகள் குறித்தும் பெரும்பாலான ஊடகங்கள் புரிந்துகொள்ளத் தவறியிருந்தன. ஐ.நா உடன் தொடர்புபட்ட ஸ்தாபனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் நடைமுறைகள் குறித்து, செய்தி அறைகளில் போதிய புரிந்துணர்வின்மையானது, தவறான கருத்துக்களையும்இ சந்தேகங்களையும், அச்சங்களையும் மக்கள் மத்தியில் உருவாக்குவதற்கே உதவுகின்றன.

ஊடகவியலாளர்கள் அநேகமாக இவ்வாறான முக்கியமான மற்றும் உணர்வுபூர்வமான விடயங்கள் குறித்த புரிதல் இல்லாமல் செய்தி சேகரிக்கின்றனர். இது பொது மக்கள் மத்தியில் பெருமளவிற்கு குழப்பத்திற்கும் புரிந்துணர்வின்மைக்கும் வழிவகுக்கின்றது. நாட்டின் தற்போதைய அரசியல் நிலையைக் கருத்தில் கொள்ளும்போது, இலங்கையின் சர்வதேச மற்றும் அரசாங்கங்களுக்கு இடையிலான உறவுகள் குறித்தும், பல்வேறு மனித உரிமை உடன்பாடுகள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட உலக சமூகத்தின் பொறுப்புள்ள அங்கத்தவராக இலங்கையின் கடமைகள் பற்றியும் ஒவ்வோர் ஆசிரிய பீடத்தினதும் தகவற்திறனை அதிகரிக்கவேண்டியது அவசியம்.

164 http://www.ohchr.org/EN/HRBodies/HRC/RegularSessions/Session30/Documents/A_HRC_30_CRP_2.docx

இலங்கை முஸ்லீம் மீடியா ஃபோரத்துடனான கலந்துரையாடலின்போது (யூன் 8,2015) எம். எஸ். அமீன் ஹுசைன்- ஊடக பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆலோசகர், ஜாவீட் முனவ்வர் – உதவிப் பாருளாளர், மற்றும் தாஹா முசாமில்- துணைத்தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

- எங்கள் ஊடகவியலாளர்களுக்கு அறிவு, திறன் மற்றும் ஒழுக்கநெறி தொடர்பான பயிற்சி அவசியம். ஆனால், குறுகியகாலச் செயலமர்வுகள் மாத்திரம் மூலம் இதனை நிறைவேற்றமுடியாது. பயிற்சிகளுக்கு மேலும் முறையான அணுகுமுறை அவசியம். சில ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இப்பயிற்சிகளின் பெறுமதியை உணரவில்லை. எனவே நாம் அதனை அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

- ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி வழங்க நாம் எவ்வளவு முயற்சித்தாலும் சிலர் அவற்றை தமது உளம்சார் நடத்தைகளின் பேரில் விரும்புவதில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

- சில ஊடக உரிமையாளர்களும் ஊடகவியலாளர்களின் திறன்களை அதிகரிக்கும், ஊடகவியலின் தரத்தை மேம்படுத்தும் இவ்வாறான பயிற்சிகளை விரும்புவதில்லை. காரணம், ஊடகவியலாளர்களின் தரம் உயர்ந்தால் அவர்களது சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதனாலாகும்.

## பரிந்துரை

- இலங்கை ஊடக நிறுவனங்கள், சர்வதேச ஊடக அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து - ஜனநாயகம், ஆட்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான விளக்கத்தை பெறுமுகமாக, ஊடகவியலாளர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் வழங்க வேண்டும். இதன்போது, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் அடிப்படையில் அவற்றில் கையெழுத்திட்ட இலங்கையின் கடமைகள் தொடர்பான விடயங்கள் உள்வாங்கப்படல் வேண்டும்.

BOX 18

## சகல ஊடகவியலாளர்களும் அறிந்திருக்கவேண்டியது...

ஊடகங்கள் ஜனநாயகத்தின் முக்கிய பகுதியாகும். ஜனநாயகத்தை பரீட்சிப்பதற்கு முக்கியமானது மக்களின் பங்களிப்பு. மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதன் மூலமாக, ஊடகவியலாளர்களும் பாவனையாளர்களும் ஜனநாயக சமூகங்களைக் கட்டியெழுப்புதலில் ஊடகங்களினதும் இதழியலினதும் பங்களிப்பை இனங்காண்பர்.

யுனெஸ்கோ கூறுவது யாதெனில், இதழியல் கல்வி ஜனநாயகம் தொடர்பான முழுமையான புரிதலின் பேறாக வேண்டும் என்பதாகும். அனைத்து ஊடகவியலாளர்களும் பின்வரும் கோட்பாடுகளை அறிந்திருத்தல் வேண்டும்.

- பிரசித்த இறையாண்மை: சட்டரீதியான எல்லா அதிகாரங்களும் இறுதியாக மக்களிடமே உள்ளன.

- பொதுநலன் : ஒரு சமூகத்திற்கு எது நன்மையோ அதனைச் செய்தல் வேண்டும், மாறாக சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு நன்மையாக அமைவதை, மற்றவர்களைப் புறக்கணித்துவிட்டு செய்தல் கூடாது.
- அரசியலமைப்பியம் : ஓர் அரசாங்கத்தின் அதிகாரமும் வரையறைகளும் குறிப்பிட்டுச் சொல்லப்படுவது எழுதப்பட்ட அல்லது எழுதாத அரசியலமைப்பிலாகும். அரசியலமைப்பியம், சட்டம் தொடர்பான கருத்துக்களைக் கொண்டுள்ளது. ஓர் சட்டம் அரசியலமைப்போடு ஒத்திசையாதவிடத்து அச் சட்டம் தவிர்க்கப்படவேண்டும் என்பதை அரசியலமைப்பியம் கருத்திற்கொள்கிறது.

- சமநிலை: ஓர் சமூகத்திலுள்ள அனைத்து மக்களும் சமமாக கருதப்படவேண்டும் என்பது அனைவருக்குமான உரிமையாகும்.

- பெரும்பான்மையினர் அதிகாரம் / சிறுபான்மையினர் உரிமைகள்: பெரும்பான்மையினர் அதிகாரம் செலுத்துவதற்கான உரிமையானது, பெரும்பான்மையினருக்கள்ள அவ் உரிமைகளையும் ஆதாயங்களையும் சிறுபான்மையினரும் அனுபவித்தல் வேண்டும் என்பதால் கட்டுப்படுத்தப்படுகிறது.

- நீதி மற்றும் நியாயம்: சுமைகள் மற்றும் நன்மைகள் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானங்கள் எப்போதும் பக்கச்சார்பற்றவையாகவும் குறித்த குழுக்களைச் சார்ந்திராதவையாகவும் இருத்தல் வேண்டும். இவை நியாயம், அடிப்படை நியாயம் என்பவற்றைப்

பிரதிபலிப்பதனூடாகவே அவசியம் வருதல் வேண்டும்.

- பிரஜைகளுக்கான அரசியல் உரிமை: அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும், பொறுப்புள்ளதாக்கும் அதிகாரம் பேச்சு மற்றும் ஊடக சுதந்திரம் ஒன்றுகூடுதல், கூட்டம், பேரணி மற்றும் மனு அளித்தல் செய்வதற்கான உரிமம் மற்றும் திறந்த, சுதந்திரமான, நியாயமான தேர்தலில் வாக்களிக்கும் உரிமை ஆகிய அரசியல் உரிமைகளில் உள்ளது.

- சுதந்திரமான நீதித்துறை: தீர்ப்பு வழங்குதல் தொடர்பான உயர் தராதரங்களுக்கு அமைவாக நீதிமன்றங்கள் தீர்ப்புகளைப் பக்கச்சார்பின்றி வழங்குகின்றன. எனவே, நீதிமன்றங்கள் சுதந்திரமானவையாகச் அரசாங்க, சமூக நிறுவனத் தாக்கங்கள் அல்லது ஊழல் செல்வாக்குகள் இன்றிச் செயற்படுதல் வேண்டும்.

- இராணுவத்தையும் பொலிஸையும் சிவில் அதிகாரம் கட்டுப்படுத்தல்: இராணுவமும் பொலிசும் சிவில் அதிகாரக் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும்.

- அரசியல் போட்டி: வெவ்வேறு அரசியல் கட்சிகளும் குழுக்களும் சமூகத்தில் அதிகாரம் மற்றும் செல்வாக்கினைப் பெற போட்டியிட இயலுமாயிருத்தல்.

- அரசியல் மற்றும் சமூகப் பன்முகத்தன்மை: ஓர் சமூகத்தின் பல்வகைப்பட்ட ஆர்வங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்த பலவகையான மற்றும் மாற்று தகவல் மூலங்களும் ஊடகங்களும் காணப்படவேண்டும்.

- பயத்திலிருந்து விடுதலை பெறுதல்: நாடுகடத்தல், பயங்கரவாதம், துன்புறுத்தல், தமது தனிமைக்குள்ளான அரசு முகவர்களின் தலையீடு, தன்னிச்சையான – சட்ட விரோதமான தடுத்துவைப்பு முதலானவற்றிலிருந்து தம்மைச் சட்டரீதியாகப் பாதுகாப்பதற்கான தனிநபர் மற்றும் குழுக்களின் உரிமை

தகவல் மூலம்: ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கான குடியுரிமைக் கல்வி பயிற்சிக் கையேடு (யுனெஸ்கோ, 2009)
http://www.unesco.org/new/en/communication-and-information/resources/publications-and-communication-materials/publications/full-list/civic-education-for-media-professionals-a-training-manual/

BOX 19

# சிங்கள, தமிழ் மொழி ஊடகங்களின் தொழில்சார் தராதரத்தை உயர்த்துதல்

அச்சு ஊடகங்களில் (சிங்கள, ஆங்கில) பணியாற்றியவரும், பின்னர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாகக் பணியாற்றியவருமான கலாநிதி. ரங்க கலன்சூரிய பெப்ரவரி 2015 இல் கட்டுரையொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“ஆங்கில ஊடகங்களைப் போன்றில்லாமல் தமிழ், சிங்கள அரச மற்றும் தனியார் அச்சு ஊடகங்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றன. அவற்றை தொழில்சார் மற்றும் உரிமையாண்மை தொடர்பான சவால்கள் என பிரதானமாக இருவகைப்படுத்தலாம்.

“எனது கலாநிதி ஆய்வு, தமிழ் மற்றும் சிங்கள ஊடகங்களின் தொழில்சார் தராதரம் குறித்தே காணப்பட்டது. அச்சு ஊடகங்களில் காணப்படும் மோசமான தொழில்சார் தராதரம் என்பது இனப்பிரச்சினைக்கு முன்னரே தமிழ், சிங்கள பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களில் காணப்பட்ட ஒன்று என நான் வலியுறுத்த முயன்றேன். செய்தியறிக்கையிடுதல் பொதுவாக ஒரேயொரு தகவல் மூலத்தை அடிப்படையாக வைத்தே இடம்பெறுகின்றது, மாறுபட்ட கருத்துக்களை முன்வைப்பதன் மூலம் சிறந்த ஆய்வு மற்றும் இதழியல் திறமைகளை அது வெளிப்படுத்தவில்லை. “இதன் காரணமாக தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இதழியல் மரபுகளை, ஒழுக்கநெறிகளை அது மீறியுள்ளது. இன அடிப்படையிலான பல்வகைமைகளைக் கொண்டிராத ஆசிரியர் பீடங்கள் சமூகத்தில் இன அடிப்படையில் துருவமயப்படுத்தல் ஏற்படுவதற்கு மேலும் காரணமாக அமைந்துள்ளன. மேலும், இந்தத் தோற்றப்பாடு ஊடகங்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் நிலையையும், அவர்கள் என்ன அறிய வேண்டும் என்பதற்கு பதிலாக அவர்கள் என்ன அறிய விரும்பகின்றனர் என்ற நிலையையும் உருவாக்கியுள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் இந்தப் போக்கு தொடர்கின்றது.

“இந்த விடயத்தில் அச்சு ஊடகங்களை விடவும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள் சாதகதன்மையைக் கொண்டுள்ளன. அவை முழுமையான தொழிற்சார் தராதரங்களைக் கொண்டுள்ளன என்பது இதன் அர்த்தம் அல்ல. ஆனால், ஒரு விடயத்தைத் தெரிவிப்பதற்கு அதற்குக் குறுகிய காலமே காணப்படும் நிலையிலும், ஓரளவிற்கு தொழில்சார் தாரதரங்களைச் சிறப்பாகக் கையாள அவை முயற்சிக்கின்றன.

“இவ்வாறான பின்னணியில் இலங்கையின் தமிழ் மற்றும் சிங்கள பத்திரிகைகளுக்கு இந்தப் புதிய வாய்ப்பை பயன்படுத்துவதற்கான தொழிற்சார்

திறமையும், ஆழமான, ஆய்வுகளுடன் கூடிய விடயங்களைத் தருவதற்கான திறனும் இல்லை எனவும் நான் கருதுகிறேன். இவர்கள் இன்று ஒரேயொரு தகவல் மூலத்தை அடிப்படையாகவைத்து பல செய்திகளை, தகவலை அறிவதில் மிகுந்த ஆர்வம் உள்ள சமூகத்தின் இன்றைய சந்தைக்கு, நேற்றைய விடயங்களை வழங்குகின்றனர். இந்தக் காரணிகள் அதிகரிப்பதன் காரணமாக செயற்பாட்டுக்கும், இதழியலிற்கும் இடையிலான மெல்லிய கோடு அதிகளவிற்கு மறைந்துபோகின்றது. தேசப்பற்று என்பது தொழில்சார்தன்மையை விஞ்சுகின்றது. சில வேளைகளில் இந்தக் குறிப்பிடத்தக்க வாதம், ஆங்கில இதழியலின் சில பகுதிகளுக்கும் பொருந்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

“எனினும் இந்தச் சூழ்நிலை இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமானது அல்ல. எந்த அபிவிருத்தியடைந்து வரும் நாட்டினதும் உள்ளூர் மொழிப் பத்திரிகைகளின் நிலை, குறிப்பாகத் தொழில்சார் தராதரங்களை ஒப்பிடும்போது, இவ்வாறானதாகவே காணப்படக்கூடும். இந்தியாவில் இது அதிகளவிற்குத் தேசியவாதமாகவும், பாகிஸ்தானில் அடிப்படைவாதமாகவும் தொழில்சார்தன்மையை விஞ்சியதாகக் காணப்படுகின்றன. போதிய அனுபவமின்மை, தகுதிவாய்ந்த மனித வளங்களைக் பாதிக்கக்கூடிய மோசமான பணியிட நிலைமைகள், மொழித் தடைகள், போன்றவையே இந்த நிலைமைக்கான சில காரணங்களாகும், பாரிய நிறுவனங்களின் உரிமையாளர்கள் இந்தப் பலவீனத்தைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மற்றும் வேறு இலக்குகளை அடைய முயலக்கூடும்,

“இலங்கையின் சிங்கள, தமிழ் ஊடகங்களின் தராதரத்தில் அனைத்து நிலைகளிலும் நாங்கள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். ஊடகவியலாளர்களினதும் அவர்களை கட்டுப்படுத்துபவர்களினதும் தரத்தினை அதிகரிக்கவேண்டும். அதற்கு சமாந்தரமாக, நாட்டிற்குப் பயனுள்ள செயற்திறன் மிக்க ஒழுங்குபடுத்தல் பொறிமுறை அவசியம். அது அனைத்து தொழில்சார் தராதரங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதாகக் காணப்படவேண்டும்.”

தகவல் மூலம் - டெய்லி மிரர், 27 பெப்ரவரி 2015

http://www.dailymirror.lk/64923/pm-ranil-kick-starts-focus-on-media-protocol






s காணொளிப் பயிற்சி வகுப்பு - புகைப்படம் : பேர்ட்ரம் நிஹால்

t தொலைக்காட்சி ஊடகவியலாளர்களுக்கான உள மற்றும் உடற்பயிற்சிக்கான வெளிக்கள நிகழ்ச்சி - புகைப்படம் : **SLRC**





s **MRTC,** யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒலி-ஒளிபரப்பு தயாரிப்பு பயிற்சி - புகைப்படம் : ஊடக உதவி

t **MRTC,** யாழ்ப்பாணத்தில் வானொலி நேர்காணல் பயிற்சி - புகைப்படம் : www.mediahelpingmedia.com

ஆ

# ஊடகச் செயற்பாடுகள் குறித்த கல்விசார் கற்கைநெறிகள்

"இலங்கையின் ஊடகத் தொழிற்துறை இதழியல் துறைக்கான சர்வதேச தராதரம் இன்றிக் காணப்படுகிறது. அதாவது, துல்லியத்தன்மை, பக்கச்சார்பின்மை மற்றும் பொறுப்புணர்வு. இவற்றிற்கு நாட்டின் இதழியல் கல்வி அல்லது அவ்வாறான ஒன்று இல்லாமையே நேரடியான காரணம் எனத் தெரிவிக்கமுடியும். வெகுஜன ஊடகங்கள் எங்கள் சமூகத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளதைக் கருத்திற்காள்ளும்போது, வலுவாக கட்டமைக்கப்பட்ட இதழியல் கல்விக்கான தேவை முன்னர் எப்போதையும் விட அதிகமாக காணப்படுகின்றது."

- கலாநிதி. பிரதீப் என் வீரசிங்க,
வெகுசன ஊடகக் கற்கைளுக்கான சிரேஷ்ட விரிவுரையாளர்,
வெகுசன ஊடகக் கற்கைகள் துறை,
கொழும்பு பல்கலைக்கழகம் (ஸ்ரீபாளி வளாகம்)

"பல வருட உள்நாட்டு யுத்தம் மற்றும் இனங்களுக்கிடையிலான துருவமயப்படுத்தல் காரணமாக அச்சமடைந்திருக்கும் நாட்டில் இதழியலின் பணி என்பது மிகவும் முக்கியமானது. அரசாங்கத்தின் கடமைகள் மற்றும் அதன் தோல்விகளை ஊடகங்கள் சுட்டிக்காட்டவேண்டும். மேலும் - மாணவர்கள், ஊடகவியலாளர்கள், குறிப்பாக சிவில் சமூகத்தினருக்கு வழிகாட்டுதல்களை வழங்கவேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கு ஊடகக் கல்வி முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது."

- கலாநிதி எஸ். ரகுராம்,
பீடாதிபதி,
தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் பீடம்,
திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

"இலங்கையின் அரசியல் நெருக்கடி ஊடகக்கல்வியின் கருத்தாடல் மீது பாரிய சூழமைவுத் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. இந்த விடயத்தில் சட்ட மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சூழலில் இலங்கையின் சீர்திருத்தவாதிகள் செய்யக்கூடிய விடயங்களுக்கு எல்லைகளுண்டு. சுட்டிக்காட்டப்பட்ட பல சிக்கல்கள், நீண்ட கால கல்வச்சீர்திருத்தங்களின் மூலம் மட்டுமே தீர்வைக் காணக்கூடிய பரிமாணங்களைக் கொண்டுள்ளன. உதாரணத்திற்கு, ஊடகத் தொழிலில் காணப்படும் பாலினம் குறித்த உணர்வின்மையையோ அல்லது இன அடிப்படையிலான பக்கச்சார்பையோ ஒரே இரவில் மாற்றிவிடமுடியாது. சமகால சீர்திருத்த முயற்சிகளின்போது இனங்காணப்பட்டது போன்று அடிப்படை மாற்றங்களுக்கு எதிர்கால ஊடகவியலாளர்களும், ஊடகப்பணியாளர்களும் உருவாக்கப்படும் வகுப்பறையில் மாத்திரமே தீர்வைக்காணமுடியும்."

- கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன மற்றும் ஜெஹான் குணதிலக,
Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015)

## 4.04 கல்விசார் கற்கைநெறிகள் பல தரப்பட்ட மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடியதாயிருத்தல்

வெகுசனத் தொடர்பாடல் என்பது, 1973 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் நிலை அளவில் கற்பிக்கப்பட்டு வருகிறது. அந்த ஆண்டிலேயே, களனி பல்கலைக்கழகம் நாட்டிலேயே முதற்தடவையாக, இத்துறையில், தனது பட்டப்படிப்பை ஆரம்பித்தது. இன்று மாணவர்களுக்கு முழுநேர மற்றும் பகுதிநேரக் கற்கைநெறிகள் பல காணப்படுகின்றன. எனினும், இங்கு முக்கிய விடயம் என்பது அவற்றின் தராதரமும், ஊடகத் தொழிற்துறைக்கு அவை பொருத்தமானவைதானா என்பதுமே.

இதழியல், வெகுசனத் தொடர்பாடல் மற்றும் வெகுசன ஊடகக் கற்கைநெறிகள் பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு அளவில் வழங்கப்படுகின்றன. பல டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளும் காணப்படுகின்றன.

- களனி பல்கலைக்கழகத்தின் வெகுசனத் தொடர்பாடல் துறை
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் இதழியல் பிரிவு
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தின் வெகுசன ஊடகத் துறை
- ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிங்களம் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் துறை
- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின்

சமூகக் கல்விக்கான துறை

- சப்ரகமுவ பல்கலைகழகத்தின் மொழிகள் துறை
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் ஊடகக் கற்கைகள்
- கிழக்குப் பல்கலைகழகத்தின் திருகோணமலை வளாகத்தின் மொழிகள் மற்றும் தொடர்பாடல் துறை
- தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூகவிஞ்ஞானத் துறை
- ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறை

பட்டப்படிப்பு அளவில் வழங்கப்படும் பல்கலைக்கழகக் கல்வி என்பது, அரசாங்கத்தினால் மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி, இலவசமாக வழங்கப்படுகின்றது. பட்டப்பின்படிப்பு அளவில் கட்டணங்கள் அறவிறப்படுகின்றன. இவற்றில், தமது தொழில்சார் எதிர்காலத்தை வளப்படுத்தும் என, ஒவ்வொரு ஆண்டும், நூற்றுக்கணக்கான மாணவர்கள் நம்பிக்கைவைத்து பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

பொதுவாக இக்கற்கைநெறிகளில் காணப்படும் அம்சம் யாதெனில், இவற்றில் ஊடக நிறுவனங்கள் தொடர்பான மெய்மைநிலைகள் மற்றும் பயிற்சி மற்றும் பிரயோகச் செயற்பாடுகள் குறித்த போதிய உள்ளடக்கங்கள் இன்மையாகும்.. பல்கலைக்கழகங்கள் சமூகவியல் சார்ந்த வெகுசனத் தொடர்பாடல் கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. இவற்றைக் கற்பதால், ஊடகத்துறை எதிர்பார்க்கும் அடிப்படைத் தொழிற்திறன்கள் சார்ந்த அறிவு மாணவர்களிடம் விருத்தியடையாது.

முற்காலத்தில், பிரயோகச் செயற்பாடுகள் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் (ஒலி-ஒளி உள்ளடக்கத் தயாரிப்பு) காணப்படவில்லை என்பதால், வெகுசனத் தொடர்பாடல் கோட்பாடுகளைக் கற்பிப்பது அதிகமாகக் காணப்பட்டது. ஆனால், தற்போது பல்கலைக்கழகங்களில் தேவையான டிஜிட்டல் ஊடகத் தயாரிப்புக் கூடங்கள் உட்பட உபகரணங்கள், வசதிகள் காணப்படுகின்றன.

கருத்துநிலை வேறுபாடுகளும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகிறது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் அநேகமானவர்கள், ஊடக தொழிற்துறையில் தொழில்ரீதியிலான நேரடி அனுபவம் அற்றவர்கள் என்பதும் இதற்கு ஒரு காரணம். மேலும், அநேக பல்கலைகழகங்கள் இதழியலிற்கு பதிலாக வெகுசனத் தொடர்பாடல் குறித்தே கவனம் செலுத்துகின்றன என்பதும் இன்னொரு தடையாக காணப்படுகின்றது. சில புறநடைகள் தவிர்த்து, இதழியலில் உரியவிதத்தில் அனுபவத்தகுதிகளைக் கொண்ட, ஆசிரியர் பீட அனுபவங்களைக் கொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் இலங்கையில் குறைவாகவே காணப்படுகின்றனர்.

மாறாக, பலவருட தொழிற்துறை அனுபவத்தைக் கொண்ட பல ஊடகவியலாளர்கள் முழுமையான அல்லது பகுதிநேர பல்கலைக்கழக ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கான முறைப்படியான கல்வித்தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை. பல்கலைக்கழக நிர்வாகம் எப்போதும் உயர் தகைமைகளையே (பட்டம்) வலியுறுத்துகின்றது. அது, பல்கலைக்கழக ஆசிரியர்களாகப் பணியாற்ற விளைபவர்கள், செய்தியறையில் பல வருட அனுபவத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்பதைக் கருத்திற்கொள்ளவில்லை. இது, பல்கலைக்கழகங்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்கின்றது.

2012 இல் ஆய்வாளர்களான, கிஷாலி பின்ரோ ஜயவர்த்தனவும், ஜெஹான் குணதிலகவும், இலங்கையில் மூன்றாம் நிலை இதழியல் கல்வி மற்றும் வெகுசன ஊடகக் கல்வியின் பாடத்திட்டங்கள் குறித்து ஆய்வொன்றை நடத்தினர். அதில் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர், "வழங்கப்படும் பயிற்சிகளுக்கும் யதார்த்தத்தில் ஊடகங்கள் செயற்படும் விதத்திற்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவதன் காரணமாக, இலங்கையில் ஊடகக்கல்வி பலவீனமான நிலையில் உள்ளது என்பது பொதுவான ஓரு கருத்தாகக் காணப்படுகின்றது. ஊடகப் பயிற்சியானது ஒழுக்கநெறிகள், கொள்கைகள் மற்றும் தொழில்சார் ஒழுக்கக் கோவையைப் பின்பற்றுதல் என்பவற்றில் கவனம் செலுத்தல் வேண்டும் எனும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. இந்த நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற பயிற்சிகள் ஒழுக்கத் தாரதரங்களை முன்னிறுத்துவதில் சிறிதளவு பங்களிப்பு வழங்குகிறது என்பது குறித்து பரந்துபட்ட இணக்கப்பாடு காணப்படுகின்றது."[165]

இந்த இடைவெளிக்கான காரணங்கள் பல உள்ளன,

- இதழியலில் தகுதிபெற்ற ஆசிரியர் பீட அனுபவமுள்ள போதியளவு பலகலைக்கழக ஆசிரியர்கள் இன்மை.
- பல்கலைக்கழகங்களில் காணப்படும் காலத்தால் பிந்திய பாடத்திட்டங்கள் (தற்போதைய சூழ்நிலையை விட ஒன்றிரண்டு வருடங்கள் பின்தங்கியிருப்பதற்குப் பதில், பாடத்திட்டங்கள் ஒரு தலைமுறை இடைவெளியால் பின்நிற்கின்றன).
- ஊடக தொழிற்துறைக்கும் கல்வித்துறையினருக்கும் இடையிலான தொடர்புகள் இன்மை (இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பழமைவாதப்போக்கு காரணமாயிருக்கலாம்).

165 Media Education: A Curricular Review, by Kishali Pinto-Jayawardena and Gehan Gunatilleke, in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 245-266

BOX 20

## இதழியல் கல்விசார் கற்கைநெறிகளை மதிப்பிடுதல்

இலங்கையில் இதழியல் கல்வி வழங்கும் உயர்கல்வி நிறுவனங்களை மதிப்பிட பின்வரும் தராதரங்களைப் பயன்படுத்தலாம்:

- இதழியலின் வளர்ந்துவரும் தேவைகளும் அதற்கான அடிப்படைத் திறன்களும் பாடத்திட்டத்தின் பொருத்தப்பாடும் (யுனெஸ்கோவின் மாதிரிப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு).
- கற்பிக்கும் ஆற்றல்: ஆசிரியர்கள் அறிவானவர்களா?, இதழியல் சமூகத்தில் சகபாடி அங்கீகாரம் காணப்படுகிறதா?
- நிறுவனத்தின் வெளியகத் தொடர்புகள், மக்கள் கண்ணோட்டமும் ஊடக நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்படுதலும்
- பட்டம் பெற்ற மாணவர்களது தொழில்பெறும் இயலுமை (அவர்கள் எங்கு வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்: ஊடக நிறுவனங்களிலா இல்லை வேறு இடங்களிலா).
- கற்பித்தல் தவிர்ந்த வேறு துணை நடவடிக்கைகள்: பொது விவாதம், இதழியல் ஆய்வுச் சஞ்சிகைகள், வெளியீடுகள்.
- கற்கைநெறிகளின் தொடர்ந்தியங்கும் தன்மை.
- எதிர்காலத் திட்டங்கள்.

### வட - கிழக்குப் பகுதிகளில் ஊடகக் கல்வியும் இதழியல் கல்வியும்

தமிழ் மற்றும் ஆங்கில இதழியலில் நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள், பிராந்திய வாசகர்களது தேவைகளை நிறைவேற்றுகின்றன. எனினும், இம் மாகாணப் பல்கலைக்கழகங்களில் ஊடகக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது மற்றைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் பிற்பட்டகாலங்களிலாகும்.

கலாநிதி எஸ். ரகுராம், பீடாதிபதி, தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் பீடம், திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், "இந்நிலைக்குக் காரணம் நீண்டகால யுத்தமும் அதன் தாக்கங்களுமேயாகும். ஒட்டுமொத்தக் கல்வியும் குழப்பப்பட்டது. பிராந்திய ஊடகங்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் இயங்கின" எனக் கூறுகிறார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஊடகவியலாளர்கள் அதிக இலாபம் ஈட்டவில்லை. இதழியல் என்பது ஆபத்தான மற்றும் குறைவான சம்பளம் வழங்கப்படும் ஓர் தொழிலாகும். பொதுவாக, தமிழ் குடும்பங்கள்இ தங்கள் பிள்ளைகள் தரமான சம்பளம் வழங்கப்படும் தொழில் புரிவதையே ஊக்குவித்தனர். மாறாக, சிக்கல் நிறைந்த

ஊடகத் துறையில் நுழைவதை அவர்கள் விரும்பவில்லை. அரச தொழில் புரியவேண்டும் என்ற தமிழ் குடும்பங்களின் பாரம்பரிய மனோநிலை ஊடகக் கல்வியைத் தடுத்தன.”

வடக்கு - கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களும் கல்விச் சமூகத்திலிருந்து தகுதியான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றன. அதேவேளை, கலாநிதி. எஸ். ரகுராம் கூறுகிறார், “அனுபவம் வாய்ந்த பல ஊடகவியலாளர்கள் சேவையாற்ற விரும்பியபோதிலும் நிர்வாகத் தடைகள் அதற்குக் குந்தகமாக உள்ளன. ஊடகத் தொழில்வாண்மையாளர்களை பல்கலைக்கழகங்கள் சேவைக்கமர்த்துவதில் காணப்படும் தடைகளில் ஒன்று, குறைந்த சம்பளம். பட்டம் பெற்றவர்களுக்கும் தொழில்சார் அனுபவம் பெற்றவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டை பல்கலைக்கழகங்கள் நியாயப்படுத்த முடியாது.”[166]

[166] Media Education and the Tamil Community: A View from the North and the East, by S Raguram in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 267-280

நாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புலனாய்வு இதழியலைக் கற்பிக்கின்றோம். ஆனால், ஊடகவியலாளர்களிடம் புலனாய்வு இதழியல் தொடர்பான அறிவு மற்றும் விளக்கம் இல்லை என்பது வெளிப்படை. இது, ஊடகவியலாளர்களுக்கு சேவைக்கால அல்லது தொழில்சார் பயிற்சி அவசியம் என்பதைக் குறிப்பிடுகிறது. ஊடக நிறுவனங்கள் தம் ஊழியர்களது விசேட திறன்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை. பலர் புலனாய்வு இதழியலை ஓர் பிரச்சினையாகக் கருதுகின்றனர். இதனை மாற்றமுடியுமெனில், எமது ஊடக உள்ளடக்கங்களில் முன்னேற்றத்தைப் பார்க்கலாம்.

இலங்கையின் வடக்கு மற்றும் தெற்கு ஊடக நிறுவனங்களுக்கு இடையில் பரிமாற்றங்கள் மற்றும் இணைப்புகளை நாம் ஊக்குவிக்கவேண்டும். மொழிசார் தடை இவ்வாறான தொடர்புகள் குறைவாகக் காணப்படுவதற்கான ஒரு காரணம். ஆனால் தனிப்பட்ட பரிமாற்றங்கள் நிகழ்வது எனக்குத் தெரியும். பல்கலைக்கழக மாணவர்களை நாம் கொழும்பு ஊடக நிலையங்களுக்கு அழைத்துச் செல்கிறோம். ஆனால் வடக்கு மற்றும் தெற்கு ஊடகவியலாளர்களுக்கிடையிலான தனிப்பட்ட மற்றும் தொழில்சார் உறவுகளை நாம் விஸ்தரிக்கவேண்டும், அதனை நிறுவனமயப்படுத்தவேண்டும்.”

-கிருத்திகா தர்மராஜா,
ஊடகக் கற்கைகள் விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
-வண. பிதா. ரூபன் மரியாம்பிள்ளை,
வருகைதரும் விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பரிந்துரைகள்

- உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதனோடிணைந்த பங்குதாரர்கள் ஒன்றிணைந்து - இதழியல், வெகுசன ஊடகங்கள் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் தொடர்பான பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களை மீளாய்வு செய்தல் வேண்டும். அறிவு திறன் மற்றும் வளம்சார் இடைவெளிகளை இனங்கண்டு பாடத்திட்ட மறுசீரமைப்புச் செய்தல் வேண்டும். இதன் மூலம் இதழியல் கல்வி புலமைசார் சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாகவும், ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பதாகவும் அமையும்.

- உயர்கல்வி நிறுவனங்களும் ஊடக பயிற்சி நிறுவனங்களும் இலத்திரனியல் கற்கைநெறிகள் மற்றும் இணையம் சார் கற்றல் வழிமுறைகள் உள்ளடங்கலாக, புதிய கற்றல் - கற்பித்தல் முறைகளை உள்வாங்க வேண்டும். மாணவர்கள் வரும் காலங்களில் கணினி மூலமான இதழியல் கற்கைநெறிகளைக் கற்க இயலுமாயிருத்தல் வேண்டும்.

- பல்கலைக்கழகங்களும் ஊடகப் பரிந்துரைக் குழுக்களும் இணைந்து, இலங்கையை பின்னணியாகக் கொண்ட, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இதழியல் தொடர்பான பாடநூல்களைத் தயாரிக்க வேண்டும். சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறமொழிப் புத்தகங்களின் தழுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படலாம். இவை எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக, இலத்திரனியல் புத்தகம் போன்ற வடிவங்களிலிருத்தல் வேண்டும்.

- இதழியல் கற்பிக்கும் / பயிற்சிகள் அளிக்கும் பல்கலைக்கழகங்கள் தம் துறைசார், நிறுவன அபிவிருத்தி தொடர்பான நீண்டகாலத் திட்டங்களை உருவாக்க வேண்டும். உதாரணமாக - வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இதழியல் கல்வி வாய்ப்பு, தெற்காசிய மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் கூட்டாக இணைந்து ஆராய்சிகள் மேற்கொள்ளல் மற்றும் நடப்பு இதழியல் விடயங்கள் தொடர்பான மாநாடுகள் நடாத்துதல் போன்ற தந்திரோபாயங்கள்.

- இதழியல் / வெகுசன ஊடகக் கல்வி கற்பிக்கும் பல்கலைக்கழகங்கள் ஊடக நிறுவனங்களுடனான உறவுகளை வலுப்படுத்தவேண்டும். இதன் மூலமாக ஊடகத்துறையில் உள்ள பயிற்சி வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வது, ஊடகத்துறைக்கு புலமைசார் பங்களிப்பு வழங்குவது என இரு தரப்புக்களும் தம் வளங்களைப் பரிமாற்றிக்கொள்ள முடியும்.

## 4.05 கல்விசார் கற்கைநெறிகள் மாணவர்களுக்கு ஜனநாயக அபிவிருத்தி தொடர்பான திறன்கள் மற்றும் அறிவினை வழங்குதல்

மேலே 4.4 இல் குறிப்பிட்டதுபோல், ஊடகத் தொழிற்துறையின் தேவைகளுக்கும், வழங்கப்படும் பயிற்சிகளுக்கும் இடையில் இடைவெளி அல்லது பொருத்தமின்மை காணப்படுகின்றது. வெகுசனத் தொடர்பாடல் அல்லது இதழியல் கற்கைநெறிகளின் பாடத்திட்டத்தில், ஜனநாயக அபிவிருத்தி தொடர்பான திறன்கள் மற்றும் அறிவினை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களும் இல்லை (18 ஆம் பெட்டியைப் பார்க்க).

பல்கலைக்கழகங்களும் மூன்றாம் நிலை கற்கைநெறிகளும் ஊடகங்களின் அரசியல் பொருளாதாரம் அல்லது ஜனநாயக ஆட்சியில் ஊடகங்களின் பங்களிப்பு தொடர்பில் கவனம் செலுத்தத் தவறிவிட்டன. சில பல்கலைக்கழகங்கள் பனிப்போர் கால வாதாட்டங்களைத் தாங்கிய பாடத்திட்டங்களையும், அபிவிருத்தி இதழியல் தொடர்பிலான பழைய கோட்பாடுகளையும் இன்னமும் கற்பிக்கின்றன. இவை நடைமுறை யதார்த்தத்திற்கேற்றாற் போல, தற்காலப்படுத்தப்படவில்லை. உதாரணமாக - புலனாய்வு இதழியல் மூலமாக அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும்தன்மையை விருத்திசெய்தல் என்பது இன்னமும் பாடத்திட்டங்களில் இடம்பெறாதிருத்தல். இக் கால நவீன இதழியல், அபிவிருத்திச் செயற்பாடுகளை அவ்வாறே ஏற்றுக்கொள்ளாமல், அபிவிருத்திச் செயற்பாடுகளை விமர்சிக்கும் பண்பைக் கொண்டுள்ளது. இத்தகைய மாற்றங்கள் இலங்கைப் பல்கலைக்கழகக் கற்கைநெறிகளில் பெருமளவில் அலட்சியப்படுத்தப்படுகின்றன.

கிஷாலி பின்ரோ ஜயவர்த்தனவும், ஜெஹான் குணதிலகவும், இலங்கையில் மூன்றாம் நிலை இதழியல் கல்வி மற்றும் வெகுசன ஊடகக் கல்வியின் 2012/2013 பாடத்திட்டங்கள் குறித்து நடத்திய ஆய்வின் தொகுப்பாக, “பரந்துபட்ட/ சுதந்திரமான ஓர் பாடத்திட்டம் இல்லை என்பதால், இலங்கையின் எதிர்கால ஊடகவியலாளர்கள் தம் தொழிலுக்கு பாதிப்புதரக் கூடிய அரச தலையீடுகள் பற்றி சிந்திப்பது, செயற்படுவது தடைப்படக்கூடிய நிலையுள்ளது. இது, எதிர்கால மறுசீரமைப்புக்களின் தரத்தில் தாக்கத்தைச் செலுத்தும். எனவே, கல்வி நிறுவனங்கள் தம் பாடத்திட்டங்களில் சமகால சட்டங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு பற்றிய தர்க்கரீதியான மதிப்பீடுகளை உள்வாங்கிக் கொள்ளவேண்டும் என்பது மிக உறுதியாகப் பரிந்துரைக்கப்படுகிறது. சிக்கலான விடயங்கள் பற்றிய இத்தகைய வெளிப்படையான உரையாடல்கள் ஊடகவியலாளர்கள் மறுசீரமைப்புக்களை அதிக வினைத்திறனுடன் ஏற்றுக்கொள்ளத் தூண்டும்.”

பாட அலகுகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான பொருத்தமின்மை பற்றி அவர்களும் கருத்துத் தெரிவித்தனர்:
“ஊடகச் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய நிலைப்பாடும் கவலைக்குரிய

ஒன்றாகவே உள்ளது. திருகோணமலை, யாழ்ப்பாணம், சப்ரகமுவ மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகங்களில் வெகுசன ஊடக மற்றும் வெகுசனத் தொடர்பாடல் கற்பிக்கும் விரிவுரையாளர்களுடனான நேர்காணலின்போது தெரியவந்த விடயம் யாதெனில், பல்கலைக்கழகங்களில் ஊடகச் சட்டம் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் தொழில்ரீதியாக சட்டத்தரணிகள் அல்ல. அவர்களுக்கு இச் சட்டங்கள் நடைமுறையில் எவ்வாறு பிரயோகப்படுகிறது போன்ற விடயங்கள் தெரியாது."[167]

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இதழியல், வெகுசன ஊடக மற்றும் வெகுசனத் தொடர்பாடல் தொடர்பான பெரும்பாலான பாடத்திட்டங்கள் முழுமையானவையல்ல. கிடைக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய, கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகத்தில் மட்டும் இதழியல் மற்றும் வெகுசனத் தொடர்பாடலுக்கு இடையே ஓர் கணிசமான சமநிலையைப் பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஜனநாயகத்தில் ஊடகங்களின் பங்கு தொடர்பாகக் கற்பிக்கப்பட்ட போதிலும் இவர்களது பாடத்திட்டங்களும் தரமுயர்த்தப்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் தவிர்ந்து இலங்கையில் உள்ள வேறு எந்தப் பல்கலைக்கழகங்களும் - புலனாய்வு இதழியல், ஊடகவியலாளர் பாதுகாப்பு, அச்சுறுத்தல் மற்றும் முரண்பாட்டு உணர்திறன் மிக்க ஊடகவியல் தொடர்பான கற்பித்தல்களை மேற்கொள்வதில்லை. கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான போதிய விளக்கம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் காணப்படவில்லை.

## பரிந்துரை

- பல்கலைக்கழகங்கள் - சர்வதேச ஊடக அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்குப் பொருத்தமான பாடத்திட்டங்களை உருவாக்கவேண்டும். இதன் மூலமாக மாணவர்கள் - ஜனநாயகம், ஆட்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கருக்களையும், அவற்றின் இடைத்தொடர்புகளையும் அறிந்துகொள்வர். அபிவிருத்தி இதழியல் கற்கையானது, அரச அபிவிருத்திச் செயற்பாடுகளை அவ்வாறே ஏற்காது அதனால் மக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி மதிப்பிடுபவையாகவும் இருத்தல் வேண்டும்.

167 Media Education: A Curricular Review, by Kishali Pinto-Jayawardena and Gehan Gunatilleke, in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 245-266

BOX 21

# இதழியல் கல்விக்கான பொருத்தமான பாடத்திட்டம்?

இதழியல் எவ்வாறு வெகுசனத் தொடர்பாடல் களத்துடன் அல்லது சட்டகத்துடன் பொருந்துகின்றது என்பதை விபரிப்பதற்கு பதிலாக, பாடத்திட்டமானது மாணவர்களை ஊடகத் தொழிலில் ஈடுபடுவதற்குத் தயார்படுத்தவேண்டும். இதழியல் குறித்த மிகத் தெளிவான வரைவிலக்கணம் - பொதுமக்கள் தொடர்பு, விளம்பரங்கள் மற்றும் ஏனைய விதமான தொடர்பாடல்கள் குறித்த படிப்பை உள்ளடக்கியிருக்கவில்லை.

பல்கலைக்கழகங்களில் இதழியல் கற்கை என்பது பொதுவாக மூன்று பாடத்திட்ட விருத்திக் கோடுகளை மையமாக வைத்து உருவாக்கப்படுகின்றது.

- இதழியலின் விதிமுறைகள், வழக்காறுகள், சாதனங்கள், தராதரங்கள் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பான விருத்திக் கோடு.
- இதழியல் துறையின் சமூக, பண்பாடு, பொருளாதார, சட்ட மற்றும் ஒழுக்க அம்சங்களை வலியுறுத்தும் விருத்திக் கோடு.
- உலக அறிவு மற்றும் ஊடகவியலாளர்களின் அறிவுசார் சவால்களை சந்திப்பதற்கான விருத்திக் கோடு.

இதழியல் துறையின் நடைமுறைகள் என்பது புலமைசார்ந்த ரீதியில் சவாலானது என்பதே பாடத்திட்டத்தின் அடிப்படை கருப்பொருளாகக் காணப்படவேண்டும். குறிப்பாக, ஊடகவியலாளர்கள் முன்னர் அறிந்திராத தகவல்களை மிகவும் துரிதமாகக் கிரகித்து, உரிய வலுவுடன் அதனை வெளியிடவேண்டும்.

இதழியல் பாடத்திட்டம், 'இதழியலின் அடிப்படைகள்' என அழைக்கப்படும் பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படவேண்டும். இவை, புலமை மற்றும் திறன்களை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டவை. இந்த அடிப்படைகள் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன,

- விமர்சனபூர்வமாக சிந்திப்பதற்கான ஆற்றல், கிரகித்தல், ஆராய்தல், ஒப்பிட்டு நோக்கல், மற்றும் அறிமுகமில்லாத விடயங்களை மதிப்பீடு செய்தல், ஏனையவர்களுக்குத் தெளிவுபடுத்துதல். மேலும், ஆதாரங்கள் குறித்த அடிப்படை அறிவு மற்றும் ஆராய்ச்சி முறைகள்.
- விபரிப்பு, விளக்க மற்றும் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தி தெளிவாக எழுதும் திறன்.
- உள்நாட்டு, சர்வதேச, பிராந்திய, பிரதேச அரசியல், பொருளாதார, பண்பாட்டு, மத மற்றும் சமூக நிறுவனங்கள் மற்றும் விவகாரங்கள் குறித்த அறிவு.
- நடப்பு விவகாரங்கள், விடயங்கள் குறித்த அறிவு, வரலாறு மற்றும் புவியியல் குறித்த பொது அறிவு.

தகவல் மூலம்: இதழியல் கல்விக்கான மாதிரிப் பாடத்திட்டம் - யுனெஸ்கோ, 2007 http://www.unesco.org/new/en/communication-and-information/resources/publications-and-communication-materials/publications/full-list/model-curricula-for-journalism-education/

# தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளின் பிரசன்னம்

**406** ஊடக பணியாளர்களுக்கு சுதந்திரமான தொழிற்சங்கங்களில் இணைந்து தங்கள் உரிமைகளை பயன்படுத்துதற்கான உரிமையுள்ளது.

இலங்கை அரசியலமைப்புச் சட்டமானது, தொழிற்சங்கங்களை ஏற்படுத்துவதற்கும் அதனை கூட்டுவதற்குமான உரிமையை ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் தொழிற்சங்கங்கள் காணப்படுகின்றன.

எனினும், பல்லாயிரக்கணக்கானோர் பணிபுரிகின்ற (ஊடகவியலாளர்கள், ஊடக முகாமையாளர்கள், ஊடகப் பணியாளர்கள்) இலங்கை ஊடகத் தொழிற்துறையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் சமமாகப் பகிரப்படவில்லை.

அரச ஊடகங்களில் (ஏஎன்சிஎல்/ லேக் ஹவுஸ், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி) தொழிற்சங்கங்கள் காணப்படுவதோடு அவை செயற்பாட்டுத்திறன் மிக்கவையாகவும் காணப்படுகின்றன. இந் நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் தொழிற்சங்கங்களைக் கொண்டுள்ளதோடு, அவை அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்தும் செயற்படுகின்றன. சில நிறுவனங்கள் தமக்கான விசேட தொழிற்சங்கங்களையும் கொண்டுள்ளன.

மாறாக, தனியார் நிறுவனங்கள் தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற அனுமதிப்பதில்லை. அந் நிறுவன ஊழியர்களும் தொழிற்துறை சார்ந்த அல்லது நாடளாவிய தொழிற்சங்க நடவடிக்கைகளில்

தொழிற்சங்கங்கள் எதிர்
ஆசிரியர்பீட சுதந்திரம்

சில நேரங்களில் தொழிற்சங்கங்கள் பரந்த நோக்கிலிருந்து விடுபட்டு குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி செயற்படலாம்.

சுமித் சமிந்த, சிரேஷ்ட ஆய்வாளர், தலைவர், அரசியல் பிரிவு – 'Verite Research', ஒவ்வொரு முறையும் அரசாங்கம் மாறும்போதும் ஊடக நிறுவனங்களில் நடைபெறும் விடயங்கள் பற்றி குறிப்பிட்டார். "ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சில நாட்களில் லேக்ஹவுஸ் நிறுவனத்தில், அதன் நிறுவனக் கட்டமைப்பில், தொழிற்சங்கத் தலைமைத்துவத்தில் மற்றும் அனுசரணையாளர் வலையமைப்புக்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படும். புதியதோர் அரசாங்கம் அமையப்போகின்றது என தேர்தல் முடிவுகள் கூறிய சில நிமிடங்களிலேயே, வெற்றிபெற்ற கட்சியின் முதன்மையான தொழிற்சங்கத் தலைவர்கள் - அப்போதைய ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளை அகற்றிவிடுவர். சில நேரங்களில் தாமாகவே தம்மைப் பதவிகளில் நியமித்துக்கொள்வர்." என அவர் கூறினார்.

தகவல் மூலம்: இலங்கை - சிங்களச் செய்திப் பத்திரிகைகளில் அரசியல் மற்றும் சித்தாந்தம்: அதிகாரமும் சிக்கல்களும் காணப்படும் பகுதி. சுமித் சமிந்த, 1 ஜுன் 2011. http://divergences.be/spip.php?article2534&lang=fr

ஈடுபட அனுமதிக்கப்படுவதில்லை.

ஊடகவியலாளர்கள் அல்லது ஊடகப் பணியாளர்கள் வழக்கமான தொழிற்சங்க நடவடிக்கைகளில் (கூட்டங்களில் பங்கேற்றல், ஒப்பமிடுதல்) பங்குபற்றியதற்காக, ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என்பன ஆவணப்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் லசந்த ருஹுணகே கலந்துரையாடலொன்றின்போது பின்வருமாறு கூறினார்: "எமது பெரும்பாலான ஊடகங்களில் நிர்வாகமும் ஆளணி முகாமைத்துவமும் இடம்பெறுவது சில சலுகைகள் மற்றும் தொடர்புகள் மூலமாகும். சில ஊடகவியலாளர்கள் இச் செயல்களால் மனமகிழ்ச்சியடைவதோடு தொழிற்சங்கங்களின் தேவையைக்கூட உணருவதில்லை. ஆனால் இத்துறையை தொழில்வாண்மைமிக்க தொழில்துறையாக்கிட இத்தகைய தொழிற்சங்கங்கள் அவசியம்."

"பதாதைகள் தாங்கிச் செல்லும், வாசகங்களை உரக்கச் சொல்லும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலிருந்து மீண்டு, ஊடக உரிமையாளர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தும்

நிலைக்கு நாம் நகரவேண்டும்.'' என அவர் கூறினார். இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தை இதற்கான தளமாக அவர் இனங்கண்டார்.

மாகாண ஊடகவியலாளர்களின் தேசிய குழுமத் தலைவர் காஞ்சன குமார ஆரியதாச கலந்துரையாடலொன்றின்போது பின்வருமாறு கூறினார்: "நாம் ஓர் குழுவாகக் கூடுவதில் பல இன்னல்களை எதிர்நோக்குகிறோம். எமது குழுவை ஓர் அமைப்பாக பதிவு செய்வது கூட அதிகாரவர்க்கத்தினரின் நடவடிக்கைகளால் மூன்று வருடங்களாகத் தடைப்பட்டது. மெதுமெதுவாக நாம் எமது தொழிற்சங்கத்தை உருவாக்கவேண்டும்.''

ஊடகத் தொழிற்சங்கங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்படுகிறது. சமூக, பண்பாட்டுக் காரணங்களுக்காக தொழிற்சங்க நடவடிக்கைகளில் பெண் ஊடகவியலாளர்களின் பங்குபற்றுகை மட்டுப்படுத்தப்பட்டதாவே காணப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற மதிப்பீட்டு அறிக்கையின்படி, "நிர்வாகத்தால் தண்டிக்கப்பட்டுவிடுவோம் என்ற அச்சத்தினால் இலங்கை ஊடகவியலாளர்கள் தொழிற்சங்கங்களில் இணைவதற்கு அஞ்சுகின்றனர். இதற்கு முக்கிய காரணம், தொழிற்சங்கங்கள் தம் நடவடிக்கைகளில் தலையிட்டு, தொழிலாளர்கள் மீது தமக்குள்ள கட்டுப்பாட்டைச் சீர்குலைத்துவிடும் என்ற எண்ணமேயாகும்.'' ஊடக நிறுவனங்களிலும், தொழில்சார் அமைப்புகளிலும் பெண்களின் அங்கத்துவம் குறைவாகவே காணப்படுகிறது. பெண் ஊடகவியலாளர்களும் தம் வீடுகளில் இரண்டு தடைப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவதாகக் கூறினர்: அவை - "பெண்ணியவாதிகள், தொழிற்சங்கவாதிகள்.''[168]

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் அண்மையில் ஓர் தொழிற்சங்கமாகப் பதிவுசெய்துகொண்டது. இத்தகைய தொழில்சார் சங்கங்கள் தம் அங்கத்தவர்களை வலுப்படுத்தும் என இவ்வமைப்பின் முகாமைத்துவம் நம்புகிறது.

168 Media and Gender in Sri Lanka: Part of the IFJ Media and Gender in Asia-Pacific Research Project. March 2015. http://www.ifj.org/fileadmin/images/Asia_Pacific/IFJ_AP/reports-etc/Gender_and_Media_in_Sri_Lanka

## பரிந்துரை

- அனைத்து ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களினதும் மற்றும் ஊடக தொழிலாளர்களினதும் அடிப்படை மனித உரிமைகளையும் அரசியலமைப்பு உரிமைகளையும் இனங்கண்டு அவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் முதலான அச்சங்களின்றி தம் விருப்பத்தின்படி தொழிற்சங்கங்களில் இணையவும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனுமதிக்கப்படவேண்டும்.

## 4.07 தொழிற்சங்கங்களும், தொழில்சார் அமைப்புகளும் தங்கள் தொழில்சார்பில் குரல் கொடுத்தல்

ஊடகவியலாளர்களையும் ஊடகத் தொழிலாளர்களையும் அவர்களது உரிமைகள் வலியுறுத்தப்படுவதற்காக பல தொழில்சார் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஒன்றுசேர்க்கின்றன.

அவையாவன:

- சுதந்திர ஊடக இயக்கம் (Free Media Movement - FMM)
- உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் (Sri Lanka Working Journalists Association - SLWJA)
- இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் (Sri Lanka Tamil Media Alliance - SLTMA)
- யாழ் ஊடக அமையம் (Jaffna Press Club - JPC)
- ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ∴போரம் (Sri Lanka Muslim Media Forum - SLMMF)
- ஊடகத் தொழிலாளர்கள் தொழிற்சங்கச் சம்மேளனம் (Federation of Media Employees Trade Union - FMETU) மற்றும்
- தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் (South Asian Free Media Association - SAFMA)

வேதனம், நன்மைகள் மற்றும் பணிநிலைமைகள் முதலானவை தவிர சில குழுக்கள் ஒட்டுமொத்த ஊடகத் துறையை பாதிக்கும் சில விடயங்களைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கின்றன. இவர்கள் முன்னெடுத்த சில எதிர்ப்புப் போராட்டங்களாக - பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அழுத்தங்களுக்கு எதிரான போராட்டம் மற்றும் ஊடகங்களில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை வேண்டிய ஆர்ப்பாட்டங்கள் என்பன அமைகின்றன.

முன்னைய ராஜபக்ஷ ஆட்சியின்போது (2005-2014), சில அமைப்புக்களின் தலைவர்களும் அங்கத்தவர்களும் தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள பெரும் பிரயத்தனம் செய்தனர். இலங்கையில் ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவை சர்வதேச ஊடக உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்களின்போது தொடர்ந்து பேசப்படும் விடயங்களாகும். அதேபோல், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பல ஊடக சங்கங்களையும் ஊடக சுதந்திர செயற்பாட்டாளர்களையும் தம் செயற்பாடுகளிலிருந்து பின்வாங்கச் செய்தன (மேலதிக தகவல்களுக்கு பெட்டி 3.14 ஐ பார்க்க).

2005 செப்டம்பர் 9 முதல் 11 வரை தொலங்கமுவயில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான அகில இலங்கை மாநாட்டின்போது ஓர் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. “இலங்கையில் ஜனநாயக, பன்முகத்தன்மை கொண்ட ஊடகப் பண்பாடு மற்றும் ஊடகங்கள்

மற்றும் இதழியலுக்கான சமூக மற்றும் தொழில்சார் உரிமைகளுக்கான ஒப்பந்தம்" என்பது, தற்போது 'தொலங்கமுவ பிரகடனம்' என அழைக்கப்படுகிறது. "இரண்டு வருட காலத்திற்குள் ஊடகவியலாளர்களின் தேசியப் பேரவைக்கான தீர்வை எட்டுவதற்காக SLWJA, FMETU, FMM, SLMMF மற்றும் SLTMA முதலான சங்கங்கள் ஒன்றிணைந்து ஊடகவியலாளர்களுக்கான தேசிய ஊடக அமைப்பினை உருவாக்கிட இவ் ஒப்பந்தம் செயற்படுகிறது. தேசிய ஊடகப் பண்பாட்டை உருவாக்குதலுக்கான சாத்தியப்பாடு மற்றும் ஊடகவியலாளர்களுக்கான தேசிய தொழிற்சங்கம் அமைத்தல் என்பன இதனுள் அடங்கும்."[169]
ஒரு தசாப்தம் கடந்த நிலையில் இதன் இலக்கு எட்டப்படாவிடினும், ஊடகத் தொழிற்துறைக்கான பெறுமதிவாய்ந்த இலக்காக இது காணப்படுகிறது.

கருப்பொருள் சார்ந்த நடவடிக்கைகளில் தொழிற்சங்கங்களும், ஊடக இயக்கங்களும் ஈடுபட்டுவருகின்றன. உதாரணமாக, 2006 இல், இலங்கையில் ஊடகங்கள் மற்றும் இதழியலில் பாலினச் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை ஊக்குவிக்க ஐந்து ஊடக அமைப்புக்கள் (SLWJA, FMETU, FMM, SLMMF மற்றும் SLTMA) இணைந்து செயற்பட்டன. இது 2014 ஜூலையில், தெற்காசிய ஊடக நேச வலையமைப்பிலிருந்து (South Asian Media Solidarity Network - SAMSN) பிராந்திய ஒப்பந்தமாகப் பெறப்பட்டது.

வெளியீட்டாளர்கள் மட்டத்தில், இலங்கை செய்திப்பத்திரிகைச் சமூகம் (Newspaper Society of Sri Lanka) - ஆறு முன்னணி ஊடக வெளியீட்டு இல்லங்களின் கூட்டணி - இலங்கையில் இதழியல் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பான உயர் தராதரங்களை ஊக்குவிக்கின்றது (இதனோடு ஒத்த அமைப்பு இலத்திரனியல் ஊடகங்களுக்கு இல்லை.) சமீபத்தில் இவர்கள் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கெதிரான அச்சுறுத்தல் தொடர்பில் குரல் எழுப்பினர். இவர்கள் ஏனைய ஊடகப் பரிந்துரைக் குழுக்களுடன் இணைந்து ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கெதிரான பக்கச்சார்பற்ற விசாரணையைக் கோரினர்.[170]

சமீபத்தில், ஊடகங்களில் உயர் தொழில்வாண்மையையும் ஒழுக்கநெறியிலான நடவடிக்கைகளையும் கோரி இளம் ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடினர். அவர்கள் "இளம் ஊடகவியலாளர்கள் சங்கம்" எனும் அமைப்பை உருவாக்கினர். இது முற்றிலும் தன்னிச்சையான, புரட்சிகரமான ஓர் அமைப்பாகும். இவ் அமைப்பு, மரபுரீதியான கட்டமைப்புக்களுக்கெதிராக மாற்றுக் குரல் எழுப்புகிறது. அதேவேளை இவர்கள் தம் சொந்தக் கோட்பாடுகளாலும் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் பெரும்பாலும்

169 Tholangamuwa Charter. http://mediareformlanka.com/tholangamuwa-media-charter-2005

170 The War Against Media Rages on. The Sunday Times, 6 July 2008. http://www.sundaytimes.lk/080706/News/timesnews0019.html

இலங்கை இதழியல் கல்லூரியின் பழைய மாணவர்களாகும்.

அனைத்து தொழில்சார் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களினதும் பாரிய பிரச்சினையானது, ஊடகவியலாளர்களின் வேதனம் குறைவாகக் காணப்படுவதும் அவர்கள் திருப்தியற்ற பணிநிலைமைகளில் பணிபுரிவதுமாகும். இது, ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகளாலும் வியாபாரிகளாலும் எளிதில் மூளைச்சலவை செய்யப்படுவதற்கு ஏதுவாக உள்ளது. சிந்தனையாற்றல் மிக்க எண்ணங்கள் இறுதியில் அதிக வேதனமும் நன்மைகளும் கிடைக்கும் விளம்பரங்களில் முடிவடைகின்றது

## பரிந்துரைகள்

- ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் தொழிலாளர்களின் வேதனக் கட்டமைப்பை ஊடக நிறுவன உரிமையாளர்களும் முகாமையாளர்களும் மீளாய்வு செய்து, வேதனத்தை அதிகரிக்க வேண்டும். இதன்மூலமாக தகுதியானவர்களை வேலைக்கமர்த்தலாம். அத்தோடு ஆங்கில ஊடகவியலாளர்களுக்கும் தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் இடையே காணப்படும் வேதனம் வழங்கல் தொடர்பான ஏற்றத்தாழ்வுகளை குறைக்கப்படவேண்டும்.

- தொழிற்சங்கங்கள், ஊடக நிறுவன உரிமையாளர்களும் முகாமையாளர்களும் தமது ஊழியர்களின் உரிமைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் பாதுகாத்திடவேண்டும். தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட உரிமையுள்ளது, எனினும் இத்தகைய இணைப்பு, ஊடகத் தொழில்வாண்மையிலோ அல்லது ஆசிரியர் பீட சுதந்திரத்திலோ தாக்கம் செலுத்தக் கூடாது.

- ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக செயற்பாட்டுக் குழுக்கள் மாகாண ஊடகவியலாளர்களின் தொழில்சார் தராதரங்களை அதிகரிக்க நடவடிக்கையெடுக்கவேண்டும். இதன் ஒரு பகுதியாக, அவர்களது வேதனம் மற்றும் இதர நன்மைகள;, வசதிகள் என்பன உடனடியாகத் தரமுயர்த்தப்படவேண்டும். எனவே, அவர்கள் ஊடக தலைமையலுவலகங்களுக்கு தகவல் வழங்குபவர்கள் இல்லாமல், ஊடக சமூகத்தின் முழு வளர்ச்சியடைந்த அங்கத்தவர்களாக மாறமுடியும்.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்துடன் (SLWJA) இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் 4 ஜுன் 2015 இல் இடம்பெற்ற கலந்துரையாடலிலிருந்து பெறப்பட்டது. (லசந்த ருஹுணகே - தலைவர் மற்றும் காஞ்சன மாரசிங்க- தேசிய ஏற்பாட்டாளர் ஆகியோர் பங்குபற்றினர்)

- ஊடக சங்கங்களும் சமூகங்களும் எம்மிடம் உள்ளன. ஆனால், நாம் ஊடக தொழிற்சங்கங்களை உருவாக்கிட வேண்டும். இதுவே 2005 இல் தொலங்கமுவ பிரகடனம் என நாம் உருவாக்கிய "இலங்கையில் ஜனநாயக, பன்முகத்தன்மை கொண்ட ஊடக பண்பாடு மற்றும் ஊடகங்கள் மற்றும் இதழியலுக்கான சமூக மற்றும் தொழில்சார் உரிமைகளுக்கான ஒப்பந்தத்தின்" முக்கிய குறிப்பு.

- ஊடகவியலாளர்களும் ஊடகத் தொழிலாளர்களும் தொழில் வழங்குனர் தரப்பிலிருந்து வரக் கூடிய பக்கவிளைவுகள் மற்றும் பணிநீக்கம் முதலான அச்சமின்றி, தம் பணியிடங்களில் தொழிற்சங்கங்கள் அமைக்கவும், தற்போதுள்ள தொழிற் சங்கங்களில் இணையவும் முடியும் என்பதை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

- அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத் தொழிலாளர்களுக்கும் பதவி நியமனக் கடிதம் அவசியம். ஆனால் இது மாத்திரம் போதாது. உரிமையாளருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு சமமாக இல்லை. எனவே நாம் ஊடக உரிமையாளர்களுடன் கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டும். இது மற்ற நிறுவனங்களில் காணப்படும்போது ஏன் ஊடகங்களில் மாத்திரம் இல்லை?

- பல ஊடக உரிமையாளர்கள் தற்போது ஊடக மறுசீரமைப்பின் தேவையை உணர்வதை எம்மால் அறியமுடிகிறது. ஊடக மறுசீரமைப்பு வெற்றிபெற அவர்களது ஆதரவும் பங்களிப்பும் எமக்குத் தேவை.

# சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம்

**4.08** சிவில் சமூக அமைப்புகள் ஊடகங்களை ஒருங்கமைக்கப்பட்ட முறையில் கண்காணித்தல்.

இலங்கையில் சிவில் சமூக அமைப்புகள் (சி.எஸ்.ஓ.) ஊடக உள்ளடக்கம் மற்றும் அதில் வெளியிடப்படும் தகவல்கள் போன்றவற்றை அவ்வப்போது அவதானித்து வந்துள்ளன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கருப்பொருள் சார்ந்த அல்லது பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட அவதானிப்புகள் இடம்பெற்றுள்ளன.

- ஊடகங்களில் இடம்பெறுகின்ற விடயங்களை பால் நிலை அல்லது பெண் உரிமை ஆகிய கண்ணோட்டங்களில் அணுகுதல். இவ்வகையான செயலை 'வுமன் அண்ட் மீடியா கலெக்டிவ்' மேற்கொண்டது[171];

- மேலும் 'இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்' நிறுவனமானது, ஊடகங்கள், ஊழல் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய தலைப்புகளை வெளியிடும் விதத்தை அவதானித்தது. உதாரணமாக, தேர்தல் காலப்பகுதியில் ஊடகங்களின் செயற்பாடுகள்.[172]

- சர்வதேச ஊடக வலையமைப்புகள் (உதாரணம் ஐ.எப்.ஜே.), அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்பு

171 http://womenandmedia.org

172 See, for example, electoral integrity report on the Presidential Election in January 2015: http://www.tisrilanka.org/wp-content/uploads/2015/02/PPPR_2015_ENG_Final.pdf

(உதாரணம்: யுனிசெப்) அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (உதாரணம்: சேவ் த சில்ரன்) போன்றன சில நேரங்களில் சிறுவர்கள் தொடர்பான ஊடக உள்ளடக்கம் தொடர்பான ஆய்வுகளையும் முன்னெடுத்துள்ளன. ஊடக சுதந்திரம் மனித உரிமைகள் தொடர்பிலும் அவை செயற்பட்டுள்ளன.

இருப்பினும் ஊடக உரிமைகள் தொடர்பில் முறையான மேற்பார்வைகளோ அல்லது கலந்துரையாடல்களோ இடம்பெறவில்லை. தற்போது, பல்வேறு அமைப்புகளாலும் புலமை சார்ந்தவர்களை உள்ளடக்கிய குழுக்களினாலும் ஊடகம் பற்றிய பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தேசிய பிரச்சினைகள் தொடர்பில் காத்திரமான கலந்துரையாடல்கள் ஊடகங்களில் இடம்பெற்றுவருகின்றன. இதன் காரணமாக பெறுநர்கள் சில விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. இதன் காரணமாக, எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதார போக்குகள் பற்றி எதிர்வுகூறக்கூடியதாக இருக்கின்றது. எனவே, தேசிய அபிவிருத்தி தொடர்பில் முன்கூட்டிய உபாய ரீதியான திட்டமிடல்களுக்கான வழிகாட்டல்களை இவை வழங்குகின்றன.[173]

பொதுமக்களது நலனை அடிப்படையாகக் கொண்டு முறையாக ஊடகங்களை கண்காணிக்கக் கூடிய, பகுப்பாய்வு செய்யக் கூடியஇ ஆவணப்படுத்தக் கூடிய மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய அர்ப்பணிப்பு மிக்கதொரு சிவில் சமூகம் இலங்கைக்கு அவசியப்படுகின்றது. இவற்றின் செயற்பாடுகள் மூலம் பல்வேறு விதமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும். உதாரணமாக, ஊடக கற்கைகளுக்கான இந்திய நிலையம் (Centre for Media Studies - CMS India)[174]அல்லது இந்திய இணையத்தளமான 'த ஹூட்' (The Hoot) இனால் மேற்கொள்ளப்படும் விமர்சனங்களை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்கள் மற்றும் பரிந்துரை நிகழ்ச்சித்திட்டங்கள்.[175] இலங்கையில் தற்சமயம் காணப்படுகின்ற குறைவான ஊடக விளங்கறிவு தொடர்பில் கற்கைகளை மேம்படுத்துவதற்கு இவை உதவி செய்யலாம்.

173 http://www.veriteresearch.org/the-media-analysis.cfm

174 http://www.cmsindia.org/

175 http://www.thehoot.org/

## பரிந்துரை

- இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள், பரிந்துரைக் குழுக்கள், கல்வியாளர்கள் ஆகியோர் பிரதான ஊடகங்கள் தொடர்பில் தமது ஈடுபாடுகளை மேம்படுத்துவதுடன், அவற்றின் செயற்பாடுகளையும் கண்காணிக்க வேண்டும். இது பல்வேறு மட்டங்களில் நிகழலாம். உதாரணமாக, ஊடக உள்ளடக்கத்திற்கான பங்களிப்புகள், இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல், ஊடகத் தொழிற்துறைக்கு ஆலோசனைகளை வழங்குதல் அல்லது அதன் தொழில்வாண்மை தராதங்களை மேம்படுத்தல், அடிமட்ட மக்களுக்கு ஆக்கபூர்வமான களங்களை அமைத்துக்கொடுத்தல் மற்றும் ஊடக உள்ளடக்கத்தினை மேற்பார்வை செய்தல் போன்றன.

4.09 கருத்துச்சுதந்திர விடயங்களில் சிவில் சமூக அமைப்புகள் குரல் எழுப்புதல்.

ஊடக உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் கருத்துச் சுதந்திரம் தொடர்பில் நேரடியான பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ளன. சிலவேளைகளில் இவற்றை அவை சுயமாக மேற்கொள்கின்றன, அல்லது ஊடகவியலாளர் சங்கங்கள் மற்றும் ஊடகத் துறைசார்ந்த தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு இவ்வித செயல்களில் ஈடுபடுகின்றன.

உதாரணமாக:

- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் **(Centre for Policy Alternatives - CPA):** இது கருத்துச் சுதந்திரம் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது. அதாவது, இலங்கையில் இணையத்தளங்கள் மூலமாக கருத்துச் சுதந்திரம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது[176] சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வெறுப்பூட்டக்கூடிய பேச்சுக்களின் மூலமாக சிறுபான்மையின மக்களுக்கெதிரான அழுத்தங்களைப் பிரயோகிப்பது[177] என்பது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இலங்கையில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி அதீத தேசியம் பேசுவோரின் ஆபத்தான பேச்சுக்கள் அல்லது உரைகள் பரப்பப்படுகின்ற முறையையும் அது ஆராய்ந்துள்ளது.[178]
- **Rights Now Collective for Democracy:** இது இலாபம் கருதாத பக்கச்சார்பற்ற அமைப்பாகும். இது ஊடக தொழில்வாண்மையாளர்களுடன் இணைந்து, அவர்கள் சட்டம், பௌதீக மற்றும் டிஜிட்டல் ரீதியான அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொள்வது, இவற்றை வெற்றிகொள்வதற்கு அவர்கள் தமது ஆற்றல்களை மேம்படுத்தும் முறை தொடர்பில் செயற்படுகிறது.[179]
- ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு **(AHRC):** ஹொங்கொங்கை மையமாகக் கொண்டு செயற்படும் இந்நிறுவனம் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் செயற்பட்டுள்ளது. மேலும் ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் தொடர்பிலும் செயற்பட்டுள்ளது.[180]
- சகலவிதமான பாரபட்சங்கள் மற்றும் இனவாதம் ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச அமைப்பு **(IMADR):** இது சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னலாகும். இதன் தலைவராக தற்போது இலங்கையர் ஒருவர் செயற்படுகின்றனார். கருத்துச் சுதந்திரம் தொடர்பான அவதானிப்புகளை தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இது வழங்கி வருகின்றது..[181]
- இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் **(JDS):** தமது

176 http://www.cpalanka.org/freedom-of-expression-on-the-internet-in-sri-lanka/

177 http://www.cpalanka.org/liking-violence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka/

178 http://www.cpalanka.org/saving-sunil-a-study-of-dangerous-speech-around-a-facebook-page-dedicated-to-sgt-sunil-rathnayake/

179 http://www.rightsnow.net/?page_id=4851

180 http://www.humanrights.asia/countries/sri-lanka

181 http://imadr.org/activity/srilanka/

182 http://www.jdslanka.org/index.php/2012-01-30-11-50-09

பணி சார்ந்த அச்சுறுத்தல்களையும் கொடுமைகளையும் எதிர்நோக்கியதன் விளைவாக இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களை உள்ளடக்கிய முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு இதுவாகும். 2009 ஜூலையில் பேர்லின், ஜேர்மனியில் இக்குழு தோற்றுவிக்கப்பட்டது. தமது இணையத்தளத்தின் மூலம் கருத்துச் சுதந்திரம் தொடர்பான விடயங்களை வெளியிட்டுவருவதுடன் மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரைகளிலும் இது ஈடுபட்டுவருகின்றது.[182]

மேலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் (FUTA) போன்ற அமைப்புகளும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான விடயங்களில் அவ்வப்போது ஈடுபட்டுவருகின்றன.

### பரிந்துரை

- கல்வியாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியன இணைந்து ஊடகம் தொடர்பான ஆழமான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இவற்றினால் கிடைக்கப்பெறுகின்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஊடகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மேம்படுத்தப்படல் வேண்டும். இவ் ஆய்வுகளில் ஊடக மற்றும் இதழியல் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள், சமூகவியலாளர்கள், மானுடவியலாளர்கள் ஆகியோர் பங்குபற்றுதல் வேண்டும்.

## 4.10 சிவில் சமூக அமைப்புகள்இ சமூகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தங்கள் குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்யவும் உதவுதல்

கடந்த அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அண்மைக் காலம்வரை ஊடகங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கிடையிலான தொடர்பு பல பாதிப்புக்களை எதிர்கொண்டது. பிரதான ஊடகங்கள் மேற்கொண்ட குரோத நடவடிக்கைகளின் காரணமாக, சில சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன மாற்றுத் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டன. உதாரணமாக, இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தளங்களையும் சமூக வலைத்தளங்களையும் அவை பயன்படுத்தின.

பிரதான ஊடகங்களின் உதவியின்றியும் அவற்றின் தலையீடுகளின்றியும் சில சிவில் சமூக அமைப்புகள் அடிமட்ட மக்கள் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விளங்கறிவை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டன. இதற்கென இலங்கையின் பாரிய அபிவிருத்தி அமைப்புகளில் ஒன்றான சர்வோதயம் தனது உப நிறுவனம் மூலமாக சர்வோதய ஃபியூசன் என்றவொரு நிகழ்வினையும் மேற்கொண்டது.[183]

ஊடக விளங்கறிவை மேம்படுத்தல்

நவீன காலத்தில் வாழுகின்ற சகல மக்களும் ஊடகங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வது சிறப்பானதாகும். இதனை

183 http://fusion.lk

BOX 22

## ஊடக விளங்கறிவு என்றால் என்ன?

வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் ஆகியன பரவிக் காணப்படுவதன் காரணமாக மனித தொடர்பாடல் முறைகள் மற்றும் நடத்தைகள் ஆகியவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஊடக விளங்கறிவு என்பது, மரபு ரீதியான ஊடகங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவை தொடர்பில் தேர்ச்சிகளை (அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகள் போன்றன) வழங்கி மக்களை வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இது பின்வரும் அம்சங்களை அல்லது கற்றல் விளைவுகளை உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும்.

- ஜனநாய சமூகமொன்றில் ஊடகங்களின் வகிபாகம் மற்றும் அதன் செயற்பாடுகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்.
- இத்தகைய செயற்பாடுகளை எந்த நிலைமையின் கீழ் ஊடகங்களினால் வழங்க முடியுமென்பதைப் புரிந்துகொள்ளுதல்.
- ஊடக உள்ளடக்கங்களை விமர்சனரீதியாக மதிப்பீடு செய்தல்.
- சுய கருத்துக்களை வெளிப்படுத்தவும் ஜனநாயக ரீதியான பங்குபற்றுதல்களுக்காகவும் ஊடகங்களைப் பயன்படுத்துதல்.
- பெறுநர்களை மையப்படுத்திய ஊடக உள்ளடக்கங்களை மீளாய்வு செய்வதற்கான திறன்கள் (தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் திறன்கள் உள்ளடங்கலாக).

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 19 ஆம் உறுப்புரையை யதார்த்தபூர்வமாக உணர்ந்து அனுபவிப்பதற்கு தரமான ஊடகங்கள், தகவல்கள், ஊடகங்களில் பங்குபற்றுதல் மற்றும் தொடர்பாடல் வலையமைப்புகள் ஆகியன அவசியமாகும்.

தகவல் மூலம் : யுனெஸ்கோ இணையத்தளம். http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/media-literacy/

‘ஊடக விளங்கறிவு’ என்றழைக்கின்றோம். அதாவது, மக்கள் ஊடகங்களில் காணப்படுகின்ற பல்வேறு விடயங்களை அறிந்து அவை தொடர்பில் விமர்சனங்களை மேற்கொள்வதாகும். (22 ஆம் பெட்டியைப் பார்க்க)

ஊடக விளங்கறிவானது ஊடகத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, ஊடகங்களில் வெளிவருகின்ற விடயங்களை நுகரும் பெறுநர்களுக்கும் அவசியப்படும் ஓர் திறன். இத் திறன் தொடர்பில் மக்கள் பெற்றுக்கொள்கின்ற தேர்ச்சியானது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு அவசியமான விடயங்களுள் ஒன்றாகும்.

இலங்கையில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 97.7 சதவீதமாகக் காணப்படுகிறது.184 ஊடக விளங்கறிவை கற்பிக்கும் நாடுகள் பற்றிய ஆய்வுகளோ, புள்ளிவிபரங்களோ முறையாகக் காணப்படாத பட்சத்திலும், ஊடக விளங்கறிவு பரவலாகக் குறைவாகவே காணப்படுவதாக சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சில தொழில்வாண்மைமிக்க ஊடகவியலாளர்கள் மத்தியிலும் இடைநிலைப் பாடசாலைகளில் ஊடகக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பிப்பவர்கள் மத்தியிலும்கூட இவ்வித நிலைமையே காணப்படுகிறது.

184 Census of Population and Housing 2012: Key Findings. Department of Census and Statistics, Sri Lanka. March 2015. http://countryoffice.unfpa.org/srilanka/?publications=12333

ஊடக விளங்கறிவானது இலங்கையில் குடிசனக் கல்வியில் காத்திரமான ஒரு விடயமாகத் திகழ்வது முக்கியமென யுனெஸ்கோ, ஐ.பீ.டீ.சீ. ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் விஜயானந்த ஜயவீர தெரிவிக்கின்றார். "ஊடக விளங்கறிவு தொடர்பான பிரச்சாரப் பணியில் ஊடகங்களும் பங்காளராகச் செயற்பட முடியும். இருப்பினும் எமது கல்வி முறையின் அடிப்படைக் கடப்பாடுகளுள் ஒன்றாக ஊடக விளங்கறிவும் இருத்தல் வேண்டும்." என அவர் கூறினார்.

ஊடகத்தைப் பயன்படுத்துபவர்கள் மத்தியில் ஊடக விளங்கறிவை மேம்படுத்துமுகமாக தேசிய தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவற்றில் வாராந்த ஊடக விமர்சன நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். பொதுமக்கள் மத்தியில், ஊடகங்கள், செய்திகள் தொடர்பான ஒழுக்கநெறிகள் பற்றி நிபுணர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அனுபவமிக்க ஊடகவியலாளர்கள் போன்றவர்கள் தமது கருத்துக்களை இந்நிகழ்ச்சிகளின் மூலம் தெரிவிக்க முடியும்.[185] அதேபோல், பாடசாலைகளில் இடைநிலைக்கல்வி மட்டத்தில் ஊடகக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என அவர் கூறினார். 2006 ஆம் ஆண்டில் "தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி" என்ற பாடம் க.பொ.த. உயர் தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரம் ஆகியவற்றில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு தசாப்தம் கடந்த நிலையில் இது தொடர்பான மீளாய்வுகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இருப்பினும், இப்பாடத்திட்டம் தொடர்பில் விஜயானந்த ஜயவீர சந்தேகம் கொண்டவராகவே காணப்படுகின்றார். "இது தொடர்பாடலுக்கு பக்கச்சார்பானதாகவும் ஊடகக் கல்வி தொடர்பில் அரிதாகவும் செயற்படுவதாக" இவர் தெரிவித்தார். இப்பாடத்திற்கு வழங்கப்பட்ட தலைப்பானது அதாவது, தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி என்ற தலைப்பானது ஊடக விளங்கறிவு மற்றும் ஊடகக் கல்வி தொடர்பான விளக்கங்களை இடைநிலை மாணவர்கள் மத்தியில் குறைவாகவே ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது (ஊடகக் கல்வியானது பல்கலைக்கழக மட்டங்கள் வரையில் விமர்சன அடிப்படையில் தொடரக் கூடியதொரு பாடமாக இருத்தல் வேண்டும். இது விமர்சனக் கோட்பாடுகள் மற்றும் சமூகவியல் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்).

பாடசாலைகளில் ஊடகக் கல்வியானது, ஊடகச் செயற்பாடுகள் மற்றும் அறிக்கையிடும் தன்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். காத்திரமான சமூகமொன்றை உருவாக்கும் பொருட்டு சிவில் சமூகத்தின் முக்கிய அங்கமாக இது காணப்படுகிறது.

இடைநிலைக் கல்வி மட்டத்தில் ஊடகக் கல்வியைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்கள் பின்வரும் விளக்கங்களைப் பெற்றுக்கொள்வர்:

185 Developing Sri Lanka's Media: The State's Obligations. By Wijayananda Jayaweera. Colombo Telegraph, 29 January 2015. https://www.colombotelegraph.com/index.php/developing-sri-lankan-media-the-states-obligations/

- ஜனநாயகத்தில் ஊடகங்களின் செயற்பாடு
- எவ்விதமான நிலைமைகளின் கீழ் ஊடகங்கள் அவற்றைப் செயற்படுத்த முடியும்.
- அவ்வித செயற்பாடுகள் தொடர்பான ஊடக அறிக்கையை எவ்வாறு மதிப்பீடு செய்வது.
- பெறுநர்களை மையப்படுத்திய ஊடக உள்ளடக்கங்களை உருவாக்குவதற்கு அவசியமான அடிப்படைத் திறன்கள்.
- நீண்டகால அடிப்படையில் ஊடகங்கள் தொடர்பில் மக்கள் எவ்வாறு செயற்பட முடியும், ஊடக அறிவை மேம்படுத்துவதன் மூலம் எவ்வாறு ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியும்இ மக்களை அணிதிரட்டி அவர்களின் பங்களிப்புகள் மூலம் அரசாங்கம் மற்றும் அரசியல் ஆகியவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்களும் ஊடக ஆய்வாளர்களுமான திலக் ஜயரத்ன மற்றும் சரத் கெல்லபொத ஆகியோர் 2012 இல் எழுதிய ஆக்கமொன்றின் மூலம் இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்:

“இலங்கையில் ஊடகக் கல்வியானது மோசமான நிலையில் காணப்படுவதாக நாம் நம்புகின்றோம். ஏனெனில், இது தொடர்பில் தேசிய கொள்கையொன்று இல்லை. இது ஊடகத் துறையின் தேவைகளை மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. நாட்டின் தேவைகளை உள்ளடக்கியதாகக் காணப்படவில்லை. ஊடகம் என்றால் என்ன எனும் விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்ட போதிலும் கூட ஊடகத்திலேயே இதற்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

நாட்டில் முக்கியத்துவம் மிக்க, முன்னுரிமையளிக்க வேண்டிய பல பிரச்சினைகள் காணப்படுகிறது. இது தொடர்பில் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்கின்ற பொழுது ஊடக விளங்கறிவானது பல்வேறு பிரச்சினைகளுக்கான காரணியாகவும் அவற்றிற்கான தீர்வாகவும் காணப்படுகின்றது. இத்தகைய பின்புலத்தில் ஊடக விளங்கறிவானது ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் கல்வியியலாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்க முடியாது. அது பலராலும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும். இவற்றுள் ஊடகச் சுதந்திரம் தொடர்பான போராளிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சட்ட நடவடிக்கை தொடர்பான தொழில்வாண்மை மிக்கவர்கள், சிவில் சமூகம், சமயத் தலைவர்கள், புத்திசாலிகள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் போன்ற பங்கீட்டாளர்கள் ஈடுபடல் வேண்டும்”[186]

186 Putting the Citizen First: New Approaches to Media Literacy, by Tilak Jayaratne and Sarath Kellapotha, in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 281-293

## பரிந்துரைகள்

- 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி என்ற பாடம் தொடர்பிலான மதிப்பீடொன்றை கல்வி அமைச்சு மேற்கொள்ளல் வேண்டும். இதன் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டம் மறுசீரமைக்கப்படல் வேண்டும். எதிர்கால பிரஜைகளின் சிவில் கல்வியின் முக்கிய அங்கமாக ஊடகக் கல்வி திகழ்கின்றது என்ற நோக்கில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- அரசாங்கம், ஊடகத் தொழிற்துறை, ஊடகவியலாளர்களது தொழில்சார் அமைப்புகள் ஆகியன மக்கள் மத்தியில் ஊடக விளங்கறிவை மேம்படுத்தல் வேண்டும். இது முக்கியமானதாகும். இதனடிப்படையில் மக்கள் பிரதான ஊடக உள்ளடக்கங்களை விமர்சனரீதியில் மதிப்பிடுவதை அதிகரிப்பர். அத்தோடு டிஜிட்டல் ஊடக உள்ளடக்க ஆக்கங்களில் பங்களிப்பை வழங்குவர்.

- முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வி மூலம் ஊடக விளங்கறிவை ஊக்குவிக்கக் கூடிய தேசிய கொள்கையொன்றினை அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும். ஊடக விளங்கறிவை மேம்படுத்துவது கல்வியின் ஒட்டுமொத்த நோக்கமாகத் திகழ வேண்டும்.








**s** பொது அமர்வொன்றில் கலாநிதி. ஹரினி அமரசூரிய உரையாற்றுகிறார்

**t** பொது அமர்வொன்றில் கலாநிதி. கே. டபிள்யூ. ஜனரஞ்சன உரையாற்றுகிறார்







s சாதாரண குடிமக்கள் குரலை மேவும் அரசியல்வாதிகளின் ஊடக மேலாதிக்கம் - கேலிச் சித்திரம் : அவந்த ஆட்டிகல, விஜய செய்திப் பத்திரிகை.

t தொலைக்காட்சி நிலையத்தில் பாடசாலை மாணவர்கள் - புகைப்படம் : **SLRC**

# கருத்துச் சுதந்திரம், பன்மைத்துவம், பல்வகைமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தொழில்வாண்மையைக் கட்டியெழுப்பும் மற்றும் உதவியளிக்கும் நிறுவகங்கள்

## பரிந்துரைகளின் தொகுப்பு

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
| --- | --- |
| 4.1 ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், தங்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்தல் | 1. தொழிற்துறையின் தேவைகளுக்கும், வழங்கப்படும் பயிற்சிகளுக்கும் இடையில் தற்போது காணப்படும் இடைவெளி அல்லது பொருத்தமின்மை பற்றிய ஆய்வு அவசியம். இதன் மூலமாக இனிவரும் காலங்களில் மிகவும் பொருத்தமான பயிற்சிகளை வழங்கும் உத்திகளை வகுத்துக் கொள்ளலாம். அதேவேளை, ஊடக உள்ளடக்கத் தயாரிப்பிலும் நுகர்விலும் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இலங்கை ஊடக முகாமையாளரகளும், ஊடகவியலாளர்களும் அவற்றிற்கேற்ப தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அரசாங்கமும் அபிவிருத்தி நிதியுதவியாளர்களும் மத்திம காலத்திற்குரிய (05 வருடங்களுக்கான) ஊடகப் பயிற்சிசார் உத்தித் திட்டமொன்றுக்கு ஆதரவு தந்து உதவ வேண்டும்.<br><br>2. ஊடகத்துறை அபிவிருத்திக்கான சிறந்த தொழில்வாண்மை மற்றும் மனிதவள அபிவிருத்தியின் பெறுமதியை ஊடக நிறுவனங்கள் இனங்காண வேண்டும். இதன் ஒரு பகுதியாக, ஊடக நிறுவனங்கள் சேவையின் போதான பயிற்சிகளுக்கு (ஊடக நிறுவனங்குள்ளான பயிற்சிகளாக அவை அமையவேண்டிய அவசியமில்லை) - ஊடக, ஆசிரியர்பீட, முகாமைத்துவ விசேட பயிற்சிகள் உட்பட, முன்னுரிமை வழங்கவேண்டும்.<br><br>3. ஊடக நிறுவனங்கள் தம் மனிதவளம் தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்ய வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு தொடர்கல்வி அவசியம் என்பது உணரப்படவேண்டும். சம்பள உயர்வு மற்றும் பதவியுயர்வு என்பன தர்க்கரீதியாகவும், வெளிப்படையாகவும் இடம்பெறுவதோடு, அறிவு மற்றும் புதிய திறன்கள் பெறல் என்பவற்றோடும் அவை தொடர்புபடுத்தப்பட வேண்டும். |

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
|---|---|
| 4.1 ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், தங்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்தல் | 4. ஊடக நிறுவனங்கள், அரசு மற்றும் சர்வதேச உதவி வழங்குவோர் - தற்போது ஊடகப்பயிற்சிகளை வழங்கும் இலங்கை இதழியல் கல்லூரி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் என்பவற்றிற்கு பண வசதியற்றவர்கள் தரமான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளுமான வகையில் உதவிகள் வழங்கவேண்டும். அதேபோல், மேலும் அதிகமான ஊடகப் பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் அளிக்க நிதி வழங்குவதோடு, ஊடகம் தொடர்பான பாடநூல்களையும் உள்ளூர் சார்ந்து தயாரிக்க வேண்டும். அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட நம்பிக்கை நிதியம் இவற்றை பாராளுமன்றத்தின் உதவியுடன், ஆசிரியர்பீடச் சுதந்திரதிதிற்குப் பங்கம்வராமல் மேற்கொள்ளலாம்.<br><br>5. பிரேரிக்கப்படும் ஒலி-ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தும் செயற்பாடான, புதிய ஒலி-ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை மூலமாக, அனுமதிப்பத்திரம் பெற முனையும் ஊடகங்கள், தம் ஊடகவியலாளர்களுக்கு நிறுவனம் சார்ந்தோ அல்லது பயிற்சி வழங்கும் மையங்கள் வழியாகவோ குறித்த மட்டங்களில் பயிற்சி வழங்குதல் அவசியம் என்பதை அமுல்படுத்தல்.<br><br>6. இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், நிதியுதவியாளர்கள், ஊடக நிறுவனங்கள். சர்வதேச பரிந்துரை அமைப்புக்கள் துணையுடன் ஊடகவியலாளர்களின் திறமையை வளர்க்க வேண்டும். இது, இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தை ஊடக மறுசீரமைப்பை அமுல்படுத்தும் தளமாக மாற்றவேண்டும். |
| 4.2 வர்த்தக முகாமையாளர்கள் உட்பட ஊடக முகாமையாளர்கள், தங்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்தல். | 7. ஊடக நிறுவனங்கள், ஊடக முகாமைத்துவ திறனை விருத்திசெய்யுமுகமாக, தொழில்சார் ஊடக முகாமையாளர்களை ஆட்சேர்ப்பதிலும், பயிற்றுவிப்பதில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும். |

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
| --- | --- |
| 4.3 ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் ஊடாக ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி குறித்த விளக்கத்தை ஏற்படுத்தல். | 8. இலங்கை ஊடக நிறுவனங்கள், சர்வதேச ஊடக அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து - ஜனநாயகம், ஆட்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான விளக்கத்தை பெறுமுகமாக, ஊடகவியலாளர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் வழங்க வேண்டும். இதன்போது, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் அடிப்படையில் அவற்றில் கையெழுத்திட்ட இலங்கையின் கடமைகள் தொடர்பான விடயங்கள் உள்வாங்கப்படல் வேண்டும். |
| 4.4 கல்விசார் கற்கைநெறிகள் பல தரப்பட்ட மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாயிருத்தல் | 9. உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதனோடிணைந்த பங்குதாரர்கள் ஒன்றிணைந்து - இதழியல், வெகுசன ஊடகங்கள் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் தொடர்பான பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களை மீளாய்வு செய்தல் வேண்டும். அறிவு திறன் மற்றும் வளம்சார் இடைவெளிகளை இனங்கண்டு பாடத்திட்ட மறுசீரமைப்புச் செய்தல் வேண்டும். இதன் மூலம் இதழியல் கல்வி புலமைசார் சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாகவும், ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பதாகவும் அமையும்.<br><br>10. உயர்கல்வி நிறுவனங்களும் ஊடக பயிற்சி நிறுவனங்களும் இலத்திரனியல் கற்கைநெறிகள் மற்றும் இணையம் சார் கற்றல் வழிமுறைகள் உள்ளடங்கலாக, புதிய கற்றல் - கற்பித்தல் முறைகளை உள்வாங்க வேண்டும். மாணவர்கள் வரும் காலங்களில் கணினி மூலமான இதழியல் கற்கைநெறிகளைக் கற்க இயலுமாயிருத்தல் வேண்டும்.<br><br>11. பல்கலைக்கழகங்களும் ஊடகப் பரிந்துரைக் குழுக்களும் இணைந்து, இலங்கையை பின்னணியாகக் கொண்ட, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இதழியல் தொடர்பான பாடநூல்களைத் தயாரிக்க வேண்டும். சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறமொழிப் புத்தகங்களின் தழுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படலாம். இவை எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக, இலத்திரனியல் புத்தகம் போன்ற வடிவங்களிலிருத்தல் வேண்டும். |

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
| --- | --- |
| 4.4 கல்விசார் கற்கைநெறிகள் பல தரப்பட்ட மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாயி-ருத்தல் | 12. இதழியல் கற்பிக்கும் / பயிற்சிகள் அளிக்கும் பல்கலைக்கழகங்கள் தம் துறைசார், நிறுவன அபிவிருத்தி தொடர்பான நீண்டகாலத் திட்டங்களை உருவாக்க வேண்டும். உதாரணமாக - வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இதழியல் கல்வி வாய்ப்பு, தெற்காசிய மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் கூட்டாக இணைந்து ஆராய்சிகள் மேற்கொள்ளல் மற்றும் நடப்பு இதழியல் விடயங்கள் தொடர்பான மாநாடுகள் நடாத்துதல் போன்ற தந்திரோபாயங்கள்.<br><br>13. இதழியல் / வெகுசன ஊடகக் கல்வி கற்பிக்கும் பல்கலைக்கழகங்கள் ஊடக நிறுவனங்களுடனான உறவுகளை வலுப்படுத்தவேண்டும். இதன் மூலமாக ஊடகத்துறையில் உள்ள பயிற்சி வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வது, ஊடகத்துறைக்கு புலமைசார் பங்களிப்பு வழங்குவது என இரு தரப்புக்களும் தம் வளங்களைப் பரிமாற்றிக்கொள்ள முடியும். |
| 4.5 கல்விசார் கற்கைநெறிகள் மாணவர்களுக்கு ஜனநாயக அபிவிருத்தி தொடர்பான திறன்கள் மற்றும் அறிவினை வழங்குதல் | 14. பல்கலைக்கழகங்கள் - சர்வதேச ஊடக அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்குப் பொருத்தமான பாடத்திட்டங்களை உருவாக்கவேண்டும். இதன் மூலமாக மாணவர்கள் - ஜனநாயகம், ஆட்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கருக்களையும், அவற்றின் இடைத்தொடர்புகளையும் அறிந்துகொள்வர். அபிவிருத்தி இதழியல் கற்கையானது, அரச அபிவிருத்திச் செயற்பாடுகளை அவ்வாறே ஏற்காது அதனால் மக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி மதிப்பிடுபவையாகவும் இருத்தல் வேண்டும். |
| 4.6 ஊடக பணியாளர்களுக்கு சுதந்திரமான தொழிற் சங்கங்களில் இணைந்து தங்கள் உரிமைகளை பயன்படுத்துதற்கான உரிமையுள்ளது. | 15. அனைத்து ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களினதும் மற்றும் ஊடக தொழிலாளர்களினதும் அடிப்படை மனித உரிமைகளையும் அரசியலமைப்பு உரிமைகளையும் இனங்கண்டு அவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் முதலான அச்சங்களின்றி தம் விருப்பத்தின்படி தொழிற்சங்கங்களில் இணையவும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனுமதிக்கப்படவேண்டும். |

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
|---|---|
| 4.7 தொழிற்சங்கங்களும், தொழில்சார் அமைப்புகளும் தங்கள் தொழில்சார்பில் குரல் கொடுத்தல் | 16. ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் தொழிலாளர்களின் வேதனக் கட்டமைப்பை ஊடக நிறுவன உரிமையாளர்களும் முகாமையாளர்களும் மீளாய்வு செய்து, வேதனத்தை அதிகரிக்க வேண்டும். இதன்மூலமாக தகுதியானவர்களை வேலைக்கமர்த்தலாம். அத்தோடு ஆங்கில ஊடகவியலாளர்களுக்கும் தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் இடையே காணப்படும் வேதனம் வழங்கல் தொடர்பான ஏற்றத்தாழ்வுகளை குறைக்கப்படவேண்டும்.<br><br>17. தொழிற்சங்கங்கள், ஊடக நிறுவன உரிமையாளர்களும் முகாமையாளர்களும் தமது ஊழியர்களின் உரிமைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் பாதுகாத்திடவேண்டும். தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட உரிமையுள்ளது, எனினும் இத்தகைய இணைப்பு, ஊடகத் தொழில்வாண்மையிலோ அல்லது ஆசிரியர் பீட சுதந்திரத்திலோ தாக்கம் செலுத்தக் கூடாது.<br><br>18. ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக செயற்பாட்டுக் குழுக்கள் மாகாண ஊடகவியலாளர்களின் தொழில்சார் தராதரங்களை அதிகரிக்க நடவடிக்கையெடுக்கவேண்டும். இதன் ஒரு பகுதியாக, அவர்களது வேதனம் மற்றும் இதர நன்மைகள், வசதிகள் என்பன உடனடியாகத் தரமுயர்த்தப்படவேண்டும். எனவே, அவர்கள் ஊடக தலைமையலுவலகங்களுக்கு தகவல் வழங்குபவர்கள் இல்லாமல், ஊடக சமூகத்தின் முழு வளர்ச்சியடைந்த அங்கத்தவர்களாக மாறமுடியும். |
| 4.8 சிவில் சமூக அமைப்புகள் ஊடகங்களை ஒருங்கமைக்கப்பட்ட முறையில் கண்காணித்தல். | 19. இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள், பரிந்துரைக் குழுக்கள், கல்வியாளர்கள் ஆகியோர் பிரதான ஊடகங்கள் தொடர்பில் தமது ஈடுபாடுகளை மேம்படுத்துவதுடன், அவற்றின் செயற்பாடுகளையும் கண்காணிக்க வேண்டும். இது பல்வேறு மட்டங்களில் நிகழலாம். உதாரணமாக, ஊடக உள்ளடக்கத்திற்கான பங்களிப்புகள், இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல், ஊடகத் தொழிற்துறைக்கு ஆலோசனைகளை வழங்குதல் அல்லது அதன் தொழில்வாண்மை தராதங்களை மேம்படுத்தல், அடிமட்ட மக்களுக்கு ஆக்கபூர்வமான களங்களை அமைத்துக்கொடுத்தல் மற்றும் ஊடக உள்ளடக்கத்தினை மேற்பார்வை செய்தல் போன்றன. |

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
|---|---|
| 4.9 கருத்துச்சுதந்திர விடயங்களில் சிவில் சமூக அமைப்புகள் குரல் எழுப்புதல். | 20. கல்வியாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியன இணைந்து ஊடகம் தொடர்பான ஆழமான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இவற்றினால் கிடைக்கப்பெறுகின்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஊடகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மேம்படுத்தப்படல் வேண்டும். இவ் ஆய்வுகளில் ஊடக மற்றும் இதழியல் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள், சமூகவியலாளர்கள், மானுடவியலாளர்கள் ஆகியோர் பங்குபற்றுதல் வேண்டும். |
| 4.10 சிவில் சமூக அமைப்புகள், சமூகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தங்கள் குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்யவும் உதவுதல் | 21. 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி என்ற பாடம் தொடர்பிலான மதிப்பீடொன்றை கல்வி அமைச்சு மேற்கொள்ளல் வேண்டும். இதன் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டம் மறுசீரமைக்கப்படல் வேண்டும். எதிர்கால பிரஜைகளின் சிவில் கல்வியின் முக்கிய அங்கமாக ஊடகக் கல்வி திகழ்கின்றது என்ற நோக்கில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br><br>22. அரசாங்கம், ஊடகத் தொழிற்துறை, ஊடகவியலாளர்களது தொழில்சார் அமைப்புகள் ஆகியன மக்கள் மத்தியில் ஊடக விளங்கறிவை மேம்படுத்தல் வேண்டும். இது முக்கியமானதாகும். இதனடிப்படையில் மக்கள் பிரதான ஊடக உள்ளடக்கங்களை விமர்சனரீதியில் மதிப்பிடுவதை அதிகரிப்பர். அத்தோடு டிஜிட்டல் ஊடக உள்ளடக்க ஆக்கங்களில் பங்களிப்பை வழங்குவர்.<br><br>23. முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வி மூலம் ஊடக விளங்கறிவை ஊக்குவிக்கக் கூடிய தேசிய கொள்கையொன்றினை அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும். ஊடக விளங்கறிவை மேம்படுத்துவது கல்வியின் ஒட்டுமொத்த நோக்கமாகத் திகழ வேண்டும். |

வகை

# 5

## சுயாதீனமும், பன்மைத்துவமும் மிக்க ஊடகத்திற்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள

பிரதான குறிகாட்டிகள்

**A** ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும

5.1 ஊடக அமைப்புகளுக்குச் செய்தி சேகரித்தல், தயாரிப்பு, விநியோகம் ஆகியவற்றின் நிமித்தம் கிடைக்கின்ற நவீன தொழில்நுட்ப வசதிகள்

**B** அச்சு ஊடகம், ஒலிபரப்பு, ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல்

5.2 விளிம்பு நிலை மக்களும் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள்

5.3 விளிம்பு நிலை சமுதாயங்களது தகவல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை நாட்டில் காணப்படுகிறது

தகவல் மையச் சமூகமானது தகவல்களின் உருவாக்கம், விநியோகம், பயன்பாடு, ஒருங்கிணைத்தல், கையாளுதல் ஆகியவற்றைத் தனது பொருளாதார, அரசியல், பண்பாட்டு நடவடிக்கைகளில் கணிசமானளவு கொண்ட சமுதாயமாக விளங்குகின்றது.

எண்மியத் தகவல்கள் (digital information), தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் (ICTs) ஆகியன அதன் பிரதான பண்புகளாகக் காணப்படுகின்றன. இவை, தகவல் வெளிப்பாட்டுப் புரட்சிக்கு வித்திட்டுள்ளதோடு, பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், யுத்தம், அரசியல் மற்றும் ஜனநாயகம் உள்ளிட்ட சமூக அமைப்புகளின் சகல அம்சங்களிலும் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.[187]

கடந்த சில தசாப்தங்களாக தகவல்மையச் சமூகத்தை நோக்கி இலங்கை மிகத் துரிதமாக நகர்ந்து செல்கின்றது. 1989 களில் அறிமுகப்படுத்தப்பட்ட செல்லிடத் தொலைபேசியானது, தொடர்பாடல்கள் தொடர்பில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் வெறும் வாய்மொழி மூலமான அழைப்புகளுக்காக இவை பயன்படுத்தப்பட்ட போதிலும், பின்னர் தரவு மாற்றம் போன்ற பெறுமதி மிக்க சேவைகளும் இதில் உள்ளடக்கப்பட்டன. செல்லிடத் தொலைபேசியானது தற்சமயம் அனைவருக்கும் பொதுவானதொரு உபகரணமாகத்

187 https://en.wikipedia.org/wiki/Information_society

188 The Mobile Revolution. By Nalaka Gunawardene. Echelon magazine. 8 August 2014. http://www.echelon.lk/home/mobile-revolution/

BOX 23

## ஊடகக் குவிவு என்றால் என்ன?

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணினி ரீதியான வலையமைப்புகள், ஊடக உள்ளடக்கம் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளுடன் கூடிய தோற்றப்பாடு ஊடகக் குவிவு எனப்படும். இது 3 'C' ஐக் கொண்டது. அதாவது, கணினி (Computing) , தொடர்பாடல் (Communication), உள்ளடக்கம் (Content) ஆகியனவாகும். ஊடக உள்ளடக்கங்களை எண்மியப்படுத்தியமை, இணையங்களின் பிரபல்யத்தன்மை ஆகியவற்றின் நேரடிப் பின்விளைவுகளாக இவை காணப்படுகின்றன.

ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழிற்துறைகள், சேவைகள், வேலை ரீதியான நடைமுறைகள் ஆகியவற்றை ஊடகக் குவிவு மாற்றியமைப்பதுடன் புதிய வடிவிலான உள்ளடக்கங்கள் தோன்றுவதற்கு முழுமையாக வழிவகுக்கின்றது. நீண்டகாலம் ஸ்தாபிக்கப்பட்ட ஊடகத் துறையை தேய்வடையச் செய்வதுடன், குறிப்பிட்ட கருவியிலிருந்து பல்வேறு விதமான தகவல்களைப் பிரித்தறிய உதவுகிறது. இது அரச கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு பிரதான சவால்களை விடுக்கின்றது.

மூலம் : Britannica.com
http://global.britannica.com/topic/media-convergence

திகழ்வதுடன் பல பாவனையாளர்களையும் சேவைகளையும் ஒன்றாக இணைக்கின்ற ஒரு கருவியாகவும் திகழ்கின்றது. இலங்கை போன்ற வளர்ந்து வருகின்ற பொருளாதார நாடு ஒன்றில் பல மில்லியன் ஏழை மக்களையும் சம சமூகத்தளத்தில் ஒன்றிணைக்கின்ற கருவியாகவும் இது திகழ்கின்றது.[188]

1995 ஏப்ரலில் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட வழியில் இணையத்துடன் இலங்கை இணைந்துகொண்டதன் விளைவாக, இலங்கையில் அர்த்தமுள்ள தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தகவல் மையச் சமூகமும் துரிதமாக வளர்ந்து வந்தது. அத்துடன் வர்த்தகம் சார்ந்த இணைய மையச் சேவைகளும் வளர்ச்சி கண்டன. (1990 முதல் ஆரம்ப கட்டங்களில் காணப்பட்ட இணையப்பயன்பாடானது கல்விப் புலச் செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது).[189]

ஒட்டுமொத்தமாக பார்க்கையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பரவுகை, அதனைச் சமூகம் ஏற்றுக்கொண்டமை ஆகியன அரசாங்கத்தின் போதியளவு கொள்கைகள் மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான பதிலளிப்புகள் ஆகியவற்றை விஞ்சியதாகக் காணப்பட்டது. இருப்பினும், இலங்கையில் தொலைத்தொடர்பாடல்கள், தகவல் தொழில்நுட்பம், எண்மியப் புலமைச்சொத்து, வெகுசன ஊடகம் ஆகியன தொடர்பில் குறிப்பிடக்கூடிய கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியன காணப்படுகின்றன. இவை, அவ்வப்போது ஆங்காங்கே தனிமைப்பட்ட நிலையிலேயே உருவாக்கப்பட்டன. இருப்பினும் தற்சமயம் ஊடகம் மற்றும் எண்மிய தொழில்நுட்பக் குவிதல் ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய சவால்களை ஒருங்கிணைந்து முகங்கொடுக்கக் கூடிய பண்புகள் குறைவாகவே காணப்படுகின்றன.

இணைய ரீதியான சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பன்னிரண்டு ஆண்டுகளின் பின் அதனைப் பொதுமக்கள் அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்தல் போன்றவற்றில் சில பிரச்சினைகள் காணப்பட்டன. சமூக - பொருளாதாரக் குழுக்கள் மற்றும் நகர - கிராமிய மக்கள் ஆகியவற்றில் தகவல் தொடர்பாடல்கள் தொழில்நுட்பம் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் மெதுவாக வீழ்ச்சி கண்டதன் விளைவாகவும் இவை இலகுபடுத்தப்பட்டதன் காரணமாகவும் இலங்கை தற்சமயம் பல்வேறு சிக்கல் மிக்க சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இவை சில நேரங்களில் இணையப் பயன்பாட்டிற்குப் பின்னரான சவால்கள் என அறிமுகப்படுத்தப்படுகின்றன. தகவல் மையச் சமூகமொன்றில் பல பிரச்சினைகள் வளர்ந்து வருவதற்கும் இவை காரணிகளாகின்றன.

188 INET Colombo 2015 – 20 Years of Internet in Sri Lanka. ReadMe.lk magazine. 16 June 2015. http://readme.lk/inet-colombo-2015-20-years-internet-sri-lanka/

அ

# ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும்

**5 01** ஊடக அமைப்புகளுக்குச் செய்தி சேகரித்தல், தயாரிப்பு, விநியோகம் ஆகியவற்றின் பொருட்டு கிடைக்கின்ற நவீன தொழில்நுட்ப வசதிகள்

சுமார் இரு நூற்றாண்டுப் பரிணாமத்தில் இலங்கையின் நவீன ஊடக உரிமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தமது ஆசிரியபீடச் செய்திகள், தயாரிப்புகள், மக்களை அடையும் வெளிக்கள வேலைகள் ஆகியவற்றின் பொருட்டு பல்வேறு விதமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

பிரதான செய்திப்பத்திரிகை வெளியீட்டாளர்கள், 1980 களில், ஓவ்செட் அச்சிடல் (Offset printing) தொழில்நுட்பத்தின் மூலம் தமது வெளியீடுகளை நவீனமயப்படுத்தினர். இந்த நவீனமயப்படுத்தல் செயற்பாடானது, நகைச்சுவைமிக்க சித்திரக் கதைகளை உருவாக்குவதுடன் ஆரம்பமானது. ஆரம்பத்தில் பல செய்திப்பத்திரிகை வெளியீட்டாளர்கள் பல வர்ணங்களுடன் கூடிய புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். தற்சமயம் பெரும்பாலும் எல்லாச் செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் ஓவ்செட் அச்சிடல் முறையைப் பயன்படுத்துவதுடன். வர்ணங்களையும் கிரா∴பிக்ஸ் வரையுருக்களையும், புகைப்படங்களையும் தாராளமாகப் பயன்படுத்துகின்றன.

செய்திப்பத்திரிகை வெளியிடல் தொடர்பில் 1980 களிலிருந்து கணினி அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கூட, ஒருசில வருடங்களாக இவை செய்தி அறைகளில் பயன்படுத்தப்படவில்லை. தமது ஆசிரியரிபீடம் சார்ந்த விடயங்களை

தெரிவிக்க ஆரம்பத்தில் பெரிய ஊடக கம்பனிகளும் ஆங்கில மொழியிலான ஊடகங்களுமே கணினியைப் பயன்படுத்தின. பதிப்புரிமை சார்ந்த, அதனோடு தொடர்புடைய விடயங்களில் இன்றும் கூட சில சிறிய ஊடகக் கம்பனிகள் மற்றும் தேசிய மொழி ஊடகவியலாளர்கள் கணினிகளைப் பயன்படுத்துவதில்லை (இன்றும் சிலர் தமது பிரதிகளை கைகளினால் எழுதுகின்றனர்).

செய்திகளைச் சேகரித்தல், அவற்றைத் தயார் செய்தல், அவற்றை வெளியிடல் ஆகியன தொடர்பில் தகவல் தொழில்நுட்பத்தை ஆரம்ப காலங்களில் இலங்கை ஊடகங்கள் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. ஆரம்பக் கட்டங்களில் நிதிமுதலீடின்மை இதற்கானதொரு காரணியாகத் திகழ்ந்தபோதிலும், ஊடக முகாமையாளர்களும் ஊடகச் செயற்பாட்டாளர்களும் எண்மியத் தொழில்நுட்பங்கள் மற்றும் இணைய மையத் தகவல்முறை ஆகியவற்றினால் வழங்கப்பட்ட வாய்ப்புகளை மிகவும் மெதுவாகவே உள்வாங்கிக் கொண்டனர்.

ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத்துறையைச் சார்ந்தவர்களுக்கும் நிலைமாற்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனமாக செல்லிடத்தொலைபேசி காணப்படுகிறது எனலாம். இன்று பலர் தமது ஊடகச் செயற்பாட்டின் நிமித்தம் செல்லிடத்தொலைபேசியைப் பயன்படுத்துகின்ற அதேவேளை, செய்தி சேகரித்தல், தகவல் மூலங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதன் நிமித்தம் இணையத்தளங்களையும் பயன்படுத்துகின்றனர். அதேவேளை, வளங்கள் சார்ந்த மட்டுப்பாடுகளும் ஆற்றல் விருத்தி தொடர்பான மட்டுப்பாடுகளும் உள்ளூர் மொழிகளில் கருமமாற்றுகின்ற, மாகாண மட்டங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு காணப்படுகின்றன. இதனை வென்றெடுப்பதற்கு அதிகளவிலான முதலீடுகளும் ஆற்றல் விருத்திகளும் அவசியப்படுகின்றன.

பல்கள விநியோக முறைகள்

புதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை நோக்கிய இலங்கை ஊடகங்களின் நிறுவன ரீதியான மாற்றமானது மெதுவாகவும் படிப்படியாகவுமே நடைபெற்றுள்ளது. 1995 இன் பிற்பகுதிகளில் செய்திப்பத்திரிகைகள் இணைய வெளியீடுகளை ஆரம்பித்தன. தற்சமயம் பல செய்திப்பத்திரிகைகள் அவற்றுக்கே சொந்தமான இணைய வெளியீடுகள் அல்லது மின்னியல் பத்திரிகைகளைக் கொண்டுள்ளன. அதேபோல் ஒருசில ஊடகங்கள் 24 மணித்தியாலமும் செய்திகளை வெளியிடக் கூடிய இணையத்தளங்களையும் கொண்டுள்ளன. சில ஊடகங்களைப் பொறுத்தவரையில் ருவிட்டர் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் தமது சமூக ஊடகப் பின்னூ

ட்டல்களை வெளியிட்டு வருகின்றன.

இணையத்தின் மூலமாக தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை ஒலி-ஒளிபரப்புச் செய்வதற்கு அதிகளவான தடக்கொள்ளளவம் (Bandwith) அவசியமாகிறது. 2003 - 2004 காலப்பகுதியில் அகலத்தட (புரொட்பாண்ட்) இணையம் கண்டறியப்படும் வரை இதற்காக காத்திருக்கவேண்டியேற்பட்டது. [190] பல பிரதான ஒலி-ஒளிபரப்பாளர்கள் தற்சமயம் இணைய நேரலையில் ஒலி மற்றும் காணொளி நிகழ்ச்சிகளை ஒலி-ஒளிபரப்பி வருகின்றனர். பல்வேறு விதமான ஒலி-ஒளிபரப்பாளர்கள் யூ-டியூப் போன்றவற்றைப் பயன்படுத்தி, தற்சமயம் தமது நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்கின்றனர். அலைபேசிகள், மடிக்கணினிகள், தனிப்பட்ட கணினிகள், ஸ்மாட் தொலைக்காட்சிகள் போன்ற ஒரு குறிப்பிட்ட உபகரணத்தை மாத்திரம்தான் பயன்படுத்தி இவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை.

இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தமது நேயர்களுடன் உண்மையான ஊடாட்டத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இலங்கையின் பிரதான ஊடகங்களைப் பொறுத்தவரையில் குறைவாகவே காணப்படுகின்றன. மேலதிக உள்ளடக்கங்களைப் பரப்புவதன் பொருட்டு, பல்வேறு விதமான சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஆகியவற்றைப் பல செய்திப்பத்திரிகைகளும் ஒலி-ஒளிபரப்பு நிலையங்களும் பயன்படுத்துகின்றன. இருப்பினும், நேயர்களது ஈடுபாடுகள் பற்றி கண்டறிதல் பற்றிய தெளிவான உபாய முறைகள் இவற்றிடம் இல்லை.[191]

இவற்றின் சாதகமான அம்சம் என்னவெனில், சில செய்திப்பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும் ஆசிரியர் கடிதங்களை அவை ஏற்றுக்கொள்கின்றன. அதேபோல் குறுஞ்செய்திகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலமாக கிடைக்கப்பெறுகின்ற கருத்துக்களையும் சில அச்சு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. தமது நேயர்கள் பங்குபற்றும் முகமாக, பல வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள், தொலைபேசி, குறுஞ்செய்தி அல்லது முகநூல் போன்றவற்றின் மூலம் நேயர்களின் பங்குபற்றலை ஊக்குவிக்கின்றன.

பல ஊடகங்களைப் பொறுத்தவரையில், தமது பிரதான ஊடகச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாகவே இவ்விதமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. தமது உள்ளடக்கம் தொடர்பில் முழுமையான கட்டுப்பாட்டினை இழப்பதற்கு ஊடகவியலாளர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் தயங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். உதாரணமாக, சனத்தை மூலமாக (Crowd- sourcing) கொண்ட நிகழ்ச்சிகள் மிக அரிதாகவே

190 Internet in Sri Lanka: The First Five Years. Nalaka Gunawardene and Chanuka Wattegama. 2000. http://www.academia.edu/4378630/Internet_in_Sri_Lanka_The_First_Five_Years_book_chapter_written_in_late_2000_

191 Why mainstream media must embrace social media. David Brewer. 23 November 2012 http://www.mediahelpingmedia.org/training-resources/media-strategy/587-the-social-network-challenge-for-traditional-media

மேற்கொள்ளப்படுகின்றன. தமது இணையத்தள நிகழ்ச்சிகளின் வெளிப்பாடாக, எந்தவொரு பிரதான ஊடக நிறுவனமும் அல்லது செய்தி அமைப்பும் ஒரு வலைப்பூப்பதிதல் தகவலை தமது நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக வெற்றிகரமாக ஒருங்கிணைக்கவில்லை.


எண்மிய ஒலி-ஒளிபரப்பு **(Digital broadcasting)**

உலகின் பல நாடுகளில் இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், அதனை ஒலி-ஒளிபரப்புச் செய்தல், அவர்களது ஆவணக்காப்பகத்திலிருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பமானது, இந்த தசாப்தத்தில் புவிசார் ஒலி - ஒளிபரப்பாளர்களால் அனலொக் முறையிலிருந்து எண்மிய முறைக்கு மாறியுள்ளது. எண்மிய ஒலி- ஒளிபரப்பு முறை மூலம் தொலைக்காட்சி நிலையங்களுக்கு பல்வேறு விதமான நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றுள் - பல அலைவரிசைகளின் உருவாக்கம், இயக்குவதற்குக் குறைந்த செலவு, புதிய வியாபார வாய்ப்புகள் போன்றன அவற்றுள் சிலவாகும். அதேபோல், பார்வையாளர்களுக்கும் புத்தாக்க சேவைகள் பலவற்றை இது வழங்குகிறது. அவற்றுள் ஊடாட்டத் தொலைக்காட்சி, மின்னியில் சார்ந்த நிகழ்ச்சிநிரல் வழிகாட்டிகள், உயர் தெளிவு தொலைக்காட்சி (high-definition - HDTV) போன்ற புத்தாக்க ரீதியான சேவைகள் உள்ளடங்குகின்றன. இருப்பினும், இந்த எண்மிய முறையைப் பின்பற்றுவது தொடர்பில் கொள்கை மற்றும் ஒழுங்குவிதி, தொழில்நுட்ப ரீதியான பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த செயன்முறையை எப்பொழுது, எவ்வாறு பின்பற்றுவது என்பது தொடர்பில் இலங்கை பல வருடங்களாக தீர்மானிக்க முடியாத ஒரு நிலையில் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், நாட்டின் 16 தொலைக்காட்சி நிலையங்களினால் இயக்கப்பட்ட 24 புவிசார் இலவசத் தொலைக்காட்சி அலைவரிசைகள் காணப்பட்டன. இவை யாவும் அனலொக் முறையிலேயே தமது ஒளிபரப்புக்களை மேற்கொண்டன. சில நிறுவனங்கள் தமது தயாரிப்புக்களை எண்மிய முறையில் மேற்கொண்டபோதிலும், அவை தமது ஒளிபரப்புக்களை அனலொக் முறையிலேயே மேற்கொண்டன. ஏனெனில், எண்மியச் சமிக்ஞைகளைப் பெற்றக்கொள்வதற்கான கருவிகள் (receivers) பலரிடம் காணப்படவில்லை.

புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்புகளை எண்மிய முறையில் ஒளிபரப்புச் செய்வதற்கான கொள்கைரீதியான வரைவுச்சட்டகங்களை உருவாக்குமுகமாக, உப குழுவொன்றினை 2010 ஆம் ஆண்டில் வெகுசன ஊடக அமைச்சு நியமித்தது. இந்த குழுவானது பல்வேறு பொறியியலாளர்களையும் சினிமாத்துறையில் நீண்டகால

[192] https://www.itu.int/ITU-D/tech/digital_broadcasting/project-dbasiapacific/Roadmaps/db_asp_roadmap_SriLanka.pdf





உலகலாவிய ரீதியில் டிஜிடல் எண்மிய புவிசார் ஒலி-ஒளிபரப்பு தராதரங்கள் - வரைபடம் உதவி : விக்கிபீடியா, மார்ச் 2016

அனுபவமிக்கவரான கலாநிதி. டீ.பீ. நிஹால்சிங்கவையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இரண்டு காரணங்களின் நிமித்தம் எண்மியப் புவிசார் தொலைக்காட்சி ஒலி- ஒளிபரப்பில் (DTTB) ஐரோப்பிய உருவாக்க DVB-T2 முறையைப் பயன்படுத்துவதற்கு அந்தக் குழு வெளியிட்ட அறிக்கை பரிந்துரை செய்தது.

- உயர்வான வினைத்திறன், உறுதி, நெகிழ்வுத்தன்மை ஆகியவற்றை வழங்கக்கூடிய மிகவுயர்வான எண்மிய புவிசார் ஒளிபரப்பு முறைகளை DVB-T2 கொண்டுள்ளது.
- DVB-T2 உயர் தர முறையானது

193 http://www.treasury.gov.lk/news-and-events/592-digitalization-of-terrestrial-television-broadcasting-project-ru-sankya.html




இலங்கையில் டிஜிடல் மாறுகைக்கான வழிப்பாதை – **ITU** அறிக்கை, 2012

வரையறுக்கப்பட்ட அலைவரிசை நிகழ்ச்சித்திட்டங்களை தற்போதைய சகல அனலொக் தொலைக்காட்சிகளுக்கும் சம நேரத்தில் வழங்கக்கூடிய ஒரேயொரு DTTB தராதர முறையாகும்.

ஒலி-ஒளிபரப்புச் சேவைகள் நேயர்களுக்கு வழங்குபவற்றை மையப்படுத்தும் நோக்குடன் புதிய வகையிலான சேவை வழங்குநர் ஒருவரை அறிமுகப்படுத்துவதற்கான விதப்புரைகளையும் இந்த அறிக்கை கொண்டிருந்தது. இது எண்மிய ஒளிபரப்பு வலையமைப்புச் செயற்பாட்டாளர் (DBNO) என்று அழைக்கப்படும். நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற சகல ஒளிபரப்பாளர்களையும் உள்ளடக்கி பல் ஒலி-ஒளிபரப்பாக இது செயற்படும்.

இலங்கையில் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பினை (ITU, பெப்ரவரி 2012) அனலொக் முறையிலிருந்து எண்மிய முறையில் ஒலிபரப்புச் செய்வதற்கான செயல்வழிகாட்டியொன்றை உருவாக்குமுகமாக ITU இன் தொழில்நுட்ப நிபுணர் குழுவானது, இலங்கையைச் சேர்ந்த தமது சகபாடிகளுடன் 2011 இல் இணைந்து பணியாற்றினர்.[192] எண்மிய ஒளிபரப்புத் தொடர்பான அவர்களது ஆரம்பக் கட்ட நேர வரைவு பின்வருமாறு காணப்பட்டது.

- 2011 இறுதி முதல் 2012 நடுப்பகுதி வரை : வட மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகியவற்றில் DTTB முன்னோடி ஒலி-ஒளிபரப்புச் சேவைகளை மேற்கொள்தல்.
- 2014 நடுப்பகுதி: எட்டு DTTB பிரதான சேவை நிலையங்களிலிருந்து DTTB சேவைகளை மேற்கொள்தல்.
- 2015 இறுதி : மேல் மாகாணத்தில் அனலொக் முறையை முடிவுறுத்தல்.
- 2017 இறுதி : அனலொக் முறையை முழுமையாக முடிவுறுத்துதல்.

இருப்பினும், மேற்படி அட்டவணையை பூரணப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. ஏனெனில், 2014 நடுப்பகுதியில் ராஜபக்ஷ அரசாங்கமானது, ஜப்பானிய தராதரம்மிக்க

194 http://www.sundaytimes.lk/160327/business-times/u-turn-by-sri-lanka-suspended-tv-digitalisation-deal-back-to-japan-187438.html

ISDB-T, முறையை ஏற்றுக்கொள்வதென அறிவித்தது. அத்தோடு, புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை எண்மிய முறைப்படுத்தும் நோக்கில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனமான (JICA) 13,717 மில்லியன் யென் (சுமார் 17.4 பில்லியன் இலங்கை ரூபா) கடனாக ஜப்பானிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முகமாக இருதரப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது.[193]

ஒரு வருடமாகியும், புதிய அரசாங்கமானது DTTB. தொடர்பில் தனது கொள்கையை அறிவிக்கவில்லை. அரசாங்கமானது ஜப்பானிய தராதர முறையை நாடி நிற்குமென மார்ச்சில் ஊடகங்கள் தெரிவித்தன. இத்தீர்மானம் அமைச்சரவை பொருளாதார முகாமைத்துவக் குழுவிற்கும் அறிவிக்கப்பட்டது.[194]

## பரிந்துரைகள்

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அனலொக் முறையிலிருந்து எண்மிய முறையில் ஒளிபரப்புச் செய்வது தொடர்பான தெளிவான காலவரையறை மற்றும் உபாய முறை ஆகியவற்றை ஒலி-ஒளிபரப்புத் துறையைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கம் விருத்தி செய்தல் வேண்டும். இதனை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஸ்தாபிக்கப்படுவதற்காக முன்மொழியப்பட்டுள்ள சுயாதீன ஒலி-ஒளிபரப்பு ஒழுங்கமைப்பு மூலம் இந்த உபாய முறைகளானவை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மை மிக்கவையாகவும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். எண்மிய மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், அனலொக் கொள்கையில் காணப்பட்ட பல முரண்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான குறைபாடுகள் ஆகியவற்றைத் தீர்ப்பது முக்கியமானதாகும்.

- பல்கள ஊடக நிகழ்ச்சிகளைப் பரப்புதல் பற்றிய அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் நிகழ்ச்சிகள் தொடர்பிலான களஞ்சியம் ஒன்றை உருவாக்குவதைப் பொதுக்கடப்பாடாக ஊடக அமைச்சு ஏற்று உருவாக்குதல் வேண்டும் (BBC இன் iPlayer: https://en.wikipedia.org/wiki/BBC_iPlayer போன்றதான). இவ்வாறு நிகழ்ச்சிகளைக் களஞ்சியப்படுத்துவதானது பயன் தரக்கூடியதாகவிருக்கும். குறிப்பாக கல்வித்துறையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுபவர்களுக்கு இது பயன்மிக்கது.

- மிகவும் பொருத்தமான எண்மியக் களங்கள், உள்ளடக்கங்களை உருவாக்கக் கூடிய கருவிகள் மற்றும் தமது வெளியீடு மூலம் பல்வேறு வகையான நேயர்களை சென்றடையக்கூடிய விடயங்களைக் கருத்திற்கொண்டு எண்மிய ஊடகங்களுக்கான உபாயங்களை இலங்கையிலுள்ள ஊடக அமைப்புகள் உருவாக்குதல் வேண்டும். சமூக ஊடகப் பயன்பாட்டிற்கு அவசியமான நிறுவன ரீதியான கொள்கைகள், சிறந்த நடைமுறைகள், புலமைச் சொத்துரிமைகள், ஆவணக் காப்பக நிகழ்ச்சிகள், ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக எண்மிய ஊடக உபாயங்கள் காணப்படல் வேண்டும்.

ஆ

## அச்சு ஊடகம், ஒலி-ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல்

### 5 02 விளிம்பு நிலை மக்களும் தொடர்பாடல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள்

ஊடகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான கருவிகளை உரிமையாகக் கொண்டுள்ளவர்களின் அடிப்படையில் பிரதான ஊடகங்கள் இலங்கையில் எந்தளவிற்கு சென்றடைகின்றன என்பதை உணரமுடியும்

2012 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீடு மற்றும் வீட்டு கணக்கெடுப்பு ஆகியவற்றின் பிரகாரம், செல்லிடத் தொலைபேசியானது (78.9% வீடுகளில் காணப்பட்டது) தொலைக்காட்சிப் பெட்டிகளை (78.3%) விட மிகப் பொதுவான தொடர்பாடல் சாதனமாகக் காணப்படுகிறது. இலங்கையில் செல்லிடத் தொலைபேசியே தொடர்பாடல்களைப் பொறுத்தவரையில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவது இடம், வானொலிக்குக் கிடைத்துள்ளது. இது 68.9% வீடுகளில் காணப்படுகிறது. 42.4% வீடுகளில் நிரந்தரத் தொலைபேசி காணப்படுகிறது. 15% வீடுகளில் கணினிகளும் 5.6% வீடுகளில் மடிக்கணினிகளும் காணப்படுகின்றன.[195]

செல்லிடத்தொலைபேசி அல்லது தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவற்றின் உரிமை தொடர்பில் நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இல்லை. இருப்பினும், பெருந்தோட்டத்துறையைப் பொறுத்தவரையில் இத்தகைய கருவிகளைச் சொந்தமாகக் கொண்டவர்கள் குறைவாகவே

195 Census of Population and Housing 2012: Key Findings http://countryoffice.unfpa.org/srilanka/?publications=12333

காணப்படுகின்றனர்.[196]

ஸ்மார்ட் தொலைபேசிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக, ஊடகம்சார் நுகர்வுகளில் எத்தனை பேர் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிதல் கடினமாகிறது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையில் சுமார் 3..5 மில்லியன் மக்கள் இதனைப் பயன்படுத்துவதாக நம்பப்படுகிறது. குரல் ரீதியான அழைப்புகள், குறுஞ்செய்தித் தகவல்கள், வானொலியைச் செவிமடுத்தல், இணையத்தளத் தேடல்கள், VOIP மற்றும் வைபர், வட்ஸ்அப் போன்ற உடனடித் தகவல் சேவைகள் ஆகியவற்றுக்காக ஸ்மார்ட் தொலைபேசிகள் பயன்படுத்தப்படுகின்றன.

'ரெலிகொம்'மின் அண்மைய புள்ளிவிபரத்தின்படி (2015 செப்டம்பர் 30 வரையில்), மொத்தமாக 2,644,366 பேர் இலங்கையில் நிரந்தரத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். (2011 இல் 3,608,392 பேர் பயன்படுத்தினர், நிலைமை வீழ்ச்சிகண்டுள்ளது என்பதைக் கருத்திற்கொள்ளவும்). அதேவேளை, சுமார் 23,771,580 பேர் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர் (100 நபர்களுக்கு 113.4 என்ற விதத்தில்). சில நபர்கள் பல கணக்குகளை வைத்திருப்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.[197]

கடந்த 2015 செப்டம்பர் இறுதிவரை, சுமார் 3,373,388 பேர் அலைபேசி மூலமாக இணைய வசதிகளைப் பெற்றிருந்தனர். மேலும், 631,523 பேர் நிரந்தரத் தொலைபேசி மூலம் இணைய வசதியைப் பெற்றிருந்தனர். இரண்டிலுமாக, மொத்தம் 4,004,911 கணக்குகள் இருந்தன. அதனடிப்படையில், சுமார் 84 வீதமானவர்கள் இணையத்தளங்களை அலைபேசி கருவி மூலமாகவே அணுகிப் பெறுகின்றனர். அதேவேளை, பயன்படுத்துநர்கள் மத்தியில் சில கணக்குகள் பகிரப்பட்டுள்ளன. இதனடிப்படையில் நாட்டில் சுமார் 5 முதல் 6 மில்லியன் வரையிலானவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பதை ஊகிக்கக்கூடியதாகவுள்ளது. அதாவது, மொத்த சனத்தொகையில் சுமார் 25 சதவீதமானவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

விளிம்புநிலை மக்களது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாடு

விளிம்பு நிலை மக்களைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைகள் எவ்வாறு சென்றடைகின்றன என்பது தொடர்பில் திட்டவட்டமான தகவல்கள் இல்லை. இருப்பினும், 1990 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ரெலிகொம் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், உலகிலேயே குரல் அழைப்புகள் மற்றும் தரவுப் பரிமாற்றம் தொடர்பில் மிகக் குறைவான கட்டணங்களே இலங்கையிலும் அறவிடப்படுகின்றன (சந்தைப் போட்டி நிலைமைகள் காரணமாக).

196 Household Income and Expenditure Survey (HIES) 2012-13, covering sample of 25,000 households: http://www.statistics.gov.lk/HIES/HIES2012_13FinalReport.pdf

197 http://www.trc.gov.lk/2014-05-13-03-59-39/statistical-overview.html

198 http://lirneasia.net/projects/2010-12-research-program/teleusebop4/

இதன் காரணமாக குறைந்த வருமானமுடைய மக்களும் அலைபேசிகளை குறிப்பாக செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் காணப்படுகின்ற தடைகள் குறைக்கப்பட்டுள்ளன.[198]

இருப்பினும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. உதாரணமாக, 3G மற்றும் 4G சமிக்ஞைகளை நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஒரேவிதமாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது. நகர மற்றும் கிராமப் புறங்களில் சனத்தொகை செறிவாகக் காணப்படுகின்ற பிரதேசங்களிலும் அதிக பயன்படுத்துநர்கள் காணப்படுகின்ற பிரதேசங்களிலுமே இவ்வகையான சமிக்ஞைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இலங்கை சமிக்ஞை தொடர்பான வரைபடம் மூலமாக இதனை அறிந்துகொள்ள முடியும் http:// opensignal.com.

ஸ்மார்ட் தொலைபேசிகள் உள்ளடங்கலாக, ஏனைய அலைபேசிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுவதன் காரணமாக, இலங்கையில் எண்மியப் பயன்பாடு இடைவெளி (digital divide) எவ்வாறு குறைந்துள்ளது என்பதை சில செயன்முறை ஆய்வுகள் மூலம் கண்டறிய முடிந்தது. குறைந்த வருமானமுடைய மக்கள் அல்லது பிரமிட்டின் அடித்தளத்தில் உள்ளோர் (bottom of the pyramid) தொலைபேசிகளை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்ற ஆய்வொன்றினை, கொழும்பை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை ஆராய்ச்சி நிறுவகம் - LIRNEasia, 2005 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொண்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கேள்வியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வின் பிரகாரம், விளிம்பு நிலை மக்களாக இருந்தாலும் தொலைபேசிப் பயன்பாட்டினைப் பொறுத்தவரையில் மற்றவர்களுக்கும் அவர்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கவில்லை. தொலைபேசி ஒன்றைச் சொந்தமாக வைத்திருத்தல் தொடர்பிலான ( இலங்கையில் செல்லிடத் தொலைபேசி) அவசரகாலத் தொடர்பாடல்கள், சமூக வலையமைப்பு ரீதியான நன்மைகள் ஆகியன தொடர்பிலான மேம்பட்ட தனிநபர் பாதுகாப்பினை அனைவரும் ஒரேவிதமாகவே மதிக்கின்றனர். இந்த ஆய்வின் பிரகாரம் ஆண்களும் பெண்களும் தொலைபேசிகளை பெரும்பாலும் ஒரே விதமாகவே பயன்படுத்தி வருகின்றனர் என்பதும் அறியக்கிடைத்தது.[199]

LIRNEasia's Teleuse@BOP யின் இலங்கை பற்றிய ஆய்வு மற்றும் ஏனைய வளர்ந்து வரும் ஆசிய சந்தைகளின் நிலவரப் பிரகாரம், தொலைபேசிகளின் பயன்பாடு, குறிப்பாக விளிம்புநிலை மக்களது பயன்பாடு, பிரமிட்டின்

BOX 24

## உள்ளடக்கும் தகவல் சமூகங்களுக்கான சமுதாய ஊடகம்

உள்ளடக்கும் தகவல் சமூகமொன்றிலும் (Inclusive information society) பின்தங்கிய மற்றும் ஏனைய விளிம்பு நிலை சமுதாயங்களும் தொடர்பாடல்களை அணுகிப் பெறக்கூடியதாயிருத்தல் வேண்டும். இதன் நிமித்தம், அரசாங்கத்தின் விசேட கவனங்களும் முதலீடுகளும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. இவை தொடர்பில் சமுதாய ஊடகங்கள் முக்கிய வகிபாகத்தினைக் கொண்டிருக்க முடியும்.

சமுதாய அல்லது சமூக ஊடகமானது பல வடிவங்களில் செயற்பட முடியும் : சமுதாய செய்தித்தாள்கள், சமுதாய செய்திப் பலகைகள், சமுதாய பல் ஊடக நிலையங்கள் போன்றன அவற்றுள் சிலவாகும். இருப்பினும், இதுவரையில் சமூக வானொலியே சமுதாய ஊடகங்கள் மத்தியில் அதிக வினைத்திறன் மிக்கதாகக் காணப்படுகிறது. ஏனெனில், இந்த வானொலியை பலர் பங்குபற்றுவதற்கு ஏற்ற விதத்தில் உயர்வான முறையில் பயன்படுத்தக் கூடியதாகவிருப்பதுடன் இது தொடர்பிலான செலவுகளும் குறைவானதாகவே காணப்படுகின்றன.

அணுகிப்பெறல் (Access) மற்றும் பங்குபற்றுதல் (Participation ) ஆகியன சமுதாய ஊடகத்தின் மிக முக்கியமான இரண்டு பரிமாணங்கள் ஆகும். இருப்பினும் விளிம்பு நிலைச் சமுதாயம் பற்றி பிரதான ஊடகங்கள் எந்தளவிற்கு அக்கறையுடன் செயற்படுகின்றது இ எவ்வாறு அறிக்கையிடல் நிகழ்கிறது என்பது தொடர்பில் என்பதில் இத்தகைய அம்சங்கள் மாறுபடுகின்றன.

இது தொடர்பிலான வித்தியாசத்தை 1994 இல் பிரான்ஸஸ் பெரிகன் (Frances Berrigan) என்பவர் 'சமுதாய ஊடகத்தை' வரைவிலக்கணப்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்றில் பின்வருமாறு விளக்கியுள்ளார். "விசேட தேவைகள் அல்லது அக்கறைகளைக் கொண்ட இன அல்லது சிறுபான்மைக் குழுக்கள் போன்றவர்களது நிகழ்ச்சிகளை இனங்காண்பதற்கே குறிப்பாக குறிப்பிட்ட சமுதாய குழுக்களுக்கென வடிவமைக்கப்பட்டவற்றை இனங்காண்பதற்கே 'சமுதாய ஊடகம்' போன்ற சொற்பிரயோகங்கள் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டன. இவற்றைத் தவிர, நிகழ்ச்சித் தயாரிப்புச் செயன்முறையில் சிறிதளவே மாற்றங்கள் காணப்பட்டன. தலைப்புகள் தொழில்வாண்மைமிக்க தொடர்பியலாளர்களால் குறிப்பிட்ட முறையில் தெரிவு செய்யப்பட்டதுடன் நேயர்களது அக்கறை, அவர்களது தேவைகள் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இவை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், சமுதாய ஊடகத்தில் அது எவ்விதமான நோக்கங்கள் தொடர்பினதாக இருந்தாலும், சமுதாயமானது தீர்மானங்களை மேற்கொள்கின்றபோது அதனை அச்சமூகத்தினால் பயன்படுத்தக்கூடியதாக ஊடக இசைவாக்கங்கள் காணப்படல் வேண்டும். சமுதாய உறுப்பினர்களுக்குத் தேவையேற்படுகின்ற பொழுது அவர்கள் தகவல்கள், கல்வி, பொழுதுபோக்கு போன்ற விடயங்களை ஊடகங்களை அணுகிப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருத்தல் வேண்டும். இங்கு திட்டமிடுநர்களாக, தயாரிப்பாளர்களாக, செயலாற்றுநர்களாக, பங்குபற்றுநர்களாக - எனச் சமுதாய உறுப்பினர்களே இந்த ஊடகங்களில் காணப்படுகின்றனர்.
சமுதாயத்திற்கு சேவை என்பதற்குப் பதிலாக சமுதாயத் தேவைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தக் கூடிய சமுதாயமாகவே இவர்களே திகழ்வர்."

மூலம்: சமூகத் தொடர்பாடல்கள்: அபிவிருத்தியின் சமுதாய ஊடகத்தின் வகிபாகம், Frances J Berrigan. 1994 UNESCO, pp7-8 http://unesdoc.unesco.org/images/0004/000440/044035eo.pdf

அடிமட்டத்திலேயே காணப்படுகிறது என்பதை அரசாங்கத்திற்கு உணரச்செய்தல் வேண்டும். இதன் கண்டறிதல்களின் பிரகாரம், வரியிடல் மற்றும் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, தொலைபேசியினைப் பதிவுசெய்தல் பற்றிய விவாதங்களை சர்வதேசச் சேவைகள் கொள்கைகள் தொடர்பில் ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்பம் மற்றும் வியாபார ரீதியான மாதிரிகள் ஆகியவற்றில் நிகழ்கின்ற புத்தாக்கச் செயற்பாடுகளானவை, அடிமட்ட மக்களுக்கு வினைத்திறனுடன் பயன்படுத்தக்கூடியனவாக வேண்டும். அதற்கேற்ற கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும். அத்தோடு, அடிமட்ட மக்கள் மத்தியில் தொலைபேசிப் பயன்பாடுகள் தொடர்பில் காணப்படுகின்ற வளர்ந்து வருகின்ற அதிகமான கேள்விகளும் (demand) கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.[200]

199 http://lirneasia.net/2007/12/documentary-film-highlights-telephone-revolution-in-asias-emerging-markets/

200 http://lirneasia.net/projects/icts-the-bottom-of-the-pyramid/

“தற்சமயம் இலங்கையில் அதிகமானவர்கள் இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். மொழி இவர்களுக்கு ஒரு தடையல்ல. யுனிகோட் எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலும் பல விடயங்களை மக்களால் வாசிக்கக் கூடியதாகவுள்ளது. இணையத்தளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய வலைப்பூக்கள் போன்றவற்றில் மொழிப் பிரச்சினை ஒரு தடையல்ல. எனது மதிப்பீட்டின் பிரகாரம், 90 சதவீதமான இலங்கை அரசாங்க அலுவலர்கள் தற்சமயம் இணையத்தை தமது உத்தியோகபூர்வக் கடமைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அதேபோல் அரசாங்க அதிகாரிகள் பரவலாக கையடக்கத் தொலைபேசிகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுள் சுமார் 40 வீதமானவர்கள் ஸ்மார்ட் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். பல இலங்கையர்களைப் பொறுத்தவரையில் ஸ்மார்ட் தொலைபேசிகளையே இணையத்திற்குள் பிரவேசிப்பதற்கான சாதனமாகப் பயன்படுத்துகின்றனர்.

“இருப்பினும் இணையத்தளம் மூலமாக உருவாக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற விடயங்கள் இலங்கையைப் பொறுத்தவரை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. சிங்கள மொழியைப் பொறுத்தவரையில் மிகக் குறைவாகவே இது காணப்படுகிறது. இணையத்தளம் மூலமாக பல விடயங்களைத் தயாரித்து அதனை மேம்படுத்திப் பரிமாறிக்கொள்ளக் கூடிய நிலைக்கு எமது மக்கள் வருவதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது”.

ஹார்ஷா விஜயவர்தன, துறைத் தலைவர் / ஆலோசகர், கொழும்புப் பல்கலைக்கழக கணினிப் பிரிவு (UCSC)

பிரஜைகள் ஊடகவியலின் எழுச்சி

குடியுரிமை சார் ஊடகத்தின் முன்னோடிச் செயற்பாட்டளரும் ஆய்வாளருமான டான் கில்மர் குறிப்பிட்டதன் பிரகாரம், “ஊடகவியலில் எழுமாறான செயற்பாடுகள்” எனும் கருத்து கவனிக்கத்தக்கது. இவரின் கூற்றுப்படி, ஊடகவியலில் எழுமாறான செயற்பாடுகளை செயலாற்றும் முகமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளையும், தளங்களையும் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது, பிரஜைகள் ஊடகவியலுக்கும் சமூக ஊடகத்திற்கும் புதிய அடித்தளம் இட்டதோடு, இந்த ஊடகங்களைப் பயன்படுத்துபவர்கள் தம்மைச் சூழ நடக்கின்ற நிகழ்வுகளைக் கண்டறிவதுடன் தமது கருத்துக்களையும் எண்ணங்களையம் எண்மிய முறை மூலமாகப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பளித்தது.

கொழும்பு பல்கலைக்கழக ஊடகவியல் பிரிவைச் சேர்ந்த கிரிஷான் ஜே. ஸ்ரீவர்த்தன குறிப்பிட்டதன் பிரகாரம் “செய்திப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் அவற்றுக்கே உரிய சில பண்புகள் காணப்படுவதன் காரணமாக இத்தகைய பாரம்பரிய வெகுசன ஊடகங்களில் தமது பின்னூட்டல்களைத் தெரிவிப்பதற்கும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்குமான வாய்ப்புகள் வெகுசன ஊடக வாடிக்கையாளர்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. இணையத்தளங்கள், வலைப்பூப் பதிவுகள், சமூக ஊடகங்கள் ஆகியன அவற்றின் பயன்பாட்டாளர்களுக்கு தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் பகிர்ந்துகொள்வதற்கான அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்தியதுடன், ஊடகவியலாளர்கள் என்ற முறையில் அவர்களது ஆக்கங்களை உருவாக்கி, வெளியிடுவதற்கான வாய்ப்பினையும் நல்கியது. புதிய ஊடகக் கருவிகள் இலங்கைப் பயன்படுத்துநர்கள் அல்லது நேயர்களுக்கு நன்கு பரிச்சயமானதுடன், அதனால் நாட்டில் ஊடகவியலைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது.”[201]

மக்கள் ஊடகவியலின் ஆரம்ப மூலமாக வலைப்பூப் பதிதல்கள் (Blogs) காணப்படுகின்றன. இது, 1990 இன் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்றது. இணைய அகலத்தடச் சேவைகள் அதிகரித்ததன் விளைவாக, அதிகமானவர்கள் ருவிட்டர் (சிறிய வலைப்பூப் பதிதல்கள்), முகநூல் (சமூக வலையமைப்பு), இன்டர்கிராம் (படங்களைப் பரிமாறிக்கொள்ளல்), யூ ரியூப் (விடியோ பகிர்வு) போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். அண்மைக்காலமாக ஊடாட்டப் படங்கள், வரைபடங்கள், ஊடகப் பகிர்தல் சேவைகள், வட்ஸ்அப், வைபர் போன்றனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நலன்களை மையமாகக் கொண்ட வலைப்பூப் பதிதல்கள் மெதுவாக வளர்ந்து வந்த போதிலும், இவை 2004 டிசம்பரில் இந்து

201 Contribution of Citizen Journalism as a Tool for Development Communication in Sri Lanka. Krishan J Siriwardhana. http://arts.cmb.ac.lk/sites/default/files/content/title22.pdf

சமுத்திரத்தில் ஏற்பட்ட சுனாமியின் பின்னர் உறுதியாக வளர்ச்சி கண்டன. பிரஜைகள் ஊடகவியலின் ஒரு திருப்புமுனையாக இதனைக் கருதமுடியும். அதனைத் தொடர்ந்துவந்த தசாப்தத்தில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான வலைப்பூப் பதிதல்கள்களானது இலங்கையர்கள் வெளிநாட்டில் வசிக்கின்ற தம் உறவுகளுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக, பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாக கவிதைகள், கட்டுரைகள், கற்பனா இலக்கியங்கள், போன்ற பல்வேறு நிகழ்வுகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. சில வலைப்பூப் பதிதல்கள் காத்திரமான அரசியல் சமூகக் கருத்துக்களை எடுத்துரைத்த அதேவேளை, மேலும் சில புதிய ஆக்கபூர்வமான எழுத்துக்கள், கட்புல ரீதியான திறன்கள் ஆகியவற்றுக்குக் களம் அமைத்துக்கொடுத்தன.[202]

ஒரு ஆய்வாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் இலங்கையில் 3000 இற்கும் மேற்பட்ட வலைப்பூப் பதிதல்கள் காணப்படுவதாகவும் இவை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழியில் வெளியிடப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.[203] அடுத்து, 2016 பெப்ரவரியில் புகழ்பெற்ற வலைப்பூப் பதிதலான கொட்டு (Kottu) 1,750 இலங்கை வலைப்பூப் பதிதல்களை தனது தன்னியக்கச் சுய பதிவுச் சேவையில் கொண்டிருந்தது.[204] வலைப்பூப்

202 Blogging in Sri Lanka: A New Platform for Creativity? http://nalakagunawardene.com/2015/04/26/a-k-lit-fest-session-on-blogging-in-sri-lanka-a-new-platform-for-creativity/

203 http://www.slideshare.net/NalakaG/media-reforms-in-lanka-big-picture-ideas-by-nalaka-gunawardene

204 http://www.kottu.org/

BOX 25

## இலங்கையின் முதல் பிரஜைகள் ஊடகவியலாளர்கள்

சாதாரண மக்களிடம் பிரஜை ஊடகவியலாளர்கள் பற்றிய அடிப்படை வரைவிலக்கணங்களைக் கூறுகின்றபோது, அவர்கள் எவ்வித தங்குதடையுமின்றி, இது தொடர்பில் இலங்கைக்கு நீண்ட வரலாறு உண்டெனக் குறிப்பிடுவர். சீகிரிய சுவர் ஓவியங்கள் மற்றும் 5ஆம் நூற்றாண்டில காசியப்ப அரசனால் கட்டப்பட்ட சீகிரிய கோட்டை ஆகியவற்றை நாம் நோக்குகையில் இதனை அடிப்படையாகக் கொண்டு பல சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ளன என்பதை உணர முடிகிறது (6 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை). இவற்றை விளங்கிக்கொள்ளும்போது, அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் அவர்களது அபிலாஷைகள் போன்றன பற்றி அறிய முடியும்.

அண்மைக்காலமாக மக்களது கருத்து வெளிப்பாடுகள், பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று வருகின்றன. இது “கவிகொளய” (கவி நயத்துடன் தாளில் எழுதப்படும் விடயங்கள்) முதல் “கெள பத்தரய” (அநாமதேயக் கடிதங்கள்) போன்றவற்றை உள்ளடங்கும். கடந்த இரண்டு தசாப்தங்களாகவே இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்டும் பல்வேறு விதமான தகவல்கள் வெளிவருவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இவற்றின் மூலம் பல்வேறு விதமான கருத்துக்கள், உலகளாவிய விடயங்கள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆராயப்படுகின்றன.

பதிதல்களுக்கிடையிலான வாசகர்கள் மற்றும் இடைச்செயற்பாடுகள் ஆகியன பல மட்டங்களில் மாறுபட்டதாகக் காணப்படுகின்றன. சில, சுமாரான வாசகர்களைக் கொண்டிருந்த அதேவேளை, கருத்துக்களையும் கலந்துரையாடல்களையும் மையமாகக் கொண்ட புகழ்பெற்ற வலைப்பூப் பதிதல்கள் அதிகமாகவே காணப்பட்டன.

வலைப்பூப் பதிதல்கள் பயன்படுத்துநர்கள் பாரிய புதிய ஊடகமான பிரஜைகள் ஊடகவியல் சார்ந்த சூழலுக்கு (new media eco system ) ஏற்றவர்களாகக் காணப்பட்டனர். தொடர்ச்சியாக வளர்ச்சிகண்டு வருகின்ற வலைப்பூப் பதிதல்கள் பற்றி இதுவரை ஊடக ஆய்வாளர்களினால் தொடர்பான முழுமையான கற்கை மேற்கொள்ளப்படாதபோதிலும் எமது பொதுவெளியின் முக்கிய அங்கமாக இது திகழ்கிறது.

ஆய்வாளரும் புதிய ஊடகச் செயற்பாட்டாளருமான சஞ்சன ஹத்தொட்டுவவின் கருத்தின் பிரகாரம், மரணங்கள், மனித வீழ்ச்சிகள், இலங்கையில் ஏற்பட்ட சிவில் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட சமூக இழப்புகள் மற்றும் பல பிரதான ஊடகங்களினால் மனவெழுச்சியை அதிகரிக்கக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட்ட யுத்த காலச் செயற்பாடுகள் போன்றன தொடர்பில் அர்த்தமான முறையில் அறிக்கையிடும் செயற்பாடுகளில் பிரஜைகள் ஊடகவியல் காத்திரமான முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. இருப்பினும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகள் காணப்படுவதனை மாத்திரம் வைத்து பொதுமக்களின் கூட்டுணர்வுமிக்க பிரஜைகள் ஊடகவியலை உறுதிப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

மேலும், "பிரஜைகள் ஊடகவியல் தொடர்பான புதிய காலமானது மொழியியல் ரீதியாக பல குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. மேலும், செயலாண்மைத்திறன் மற்றும் சமூக, அரசியல் விழுமியங்கள் குன்றியதாகவும் காணப்படுகிறது. இங்கு மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் சுவாரசியமற்றவையாகவும் வெறும் உணர்ச்சிபூர்வமானதாகவும், பொறுமையற்றதாகவும், பொருத்தமற்றதாகவும் உணர்வுகளைத் தூண்டக்கூடியதாகவும் காணப்படுகிறது" என அவர் குறிப்பிடுகின்றார். "இருப்பினும் இத்தகைய பிரஜைகள் ஊடகவியல் மூலம் அனைத்து மக்களுக்கும் ஆண், பெண் வேறுபாடுகளின்றி, இன, சாதி, சமய, வகுப்பு வேறுபாடுகளின்றி தமது கருத்துக்களைச் சுயமாக வெளியிடுவதற்கான வாய்ப்புகள் கிடைப்பதுடன், சமூகம் பற்றிய பல்வேறு வகையான கருத்துக்களைப் புலப்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் கிடைத்துள்ளன". எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.[205]

சஞ்சன ஹத்தொட்டுவ, 2006 இல், Groundviews.org என்னும் இலங்கையை

205 WAN-IFRA Blog, 2013 interview with Sanjana Hattotuwa: http://blog.wan-ifra.org/2013/05/02/citizen-journalism-platform-groundviews-thrives-in-sri-lanka

மையமாகக் கொண்ட பிரஜைகள் இணையத்தளத்தை உருவாக்கினார். யுத்த காலத்தின்போதும் அதற்குப் பின்னரும் பாதுகாப்பான முறையில் கருத்துக்களை விவாதிக்கவும் கலந்துரையாடவும் இதில் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. நல்லாட்சி, மனித உரிமைகள், கலை, இலக்கியம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாற்றுக்கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சிறந்த தளமாக இது திகழ்கின்றது. பல்வேறு எண்ணக்கருக்களையுடைய மக்கள் மத்தியிலிருந்து பரந்த கருத்துக்களைத் பரிமாறுவதற்கான வாய்ப்புக்களை இது வழங்கியதுடன் புலனாய்வு ஊடகங்களுக்கான, நுட்பங்களையும் காண்பியத்தரவுகள் மற்றும் திறந்த - தரவு சார்ந்த ஊடகவியல் பண்புகளையும் இது கொண்டுள்ளது.

சஞ்சன ஹத்தொட்டுவ மேலும் குறிப்பிடுவதாவது, "நாட்டில் அபூர்வமான சில விடயங்களை நாம் தோற்றுவித்துள்ளோம். இது விவாதத்திற்கும் கலந்துரையாடலுக்கும் பாதுகாப்பான ஒரு தளமாகும். இங்கு, நாகரீகமான முறையிலே மாறுபட்ட கருத்துக்களை எடுத்துரைக்க முடிகின்றது. இப்பொழுது சம்பவங்களையும் கதைகளையும் எடுத்துக் கூறுவதற்கு பல்வேறு விதமான வடிவங்களையும் நாம் பிரயோகிக்கின்றோம்: புகைப்படம், குறுங்காணொளி, நீண்ட இதழியலின் வடிவம் போன்றன அவற்றுள் சிலவாகும். நாட்டில் இத்தகைய விடயங்களுக்கு நாம் மாத்திரமே களம் அமைத்துக் கொடுக்கின்றோம்."[206]

'கிரவுண்ட் வியூஸ்' ஆனது, தனியொரு இணையத்தளம் என்ற நிலைக்கும் அப்பால் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. முகநூல் மற்றும் ருவிட்டர் போன்றவற்றில் காணப்படுகின்ற பின்னூட்டல்களையும் உள்ளடக்கியதாக இது திகழ்கின்றது. இது, சிங்கள மொழியில் Vikalpa.org எனவும் தமிழ் மொழியில் Maatram.org எனவும் இணையத்தள சமூக ஊடகப் பின்னூட்டல்களையும் கொண்டுள்ளது. தனிப்பட்ட கலந்துரையாடலுக்கும் பொதுக் கலந்துரையாடலுக்குமென தொடர்ச்சியான பல்வேறுவிதமான பரீட்சார்த்த முயற்சிகளை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். 2010 இலிருந்து கலந்துரையாடல்களானது பல்வேறு சமூக ஊடகங்களை நோக்கி, அதாவது முகநூல் மற்றும் ருவிட்டர் போன்றவற்றை மையமாகக் கொண்டு காணப்படுகின்றது. வழமையான வலைத்தள நிகழ்வுகளும் கூட இவற்றில் இடம்பெறுகின்றன. அனுபவமிக்க வலைப்பூச் செயற்பாட்டாளரான அகமட் நிசாரின் கருத்துப்படி, சமூக ஊடகங்களின் வளர்ச்சியின் காரணமாக வலைப்பூச் செயற்பாடுகள் வீழ்ச்சி கண்டுள்ளன.[207]

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில், முற்போக்கான சமவுரிமை சமத்துவத்துடன்

206 Opinion: The Promise of Citizen Journalism, by Sanjana Hattotuwa. https://www.opendemocracy.net/the_promise_of_citizen_journalism

207 http://www.c3magazine.com/a-dying-breed-how-social-networks-killed-the-sri-lankan-blogosphere/

கூடிய சமுதாயமானது பொறுமையற்ற எதிர்த்தாக்குதல்களை நடத்தக்கூடிய நிலப்பிரபுத்துவம், அரச அதிகாரம் மற்றும் கடும் தேசியவாதம் போன்ற தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மாறுபாடுள்ள கருத்தொன்றைக் கொண்டிருந்தமைக்காக வாய்மொழி மூலமான அச்சுறுத்தல்களை மாத்திரமல்ல, சிலவேளைகளில் உடல் ரீதியாகவும் மக்கள் தாக்கப்படுகின்றனர். இவ்வகையான பொறுமையின்மைகள் சமூக ஊடகங்களிலும் பரவிக் காணப்படுகின்றன. இழிவான செயல்களையும் அவதூறான விடயங்களையும் பரப்பும் முகமாக புனைப்பெயர்களிலும் அநாமதேய செய்திகள் மூலமாகவும் இனவாதிகள், மதவாதிகள், சதிகாரர்கள் மற்றும் வன்முறைகளைத் தூண்டுபவர்களும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இலங்கையில் சமூக ஊடகங்களின் பயன்பாடு

சமூக ஊடகங்களின் பல்வகைத்தன்மை, அவற்றின் பரிணாம வேகம், வளர்ந்துவரும் செல்வாக்கு ஆகியன பரிந்துரை (advocacy) மற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு (activist) வாய்ப்புகளையும் சவால்களையும் ஏற்படுத்தியுள்ளன. இவற்றோடு தொடர்புடைய போக்குகளைப் பிரித்தறிவதற்கும் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பிலான ஆவணங்களைத் திட்டவட்டமாகப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான அவசியமான தகவல் தொழில்நுட்பத் தொடர்பாடல் பற்றிய அவதானிப்புசார் விடயங்கள் (ICT Observatory) இலங்கையில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன.

இந்த இடத்தில் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பு ஒன்றினைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். அதாவது, Manthri.lk -- என்ற மும்மொழிகளிலுமான இணையத்தளத்தின் மூலமாக, இலங்கையிலுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய செயற்பாட்டுத் தகுதிநிலைகளை அறிந்துகொள்ள முடியும். பாராளுமன்ற உத்தியோகபூர்வ அறிக்கையான ஹன்சார்ட்டில் உள்ள விடயங்கள் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றுக்கெனத் தனியான குறியெண்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த இணையத்தளத்திலிருந்து அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதேபோல், 'வெரிட்டே ரிசேர்ச்' சிந்தனைக்குழுமமானது, உபாய ரீதியான பகுப்பாய்வுகளை வழங்குவதுடன், தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கும் கருத்துக்களைத் தோற்றுவிப்பவர்களுக்கும் அவசியமான ஆலோசனைகளையும் வழங்குகின்றது.[208]

பல்வேறு விதமான சிவில் சமூக அமைப்புகளின் அனுபவங்களின்படி, பரிந்துரைக்கும் செயற்பாடுகளானவை இணையங்கள், சமூக ஊடகங்கள் மூலமாகவும் அதேபோல், மரபு

208 http://www.manthri.lk/?locale=en

சார்ந்த அணுகுமுறைகளான ஊடக மாநாடுகள், ஊடக வெளியீடுகள், பொது ஊர்வலங்கள், அவசியமானவிடத்து அமைதியான முறையில் வீதி ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்கின்றபோது, அவற்றின்வழியாகவும் வினைத்திறன் மிக்க முறையில் மேற்கொள்ளப்பட முடியும் என்பதாகும்.

## பரிந்துரைகள்

- சமூக ஊடகச் செயற்பாடுகள் மற்றும் சிறிய வர்த்தக ஊடக அமைப்புகளுக்கு உதவுவதன் ஊடாக, ஊடகத் துறையின் காத்திரமான அபிவிருத்திக்கு உதவுமுகமாக, அரசாங்கமானது ஊடக அபிவிருத்தி நிதியம் அல்லது ஊடகப் பல்வகைமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தைத் ஸ்தாபித்தல் வேண்டும். இதற்கான சிறந்த உதாரணம், 2002 இல் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட ஊடகப் பல்வகைமை மற்றும் அபிவிருத்தி நிறுவனமாகும http://www.mdda.org.za

- கிராமப்புற மக்களும் நகர்ப்புற மக்களும் எவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்ற நிலைமையில் ஸ்மார்ட் தொலைபேசிகள் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியதன் காரணமாகவும் அவை எல்லா இடங்களிலும் பரவிக் காணப்படுவதன் விளைவாகவும் - கிராமத் தொலைத்தொடர்பு நிலையமான "Nenasalas" தொடர்பிலான கொள்கைகளை, அரசாங்கத்தின் ICT நிறுவனம் மீளாய்வு செய்தல் வேண்டும். இதன்மூலமாக, விளிம்பு நிலையிலுள்ள மக்களின் தகவல் தேவைகளை அறிந்து, அவை தொடர்பிலான அணுகுமுறைகளைக் காத்திரமான முறையில் மாற்றியமைக்க முடியும் (இவற்றுள் மாற்றுத்திறனாளிகள், வயதானவர்களும் உள்ளடங்குவர்- அவர்களை மட்டுப்படுத்தப்படலாகாது).

## 5 03 விளிம்பு நிலையிலுள்ள சமுதாயங்களது தகவல் தொடர்பு ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை நாட்டில் காணப்படுகிறது

புதிய அரசாங்கமானது, 2016 ஜனவரி வரையில், தனது மீளாய்வு செய்யப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவிக்கவில்லை. ஒரு புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்படும் வரை, 2001 முதல் 2004 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் 2003 இல் அறிமுகப்படுத்திய 'ஈ-ஸ்ரீலங்கா' கருத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கையைப் பிரயோகிக்க முடியுமென ஊகித்துக்கொள்ள முடியும்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் மக்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முகமாக 'ஈ-ஸ்ரீலங்கா' கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது, ஐந்து நிகழ்ச்சிநிரல் உபாயங்களை மையமாகக் கொண்டு, இதன் தொலைநோக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. அவைகளாவன:

- நடைமுறைப்படுத்தலுக்கான ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல்.
- தகவல் ரீதியான உட்கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் வாய்ப்புள்ள சுற்றாடலை உருவாக்குதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய மனித வளங்களை விருத்தி செய்தல்.
- அரசாங்கத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் பிரஜைகளுக்குச் சேவை வழங்குதல்.
- அரசாங்க தனியார்ப் பங்காண்மைகள் மூலம், சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்.

இலத்திரனியல்-சமூகம் தொடர்பான ஆறாவது உபாயப் பகுதி பின்னர் சேர்க்கப்பட்டது.[209]

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் உயர் அமைப்பாக, 2003 இல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் (ICTA) ஸ்தாபிக்கப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய அரசாங்கத்தின் சகலவிதமான கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆணை ICTA இற்கு வழங்கப்பட்டது. [210]

பல வருடங்களாக ICTA இன் இலகுபடுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளின் விளைவாக பின்வரும் நன்மைகள் கிடைத்தன.[211]:

- தேசிய, சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பயன்படுத்துவதை உறுதிசெய்தல். அத்தோடு,

209 http://www.icta.lk/index.php?option=com_content&view=article&id=25&Itemid=233&lang=en

210 An overview of Sri Lanka's ICT sector is found on this World Bank website: http://broadbandtoolkit.org/Case/lk/3

211 Main source: http://www.icta.lk/attachments/article/1247/Ideas%20Actioned,%20v%205.pdf

212 http://වෙබ්.ලක්වසම.ලංකා/index.php/si/

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் இலகுவாகப் பிரயோகித்தல். தற்சமயம் பல்வேறு வகையான மென்பொருட்களை தரவிறக்கம் செய்ய அவசியமின்றி தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழியில் கணினியில் இலகுவாக தட்டச்சு செய்வதற்கான வாய்ப்புகள் பல காணப்படுகின்றன.

- நாட்டின் .lk குறியீட்டிற்கு மேலதிகமாக, 2011 ஆம் ஆண்டு முதல் சர்வதேச டொமைன் பெயர்களையும் (IDN) சிங்களம், தமிழ் மொழிகளிலும் பயன்படுத்த முடியும். இதன் மூலம், ஆங்கிலத்தைப் பயன்படுத்தாத மக்களும் இணையத்திலுள்ள வளங்களை இலகுவாக அணுகிப்பெறுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. தற்சமயம் ccTLDs '.ලංකා' மற்றும் '.இலங்கை' ஆகியவற்றின் மூலமாக இப்பொழுது தமிழிலும் சிங்களத்திலும் டொமைன் பெயரைப் பதிவுசெய்துகொள்ள முடியும். [212]
- மாற்றுத்திறனாளிகளும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை இலகுவாக அணுகிப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தரப்படுத்தல்கள் மற்றும் கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சைகை மொழியிலான அகராதியொன்று விருத்திசெய்யப்பட்டது. இதனுடன் ஈ-கற்றல் மூலமான கற்கைநெறியொன்றும் உருவாக்கப்பட்டது. இதன்மூலம், இலங்கை சைகை மொழியை எவரும் கற்க முடியும் (செவிப்புலன் குன்றியவர்கள் உலகளாவிய ரீதியில் பயன்படுத்துகின்ற செய்கை மொழியானது இடத்திற்கு இடம் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது என்பதைக் கருத்திற்கொள்ளவும்). கட்புலன் மற்றும் செவிப்புலனற்றவர்கள் இது தொடர்பான பிரயோகங்களைப் பயன்படுத்த முடியும். ப்ரெய்ல் (Brail) மொழியில் காணப்படுகின்ற ஆக்கங்களை தேசிய மொழியில் உரையாடல் வடிவில் மாற்றுவதற்கான மென்பொருட்களும் இங்கு காணப்படுகின்றன.[213]

- Bhasha Guru இன் ஊடாக சிங்களவர்கள் தமிழையும் தமிழர்கள் சிங்களத்தையும் கற்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. கூகிள் அப்ஸைப் பயன்படுத்தி இலவசமாக இதனைத் தரவிறக்கம் செய்ய முடியும்.[214]

- கிராமப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்களது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, நெனசெல (அறிவு நிலையங்கள்) ICTA இனால் உருவாக்கப்பட்டன. 2015 இறுதி வரையில் சுமார் 1000 அத்தகைய நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இவை பல்வேறு விதமான சமூக ஊடாட்டங்களை ஏற்படுத்தின.

213 http://www.wsis-award.org/winner/impaired-aid-3720100424

214 http://www.mobogenie.com/download-bhasha-guru-1184238.html

வறுமையைக் குறைத்தல், பொருளாதார அபிவிருத்தி, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை நோக்காக் கொண்டு தகவல் மற்றும் தொடர்பாடல் ரீதியான உதவிகளை நென்செல வழங்கியது.[215]

- பல்வேறு விதமான அரசாங்க நிறுவனங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கக் கூடிய சேவைகள் தொடர்பான தகவல்களை வழங்குமுகமாக, அரசாங்க தகவல் நிலையத்தை **(GIC),** ICTA உருவாக்கியது. இதனை http://www.gic.gov.lk/gic இணையத்தளம் மூலமும், 1919 அழைப்பு மூலமும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் சேவைகள் மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றன (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)[216]

இருப்பினும், தொழில்நுட்பத் தராதரங்கள் தொடர்பில் தீர்க்க முடியாத பல பிரச்சினைகள் இன்னும் காணப்படுகின்றன. தேசிய மொழிகளை யுனிகோட் பண்புகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வதில் காணப்படுகின்ற தாமதங்களின் காரணமாக பதிப்பகங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய முறைகளையே பயன்படுத்தி வருகின்றனர். யுனிகோட்டிற்குப் பதிலாக அவற்றை அவர்கள் பயன்படுத்துவதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அத்தோடு, தேசிய மொழியிலான எழுத்துருக்களும் (fonts) பல்வகைமை குன்றியதாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, ஒளியியல் பண்புகளை தெரிவுசெய்வது தொடர்பான சிரமங்கள் (Optical Character Recognition - OCR). இலங்கையில் எண்மிய உள்ளடக்கங்களின் உருவாக்கம் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியன முழுமையாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி இயங்கக் கூடியதாகவும் ஒத்துப்போகக் கூடியதாகவும் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் இருத்தல் வேண்டும். இதனுடன் தொடர்புடைய விசைப் பலகைகளும் தராதரமிக்க முறையில் சீர்செய்யப்படல் வேண்டும்.

இணைய உட்கட்டமைப்பு

அண்மைக்காலம் வரை, இணையத் தொடர்பிற்கு, இலங்கையில் கண்ணாடியிழை கேபிள் (Fiber Optic Cable) முறையானது பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. நாட்டில் காணப்படும் பெரும்பாலான கண்ணாடியிழை கேபிள் வலையமைப்புகள் ஒட்டுமொத்தத் தரவு நெரிசல்களின் திரட்டை எடுத்துச் செல்லும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன (உதாரணம், இணைய அகலத்தடம் (Internet bandwidth). இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்பாட்டாளர்களது எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றும் முகமாக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - TRCSL ஆனது Backbone Network (NBN) ஐ வலுப்படுத்தும் பொறுப்பினை 'ஸ்ரீலங்கா ரெலிகொம்'மிற்கு வழங்கியது.[217] தமது வலையமைப்புகளின் எண்ணிக்கை

215 http://www.nenasala.lk/index.php?option=com_content&view=article&id=86&Itemid=523&lang=en

216 http://www.icta.lk/index.php?option=com_content&view=article&id=1494:government-information-center-1919&catid=131:main-projects&Itemid=234&lang=en

217 Strategies for the promotion of broadband services and infrastructure: a case study on Sri Lanka. ITU and the Broadband Commission for Digital Development. 2012. http://www.broadbandcommission.org/Documents/publications/BB_MDG_SriLanka_Final.pdf

National Backbone Network (NBN)





அதிகரிப்பினாலோ அல்லது அதிகமானோர் அவற்றைப் பாவிப்பதன் காரணமாகவோ இந்த அகலத்தடத்தின் : புரோட்பாண்டினுடைய வேகம் வீழ்ச்சியடையாமலோ அல்லது ஏற்றத்தாழ்வுடையதாக இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு, ரெலிகொம் செயற்பாட்டாளர்களைச் சார்ந்ததாகும். இருப்பினும், இத்தகைய நிலைமைகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இடம்பெறுவதில்லை. இது வாடிக்கையாளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதுடன், முறைப்பாடுகளையும் மேற்கொள்ளச் செய்தது. தனது இணையத்தளத்தில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - TRCSL ஆனது, எளிமையான புரோட்பாண்ட் வேகத்தை வழங்கியபோதிலும், புரோட்பாண்ட் வாடிக்கையாளர் உரிமைகள் தொடர்பில் பயன்படுத்துநர்கள் மத்தியில் விழிப்பூட்டல்கள் குறைவாகவே காணப்படுகின்றன.[218]

இரண்டு பிரதான நீர்மூழ்கிக் கேபிள் முறைகள் மூலம், இலங்கையானது அதன் சர்வதேச இணைய இணைப்புகளைப் பெற்றுக்கொள்கிறது. தென் கிழக்காசியா.·. மத்திய கிழக்கு/ மேல் ஐரோப்பா (SEA-ME-WE) மற்றும் பூகோள ரீதியாக பைபர் ஒப்டிக் லிங்க் எரவுண்ட் த குளோப் (Fiber-Optic Link Around the Globe -FLAG). SLT மற்றும் லங்கா பெல் ஆகியவற்றின் மூலமாக 3 நீர்மூழ்கிக் கேபிள் முறைகள் பேணப்பட்டு வருகின்றன. பாரத்

218 http://www.trc.gov.lk/2014-05-12-13-25-54/broadband-speed-test.html

219 Broadband in Sri Lanka: Glass Half Full or Half Empty? http://www.infodev.org/articles/broadband-sri-lanka




நீர்மூழ்கிக் கேபிள் முறைகள் மூலம், இலங்கையானது சர்வதேச இணைய இணைப்புகளைப் பெற்றுக்கொள்கிறது. http://www.submarinecablemap.com

லங்கா மற்றும் திரகு ஆகிய இரண்டு பிராந்திய நீர்மூழ்கிக் கேபிள்கள் மூலமும் தொடர்புகள் பெறப்படுகின்றன.

இலங்கையில் வழங்கப்படும் புரோட்பாண்ட் சேவைகளின் தரம் பற்றி 2012 இல் LIRNEasia இன் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுகையில் “இங்கு காணப்படும் பிரதான சவால்கள் எவை எனில், போதியளவு தராதரத்துடன் உற்பத்திப் பொருள் ஒன்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாகும். பட்ஜட் புரோட்பாண்ட் அல்லது பட்ஜட் ரெலிகொம் மாதிரிகள் எனும்போது, அவை செலவு குறைந்ததாகவும் விலை குறைந்ததாகவும் காணப்படுகின்றன. ஆனால், அவற்றின் தரம் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கையில் புரோட்பாண்ட்களின் நிலைமைகள் இவ்வாறுதான் காணப்படுகின்றன. இருப்பினும் பல்வேறு விதமான சேவைகளைக் கருத்திற்கொண்டு நோக்குகையில் இலங்கையைப் பொறுத்தவரையில் மொபைல் புரோட்பாண்ட்களானது நிரந்தர புரோட்பாண்ட்களை விட சிறப்பான சேவைகளை வழங்குகின்றன. உலகிலுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்புநோக்குகையில், இலங்கை வாடிக்கையாளர்கள் தாம் செலுத்துகின்ற பணத்திற்கு குறைவான பெறுமதியுடைய சேவைகளையே பெற்றுக்கொள்கின்றனர். மோசமான விளம்பரம் இதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகும். (புரோட்பாண்ட்களுடைய வேகம் பற்றி அறிவிக்கப்பட்டாலும் கூட,

உண்மையில் அந்த வேகத்தை அவை கொண்டிருப்பதில்லை) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றுமொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, அதிக விலை காரணமாக, சர்வதேச ரீதியான தொடர்புகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் பிரச்சினையைக் குறிப்பிடலாம்."[219]

அதிகளவில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

நம்பகத்தகுந்த தராதரத்துடன் இணைய இணைப்புகளை, அனைவரும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நியாயபூர்வமான விலையில் வழங்குவதன் அவசியத்தை புதிய அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இரண்டு முன்னெடுப்புகள் இது தொடர்பில் எடுத்துரைக்கின்றன.

- இலவச பொது வை-பை **(WiFi) : 2014** டிசம்பரில் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஊடக சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகையில் "தொடர்பாடல் தொழில்நுட்பத்தை முகாமைத்துவம் செய்யும் முகமாகவும் சிறந்த சமூகத்திற்கான சமூக ஊடகங்களை உருவாக்கும் முகமாகவும் ஊடக அபிவிருத்திக் கொள்கையொன்றை உருவாக்குதல்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 இல், இது ஆரம்பிக்கப்பட்டபோது, இந்த முறையானது இலங்கையை பெரும்பாலும் சர்வதேச இணைய வசதிகளைப் பெற்ற நாடாக மாற்றியமைக்குமென ICTA குறிப்பிட்டது.[220]

- கூகுள் நிறுவனத்துடன், வான் பலூன் தொடர்பான பங்காண்மைகள் : கம்பியற்ற **(wireless)** இணையச் சேவையை நாடு முழுவதும் வழங்குமுகமாக, 2015 ஜூலையில், கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில், ICTA கையொப்பமிட்டது. நிலத்திலிருந்து சுமார் 20 கி.மீ. இற்கு மேல் உபாய ரீதியான முறையில் 13 உயர் தொழில்நுட்ப பலூன் வலையமைப்புகளைக் கொண்டதாக இக்கருத்திட்டம் காணப்பட்டது. ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட இந்த பலூன்கள் வான் பரப்பில் "மிதக்கும் கோபுரங்கள்" போல் செயற்படும். இவை நிலத்திலிருந்து விநியோகிக்கப்படுவதை விட, அதிகளவிலான 3G மொபைல் சமிக்ஞைகளை அனுப்பி வைக்கும். 2016 இல் இது ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, உலகிலேயே சர்வதேச இணைய வசதிகளைப் பெற்ற முதல் நாடாக இலங்கை திகழும் என ICTA குறிப்பிட்டது.[221]

பகிரங்கத் தரவுகள்

பதிப்புரிமை, காப்புரிமை அல்லது ஏனைய கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளற்ற நிலையிலுள்ள சில வகையான தகவல்களை, யாரும் மீள்பதிப்புரிமை செய்ய அல்லது வெளியிட முடியும். அவ்வாறு காணப்படுகின்ற

220 http://www.freewifi.lk/hubs.php

221 http://www.lankabusinessonline.com/google-loon-project-to-cover-sri-lanka-with-3g-internet/

தரவுகள் 'பகிரங்கத் தரவுகள்' (Open Data) எனப்படும். இத்தகைய பகிரங்கத் தரவுகள் அணுகுமுறையானது, குறிப்பாக, விஞ்ஞான ரீதியான தரவுகள் மற்றும் அரசாங்கத் தரவுகள் போன்றவற்றுக்கு ஏற்புடையதாகும். கடந்த சில வருடங்களாக இலங்கையின் பொதுத்துறையைச் சார்ந்த தரவுகள் இத்தகைய பகிரங்கத் தரவுகளை நோக்கி மெதுவாக பயணிக்கின்றன.

இலங்கையில் பகிரங்கத் தரவுகள் தொடர்பான முன்னெடுப்புகள், 2013 இல் ஆரம்பிக்கப்பட்டன. ஏனைய நிறுவனங்களுடன் கூட்டிணைந்து ICTA இனால் இது செயற்படுத்தப்படுகின்றது. இதன் நோக்கங்களானவை: இணை அரசாங்க அபிவிருத்தித் தரவுகள், இனப்பரம்பல், புள்ளிவிபரங்கள், செலவுகள் போன்ற பயன்மிக்க தரவுகளை கொள்கை வகுப்பாளர்கள், மென்பொருள் தீர்வு விருத்தியாளர்கள், பொதுமக்கள் போன்றவர்கள் பயன்மிக்க வகையில் பயன்படுத்தக் கூடிய விதத்தில் எண்மிய வடிவத்தில் அளித்தலாகும். இணையத்தின் மூலமாக சுயாதீனமாக பயன்படுத்தக் கூடிய விதத்தில் இவை காணப்படுகின்றன (உதாரணம்: இத்தகைய தரவுகள் பகிரங்கமாக காணப்படுகின்றன. ஏனைய மென்பொருட்களுடன் இவற்றைப் பகுப்பாய்வுக்குட்படுத்த முடியும்).[222]

2016 பெப்ரவரி வரை, இலங்கை பகிரங்க தரவுகள் தொடர்பான முன்னெடுப்பை 9 பொதுத் துறை அமைப்புகளிடமிருந்து 89 தரவுத் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டது. இவற்றுள் 50 வீதத்திற்கும் அதிகமான தரவுகள் புள்ளிவிபரத் திணைக்களம், சனத்தொகை கணக்கெடுப்புத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்றன. இவற்றுடன் தொடர்புற்ற ஏனைய நிறுவனங்களாக - பொலிஸ் திணைக்களம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் திணைக்களம்,மோட்டார் வாகனத் திணைக்களம், முதலீட்டாளர் சபை போன்றன திகழ்கின்றன.

தரவுகளைப் பகிரங்கமாக்க வேண்டும் என்கின்ற விவாதம் ஒருபுறம் இருந்தாலும், தனிநபர்களின் அந்தரங்கங்களின் தலையிடல் , தரவுகளைத் தவறாகப் பயன்படுத்தல் போன்றனவற்றிற்குக் கட்டுப்பாடுகள் அவசியம். இதற்கென, அறவியல் கோட்பாடுகளும் பாவனையாளர் விதிமுறைகளும் உருவாக்கப்படல் வேண்டும். இலங்கையில் இதுபற்றிய எதுவித ஏற்பாடுகளும் இல்லை.

## பரிந்துரைகள்

- நல்லாட்சி, ஜனநாயக ரீதியான பன்மைத்துவம், பொதுமக்கள் நலன் ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய எண்மிய தொழில்நுட்பங்கள் சார்ந்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தக் கூடிய தெளிவான, ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கொள்கையொன்றினை தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் எண்மிய உட்கட்டமைப்பு அமைச்சு மூலம் அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும். தனிநபர் அந்தரங்கங்களைப் பாதுகாத்தல், இணையம் சார்ந்த பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கிய இவை தொடர்பான சவால்களை சிறப்பாக

222 https://www.data.gov.lk

எதிர்கொள்ளக் கூடிய விதத்தில் விழிப்பூட்டல்களைக் கொண்டதாக குறித்த கொள்கை இருத்தல் வேண்டும். இந்தப் புதிய கொள்கையினை உருவாக்குவதன் பொருட்டு மக்கள் மத்தியில் கலந்தாராய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.


- சிங்களப் பிரதிகளில் காணப்படுகின்ற சகல பிரச்சினைகளையும் முன்னுரிமை அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் தீர்த்தல் வேண்டும். ஏனெனில், இப்பிரச்சினையானது உள்நாட்டு எண்மிய உள்ளடக்கங்களைப் பாதிக்கக் கூடியதாகக் காணப்படுகிறது. சிங்கள மற்றும் தமிழ் வடிவங்கள் ஒன்றுடனொன்று ஒத்துப்போகக் கூடிய விதத்தில் பன்மைத்துவம் மிக்கதாகவும் இருப்பதை உறுதிப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை ICTA மேற்கொள்ளல் வேண்டும்.

- சமூகத்தில் இணையம் சார்ந்த வலையமைப்புப் பொருளாதாரம் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, இலங்கைக்கும் சர்வதேச இணையக் கட்டமைப்புகளுக்கும் இடையில் போதியளவு தொடர்புகள் இருக்க வேண்டியதை அரசாங்கம் உறுதிசெய்தல் வேண்டும். தேசிய வலையமைப்பு போதியளவு வலுப்படுத்தப்படல் வேண்டும். பிரதேச மட்டங்களில் சகல புரோட்பாண்ட் வலையமைப்புகளும் சிறப்பான தராதரத்துடன் செயற்படுவதை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - TRCSL உறுதிசெய்தல் வேண்டும்.

- இலங்கையில் ஏற்கனவே பகிரங்கத் தரவு முன்னெடுப்புகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், தனது திறந்த தரவுக் கொள்கையினை அரசாங்கம் விரிவுபடுத்தல் வேண்டும். இவற்றுள் அரசாங்கப் பல்கலைக்கழகங்கள், அரச நிதியிடல் ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரச துறைகளுக்கும் இது விரிவாக்கப்படுதல் வேண்டும். வரி செலுத்துபவர்களது பணத்தினால் இயக்கப்படுகின்ற இந்த தரவுகளை காத்திரமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் கலந்துரையாடல் மற்றும் விவாதங்களை உள்ளடக்கிய பண்பாடு ஒன்று தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது சமூகம், கலாசாரம், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்படுத்துகின்ற தாக்கம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுமுகமாக, இலங்கையின் அரச பல்கலைக்கழகங்கள் ICT அவதானிப்பு சார்ந்த விடயங்களை மேற்கொள்ளல் வேண்டும். தற்சமயம் மிகக் குறைவாகக் காணப்படுகின்ற இணைய மையக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பில் தலைமைப் பொறுப்பு சார்ந்த வகிபாகத்தினை இந்த அமைப்பு மேற்கொள்ளலாம்.






s ‘சகமக்கள் பிரச்சினையை பிரஜைகள் ஊடகவியலாளர் எடுத்துக் காட்டுகிறார்’ — கேலிச்சித்திரம்: கிஹான் டீ சிகேரா - டெய்லி மிரர், 18 ஜூன் 2014

t ‘பிரதான ஊடகங்கள் சொல்லத் தயங்கும் காட்சிகளை சமூக ஊடகம் இலங்கை குடிமக்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது’ - கேலிச்சித்திரம்: அவந்த ஆடிகல, விஜய பத்திரிகை




**s** உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை பயன்படுத்தி manthri.lk இனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து கொள்ளல்

பிரிவு 5

# சுயாதீனமும், பன்மைத்துவமும் மிக்க ஊடகத்திற்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள்

## பரிந்துரைகளின் தொகுப்பு

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
|---|---|
| 5.1 ஊடக அமைப்புகளுக்குச் செய்தி சேகரித்தல், தயாரிப்பு, விநியோகம் ஆகியவற்றின் நிமித்தம் கிடைக்கின்ற நவீன தொழில்நுட்ப வசதிகள் | 1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அனலொக் முறையிலிருந்து எண்மிய முறையில் ஒளிபரப்புச் செய்வது தொடர்பான தெளிவான காலவரையறை மற்றும் உபாய முறை ஆகியவற்றை ஒலி-ஒளிபரப்புத் துறையைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கம் விருத்தி செய்தல் வேண்டும். இதனை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஸ்தாபிக்கப்படுவதற்காக முன்மொழியப்பட்டுள்ள சுயாதீன ஒலி-ஒளிபரப்பு ஒழுங்கமைப்பு மூலம் இந்த உபாய முறைகளானவை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மை மிக்கவையாகவும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். எண்மிய மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், அனலொக் கொள்கையில் காணப்பட்ட பல முரண்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான குறைபாடுகள் ஆகியவற்றைத் தீர்ப்பது முக்கியமானதாகும். |
| | 2. பல்கள ஊடக நிகழ்ச்சிகளைப் பரப்புதல் பற்றிய அரச ஒலி-ஒளிபரப்பாளர்கள் நிகழ்ச்சிகள் தொடர்பிலான களஞ்சியம் ஒன்றை உருவாக்குவதைப் பொதுக்கடப்பாடாக ஊடக அமைச்சு ஏற்று உருவாக்குதல் வேண்டும் (BBC இன் iPlayer: https://en.wikipedia.org/wiki/BBC_iPlayer போன்றதான). இவ்வாறு நிகழ்ச்சிகளைக் களஞ்சியப்படுத்துவதானது பயன் தரக்கூடியதாகவிருக்கும். குறிப்பாக கல்வித்துறையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுபவர்களுக்கு இது பயன்மிக்கது. |
| | 3. மிகவும் பொருத்தமான எண்மியக் களங்கள், உள்ளடக்கங்களை உருவாக்கக் கூடிய கருவிகள் மற்றும் தமது வெளியீடு மூலம் பல்வேறு வகையான நேயர்களை சென்றடையக்கூடிய விடயங்களைக் கருத்திற்கொண்டு எண்மிய ஊடகங்களுக்கான உபாயங்களை இலங்கையிலுள்ள ஊடக அமைப்புகள் உருவாக்குதல் வேண்டும். சமூக ஊடகப் பயன்பாட்டிற்கு அவசியமான நிறுவன ரீதியான கொள்கைகள், சிறந்த நடைமுறைகள், புலமைச் சொத்துரிமைகள், ஆவணக் காப்பக நிகழ்ச்சிகள், ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக எண்மிய ஊடக உபாயங்கள் காணப்படல் வேண்டும். |
| 5.2 விளிம்பு நிலை மக்களும் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் | 4. சமூக ஊடகச் செயற்பாடுகள் மற்றும் சிறிய வர்த்தக ஊடக அமைப்புகளுக்கு உதவுவதன் ஊடாக, ஊடகத் துறையின் காத்திரமான அபிவிருத்திக்கு உதவுமுகமாக, அரசாங்கமானது ஊடக அபிவிருத்தி நிதியம் அல்லது ஊடகப் பல்வகைமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தைத் ஸ்தாபித்தல் வேண்டும். இதற்கான சிறந்த உதாரணம், 2002 இல் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட ஊடகப் பல்வகைமை மற்றும் அபிவிருத்தி நிறுவனமாகும் http://www.mdda.org.za |

| குறிகாட்டிகள் | பொருத்தமான பரிந்துரைகள்: |
| --- | --- |
| 5.2 விளிம்பு நிலை மக்களும் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் | 5. கிராமப்புற மக்களும் நகர்ப்புற மக்களும் எவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்ற நிலைமையில் ஸ்மார்ட் தொலைபேசிகள் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியதன் காரணமாகவும் அவை எல்லா இடங்களிலும் பரவிக் காணப்படுவதன் விளைவாகவும் - கிராமத் தொலைத்தொடர்பு நிலையமான 'Nenasala' தொடர்பிலான கொள்கைகளை, அரசாங்கத்தின் ICT நிறுவனம் மீளாய்வு செய்தல் வேண்டும். இதன்மூலமாக, விளிம்பு நிலையிலுள்ள மக்களின் தகவல் தேவைகளை அறிந்து, அவை தொடர்பிலான அணுகுமுறைகளைக் காத்திரமான முறையில் மாற்றியமைக்க முடியும் (இவற்றுள் மாற்றுத்திறனாளிகள், வயதானவர்களும் உள்ளடங்குவர்- அவர்களை மட்டுப்படுத்தப்படலாகாது). |
| 5.3 விளிம்பு நிலை சமுதாயங்களது தகவல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை நாட்டில் காணப்படுகிறது | 6. நல்லாட்சி, ஜனநாயக ரீதியான பன்மைத்துவம், பொதுமக்கள் நலன் ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய எண்மிய தொழில்நுட்பங்கள் சார்ந்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தக் கூடிய தெளிவான, ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கொள்கையொன்றினை தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் எண்மிய உட்கட்டமைப்பு அமைச்சு மூலம் அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும். தனிநபர் அந்தரங்கங்களைப் பாதுகாத்தல், இணையம் சார்ந்த பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கிய இவை தொடர்பான சவால்களை சிறப்பாக எதிர்கொள்ளக் கூடிய விதத்தில் விழிப்பூட்டல்களைக் கொண்டதாக குறித்த கொள்கை இருத்தல் வேண்டும். இந்தப் புதிய கொள்கையினை உருவாக்குவதன் பொருட்டு மக்கள் மத்தியில் கலந்தாராய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br><br>7. சிங்களப் பிரதிகளில் காணப்படுகின்ற சகல பிரச்சினைகளையும் முன்னுரிமை அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் தீர்த்தல் வேண்டும். ஏனெனில், இப்பிரச்சினையானது உள்நாட்டு எண்மிய உள்ளடக்கங்களைப் பாதிக்கக் கூடியதாகக் காணப்படுகிறது. சிங்கள மற்றும் தமிழ் வடிவங்கள் ஒன்றுடனொன்று ஒத்துப்போகக் கூடிய விதத்தில் பன்மைத்துவம் மிக்கதாகவும் இருப்பதை உறுதிப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை ICTA மேற்கொள்ளல் வேண்டும். |

## குறிகாட்டிகள்

5.3 விளிம்பு நிலை சமுதாயங்களது தகவல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை நாட்டில் காணப்படுகிறது

## பொருத்தமான பரிந்துரைகள்:

8. சமூகத்தில் இணையம் சார்ந்த வலையமைப்புப் பொருளாதாரம் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, இலங்கைக்கும் சர்வதேச இணையக் கட்டமைப்புகளுக்கும் இடையில் போதியளவு தொடர்புகள் இருக்க வேண்டியதை அரசாங்கம் உறுதிசெய்தல் வேண்டும். தேசிய வலையமைப்பு போதியளவு வலுப்படுத்தப்படல் வேண்டும். பிரதேச மட்டங்களில் சகல புரோட்பாண்ட் வலையமைப்புகளும் சிறப்பான தராதரத்துடன் செயற்படுவதை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - TRCSL உறுதிசெய்தல் வேண்டும்.

9. இலங்கையில் ஏற்கனவே பகிரங்கத் தரவு முன்னெடுப்புகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், தனது திறந்த தரவுக் கொள்கையினை அரசாங்கம் விரிவுபடுத்தல் வேண்டும். இவற்றுள் அரசாங்கப் பல்கலைக்கழகங்கள், அரச நிதியிடல் ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரச துறைகளுக்கும் இது விரிவாக்கப்படுதல் வேண்டும். வரி செலுத்துபவர்களது பணத்தினால் இயக்கப்படுகின்ற இந்த தரவுகளை காத்திரமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் கலந்துரையாடல் மற்றும் விவாதங்களை உள்ளடக்கிய பண்பாடு ஒன்று தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

10. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது சமூகம், பண்பாடு, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்படுத்துகின்ற தாக்கம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுமுகமாக, இலங்கையின் அரச பல்கலைக்கழகங்கள் ICT அவதானிப்பு சார்ந்த விடயங்களை மேற்கொள்ளல் வேண்டும். தற்சமயம் மிகக் குறைவாகக் காணப்படுகின்ற இணைய மையக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பில் தலைமைப் பொறுப்பு சார்ந்த வகிபாகத்தினை இந்த அமைப்பு மேற்கொள்ளலாம்.

# பின்னிணைப்புக்கள்


| | |
|---|---|
| பின்னிணைப்பு 1 | ஆலோசனை பெறப்பட்ட வளங்கள் மற்றும் நபர்கள் |
| பின்னிணைப்பு 2 | ஆய்வு உதவிக்குழு |
| பின்னிணைப்பு 3 | குவிமையக் கலந்துரையாடல்களின் சுருக்கம் |
| பின்னிணைப்பு 4 | பொதுத் தேர்தல் 2015 இல் அரசியற் கட்சிகளுக்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் |
| பின்னிணைப்பு 5 | இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் |
| பின்னிணைப்பு 6 | இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சி உரிமம் பெற்ற பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் |
| பின்னிணைப்பு 7 | இலங்கையில் வெகுசன ஊடகங்கள் பற்றிய பொதுக்கணக்கெடுப்பின் முக்கிய அம்சங்கள் - 2015 |

Annex
# 1
# Sources and Persons consulted

This study was driven by a combination of literature review, personal interviews with key stakeholders, and focus group discussions.

The literature review took into account various books, academic papers, advocacy group reports, published news media reports, media op-ed articles, blogs and other sources that are in the public domain. Sources going back to the past 20 years were consulted in some cases, but most were published during the past few years. The key sources and references are given in footnotes.

For the Rapid Assessment conducted during March – April 2015, a number of persons were informally consulted by its author Nalaka Gunawardene through face-to-face interviews, phone calls or emails that elicited information, clarifications and viewpoints. In particular, inputs from the following persons are acknowledged with much gratitude (Designations given are those valid at the time of interviews).

- Karunaratne Paranavithana, Secretary, Ministry of Media
- Dr Charitha Herath, Former Secretary, Ministry of Media and Information
- Wijayananda Jayaweera, Media consultant and media rights advocate
- Toby Mendel, Executive Director, Centre for Law and Democracy (CLD), Canada
- Dr. Pradeep N Weerasinghe, Senior Lecturer in Mass Media Studies, University of Colombo
- Ms Hana Ibrahim, South Asia Free Media Association (SAFMA) – Sri Lanka Chapter
- Ms Dilrukshi Handunnetti, Former Associate Editor, Ceylon Today newspaper
- Asoka Dias, Country Representative, Asian Media Information and Communication Centre (AMIC)
- K W Janaranjana, Chief Editor, Ravaya newspaper
- Sumith Chaaminda, Senior Analyst and Head of Politics, Verite Research
- Arun Arokianathan, Editor, Sudar Oli newspaper
- Sukumar Rockwood, CEO, Press Complaints Commission of Sri Lanka (PCCSL)
- Kumar Lopez, CEO, Sri Lanka Press Institute (SLPI)
- Sam de Silva, Innovation Advisor for Asia, InterNews
- Dileepa Abeysekera, advertising professional
- Ms Sandya Salgado, social marketing professional
- Ranga Kalansooriya, Regional Advisor for Asia, International Media Support (IMS)

For the full assessment, the research team of the Secretariat for Media Reforms interviewed selected media stakeholders using a structured questionnaire and later transcribed them. The following persons granted such interviews (listed in no particular order):

| Name | Affiliation | Interview date |
|---|---|---|
| S G Punchihewa | Writer, columnist and critic | 2015.05.06 |
| Dr Rohan Samarajiva | Communications scholar; former Director General, Telecom Regulatory Commission | |
| Ms Sumithra Rahubaddha | Novelist; formerly of Sri Lanka Administrative Service | 2015.06.08 |
| Jayantha Fernando | Director – Legal, ICT Agency | 2015.05.29 |
| Fred Gamage | President, Web Journalists Association | 2015.04.27 |
| Gairika Perusinghe | Former chairman, ITN Sri Lanka | 2015.04.28 |
| Rosmand Senaratne | Former General Manager, Swarnavahini and former chairman, ITN Sri Lanka. | 2015.06.17 |
| Priyantha Kariyapperuma | Former Director General, Telecom Regulatory Commission; Advisor to Siyatha TV | 2015.06.17 |
| S Sri Kajan | Editor, Daily Virakesari | 2015.06.14 |
| Shan Wijetunge | Senior Manager, Advocacy & Public Relations, Transparency International Sri Lanka | 2015.04.26 |
| C V Wigneswaran | Chief Minister of Northern Provincial Council | 2015.06.07 |
| Lal Kantha | Former Member of Parliament, Janatha Vimukthi Paramuna (JVP) | 2015.04.27 |
| Indika Jayaratne | Director (News) - Sri Lanka Broadcasting Corporation (SLBC) | 2015.04.28 |
| Ms Krithika Dharmaraja | Lecturer, Journalism Unit, University of Jaffna | 2015.06.06 |
| Fr Ruban Mariyampillai | Visiting lecturer, University of Jaffna | 2015.06.06 |
| Susara Dinal | Channel Head Sirasa TV | 2015.04.21 |
| Samira Kalupe | Head of Finance and Human Resources. Lanka Broadcasting Network. | 2015.04.25 |

| | | |
|---|---|---|
| K Kunarasa | News Editor, Thinakaran | 2015.06.21 |
| Kanchana Marasinghe | Producer, Sri Lanka Broadcasting Corporation | 2015.04.19 |
| Harsha Wijayawardhana | Head of Department/Consultant, University of Colombo School of Computing (UCSC) | 2015.04.28 |
| H M Jackson | Director General (Engineering) Sri Lanka Broadcasting Corporation | 2015.04.21 |
| Newton Gunaratne | Former ahairman, ITN | 2015.04.29 |
| Hema Nalin Karunaratne | Managing Director, Heritage TV | 2015.04.26 |
| Edmond Ranasinghe | Former Editor, Divaina and The Island | 2015.06.21 |
| Vijitha Yapa | Former Editor, The Island, Sunday Island and Sunday Times | 2015.06.19 |
| Mohan Samaranayake | Former chairman, Sri Lanka Rupavahini Corporation; commentator on international affairs | 2015.04.28 |
| Thilina Samarasooriya | Director - Training & Foreign Relations, Sri Lanka Broadcasting Corporation (SLBC) | 2015.04.19 |
| Somaratne Dissanayaka | Chairman, Sri Lanka Rupavahini Corporation (incumbent at the time of interview) | 2015.04.19 |
| Saman Athaudahetti | Additional Secretary (Media) to the Prime Minister of Sri Lanka | 2015.04.28 |
| B K S Ravindra | Additional Secretary, Ministry of Mass Media | 2015.05.17 |
| Charitha Herath | Former Secretary, Ministry of Mass Media | 2015.05.06 |
| Prof Dhammika Ganganath Dissanayake | Former chairman of Sri Lanka Rupavahini Corporation and ITN Sri Lanka; | 2015.04.17 |
| Nanda Muruttetuwegama | Chairman, Sri Lanka Broadcasting Corporation | 2015.04.23 |
| S M Marikkar | Former Channel Head, Sirasa FM | 2015.04.22 |

In addition, those who participated in the five focus group discussions are named along with summaries in Annex 3.

Annex
# 2
## Research Support Team

Valuable research and interview assistance for the Rapid Assessment was provided by Ameer Hussain who visited and consulted with several Tamil language media organisations and professionals.

For the full report, the following team provided research assistance and support in various ways, working under the overall supervision of Dr Pradeep N' Weerasinghe, Head, Department of Mass Media, Sri Palee Campus, University of Colombo.

**Research Associates:**
Sajitha Lakmali
Kumeshi Prabashini
Dilan Singappuli

**Research Assistants:**
Lakshiri Wijesinghe
Chamodi Kaluarachchi
Fathima Shamila
Dinithi Wijerathne
Nipuna Kariyawasam
Pubudu Pathirana
Indira Nawagamuwa

Annex

# 3

# Summary of Focus Group Discussions

## Focus Group Discussion with National Collective of Provincial Journalists (9 June 2015)

Participating: Kanchana Kumara Ariyadasa, President; Rohana Siriwardena, Secretary; T M Janoo Kichilan, Treasurer

- Ideally, provincial journalists should be engaged in this pursuit on a full time basis. There are a few among us who manage this by contributing news to multiple media outlets. But most cannot do so as payments for their reporting is very low.
- Media outlets for which we report have little or no obligations to us. We get paid little, and have no other benefits. We have no employment contract or salary details, so cannot even apply for a bank loan. Even when one of us dies, there is no expression of condolences from Colombo media companies.
- Many provincial journalists are known and respected in their areas. They don't need the media accreditation issued by the government to gain access to sources or events. In some cases, provincial journalists are more influential than local politicians.
- Most provincial journalists have established their trust with sources and can access news and information even without legally guaranteed right to information. But RTI would make it easier and faster.
- Some provincial journalists think that they cannot criticize government officials or politicians. This is a misconception. The challenge is to gather evidence and report

without bias or ideology. Some among us have criticised public officials or politicians even in the state media.

- Sadly, we have no control whatsoever on the news agenda of media companies for whom we report. Some media outlets want our coverage to be centred on local politicians. But we want to focus on people's problems, issues and solutions.
- We want to evolve into a Provincial Journalists Cooperative, with legal status and registration with the government's Department of Cooperatives. Such an entity can collectively support welfare and professional development of provincial journalists.
- Provincial journalists need an enabling environment in which they can carry out their journalism activities with freedom, dignity and self-respect. We are not Samurdhi beneficiaries (recipients of poverty alleviation cash transfers from government), so don't wish to be treated as such by anyone!
- We need to regular upgrading of our knowledge and skills. While occasional training workshops are useful, we would like to see a more systematic effort in capacity building.
- We are struggling to get organised. Even registering our collective has been delayed for 3 years by bureaucratic procedures. Eventually, we want to evolve to a trade union.
- We are concerned by some media outlets promoting any citizen to report their local events through videos captured using mobile phones. Having a smartphone does not make anyone a journalist. A reporter needs to have some grounding in ethics, too.
- Our long-term vision is to develop our own provincial newspapers and community radio services, so we can cover our local stories in greater depth and detail. Market viability of such media is a huge challenge. A cooperative can provide the financial foundation needed for such ventures.

Focus Group Discussion with Sri Lanka Muslim Media Forum (8 June 2015)
Participating: M S Ameen Hussain, Media trainer and consultant; Javed Munawwer, Assistant Treasurer; Thaha Muzamil, Vice President

- Our media is divided along linguistic, religious and political lines. We need media reforms to overcome these divisions and evolve as an industry.
- Journalists in Sri Lanka face many difficulties in the line of their work. There are laws, regulations and procedures in government that restrict information. We are hopeful that when the Right to Information law is enacted, this situation will improve.
- Public officials have historically been trained to restrict, not share, public information. They go to great lengths to block information. We need a change of such attitudes.
- Journalists have devised ways of accessing even restricted information, but they face enormous risks in reporting such

information related to corruption, political scandals and administrative blunders, etc. Ensuring the safety of journalists and media organisations is a vital part of promoting democracy.

- Many restrictions were imposed during the civil war on freedom of expression. Now, more than six years after the war ended, why are these curbs being continued? We are no longer under Emergency Regulations. But some public sector procedures introduced during the war continue. These need to be changed.
- The 19th Amendment to the Constitution is a progressive step forward: it also recognized the right to information as a fundamental right. But we need public education on how to assert these rights in the public interest.
- Ideally, we should have an effective system of self-regulation in our media so that the state does not need to get involved. We have the Press Complaints Commission (PCCSL) since 2003, but it is not yet a fully effective system – because it is voluntary, not obligatory, to abide by its rulings. Perhaps PCCSL should be empowered to impose fines or have other punitive powers on media that does not correct proven lapses.
- Editorial freedom is under siege in Sri Lanka from state and corporate sources. There is regular interference by politicians and advertisers. We need laws to guarantee editorial freedom of journalists and editors.
- We also need a complaints mechanism and self-regulatory body for radio and television broadcasters in Sri Lanka. During 2009-2011, some discussions were held on setting up such a body, but it has not happened.
- Just as we demand and expect greater transparency in the government, we also need greater transparency in the media sector itself. For example, appointments and promotions in many media companies lack clear policies and procedures.
- We need to better engage and involve readers and audiences in how media content is determined and produced. Right now, we have mostly passive media consumers.
- Some private media companies do not pay EPF, ETF (pension benefits) to their journalists. Journalists in many private media are not allowed to join trade unions or participate in union activities.
- Our journalists need training and capacity building in knowledge, skills and ethics but this is not going to be accomplished by random short-duration workshops. We need a more systematic approach to training. Some media organisations and journalists do not see the value of training, so we need to promote the demand side too.
- No matter how hard we try to train journalists, some of them have an attitude problem (that they don't need any training). This must change.
- Media owners probably don't like their journalists' capacity being built and the standard of journalism going up – because then journalists will have to be paid better!
- We do not have media pluralism in Sri

Lanka today. We have many outlets, but they are driven by a certain, narrow agenda.

Focus Group Discussion with Sri Lanka Press Association (8 June 2015)
Participating: Upul Janaka Jayasinghe, National Organiser; Narendra Rajapakse, Vice President; Pushpa Ilangatilake, Executive Committee member

- There are huge labour rights and HR issues in media companies. Many journalists are employed without a letter of appointment. There is widespread exploitation.
- All journalists should be issued with a letter of appointment, and the Code of Ethics for journalists gazetted in 1981 can be part of that letter.
- Code of Ethics is not respected or heeded by most media in Sri Lanka. The Editors' Guid has taken it forward to some extent, and got most newspapers to commit to the Right of Reply. But how many newspapers actually respect that right? Not many.
- Promotion of media freedom should be accompanied by a proper regulation of media as well as an ethically responsible media. We can learn much from India on this.
- We have concerns whether Press Complaints Commission is sufficiently empowered to act when a media outlet violates ethics and defames individuals or entities. In our view, the PCCSL itself needs to be monitored and regulated.
- We need an independent media commission. There should be no state or government representatives or nominees in that commission. All commissioners should be competent and respected individuals, and they should serve a single, fixed term (2 years).
- There needs to be a minimum qualification to enter journalism. Such national media qualification should be quality assessed and certified. It should become mandatory for all those who wish to work in the media from 2015 onwards.
- Every media company should be required to adopt its own code of ethics, which should be disclosed to the public. Media consumers can then assess their conduct against it.
- Every media company should also have their own Ombudsman who can look into staff grievances and reader complaints, and resolve as many of these as possible at that level.
- Salaries of journalists and other media workers should be linked to educational qualifications and training certification. Salary increments should take into account the acquisition of new skills and competencies.
- Media companies should ideally standardize their salary scales. This would prevent some companies 'poaching' journalists from another company by paying a few thousand rupees more.
- Media freedom is most restricted by media owners. So the media reform process needs to become a movement that involves everyone – media employees, managers, owners, regulators and media consuming public.

- Journalists and other media workers in Sri Lanka are not properly organised or united when compared to other sectors like banking. We need a strong alliance that can network and unify 15 media associations.
- The journalist in Sri Lanka lacks dignity and self-respect. Most don't take pride in their profession. This needs to be changed slowly by raising professional standards of media.
- State advertisements are given only to selected media companies, which creates market anomalies. There is, in fact, a Cabinet memorandum that says state sector advertisements should only be given to state media. This needs to be revisited and clarified.

Focus Group Discussion with Sri Lanka Working Journalists Association (4 June 2015)
Participating: Lasantha Ruhunage, President; Kanchana Marasinghe

- Airwaves are a public property, so everyone who uses spectrum needs to be accountable to the public. Broadcasters cannot do whatever they please with their licenses.
- Broadcast regulation does not mean regulating their editorial content. It is the use of spectrum and overall balance and ethical conduct that needs regulation.
- Telecom Regulatory Commission (TRC) has not managed the frequency spectrum well. We need an independent broadcast commission to cover licensing, spectrum management and overall regulation of the broadcast industry. We need to streamline the status quo before moving into digital broadcasting.
- There is a code of ethics – the Code of Professional Practice – adopted by the Editors' Guild of Sri Lanka. But we wonder how many of the editors, even those who were involved in adopting this Code, actually practise it in their own daily media work?
- We have media associations and societies, but need to evolve into a media sector trade union. We highlighted this as a key point in the "Charter for a Democratic and Pluralist Media Culture and Social and Professional Rights for Media and Journalism in Sri Lanka" that we drafted in 2005 and is known as the Tholangamuwa Declaration.
- We need to ensure that journalists and other media workers are free to form trade unions in their work places and/or join existing trade unions without fearing repercussions from their employers or loss of jobs.
- We realize that many media owners today acknowledge the need for media reforms. We need their support and participation for media reforms to succeed.
- We have to move beyond placard-carrying, slogan-shouting kind of trade union activism to one that is based on negotiations with all stakeholders including media owners. Sri Lanka Press Institute is the platform we have for this.
- We need letters of appointment for all journalists and other media workers, but

that is not enough. The power equation between owner and individual employee is not a balanced one. Thus we need to develop collective agreements with media owners. This practice is commonplace in other industries, so why not in the media?

- Much of what happens inside our media companies is done informally through connections and favours. Some journalists are happy with this and don't see the need to organize as a trade union. But we need such evolution to professionalize the sector.
- The state-owned Press Council of Sri Lanka should be abolished, and the Press Council Act should also be repealed or replaced. But we recognise the need for a complaints mechanism for media, so we have to strengthen the Press Complaints Commission.
- We don't yet have laws guaranteeing the protection of media's sources. But courts in Sri Lanka have recognized that journalists need not disclose their sources. Our entire media industry is based on trust and confidentiality we can offer sources disclosing information in the public interest.

Focus Group Discussion at the Jaffna Press Club (2 May 2015)
Participating: Dharmapalan Vinojit, Vigneshwaran Kajeevan, Rathnam Dayabaran and Sriramachandran Mayudaran

- In a multicultural society like ours, the media can either promote ethnic harmony or divide people. National reconciliation is still not a priority for all our media. This is because most media have no clear policy on reconciliation.
- Compared to the situation in other areas of Sri Lanka, media freedom of media practitioners in the Northern Province is still lagging behind and problematic.
- Even after the change of government in January 2015, Northern journalists continue to experience threats and arrests due to their professional work. We are not free to report or comment on the ground realities of Jaffna and the Northern Province in our media.
- There are political and societal factors inhibiting free and open reporting in the Northern Province. This does not serve our media consuming public or the media industry.
- We are not seeking freedom to do whatever we please. All we ask is that we be allowed to report based on journalistic principles and ethics. Is that too much to ask for?
- We have pressures from outside as well as from within the media industry. Sometimes we as reporters are not allowed to cover all aspects of a given incident or

issue. We have to risk our jobs and even life and limb to give the full story to our public.

- In spite of these limitations, we are committed to upholding the public interest as much as we can. We have built up resilience during the war years and are not easily deterred.
- We try not only to highlight problems that the Northern people face, but also look for solutions. We cannot solve many problems but advocate certain measures that need to be taken by government, business or civil society.
- We feel isolated from the rest of media community in Sri Lanka. We have tried very hard to engage, but the (southern) media community does not seem to reciprocate.
- Looking at the Lankan media as a whole, there still is considerable stereotyping of ethnic and religious minorities. During the war, some newspapers equated all Tamils as Tigers. While this no longer happens, old prejudices are lingering among some journalists and editors. Our society and media community are both polarized along ethnic lines.
- There is a need for more robust and better organised regional or provincial level media in Sri Lanka. Why should the media industry remain so concentrated around Colombo?
- Against many odds, we are working hard to sustain several local level newspapers in Jaffna. We try to cover local news, but our analysis and commentary is not narrowly focused on our areas. We try to adopt a national perspective where needed.
- There is something like a 'class divide' between the national level media and the provincial or local level media in Sri Lanka. The former gets all the recognition and easier access, but the latter has to struggle to even get noticed! In a healthy media ecosystem, we should have room for both these kinds to co-exist and thrive.
- We recognise that there are gaps in the professionalism of provincial journalists. We are keen to improve our professionalism for which we need all the help we can get.
- Media demands accountability from everyone else in society, but we in the media must also be accountable to the public. For this we need media regulation. Readers and audiences need to have mechanisms through which they can comment or complain about specific media content or any violations of media ethics.

Annex
# 4

# Statement on Freedom of Expression and Media Freedom
## For the attention of political parties contesting in General Election 2015

**Issued on 21 July 2015 in Colombo by:**
Secretariat for Media Reforms
Sri Lanka Press Institute (SLPI)
Free Media Movement (FMM)
Sri Lanka Working Journalists' Association (SLWJA)
Sri Lanka Press Association
Jaffna Press Club
Sri Lanka Muslim Media Forum
National Alliance of Provincial Journalists
National Alliance of Community Broadcasters
Young Journalists Association

Since the Presidential Election on 8 January 2015, some progress has been made with regards to freedom of expression (FOE) and media freedom in Sri Lanka. These include: steps being taken to end threats against and pressure on media organisations and journalists; the unblocking of political websites that were arbitrarily blocked; the 19th Amendment to the Constitution recognizing the right of access to information as a fundamental right; and the government extending an open invitation to exiled journalists to return to Sri Lanka.




S Media advocacy groups presenting priority recommendations for media reforms ahead of General Election 2015

But much more remains to be done to improve FOE and media freedom situation in Sri Lanka, and to ensure a more conducive environment for the media. Such policy, legal and structural reforms would require the political will of all political parties in the next Parliament of Sri Lanka.

In view of this, we urge the political parties contesting in the General Election to be held on 17 August 2015 to give a firm commitment to the following specific measures for meaningful media freedom and reforms.

These are not listed in any order of priority.

1. Right to Information: A right to information law, which gives individuals the right to access information held by public authorities, should be adopted. The new Parliament should pass, on a priority basis, the Right to Information Bill that was finalised in May 2015 with inputs from media stakeholders.

2. Media Self-Regulation: The Press Council Act No. 5 of 1973 should be repealed, and the government-controlled Press Council should be abolished. The self-regulatory body established in 2003 by the media industry, known as the Press Complaints Commission of Sri Lanka (PCCSL), should be strengthened and ideally its scope should be expanded to cover the broadcast media as well.

3. Law Review and Revision: Civil and criminal laws that pose various restrictions on media freedom should be reviewed and revised to bring them into line with international standards regarding freedom of expression. Such laws include the Prevention of Terrorism Act, the Official Secrets Act, sedition laws, and the rules on contempt of court and Parliamentary privileges.

4. Crimes Against Journalists: An independent Commission of Inquiry should be created with a mandate and adequate powers to investigate past killings of, threats to, disappearances of and other attacks on journalists, media workers and media outlets, with a view to ensuring that those responsible are prosecuted and that appropriate compensation is paid to the victims and their families.



5. **Broadcast Regulation:** Comprehensive legislation on broadcasting should be adopted in line with international guarantees of freedom of expression. This should provide for, among other things, proper planning in relation to the frequencies allocated to broadcasting, including through the digital transition, a three-tier system of broadcasting which recognises public, commercial and community broadcasters, and obligations on broadcasters to be balanced and impartial in their coverage of politics and other matters of public concern. An independent Broadcasting Authority should be set up to regulate the entire broadcasting sector in the public interest. This regulator should ensure a fair, pluralistic and efficient broadcasting system.

6. **Community Broadcasting:** The broadcasting regulation to be introduced should support the development of community broadcasting services owned and operated by communities through clear definitions of what constitutes a community broadcaster, a tailored licensing process, and lower fees for frequency allocation and other concessions.

7. **Restructuring State Media:** The three State broadcasters – the Sri Lanka Rupavahini Corporation (SLRC), the Sri Lanka Broadcasting Corporation (SLBC) and the Independent Television Network (ITN) – should be transformed into independent public service broadcasters which enjoy editorial independence, have

S Seetha Ranjani, Convenor of Free Media Movement, speaks at press conference on media reforms, 21 July 2015

a clear mandate to serve the public and benefit from public funding which does not compromise their independence. Measures should also be taken to ensure that Associated Newspapers of Ceylon Limited (ANCL or Lake House) can operate independently of government and enjoy editorial freedom. A public consultation should determine the most appropriate way forward.

8. **Preventing Censorship:** No prior censorship should be imposed on the media. Where necessary, courts can review media content for legality after publication on an urgent basis. Laws and regulations that permit censorship – including the Public Performance Ordinance – should be reviewed and amended to bring them into line with international standards.

9. **No Blocking Political Websites:** There should be no attempts to limit online content or social media activities contravening fundamental freedoms guaranteed by the Constitution and international conventions. Restrictions on illegal content may be imposed only through an independent judicial process which ensures that fundamental rights to access information and freedom of expression are not hindered.

10. **Privacy and Surveillance:** The state should respect and protect the privacy of all citizens. There should be strict limits to the state surveillance of private individuals' and entities' telephone conversations and electronic communications. In exceptional situations, such surveillance should only be permitted with judicial oversight and according to a clear set of guidelines.

**Contacts:**
Dr Pradeep N Weerasinghe and Ms Kumari Welagedera
Secretariat for Media Reforms
Email: pnweera@yahoo.com
Web: www.sardglobal.org

Annex

# 5

# Radio and Television Channels in Sri Lanka

(Source: Lanka Market Research Bureau, 2015)

| Channel name | Language |
| --- | --- |
| E FM | English |
| Fox FM | English |
| Gold FM | English |
| Kiss FM | English |
| Legends 96.6 | English |
| Lite 87 | English |
| Radio SL | English |
| Real FM | English |
| Red FM | English |
| Sun FM | English |
| TNL Radio | English |
| Yes FM | English |
| Buddhist | Sinhala |
| City FM | Sinhala |
| FM Derana | Sinhala |
| Hiru FM | Sinhala |

| Channel name | Language |
| --- | --- |
| Isira FM | Sinhala |
| Lak FM | Sinhala |
| Lakhanda | Sinhala |
| Neth FM | Sinhala |
| Ran FM | Sinhala |
| Rangiri Dambulu | Sinhala |
| Rhythm FM | Sinhala |
| Seth FM | Sinhala |
| Shaa FM | Sinhala |
| Shree FM | Sinhala |
| Sinha FM | Sinhala |
| Sirasa FM | Sinhala |
| Sith FM | Sinhala |
| Siyatha FM | Sinhala |
| SLBC Commercial | Sinhala |
| SLBC National | Sinhala |
| V FM | Sinhala |
| Vidula | Sinhala |
| VIP | Sinhala |

| Channel name | Language |
| --- | --- |
| Y FM | Sinhala |
| You FM | Sinhala |
| Shakthi FM | Tamil |
| Sooriyan FM | Tamil |
| Tamil FM | Tamil |
| Thendral | Tamil |
| Therai FM | Tamil |
| Thesiya/Varthaka | Tamil |
| Varnam FM | Tamil |
| Vasantham | Tamil |
| YAL FM | Tamil |

| SLBC's Regional Radio Services | Language |
| --- | --- |
| Kandurata | Sinhala |
| Rajarata | Sinhala |
| Ruhuna | Sinhala |
| Uva | Sinhala |
| Wayamba | Sinhala |

| Television channels | Broadcast method | Language |
| --- | --- | --- |
| ART TV | Terrestrial | English |
| CCTV International | Terrestrial | English |
| Channel Eye | Terrestrial | English/Tamil |
| CSN/Carlton | Terrestrial | English/Sinhala |
| ETV | Terrestrial | English |
| Hiru TV | Terrestrial | Sinhala |
| ITN | Terrestrial | English/Sinhala |
| MTV Sports (renamed in 2016 as TV 1) | Terrestrial | English |
| Nethra | Terrestrial | Sinhala |
| NTV | Terrestrial | English |
| Rangiri Sri Lanka | Terrestrial | Sinhala |
| Rupavahini | Terrestrial | Sinhala |
| Shakthi TV | Terrestrial | Tamil |
| Sirasa TV | Terrestrial | Sinhala |
| Siyatha TV | Terrestrial | Sinhala |
| Swarnavahini | Terrestrial | Sinhala |
| The Buddhist | Terrestrial | Sinhala |
| TNL | Terrestrial | Sinhala |
| TV Derana | Terrestrial | Sinhala |
| Varnam TV | Terrestrial | Tamil |
| Vasantham TV | Terrestrial | Tamil |
| YOU TV | Terrestrial | English |

Annex

# 6

# Radio and Television Channels in Sri Lanka

## Registered Institutions for Radio or TV Licences in Sri Lanka

This table is adapted from Ministry of Media website, with a few annotations added. However, data accuracy is not independently verified. Accessed on 31 January 2016 from: http://www.media.gov.lk/images/pdf_word/licensed-institutions-tv-radio.pdf

It is not clear from this table which of the licensees have not yet commenced or sustained broadcast operations.

| | Licensee | Type of Licence | Issue date | Remarks |
|---|---|---|---|---|
| 1 | Sri Lanka Broadcasting Corporation (fully state-owned) | Radio<br>Authorised by Act of Parliament | Legacy broadcaster | Sri Lanka Broadcasting Corporation Act No 37 of 1966 |
| 2 | Sri Lanka Rupavahini Corporation (fully state-owned) | Terrestrial TV<br>Authorised by Act of Parliament | Legacy broadcaster | Sri Lanka Rupavahini Corporation Act No 6 of 1982 |
| 3 | Independent Television Network ITN Sri Lanka (State-owned enterprise) | Terrestrial TV | Legacy broadcaster | Company wholly owned by the government of Sri Lanka |
| 4 | Colombo Communication (Pvt) Ltd., later transferred to EAP Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 01.04.1992<br>28.07.1993 | |
| 5 | Maharaja Organization (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 12.05.1992 | |
| 6 | Teleshan Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 08.10.1992 | |
| 7 | IWS Holding (Pvt) Ltd | Terrestrial TV<br>Direct-to-Home (DTH) | 11.01.1995<br>31.10.1997 | |
| 8 | Asia Broadcasting Corporation (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 17.11.1995<br>16.05.2008 | Licence is reissued on 21.02.2008 |
| 9 | Television and Radio Network | Terrestrial TV<br>Radio<br>Cable TV | 30.05.1996 | |

| Licensee | Type of Licence | Issue date | Remarks |
|---|---|---|---|
| 10 Grant Communication (Pvt) Ltd | Cable TV | 15.07.1996 | |
| 11 The Southern Development Authority (Pvt) Ltd | Cable TV<br>Pay TV | 24.10.1996 | |
| 12 Dynavision (Pvt) Ltd | Direct-to-Home (DTH) Terrestrial TV | 31.10.1997 | |
| 13 Ru Ras Lanka (Pvt) Ltd | Radio | 01.01.2004 | |
| 14 Asset Radio Broadcasting (Pvt) Ltd Changed name from 18.06.2007 to Dialog Television Pvt Ltd | Radio<br>TV (Satellite)<br>Cable | 09.02.2004 | |
| 15 Power House (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 29.02.2004<br>19.10.2005 | |
| 16 MGM Networks (Pvt) Ltd Changed name to MGMR Network Pvt Ltd from 10.11.2006) | Radio<br>Terrestrial TV | 14.09.2005 | |
| 17 Lanka Television Network (Pvt) Ltd Changed name to Dumee International (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 18.01.2006 | |
| 18 Voice of Asia Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV<br>Cable TV<br>Satellite TV | 16.02.2006<br>14.05.2004 | |
| 19 People's Media Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 31.05.2006 | |
| 20 Rangiri Sri Lanka Media Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 09.10.2006<br>16.08.2011 | |
| 21 Sky TV and Radio Network (Pvt) Ltd | Satellite TV/Cable Tv<br>(Amended date) | 12.12.2006<br>(23.02.2007) | |
| 22 Lanka Broad Band Network (Pvt) Ltd | Cable TV | 29.03.2007 | |
| 23 Sri Lanka Telecom (Pvt) Ltd | Internet Protocol Television (IPTV) | 09.04.2007 | |

| Licensee | Type of Licence | Issue date | Remarks |
|---|---|---|---|
| 24 Lak Viru TV and Radio Network (Pvt) Ltd | Radio | 12.04.2007 | |
| 25 Lak View Broadcasting (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 25.05.2007 | |
| 26 The Buddhist Broadcasting Service | Satellite TV | 22.06.2007 | |
| 27 Sat Net (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 19.07.2007 | |
| 28 Friend Media (Pvt) Ltd | Regional Radio | 16.10.2007 | |
| 29 Tharunyata Hetak Media Network (Pvt) Ltd | Radio<br>(Canceling date) | 25.02.2008<br>(23.05.2008) | Cancelled |
| 30 LTTE Peace Secretariat | Radio | 11.11.2002 | Cancelled on 07.01.2009 |
| 31 Tea Small Holding Development | Radio | 08.12.2000 | Cancelled |
| 32 Yellow Win Media (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 18.03.2008 | |
| 33 Future Sat Com Holding (Pvt) Ltd | Terrestrial TV | 13.05.2008 | |
| 34 VIS Broadcasting Network Pvt Ltd | Radio<br>Terrestrial TV | 16.05.2008 | |
| 35 Mobitel (Pvt) Ltd | Mobile TV | 24.06.2008 | |
| 36 Sri Global Television Company | Radio<br>Terrestrial TV | 27.11.2008 | |
| 37 City Cable Links (Pvt) Ltd | Cable TV | 19.01.2009 | To be operated in Colombo Municipal Council area |
| 38 Ask Media (Pvt) Ltd | Terrestrial TV | 22.06.2010 | |
| 39 Carlton Sports Network (Pvt) Ltd | Terrestrial TV | 03.03.2011 | |
| 40 Ritz Asia (Pvt) Ltd | Terrestrial TV | 03.03.2011 | |
| 41 Lanka Cable and Satellite Network | Cable TV | 24.02.2011 | |

Annex

7

# Highlights of the Public Perceptions Survey 2015

The sample of the study consisted of randomly selected 800 respondents, representing Sinhalese and Tamils. The survey was conducted between July and October 2015, in all the provinces of Sri Lanka. A structured questionnaire was developed in both languages to collect data for the survey (i.e. Sinhala and Tamil). Telephone interviews and field surveys were administered to collect data. The survey team comprised students and lecturers of mass media at Colombo University's Sri Palee Campus.

## Preferred language

Survey respondents were asked about their preferred language of the media messages.

Table 1:
Preferred language of the media messages

| Language | No. of respondents | % |
|---|---|---|
| Sinhala | 514 | 64.3 |
| Tamil | 223 | 27.9 |
| English | 63 | 7.8 |
| Total | 800 | 100 |

Asked if language was a barrier for accessing media messages, 73% said no and 27% answered yes. This suggests that a majority of respondents find media messages delivered in their preferred languages.

## Credibility of media messages

When asked how they ranked the level of credibility of media content they consumed, a majority of respondents opted for the 'neutral' answer. Table 2 summarises these answers.

Table 2: Credibility of media messages

| Credibility ranking | No of respondents | % |
|---|---|---|
| Highly credible | 32 | 4.0 |
| Fairly credible | 344 | 43.3 |
| Neutral | 392 | 48.9 |
| Not very credible | 12 | 1.4 |
| Totally not credible | 20 | 2.4 |
| Total | 800 | 100 |

## The most trusted types of media

Most respondents said they trusted television the most (56%), followed by newspapers (20%) and the Internet (21%). There is a trend among the young generation to turn to the Internet as a source of news and information. Notably, radio's trust levels are very low among this sample.

Table 3: The most trusted medium

| Most trusted media type | No of respondents | % |
|---|---|---|
| Internet | 169 | 21.1 |
| TV | 448 | 56.0 |
| Radio | 16 | 1.9 |
| Newspaper | 160 | 20.1 |
| Gossip | 7 | 0.9 |
| Total | 800 | 100 |

In addition, Table 4 reveals that the most influence medium is television (52%), followed by the Internet (24%). Importantly, the Internet is already more influential than newspapers or radio.

Table 4: The most influencing media

| Most persuasive media | No. of respondents | % |
|---|---|---|
| Gossip | 33 | 4.1 |
| Internet | 195 | 24.4 |
| TV | 412 | 51.5 |
| Newspaper | 133 | 16.6 |
| Radio | 27 | 3.4 |
| Total | 800 | 100.0 |

### Freedom to express ideas through media

Respondents were asked whether they have an opportunity to express their ideas freely through mass media. A clear majority felt there was no such freedom.

Table 5: Freedom to express ideas through media

| Freedom to express ideas | No of respondents | % |
|---|---|---|
| Yes | 231 | 28.8 |
| No | 569 | 71.2 |
| Total | 800 | 100.0 |

### Usage of foreign media for information

Despite there being a multitude of national and local media outlets, a sizeable number of the sample also uses foreign media.

Table 6:
Usage of foreign media for information

| Usage of foreign media | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 341 | 42.6 |
| No | 459 | 57.4 |
| Total | 800 | 100.0 |

Furthermore, more than two thirds of respondents have trust on the foreign information sources.

Table 7: Trust on foreign sources

| Trust on foreign sources | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 540 | 67.5 |
| No | 260 | 32.5 |
| Total | 800 | 100.0 |

### Sources of everyday information

Table 8a and table 8b show how state and private media sources are used as sources for everyday information. In terms of the state media, television (63%) plays is the most significant source for everyday information, followed by print media (61%) and radio channels (40%).

Table 8a: State sector sources

| Sources of everyday information | Print media | | Radio channel | | TV channel | |
|---|---|---|---|---|---|---|
| | No. of respondents | % | No. of respondents | % | No. of respondents | % |
| Yes | 484 | 60.5 | 322 | 40.3 | 503 | 62.9 |
| No | 316 | 39.5 | 478 | 59.7 | 297 | 37.1 |
| Total | 800 | 100.0 | 800 | 100.0 | 800 | 100.0 |

The same view is shown even in the private media sources (Table 8b) - respondents highly depend on television (68%), than the other information sources i.e. print media 56% and radio (45%) for their everyday information.

Table 8b: Private sector sources

| Sources of everyday information | Print media | | Radio channel | | TV channel | |
|---|---|---|---|---|---|---|
| | No. of respondents | % | No. of respondents | % | No. of respondents | % |
| Yes | 444 | 55.5 | 358 | 44.7 | 545 | 68.1 |
| No | 356 | 44.5 | 442 | 55.3 | 255 | 31.9 |
| Total | 800 | 100.0 | 800 | 100.0 | 800 | 100.0 |

Table 8c shows that social media is used for everyday information by close to a third of the sample.

Table 8d shows that mobile phone and SMS are used significantly for everyday information by 44.1% of respondents.

Table 8c: Social media source

| Use social media source | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 250 | 31.3 |
| No | 550 | 68.7 |
| Total | 800 | 100.0 |

Table 8d: Mobile Phones and SMS news alert

| Use mobile phones and SMS news alert | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 354 | 44.2 |
| No | 446 | 55.8 |
| Total | 800 | 100.0 |

Public meetings have ceased to be sources of everyday information for most people.

Table 8e: Public Meetings for everyday information

| Public Meetings for everyday information | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 84 | 10.5 |
| No | 716 | 89.5 |
| Total | 800 | 100.0 |

### Media literacy: Awareness of media ownership

Table 9 shows the media ownership awareness of the respondents. Accordingly, most respondents are aware that media is owned by the state and private sectors (73%).

Table 9: Media Ownership

| Media Ownership | No. of respondents | % |
|---|---|---|
| State only | 90 | 11.2 |
| Private sector only | 16 | 2.0 |
| State and private sector | 586 | 73.3 |
| Public | 108 | 13.5 |
| Total | 800 | 100.0 |

### Trust in TV and Radio news

Respondents were further asked if they trusted news on television and radio news. Results show that 37% of the respondents have no trust on television and radio news while 39% of are neutral. Only 24% said they trusted radio or television news.

Table 10: Trust on TV and Radio news

| Trust on TV and Radio news | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 192 | 24.0 |
| No | 295 | 36.9 |
| Neutral | 313 | 39.1 |
| Total | 800 | 100.0 |

In addition, it was examined whether respondents are satisfied with the television and radio news. Table 11 shows that only 22% of the respondents are satisfied with the news on television and radio, while majority of the respondents are not satisfied (41%).

Table 11: Satisfaction of TV and Radio program

| Satisfaction of TV and Radio program | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 178 | 22.3 |
| No | 331 | 41.4 |
| Neutral | 291 | 36.3 |
| Total | 800 | 100.0 |

### Influences on the News

Influences on the content of news were examined in two perspectives: influence of the government and of private sector ownership. Table 12a areveals the influence of the government on the content of the state owned media news. Accordingly, it shows that 61% of the respondents have an attitude that government influences the content of the news of the state owned media.

Table 12a: Government influences on content of state owned media news

| Government influences on content of news | No. of respondents | % |
|---|---|---|
| Strongly agree | 180 | 22.5 |
| Agree | 307 | 38.4 |
| Strongly Disagree | 182 | 22.8 |
| Disagree | 51 | 6.4 |
| No Idea | 80 | 9.9 |
| Total | 800 | 100.0 |

Table 12b shows the attitudes of the respondents on the content of the news of private owned media: only 46% of respondents believe that private media owners have an influence on the content of the news.

Table 12b: Private Sector owner influences on the content of news

| Private Sector owner influences on the content of news | No. of respondents | % |
|---|---|---|
| Strongly agree | 88 | 11.0 |
| Agree | 283 | 35.4 |
| Strongly Disagree | 234 | 29.2 |
| Disagree | 133 | 16.6 |
| No Idea | 62 | 7.8 |
| Total | 800 | 100.0 |

Opportunity for complaining on media content

There are no sufficient opportunities for making complaints against any misleading or offensive media content: only 33% of respondents agreed that there are opportunities for complaining against media content.

Table 13: Opportunity for complaints

| Opportunities are available for complaints against media outlets | No. of respondents | % |
|---|---|---|
| Strongly agree | 54 | 6.7 |
| Agree | 207 | 25.9 |
| Strongly Disagree | 233 | 29.1 |
| Disagree | 220 | 27.5 |
| No Idea | 86 | 10.8 |
| Total | 800 | 100.0 |